JAYARANGAN

A DETECTIVE TAMIL NOVEL

௨-ம் பதிப்பு

ஜெயரங்கன்

ஓர் துப்பு அறியும் இனிய தமிழ் நாவல்

by

J. R. Ranga Raju

Author of Rajambal, Chandrakantha, Mohanasundaram,
Ananthakrishnan, Rajeswaran, Varatharajan I. & II.

Published by J. R. Ranga Raju

Saidapet, Madras.

The right of reproducing the whole or in parts summarising the same translating into other languages Dramatising, Filming and Staging are strictly reserved by the author.

1936

RANGA RAJU & BROS.,

"Jagannatha Baugh" Saidapet, Madras.

Price Rs. 1-8-0

Copy right Registered

[Postage As 8 Extra.

இதைவிட

ர் அத்தாட்சி என்ன

ம்பாள்	27-ம் பதிப்பு
ாந்தா	16-ம் பதிப்ப
ன சுந்தரம்	15-ம் பதிப்ப
5 கிருஷ்ணன்	13-ம் பதிட
ஜேந்திரன்	11-ம் பதிப்ப
ஜம் 1, 2 பாகங்கள்	5-ம் பதிப்ப
ராகவன்	3-ம் பதிப்பு
பாது வெளி வந்த "ஜெயரங்கன்"	2-ம் பதிப்பு

வெளி வந்ததே இவைகளின் பெருமைகளைக் காட்டு
ன. இத்தனை பதிப்புகள் வெளி வந்தது தமிழ
டில் இதுவரையில்கேட்டறியாத ஆச்சரியமல்லவா
ரங்கன் [புதிய நாவல்] ரூ. 1—8—0. இராஜேந்தி
, வரதராஜம் (முதல் பாகம் இரண்டாம் பாகம்
ஜயராகவன், ஒவ்வொன்றும் விலை ரூ. 1. மற்
ற்கு நாவல்கள் தனித்தனி விலை அணு 12.

போஸ்டேஜ் வி. பி. பிரத்தியேக

இந்த ஒன்பது நாவல்களில் எதையாவது ஒன்
வாங்கினால் மற்ற எட்டு நாவல்களை வாங்கும்படி அத
சுவையே கட்டாயமாய்த் தூண்டுமென்பது நிச்சயம்.

இந்த அபூர்வ நாவல்கள் வேண்டுவோர்:—

ரங்கராஜு அண்டு பிரதர்ஸ்

"ஜெகந்நாதபாக்" சைதாப்பேட்டை, சென்னை.

என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெறலாம்.

ஜெயரங்கன்

ஓர் துப்பு அறியும் இனிய தமிழ் நாவல்

"இராஜாம்பாள்" "சந்திரகாந்தா" "மோஹன சுந்தரம்"
"ஆனந்த கிருஷ்ணன்" "இராஜேந்திரன்"
"வரதராஜம்" 1, 2-பாகங்கள்,

என்னும் நிகரில்லாத நாவல்களை எழுதிய

ஜே. ஆர். ரங்கராஜு அவர்களால்

எழுதப்பெற்றது.

இரண்டாம் பதிப்பு

இந்நாவலின் சகல உரிமைகளையும் சட்டப்படி
ரிஜிஸ்டர் செய்திருப்பதால்
இந்நாவலை முழுமையாகவாவது,
பாகங்களாகவாவது, சுருக்கியாவது, மாற்றி
யாவது எழுதவும், அச்சடிக்கவும், வேறு பாஷைகளில்
மொழி பெயர்க்கவும், நாடக ரூபமாய் எழுதவும், நடிக்கவும்,
படம் பிடிக்கவும், கிராமபோன் பிளேட் எடுக்கவும்
கூடாதென்பதைத் தெரிவிக்கலாயிற்று.

ரங்கராஜு பிரதர்ஸ்

"ஜெகந்நாதபாக்" சைதாப்பேட்டை போஸ்டு, சென்னை.

1936

காபிரைட் ரிஜிஸ்டர்ட்

[விலை 1-8-0] [தபால் கூலி பிரத்தியேகம்.

PRINTED AT

THE "RAJU PRESS"

'Jagannatha Baugh' Saidapet, Madras.

ஜெயரங்கன்

முதலாவது அத்தியாயம்

காரியம் பெரிதோ வீரியம் பெரிதோ?

"கேட்டீர்களா சமாசாரத்தை! ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து கடைசியாக மனிதனையும் கடித்தது" என்னும் கதையைப்போல் அந்தப் பிராமணன் முதலில் நமது பள்ளப் பயலைத் திட்டி அடித்தான். அப்
த அவனுக்கு புத்திவரத்த வேண்டுமென்றேன்; எஜமானர்கேட்
லை. அப்பால் நமது கணக்கப்பிள்ளையை மல்லுக்கிழுத்தான். அப்
தும் அவனைப்பற்றிஜாக்ரதைப்படவேண்டும்; இல்லாவிட்டால்
;மேல் ஏறுவான் என்று சொன்னேன். என் வார்த்தையை
டை செய்தீர்கள். இன்று சின்ன எஜமானவர்களேயெதிர்த்து
ம்செய்து ஓர் கைபார்ப்போமென்றுசொன்னும். அப்போதே
யிலிருந்தநமதுவேலைக்காரர் அந்தப்பாப்பானுடைய 32பற்களை
மொ டைத்து அவன் கையில் கொடுப்பதற்காக நெருங்கிவிட்டாராக
மது சித்திரத்தேவருடைய கிர்தா மீசை படபடவென ஆட
டிதுடித்து வேஷ்டியை இழுத்துக்கட்டிக் கொண்டு கையை
ங்கிவிட்டாராம். கடைகுட்டி எஜமானர் அதட்டினதின்பேரில்
லோரும் அதிகமான வருத்தத்துடன் விலகினார்களாம். இல்
டால் இன்று அந்தப் பிராம்மணனைப் புதைத்த இடமே தெரி
"புல் முளைத்துப் போயிருக்குமாம். இப்போதாவது தாங்கள்
பற்றி யோசனை செய்து ஓர் ஏற்பாடு செய்யாவிட்டால் அதிக
ாகிவிடும். இனி வெளியில் தலை காட்டவே முடியாது. நமது
r எல்லோரும் அவ்வாறே அபிப்ராயப்படுகிறார்கள். இனி
டியாவது தாங்கள் மெத்தனமா யிருக்கக்கூடாது."

1 ன்று காரியஸ்தரான காந்திமதியா பிள்ளை தன் எஜமானரா
ஸ்ரீனிவாச ராஜுவைப் பார்த்துச் சொன்னார்,

ஸ்ரீனிவாச ராஜு:—என்ன காந்திமதி! தலையுமில்லாமல் காலுமில்லாமல் பிரமாதமாய்க் கோபப்படுகிறாயே! காரியமென்ன? விவரமாய்ச் சொல்லு.

காந்திமதியா பிள்ளை:—சொல்வதென்ன இருக்கிறது? தங்களுக்குத் தெரியா விட்டால் சொல்ல வேண்டியது தான். நான் யாரைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறே னென்று தங்களுக்குத் திட்டமாய்த் தெரியும். தெரிந்தும் தெரியாதவர்களைப்போல் எஜமானர்கேட்கிறீர்கள். ஆகையால் சொல்லுகிறேன். இப்போதாவது தயவு செய்து நன்றாய்க் கேட்டு ஏதாவது சரியான ஏற்பாடு செய்யவேண்டும். இல்லாவிட்டால் வெளியில் தலைகாட்டவே முடியாது. அந்த சீதாராம சாஸ்திரி யிருக்கிறானே! அவனைப்பற்றிதான்சொன்னேன். அவனால் தான் இந்த ஊரே கெட்டுப்போகிறது. எடுத்ததற்கெல்லாம் சட்டம் பேசுகிறான். தெரியாதவர்களுக் கெல்லாம் பொய்யும் புளுகும் கற்பித்து நம்மை எதிர்க்கச் செய்கிறான். அவனை நமது ஊரிலிருந்து ஓட்டிவிட வேண்டியது மிகவும் அவசியம்.

ஸ்ரீனிவாச ராஜு:—கிளிப்பிள்ளை சொல்வதைப் போல் எப்போதும் சொல்லும் வார்த்தைகளையே சரமாரியாய்ப் பொழிந்து தள்ளுகிறாய்; அதிருக்கட்டும். இன்றுசின்ன எஜமானரையே எதிர்த்து எதனம் செய்தாரென்றாயே! என்ன செய்தார்? சொல்லு. பிராம்மணரென்றமரியாதையில்லாமல் 'அவன்' 'இவன்' என்று சொல்வது தற்காலம் நாகரீகமாய்ப் போயிருக்கிறது.

காந்திமதியாபிள்ளை:—இன்றுகாலையில் சின்ன எஜமானர் நமது நிலங்களைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வரும்போது அந்த சீதாராம சாஸ்திரிக்குத் தானம் கொடுத்த நமது தோட்டத்தில் புகுந்து வந்தார்களாம். அங்கு பலாமரத்தில் ஒருபலாப்பிஞ்சு காய்த்திருந்ததாம். அதை நமது வீட்டிற்குக் கறிக்கு அறுத்துக்கொண்டு போகும்படி நமது பள்ளன் செல்லனுக்கு உத்தரவிட்டார்களாம். அவனும் போய் அறுக்கப் போனானாம். அப்போது அந்தப்பக்கம் வந்த அந்தப் பாப்பான் "அடே அறுக்காதே" என்று அதட்டினானாம். நமது செல்லன் அவன் வார்த்தையை லக்ஷியம் செய்யாமல் அறுக்கப்போனானாம். அப்போது அவன் அதட்டி "நான் சொல்லிக் கொண்டேயிருக்கிறேன்; நீ அறுக்கப் போகிறாயா? அது என்தகப்பனார் ஸ்ரார்த்தத்துக்காகவிட்டு வைத்திருக்கிறேன். அதை அறுக்கக்கூடாது. நீ வேண்டுமானால்எஜமானரிடம்வந்து சொல்லுகிறேன்" என்றுசொல்லி

அவனை அழைத்துக் கொண்டுவந்து முன்னால் போய்க் கொண்டிருந்த சின்ன எஜமானர் வண்டிக்காரனை நிறுத்தச் சொன்னாலும், நமது வண்டிக்காரன் வண்டியை நிறுத்தாமல் ஓட்டிக்கொண்டு போகவே அவன் ஓடிவந்து "எஜமான்! என் தகப்பனார் ஸ்ரார்த்தம் இன்னும் சில தினங்களில் வருகிறது. அதற்காகவே அந்த பிலாப்பிஞ்சை பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். தயவு செய்து அதை அறுக்க வேண்டாமென்று உத்தர விடுங்கள்" என்றானாம். அதற்கு சின்ன எஜமானர் "என்ன காணும்! ஒரு பிலாப்பிஞ்சு கெட்ட கேட்டுக்கு நான் ஆசைப்பட்டு அறுத்து வரச் சொன்னால் அதற்கு இவ்வளவு பிரமாதம் செய்கிறீரே அறுத்தாய் விட்டதல்லவா?" என்றாராம். அவன் இல்லை; அறுக்க வேண்டாம், நான் எஜமானரிடம் சொல்லுகிறேன்; என்றுசொல்லி செல்லனை அழைத்து வந்தேன்" என்றானாம். அப்போது எஜமானர் "என்னகாணும்,என் உத்தரவுக்கு மேலான உத்தரவு உம்முடையது போலிருக்கிறதே! நான் அறுத்துவரச்சொன்னால் அதை வேண்டா மென்று தடுக்கக் கூடிய அவ்வளவு தைரியம் உமக்கு உண்டாய் விட்டதா?" என்று கேட்டார்களாம். அதற்குஅவன்
ம்மணனுக்கு ஸ்ரார்த்தம் ஒரு முக்கிய கடமை. ஸ்ரார்த்தத்திற்கு பிலாக்காய் சமைப்பது சிலாக்கியம். ஆகையால் தங்களிடம் கேட்டுக்கொள்ள வந்தேனே யல்லது வேறல்ல; ஸ்ரார்த்தம் இல்லா விட்டால் தங்கள் வார்த்தைக்கு குறுக்காய்ப் பேசமாட்டேன்; ஆகையால் தயவு செய்து மன்னியுங்கள்" என்றானாம். அப்போது சின்ன எஜமானருக்கு சற்று கோபம் வந்து "என்னகாணும்! ஸ்ரார்த்தம் என்று பொய்க் கதை யெல்லாம் சொல்லுகிறாய். இக்காலத்தில் பிராம்மணரெல்லாம் பக்திசிரத்தையுடன் ஸ்ரார்த்தம் செய்துகொண்டு தான் வருகிறார்களோ? தங்கள் தகப்பனார் ஸ்ரார்த்தங்கள் என்று பேருக்கு ஸ்ரார்த்தம் செய்து விட்டு பாசட்டோ பிரதர்ஸ் ஹாரிசன் கம்பெனி முதலிய இடங்களுக்குச் சென்று தமதிஷ்டம் போல் மதுமாம்ஸாதிகள் சாப்பிடும் அநேக சாஸ்திரிகளையும் தீக்ஷிதர்களையும், ஆச்சாரிகளையும், நான் என் கண்ணால் பார்த்திருக்கிறேன். அந்த ஸ்ரார்த்தத்திற்கு இந்த பிலாக்காய் இல்லாமல் தான் ஓட்டையாய்ப் போய் விடும்போலிருக்கிறது போங்காணும் போம்; பைத்தியக்காரா" என்றார்களாம். அப்போது அவன் கொஞ்சமாவது பயப்படாமல் "எஜமான்! தாங்கள் சொல்வது உண்மையே! சில பிராம்மணர் தாங்கள் சொல்வது போல் செய்யத்தான்

செய்கிறார்கள், அதனால் பொதுவாக எல்லாப பிராம்மணரும் அப்படியே என்று தாங்கள் சொல்வது சரியல்ல, இப்போது கூட நித்யம் ஔபாசனம் முதலிய பிராமணக் கிரியைகளைச் சரிவரச் செய்து கொண்டிருக்கிறவர்கள்பெரிய உத்யோகஸ்தர்களிலும் இருக்கத்தான் செய்கிறார்கள். தாங்கள் பொதுப்படையாகச் சொல்வது சரியல்ல, நேற்றுசாயங்காலம் ஸ்ரீராமுலுராஜு அவர்கள் அளவுக்குமிஞ்சியகள் குடித்து விட்டு ஓர் ஆதிதிராவிடப் பெண்ணைப் பிடித்து இழுத்ததில் அதிக கலாட்டா ஆகி அவரை எவ்வளவோ கஷ்டப்பட்டு வீட்டிற்கு அழைத்துப் போய் விட்டார்கள். அதனால் "ராஜுக்கள்" எல்லாரும் குடிகாரர்என்றுசொல்லிவிடுகிறதா?'' என்று முகத்தில் அடித்ததைப் போல் பேசினானாம். சின்ன எஜமானருக்குக் கோபம் வந்து "பதிலுக்குப் பதில் பேசும்படி உனக்கு அவ்வளவு கெர்வம் வந்து விட்டதா? அடே செல்லா! முதலில் போய் அந்த பிலாக்காயைத் திருகிக் கொண்டு போய் நமது வீட்டில் கொடு'' என்றுசின்ன எஜமானர் உத்தர விட்டார்களாம். அப்போது அந்த பிராம்மணன் கொஞ்சமாவது லக்ஷியம் பண்ணாமல் "என் மரத்திலிருக்கும் காயை நான் வேண்டாமென்று தடுக்கும்போது அறுக்கச்

கல்ல'' என்றானாம். ஓ ஹோ! உன் மரமாய்த் விட்டது.. அந்தத் தோட்டம் யாருடையது? உங்கப்பன் சம்பாதித்ததா? உன்பாட்டன் சொத்தா?'' என்று எஜமானர் கேட்டார்களாம். தோட்டம் தங்கள் தகப்பனாருடையதே; ஆனால் எப்போதுஎனக்கென்று தங்கள் தகப்பனார் தானம் கொடுத்து பத்திரம் எழுதிவிட்டார்களோ அன்றுமுதல் என்னுடையதுதானே'' என்றானாம். "அது யாருடையதானாலும்சரி; அந்தப் பிலாக்காயை இன்று அறுத்தே தீருவேன்; எப்போது இவ்வளவு தூரம் வந்து விட்டதோ? இனி விடப்போவதில்லை'' என்றார்களாம். அப்போது அந்தப் பிராம்மணன் கொஞ்சமாவது அடங்காமல் "தாங்கள் மட்டும் அறுத்துப் பாருங்கள். நான் லேசில் விடமாட்டேன்; தங்கள் தகப்பனாரிடம் சொல்லுகிறேன்; அவர்கள் விசாரிக்காவிட்டால் நீதிஸ்தலம்வரைபோய்த்தான் பார்ப்பேன்; இவ்வளவு தூரம் நான் கெஞ்சிக் கேட்டும் தாங்கள் ஒரே பிடியாய்ப் பிடிப்பது சரியல்ல'' என்றானாம்; அப்போது சின்ன எஜமானருக்குக் கோபம் வந்து பள் செல்லனைத் திட்டி உடனேகாயை அறுத்துவரச் சொன்னார்களாம்; அவன் மரத்தண்டை போனதும் அந்த பிராம்மணன் அவனை அறுக்கவிடாதபடி தடுத்தானாம்; பள் செல்லனுக்கும்

அவனுக்கும் கை கூடகலந்ததாம். அப்போது வேலன் அறுக்கப் போனனும். அச்சமயம் பாப்பாத்தி வந்து தடுத்தாளாம்; அவன் அவளைத் தூரப் பிடித்துத் தள்ளிவிட்டு அறுத்து வந்தானும். அப்போது அந்தப் பாப்பாத்தி சின்ன எஜமானரையும் தங்களையும் இவ் வூரிலுள்ள எல்லாரையும் பேசிய பேச்சுகளையும் ஏசிய ஏச்சுகளையும் சொல்லவே முடியாதாம். இதற்குள்ளாக அந்த இடத்தில் சுமார் ஆயிரம் ஜனத்திற்கு அதிகமாய்ச் சேர்ந்து விட்டார்களாம். இனி அந்தப் பார்ப்பானை இந்தவூரிலேயே இருக்க விடக்கூடாது. இன்றே நமது கௌரதை அதிகமாய்த் தாழ்ந்து விட்டது.

ஸ்ரீனிவாச ராஜு:—இன்று நமது பையன் செய்த காரியம் அவ்வளவு நியாயமாய்த் தோன்றவில்லை. பாவம் ஸ்வார்த்தத்திற் காக வைத்திருந்த அந்தப் பிலாக்காயை ஏன் அறுக்கச் சொல்ல வேண்டும். துப்பியதை எடுத்துப் புசிப்பாருமுண்டோ? எப்போது அவருக்கு அத்தோட்டத்தைக் கொடுத்து விட்டோமோ அன்று முதல் அது அவருடைய சொத்துதானே. அதில் பிரவேசித்ததே சரியல்ல; மேலும் பிராம்மணரென்ற மரியாதை கொஞ்சம்கூட இல்லா மல் இந்தச் சில்லன் அவரைத் தொட்டதேபிசகு. அதிலும் வேலன் அந்த பிராம்மணப் பெண்ணைத் தொட்டுத் தள்ளியது மிகவும் தவறு தலான காரியம்; ஆகவே தப்பிதம் நமது பேரிலே இருக்க நீ அவர் பேரில் பிரமாதமாய்க் கோபித்துக்கொள்வதுகொஞ்சமும்நியாயமல்ல; உன்னைப்போல் அனுபோக முடையவர்களே நியாயம் சொல்லத் தவ றினல் பின் பிள்ளைகள் கெடுவதற்கு யாரைக்கேட்க வேண்டும்? ஒரு ஆளை அனுப்பி சீதாராம சாஸ்திரியை நான் அழைத்து வரச் சொன் னதாக அழைத்து வரச் சொல்லு, நான் அவரைச்சமாதானப்படுத்தி அனுப்பி விடுகிறேன்.

காந்திமதியா பிள்ளை:—அவன் இன்று செய்ததற்கு அவனைச் சமாதானப்படுத்தவும் வேண்டுமா? வர வர எஜமானவர்கள் இவ்வாறு இளநெஞ்சினராவதால்தான் அவன் அவ்வளவு தூரம் தலைவிரித்துக் கொண்டு பேயாட்டம் ஆடுகிறன். அவன் இன்று நமது வாசலில் வந்து சுமார் ஒரு மணி நேரம் வரையில் தங்களைப் பார்க்க வேண்டு மென்று காத்துக் கொண்டு கிடந்தான், நான்தான் எஜமானவர்களைப் பார்க்க சாத்யபடாதென்றும், வாசலுக்குள் கால் வைத்தால் காவற் காறனை கால்மேலடிக்கும்படியும்அவன்கேட்கஉத்தரவுபண்ணினேன். அதன் பேரில் முறைத்துக் கொண்டு போய் விட்டான். தாங்கள்

இனி அவனைநமது நடையேற விடுவீர்களாகில் சின்ன எஜமான் மறு படியும்இந்த நடையில் கால் வைப்பதில்லை யென்று சத்தியம் செய்து விட்டு அவ்விஷயத்தைத் தங்களுக்கு அறிவிக்கச் சொன்னார்கள். நானும் அப்படியெ தீர்மானித்திருக்கிறேன். அவனை இனி இந்த நடை ஏறவிடுவதாகில் தயவு செய்து எனது ராஜிநாமாவை அங்கிகரித்துக் கொள்ளுங்கள்.

ஸ்ரீனிவாச ராஜு:—என்ன காந்திமதீ! நீ கூட இவ்வாறு பேசுகிறாய். பையனுக்கு நல்ல புத்தி சொல்ல வேண்டிய நீயே இவ்வாறு பேசினால் அவன் அவ்வாறு சொல்வது ஆச்சரியப் படக்கூடிய காரியமல்ல. "யானைவரும் பின்னே மணி ஓசைவரும் முன்னே" என்பது போல் நமது சமஸ்தானத்துக்கு ஏதோ கெட்ட காலம் இருப்பதால் தான் உனக்குக் கூட இவ்வாறு விபரீத புத்தி தோன்றி விட்டது. இனி எனக்கெவ்வாறானால்தானென்ன? "காடுவாவா என்கிறது; வீடு போபோ என்கிறது:" அவன் இஷ்டப்படியே நடக்கட்டும்;நீயும் அவனோடு சேர்ந்து அப்படியே நட, தயவு செய்து பின்னால் இப்படி ஆபத்துவந்து விட்டதேயென்று மட்டும் என்னிடம்வந்து சொல்லவும்வேண்டாம்; என் ஓத்தாசை கோரவும் வேண்டாம்.

காந்தமதியா பிள்ளை:—இந்த பஞ்சாங்கப் பார்ப்பான் ஒருவன் தவிரஇந்த ஏழேழு நாற்பத்தொன்பது மைல் விஸ்தீரணத்துக்குள்நமதுசின்னஎஜமானர் வார்த்தைக்குமாறாகப்பேசப்பட்டவர்கள் எவருமேயில்லை. நமது சின்ன எஜமானருக்குத் தெரியாத சர்க்கார் அதிகாரிகளும் எவருமிலர்.இந்தப்பக்கங்களில் பேருக்குமட்டும் பிரிட்டிஷ்இராஜாங்கம் அரசாள்வதாக ஏற்பாடுஇருக்கிறதேயொழிய உண்மையில் இப்போதுஇங்குஅரசாள்பவர்நமதுசின்னஎஜமானர்தானே! அப்படி யிருக்க இவன் மட்டும் இவ்வாறு பயப்படாமல் பேசுவதெதற்கு? எந்த விஷயத்திலும் பாருங்கள், இவன் தான் சின்ன எஜமானருக்கு எதிரியாய் வந்து நிற்கிறான், இந்தப் பார்ப்பாரப் பூண்டையே கருவறுத்து விடவேண்டியது அவசியம்.

ஸ்ரீனிவாச ராஜு:—"கிழவன்பேச்சு கின்னரக்காரனுக்கு எற்காது; ஆயினும் சொல்லுகிறேன் கேள். ஒரு தொன்னை உப்புமாவுக்கும் ஒரு கோப்பை காப்பிக்கும் வாய்க்கு வந்தவாறு உளறும் சில தப்பிலிகளின் துர்ப்புத்தியைக்கேட்டுநீங்கள் 'பார்ப்பான்' 'பார்ப்பான்' என்றுகேவலமாய்ப் பேசும்பிராம்மணர்சாமான்யமானவரல்லர்.அவர்களுக்கு ஈஸ்வரத்தியானம் செய்வதற்காகவும் வேதபாராயணம் செய்

வதற்காகவும், பிரம்மத்தைக் கண்டு பிடிப்பதற்காகவும் அநேக நூற்றாண்டுகளாக அமோகபுத்தி விசேஷண்யம் ஈஸ்வரனால் கொடுக்கப்பட்டு சாந்தம் என்னும் கிடைப்பதற்கரிதாகிய நெய்யை ஊற்றி வளர்த்ததால் நாளுக்கு நாள் அந்த புத்தி விசாலமாகிப் பெருகிக் கொண்டே வந்தது. அவ்வளவு அருமையான புத்தியை கிடைத்தற்கறியதாகியபிரம்மக்ஞானத்தில் செலவழிக்காமல், இருபத்தாறு எழுத்துக்களடங்கிய ஆங்கிலேய பாஷையைக் கற்பதில் செலவழித்து பெரிய பெரிய பரீட்சைகளில் சுலபமாய்த் தேறிமுக்கியமானவேலைகளி லமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் நியாயமாய்க் கஷ்டப்பட்டுப் படிக்கவேண்டிய பிரம்ம வித்தையை விட்டு இவ்வாறு மிலேச்ச பாஷையைக் கற்பதில் தங்கள் கவனத்தை எப்போது செலுத்தினார்களோ அப்போதே அவர்களுடைய புத்திவிசாலமும் உயர்ந்த ஞானமும் குறைந்து உலக விவகாரங்களில் மேன்மையடைந்து வந்த போதிலும், உண்மை ஞானத்தில் குறைவுபட்டு அறிவு மழுங்கி அந்தகாரம் அபிவிருத்தியாகி நாளுக்கு நாள் க்ஷீணிதமடைந்து வருகிறார்களென்பதில் ஐயமில்லை. இப்போதே பீ. ஏ. பரீக்ஷையில் தேறியவர்கள் வேலை கிடைக்காமல் திண்டாடுகிறார்கள். வருஷா வருஷம் உயர்தரக் கலாசாலைகள் பெருகிக் கொண்டே வருகின்றன. இனி 10 வருஷங்கள் போனால் பீ. ஏ. பரீக்ஷயில் தேறியவர்களுக்கு 20 ரூபாய் சம்பளம் அகப்படுவது கூட கஷ்டமாகிவிடும். "அரசனை நம்பி புருஷனைக்கைவிட்ட" கதையைப் போல் அவர்களுக்குக் கிடைத்ததற்கறிதாகிய பிரம்மக்ஞானத்தைப் பெறுவதையும் கைவிட்டு விட்டு, இருக்கும் ஆஸ்திகளை ஆங்கிலேய பரீக்ஷைகள் தேறுவதில் செலவிட்டுவிட்டு, அவர்கள் பரீக்ஷைக்காக செலவழித்த திரவியத்திற்கு நூற்றுக்கு கால்வட்டிகூட கட்டாத சம்பளத்திலமர்ந்து தமது வாழ்நாட்களை வீண் நாட்களாக்குவார்களென்பதில் சந்தேகமில்லையெனினும் இப்போதுகூட அவர்களை புத்தியால் ஜெயிக்கக்கூடிய வல்லமையாவது அதற்கு ஜீவாதாரமாகிய சாந்த குணமாவது நம்மிடமில்லை யென்று நாம் ஒப்புக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். "பார்ப்பான் பார்ப்பான்" என்று இழிவாய்ப் பேசுவதால் நாம் ஏதோ கௌரதை யடைந்து விடுவதாக நினைத்துப் பேசுகிறீர்கள். அவர்கள் பார்ப்பார்கள்தான். அதாவது சமயம்பார்ப்பார்கள். சமையம் ஏற்பட்ட உடனே விரோதிகளைக்குழியில் தள்ளப்பார்ப்பார்கள். அது நிச்சயமே. உண்மை முறையில் உழைக்க வழியறியாது சுயமரியாதை

என்னும்பேரால்பிழைக்கவழி தேடித்திரியும்சுமார் அரைடஜன் ஆசாமிகள் நியாயமிருப்பினும்இல்லாவிட்டாலும், உண்மையிருப்பினும்இல்லாவிடினும், நல்லவர்களாயினும் தீயவர்களாயினும், பிராம்மணர் அல்லது பிராம்மணீயம், என்றபேரைக்கேட்டமாத்திரத்தில் தூஷணைசெய்து பேசியும்,நிந்தனையே தன்அங்கமுழுதும்பூஷணமாகக் கொண்ட இரண்டொரு சாக்கடைப் பத்திரிகைகளின் மூலமாய் விஷமப் பிரசாரம் செய்வோரின் துர்ப்போதனையைக் கேட்டு நீங்கள் புத்தியில்லாமல் தலைவிரித்துக் கொண்டு இவ்வாறு பேசுகிறீர்கள். நீங்கள் சரிவர ஆராய்ந்து யோசித்துப்பார்த்தால்இந்த அரைடஜன் ஆசாமிகள் இவ்வாறுநிந்திப்பதுபிராம்மணரையா அல்லது பிராமணரல்லாதவர்களையா என்று உங்கள் மனதில் நன்ருய்ப்படும். முதலில் இந்தியாவிலுள்ள 33கோடிஜனங்களிலும் இந்த சுமார் ஆறுபேர் தான் புத்திசாலிகளென்றும் மற்றவர்களெல்லாரும், விவேகமில்லாதவர்களென்றும், மடையரென்றும், அறியாதவர்களென்றும் அவர்கள் சொல்லுகிருர்களென்பதுஉங்கள் மனதில் ஏன்படவில்லை? இரண்டாவது தங்களை மஹா புத்திசாலிகளென்று தங்களுக்குத் தாங்களே மாலை போட்டுக்கொண்டும்,ஸ்ரீமான்,ஆகாயமளவும் உயர்திரு, வீர,தீர,சூர சிங்கங்கள் என்று மகுடங்கள் தங்களுக்குத்தாங்களே தங்கள்பத்திரிகைகளின் மூலமாகச் சூட்டிக்கொண்டும்திரியப்பட்டஇந்த ஆசாமிகளில் பெரும் பான்மை யோருடைய யோக்யதை என்ன வென்று தெரியுமா? ஜெயிலுக்குப் போன யோக்யதையைத் தவிர வேறு எவ்வித யோக்கியதையும் இருப்பதாகத்தெரியவில்லை. ஜெயிலுக்குபோன நிமித்தமே அவர்கள் தேசியத் தொண்டு புரிந்தார்களாம். ஆகையால் அவர்கள் எல்லோருக்கும் மேலான தேசத்தலைவர்களாம். இந்தியாவில்மேளதாளத்துடன் பிச்சையெடுக்கும் வகுப்பினரில் அவர்களும் சேர்ந்தவர்கள் தான். சென்னை செங்காங் கடையிலிருக்கும் பேர்பெற்ற சோம்பேரிகளுக்குத் தெரியாத வசைச்சொற்களும், இழிசொற்களும், தூஷணைகளும் கற்றவர்கள். மதுவிலக்கைப்பற்றி அளவில்லாத பிரசாரம் செய்யும் இவர்கள், தங்கள் பெற்ருேர்க்கு சிரார்த்தம் செய்வதற்குப் பதிலாக தங்கள் பெற்ருேர்கள் பிரபல குடியராதலால் பீப்பாய்பீப்பாய்களாகசாராயமும்,மாம்சங்களும், சிரார்த்தத் தன்று தங்கள் நண்பர்களுக்கும் பந்துக்களுக்கும் பகிர்ந்து கொடுத்து பெற்ருேர்களின் மனம்குளிரச்செய்வதாகப்பஹிரங்கமாய் எழுதும் சூரர்கள். மேலும் மதுவிலக்கைப்பற்றி பிரசாரம் செய்யவரும் போதும்

எழுதும்போதும்கூட சிலர் குறைந்தது 4 திராம் சாராயமாவது குடிக்காமல்வருவதில்லை. ஏனெனில் தூஷணைகளை எழுதுவதற்கு முன்னம் சாராயம் குடித்து பேனா கையிலெடுத்தால் தான் அகராதியில் கூட அடங்காத இழிச் சொற்கள் உதையமாகு மென்பது அவர்கள் கொள்கை போலும். சுயமரியாதைப் பிரசாரத்திற்குப் பணம் தேவையென்றும், சுயமரியாதைக் கேஸ்களுக்கு ரூபாய்கள் தேவையென்றும் பலவிதமாய் ஊர் ஊராய்ப்போய் இந்தியாவில் இதுவரையில் பிச்சையெடுத்தாய் விட்டதாலும் இங்குள்ளவர்கள் இவர்களால் பேசப்பட்டும், எழுதப்பட்டும்வரும் இழிச்சொற்களைக் கண்டு அருவருப்படைந்து, விட்டதாலும் இனிஇங்கு தங்கள் ஜெபம் சாயாதென்று கண்ட இவர்கள் ஜலப் பிரதேசங்களில் சென்றிருக்கும் இந்தியரை வஞ்சித்து பொருள்பறிக்க அங்கும் போகிறார்களென்பது தெரியுமா தெரியாதா? ஒருஎள்ளின் கோடியில் ஒருபாகங்கூட சுயமரியாதையென்பதுஎன்னவென்று அறியாத இந்த அரைடஜன் பேதைகள் தலைமுறைதத்துவமாய் புத்திசாலிகளாயிருக்கும் 33 கோடி ஜனங்களுக்கு சுயமரியாதை கற்பிக்கப் புறப்பட்டிருக்கிறார்களென்று நினைப்பது எவ்வளவு நகைப்புக் கிடமான காரியம். முப்பத்து மூன்று கோடிஜனங்களில் 33 பேர் அல்ல 330 பேர் பிராம்மணீயம் ஒழிந்த சடங்குகள் செய்ததாகத் தடபுடல் பிரசாரம் செய்கிறார்கள். தீண்டாமையை ஒழித்து விடுகிறோம், ஒழித்து விட்டோம் என்று பேய்க் கூச்சலிடும் இவர்கள் ஆதிதிராவிடர்களுக்காக இதுவரையில் செய்த நன்மை என்ன வென்று எவராலாவது சொல்ல முடியுமா? செங்கல்பட்டில் சமபந்தி போஜனமளிப்பதாகப் பஹிரங்கமான விளம்பரங்கள் போட்டும், பிரசாரமேடை மீதிருந்து வார்த்தைப்பந்தல்கள் சிங்காரித்துப் பேசிவிட்டும் போஜனம் கொடுக்கும் இடத்திற்கு வந்ததும் முதலியார் வகுப்பினரிலேயேபூந்தமல்லி முதலியார்களும் பொன்னேரி முதலியார்களும் ஒன்றாய் உட்கார்ந்து சாப்பிட மறுத்து தனித்தனிஅறைகளில் அமர்ந்து சாப்பிட்டது எவ்வளவு ஏளனத்திற் கிடமாயிற்றென்று யோசித்துப்பார். ஈஸ்வரசங்கல்பத்தினால் தனக்குத்தானாய் ஜனங்களுக்குள்ளேயே மாறுதல் உண்டாதல் சாத்தியமேயொழிய இப்பேர்ப்பட்டதூஷணைப்பிரசாரத்தால் எவ்விதநன்மையும் ஏற்படுமென்று கனவிலும் கருதவேண்டாம், இது ஒன்றுமட்டும் உங்களுக்கு நெடுநாட்களாய்ச் சொல்ல வேண்டுமென்றிருந்தேன். இப்போது சொல்லித் தீர்த்து விட்டேன். நான் சொன்ன இவ்விஷயங்களை மட்

டும் உன் எஜமானிடம் தெரிவித்துவிட்டு அப்பால் உங்களிஷ்டம் எப்படியோ அப்படி நடந்து கொள்ளுங்கள். இனி இவ்விஷயத்தைப் பற்றி உங்களிடம் பேசுவதில்லை.

என்று சொல்லி விட்டு மறுபக்கம் திரும்பியதும் கண்ணைமூடிக் கொண்டார். தனது எஜமானருடைய சுபாவம் காந்திமதியா பிள்ளைக்கு நன்றாகத் தெரியுமாதலால் அவருக்குக் கோபம் வந்துவிட்டதென்றும் இனி அவருடன்பேச பிரயாசைப் படுவது வியர்த்த மென்றும் அறிந்து கொண்டு தனது சின்ன எஜமானராகிய சுந்தரராஜு அவர்களிடம் போய்தனக்கும் பெரிய எஜமானருக்கும் நடந்தேறிய சம்பாஷணையைப் பற்றிச் சொல்லி முடித்தார்.

சுந்தரராஜு:—ஐயா! தாங்கள் இதைப்பற்றி சிந்திக்கவேண்டாம். என் தகப்பனாரவர்கள் என்ன நினைத்தபோதிலும் சரிதான்; அந்தப் பாப்பானை இந்த ஊரைவிட்டு ஓட்டாமல் விடுவதில்லை. ஒருக்கால் அவன் போலீஸ் ஸ்டேஷனுக்காவது அல்லது இன்ஸ்பெக்டரிடமாவது போய் ஏதாவது பிரியாது எழுதிக் கொடுப்பான். அவன் கொடுக்கும் பிரியாதை அவன் மூஞ்சியிலேயே வீசஎறிந்துவிடும்படி திட்டம் செய்து வருகிறேன், உடனே வண்டி போடச் சொல்லுங்கள்.

என்றார். வண்டிபோட்டுவரவே சுந்தரராஜு வண்டியில் ஏறிக் கொண்டுபோய் பேசவேண்டியவர்களிடமெல்லாம் பேசிவிட்டு வந்துவிட்டார்.

நிற்க, காந்திமதியா பிள்ளை தமது எஜமானரைப் பார்க்க முடியாதென்றும், உள்ளே காலை வைத்தால் காலைவெட்டி விடும்படியும் உத்தரவிட்டதைக் கேட்ட சீதாராம சாஸ்திரி தன் தோட்டத்திற்குள் புகுந்து தான் தடுத்தும் துராகிர்தமாய் பிலாப் பிஞ்சை அறுத்ததைப் பார்த்த பலரைத் தனக்குச் சாக்ஷியாக வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அவர்கள் தங்களைச் சாக்ஷியாகப் போடவேண்டாமென்றும் போட்டால்தங்களுக்கு அவ்விஷயமே தெரியாதென்று தான் சொல்லும்படி நேரிடுமென்றும் ஆகையால்வேறு எவரையாவது சாக்ஷியாகப் பார்த்துக் கொள்ளும்படிப் பலரும் சொல்லிவிட்டதால் அவருக்கு சாக்ஷி சொல்ல வருவோர் எவரும் இல்லை. அப்படியிருந்தும் அவர் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் பிரியாது கொடுக்க உத்தேசித்து அங்கிருந்த உத்யோகஸ்தரிடம் சொல்ல அவர் அரை மணிநேரம்வரையில் இங்குமங்கும் போவதும் வருவதும் அந்தவேலை

இந்தவேலையைச் செய்வதுமாயிருந்தாரேயொழிய சாஸ்திரி சொன்னதைக் கேட்காதவர் போலிருந்தார். அப்பால் சாஸ்திரிகள் "என்ன ஐயா! நான்சொல்லிக்கொண்டேயிருக்கிறேன்; தாங்கள்கவனியாமலே இருக்கிறீர்களே" என்றார். அப்போது அவர் பக்கத்திலிருந்த போலீஸ் கனிஸ்டேபிளைப் பார்த்து ',அடே இந்த ஊரையாளும் ஐயர் வரப் போகிறார் என்று போலீஸ் சூப்பிரண்டடண்ட் துரை வந்து அவருக்காகக்காத்திராமல் அவர்பாட்டில்வேலைசெய்துகொண்டிருந்தால், ஐயர்தலையை வாங்கி விடுவாரென்று அறியாமல் அறிவீனமாய் இருக்கிறாரே! நீ உடனேபோய் ஐயர் வந்துவிட்டார்; உடனே எய்ரோபிளேன்(ஆகாயவிமானம்) ஏறிவந்து அவர் பிரியாதை வாங்கிக் கொள்ளச் சொல்லு" என்று ஏளனமாய்ப் பேசினார் ஐயருக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை; கோபமும் வருகிறது. கோபித்துக் கொண்டால் தன்காரியம் ஆகாது; என்ன செய்வார் பாவம்! கால்மணிநேரம் அரைமணிநேரத்துக்கொருமுறை அவரிடம் சொல்லிக் கொண்டிருந்தார். அவருடைய வேலைநேரம் முடிந்து அவர் எழுந்து போகும்போது" அதோ ஹெட்கான்ஸ்டேபிள் குப்பையர் வருகிறார். அவரிடம் சொன்னால் அவர் கவனிப்பார்" என்றார். அவர் வந்ததும் அவரிடம் சொன்னார். அவரும் இவரை மூன்றுமணிநேரம் வரையில் தாக்குக் காட்டிவிட்டு கடைசியாக அவரைப்பார்த்து,

குப்பையர்:—சாஸ்திரிகளே! நான் சொல்வதைக் கேளுங்கள்; பிலாக்காயை மட்டுமல்ல, உமது தலையையே திருகிக்கொண்டு போனாலும் கேள்வி கேட்பாடு இல்லாத இந்த ஊரில் ஒரு அணுத்தாளாத பிலாப்பிஞ்சை அறுத்துக் கொண்டுபோய் விட்டதாக பிரமாத கேஸ் கொண்டுவந்து விட்டீரே! போங்காணும் பைத்தியக்காரா உமக்கு ஏதாவது வேலையிருந்தால் பார்க்கப்போம்; இல்லாவிட்டால் ஆத்துக்குப் போய் சௌக்கியமாய் படுத்துக்கொண்டு தூங்கும். இன்னும் அதிக கஷ்டங்களை இழுத்துத் தலையில் போட்டுக் கொள்ளாதேயும்; அவர்கள் செய்திருக்கும் முந்திய உபகாரங்களை எண்ணிப்பாரும்.

சீதாராம் சாஸ்திரி:—என்னையா! கேஸ் கொண்டு வந்தால் பதிவு செய்து கொள்ளாமல் இவ்வாறாக ஏழைக்கு ஒருநியாயமும் மஹாராஜருக்கு ஒருநியாயமுமாகச் சொல்வதற்காகத்தான் காருண்ய கவர்ண்மெண்டார் நியாயஸ்தலங்களேயும் போலீஸ் ஸ்டேஷன்களேயும் ஏற்படுத்தியிருக்கிறார்கள் போலிருக்கிறது.இப்படி அநியாயமும் உண்டா? சுயஜாதி அபிமானம்கூட உமக்கு இல்லையே.

என்றார். அதற்கு அவர் இந்த அற்பவிஷயத்தை எடுத்துக் கொள்ளத் தங்களுக்கு அதிகாரமில்லை யென்றும் எதற்கும் மறுநாள் காலை 10 மணிக்கு வந்தால் இன்ஸ்பெக்டரவர்களைக்கண்டுபேசலாமென்றும் சமாதானம் சொல்லி அனுப்பினார். வேறு செய்வதற்கு ஒன்றும் தோன்றாததால் சாஸ்திரிகள் வீட்டிற்குப் போனார். மறுநாள் காலையில் ஒருக்கால் இன்ஸ்பெக்டர்முன்னாலேயேவந்து எங்கேபோய் விடுவாரோ என்னும் பயத்தால் சாஸ்திரி காலை 5மணிக்கே போலீஸ் ஸ்டேஷனுக்குப்போய் அவர்வரவைஎதிர்பார்த்திருந்தார். அவர்சுமார் மணி 11க்கு ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தார். வந்தவர் அவருடைய பல அவசர ஜோலிகளைக் கவனித்துவிட்டு 12மணிக்கு எழுந்து வீட்டுக்குப் போகும்போது அப்போதுதான் சாஸ்திரிகளைப் பார்த்தவர் போல் "நீர் எங்குவந்தீர்" என்றார். அவர் நமக்கு இப்போது தான் நற்காலம் பிறந்ததென்று மனதில் எண்ணிக்கொண்டு தன்சமாசாரங்களை விவரமாய்ச் சொல்ல ஆரம்பித்தார். அப்போது இன்ஸ்பெக்டர் கோபத்துடன் "என்னகாணும்! சுருக்கமாய்ச் சொல்லச் சொன்னால் உமது வீட்டு சம்சாரத் தொல்லைகளையெல்லாம் கொண்டுவந்து என்தலையில் கொட்டி என்காலத்தை வீணாக்குகிறீரே, [illegible] ரில் பிராம்மணார்த்தம் தின்றுகொண்டு வேறுவேலை யில்லாதிருந்தால் உம்மிடம் கதைகேட்டுக் கொண்டிருக்கலாம்" என்றார். சாஸ்திரி சுருக்கமாய்ச் சொன்னார்.

இன்ஸ்பெக்டர்:—எங்காணும்! பிலாப்பிஞ்சின் விலைஎன்ன இருக்கும்?

சாஸ்திரி:—எஜமான்! விலையைப் பற்றியல்ல; எனது தகப்பனார் சிரார்த்தத்திற்கு வைத்திருந்ததைத்தான் கவனிக்கவேண்டும்.

இன்ஸ்பெக்டர்:—ஓய் பஞ்சைப்பிராம்மணா! நான் கேட்ட கேள்விக்கு ஜவாப்பு சொல்லாமல் விளையாடுகிறீரா என்ன அடே 348!

என்றார். அவனும் பூதத்தைப்போல் சாஸ்திரி எதிரில் வந்து நின்றதும் "ஓய்! எஜமானரிடமா விளையாடுகிறீர். எஜமான்கேட்டகேள்விக்கு சரியான ஜவாபு சொல்லாவிட்டால் தவடை புளித்துபோம் ஜாக்கிரதை" என்றான். "ஓஹோ போலீஸ் ஸ்டேஷனில் பிரியாது செய்யவந்தால் இந்தமரியாதையும் உண்டோ" என மனதில்எண்ணிக் கொண்டு,

சாஸ்திரி:—முக்கால் ரூபாய் தாளும்,

இன்ஸ்பெக்டர்:—ஓய்! மூன்றடி நீளமுள்ள பிலாப்பழமே எட்டணாவுக்கு வாங்குவோரில்லாமல் கிடக்கும்போது பிலாப்பிஞ்சு ஒரு அணாத்தாளும். அப்படி யில்லையென்று நீர் சொல்லுகிறபடி முக்கால் ரூபாய் பெறுவதாயிருந்தாலும் அவையெல்லாம் அற்பகுற்றங்கள். கிராமமுனிசீப்பி ம் பிரியாது கொடுக்கவேண்டும். ஒரு ரூபாய்க்கு அதிகமானால்தான் நாங்கள் பதிவு செய்யக்கூடும்.

என்று சொன்னதும் வண்டி யேறிப் போய் விட்டார். சாஸ்திரிகள் காலை முதல் பல்கூட துலக்காதிருந்தும் அப்படியே கிராம முனிசீப்பு வீட்டிற்குச் சென்றார். தாசில்தாரவர்கள் கூப்பிட விட்டதால் தாலுகாவுக்கு முனிசீப் போயிருக்கிறதாகவும் வர மூன்று தினங்களாகு மென்றும் தெரிந்து கொண்டு, அப்பால் வீட்டுக்குப் போய் நித்யகர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு மாலை மூன்று மணிக்குத் தான் பச்சை ஜலம் பல்லில் ஊற்றினார். மூன்று தினங்கள் பொறுத்து கிராம முனிசீபு வந்ததும் அவரிடம் போய் பிரியாது கொடுத்தார். நான்கு தினங்களுக்கப்பால் தெரிவிக்கப்பட்டதென்பதை முதன்மையாக எழுதி விட்டு மறுநாட் காலையில் முனிசீப் போய் விசாரணை செய்தார். சாஸ்திரிகளும் அவர் சம்சாரமும் தவிர வேறு எவரும் சாக்ஷியில்லாததால் ருஜுவாகவில்லை யென்று எழுதி யனுப்பிவிட்டு சாஸ்திரிகளிடம் இன்னும் விசாரணை செய்வோம், சாவகாசமாய் வந்து சாக்ஷிகள் எல்லோரையும் விசாரித்து முடிவு செய்கிறேன் என்றார். அப்பால் சாஸ்திரி பல தடவைகளில் வந்து கண்டபோது, தான், சாக்ஷிகளை எல்லாம் விசாரித்ததாகவும் சாஸ்திரி சொல்லும் விஷயம் ருஜுவாகவில்லை யென்றும் சொன்னார். அதற்கு சாஸ்திரி "என்ன ஐயா! என்னை வைத்துக் கொண்டு விசாரணை செய்தால்தானே உண்மை வெளியாகும்" என்றார். அப்போது முனிசீப் அவர்களுக்குக் கோபம் வந்து "சர்க்கார் வேலைகளை யெல்லாம் நான் விட்டு விட்டு உமது ஒரு அணா விலை யுள்ள உயர்ந்த பிலாப்பிஞ்சைப் பற்றிய பிரமாத கேசை விசாரிப்பது தான் எனது முக்கிய வேலை; போங்காணும் பைத்தியக்கார பிராம்மணா! ஒரு அற்ப விஷயத்தை மலைபோல் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு இராத் தூக்கம் பகல் தூக்கமில்லாமல் அதே ஜோலியாய் அலைகிறீர். உமக்கு சமாதானமாகும்படி அன்று நேரில் பார்த்ததாய் நீர் சொல்லும் அப்பணை ஐயங்கார் அதோ போகிறார்; அவரை அழையும்; உமது எதிரிலேயே விசாரிக்கிறேன்." என்றார்.

சாஸ்திரி:—அண்ணு! அப்பணே ஐயங்காரண்ணு! அப்பணே ஐயங்காரண்ணு!! என்று அவர் தொண்டை வலிக்கக் கத்தினர். அவர் கேட்காததுபோல் போனர். ஓடிப்போய் கூப்பிட்டார். தான் அவசர ஜோலியாய்ப் போவதால் வர சாத்யப்படாதென்று சொன்னர்; கிராம முனிசீப், தலையாரியைக் கூப்பிடச் சொன்னபின் வந்தார்.

கிராம முனிசீப்:—இவர் தோட்டத்தில் பிலாக்காய் யாரோ அறுத்ததைத் தாங்கள் பார்த்தீர்களாமே! யார் அறுத்தார்கள்? தயவு செய்து பிரமாண வாக்கு மூலம் கொடுங்கள்.

அப்பணே ஐயங்கார்:—நான் பார்த்ததாக யார் சொன்னர்கள்? அன்றையதினம் நான் இந்த ஊரிலேயே யில்லையே. ஆழ்வார் திருநகரியிலல்லவா யிருந்தேன். அப்பால் ஒருநாள் என்னைப் பார்த்தபோது சாஸ்திரிகள் தான் யாரோ பிலாக்காயை அறுத்து விட்டதாகவும் தான் பிரியாது செய்திருப்பதாகவும் சொன்னர்.

கிராமமுனிசீப்:—ஓய் சாஸ்திரிகளே! நீர் திருட்டு கேஸ்கொண்டு வந்ததுமல்லாமல் பொய் சாக்ஷிகளையும் தயார்செய்கிறீர் போலிருக்கிறதே. உம்மைப்பற்றி மேலதிகாரிகளுக்குத் தெரிவித்து உமக்கு சிக்ஷை பண்ணி வைத்தால்தான் புத்திவரும் போலிருக்கிறது.

அப்பணே ஐயங்கார்:—சாஸ்திரிகளே! உமக்கு கொஞ்சமாவது புத்தியில்லை காணும். உம்முடைய ஆயுட்காலத்தில் பலவான்களைம் தனவான்களையும் எதிர்த்து வெற்றியடைந்திருப்பவர்களைப் பார்த்திருக்கிறீரா? விட்டுக்கொடுத்தும் தட்டிக்கொடுத்தும்கொண்டுபோனல் நமக்குவேண்டிய காரியசாதனம் செய்து கொள்ளக் கூடும்; இதை விட்டுவிட்டு துரும்பைப் பிரமாண்டமான விருக்ஷமாகப்பாவித்து ஆலிஜோலி பிடித்து அலைகிறீர்.

சாஸ்திரி:—ஓய் வாயைமூடும். நீர் மகாபெரிய மனுஷன்தான் நேரில் பார்த்த சங்கதியைப் பார்க்கவில்லை யென்று பொய் சொல்லுகிறீரே! சீ; நீயும் ஒரு மனுஷனு? சாகப்போகிற வயதாய் விட்டது பிராம்மணன் என்ற உயர்குலத்திற்கு இருக்கவேண்டிய சத்தியத்தை விட்டு விட்டு வாய்கூசாமல் பொய்பேசும் நீ சண்டாளனிலும் கேடு கெட்டவன். நீ புத்தி சொன்னது போதும்; வாயைமூடு.

என்றார். உடனே அப்பணே ஐயங்கார், கிராம முனிசீப் பக்கம் திரும்பி, "சாஸ்திரிகளுக்கு பித்தம் மேலிட்டதனுல் புத்தி கெட்டுப் போயிருக்கிறது. ஆகையால் அவருடைய வார்த்தைகளைத் தாங்கள் கவனிக்கவே வேண்டாம். நான் அவசர ஜோலியாய்போகிறேன் விடை

பெற்றுக் கொள்ளுகிறேன்,” என்று சொல்லிப் போய் விட்டார். கிராம முனிசீபும் அப்பால் சாஸ்திரிகளிடம் பேசாது தன் இல்லம் சென்றார். சாஸ்திரி தன்வீடு சேர்ந்ததும் மாஜிஸ்டிரேட்டிற்கும் போலீஸ் சூப்பிரன்டெண்டுக்கும் இவைகளைப்பற்றி பிராதுகள் எழுதி அனுப்பி விட்டுப்படுத்துக் கொண்டார். மறுநாட்காலையில் அம்பட்டனை அழைத்து க்ஷவரம் செய்யச்சொன்னார். அவன் கத்தியால் வெவ்வேறாக ஐந்தாறு இடங்களில் ஒவ்வொரு இழுப்பு இழுத்து க்ஷவரம் செய்ய ஆரம்பித்தான். அச்சமயத்தில் அம்பட்டன் பெண்சாதி ஓடி வந்து குழந்தைக்கு அதிக கஷ்டமாயிருப்பதாகவும் உடனே வைத்தியனை அழைத்து வரவேண்டுமென்றும் சொன்னாள். அம்பட்டன் சாஸ்திரிகளை அதேஸ்திதியில் விட்டுவிட்டு எழுந்துவிட்டான். சாஸ்திரிகூடிய வரையில் க்ஷவரம் செய்து விட்டுப் போகும்படி வேண்டிக்கொண்டும் அவன் உடனே போய்திரும்புவதாகவும் சாஸ்திரிகளை அந்தஸ்திதியில் விட்டுவிட்டுப்போனவன் தாமதிக்கமாட்டானென்றும் உடனே திரும்புவதாகவும் சொல்லிச் சென்ற அம்பட்டன் திரும்பி வரவில்லை. அப்பால் போவோர் வருவோரிடமெல்லாம் அம்பட்டனை ஜல்தியாய் வரும்படி சொல்லியனுப்பினார்கள். மணி 12-ஆகியும் அம்பட்டன்வர வில்லை, கடைசியாகசாஸ்திரிகள் தனதுபெண்ஜாதியை அனுப்பி அம்பட்டனை அழைத்துவரச்சொன்னார். பாவம்பிராமணஸ்திரீ, அம்பட்ட தெருவிற்குள்போய் அவனைப் பார்க்க, அவன் வீட்டிற்கு வந்ததும் அகோரமாய்ஜ்வரம்வந்துவிட்டதாகவும் தனக்குஎழுந்துஉட்காரவே சக்தியில்லை யென்றும் பற்களடித்துக் கொள்ள, உடம்பெல்லாம் உதறச் சொன்னான். சாஸ்திரிகள் சம்சாரம் வேறுஒரு அம்பட்டனை அழைத்துச் சென்றார்கள். அவன் சம்மதித்துப் போனவனைப்போல் சாஸ்திரி உட்கார்ந்திருக்கும் இடம்வரையில் போய்ப் பார்த்ததும் “ஐயா இன்னொருவன் க்ஷவரம் செய்து விட்டவருக்கு நான்க்ஷவரம் செய்தால் என்னை ஜாதியை விட்டுநீக்கி விடுவார்கள். ஆகையால்நான் செய்யமாட்டேன்” என்றுசொன்னான். சாஸ்திரிகளும் அவர்சம்சாரமும் எவ்வளவு தூரம்வேண்டிக்கொண்டும் அவன் க்ஷவரம் செய்யாமல் போய்விட்டான். அப்பால் எவரை அழைத்தபோதிலும் வரமறுத்தார்கள். அதற்குள் நாலு பிள்ளைகள் ஐந்துபிள்ளைகள் சேர்ந்துகொண்டு காட்சிசாலையில் புதிதாகக்கொண்டுவந்துவைக்கப்பட்ட ஓர்மிருகத்தை ப்பார்த்து வருவதைப்போல் சாஸ்திரிகளைப் போய்பார்ப்பதும் நடை இறங்கும்போது கைகொட்டிசிரித்துஏளனம் செய்துகொண்டுபோவ

துமாயிருந்தார்கள். அப்போது சாஸ்திரிகளிருந்தஸ்திதியைப்பார்த்த சாதுக்களே வயிறு குலுங்கச் சிரிப்பார்களென்றால் கஷ்டநஷ்டங்கள் இன்னதென்றறியாத குழந்தைகள் சிரிப்பதைக் கேட்கவும் வேண்டுமோ? இப்படி சாயங்காலம் மூன்று மணி வரையில் காத்திருந்தும் அம்பட்டன் வர சாத்யமில்லாததாலும், வயிற்றின்பசி அதிகமாகிய தாலும், தன் சம்சாரத்தின் தூண்டுதலின்பேரில் சாஸ்திரிகள் தெருக்கதவைச்சாத்தித்தாளிட்டுவிட்டு ஸ்நானம் செய்து சாப்பிட்டுவிட்டு முகத்தைத் துணியால் மூடிப்படுத்துக் கொண்டார்.

மறுநாட் காலையிலும் அவ்வூரிலுள்ள அம்பட்டர் சாஸ்திரிகளுக்கு க்ஷவரம் செய்ய மறுப்பார்களென்று நினைத்து காலை நாலுமணிக்கே எழுந்து பக்கத்தில் மூன்று மைல் தூரத்திலுள்ள சம்பந்திபுரம் என்னும் ஊருக்குப் போய் பொழுது விடியுமுன் க்ஷவரம் செய்து கொள்ளலாமென நினைத்து அவ்வாறே சென்று அவ்வூர் அம்பட்டன் வீட்டுக் கதவைத் தட்டினார். வீட்டிற்குள் இருந்தபடியே "யார்" என்றான் "சாஸ்திரிநான்தான் கதவைத்திற, அவசரமாய் க்ஷவரம்செய்து கொண்டு வெளியே போக வேண்டியிருக்கிறது. உனக்கு இரட்டிப்புக் கூலிதருகிறேன்" என்றார். அம்பட்டன் கதவைத்திறக்காமலே "ஓஹோ சாஸ்திரிகளா" என்று கேட்டான். அவர் "ஆம்" என்றார். இவன் நம்மை முன்பின் தெரியாதவனுயிருந்தும் 'ஓஹோ சாஸ்திரிகளா' என்றானே. ஒருக்கால் இவ்வூரிலும் தனக்கு க்ஷவரம் செய்யக் கூடாதென்று திட்டப்படுத்தி யிருக்கிறார்களோ என்னமோ தெரியவில்லையே; என நினைத்துக் கொண்டே "அப்பா ஜல்தியாய்க் கதவைத் திற; நான் அவசரமாய்ப் போகவேண்டும்" என்றார், "சாமி! கத்திகளை சாணைபிடிப்பதற்காக அனுப்பியிருக்கின்றேன். ஆகையால் வேறே எவரிடமாவது க்ஷவரம் செய்து கொள்ளுங்கள்" என்றான். அவர்பல அம்பட்டரிடம் சென்றும் ஒவ்வொருவரும்சாக்குப் போக்குச்சொல்லிவிட்டார்களே தவிரஎவரும்க்ஷவரம்செய்யஒத்துக் கொள்ளவில்லை, கடைசியாகஒர்கிழஅம்பட்டன் "சாமி! நீர் ஆயிரம்ரூபாய்கொடுத்தாலும் உமக்கு எவரும்இவ்வூரில் க்ஷவரம் செய்யமாட்டார்கள். இதைப் போலவே சுமார் இந்த50 சதுர மைல் விஸ்தீர்ணத்திலும் உமக்கு எந்தஊரிலும் க்ஷவரம் செய்யமாட்டார்கள், ஏன் வீணாய் அலைகிறீர் வீடுபோய்ச்சேரும். இல்லாவிட்டால் வண்டி வைத்துகொண்டு பாளையங்கோட்டைக்காவது திருநெல்வேலிக்காவது போம். அங்கு ஒருக்கால் நீர்க்ஷவரம் செய்து கொள்ளலாம்" என்றான். அதற்குள்

பொழுது விடிந்து விட்டது. அச்சந்தர்ப்பத்தில் பல பிள்ளைகள் சாஸ்திரிகளின் முகம் இருந்த அலங்கோலத்தைக் கண்டு அவரைச் சுற்றி நின்று சிரிக்கவும் ஏளனம் செய்யவும் ஆரம்பித்தார்கள். அந்த அவமானம் பொறுக்காமல் ஜல்தியாய் போய்விடலாமென நினைத்து சாஸ்திரிபோகமுயன்றார்.பிள்ளைகள் அவரைச்சுற்றிக்கொண்டு போக விடவில்லை; சாஸ்திரி "என்னைப்போகவிடுங்கள்" என முதலில் கெஞ்சியும், பின்னால் கோபித்துச்சொல்லியும் அவர்கள்விடவில்லை. அதற்குள் சாஸ்திரிகள் மீது சாணி உருண்டைகளும், கற்களும் வந்துவிழ ஆரம்பித்தன. அவருக்குக்கோபம்வந்து "வழிவிடுவீர்களா? விடமாட்டீர்களா இல்லாவிட்டால்" என்றுமுடிப்பதற்குள் "இல்லாவிட்டால் என்ன செய்துவிடுவீர்,ஒன்றிரண்டாய்ப்புரட்டிவிடுவீரோ?என்றதும்எல்லாரும் கைதட்டி சிரித்தார்கள்.பக்கத்தில்ஒன்றுமகப்படாததால்கீழிருந்த இரண்டொருகற்களைஎடுத்துக்கொண்டுஓங்கினார். சாஸ்திரிகையில்கல்லுகளெடுத்துக்கொண்டுஓங்கியதுதான்தாமதம்,"அடேபைத்தியக்காரன்!பைத்தியக்காரன்!! அவன்கல்லாலடித்துவிடுவான்;கடித்துவிடுவான்" என்று சொல்லிக் கொண்டே சரமாரியாய்அகப்பட்டவற்றையெல்லாம் எடுத்து சாஸ்திரிமீதுஎறியஅவர்மீது பலகற்கள்பட்டு காயங்கள்விழுந்துஇரத்தம்ஒழுகஆரம்பித்தது அவருக்குக் கோபம் வந்து கற்கள் எடுத்து நாலாபக்கங்களிலும் எறிந்தார். சற்று வழிவிடவே தமது ஊரைப் பார்க்கஓடினார்.பின்னால் பைத்தியக்காரன் போகிறான்- பைத்தியக்காரன்" என்று சொல்லிக்கொண்டே அநேக பிள்ளைகள் சத்தம் போட்டுக் கொண்டே பின்தொடர்ந்தனர். அதிக கஷ்டத்துடன் பிள்ளைகள் கல்லாலடித்துக்கொண்டே துரத்தி வந்தபடியே தனதுவீட்டில்போய் கதவைமூடித் தாளிட்டுக் கொண்டார். அப்போதும்பிள்ளைகள் போகாமல்அதிகநேரம்வரையில்அவ்வீட்டில் பைத்தியக்காரன் புகுந்திருக்கிறான் என்று சொல்லிக் கொண்டே நின்றார்கள். அவ்வழியேவந்த போலீஸ் ஹெட்கான்ஸ்டேபிள் விவரமறிந்து பிள்ளைகளைத் துரத்தினார். சாஸ்திரிதனது சம்சாரத்திடம் நடந்த விஷயங்களைச் சொல்லி காயங்களைக் கழுவி மருந்து போட்டுக்கொண்டு இன்னது செய்வதென அறியாமல்தன்விதியை நொந்தபடியே படுத்திருந்தார். அவர் சம்சாரம்அவருக்கு ஒத்தடம்போட்டபடியே சமாதானம்சொல்லிக்கொண்டிருந்தாள்.மனிதருக்குக் கஷ்டங்களும் சோதனைகளும்வரும்போது ஒன்றிரண்டாய்வருவதில்லை.

ஆவீன, மழைபொழிய, இல்லம்வீழ,
அகத்தடியாள் மெய்நோக, அடிமைசாக,
மாவீரம்போகுமென்று விரைகொண்டோட,
வழியிலே கடன்காரன் மறித்துக்கொள்ள,
சாவோலைகொண்டுவருவன் எதிரே செல்ல,
சர்ப்பம் தீண்ட, தள்ளரத விருந்துவர,
கோவேந்தர் தமக்குரிய பகுதிகேட்க,
குருக்களுந் தக்ஷிணைக்குக் குறுக்கிட்டாரே.

என்றவாறு அவருக்குக்கஷ்டத்திற்குமேல்கஷ்டம் அன்றுஏற்பட்டது. அதற்குமுந்தியநாள் வரையில் அவரிடம் வேலைசெய்து கொண்டிருந்த பண்ணையாட்கள் அன்றையமுதல் தங்கள் சொந்தஜோலிகளைப் பார்க்கப் போவதால் வேலைக்குவர சாத்யப்படாதென்று சொன்னார்கள். திடீரென்று சொன்னால் எப்படி? வேறு ஆட்களைப் பார்த்துக்கொண்டு நிறுத்துவதாய் சாஸ்திரிகள் சொன்னார். தங்களால் இனிஒருவினாடிகூட வேலை செய்ய சாத்தியப்படாதென்றனர். "ஆனால் இதுவரையில்பாக்கியிருக்கும்சம்பளம்கொடுக்கமாட்டேன்". என்று சாஸ்திரி சொன்னார். "நாங்கள் எலும்பு முறியக் கஷ்டப்பட்டகூலிகேட்கிறோமேயொழியவெறில்லை: தாங்கள் கொடுக்கமறுத்தால் செலவு தொகையுடன் கோர்ட்டில் வாங்கிக் கொள்ளுகிறோம்" என்றுசொல்லிச்சென்றார்கள். சாஸ்திரிகளாலானவரையில் திரும்பச் சம்பளம் வாங்கிப்போகும்படி கூப்பிட்டும் வாராமலே போய்விட்டார்கள். பசுஎருமை முதலிய மாடுகளை அன்றாடம்மேய்ச்சலுக்குஓட்டிப் போகும்இடையன் அக்கம்பக்கங்களிலுள்ளவீடுகளிலிருந்துமாடுகளை அவிழ்த்துக்கொண்டுசென்றானே யொழிய கூப்பிட்டுச் சொல்லியும் கேட்காதது போல் சாஸ்திரிகள் வீட்டுமாடுகளைக் அவிழ்த்துக்கொண்டு போகாமல் போய் விட்டான். கக்கூஸ் சுத்தம் செய்யும்தோட்டி அவர்கள் வீட்டு கக்கூஸைச்சுத்தம் செய்யாததால் கக்கூஸ் நாத்தம் அடித்துக்கொண்டிருந்தது. சாக்கடைத்தண்ணீரை அன்று எடுக்காததால் தண்ணீர்தொட்டியிலிருந்து வெளியில் வடிந்தோடிற்றென்றும் அதிகத் தண்ணீர் செலவழித்ததால் தண்ணீர் வெளியேவடிந்தோடிற்றென்று யூனியன்சுகாதார மேற்பார்வைக்காரர் சாஸ்திரிமீதுபிராது எழுதிமாஜிஸ்ட்டிரேட்டிடம்அனுப்பிவிட்டார். பைத்தியக்காரனென கல்லாலடித்துத் தூரத்திக்குற்றுயிருடன்வீட்டிற்குவந்துசேர்ந்ததும் இவ்வளவு வைபவங்களையும் கேள்வியுற்றார் இவ்வளவு போதாதென்று "போதாக்குறைக்குப் பொன்னியம்மாள் குறை" என்பதைப் போல் சாஸ்திரியைத்தமது வீட்டில் 10-வருஷம்வைத்து இறைமாய்ச்

சாப்பாடுபோட்டுப் படிப்புச்சொல்லிக் கொடுத்த மிராசு சுப்பய்யர் எங்கெங்கோ அலைந்து விட்டு சாப்பிடாமல் மத்யானம் 2-மணிக்கு சாஸ்திரிகள்வீடுவந்து சேர்ந்தார். சாஸ்திரிகள் தனதுகஷ்டங்களைப் பாராட்டாமல்எழுந்து, தனதுபெண்ஜாதியிடம்சொல்லி ஜல்தியாய் சமைக்கச் சொன்னார். சமையலெல்லாம் அவசரமாய்நான்கு அடுப்புகள் வைத்து ஆகிக்கொண்டிருந்தது. வீட்டில் உப்புதட்டிப்போய் விட்டது. சாஸ்திரிகள் வெளியில் போவதற்கு லாயக்கில்லாததால் அவர்சம்சாரம்கடைக்குப்போய்துட்டுகொடுத்துஉப்புக்கேட்கக்கடைக்காரன்உப்பு ஆய்விட்ட தென்றான். பக்கத்துக் கடையில் போய்க் கேட்க அவனும்அவ்வாறேசொன்னான். மூன்றாவது கடையில்போய் கேட்க அவன் "அம்மா!உங்கள் வீட்டிற்கு எந்தச்சாமானும் விற்கக் கூடாதென்றுஉத்தரவாயிருக்கு; நீ தலைகீழேநின்றுதபசு செய்தால் கூடஎவரும்எநதசாமானும் கொடுக்கமாட்டார்கள். ஏன்வீணாய் அலைகிறாய்?" என்றான். அவன் வார்த்தையை நம்பாமல் பல கடைகளுக்குச்சென்றுகேட்டுவிட்டு அக்கம் பக்கங்களிலுள்ள வீடுகளிலாவது ஆழாக்குஉப்புகடன் வாங்கலாமென்று நினைத்து எத்தனைவீடுளில் கேட்டும் ஒருஉப்புதுண்டுக்கூட எவரும் கொடுக்கமறுத்தார்கள். கடைசியாக "சாக்ஷிக்காரன் காலில் விழுவதைவிடசண்டைக் காரன் காலில் விழுவதுமேல்" என்றுசொல்லி தனக்கு நேர்ந்த கஷ்டங்களையெல்லாம் மிராசு சுப்பய்யரிடம்சொல்லிஉப்புஅகப்படாத அலங்கோலத்தைய்ம்சொன்னார். அவர்பரவாயில்லை யென்று சொல்லி சாதத்தில் தயிரும் சற்கரையும் போட்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தார் அப்படிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது தெருவில் தீ, தீ, தீ என்னும் சப்தம் கேட்டது. சத்தம்கேட்டு முடியுமுன் வீடுமுழுவதும்புகை மூடிக்கொண்டது. எங்கிருந்துபுகை வருகிறதென்று பார்க்க,சாஸ்திரிகளின்தோட்டத்தில் வைத்திருந்த பெரிய வைக்கல் போரில் நான்கு பக்கங்களிலும் நெருப்புப் பிடித்துஎரிய ஆரம்பித்து விட்டது. ஜனங்களெல்லாம் நாலாபக்கங்களிலிருந்தும் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றார்களே யொழிய ஒருவராவது நெருப்பை அவிக்க எவ்வித ஏற்பாடும் செய்யவில்லை.

இவைகளை யெல்லாம்நேரில்பார்த்த மிராசு சுப்பையர் இனி சாஸ்திரி அவ்வூரிலிருந்தால் இன்னும் அதிகமாகிய அவமானங்கள் ஏற்படுவதோடு ஒருக்கால் பிராண ஆபத்தும்நேரிடும்என்று சொல்லி அப்போதேதமது வண்டியில்சாஸ்திரிகளையும்அவர்பெண்ஜாதியையும்

ஏறிக்கொள்ளச் சொல்லி தான் வண்டியின் பின்னுலேயே நடந்தபடி எவரும் வண்டியை அணுகாதபடி காவல் புரிந்து கொண்டுவந்தார். சாஸ்திரிகள் வீட்டிற்குள்ளிருந்து வண்டிப் பறையில் வண்டியேறும் போதே சாஸ்திரிகளும் அவர்பெண்ஜாதியும் வண்டியில் ஏறிக்கொண்டதாலும், வைக்கோல் போர் எரிந்து கொண்டிருந்த வேடிக்கையிலேயே எல்லோரும் முழுக்கவனத்தையும் செலுத்திக் கொண்டிருந்ததாலும், அவர்களெல்லாம் வண்டியில் ஏறினதையாவது, வண்டி போனதையாவது வீடுபூட்டப் பட்டதையாவது கவனிக்கவில்லை. சாஸ்திரி முதலானவர்கள் சென்றமூன்றுமணிநேரங்களுக்கப்பால்தான் வழியில் வண்டி போனதைப்பார்த்தவர்கள்வந்து சொல்ல சுந்தரராஜாவுக்குத் தெரியும். அப்போதுகூடஅவர் சும்மாயிராமல் தமது கிங்கரர்களை அனுப்பி சாத்யப்பட்டால் எப்படியாவது சாஸ்திரிகளை மறுபடியும் அங்கு அழைத்து வரும்படி சொல்லி அனுப்பினர். அவர்கள் போவதற்குள் அவர்களுடைய எல்லைகளையெல்லாம் தாண்டி உண்மையில் பிரிட்டிஷ்அதிகாரம்நடக்கிற எல்லைக்குள் வண்டி போய் விட்டதால் ஒன்றும் செய்ய சாத்யப் படாமல் திரும்பிவந்து சமாசாரம் தெரிவித்தார்கள்.

நிற்க, மிராசு சுப்பய்யர் சீதாராம சாஸ்திரிகளை அனறு இரவு தனது கிராமத்தில் வைத்திருந்து மறுநாள் காலை 4-மணிக்கு தக்கபந்தோபஸ்துடன் வண்டி போட்டு திருநெல்வேலிக்கு அழைத்துச்சென்றுதம துகுடும்பவக்கீலாகிய ம-ா-ா-ஸ்ரீ-கிருஷ்ணசாமிஐயங்காரவர்களிடம்சகல சங்கதிகளையும் சொல்லி ஒரு பிரியாது எழுதி அக்கோலத்துடன் சாஸ்திரிகளை அழைத்துப்போய் அப்போது ஜில்லாமாஜிஸ்டிரேட்டா யிருந்த மிஸ்டர் ஸ்காட் துரையவர்களிடம் பிரியாதைத் தாக்கல் செய்தார். அவர் வாங்கி வாசித்ததும் வக்கீல் கிருஷ்ணசாமி ஐயங்காரவர்களைப் பார்த்து "தாங்கள் பிரியாதில் எழுதியிருக்கும் விஷயங்களைப் பார்த்தால் பிரிட்டிஷ் ஆளுகையில் இருபதாவது நூற்றுண்டில் நடக்கும் காரியங்களா யிருக்கக் கூடும் என நம்புவதற் கில்லையே! நவாப் டோக்லாக் கவர்ண்மென்டில் நடந்திருக்கக் கூடிய காரியங்களா யிருக்கு மென்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. தாங்களல்லாதுவேறுஎவராவதுஇந்தபிரியாதை கொண்டு வந்திருந்தால் இது ஓர் பைத்தியக் காரனுடைய செய்கையென நினைத்து இப்போதே தள்ளி விடுவேன். தாங்கள் நன்றாய் விசாரித்து உண்மையென அறிந்தீர்களா! அல்லது எவருடைய வா

த்தையை யாகிலும் நம்பி எழுதினீர்களா" என்றார். [நமது வாசகர்களிலும் பெரும்பான்மையோர் அதிலும் முக்கியமாய் பட்டணங்களிலேயே வசித்தவர்கள் இவைகள் உண்மையாயிருக்காதென்றும் கதாசிரியருடைய மனதிலுதித்த அநாமதேய விஷயங்களென்றும் நினைக்கலாம். அப்படியல்ல; இன்றும் இப்பேர்ப்பட்ட அக்கிரமமான செய்கைகள் பெரிய கவர்ண்மெண்ட் உத்தியோகஸ்தர்கள்போய் வருவதற் கேற்ற சௌகரியங்களில்லாத ஊர்களில் நடந்து வருகின்றன. சமீபத்தில் குத்திதண்டபோலீசைப்பற்றி நடந்த பஹிரங்கமான விசாரணையில் வெளிவந்த விஷயங்கள் இக்காலத்தில்நடந்தேறக்கூடியவை யென்று எவராலும் நினைக்கக் கூடுமா? உண்மை வெளிவந்தால்தான்தெரியும் "காயைக்கொன்றவன் பக்கத்திலும் ஊரில் பாதி" என்பதைப் போல் இதுகளெல்லாம் விரோதத்தின் பேரில் சாக்ஷிகளுக்குச் சொல்லிக் கொடுத்துக்கொண்டுவரப்பட்டவைகளேயொழிய வேறல்லவென்று இப்போதும்நம்பாதவர்களும்உண்டு.]

கிருஷ்ணசாமி ஐயங்கார்:—ஐயா! நான்சரிவரவிசாரித்தறியாமல் பிரியாது கொண்டுவரப் பட்டவனல்ல வென்பது தங்களுக்கு நன்றாகத்தெரியும். நான் சரிவர விசாரித்து உண்மை யெனத் தெரிந்து கொண்டதோடு, நேரில் பார்த்தவரும் தங்களுக்குநன்றாய்த் தெரிந்த கௌரவமுள்ளவருமான மிராசு சுப்பய்யரையும் அழைத்து வந்திருக்கிறேன். அவரையும் தாங்கள் பிரமாண வாக்குமூலத்தின் பேரில் கேட்டால் உண்மை விளங்கும்.

என்றார். துரையவர்கள் முதலில் சீதாராம சாஸ்திரிகளை அழைத்துவரச் சொல்லி அவருக்கு க்ஷவரம் செய்திருந்த அலங்கோலத்தையும் அவர் உடம்பில் கல்லடிகள் பட்டு விழுந்த காயங்களையும் பார்த்ததும் அனுதாபப்பட்டார். அப்பால்மிராசுசுப்பய்யரவர்களிடம் பிராமணவாக்குமூலம் வாங்கிப் பதிவு செய்து கொண்டு வாரண்டுகள் அனுப்பஉத்தேசித்தார். அப்போது வக்கீல் கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் சுந்தரராஜா அவர்கள்சாமான்யமானவரல்லவென்றும் சர்க்காருக்கு வருஷத்துக்கு சுமார்ஐம்பதாயிரம் ரூபாய்பேரீஜ் செலுத்துபவரென்றும், அவர்கள் குடும்பம் மிகவும்கௌரவம் பொருந்திய குடும்பமென்றும்அவர்பேரில்வாரண்டு அனுப்புவதற்குப்போதுமான விஷயங்கள் மனுவில் சொல்லப்படவில்லையென்றும், சம்மன் அனுப்புவதுகூடஉசிதமல்லவென்றும் நோட்டீஸ் அனுப்பி விசாரணை செய்தால் போதுமென்றும் இல்லாவிட்டால் ஜில்லாமாஜிஸ்ட்ரேட் துரை

யவர்கள் வேலைக்கே ஒருக்கால் ஆபத்தாய் முடியலாமென்றும், தன்னால் துரையவர்களுக்கு அப்பேர்ப்பட்ட கெடுதல் ஏற்படக் கூடாதென்று நினைப்பதாயும் எச்சரித்தார். இதை வாசிக்கப்பட்டவர்கள் வக்கீல் ஐயங்காரவர்கள் சுந்தராராஜாவுக்கு அதிக அனுகூலமாகப் பேசியதாக நினைக்கலாம். அப்படியல்லவே அல்ல. அந்தத் துரையினுடைய குணத்தை நன்கறிந்தவராதலால் அவருக்குச் சுந்தரராஜாவின் குடும்பத்தார்பேரில் கோப மூட்டுவதற்காகவே அவ்வாறு பேசினார். ஹிதம் பேசுவதுபோல் வெளிக்குத் தோற்றும்படி பேசி உண்மையில் இடுக்கண் விளைவிப்பது புத்திசாலிகளுடைய வேலை, பிராமணர் அதிகபுத்தி கூர்மையுள்ளவர்களாதலாலும் அதிலும் அவர் வக்கீலாக வாதித்து அதிக அனுபோகப்பட்டவராதலாலும் துரையினுடைய போக்கு தெரிந்தவராதலாலும் சமயம் பார்த்து தனது சாமர்த்தியத்தைக் காட்டிவிட்டார்.

துரைக்குக்கோபம் வந்து "அந்த சுந்தரராஜாவின்சாமர்த்தியத்தைநானே பார்க்கிறேன்" என்று சொல்லி வாரண்டுகள் பிறப்பித்தார். அப்போதும் வக்கீல் ஐயங்காரவர்கள் "இவ்வாரண்டுகளுக்கு எவரும் அகப்படப்போவதில்லை. போனவாரண்டுகள் [illegible] அகப்படவில்லை யென்று திரும்பித்தான் வரப்போகிறது" என்று 'வாழைப்பழத்தில் ஊசி இறக்குவதைப் போல் சொன்னார்.' 'ஆ ஹா அப்படியா; பார்க்கிறேன்" என்றுசொன்னதும் உடனேஜில்லா போலீஸ்சூப்பிரண்டண்டன்ட்டைக் கையோடு அழைத்து வரும்படி அனுப்பி அவர்கையில் இரகசியமாய் வாரண்டுகளைக் கொடுத்து இருபது போலீஸ் கனிஸ்டேபிள்களைத் துப்பாக்கிகள் சகிதம் அழைத்துப் போய் எப்படியாவது வாரண்டுகளில் குறிப்பிட்ட நபர்களை ஆஜர்ப்படுத்த வேண்டுமென்றும், போலீஸ்காரருக்கு எங்கு என்ன வேலையாய்ப் போகிறார்களென்றுகூடத் தெரியாமல் பட்டப் பகலிலேயே போய்பிடித்து உடனேகொண்டுவரவேண்டுமென்றும்உத்தரவிட்டார் அவர்சொன்னபடியே மறுநாள் சாயங்காலம்மூன்றுமணிக்குத்திருவீரராஜபட்டணம் சென்று ஊர் முழுவதும் தேடியும் வாரண்டில் கண்ட நபர்கள் ஒருவராவது அகப்படவில்லை எங்கு சென்றார்களென்று எவர்க்கும் தெரியாதென்றுசொல்லிவிட்டார்கள். வாரண்டுகள் சஹிதம் சென்ற சூப்பிரண்டண்ட் முதலியவர்கள் திரும்பிவந்து சமாசாரம் அறிவிக்கு முன் சென்னை ஹைகோர்ட்டிலிருந்து வாரண்டுகளை ஐந்து தினங்களுக்கு அமுலுக்குக் கொண்டு வாராமல் நிறுத்தி

வைத்துக்கொண்டு அது சம்பந்தமான சகலரிகார்டுகளையும் 'அனுப்பும்படி தந்தி வந்தது. தந்தியைக்கண்டதும் ஜில்லா மாஜிஸ்டிரேட் துரையவர்களுக்கு ஏற்பட்ட ஆச்சரியத்திற்கும் கோபத்திற்கும் அளவேயில்லை. தந்தி உண்மையாயிருக்காதென்றும் சுந்தரராஜாவின் வகையாராலேயே போலித்தந்தி அடித்திருக்கவேண்டு மென்றும் கூட நினைத்தார். மூன்றும்நாள் காலையில் வாரண்டுகளை நிறுத்தி வைக்கும் தடைஉத்தரவு ஹைகோர்ட்டு முத்திரையுடன் வந்தபோது தான் அவருக்கு உண்மையெனப்பட்டது. அப்போதும் தன்னிடம் கொடுத்த மனு தன்பெட்டியைவிட்டு அப்பால்இப்பால் போகாமலிருக்கும் போது எப்படி சுந்திரராஜா அதன் நகலை ஹைகோர்ட்டில் ஆஜர்ப்படுத்தி; வாரண்டு பிறப்பிக்கச் சட்டப்படி நியாயமே யில்லையென வக்கீல் வைத்து வாதாடி, தடைஉத்தரவு வாங்கினு ரென்றும் அதற்குள் சுந்தரராஜா சென்னைக்கு எவ்வாறு சென்று வக்காலத்துக் கொடுத்து கேஸ்நடத்தி தடை உத்தரவு பிறப்பிக்கக்கூடுமென்றும் அதிக ஆச்சரியப் பட்டார்.

பிரியாது தாக்கல் செய்த அன்றைய இரவு நாம் இவ்வளவு சாமார்த்தியமால்வேலை செய்து வாரண்டுகள் பிறக்கும்படி செய்து விட்டோம் என்று நினைத்துக் கொண்டு சந்தோஷமாய் வக்கீல் ஐயங்காரவர்கள் படுத்துக்கொண்டார்கள் அவர்கள் தூங்காமல் யோசனை செய்து கொண்டிருக்கும்போதே யாரோ தன் படுக்கை யறையின் கதவைத் தட்டும் சத்தம் கேட்டு "யார்"என்றூர்; பதிலில்லை. மறுபடியும் கதவுதட்டப்பட்டது. கோபத்துடன் "யார்" என்றூர். அப்போதும் பதிலில்லை. மறுபடியும் கதவு தட்டப்பட்டது. கோபத்துடன்எழுந்துபோய்க்கதவைத்திறந்து"யாரடாசநியன்"என்றூர். சநியன் என்று சொல்லி வாய்மூடுமுன்இருபது தடியர்கள் உள்ளே புகுந்து அவர்வாயில் துணிபமுக்கி விட்டு "நீஇப்போதுசநியன் என்ருய்;எப்போது சீதாராம சாஸ்திரிஉன்வீட்டில்கால்வைத்தானே,அப்போதேஉனக்குச் சநியன் பிடித்ததென்பதை அறியாயோ? என்றதும் அவர் சம்சாரத்தையும் பபமுறுத்தி கூச்சல் போடாதபடி செய்து. இருவரையும் கையப்புடைத்துவீட்டிலிருந்தநகைகள்ரொக்கம் துணிமணிகள் முதலியவற்றை எடுத்துக் கொண்டு திருடர்கள் போய்விட்டார்கள். திருடர்கள்போன அரைமணிநேரத்திற்கப்பால் ரோந்துவந்த போலீஸ்காரன் எப்போதும் பூட்டியிருக்கும் கதவு திறந்திருப்பது கண்டு எட்டிப்பார்த்தான், அங்கு காவலிருக்கும் வேலையாட்கள்

கட்டப்பட்டு வாயில் துணி யழுக்கிக் கிடக்கக் கண்டு தனது பிகிலை ஊதினன். நான்கு போலீஸார்வரவே, எல்லோருமாகப்போய் கட்டப் பட்டுக் கிடந்தவர்களையெல்லாம் அவிழ்த்து விட்டு இன்ஸ்பெக்டருக்கு உடனே சாமாசாரம் தெரிவிக்க அவர் வந்துவிசாரணை செய்து பதிவு செய்து கொண்டு அவ்வூரிலுள்ள அனுமானப்பட்ட திருட்டு நபர்களுடைய வீடுகளை யெல்லாம் அப்போதே போய்ச்சோதித்தார். துப்பும் துலங்கவில்லை. திருடுபோன சாமான்களும் தென்படவில்லை. இன்ஸ்பெக்டர் இரவு முழுவதும் சுற்றித்திரிந்து எவ்வித உபகாரமுமில்லாமல் அலுத்துவந்து அப்போது தான் தலையைக் கீழே போட்டார். கலெக்டரும்ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுமான ஸ்காட் துரையவர்கள் வீட்டில் திருடு போயிருப்பதாயும் உடனேவரும்படி உத்தரவு வந்திருப்பதாகவும் ஒரு கனிஸ்டேபிள் வந்து கூப்பிட்டான். கஷ்டத்தோடு எழுந்து உடுப்புகளை மாட்டிக் கொண்டு கலெக்டர்வீட்டில் போய்ப் பார்க்க, பால்கறக்கும் பசுக்கள் இரண்டு, காலையில் துரையவர்கள் எழுந்ததும் சவாரி செய்யும் குதிரை, சீமையிலிருந்து கொண்டு வந்துவளர்க்கும் இரண்டு பன்றிகள், 20-கோழிகள், 12-வாத்துகள் ஐந்துவான்கோழிகள், ப[illegible]ாவிருந்த பலசாமான்கள், திருடு போயிருப்பதாகத்தெரிந்தது. பசுக்கள் குதிரைகள் பன்றிகள் முதலிய வற்றின் காலடிகளைத் தொடர்ந்து பார்த்து எங்கே கொண்டு போகப்பட்டதென்று பார்க்கலாமென்றுதொடர்ந்துசென்றதில் தாம்பிரவர்ணியாற்றுவரையில் காலடிகள் நன்கு தெரிந்தன. மணலில் காலடிகள் நன்றாய்த் தெரியவேண்டியிருக்க தண்ணீர்சமீபத்தில் போனது முதல்அப்பால் காலடிகளையேகாணோம். அங்குபோனதும்வெட்டி எங்காவது புதைத்திருக்கக்கூடுமோ வென்று தேடிப் பார்த்ததிலும் ஒன்றும் துலங்கவில்லை. கலெக்டர் துரையவர்களுக்குத் தன்வீட்டில்திருடுபோனது ஒரு அவமானம், தான்பிறப்பித்த வாரண்டுகளுக்குதடை உத்தரவு வந்ததுமற்றொரு அவமானமாக எண்ணி வருந்திக் கொண்டு, அந்த ஜில்லாவிலேயேபிறந்துவளர்ந்து அதிக அநுபோகமுள்ளவரும், சர்க்காராலும், ஜில்லாவாசிகளாலும்நன்கு மதிக்கப்பட்டவருமான டெப்டி மாஜிஸ்ரேட்டைவரவழைத்து அவரிடம்நடந்த விஷயங்களை யெல்லாம்சாங்கோபாங்கமாய்த் தெரிவித்தார். அவர்எல்லா விஷயங்களையும் முன் கூட்டியே அறிந்திருந்தும் அப்போது தான் புதிதாய்க் கேட்பவர்போல்விவரமாயும் சாந்தமாயும் கேட்டறிந்து கொண்டார்.

டேப்டி மாஜிஸ்ட்ரேட்:—தாங்கள் சொன்ன விஷயங்களை யெல்லாம் தெரிந்து கொண்டேன். நான் செய்யக்கூடியது ஏதாவது இருந்து தெரிவித்தால் அதன்படி நடத்தத் தயாராயிருக்கிறேன்.

ஜில்லா மாஜிஸ்ட்ரேட்:—வேறொன்றுமில்லை. என் பங்களாவில் திருடு போனது அதிக அவமானமான காரியம். எப்படியாவது துப்புத்துலக்கி திருடர்களைத் தண்டிக்க வேண்டியது அவசியம்.

டேப்டி மாஜிஸ்ட்ரேட்:—உண்மைதான். போலீசார் துப்புத் துலக்கிக் கொண்டுவந்தால் நாம் கட்டாயமாய்த் தண்டிக்கலாம்.

ஜில்லா மாஜிஸ்ட்ரேட்:—என் பெண்ஜாதியின் பெற்றோர் தங்கள் ஞாபகார்த்தமாய்க் கொடுத்தனுப்பிய சீமைப்பண்டங்கள் காணமற் போனது அதிக வருத்தத்தை உண்டாக்கக்கூடிய விஷயமாயிருக்கிறது. எந்நேரமும் என் சம்சாரம் அவைகளைப்பற்றி நினைத்து நினைத்து விசனப்படுகிறாள். எவ்வளவு சமாதானம் சொன்னாலும் கேட்கமாட்டேனென்கிறாள். ஆகையால்தான் எப்படியாவது துப்புத்துலக்கித் திருடரைக் கண்டு பிடித்துத்தண்டிக்கவேண்டியது அவசியமாகிறது. எனக்கு முன்னிருந்த ஜில்லா மாஜிஸ்டிரேட்டுகளெல்லாம் தங்களைப் பற்றி வெகுவாய்ப் புகழ்ந்துஇரகசிய புஸ்தகத்தில் எழுதியிருப்பதோடு தாங்கள் மனம் வைத்துவிட்டால் திருட்டைக் கண்டு பிடித்து திருடுபோன சாமான்களை வரவழைத்துக் கொடுக்கக் கூடிய சாமர்த்தியம் தங்களுக்கு உண்டென்று எழுதியிருக்கிறார்கள், ஆகையால்தாங்கள் துப்புத்துலக்கி திருடரை தண்டனையடையும்படி செய்வீர்களென நம்புகிறேன்.

டேப்டி மாஜிஸ்ட்ரேட்:—நான் திருடர் கூட்டத்தில் சேர்ந்திருந்தா லொழிய என்னால் எப்படி அவ்வாறு செய்யக்கூடும்?

ஜில்லா மாஜிஸ்ட்ரேட்:—இந்த ஜில்லாவிலுள்ள எல்லா வகுப்பாரும் தங்கள் வார்த்தைக்குக் குறுக்காகப் பேசமாட்டார்களாம் தாங்கள் திருடரைக் கூப்பிட்டு திருடுபோனசொத்தைக் கொண்டுவந்து ஒப்புவிக்கும்படிசொன்னால்அவ்வாறு செய்வார்களென்றும்முன்னால் ஒரு சந்தர்ப்பத்தில் தாங்கள் அவ்வாறு பெருத்த உபகாரம் செய்ததாகஇப்போது கௌன்சில் மெம்பராயும் அப்போது கலெக்டராயுமிருந்த ஸர் ஹென்றி மார்டின் வின்டர்பாதம் துரை எழுதி வைத்திருக்கிறாரே.

டேப்டி மாஜிஸ்ட்ரேட்:—எவராலாவதுஅவ்வாறு செய்யச்சாத்டப்படு மென்பதாகத் தாங்கள் நம்புகிறீர்களா?

ஜில்லா மாஜிஸ்ட்ரேட்:—நம்புவதற்கு இடமில்லை தான். மற்ற வைகள் எப்படி தொலைந்து போனாலும் என் பெண்ஜாதியின் பன்றி களாவது வந்து சேர்ந்தால் பெருத்த உபகாரமிருக்கும். எப்படி யாவது அவைகளைத் துப்புத்துலக்கிக் கொண்டுவந்து சேர்க்கப் பிர யாசைப்படமாட்டீர்களா?

டெப்டி மாஜிஸ்ட்ரேட்:—போலீஸ்காரர் இதுவரையில் அபார மான கஷ்டமெடுத்துக்கொண்டுவேலை செய்து வருகிறார்கள். அவர் கள் அனுப்பிய ரிப்போர்ட்டிலிருந்து பசுக்கள், பன்றிகள், குதிரை, முதலியன கொல்லப்பட்டு எங்கோ புதைக்கப்பட்டிருக்க வேண்டு மென்று ஆற்றங்கரையில் சிந்தியிருக்கும் இரத்த அடையாளங்களைக் கொண்டு யூகிக்கிறார்கள். ஆகையால் அவைகளைக் கொன்றிருந்தால் அவைகள் திரும்பவும் எவ்வாறு உயிருடன் வரக்கூடும்.

ஜில்லா மாஜிஸ்ட்ரேட்:—தாங்கள் மனப்பூர்வமாய் பிரார்த்தனம் செய்து பாருங்கள்; உயிருடனிருந்தால்வரட்டும்; இல்லாவிட்டால் போகட்டும்.

டெப்டி மாஜிஸ்ட்ரேட்:—அவைகள் உயிருடனிருந்து அவைக ளைத் தங்களிடம் சேர்ப்பித்தால் அவைகளைத் திருடியவர்கள் யாரெ ன்றும்; எவ்வாறு வேலை செய்து அவைகளைத் திரும்பப் பெற்றே னென்றும் கேட்காமலிருப்பதாகத் தாங்கள்வாக்களித்தால் என்னால் கூடியவரை பிரயாசைப்பட்டுப் பார்க்கிறேன்.

ஜில்லா மாஜிஸ்ட்ரேட்:—அப்படிக் கண்டு பிடித்து விட்டால் திருடினவர்களைத்கண்டிப்பதுநியாயந்தானே. அதற்காக ஏன் என்னை வாக்களிக்கச் சொல்லுகிறீர்கள்.

டெப்டி மாஜிஸ்ட்ரேட்:—திருடியவர்கள் உண்மையில் வேறாக யிருப்பார்கள்; எனக்குத் துப்புத்துலக்கப்பட்டவர்கள்வேறு ஆசாமி களாயிருப்பார்கள். என் தாக்ஷண்யத்திற்காக சாத்தியப்பட்டால் திருடுபோன பொருளைக்கண்டுபிடித்துச் சேர்ப்பார்கள். ஆனால்தனது அண்ணன் தம்பி மாமன் மைத்துனன் முதலானவர்கள் திருடினார்க ளென்று அவர்களைக்காட்டிக்கொடுப்பார்களா? ஒருக்காலும் காட்டிக் கொடுக்க மாட்டார்கள். மேலும் திருடருக்குள் இருக்கும் உண்மை யான நிர்ணயம் பெரிய பெரிய கௌரவ பட்டதாரிகளில் பெரும்பான் மையோரிடம் கூடக்காண்பதரிது. தற்காலமந்திரிகள் ஒருஓட்டுக்காக சுய நலத்தைக்கருதி பொதுநலக் காரியங்களில் விட்டுக் கொடுக்கும் பரிதாபகரமான நிலையைப் பாருங்கள். ஆகையால் திருடரை என்

னல் கண்டுபிடிக்க சாத்தியமாகவே ஆகாது. அது போலீசாருடைய வேலை.

ஜில்லா மாஜிஸ்ட்ரேட்;—சரி; அப்படியே வாக்களிக்கிறேன். சாத்யப்பட்டால் பன்றிகளைக் கண்டு பிடித்து என் பெண்ஜாதியிடம் சேர்க்கப் பாருங்கள்.

டேப்டி மாஜிஸ்ட்ரேட்:—பன்றிகள் இதுவரையில் இறந்திருக்காமலிருந்தால் கொண்டுவரப் பிரயாசைப்படுகிறேன்.

ஜில்லா மாஜிஸ்ட்ரேட்:—மெத்த சந்தோஷம். இன்னும் ஒரே ஒரு விஷயத்தைப்பற்றி தங்களுக்கு உண்மை தெரிந்திருந்தால் தயவு செய்து சொல்லுங்கள். வக்கீல் கிருஷ்ணசாமி ஐயங்கார் என்னிடம் பிரியாது கொடுத்தார். நான் அந்தப் பிரியாதை யாருக்கும் காட்டாமல் வாரண்டுகள் பிறப்பித்தேன். அப்படியிருக்க வாரண்டில் குறிப்பிட்ட ஆசாமிகளிருக்கும் ஊருக்குப் போலீஸ் சூப்பிரன்டன்டன்ட் போய்ச் சேருமுன் அந்த ஆசாமிகள் ஹைகோர்ட்டில் பிரியாதுக்கு நகல் கொடுத்து தடை உத்தரவு பிறப்பிக்க எப்படி சாத்தியமாயிற்றென்று தங்களுக்குத் தெரியுமா?

டேப்டி மாஜிஸ்ட்ரேட்.—தங்களிடம்பிரியாது கொடுத்து தாங்கள் வாரண்டு பிறப்பித்த அன்றுசாயங்காலம் ரெயிலில் சுந்தரராஜுவும் அவர் வகை 10 மனிதர்களும் சென்னைக்குப் போகும் ரெயிலில் ஏறி இருந்தார்கள். என்னைக் கண்டதும் சுந்தரராஜு இறங்கிவந்து என்னிடம் பேசிவிட்டுச்சென்றார். அப்போது தன்பேரில்தன்விரோதிகள் ஏதோ கேஸ் தொடர்ந்திருப்பதால் ஹைகோர்ட்டுக்கு மனுச் செய்து தடை உத்தரவு வாங்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யும்படி தமது சென்னை வக்கிலுக்குத் தந்தி யடித்திருப்பதாகவும், தாங்கள் நேரில்போய் வக்காலத்தில் கையெழுத்துகள் போடுவதற்காகவும்,பிரமாண வாக்குமூலங்களில் கையொப்ப மிடுவதற்காகவும் போவதாகச் சொன்னர். அப்போது ரெயில்புறப்படும்நேரமாகிவிடவேவிவரமாய்ச் சொல்லாமல் வண்டியில் ஏறினர். வண்டியும்உடனே புறப்பட்டுவிட்டது. இப்போது தாங்கள்சொன்னதின்பேரில்தங்கள்உத்தரவுக்குத்தான் தடைவுத்தரவு வாங்கப்போனதாகத் தெரிகிறது.

ஜில்லா மாஜிஸ்ட்ரேட்:—ஆனல் என்பங்களாவில் திருடுபோனபாது சுந்தரராஜாவும் அவர் வகை ஆட்களும் இங்கில்லையோ?

டேப்டி மாஜிஸ்ட்ரேட்:—திட்டமாய் அவர்கள் இங்கில்லையென்றே சொல்லலாம். எப்படி யெனில் நான் அவர்கள் ரெயிலில் போனதைப் பார்த்தேன். மறுநாள் இரவு அவர்கள் வக்காலதிலும்

பிரமாண வாக்குமூலத்திலும் கையொப்பமிட்டிருக்கிறார்களென்று ரிகார்டுகளிலிருந்து தெரிகிறது. ஆகையால் இங்கில்லையென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. அன்று சாயங்காலம் தாங்கள் என்னைக் கேட்டபோது இவ்விஷயங்களை எனக்குத் தெரிந்திருந்தால் நான் அப்போதே அவர்கள் ரெயிலில்போனவிஷயத்தைத் தெரிவித்திருப்பேன். மதுரை ஸ்டேஷனிலேயே அவர்களைக் கைதியாக்கி யிருக்கக் கூடும். தாங்கள் சொல்லாததால் தான் அவர்கள் போய் தடைஉத்தரவு வாங்க அவகாசம் ஏற்பட்டது."

ஜில்லா மாஜிஸ்ட்ரேட்:—அவ்விஷயத்தைப்பஹிரங்கப்படுத்தக் கூடாதென்று தங்களிடம் சொல்லவில்லை. அதன்முடிவு இக்கெதியாயிற்று. இக்கேஸ் இனி எக்கதியாகு மெனக்கென்ன? தயவுசெய்து எப்படியாவது பன்றிகளைப் பெறப் பிரயாசைப் படுங்கள்.

என்று சொல்லி யனுப்பிவிட்டார். டெப்டி மாஜிஸ்ட்ரேட் என்ன ஏற்பாடுகள் செய்கிறார்கள் என்று கண்டறிவதற்காக டெப்டி மாஜிஸ்ட்ரேட்டின் ஆர்டர்லிகளில் தனக்கு நம்பிக்கை யுள்ள மூவரிடமும் இரண்டு இரகசிய போலீஸ் துப்பறிபவர்களிடமும் டெப்டி மாஜிஸ்டிரேட் அவர்களுக்குத் தெரியாமல்கவனித்து அவர் எவரெவர்களை வரவழைத்து இவ்விஷயம்பேசுகிறார் அல்லது யார் யாருக்கு இவ்விஷயத்தைப்பற்றி கடிதங்கள் எழுதுகிறார் என்று தனக்குத் தெரிவிக்கும்படி அவர் சென்ற ஒருமணி நேரத்திற்குள் திட்டப்படுத்தி அனுப்பினார். அதுமுதல்டெப்டிமாஜிஸ்டிரேட் காலை யெழுந்ததுமுதல் படுத்துறங்கும் வரையில் அவர் காரியாதிகளைத் துப்பறிவோர் கவனித்து வந்ததோடுதூங்கினபின் எழுந்து எங்காவது போகிறாரா அல்லது எவரிடமாவது பேசுகிறாராஎன்றும்அதிக ஜாக்ரதையாகக் கவனித்து வந்தார்கள். அவர் வழக்கப்பிரகாரம் தமதுவேலைகளைக் கவனித்து வந்தாரே யொழிய இவ்விஷயத்தைப்பற்றி எவரிடமும் பிரஸ்தாபிக்கவில்லை. அன்றாடகம் ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கு டெப்டி மாஜிஸ்டிரேட்டின் அன்றாடக நடவடிக்கைகளைப் பற்றி ரிப்போர்ட்டுதுப்பறிவோரிடமிருந்து போய்க்கொண்டேயிருந்தது. நான்காவது நாள் காலை மூன்று மணிக்கு துரை பங்களாவில் சேவல்கள் கூவும் சத்தம்கேட்டது. திருநெல்வேலி கலெக்டர் துரையவர்கள் பங்களாவுக்குச் சமீபத்தில் எவருடைய வீடுகளும் இல்லை யென்பது அங்குபோய் வந்தவர்களுக்கெல்லாம் நன்றாய்த் தெரியும். கலெக்டர் துரையவர்கள் பெண்ஜாதி சேவல்கூவியதைக்கேட்டதும் துரையவர்

களிடம் அவ்விஷயத்தைத்தெரிவித்தார்கள். அவர் இராக்காலமான தால் தூரத்தில் சேவல் கூவுவது சமீபத்திலிருப்பது போலிருக்கு மென்று சொன்னார். இரண்டொரு நிமிஷங்களில் மறுபடியும் கூவிய போது இருவரும் கவனித்துத் தங்கள் கோழி கிடங்கில் தான் சத் தம் கேட்பதாக நினைத்தார்கள். உடனே பாரர்க்காரனைக் கூப்பிட்டு கோழிக்கிடங்கைப்போய்ப் பார்த்து வரச் சொன்னார்கள். அவன் போய்ப் பார்த்து வந்துகாணாமற்போன கோழிகளைப்போல்,தானிருக் கின்றன; திருடர்கள் திரும்பவும் கொண்டு வந்து விட்டு விட்டார் கள் போலிருக்கிறது என்று சொன்னான். உடனே துரையும் துரை சாணியும் வெளியில் வரும் உடைகளை அணிந்துகொண்டு இன்னும் 4-5 வேலைக்காரரை எழுப்பிக்கொண்டுவந்து கோழிகளைஒவ்வொன் ருய் வெளியில் எடுத்துப்பார்க்கத் திருடுபோன கோழிகளில் ஒன்று கூட குறையாமல் சரியாயிருந்தன. அவர்களிருவரும் ஆச்சரியப் பட்டு பன்றிகளும் வந்துவிட்டனவோ வென்று பன்றிக்கிடங்கைத் திறக்கச் சொன்னார்கள். திறந்து பார்க்க பன்றிகளும் வழக்கம்போல் அங்கிருந்தன. அப்பால் குதிரை லாயத்தைப் பார்க்க குதிரையும் இருந்தது. மாட்டுக்கொட்டகையைப் பார்க்க அங்கு பசுக்கள்கட்டப் பட்டிருந்ததோடு பங்களாவிலிருந்து திருடுபோன சாமான்களில் ஒன்றுகூட குறையாமல் ஜாதிக்காய் பெட்டிகளில் பந்தோபஸ்தாய் வைக்கப்பட்டிருந்தன. இவைகள் உண்மையாய் நடந்தேறிய சம்ப வங்களா? அல்லது கனவில்தான்காணுகிறோமா என்னும் சந்தேகம் கூடதுரையவர்களுக்கு உண்டாகி கண்களை நன்ருய்த் துடைத்துக் கொண்டு பார்த்தும் தனக்குத் தானே கேட்டும், கனவுமல்ல நினைவு மல்ல வென்றும் உண்மையாய் நடந்தேறி யிருக்கும் சம்பவங்களே யென்றும் அறிந்ததும், ஒரு சேவகனை அனுப்பி டெப்டி மாஜிஸ்டி ரேட்டையும் போலீஸ் சூபரன்டன்டன்ட்டையும் அழைத்து வரச் சொன்னார். அவ்விருவரும் அவைகளைக் கண்டு ஆச்சர்யப்பட்ட போதிலும், சூப்பிரன்டன்டன்ட்டின் ஆச்சரியம் உண்மையானதென் றும், டெப்டி மாஜிஸ்ரேட்டின் ஆச்சரியம் அபிநயமே என்றும்; அவ ருடைய சொல்சக்தியால் தான் திருடுபோன சாமான்கள்திரும்பவந் தனவென்றும் ஜில்லா மாஜிஸ்டிரேட் அறிந்துகொண்டார். எல்லோ ரும்சென்றபின்டெப்டிமாஜிஸ்டிரேட்டை ஏகாந்தமாய் அழைப்பித்து துரைசாணியைவிட்டு அவருக்குஅவர் செய்தஅபாரகாரியத்திற்காக வந்தன மளிக்கச் சொல்லிவிட்டு, தான் டெப்டி மாஜிஸ்டிரேட்டை

வேவுகாரரை வைத்துக் கவனித்ததாகவும் டெப்டி மாஜிஸ்டிரேட் அவர்களுக்குக் கூடத்தெரியாமல் சாமர்த்தியமாய் வேலை செய்திருக்கிறாரென்றும் அவரைப்பற்றி தனக்கு முந்திய கலெக்டர்களும் கவர்ண்மெண்ட்டாரும் கொண்டிருக்கும் நல்லெண்ணமும் கியாதியும் பொருத்தமுடையதே யென்றும் புகழ்ந்து பேசினார். அவர் தானொன்றும் செய்யாமலிருக்கும்போது தன்னை இவ்வாறுபுகழ்வது ஏளனம் செய்வது போலாகுமென்று பேச்சைமாற்றி விட்டார். அப்பால் கலெக்டர் துரையவர்கள் டெப்டி மாஜிஸ்டிரேட்டின் இருகைகளையும் பிடித்துக் கொண்டு இப்பேர்ப்பட்ட அபாரவிஷயங்கள் நடத்த எவ்வாறு சாத்தியமென்று கேட்டார். அத்துடன் ஆள்களுடைய ஊர்கள் பேர்கள் தெரிவிக்காமல் அவர் கையாண்டமுறையை மட்டும் தெரிவிக்கும்படி வெகுவாய்க் கெஞ்சி வேண்டிக் கொண்டார். அப்போது,

டெப்டி மாஜிஸ்டிரேட்:—ஐயா! இந்த ஜில்லாவில் பல இலாகாக்களிருக்கின்றன. ஒவ்வொரு இலாகாவிற்கும் ஒரு தலைமைக்காரர் உண்டு. அத்தலைமைக்காரர் திருடுவதுமில்லை; திருடருக்கு ஒத்தாசை புரிவதுமில்லை. திருட்டுச் சொத்துக்களை வாங்குவதுமில்லை. அவருக்கிருக்கும் திரண்ட ஐஸ்வர்யங்களே அவர்களுக் [illegible] அந்த இலாக்காவிற்குள் அந்த ஜாதியாரில்என்னமன வித்தியாசங்கள் ஏற்பட்டபோதிலும் அவரிடம்சொல்லிக் கோள்வதும் அவர் செய்த தீர்மானத்திற்குக் கட்டுப்படுவதும் வழக்கம். அந்தந்த இலாகாவில் அந்தந்த இலாகாக்காரரே திருடுவார்களேயொழிய அடுத்த இலாகாத் திருடர்கள் அந்த இலாகாவிற்குச் சாதாரணமாய் வருவதில்லை. பக்க இலாகாத் திருடர் அந்தஇலககாவில்வந்து திருடவேண்டியபிரமேயம் ஏற்பட்டாலும் அல்லது அந்த இலாகாகார் அடுத்தஇலாகாவின்ஒத்தாசையைக்கோறி வரும்படி சொல்லியிருந்தாலும் அத்தலைமைக்காரர் மனப் பூர்வமாய் விசாரித்தால் உடனே அவருக்குஉண்மைஉரைப்பார்கள் ஆதலால் தாங்கள் அன்று என்னிடம் சொல்லி யனுப்பியதும் நான் வீடு சென்ற உடனே இந்த இலாகாவின் தலைமைக்காரருக்கு ஒருகடிதம் எழுதி தபாலில் போட்டுவிட்டேன். நேற்று எனக்கு வந்த தபாலில் சமான்கள் இன்றிரவு சேர்த்து விடுவதாகப் பதில் கடிதமும் வந்தது என்றார். துப்பறிவோர் நேற்று தங்களுக்கு வந்த கடிதங்களை யெல்லாம் பார்த்ததாகவும் அதில் அப்பேர்ப்பட்ட விஷயம் ஒன்றும் எழுதப்படவில்லையென்றும் ரிப்போர்டுஅனுப்பினார்களே. அவர்கள் சரிவரப்பார்க்கவில்லை போலிருக்கிறது. இவர்

களை இரகசிய துப்பறியும் வேலையில் வைத்திருப்பதில் என்ன பிரயோஜனம்?

டெப்டி மாஜிஸ்டிரேட்:—தாங்கள் நினைப்பது சரியல்ல. எனக்கு வந்த கடிதத்தில் நான் சொன்னபடி பஹிரங்கமாய் எழுதப்படவில்லை. ஆகையால் தான் அவர்களால் கண்டு கொள்ளக்கூடவில்லை. எனக்கு மட்டும் விளங்கும்படி எழுதியிருந்தது. ஆகையால்தாங்கள் அவர்கள் பேரில் கோபப்படக் காரணமில்லை.

ஜில்லா மாஜிஸ்டிரேட்:—துப்பறியும் வேலை செய்பவர்களுக்கு அவ்வாறு யூகித்தறிய சக்தியில்லாவிட்டால் அவர்களை வைத்திருப்பதில் என்ன பிரயோஜனம்? எழுதப்பட்டவர்கள் நேராகவா எழுதுவார்கள்? எப்படியாவது சந்தேகித்திருக்கலா மல்லவா?

டெப்டி மாஜிஸ்டிரேட்.—தாங்கள் அவர்கள்பேரில் குறை கூறுவது நியாயமல்ல. இப்போது நான் இவ்வளவு தூரம் தங்களுக்குச் சொன்னபின்னும் நேற்று எனக்கு வந்த கடிதங்களை யெல்லாம் தங்கள்கையில் கொடுக்கிறேன். தாங்கள் வாசித்துப்பார்த்துச் சந்தேகப் படக்கூடியபடி எழுதப்பட்டிருக்கிறதா என்று பாருங்கள்.

~~என்று~~ சொல்லிப்பல கடிதங்களைக் கொடுத்தார். அவர்வாங்கி வாசித்து விட்டு "அதில் ஒன்றிலும் இன்று அனுப்புவதாக எழுதப் படவில்லையே; பின் தாங்கள் எவ்வாறு சொன்னீர்கள்?" என்றார். அப்போது டெப்டிமாஜிஸ்டிரேட் அக்கடிதங்களிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துக் கொடுத்தார். அதில்பின்வருமாறு எழுதியிருந்தது.

கடிதம்

திருச்செந்தூர்.
16—8—...

எஜமானவர்களுக்கு முருகக்கடவுள் கிருபையால் அநேக அநுகூலங்கள் உண்டாவதாக. தங்கள் உத்திரவு பிரகாரம் வெள்ளிக் கிழமை இரவு கட்டாயமாய் யாதொரு குறைவுமில்லாமல் முருகக் கடவுளுக்கு அர்ச்சனை செய்து விடுகிறேன்.

முத்தய்யர்.

என்றுஎழுதியிருந்தது. வாசித்ததும்திகைத்தார். அப்போது டெப்டி மாஜிஸ்டிரேட் நான் சுப்ரமண்ய ஸ்வாமிக்கு வெள்ளிக் கிழமை இரவு அர்ச்சனை செய்யும்படி எந்த முத்தய்யரிடமும் சொல்லவில்லை யாதலால் அக்கடிதத்தைக் கண்டதும் தங்கள் சாமான்களைச் சரிவரச் சேர்த்துவிடுவதாக எழுதியதாகவே அர்த்தங்கொண்டேன்

ஜில்லாமாஜிஸ்டிரேட்.—ஆனால் முத்தய்யர் என்ற என்றபிராமணனு தலைமைக்காரன்? அவன் திருச்செந்தூரிலா இருக்கிறான்?

டெப்டி மாஜிஸ்டிரேட்.—நான் முன்னமே ஒரு இலாகாக்காரர் மற்றொரு இலாகாவில் திருடுவதில்லை யென்று சொல்லவில்லையா? அவர் ஊர் திருச்செந்தூர் என்றும் அவர் பெயர் முத்தய்யரென்றும் தாங்கள் நினைத்துக் கண்டுபிடிக்க முயன்றால்இந்தயுகமெல்லாம்தேடினாலும்முடியாது. முன்னமேயே என்னிடம் ஊர்பேர் கேட்கக்கூடாதென்று தங்களிடம் வாக்குறுதிபெற்றுக் கொண்டேன். அவர் இந்த இலாகாவைச் சேர்ந்தவரென்றுமட்டும் என்னால் சொல்லக்கூடுமேயொழிய மற்ற விவரங்கள் சொல்லசாத்யப்படாது. தாங்கள் இஷ்டப்பட்டால் திருச்செந்தூர் முத்தய்யரென்பவர் மூலியமாய்த் துப்புத் துலக்கப்பாருங்கள்.

என்று சொன்னார். அப்பால் சில நேரம் இதர விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்துவிட்டுச் சென்றார். நிற்க, குறிப்பிட்ட நாளில் ஹைக்கோர்ட்டில் தடை உத்தரவைப் பற்றிய வியாஜ்யம் எடுத்துக் கொள்ளப்பட்டது. மனுதாரர்களாகிய சுந்தரராஜுலுவகையறாக்களுக்காக ஹைக்கோர்ட் வக்கீல் ஸ்ரீனிவாசய்யங்காரவர்களும் சர்க்கார்தரப்பில் அட்வொகேட் ஜெனரல் துரை அவர்களும் ஆஜரானார்கள்.

கேஸ் கூப்பிட்டதும் அட்வொகேட் ஜெனரல் துரையவர்கள் எழுந்து கேசைப்பற்றிய விஷயங்களை எடுத்துச் சொல்லுமுன், இப்போதிருக்கும் கட்டத்தில் இக்கேசை எடுத்துக் கொள்ள ஹைக்கோர்ட்டுக்கு அதிகாரம் கிடையாது. மாஜிஸ்டிரேட்டவர்கள் ஏதாவது தீர்ப்பளித்த பின்தான் அதைப்பற்றி விசாரணை செய்ய ஹைக்கோர்ட்டாரவர்களுக்கு அதிகாரம் ஏற்படுமே யொழிய இக்கட்டத்தில் எவ்வித அதிகாரமும் கிடையாதென்றும் அப்படி விசாரணை ஆரம்பிப்பது சட்ட விரோதமென்றும் ஆகையால் விசாரணை செய்யாமலேகேசைத்தள்ளிவிட வேண்டியது அவசியமென்றும் அப்படிச் செய்வது தான் நியாயமென்றும் வாதித்தார். அப்போது,

ஸ்ரீனிவாசய்யங்கார்.—கனம் பொருந்திய கோர்ட்டாரவர்களே! அக்ரமமான காரியங்கள் எவர்கள் செய்தபோதிலும் கேஸ்எந்தக்கட்டத்திலிருந்த போதிலும் அக்ரமம் நடப்பதாக ஜட்ஜுகள் மனதில் பட்டால் அப்பேர்ப்பட்ட கேஸ்களை எந்தக் கட்டத்திலும் விசாரணை செய்து அக்ரமங்களை அடக்க ஹைக்கோர்ட்டுக்கு அதிகாரமிருப்பதாக பிரிவி கௌன்சிலில் பல தடவைகளில் தீர்ப்பா யிருக்கும்விஷயத்தை எனது நண்பர் மறந்து இப்போது விதண்டாவாதம் பேச ஆரம்பித்தது ஆச்சரியத்திலும் ஆச்சரியமே.

அட்வோகேட் ஜெனரல்:—எந்த உத்யோகஸ்தராவது நியாயந் தவறி நடந்ததாகவாவது அக்ரமம் செய்ததாகவாவது ஜட்ஜுக்குத் தோன்றினால் அப்போது எடுத்து விசாரணை செய்யலாமென்பது உண்மையே. கேஸ் ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே ஹைகோர்ட்டில் மோஷன்செய்து அவர் விசாரணை செய்யுமுன் ஐக்கோர்ட்டார் விசாரணை செய்யச் சொல்வதே சட்ட விரோதமான காரியம். ஆகையால் இதை இப்போது எடுத்து விசாரிப்பது சரியல்ல.

ஸ்ரீனிவாச ஐயங்கார்:—வருஷத்திற்கு ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேல் சர்க்கார் பேரீஜ் கட்டும் என் கக்ஷிக்காரர் பட்டப்பகலில் பலரைச் சேர்த்துக் கொண்டு போய் அணு விலை தாளாத ஓர் பிலாபிஞ்சை அறுத்தாக ஒரு காவடி அபாண்ட கேஸ் கொண்டு வந்தால் அதை நம்பிக்கொண்டு கௌரவமுள்ள என்கக்ஷிக்காரர்மீது உடனே வாரண்டு பிறப்பித்தது எவ்வளவு நியாயமான காரியமென்பதை யோசித்தாலே, ஹைகோர்ட்டார் பிரவேசிக்கலாம், பிரவேசிக்கலாகாது, என்பது தெளிவாய்த் தெரியும். மேலும்,

ஜட்ஜுகள்:—அட்வொகேட் ஜெனரலவர்களுடைய ஆட்சேபனை நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஹைகோர்ட்டுக்கு எக்கட்டத்திலும் விசாரிக்க சகல அதிகாரங்களுமுண்டு. ஆகையால் உமது கேசைப்பற்றிச் சொல்லலாம்.

ஸ்ரீனிவாசய்யங்கார்:—கனம் பொருந்திய கோர்ட்டாரவர்களே! சீதாராம சாஸ்திரிகள் கொடுத்திருக்கும் பிராதில் என் கக்ஷிக்காரர்மீது அநேகவிதமான குற்றங்கள் சாட்டியிருந்தபோதிலும் ஒரே ஒரு குற்றந்தான் அதாவது சட்ட விரோதமான கூட்டம் கூடி அக்கிரமமாய் அவர் தோட்டத்தில் பிரவேசித்து பட்டப்பகலில் ஒரு அணு விலைமதிப்புள்ள பிலாப்பிஞ்சை பஹிரங்கமாய் கொள்ளை யடித்ததான குற்றத்தைப் பற்றிதான் நான் பேசவேண்டியிருக்கிறது. க்ஷவரம் செய்து கொண்டிருந்த அம்பட்டன் க்ஷவரம்செய்யாமல் எழுந்து போனதாகவும், அம்பட்டர்கள் அவ்வூரில் க்ஷவரம்செய்ய மறுத்ததாகவும், பக்க கிராமத்தில் போய் க்ஷவரம் செய்து கொள்ளப்போக அக்கிராமத்து அம்பட்டரும் க்ஷவரம்செய்ய மறுத்ததோடு சாஸ்திரியைப் பைத்தியக்காரனென்று பலர் கல்லாலடித்ததாகவும், சாஸ்திரிகள் பெண்ஜாதிக்கு கடைக்காரர் உப்பு விற்க மறுத்ததாகவும், அவருடைய வைக்கோல் போர் நெருப்பு வைத்துக் கொளுத்தப்பட்டதாகவும், கிராமத்தார் எல்லோரும் அங்கு வந்து வேடிக்கை பார்த்திருந்தார்களே யொழிய

ஒருவராவது நெருப்பை அணைக்க உதவி புரியவில்லை யென்றும் இவ்வளவுக்கும் காரணகர்த்தா என் முக்கிய கக்ஷிக்காரராகிய சுந்தராஜு தான் என்றும் ஆகர்யமாளிகைகட்டி அற்புதமாய் ஜோடித்துக் காட்டியிருந்த போதிலும், என் கக்ஷிக்கார அதில் சம்மந்தப்பட்டு நடத்தினார்கள் என்பதற்கு எவ்வளவு நேரான அல்லது யூகிக்கக்கூடிய சாட்சியாவது இல்லாததால் சாஸ்திரிக்கு இஷ்டமானால் அம்பட்டர், ஊர் பிள்ளைகள், கடைக்காரர் முதலியவர்கள் பேரில் வியாஜ்ஜியம் தொடர வேண்டுமே தவிர என் கக்ஷிக்காரர்மீது தொடர சாக்ஷியமுமில்லை; எவ்வித நியாயமுமில்லை ஆதலால் அவைகளைப்பற்றி நான் எடுத்துரைக்க வேண்டிய பிரமேயமேயில்லை. ஆகவே ஒரு அணு விலை தாளக்கூடிய பிலாப்பிஞ்சை பட்டப்பகலில் பஹிரங்கமாய்க் கொள்ளையடித்ததாகச் சொல்லும் ஒரே விஷயத்தைப்பற்றி தான் நான் பேசவேண்டியிருக்கிறது. என் கக்ஷிக்கார சுந்தர ராஜு யென்பவர் சர்க்காருக்கு வருஷா வருஷம் ஐம்பதாயிரம் ரூபாய் பேரீஜ் கட்டி வருகிறார். வருஷத்திற்கு ஐம்பதாயிரம் ரூபாய் பேரீஜ் கட்டும் பிரபு ஒருவர் ஒரு அணு விலையுள்ள பிலாப்பிஞ்சைப் பட்டப்பகலில் பலரைச் சேர்த்துக் கொண்டுபோய் பஹிரங்கமாய்க் கொள்ளை யடிக்கப் போவார் என்ற கதையை ஒரு பைத்தியக்காரன் கூட நம்பமாட்டான். அப்படியிருக்க கௌரவமுள்ள ஒரு ஜில்லா மாஜிஸ்டிரேட் இப்படி நடந்திருக்குமாயென்று கிஞ்சிற்றேனும் யோசனை செய்யாமல் கௌரவமுள்ள என் கக்ஷிக்காரர்மீது வாரண்டு பிறப்பித்தது எவ்வளவு அகௌரவமும் அவிவேகமும் அபாயகரமுமான காரியம் என்பதைக் கவனித்து அப்பேர்ப்பட்ட ஒருவரை ஜில்லா மாஜிஸ்டிரேட்டாக வைத்திருக்கக்கூடுமா யென்பதைப்பற்றி சிந்திக்க வேண்டும்.........

அட்வோகேட் ஜெனரல்:—ஓர் உயர்ந்த கவர்ண்மெண்ட் உத்தியோகஸ்தரை அவராவது அவர் அதிகாரம் பெற்றவர்களாவது இல்லாதபோது பஹிரங்கமாய் கோர்ட்டில் வைத்து இவ்வாறு பேசுவது சட்ட விரோதமென்றும் அவரை அவ்வாறு பேசவிடக்கூடாதென்றும் நான் ஆட்சேபிக்கிறேன்.

ஸ்ரீநிவாசய்யங்கார்:—ஒரு பைத்தியக்காரன் கூட செய்யத்தகாத காரியத்தை எவன் செய்தாலும் அதைக் கண்டித்துப் பேச எனக்கு அதிகாரமுண்டு. நான் அதிக்கிரமித்துப் பேசுவதாக எனது நண்பரவர்களுக்குத் தோற்றினால் தாராளமாய் என் பேரில் மான

நஷ்டக் கேஸ் தொடரலாம். நான் அதைப்பற்றி கிஞ்சிற்றுவது பயப்பட வேண்டிய பிரமேயமில்லை. அதிருக்கட்டும்; இப்போது கேசைப் பற்றிப் பேசுகிறேன். என் கக்ஷிக்காரர் ஒரு பெரிய மிட்டாதார். அவருடைய பாட்டியார் இறந்துபோன காலத்தில் அவர் தகப்பனர் சுமார் ஐயாயிரம் ரூபாய் விலை பெறக்கூடிய ஓர் நிலத்தை தானம் செய்து பத்திரம் எழுதிக் கொடுத்தார். இதோ யிருக்கிறது பாருங்கள். அந்த பத்திரத்தின் உண்மையான ரிஜிஸ்டராபீஸ் நகல். அதில் சொல்லியிருப்பதென்ன? 'இந்நான் கெல்லைகளுக்குட்பட்ட நிலத்தை சர்வ சுதந்தர பாத்தியதையாகவும் புத்திர பௌத்திர பரம்பரையாகவும் தானாதி விற்கிரையங்களுக்கு யோக்யராய் ஆண்டனுபவித்துக் கொள்ள வேண்டியது" என்று எழுதப்பட்டிருக்கிறது. கனவான்களே! கவனித்தீர்களா? நிலத்தை மாத்திரம் தானம் கொடுத்ததாகக் காட்டியிருக்கிறதே தவிர அதிலுள்ள மரங்களைக்கொடுத்ததாக ஒரு எழுத்துகூட இல்லை. தானம் கொடுத்த நாள்முதல் இந்தநாள் வரையில் மரங்களின் மாசூல்களை எங்கள் கட்சிக்காரரே அனுபவித்து வருகிறார்களென்று சொல்வதற்கு ஆயிரக்கணக்கான சாக்ஷிகள் தயாராயிருப்பதோடு பல கணக்குகளுமிருக்கின்றன. ஜமீன் நிலங்களிலும் மிட்டா நிலங்களிலும் மரங்களும் சேர்த்துக் கொடுத்ததாக விவரமாய் சொல்லி இன்னின்ன மரங்களென்று குறிப்பிட்டு அவைகளும் கொடுக்கப்பட்டதாக எழுதினாலொழிய மரங்கள் சொந்தமாவதில்லையென்று நூற்றுக்கணக்கான கேஸ்கள் இக்கோர்ட்டிலேயே தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. ஜமீன் மிட்டா நிலங்களில் மாத்திரம் தான் இந்த ஏற்பாடு இருக்கிறதென்று சொல்வதற்குமில்லை. அயன் நிலங்களிலும் புதிதாக ஜாரியாகும்போது அந்நிலங்களில் மரங்களிருப்பின் மரக்கிரையம் குறிப்பிட்டுச் சொல்லி வசூலிக்கப்பட்டிருந்தாலன்றி அம்மரங்களை ஜாரி எடுத்துக் கொண்டவன் வெட்டினால், சர்க்கார் சொத்தைத் திருடியதாகக் கேஸ்கள் கொண்டு வரப்பட்டு தண்டனையடைந்திருப்பதையும் நூற்றுக் கணக்கில் எடுத்துக் காட்டலாம். ஆகவே சாஸ்திரிகளுக்கு நிலம் தானம் செய்யப்பட்டதேயொழிய நிலத்திலிருக்கும் மரங்கள் தானம் செய்யப்படவில்லை. ஆகையால் என் கக்ஷிக்காரர் தங்களுக்குச் சொந்தமான பிலாப்பிஞ்சை அறுத்தார்களேயொழிய, அவர்கள் திருடவுமில்லை, பகற் கொள்ளையடிக்கவுமில்லை. மரங்கள் உண்மையாகவே சாஸ்திரிகளுக்குச்சொந்தமென்றுவது அதன் புலன்களை அவர் அறுத்தனுபவித்து வந்திருப்பதாக

வாவது சாட்சிகளின் மூலியமாய் ருஜு செய்ய சாத்பமாகுமென்று கூட பேச்சுக்கு வைத்துக் கொண்டாலும் சாஸ்திரிகள் செய்பவேண் டியதென்ன? முதலில் அம்மரங்கள் தமக்குச் சொந்தமென்று சிவில் கோர்ட்டுக்குப் போய் தீர்மானித்துக் கொள்ள வேண்டியது தானே யொழிய என் கக்ஷிக்காரர்மீது கொள்ளைக் குற்றம் சாட்டவேண்டிய பிரமேயமே கிடையாது. அப்படி ஓர் பைத்திபக்காரப் பார்ப்பான் அவிவேகமாயும் முட்டாள் தனமாயும் மனுக் கொடுத்த போதிலும் சகல சட்டங்களையும் வாசித்து ஜில்லாமாஜிஸ்டிரேட் ஸ்தானத்தில் இருக்கப்பட்டவர் செய்ய வேண்டியதென்ன? முதலிலேயே சிவில் தரப்பான விஷயமாதலால் சிவில் கோர்ட்டுக்குப் போக வேண்டு மென்று உத்தரவிட்டிருக்க வேண்டும். அப்படியில்லாமல் ஏதாவது சந்தேகமிருந்த போதிலும் கௌரவா அகௌரவம் அறிந்து இவ்வ ளவு கௌரவம் பொருந்தியவர் இப்பேர்ப்பட்ட அற்பகாரியம் செய் வாராவென்று யோசித்து நோட்டீஸ் கொடுத்து வரவழைத்து விசாரி த்து அப்பால் வேண்டிய நடவடிக்கை நடத்தியிருக்கவேண்டும். அவ் வாறெல்லாம் செய்யாமல் ஒரு பைத்தியக்காரப் பார்ப்பான் வார்த் தையை நம்பிக்கொண்டு இவ்வளவு கௌரவம் பொருந்தியிருக்கும் மிட் டாதார் பேரில் இவ்வளவு அற்ப கேசுக்காக வாரண்டு பிறப்பித்த ஒரு ஜில்லாமாஜிஸ்டிரேட்டின் நடத்தையைப் பைத்தியக்காரனிலும் கேடு கெட்ட பைத்தியக்காரன் நடத்தையென்று சொல்லாமல் வேறு என் னதான் சொல்வதென்று, எனக்கு விளங்கவில்லை. கனம் தங்கிய கோர்ட்டாரவர்கள் பார்வைக்கு அவ்விஷயங்கள் வந்தபின் அதைப் பற்றி தக்க விதமாய் நடத்தி இனிமேலாவது இப்பேர்ப்பட்ட அதிக்கி ரமான காரியங்கள் நடக்தேறுதபடி நடவடிக்கை நடத்துவார்களெ ன்றே நம்புகிறேன். நிற்க எனது கட்சிக்காரர்மீது வாரண்டு பிறப்பி த்தது அக்கிரமமாகையால் தடை உத்தரவை காயப்படுத்த வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அட்வோகேட் ஜெனரல்.—எனது நண்பர் ஸ்ரீமான் ஸ்ரீனிவாச ய்யங்காரவர்கள் இவ்வளவுநேரம் தன் முழு சாமார்த்தியத்தோடும் கேசுக்குச் சம்பந்தமில்லாத பல விஷயங்களைச் சுட்டிக் காட்டி தனக்குத்தானுகவே கௌரவம் பொருந்திய நியாயாதிபதிகள் இப் படி இப்படித்தான் நடத்த வேண்டுமென்று முடிவு செய்ததைப் போல் பேசித் தீர்த்துவிட்டார். தோட்டத்தை தானம் செய்தேனெ ன்றால் தோட்டத்திலுள்ள மரங்களையும் சேர்த்து தானம் செய்வாா

களா மரங்களை நீக்கி தானம் செய்வார்களா? அவர் குறிப்பிட்ட பத்திரத்திலேயே மரங்கள் தானம் கொடுக்கவில்லையென்று ஏதாவது கண்டிருக்கிறதா? இல்லையே. அப்படியிருக்க மரங்கள் சேர்த்துக் கொடுக்கப்படவில்லை யென்பது எப்படிப் பொருந்தும்? ஓர் பசுவை விலைக்கு வாங்கினால் பால் குடிக்கும் பசுவின் கன்றையும் சேர்த்து வாங்கினார்களென்று சொல்லாமலே விளங்குமல்லவா? ஓர் பசுவை வாங்கும்போதே கன்றையும் சேர்த்துப் பேசவில்லை ஆகையால் கன்றைக் கொடுக்கமாட்டேன் என்று விதண்டாவாதம் பேசுவதைப்போலிருக்கிறதேயொழிய வேறில்லை. ஜில்லா மாஜிஸ்டிரேட்டை வைத்தியக்காரனுக்கிப்பேசிய எனது நண்பர் இவ்விஷயத்தில் புத்திசுவாதீனத்தோடுதான் பேசினாரோவென்பது விளங்கவில்லை. ஒருவன் சொத்தை இன்னொருவன் துராக்கிர்தமாய் பிரவேசித்து பகல் கொள்ளையடித்தால் சிவில் கோர்ட்டுக்குப் போகும்படி மாஜிஸ்டிரேட் உத்தரவிட வேண்டுமாம். என்ன அழகு? எனது நண்பர் வீட்டில் ஒருவன் புகுந்து துராக்கிர்தமாய் ஒரு வஸ்துவைத் திருடிக்கொண்டு போகும்போது பிடித்துவிட்டால் என் வஸ்துவை நான் எடுத்துப் போகிறேனென்றுசொன்னதும் இது சிவில் தாப்பு வியாஜ்யம் என்று தள்ளிவிடுவதானால் மாஜிஸ்டிரேட்டு கோர்ட்டுகளாவது மாஜிஸ்டிரேட்டுகளாவது வேண்டுவதேயில்லை. பட்டப்பகலில் பலரைச்சேர்த்து வந்து பஹிரங்கமாய் மரத்திலிருக்கும் காயைக்கொள்ளை யடித்தற்காக மாஜிஸ்டிரேட் வாரண்டு பிறப்பித்துப் பிடிக்காமல் பின் என்ன செய்வது? ஏழைகள்தான் கொள்ளை யடிப்பார்கள்; மஹாராஜர் கொள்ளையடிக்க மாட்டார்களோ? கருணை பொருந்திய பிரிட்டிஷ் இராஜாங்கத்தில் ஏழைகளுக்கு ஒருவித நியாயமும் மஹாராஜருக்கு ஒருவித நியாயமும் இல்லையே. எல்லோருக்கும் ஓரே சட்டந்தானே. அம்பட்டர் அக்கிரமும், பிள்ளைகள் கல்லெறிந்ததும், சாமான்கள் விற்காது செய்ததும், அவையெல்லாம் இவர்நேரில் செய்யாவிட்டாலும் இவருடைய ஆதரவினால்தான் நடந்ததென்பதை அறிய வேறு சாக்ஷி ருஜூவுகள் கூடவேண்டுமோ? இரண்டும் இரண்டும் நான்கு என்று சொல்வதற்கு எப்படி சாக்ஷியமில்லாமலே உண்மையென்று கருதுவோமோ அப்படியே இதையும் நினைக்க வேண்டியதுதான். இந்த மஹாராஜருடைய ஊரில் அவர்கள் வார்த்தைக்கு குறுக்குபேசப்பட்ட எவரும் வசிக்ககூடாதென்னும் ஏற்பாடோ? இது லோக்லாக் கவர்ண்மென்ட்டா? பிரிட்டிஸ் கவர்ண்மெண்டா? ஜில்லா மாஜிஸ்

டிரேட் செய்தது முற்றிலும் சரி. இந்தக்கட்டத்தில் கருணை பொருந்திய ஜட்ஜுகள் ஏழைப் பிரம்மணனுடைய பரிதாபகாரமான நிலைமையை யோசித்துப் பார்த்து வாரண்டை ரத்து செய்யக் கூடாது. அப்படி ரத்து செய்தால் இனி அந்த ஏழைப் பிராமணன் அவ்வூர் மண்ணை மிதிப்பது கூட சாத்யமாகாது. மேலும்,.........

ஜட்ஜுகள்:—இப்போது சொன்ன விஷயங்களைத் தவிர ஏதாவது புது விஷயங்கள் சொல்வதானால் சொல்லுங்கள். வீணில் சொன்னவைகளையே திரும்பத்திரும்பச் சொல்லி நேரத்தை வீணாக்க வேண்டாம்.

அட்வோகேட் ஜெனரல்:—ஏழைப் பிராமணனுடைய பரிதாபகரமான நிலைமையை அறிந்து நியாயம் நடத்தக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஜில்லா மாஜிஸ்டிரேட் சமீபத்தி லிருப்பவராதலால் அவருக்கு நீக்குப் போக்கு அக்ரமங்கள் நியாயங்கள் நன்றாய்த் தெரியும். எல்லாவற்றையும் அவர்......

ஜட்ஜுகள்:—சரி! போதும். இருகக்ஷிகளின் வாதத்தையும் நன்றாய்க் கவனித்ததிலிருந்தும், ஜமீன் நிலங்களிலும் மிட்டா நிலங்களிலும் நிலத்துடன் மரங்களும் கொடுக்கப்பட்டதாகவெளிப்படையாக எழுதப்பட்டிருந்தாலொழிய மரங்கள் சொந்தமாவதில்லை யென்று இதற்கு முன் பல கேஸ்கள் தீர்மானமாயிருப்பதாலும், இது கொள்ளையில் சம்மந்தப்படக்கூடும் என்பதாக நாங்கள் அபிப்பிராயப் படவில்லை. ஆகையால் தடை உத்தரவை காயப்படுத்தி விட்டோம். இவ் விஷயம் போதுமான அளவு இங்கு தர்க்கிக்கப்பட்டதால் இதைப்பற்றி இனி விசாரணை புரிவது அநாவசியமென்று அபிப்பிராயப்படுகிறோம். சாஸ்திரிகளுக்கு மரங்கள் சொந்தமெனத் தோன்றினால் சிவில் கோர்ட்டின் மூலமாக அவர் சுதந்தரத்தை ஸ்தாபித்துக்கொள்ள வேண்டியது. இந்த வியாஜ்பத்தில் ஜில்லா மாஜிஸ்டிரேட் யோசனை செய்யாமல் வாரண்ட் பிறப்பித்தது சரியல்ல வென்றும் இனிமேல் இப்பேர்ப்பட்ட யோசனையற்ற காரியங்களை செய்தால் மாஜிஸ்டிரேட் உத்தியோகத்திற்கு அவர் லாயக்காக மாட்டாரென்று அபிப்பிராயப்படும்படி நேரிடுமென்றும் எச்சரிக்கப்படுகிறார்.

என்று தீர்ப்பளித்தார்கள் வாசகர்களே! ஆதிமுதல் நடந்தேறிய விஷயங்களில் யார் கக்ஷியில் நியாயமிருக்கிற தென்றும் யார் கக்ஷியில் அநியாயமிருக்கிறதென்றும் உங்களுக்கு நன்றாய்த் தெரி

யும். ஐகோர்ட்டில் நடந்தேறும் தீர்ப்புகள் சட்டத்தைப் பொறுத்தேயிருக்கும். வாசகர்களுக்கு அது அனியாயத் தீர்ப்பென்று மனதில் படலாம். ஆனால் முன்னால் இக்கேசைப் பற்றி ஒன்றும் தெரியாமலிருந்து வக்கீல் ஸ்ரீனிவாசய்யங்கார் வாதத்தை மட்டும் கேட்கப்பட்டவர்களுக்கு எவ்வாறு தோன்றுமென்று சிந்தித்துப் பாருங்கள். ஆயிரக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்துக் கொண்டு ஹைகோர்ட்டில் அப்பீல் தாக்கல்செய்து அவதிப்பட்டு கேஸ் விசாரணைக்கு வருவதற்குள் எவ்வளவோ கஷ்ட நிஷ்டூரங்களை அனுபவித்துக் கொண்டு பலதடவைகளில் சென்னைக்குச் சென்றும், கேஸ்கட்டும் கட்சிக்காரனுடைய ரூபாய்களும் தங்கள் கைக்கு வந்து சேரும் வரையில் மிக இனிமையாய்ப் பேசி ரூபாய்கள் பெற்றுக் கொண்டபின் முதலில் பராமுகமாயும் அப்பால் "என்ன காணும்! எங்களுக்கு நீர் ஒருகக்ஷிக்காரர்தானா? உன்னிடமே ஓலைப்பாயில் நாய் மோண்டதைப்போல் தொண தொணவென்று பேசிக் கொண்டிருந்தால் போதுமா? ஏன் இப்படி வம்பு வளர்க்கிறீர்? போய் வாருமென்றும் மேல்பேசப்போனால் ஓய் உமக்கு புத்தியிருக்கிறதா இல்லையா? ஒருதரத்திற்கு ஆயிரந்தரம் சொன்னாலும் இவ்வாறு பிராணனை வாட்டுகிறீரே. வேலையில்லாவிட்டால் சென்னையில் நடந்தேறும் ஆயிரக்கணக்கான வேடிக்கைகளைப் போய்ப்பாரும்தொந்தரவுசெய்ய வேண்டாம்' என்றும் பலவிதமான இழிச்சொற்களைக் கேட்டும், கடைசியாக வக்கீலிடமிருந்து "உமது கேஸ்கூடிய ஜல்தியில் எடுக்கப்படும் உடனே பாக்கி ரூபாய்களுடன் வரவும்" என்ற தந்தி சேர்ந்த உடன் தாம் போவதற்குள் எங்கு கேஸ் எடுத்துவிடுவாரோ வக்கீலுக்கு பாக்கித்தொகை சேரவில்லையென்று எங்கு ஆஜராகாது போய் விடுகிறாரோ என அஞ்சி வீட்டில் நகைகளைக் கொதுவை வைத்து அநியாய வட்டிக்கு ரூபாய்களை வாங்கிக்கொண்டு, சென்னையில் இறங்கியதும் பல் துலக்காமலே மோட்டார் ஏறி வக்கீல் வீட்டுக்குப் போய்ப் பார்க்க அவர் பாக்கி ரூபாய்களை வசூலித்துக் கொண்டு ஐக்கோர்ட்டுக்கு வாரும் பார்த்துச் சொல்லுகிறேன் என்றுசொல்ல, கக்ஷிக்காரர் எத்தனை மணிக்கு என்று கேட்க, மறுபடியும் பழைய கதை ஆரம்பமாகி உமது இஷ்டமானநேரம் வாரும் வீண் கேள்விகள் கேட்டு நேரத்தைப் போக்கவேண்டாம் போம் என்று சொல்ல ஓட்டலுக்குப் போய் ஹோட்டல்காரனை அவசரப்படுத்த அவன் வாய்க்கு வந்தவாறெல்லாம் பேசி அடுப்பில் கொதித்துக் கொண்டிருக்கும்

கொழும்பை அவசரமாய் எடுத்து வருவதில் மேலும் கீழும் ஊற்றி சாப்பிடப்பட்டவன் மேல்விழுந்து கொப்பளம் உண்டாக இத்தியாதி அவஸ்தைகளைப் பட்டுக்கொண்டு 10¾மணிக்கே வந்து வக்கீல்வரும் வழியை எதிர்பார்த்திருந்து அவரைக்கேட்க, அவர் கக்ஷிக்காரனை அழைத்துப் போய் ரப்போர்டில் (Rough Board) கேஸ் வந்திருப்பதைக் காட்டி, ரேடிபோர்ட்டையும் (Ready Bcard) அவருக்குக் காட்டி நித்தியம் இதை வந்து பார்க்க வேண்டியது. என்றைக்கு அதில் இந்தக்கேஸ் போடப்படுகிறதோ அன்றுதான் உமது கேஸ் வரும். அதுவரையில் என்னைத்தொந்தரவு செய்யாதேயும் என்று சொல்லிவிட்டு அவர் அவசரமாய்த் தமது வேலை பார்க்கச் செல்ல கட்சிக்காரன் பின்தொடர்ந்துபோய் எப்போது வரும் என்றுகேட்க 'ஓய் எனக்கு ஜோஸ்யம் தெரியாது' நித்யம் வந்து பாரும் "நாளைக்கு வந்தாலும் வரலாம். நாற்பது தினங்கள் பொறுத்து வந்தாலும் வரலாம்" தினம் வந்து பார்க்கவேண்டியது உமதுவேலை" என்றுசொல்லி விட்டுப் போய்விட இவர் நித்யம் போர்ட்டைப்போய்ப் பார்ப்பதும் நேரப் போக்குக்காக சென்னையில் நடக்கும் வேடிக்கைகளைப் பார்ப்பதும், காப்பி ஓட்டல்களில் போய் சாப்பிடுவதுமாக காலத்தை வெட்டவழியாக்கிக் கொண்டு காலங்கழித்து வர, கடைசியில் ரெடிபோர்ட்டில் வந்தவுடன் மறுநாள் போய் அங்கு உட்கார்ந்திருக்க அந்தக் கேஸ் கூப்பிட்டதும் இந்த வக்கீல் எழுந்து ஏதோ சொல்லவும் ஜட்ஜு பதில் சொல்லி விட்டு கட்டை எடுத்துப் போட்டுவிடவும், கட்சிக்காரனுக்கு என்ன நடந்ததென்று அர்த்தமாகாமல் வக்கீலைப் போய்க் கேட்கப் போகவும், அவர் எல்லாம் முடிந்துவிட்டது, 'தடிப் பயல் சரியாய்க் கவனிக்காமல் தள்ளிவிட்டான்' என்றுசொல்ல அப்போதும் கேசைவாசிக்கவே பலமணி நேரங்கள் பிடிக்குமே, ஒரு நிமிஷத்திற்குள் எப்படிப் பார்த்துத் தள்ளிவிட்டார் என்று கேட்டுக் கொண்டிருக்கும்போதே அவர் ஒருவழியாய்ப் போக இவனும் பின் தொடர சேவகன் இவனைத் தடுத்து நிறுத்திவிட இவ்வாறு கஷ்டங்களையனுபவித்து தன் பொருளையும் இழந்து விடும்படி நேரிடுகிறது. ஹைகோர்ட்டில் நடந்தேறும் சட்ட சம்மந்தமான நியாயங்கள் பொது ஜனங்களுக்கு அர்த்தமாகாது. நமது அபிப்பிராயத்தில் ஹைகோர்ட்டில் நடந்தேறும் நியாயங்களெல்லாம் பெரும்பாலும் கட்சிக்காரரது காலத்திற்கு தக்கவாறும், வக்கீலின் வாயாடிதனத்தைப் பொறுத்தும், ஜட்ஜிகளின் அச்சமய மனப்போக்கைப் பொறுத்து மிருப்பதாகவே நினைக்கிறோம்.

நிற்க, சுந்தரராஜு தனக்குக் கேஸ் அநுகூலமான உடனே இவ்விஷயத்தைத் தந்திகள் மூலமாய்த் தமது பல நண்பர்களுக்கும் தெரிவித்துவிட்டு உடனே ஊருக்குப் புறப்பட்டார். திருநெல்வேலி ரெயில்வே ஸ்டேஷனில் அவரது பல நண்பர்கள் காத்திருந்து அவர் வந்ததும் அவரால் சுமக்க முடியாத புஷ்பமாலைகளைக் கொண்டுவந்து போட்டு யானையின் மேல் அம்பாரி வைத்து பலவாத்யங்கள் முழங்க அவரை ஊர்கோலம் சுற்றினார்கள். இந்த ஊர்கோலத்தை வழியில் சந்தித்த கலெக்டர் துரையவர்களுக்கு எதைப்பற்றிய ஊர்கோலமென்று தெரியாததாலும் ஜனக்கூட்டத்தால் தமது வண்டிபோக வழியில்லாததாலும் போலீசார் வழிவிலக்கும் வரையில் வண்டியை நிறுத்தும்படி நேரிட்டது. அப்போது அவர் பேரிலும் பன்னீர் தெளித்து நல்ல புஷ்ப மாலைகளை அவர் கழுத்திலும் கொண்டுவந்து போட்டு ஒரு தட்டில் கல்கண்டும் கொண்டுவந்து வண்டியில் வைத்தார்கள். உடனே ஜனங்களெல்லாம் கைதட்டி கரகோஷம் செய்தார்கள். அதற்குள் வண்டி போகவழி ஏற்பட்டதால் தன் பங்களாவுக்குச் சென்றார். அப்பால் இவ்வளவு தடபுடலான ஊர்கோலம் எதைப்பற்றிய தென்று விசாரித்தபோதுதான் சுந்தரராஜு ஹைகோர்ட்டில் ஜெயமடைந்ததைப்பற்றிய ஊர்கோலமென்று தெரிந்தது. அவ்வூர்கோலத்தைப் பற்றித் தந்தி மூலமாய் சென்னைப் பத்திரிகைகளுக்குத் தெரிவித்து அன்றைய பத்திரிகைகளிலேயே ஊர்கோலத்தின் சிறப்பைப்பற்றி வர்ணித்து எழுதியதில் ஜில்லா மாஜிஸ்டிரேட் துரையவர்கள் கூட ஊர்கோலத்திற்கு வந்திருந்ததாகவும், அவருக்கும் மாலை முதலிய மரியாதைகள் நடந்ததாகவும் எழுதப்பட்டிருந்தது. பத்திரிகையை வாசித்ததும் அவருக்குண்டான அவமானத்திற்கு அளவேயில்லை. என்னசெய்வார் பாவம்? தான் ஊர்கோலத்திற்குப் போகவில்லையென்று மறுப்பதற்குமில்லை. தன்னை அவமானப்படுத்துவதற்காகவே நடத்திய ஊர்கோலத்திற்குத் தானே போயிருந்து புஷ்ப தாம்பூலாதிகள் பெற்று வந்தாரென்று எழுதப்பட்டிருந்தால் அவர் மனம் எவ்வாறிருக்குமென்பதை வாசகர்களே கவனியுங்கள்.

சில சமயங்களில் தடுக்க முடியாத காரணங்களால் இன்னது நடக்கிறதென்றே தெரியாமல் இப்பேர்ப்பட்ட இடுக்கண்களுக்குட்படும்படி நேரிடுகிறது.

இரண்டாவது அத்தியாயம்

——(ο)——

கண்கட்டு வித்தையா?

முந்திய அத்தியாயத்தில் சொன்ன விஷயங்கள் நடந்தேறிய சில தினங்களுக்கப்பால் ஓர்நாள் டெப்டிமாஜிஸ்டிரேட் தன்னிடம் வந்து பேசிக்கொண்டிருக்கும்போது அவரிடம் மிஸ்டர் ஸ்காட் துரையவர்கள் தனக்கு நேர்ந்த அவமானத்தைச்சொல்லி அதிகமாய் வருத்தப்பட்டு இவ்வளவு அக்ரமஞ்செய்யும் சுந்தரராஜுவை எப்படியாவது அடக்கிவிட வேண்டும் என்பதாகச் சொன்னார். அவர் துரையவர்களைச் சற்று அமைதியாயிருக்கும்படியும் ஜில்லா மாஜிஸ்டிரேட் அதைப்பற்றி எந்த நடவடிக்கைகளிலும் சம்மந்தப்படாமலே சுந்தர ராஜுவின் அக்ரமத்தைத் தான் அடக்கி விடுவதாகவும் அப்படிச் செய்வதற்கு ஒருவருஷ சாவகாசம் வேண்டுமென்றும் சொன்னார். கலெக்டர் "உன் இஷ்டம் போல் செய்; எப்படியாவது இப்பேர்ப்பட்ட அக்ரமச் செயல்கள் செய்பவனை அடக்க வேண்டியது மட்டும் அவசியம்" என்றார். தான் எப்படியாவது குறிப்பிட்ட ஒரு வருஷக் காலத்திற்குள் அடக்கி விடுவதாகச் சொல்லிச் சென்றார். சுந்தரராஜுவோ தனிக்காட்டு ராஜாவாய் தன் மனப்போக்கின்படி இன்னும் அதிகமான அக்ரமங்களைச் செய்து கொண்டு கம்பீரமாய் இருந்து வந்தார். அக்ரமங்கள் அதிகரித்து தாங்க முடியாத அளவாகும்போது தானே துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்யும் பகவான் ஒரே அமுக்காய் அமுக்கி மறுபடியும் தலையெடுக்காதபடி பாதாள லோகத்தில் தள்ளிவிடுவது வழக்கம். அதை அறியாமல் பேதை மாந்தர் ஏமாறுகின்றனர்.

நிற்க, திருவீர ராஜபட்டணத்திலிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரை மாற்ற வேண்டிய பிரமேயம் ஏற்பட்டபோது திருநெல்வேலி டெப்டி மாஜிஸ்டிரேட் போலீஸ் சூப்பிரன்டன்டன்ட் துரையவர்களிடம் கலந்து பேசி, தமது வேலையை அதுவரையில் பிரக்கியாதியோடு நடத்திவந்தவரும், இலஞ்சம் வாங்குவதில்லையென்று கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவரும், ஏழையென்றும் மஹாராஜா என்றும் பாராமல் சட்டத்தின்படி நடந்து வருபவரும், திருடர்களுக்கு வைரியாயும் அஞ்சாத நெஞ்சுடையவராயுமிருந்த காமாக்ஷிராவ் என்ப

வரை அந்த இலாகாவுக்கு மாற்றும்படி இரகசியத்தில் ஏற்பாடு செய்து, வழக்கப்பிரகாரம் மாற்று உத்தரவுகள் இருவருக்கும் அனுப்பப்பட்டன. இவ்விஷயம் சுந்தரராஜா அவர்களுக்குத் தெரிந்த உடனே மாமூல் பிரகாரம், அவர் ஒரு வண்டி நிறைய பலதினுசு பழங்கள், கல்கண்டு, பாதங்கொட்டை, திராக்ஷை, புஷ்பம் முதலியவைகளை வாங்கிக் கொண்டு இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவ் அவர்களைப் பார்க்கப் போனார். அப்போது காமாக்ஷிராவ் அவர்கள்தான் இன்னும் சில தினங்களில் திருவீரராஜபட்டணம் வருவது தெரிந்திருந்தும் சுந்தரராஜா அவர்கள் அவ்வளவு கஷ்டமெடுத்துக் கொண்டு 50 மைல் தூரம் வந்து தன்னைப் பார்க்க வந்ததற்காக மிகவும் நன்றி பாராட்டுவதாகச் சொல்லி அவர் கொண்டு வந்த வஸ்துக்களில் ஒவ்வோர் தினுசில் ஒவ்வொன்று எடுத்துக் கொண்டு சுந்தரராஜா அவர்கள் ஏதாவது ஜோலியாய்த் தன்னைப்பார்க்க வந்தார்களா வென்று கேட்க, அவர் பார்த்துப் போவதற்காகவே வந்ததாகச் சொல்ல ஐந்து நிமிஷங்களில் பேச்சை முடித்துக் கொண்டு அனுப்பிவிட்டார். வழக்கப் பிரகாரம் சுந்தரராஜு அவர்கள் தான் ~~கொண்டு~~வந்த சாமான்களைத் தட்டுகளுடன் இன்ஸ்பெக்டர் வேலைக்காரரிடம் கொடுத்து உள்ளே கொண்டு போகும்படி சொல்ல அவர்கள் காமாக்ஷிராவ் அவர்கள் எடுத்துக்கொண்ட வஸ்துக்களைத் தவிர வேறு வஸ்துக்கள் எவராவது உள்ளே கொண்டுபோனால் அத்துடன் தங்கள் வேலைகள் போய்விடுமென்றும் ஆகையால் கண்டிப்பாய் வாங்கும் வழக்கம் அவ்வீட்டில் கிடையாதென்றும் சொன்னார்கள். சுந்தரராஜு ஜோப்பிலிருந்து 10 ரூ நோட்டை எடுத்து அவர்களுக்குக் கொடுத்து உள்ளே சாமான்களைக் கொண்டு போகும்படி சொன்னார். அவர்கள் மரியாதையாய் நோட்டைப் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்கள். இவ்விஷயம் சுந்தரராஜுக்கு அதிக ஆச்சரியமாயிருந்தது. ஒவ்வொருவருக்கும் ஓர் விலை யிருப்பதாகவும் அந்தப்படிக் கொடுத்தால் வாங்காதவர்கள் உலகத்திலில்லையென்றும் சொல்லிக்கொண்டு எல்லாம் ஊர்வந்த பிற்பாடு பார்த்துக் கொள்வதாய்ச் சொன்னார். இவைகளை யெல்லாம் மறைவாயிருந்து கேட்டுக் கொண்டிருந்த காமாக்ஷிராவ் பெருந்தொகை கொடுத்துப் பார்க்கும் போதுதான் உலகத்தில் தாங்கள் ஏழைகளா யிருப்பினும் பொருளைவிட நடுவு நிலைமையே சிறந்ததெனமென நினைக்கும் உத்தியோகஸ்தர் சிலர் இருக்கிறார்களென அவருக்குத் தெரியப்போகிற தென்று

தனக்குள் நினைத்துக் கொண்டார். 10 தினங்கள் பொறுத்து காமாக்ஷிராவ் திரு வீரராஜ பட்டணத்திற்கு 7 மைல் தூரத்திலிருக்கும் தாலுக்காவின் தலைமையிடம் போய்ச் சேர்ந்தார். அதுவரையில் தான் எல்லாவித வண்டிகளும் போய் வரக்கூடிய ரஸ்தாக்கள் இருக்கின்றன. அதற்கப்பால் மணல் வழியாயும் தண்ணீர் வழியாயும் வழக்கப்பட்ட மாடுகள்தான் அதிக கஷ்டத்துடன் போகக்கூடும் அவ்விடத்தில் மணற்காடுகளுக்கு தேரிக்காடுகளென்றும், தண்ணீர் கட்டி நிற்கும் பாகத்திற்குத் தருவைக் காடுகளென்றும் பேர். மணற்காடுகளில் உடை முள்மரங்களைத் தவிர வேறு மரங்கள் முளைப்பதேயில்லை. ஆடுகளுக்கு அக்காய்களை அறுத்துப்போடுவதால் அக்கிளைகளிலுள்ள முட்கள் மணலில் மறைந்திருந்து செருப்பாவது பாதக்குறடாவது போடாமல் கால்வைத்த மாத்திரத்தில் நறுக்கென்றுகாலிலேறும். பணலில் சப்பாத்திகட்டையாவது செருப்பாவது போட்டு நடப்பது கஷ்டம். இவ்விரு சங்கடங்களுக்குள் அகப்பட்டு புதிதாய் அப்பிராந்தியங்களுக்குப் போவார் அதிககஷ்டப்படுவது வழக்கம். தருவைக் காடுகளிலும் தண்ணீருக்குள் முட்கள் அபரிமிதமாயிருக்கும். ஆகையால் தருவைக் காட்டில் நடப்பதும் கஷ்டமே. அவ்வூர்களில் வலாயமாய் வசிக்கும் ஜனங்கள் பாதக்குறடு போட்டு மணலில் நடந்து அனுபோகப்பட்டவர்களாதலாலும் முட்கள் ஏறி ஏறி பாதங்கள் காய்த்துப் போயிருப்பதாலும் அவர்கள் அதை பொருட்படுத்தவில்லை. புதிதாய் அவ்வூர்களுக்குப் போவோர் படும் கஷ்டத்தை ஈசனே அறியவேண்டும். இன்ஸ்பெக்டர் அன்று வருவதாக எவருக்கும் எழுதாததால் போலீஸ்ஸ்டேஷனிலிருந்து எவரும் வரவில்லை. அப்படியிருந்தும் சுந்தரராஜு மட்டும் அங்கு அவரைக் கண்டு வழி சரியான வழியல்லவாதலாலும் வழக்கப்பட்ட மாடுகளை போகக் கஷ்டப்படுமென்றும் ஆகையால் தமது வண்டியை கொடுப்பதாகவும் அதில் போவது தான் நல்லதென்றும் சொன்னார். அதற்குப் போலீஸ் இன்ஸ்பெக்டர் தனது மாடுகள் எல்லாவிதமான பாதைகளிலும் போய் அனுபோகப்பட்டவை யென்றும் ஆகையால் ராஜு அவர்களுக்கு அதைப்பற்றிய சிந்தனையே வேண்டாமென்றும் சொல்லி அனுப்பிவிட்டார். தான் இனி போகவேண்டியது 7மைல்கள் தானே! சாதாரணமாய் தனது மாடுகள் 1 மணி நேரத்திற்கு 4மைல்கள் செல்லும். எல்லாரும் கஷ்டமான பாதையென்று சொல்லுவதால் ஒருமணி நேரத்திற்கு மூன்று மைல் போவதாக வைத்துக்

கொண்டாலும் இரண்டரைமணி நேரத்திற்குள் போய்விடலாமென்று நினைத்து சாயங்காலம் 4மணிக்குப் புறப்பட்டார். ஊரிலிருந்து 1 பர்லாங்கு வரையில் மாமூல் ரோட்டிருந்தது. அது தாண்டியதும் சேற்றுப் பாதை ஆரம்பமாயிற்று. அதைப் பார்த்ததும் அவர் இதுதானா பாதை? அல்லது பாதையை விட்டுவிட்டோமா? என்று அங்கு போய்க் கொண்டிருக்கும் ஒருவனைக் கேட்டார்.

அவன் அங்காவது பாதை கண்ணுக்குத் தெரிகிறது இன்னும் போகப்போக தண்ணீரிலேயே போக வேண்டியதால் பாதை தெரியவே தெரியாதென்று சொன்னான். பின் எப்படிப் போவதென்றால் கரை ஓரமாகவே தண்ணீரில் போகவேண்டுமென்று சொல்லிப்போனான். வண்டிக்காரனும் அதிக ஜாக்கிரதையாக ஓட்டிக்கொண்டே சென்றான். அங்கு பர்லாங்கு கற்களாவது மைலில் கற்களாவது நடுவதுமில்லை. நட்டாலும் தேரிக்காடுகளில் காற்றால் மணல் வாரிப் போட்டு மூடப்பட்டு விடும். தருவைக் காடுகளில் தண்ணீருக்குள் மூழ்குவதால் சேற்றாலாவது மூடப்பட்டுவிடும் அல்லது சாய்ந்தாவது புதைந்து விடும். சர்க்கார் அளவு பார்க்கும் சேதுகற்களே அநேக இடங்களில் அகப்படுவது கஷ்டம். ஆகையால் அப்பேர்ப்பட்ட பர்லாங்கு மைல் கற்கள் கிடையாது. இந்த இடத்திலிருந்து இந்தயிடம் போனால் மைல் என்று தோராயமாய்க் கணக்கு வைத்திருப்பதைக் கொண்டுதான் அறிந்துகொள்ள வேண்டும். அப்படி தோராயமாய்க் கணக்குப் பார்த்ததில் முக்கால் மணி நேரத்திற்கு ஒரு மைல் தூரம் வந்திருப்பதாகக் கண்டார். அச்சமயத்தில் சுந்தரராஜுவின் வண்டி பின்னால் வந்தது. இன்ஸ்பெக்டரவர்களுக்கு ராஜுவின்கூடப் போகக் கூடாதென்ற எண்ணம். ஆகையால் வெளிக்குப் போவதைப் போல் வண்டியை நிறுத்தி இறங்கினார். சுந்தரராஜுவும் தமது வண்டியை நிறுத்தி தன் வண்டியின் பின்னால் வண்டி வந்தால் கஷ்டமில்லாமற் போகுமென்றும் இல்லாவிட்டால் வண்டிக்காரனுக்கு வழி தெரியாததால் கஷ்டமாகுமென்றும் சொன்னார். "கரை ஓரம்போக வேண்டியது தானே; இதில் என்ன கஷ்டம் ஏற்படும்" என்றார். 'சில இடங்களில் கரை ஓரம் பள்ளமிருக்கும்; அப்போது தள்ளிப் போக வண்டி வரும்' என்றார்: "அதெல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம்" என்றார்: உடனே சுந்தரராஜு தான் அவருடன் போவது அவருக்குப் பிடிக்கவில்லையென நினைத்துத் தன் வண்டியை ஓட்டிச் சொன்னார். தண்ணீர் தாண்டும் வரையில் வண்டியைத் தொடர்ந்து

போனால் அப்பால் கரை வந்ததும் சற்று நேரம் நின்று போகலாமென்று வண்டிக்காரன் சொன்னான். கண்ணுக்குத் தெரியக்கூடிய தூரத்தில் அந்த வண்டியைத் தொடர்ந்து போகும்படி இன்ஸ்பெக்டர் உத்தர விட்டார். அப்படி சுமார் ஒரு மைல் சென்றதும் கரை சற்று சுமார் ஒரு பர்லாங் புடைத்துத் தண்ணீருக்குள் வந்திருந்தது. சுந்தரராஜுவின் வண்டி அந்த புடைப்பின் மறைவில் சென்றதும் பின்னால் சென்ற வண்டிக்கு எவ்வழிபோயிற் றென்று தெரியவில்லை. பின் வண்டி அந்த புடைப்பின் பக்கம் வந்தபோது சுந்தரராஜுவின் வண்டி ஒரு பர்லாங்கு தூரத்தில் முன்னால் போய்க் கொண்டிருந்தது. இன்ஸ்பெக்டருடைய வண்டிக்காரன் அதுவரையில் போனதைப் போல் கரையின் ஓரமாய்ச் சென்றான். முன் வண்டியில் போன சுந்தரராஜு உரத்த சத்தமாய் ஏதோ சொன்னார். பனை ஓலைகள் காற்றால் அசைந்தாடிய சத்தத்தில் என்ன சொன்னாரென்று திட்டமாய்த் தெரியவில்லை. இன்னும் அதிகமாய் சுந்தரராஜு கூவியதோடு ஏதோ ஜாடையும் காட்டினார். இன்னதுதான் சொல்லுகிறாரென்று தெரியாததாலும் அவர் பேரில் இன்ஸ்பெக்டவர்களுக்கு அருவருப்பு ஏற்பட்டதாலும் கவனிக்காமல் ஓட்டச் சொன்னார். வண்டி சுமார் பத்து கெஜ தூரம் சென்றது. சுந்தரராஜுவும் அவர் வண்டிக்காரனும் இன்னும் அதிகமாகக் கூவினார்கள். அதே சமயத்தில் இன்ஸ்பெக்டரவர்கள் ஏறி வந்த வண்டி மாடுகள் திடீரென்று பள்ளத்தில் இறங்கிவிட்டன. வண்டியோடு மாடுகள் மிதக்க ஆரம்பித்தன. வண்டிக்குள்ளெல்லாம் தண்ணீர் வந்து ஆட்கள் துணிகள் பெட்டிகள் முதலியன எல்லாம் நனைந்ததோடு அன்றைய இரவு ஆகாரத்திற்காகக் கொண்டு வந்திருந்த பலகாரங்களும் நனைந்துவிட்டன. இன்னும் சற்று நேரத்தில் மாடுகளும் ஆட்களும் அமிழ்ந்து போவார்கள். அப்பேர்ப்பட்ட சமயத்தில் சுந்தரராஜு தமது வண்டியை வேகமாய் ஓட்டிக்கொண்டு வந்து சமீபத்தில் நிறுத்திவிட்டு, தானணிந்திருந்த விலையுயர்ந்த உடுப்புகளைக்கூட கவனியாது சட்டென்று தண்ணீரில் குதித்து நீந்திச் சென்று மாட்டின் தலைக்கயிறைப் பற்றி இழுத்துத் திருப்பினார். அதே சமயத்தில் அவர் வண்டிக்காரன் பின் பக்கம் வந்து வண்டியைப் பிடித்துத் திருப்பித் தள்ளினான். அப்படி அவர்களிருவரும் கால்மணி நேரம் வரையில் அதிக அவஸ்தைப்பட்டு வண்டியும் மாடுகளும் நிலைக்கும்படியான இடத்தில் கொண்டு வந்து நிறுத்தினார்கள். உடனே தமது ஜோப்

பியிலிருந்த ஊது குழலை எடுத்து சுந்தரராஜூ மும்முறை அதி சத்தம் உண்டாகும்படி ஊதினார். அவர் ஊதிய சுமார் ஐந்து நிமிஷங்களுக்குள் நாலா பக்கங்களிலிருந்தும் சுமார் முப்பது பேர், கள் இறக்கப்பட்டவர்கள், பதினிகாய்ச்சுபவர், ஆடுமாடுகள் மேய்ப்பவர், முதலிய நாலா வித வேலை செய்வோர் ஓடி வந்தார்கள். அவர்கள் வந்ததும் அவர்களை வண்டியை ஜாக்கிரதையாகக் கரை சேர்க்கச் சொல்லிவிட்டு தான் கரைக்கு நீந்தி வந்து நனைந்த உடுப்புகளைக் கழற்றி விட்டு காய்ந்த வஸ்திரங்களணிந்து கொண்டார். சேற்றில் அந்த ஆட்கள் வண்டியை செந்தூக்காய்த் தூக்கிக் கொண்டு வந்து கரை சேர்த்தார்கள். சுந்தரராஜூ அவர்கள் செய்த பேருதவிக்காக இன்ஸ்பெக்டர் வந்தனம் புரிந்தார். அவர் அதைப்பற்றி சிந்திக்க வேண்டாமென்று சொல்லிவிட்டு அந்த ஆட்களில் நால்வரை இன்ஸ்பெக்டரவர்கள் வண்டிக்கு வழி காட்டி வண்டியைத் தள்ளிக்கொண்டு வந்து ஜாக்கிரதையாக திருவீர ராஜபட்டணம் கொண்டு வந்து சேர்க்க வேண்டுமென்று சொன்னதும் தானும் தனது வண்டிக்காரனும் போய் வண்டியில் ஏறிப்போய் விட்டார்கள். இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவ் அவர்கள் அங்கு கூடி தனக்கு உபகாரம் செய்தவர்களுக்கு வந்தனோபசாரம் செய்ததோடு தனது பணப்பையிலிருந்து 10 ரூபாய்களை எடுத்து அவர்களுக்கு இனம் கொடுக்கப் போனார். தங்கள் எஜமானருடைய ஆக்ஞையை நிறைவேற்றினார்களே தவிர வேறொன்றும் செய்யவில்லை யென்றும் அதற்காகத் தாங்கள் ரூபாய்கள் வாங்கினால் தங்கள் தலைபோய் விடுமென்றும் ஆகையால் வாங்க மாட்டோமென்றும் சொன்னதும் அந்நால்வர் நீங்கலாக மற்றவர்கள் நாலா பக்கங்களிலும் மறைந்து விட்டார்கள். காமாக்ஷிராவ் அவர்கள் வண்டியிலேறவும் அந்நால்வர் வண்டியைத் தள்ளிக் கொண்டே வந்து இரவு 8 மணிக்கு திருவீர ராஜபட்டணம் சேர்த்தார்கள். அவர் போலீஸ் ஸ்டேஷனில் போய் இறங்கி தான் எழுதிய பிரகாரம் வீடு அமர்த்தப்பட்டிருக்கிறதாயென்று கேட்டார். எப்போதும் போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் இறங்கும் வீடு தயாராயிருப்பதாகச் சொன்னார்கள். என்ன குடிக்கூலி யென்று கேட்டார். ம-ா-ா-ஸ்ரீ சுந்தரராஜா அவர்கள் வீடென்றும் அவர் வாடகை வாங்குவதில்லை யென்றும் சொன்னார்கள். தான் அவ்வீட்டிலிருக்க முடியாதென்று சொல்லிவிட்டு மறுநாட் காலையில் அவ்வூர் முழுவதும் சுற்றிப் பார்த்தார். அவர் அந்தஸ்துக்கேற்ற வீடுகளெல்லாம் சுந்தரராஜாவுடைய

தென்று தெரிந்ததின் பேரில் ஒரு சிறு வீட்டை மாதம் ரூ மூன்று வாடகையில் அமர்த்தி 6 மாத அட்வான்ஸ் கொடுத்து விட்டார். அவர் அவ்வாறு அட்வான்ஸ் கொடுத்திராவிட்டால் அவருக்கு அவ்வீடுகூட அகப்படாது போயிருக்கும்.

அப்பால் அவ்வூரிலும் தமது டிவிஷனிலுமுள்ள முக்கியமானவர்களைப் போய்ப்பார்த்து எல்லோரிடமும் சமமாகப் பேசி அறிமுகம் செய்து கொண்டு வந்தார் இதற்குள்ளாக இன்ஸ்பெக்டர் மிகவும் நல்லவரென்றும் இலஞ்சம் வாங்குபவரல்லவென்றும் ஏழையென்றும் மஹாராஜரென்றும் பாராமல் சமமாய் நடத்தப்பட்டவரென்றும் ஜனங்களுக்குத் தெரிந்தது. சுந்தரராஜு முன்போல் அதிகாரம் செலுத்தக்கூடவில்லை. வரவர பொது ஜனங்களுக்குத் தன் பேரிலிருக்கும் மதிப்பு குறைகிறதென்ற தெரிய வந்த உடனே இன்ஸ்பெக்டரைத் தன் வசப்படுத்தக்கூடிய வழிகள் ஏதாவதிருக்கிறதாவென பலவகைகளிலும் பரிசோதித்துப் பார்த்தார். எதிலும் உபகாரப்படவில்லை. இனி இன்ஸ்பெக்டரை பயப்படுத்தித் தான் தன் வசப்படுத்தவவேணத் தீர்மானித்தார். ஒருநாள் இன்ஸ்பெக்டர் குதிரைமேல் போய்க் கொண்டிருந்தபோது அவர்மேல் இரண்டு கற்கள் எறியப்பட்டன. பக்கங்களில் முள் அடர்ந்த காடாகையால் குதிரையை உள்செலுத்திப் பார்க்கக் கூடவில்லை; ஆயினும் சட்டென்று குதிரையை விட்டுக் கீழே இறங்கியதும் கல் வந்த பக்கத்தை நாடிச் சென்றார். அப்போதும் ஒருகல் அவர்பேரில் விழுந்து காயப்படுத்திற்று. ஜேப்பியிலிருந்த கைத்துப்பாக்கியை எடுத்து கல் வந்த திக்கை நோக்கிச் சுட்டார். துப்பாக்கியின் குண்டு அங்கு மேய்ந்து கொண்டிருந்த ஓர் ஆட்டின் மேல் பாயவே அது வீறிட்டு விழுந்து செத்தது. அவர் அந்தப் பக்கமெல்லாம் போய் தேடியும் ஆட்கள் யாரும் அகப்படவில்லை. குதிரையிலிருந்து இறங்கும்போது தான் பார்த்த ஆடுமேய்க்கும் கிழவனைத் தவிர அங்கு யாருமில்லை. அக்கிழவன் தன் ஆடு வீறிட்டு விழுந்ததைக் கண்டு அழுதான். இன்ஸ்பெக்டர் ஜேப்பியிலிருந்து பணப்பையை எடுத்து அதன்விலையென்னவென்று கேட்டு அவன் சொன்னதைக் கொடுத்து அவனிடம் ரசீது பெற்றுக் கொண்டார். இவ்விஷயம் ஊரெங்கும் பரவவே சுந்தரராஜு தமது பேர்வராமல் மற்றவர்களைக் கொண்டு பெரிய மஹஜர் தயாரித்து இன்ஸ்பெக்டர் தமது கைத்துப்பாக்கியை அனுவசியமாயும் ஜனங்களுக்கு அபாயகரமாயும் அடிக்கடி உபயோகிக்

கிருரென்றும் அவரை மாற்றவேண்டுமென்றும் அனுப்பும்படி செய்
தார். அதற்கு பதிலே வரவில்லை. இன்ஸ்பெக்டர் குடியிருக்கும்
வீட்டில் நரகலைப் போடல், கல் எறிதல், கன்னம் வைத்துத்
திருட முயலல் முதலிய பல சில்லரை வேலைகளும் செய்து பார்த்தார்
கள். அவர் எதற்கும் பயப்படுவதாகவாவது அவைகளைப்பற்றி
வெளியில் பிரஸ்தாபிப்பதாகவாவது தெரியவில்லை. சுந்தரராஜுவும்
இன்ஸ்பெக்டரும் சந்திக்கும் போதெல்லாம் இருவரும் சாதாரண
மாகப் பேசிக்கொள்வார்கள். ஒருவருக்கொருவர் துவேஷமிருப்ப
தாகக் காட்டிக் கொள்வதில்லை. இப்படிப் பலமாதங்கள் சென்றன.

ஒரு நாள் சுந்தரராஜுக்குச் சமானமான மிராசுதாரரான வீரா
சாமி ரெட்டியார் என்பவர் நிலத்தில் அவரால் நடப்பட்ட மூங்கில்
புதரானது பக்கத்து நிலக்காரரான சுந்தரராஜுவின் நிலத்தில் படர்ந்து
வளர்ந்திருந்ததை வீராசாமி ரெட்டியாரின் ஆட்கள் வெட்டவந்தார்
கள். சுந்தரராஜுவின் ஆட்கள் தங்கள் நிலத்தில் படர்ந்து வளர்ந்
திருப்பதால் அம் மூங்கில் தங்கள் எஜமானருக்குத்தான் சொந்த
மென்றும் ஆகையால் அந்த இரண்டு மூங்கில்களை வெட்டக் கூடா
~~தென்றும்~~ ஆட்சேபித்தனர். வீராசாமி ரெட்டியாரின் ஆட்கள் மூங்
கில் தங்களால் நடப்பட்டதே யொழிய சுந்தரராஜுவின் ஆட்களால்
நடப்படவில்லை யாகையால் தங்களுக்குத்தான் சொந்தமென்று
சொல்லி வெட்டவந்தார்கள். ஆகவே அவர்கள் வெட்டுவோமென்றும்
இவர்கள் வெட்டக்கூடாதென்றும் வாய்ச்சொற்களிலிருந்து இருதர
வேலைக்காரரும் கைகலந்தது, இருகட்சியிலும் பலத்த காயங்களேற்
பட்டு விட்டன. வீராசாமி ரெட்டியாரின் ஆட்கள் அந்த இரண்டு
மூங்கில்களையும் வெட்டி விட்டார்கள். அச்சமாச்சாரம் சுந்தர
ராஜாவுக்கு எட்டவே அவர்கள் நேரில்வந்து பார்வையிட்டு தனக்குச்
சொந்தமான மூங்கிலை வெட்டினதால் சுந்தரராஜு, வீராசாமி ரெட்
டியாரின் மரங்களை வெட்டச்சொல்ல தமது மரங்களை துராகிர்தமாய்
வெட்டுகிறார்களென்று கேள்விப்பட்ட வீராசாமி ரெட்டியார்
சுந்தரராஜுவின் மரங்களை வெட்டச் சொல்ல இரண்டிடங்களி
லும் கலகங்கள் நடக்க இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவுக்குச் சமாசாரம்
எட்டியதும் ஜில்லாபோலீஸ் சூப்பிரண்டண்டண்ட், ஜில்லா மாஜிஸ்டி
ரேட், டிவிஷனல் மாஜிஸ்டிரேட் ஆகிய மூவருக்கும் தந்திகள் அடித்து
விட்டு தனது ஸ்டேஷனிலுள்ள ஐந்து போலீஸ்காரரோடு வந்து வீரா
சாமி ரெட்டியாரைக் கண்டுபேசி மரம் வெட்டுவதை நிறுத்தும்படி

சொல்லிவிட்டு சுந்தர ராஜுவிடம் தானும் தம்முடன்வந்த 5 கான்ஸ்டேபிள்களும் போய் அவரையும் மரம் வெட்டுவதை நிறுத்தும்படி சொல்லி, இந்த அற்ப விஷயத்திற்காக பெரிய மிராசுதார்களும் கனவான்களுமாகிய அவ்விருவர் இவ்வாறு கலகம் செய்வது சரியல்லவென்றும் சமாதானமாய்ப்போவது நலமென்றும் சொல்லி சுந்தரராஜுவைவீராசாமி ரெட்டியாரிடம் வரும்படிகூப்பிட, அதற்கு சுந்தரராஜு "அவன் குதிரை இவ்வளவு தூரம் நடக்காதோ? நானா அவனிடம் போகவேண்டும் பார்த்துக்கொள்ளுவோம்" என்று சொல்ல இன்ஸ்பெக்டர் அவரை அழைத்து வருவதாய்ப் போனார். அவர் பாதி வழி சென்றதும் கும்பலிலிருந்தவர்கள் கவுன் கல்லாலடித்ததில் காமாக்ஷிராவ் முகத்தில் பலத்த காயம் பட்டது. அவர் குதிரையிலிருந்து கீழே விழவும், இன்ஸ்பெக்டரை வெட்டு, குத்து, அடி, உதை என்னும் சத்தம் எங்கும் உண்டாக பலர் அவரை நெருங்கினார்கள். ஆனால் அவர் சட்டென்று எழுந்து குதிரைமேல் பாய்ந்து ஏறி போலீசாரிருக்கும் இடம் போகப் போனார். கும்பல் வந்து மறிக்கவே கைத்துப்பாக்கியை எடுத்து நான்கு பேரை முழங்காலுக்குக் கீழ் சுட்டு வீழ்த்தவே மற்றவர்கள் கொஞ்சம் விலகினார்கள். ~~உடனே~~ தமது குதிரையை அதட்டி ஓட்டிபோலீஸ்காரரிருந்த இடம் சென்று அவர்களை எச்சரித்தார். தங்களை எதிர்த்து வந்தால் துப்பாக்கிகள் சஹிதம் சுடுவதற்கு ஆயத்தமா யிருந்தார்கள். இன்ஸ்பெக்டரும் ஜவான்களும் ஆறு பேர் இருக்க ஜனக்கூட்டமோ பல ஆயிரம் பேர் சேர்ந்து விட்டார்கள். இன்ஸ் பெக்டர் துப்பாக்கியால் சுட்டதில் இருதரத்தாரிலும் காயம் பட்டதினால் இன்ஸ்பெக்டரையும் போலீசாரையும் இருந்த இடம் தெரியாமல் செய்துவிடுவதென்று தீர்மானித்து ஜனங்கள் நாலா பக்கங்களிலிருந்தும் கல்லுகளையும் கட்டைகளையும் எறிந்து கொண்டு ஆரவாரித்து வந்தார்கள். அந்த ஆபத்தான சமயத்தில் ஜில்லா சூப்பிரன்டன்டன்ட் ஐம்பது ரிசர்வ் கனிஸ்டேபிள்கள் சஹிதம் வருவதைப் பார்த்த ஜனங்கள் மூலைக்கு மூலை ஓட்டம் பிடித்தார்கள். போலீசார் துறத்தி 114 பேரைக் கைதியாக்கினார்கள். சுந்தரராஜு அவர்களாவது வீராசாமி ரெட்டியாராவது அகப்படவேயில்லை. டிவிஷன்மாஜிஸ்டிரேட்டு அப்போது வந்துசேர போலீஸ் சூப்பிரடன்டன்ட்டும் அவரும் கலந்து பேசி சுந்தரராஜுவின் பேரிலும் வீராசாமி ரெட்டியார் பேரிலும் வாரண்டுகள் பிறப்பித்து அவர்களை நேரில் போய்ப் பிடிப்பது நலமெனத் தீர்மானித்து

ரெட்டியார் வீட்டில் போய் கேட்க அவர் ஏதோ பத்திரம் ரிஜிஸ்டர் செய்வதற்காக மூந்தின தினமே நான்குநேரி சென்றிருப்பதாகவும் மறுநாள் தான் வருவாரென்றும் எழுத்து மூலமான வாக்கு மூலம் (ஸ்டேட்மெண்ட்டு) கொடுத்தார்கள். அன்று அங்கு வரவேயில்லையா யெனக் கேட்டதற்கு வரவில்லையென்றே சொன்னார்கள். அப்போது மூன்று மணி யிருக்கும். உடனே நான்குநேரிக்குத் தந்தி அடித்து அங்கு இருக்கிறாரா? இருந்தால் எத்தனை மணிக்கு வந்தார்? என்று விசாரிப்பதோடு அவர்பேரில் வாரண்ட் இருப்பதால் தாங்கள் வரும் வரையில் அவரை எங்கும் போகாதபடி பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு சுந்தர ராஜுவின் வீட்டில்போய் விசாரிக்க திருநெல் வேலி சப்மாஜிஸ்டிரேட் கோர்ட்டிலிருந்து சுந்தரராஜுக்குச் சம்மன் வந்ததால் அவர் திருநெல்வேலி போய் மூன்று நாட்களாயின வென் றும் அவர் ஊருக்கு வரவேயில்லை யென்றும் சொன்னார்கள். திரு நெல்வேலி சப்மாஜிஸ்டிரேட்டுக்கும் தந்தி யடித்து சுந்தரராஜுவின் பேரில் வாரண்ட் இருப்பதால் அவர் அங்கிருந்தால் கோர்ட்டை விட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ளும்படி தந்தியடித்து விட்டு தாங்கள் பிடித்த 114-கைதிகளையும் ஜில்லா மாஜிஸ்டிரேட் அவர்கள் உத்தரவு பிரகாரம் பாளையங்கோட்டை பெரிய ஜெயிலிலேயே விசா ரணை வரையில் அடைத்து வைக்கக் கொண்டு வந்தார்கள். உடனே மோட்டாரில் நான்குநேரிக்குச் சென்று வீராசாமி ரெட்டியாரை வாரண்டில் பிடித்து அவரையும் பாளையங்கோட்டைக்கு ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடம் கொண்டு வந்தார்கள். வீராசாமி ரெட்டியார் தந்திகொடுத்த பிரகாரம் அவர் வக்கீல் சுந்தரமய்யர் மனுத்தயாரித்து வைத்திருந்து அவரை ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடம் கொண்டு வந்த தும் தனது கட்சிக்காரரான வீராசாமி ரெட்டியார் நேரில் சப்ரிஜிஸ் ட்டார் ஆபிசில் மூந்திய நாள் முதல் அன்று சாயங்கலம் 3மணிவரை யிருந்திருப்பதாக தான் சர்க்கார் உத்தியோகஸ்தர்களைக் கொண்டே ருஜுவு செய்யத் தயாராயிருப்பதாயும், எவ்வளவு ஜாமீன் வேண்டு மானாலும் கொடுக்கத் தயாராயிருப்பதாயும் சொன்னார். அதற்குள் ளாக சுந்தர ராஜுவையும் பிடித்துக் கொண்டுவர, அவர் தனது வக் கீல் சுந்தர வரதாச்சாரியுடன் வந்து அவர் கக்ஷிக்காரனாகிய சுந்தர ராஜு மூன்று தினங்களாக திருநெல்வேலி சப்மாஜிஸ்டிரேட் கோர் ட்டில் சாட்சி சொல்லிக் கொண்டு அங்கேயே இருக்க அவர் பேரில் அபாண்டமாய் விரோதத்தின் பேரில் கேஸ் கொண்டு வந்திருக்கிறார்

களென்று சொல்லி ஜாமீன்பேரில் விடும்படி கேட்டார். அவ்விருவரையும் ஜாமீன்பேரில் விடும்படி உத்தரவிட்டார். அக்கேசைத் தான் விசாரணை செய்ய இஷ்டப்படவில்லையென்றும் ஆகையால் தூத்துக்குடி சப்கலெக்டரிடம் அனுப்ப உத்தேசித்திருப்பதாயும் சொன்னார். அப்போது இருகட்சி வக்கீல்களும் கேசைத் தூத்துக்குடிக்கு அனுப்புவதைவிட பாளையங்கோட்டை டெப்டி மாஜிஸ்டிரேட் விசாரணை செய்தால் தங்களுக்கு சரியான நியாயம் கிடைக்குமென்றும் அவ்வாறு செய்தால் எல்லோருக்கும் அநுகூலமா யிருக்குமென்றும் கேட்டுக் கொண்டார்கள். ஜில்லா மாஜிஸ்டிரேட் இரு கட்சிக்காரரிடத்திலும் இரு கட்சி வக்கீல்களிடத்திலும் அவ்வாறு எழுதிக் கொடுக்கும்படி செய்து கேசை பாளையங்கோட்டை டெப்டி மாஜிஸ்டிரேட்டாரவர்களை விசாரணை செய்யும்படி உத்தரவிட்டார்.

உடனே சுந்தரராஜு அவர்கள் தனக்கு டெப்டி மாஜிஸ்டிரேட் அதிக அறிமுக முள்ளவராதலால் தான் முன் கூட்டியே அவரிடம் சென்று சகலமும் சொல்லித் தன் கட்சியைப் பலப்படுத்தி கொள்வதெனத் தீர்மானித்துச் சென்றார்; வீராசாமி ரெட்டியாரும் அவ்வாறே நினைத்து அவரும் வேறு வழியாகச் சென்றார். இருவரும் வெவ்வேறு பாதைகளில் வந்தாலும் டெப்டி மாஜிஸ்டிரேட் அவர்கள் வீடு வந்து சேர்ந்தபோது இருவரும் ஒரே காலத்தில் வந்து சேர்ந்தார்கள். தான் முன்னால் போகவேண்டும், தான் முன்னால் போகவேண்டு மென்னும் எண்ணத்துடன் ஒவ்வொருவரும் தனது பேரச்சடித்த சீட்டுகளை வெவ்வேறு சேவகரிடம் கொடுத்து முதலில் கொடுக்கும்படி திட்டப்படுத்தி யனுப்பினார்கள். அவர்கள் இருவர் வெவ்வேறு பாதைகளில் அவசரமாய் வந்ததையும் மாடியிலிருந்து பார்த்த டெப்டி மாஜிஸ்டிரேட் இருவர் பேர் சீட்டுகளும் தம்மிடம் சேரும் வரையில் காத்திருந்து இருவரையும் ஏக காலத்தில் அழைத்து வரும்படி ஆக்ஞாபித்தார். இருவரும் தனித்தனியாய் மாஜிஸ்டிரேட் அவர்களிடம் பேச இச்சைப்பட்டாலும் தன் விரோதியை முன்பு போகவிட்டு விட்டால் அவர் போய் தனக்கனுகூலமாய் விஷயங்களை முன் கூட்டிப் பேசி விடுவாரென்றும் பின் தன்பேரில் முன்கூட்டியே ஒருவித அருவெறுப்பு உண்டாகி விடுமென்றும் நினைத்து இருவரும் ஒன்றாகச் சென்றார்கள். டெப்டி மாஜிஸ்டிரேட்டார் வீராசாமி ரெட்டியாரைப் பார்த்து வாருங்கள் ரெட்டிகாரு என்று சொல்லும்போதே சுந்தர ராஜாயிடம் கைகுலுக்கிவிட்டு, ரெட்டி

பாரிடம் கைகுலுக்கும்போதே சுந்தரராஜுவை உட்காரச் சொன்ன தால் இருவரையும் தாரதம்மியமன்னியில் சமமாய் நடத்தினரென இருவரும் நினைத்துக் கொண்டார்கள். இருவரையும் க்ஷேம லாபம் விசாரித்து விட்டு அவர்கள் வந்த காரியம் இன்னதென முன்கூட்டியே அறிந்திருந்தும் ஒன்றும் தெரியாதவரைப்போல் என்ன காரணமாய் உங்கள் ஊர்களை விட்டுப் பாளையங்கோட்டை வந்தீர்களெனக் கேட்டார். இருவரும் மயங்கவே, அப்போதுதான் ஞாபகம் வந்ததுபோல் "ஆம் ஆம் எனக்கு இப்போதுதான் ஞாபகம் வந்தது தங்கள் ஊரில் ஏதோ கலகமென்று ஜில்லா மாஜிஸ்டிரேட் போலீஸ் சூப்பிரண்டன்ட் முதலியவர்கள் ரிசர்வ் போலீசாருடன் சென்றதாகக் கேள்விப்பட்டேன் கலகம் செய்தவர்கள் யார்? தங்களிருவரில் யாருக்காவது விவரம்தெரிந்திருந்தால் தயவுசெய்து சொல்லுங்கள்" என்றார்.

சுந்தரராஜு:—நாங்களிருவரும் கலகம் செய்ததாக விரோதிகள் கேஸ் ஜோடினை செய்து கொண்டு வந்து விட்டார்கள். தெய்வாதீனமாய் கலகம் நடந்ததாய்ச் சொல்லும் நேரத்தில் நான் திருநெல்வேலி சப்மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் சாட்சியாய் வந்திருந்தேன். ஆதலால்தான் என் பேரில் குற்றமில்லையென என்னை ஜில்லா மாஜிஸ்டிரேட்டார் விட்டு விட்டார்கள்.

டெப்டி மாஜிஸ்டிரேட் :—மெத்த சந்தோஷம்! ரெட்டிகாரு தாங்கள் எவ்வாறு வெளிவந்தீர்கள் ?

வீராசாமி ரெட்டியார்:—தெய்வாதீனமாய் அப்போது நான்குநேரி சப்ரிஜிஸ்ட்டார் ஆபீசில் இருந்ததாக நானும் ருஜுவு செய்ததால் என்பேரிலும் குற்றமில்லையென என்னையும் விட்டு விட்டார்கள்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—மெத்த சந்தோஷம்! உங்கள் பேரில் குற்றங்களில்லையென ஜில்லா மாஜிஸ்டிரேட்டார் தீர்மானித்ததைப் பற்றி அதிக சந்தோஷம்; எப்போது ஊருக்குப் பிரயாணம்?

சுந்தரராஜு.—அவ்வாறு முற்றும் தீர்மானித்து விட்டு விடவில்லை. ஜாமீன்பேரில் விட்டார்கள். மேற்படி கேஸைத் தாங்கள் விசாரணை செய்தால் தான் நியாயத் தீர்ப்பு அகப்படுமென்று சொல்லி நாங்களிருவரும் மனுப்போட்டு தங்கள் கோர்ட்டுக்கு மாற்றிக் கொண்டோம்.

வீராசாமி ரெட்டியார்:—இந்தியாவிலேயே தங்களைப்போல் நியாயத் தீர்ப்பளிப்போர் கிடையாதென்பது எல்லோருடைய அபிப்பிரா

யம். என் அபிப்பிராயமும் அப்படியே ; ஆகையால்தான் நானும் அவ்வாறு வேண்டிக் கொண்டேன்.

டேப்டி மாஜிஸ்டிரேட்:—ஜில்லா மாஜிஸ்டிரேட் மிகவும் கெட்டிக்காரர் அவரிடமே இருந்திருந்தால் மெத்த நலமாயிருக்கும்.

சுந்தரராஜு:—இல்லை சார், நான் இவ்வாறு சொல்வதற்காகத் தாங்கள் வருத்தப்படக்கூடாது. பொதுவாக ஜில்லா மாஜிஸ்டிரேட் வேலையில் கெட்டிக்காரரென்பதை ஒத்துக் கொள்ள வேண்டியிருந்தாலும், ஆட்களின் தராதரம், அந்தஸ்து முதலியவைகளைப்பற்றிக் கவனித்து இப்படிச் செய்திருப்பார்களா இல்லையா என ஆலோசியாது சொல்வார் வார்த்தையைக் கேட்டு சில சமையங்களில் தவறுதலான தீவிர அபிப்பிராயங் கொண்டு விடுகிறார்கள், தங்களைப்போல் குடிகளிடத்திலும் சர்க்காரிடத்திலும் ஒரே மாதிரியான கௌரவம் பெற மற்றவர்களால் முடியாது. தாங்களாகப் பார்த்து எனக்கு சிரசாக்கினை விதித்தாலும் நான் சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறேன்.

வீராசாமி ரெட்டியார்.—என் அபிப்பிராயமும் அப்படியேதான்,

டேப்டி மாஜிஸ்டிரேட்.—நண்பர்களே! நான் தாயாயிருந்தாலும் பிள்ளையாயிருந்தாலும், ஆப்த நண்பராயிருந்தாலும் நியாயந்தவறி நடப்பதில்லையென்பதை நீங்களே ஒத்துக் கொள்வீர்கள். நீங்கள் அடிக்கடி என்னைத் தனியாய் வந்து பார்ப்பீர்களாகில் ஏதோ இரகசியமாக என்னிடம் எதிரி தெரிவித்து விட்டதாக அபிப்பிராயப்பட ஹேதுவாகும். ஆகையால் இனிமேல் இக்கேஸ் முடிவாகும் வரையும் என்னைத் தனியாய்ப் பார்க்க வரக்கூடாதென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நீங்களிருவரும் ஏகோபித்து எத்தனை முறை வந்து என்னைப் பார்த்தாலும் எனக்குச் சந்தோஷமே.

என்றார். அப்பால் பொது விஷயங்களைப்பற்றி சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு இருவரும் விடைபெற்றுச் சென்றார்கள்.

கேஸ் ஆரம்பமாகி மூன்று மாதக் காலம் வெகு தடபுடலாய் விசாரணை நடந்தது. மறுநாள் (குற்றப் பத்திரிகை வாசிப்பதோ அல்லது தள்ளுவதோ) தீர்மானம் தெரிவிக்கப்படுமென டேப்டி மாஜிஸ்டிரேட் சொல்லி விட்டார்.

டேப்டி மாஜிஸ்டிரேட் வழக்கப் பிரகாரம் பாளையங்கோட்டைக்குக் கீழ்புறமிருக்கும் "ஹைலண்ட் கிரௌண்ட்" (High Land Ground) என்னும் மாலை வேளைகளில் உலாவும் இடத்தில் தமது

குதிரை வண்டி பின்பக்கம் மெதுவாக நடந்து வர தான்மட்டும் ஏகாந்தமாய் முன்நடந்து வந்துகொண்டிருந்தார். அவருக்குப் பின்பக்கம் சுமார் 30 கெஜ தூரத்தில் வீராசாமி ரெட்டியாரும், அவருக்குப் பின் சுமார் 10 கெஜ தூரத்தில் சுந்தரராஜுலுவும் நடந்துவந்துகொண்டிருந்தார்கள். தென் மேற்கு மூலை திரும்புமிடத்தில் சிறுபுதரிருப்பதும் எல்லோரும் அறிவர். அப்புதரண்டை டெப்டி மாஜிஸ்டிரேட் வந்ததும் எதிர் பக்கமிருந்து வந்து அந்த இடத்தில் சந்தித்த சுந்தரராஜுலுவின் தகப்பனாராகிய ஸ்ரீனிவாசலுராஜு என்பவர்வந்தனம்கூறி "என் கதி என்ன" என்றுகேட்டார்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—பின்னால் சமீபத்தில்வீராசாமிரெட்டி வருகிறார். நான் சொல்வதைக்கேட்டு துக்கப்படாதீர்கள். மனதை திடப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் கௌரவம் நிக்க வேண்டுமாகில் இன்றிரவே தங்கள் குமாரனை எங்காவது ஓடிவிடச் சொல்லுங்கள். இப்போதே அவரை போலீசார் அவருக்குத் தெரியாமல் காவல் காக்கிறார்கள். உங்கள் புத்திசாலித் தனத்தால் தப்பவைக்கப் பிரயாசைப்படுங்கள்.

என்றதும் அப்போது மூலை திரும்பிய வீராசாமி ரெட்டியார் ஸ்ரீனிவாசலு ராஜு டெப்டி மாஜிஸ்டிரேட்டிடம் பேசுவதைக் கண்டதும் ஓடிவந்தார். அப்போது டெப்டி மாஜிஸ்டிரேட் அவர்காதுக்குக் கேட்கும்படி சாதாரண குரலில் "ஏது! தாங்கள் திடீரென்று பாளையங்கோட்டைக்கு வந்தீர்கள். ஏதாவது விசேஷமுண்டோ" என்றார். ஒன்றுமில்லை; கேஸ் நாளைக்கு முடியுமென்று கேள்விப்பட்டேன். பையனை அழைத்துப் போய் திருச்செந்தூர் முருகக் கடவுளை சேவிக்கும்படி செய்து இன்றிரவு வீட்டில் வைத்திருந்துநாளைக் காலையில் அங்கிருந்து மோட்டாரில் புறப்பட்டால் கோர்ட்டுக்கு 10 மணிக்கு வரலாமென்று நினைத்து அழைத்துப் போகவந்தேன். அவன் இங்கு உலாவ வந்ததாகக் கேள்விப்பட்டேன். பின் பக்கம் போனால் நான் வருவதற்குள் வேறெங்காவதுபோய்விடுவானோவென்னும் பயத்தால் முன்பக்கமாய் வந்தேன். என்றதும் கேஸ் எப்படியிருக்கிறது என்று கேட்டார்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—இனி போய் இன்றிரவு ஆதி முதல் ரிகார்டுகளைப் படித்த பின்னால்தான் சொல்ல முடியும்; இதுவரையில் நானெவ்வித அபிப்பிராயத்திற்கும் வரவில்லை.

என்றார், அதைக்கேட்டபடியே வீராசாமி ரெட்டியார் வந்து சேர்ந்தார். ஸ்ரீனிவாசலுராஜு தனது மகன் பின்னால் வரக்கண்ட

தும் டெப்டி மாஜிஸ்டிரேட்டிடம் விடை பெற்றுக் கொண்டு தமது ஜாகைக்குச் சென்ருர். டெப்டி மாஜிஸ்டிரேட் உடனே தமது வண்டியேறி போலீஸ் சூப்பிரன்டன்டன்ட்டிடம் போய் சுந்தரராஜு திருச்செந்தூருக்குப் போகலாமென்றும் மறுநாள் கோர்ட்டு வந்து சேரும் வரையில் அவரை அதிக ஜாக்கிரதையாய் அவருக்குத் தெரியாமல் காவல் காத்து வரவேண்டியதற்கு வேண்டும் ஏற்பாடுகள் செய்யும்படியும் எச்சரித்து விட்டு தனதில்லம் சென்ருர். சூப்பிரன்டன்டன்ட் அவர்களும், சுந்தரராஜு தப்பிப்போகாதபடி தந்திகளின் மூலமாய் வழியிலிருக்கும் பல போலீஸ் ஸ்டேஷன்களுக்குத் தெரிவித்து தக்க ஏற்பாடுகள் செய்ததோடு இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவ் அவர்களை உடனே திருவீரராஜ பட்டணத்திற்குப் போய் இரவு முழுவதும் அதிக ஜாக்கிரதையாக ஆட்களை வைத்துப் பார்க்கும்படி திட்டம் செய்தனுப்பினர்.

ஸ்ரீனிவாசலு ராஜு தனது குமாரனுகிய சுந்தரராஜுவை அழைத்துக் கொண்டு உடனே மோட்டார் ஏறி பாளையங்கோட்டையிலிருக்கும் தங்கள் ஜாகைக்குப் போய் எடுக்க வேண்டிய சாமான்களை எடுத்துக் கொண்டு திருச்செந்தூருக்குப் புறப்பட்டார். வழியில் இருக்கும் எல்லா ஊர்களிலுமுள்ள போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் அவர்களுக்கு நல்வரவு கூறுவதற்காகக் காத்திருப்பதைப்போல் இருந்து இவர்கள் மோட்டாரைக் கண்டதும் சைகை செய்து மோட்டாரை நிறுத்தி க்ஷேம லாபங்களையும், கேஸ் எவ்வாருயிற்றென்றும் விசாரித்தனுப்பினுர்கள். உண்மையில் சுந்தரராஜு இருக்கிருரா அல்லது வழியில் எங்காவது மறைந்து விட்டாரா என்று பார்ப்பதற்காகவே சூப்பிரன்டன்டன்ட்டின் உத்தரவு பிரகாரம் காத்திருந்தார்களே யல்லது அவர்களை பார்ப்பதற்கல்ல. அவர்கள் தங்கள் கடமைகளைச் செய்வதைப்பற்றி அவர்களை யாவராலும் குறை கூற முடியுமா? கடைசியாக திருச்செந்தூர் வந்து சேர்ந்ததும் அவ்விடத்திலுள்ள சுப்பிரமண்யர் கோயில் என்னும் முருகக்கடவுள் கோயிலுக்குப்போய் அங்கு அவர்களுடைய செலவில் சுமார் இரண்டாயிரம் ரூபாய் வரையில் செலவழித்து செய்திருந்த அபிஷேக, அலங்காரம், தூபதீப நிவேத்தியங்கள் கண்டு களித்த பின், பிரசாதங்களை அங்கு வந்திருந்தவர்களுக்கெல்லாம் பெருவாரியாய்க் கொடுத்து விட்டு ஸ்ரீனிவாசலு ராஜு வீட்டுக்காக வைத்திருந்த பிரசாதங்களை எடுத்து வண்டியில் வைத்ததும் மோட்டார் வண்டி ஒட்டுபவனைப் பார்த்து, வண்டியை சுத்தமாய்த் துடைத்து பெட்ரோல்

ஊற்றி பாளையங்கோட்டைக்குக் காலை 9-மணிக்குப் புறப்படுவதற்குத் தயாராயிருக்கும்படியும் 11 மணிக்குள் பாளையங்கோட்டை கோர்ட்டில் ஆஜராவது அவசியமாதலால் சகல முஸ்தீப்புகளுடன் தயாராயிருக்கும்படியும் மற்றுமொருமுறை எச்சரித்து விட்டு மாட்டு வண்டி ஏறிச் சென்றார்கள்.

அப்போது இரவு சுமார் 10 மணி நேரமாயிருந்தும், அவர்கள் வண்டிக்கு முன்னும் பின்னும் உடுப்புப் போடாத போலீசார் அவர்களுக்குத் தெரியாமல் கூடவே போனதை ஸ்ரீனிவாசலு ராஜு பார்த்தும் கவனியாதவர் போல் தன் குமாரனிடம் சந்தோஷமாய்ச் சாதாரண விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டே போனார். வீடு போய்ச் சேர்ந்ததும் எல்லாக் கதவுகளையும் சாத்திய பின் தானும் தன் குமாரனுமாகச் சாப்பிட்டானதும் யாரும் வராத தன் அந்தரங்க அறைக்கு சுந்தரராஜுவை அழைத்துக் கொண்டு போனார். போலீஸ் இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவோ 12 போலீஸ் கான்ஸ்டேபிள்களையும் 4 ஹெட்கான்ஸ்டேபிள்களையும் அழைத்துக் கொண்டு போய் அரண்மனையைச் சுற்றிலும் ஒவ்வொரு பக்கத்திலும் 3 போலீஸ் கானிஸ்டேபிள்களையும் ஒரு ஹெட்கனிஸ்டேபிளையும் ஆக 4 பேர் வீதம், நான்கு பக்கங்களிலும் இருக்கச் சொல்லியும் யாராவது வெளியே வந்தால் உடனே கவனிக்கும்படியும், சுந்தரராஜுவாவது சந்தேகப்படக்கூடிய எந்த நபராவது வெளியே எவ்வழியாக வந்தாலும் பிகில் ஊதும்படியும் கண்டிப்பாய்த் திட்டப்படுத்திவிட்டு அவர் நான்கு பக்கங்களிலும சுற்றி வந்து இரவு முழுவதும் எச்சரித்துக் கொண்டே அதிக ஜாக்கிரதையாகக் காவலிருந்தார். அப்போது ஆமோகமான புயல் காற்றும் மழையும் அடிக்க ஆரம்பித்தது. அப்படியிருந்தும் போலீசாரெல்லாரும் காற்று மழையென்று கவனியாமல் கடினமான காவல் புரிந்தார்கள். காலை ஐந்து மணிக்கே வழக்கம்போல் வீட்டுக்கதவுகள் திறந்து சாணி தெளிக்கவும் வீடு பெருக்கவும் இதர வேலைகள் செய்யவுமாயிருந்தார்கள். ஆனால் வீட்டிலிருந்து எவரும் வெளியே போகவில்லை. இன்ஸ்பெக்டர் மழையில் நனைந்த தனது உடைகளை மாற்றிக் கொண்டு பிரயாணத்திற்குச் சித்தமாயிருந்தார். காலை 7 மணிக்காவது புறப்பட்டால் தான் 9 மணிக்கு திருச்செந்தூருக்குப் 11 மணிக்குள் கோர்ட்டுப் போகலாம். வண்டி தெருவில் வரவுமில்லை.

சுந்தரராஜு போகவுமில்லை. சற்று நேரம் பொருத்து புறப்படுவா ரென நினைத்து இன்ஸ்பெக்டர் ஒவ்வொரு நிமிஷமும் கடிகாரத்தை எடுத்துப் பார்த்தபடி இருந்தார். மணி 9 ஆயிற்று. புறப்படும் ஏற் பாடே காணோம். இன்ஸ்பெக்டர், ஸ்ரீனிவாசலுராஜு அவர்களி டம் போய் "நேரமாய் விட்டதே! சுந்தரராஜு புறப்பட வில்லையே" எனக்கேட்டார். தான் இரவு அதிக நேரம் விழித்திருந்ததால் காலை யில் எழுந்திருக்கச் சாத்தியப்படாதென்று நினைத்து இரவே தன் குமாரனிடம் வழியனுப்பிக் கொண்டதாகவும் அதற்குள் தன் குமா ரன் போயிருப்பாரென்றும் தனக்கு திட்டமாய் ஒன்றும் தெரியா தென்றும் விசாரிப்பதாயும் சொல்லிக் காரியஸ்தர் காந்திமதியா பிள்ளையை அழைத்துக் கேட்டார். தனக்கும் ஒன்றும் தெரியா தென்றும் காலையிலேயே போயிருப்பாரென்றே தாமும் நினைப்ப தாகவும் அவரும் சொன்னார். யாரைக் கேட்ட போதிலும் அதே ஜவாபு சொன்னதால் உடனே மாஜிஸ்டிரேட்டுக்குத் தந்தி கொடு த்து வாரண்டு பெற்று தகுந்த பந்தோபஸ்துடன் வீடு முழுவதும் சந்தேகப்படக்கூடிய ஒரு சிறு இடம் கூட விடாமல் தேடினார்கள். சுந்தரராஜுவைக் காணோம்.

அவ்வளவு பந்தோபஸ்தாய் போலீஸ் இன்ஸ்பெக்டர் முதலி யோர் வீட்டைச் சுற்றிக் கடின காவல் புரிந்து கொண்டிருந்தபோது சுந்தரராஜு எவ்வாறு மாயமாய்ப் போனாரென்று அறிய நமது வாச கர்கள் ஆவலாயிருப்பார்களாதலால் அதைப்பற்றி எழுதுவோம். முந்தின இரவு சாப்பிட்டானதும் ஸ்ரீனிவாசலு ராஜு யாரும் வராத தன் அறைக்குச் சுந்தரராஜுவை அழைத்துப் போனதாகச் சொன்னோமல்லவா? அவர்களிருவரும் தங்கள் ஆசனங்களில் அமர் ந்ததும்,

ஸ்ரீனிவாசலு ராஜு:—சுந்தரா! உன்னை ஏன் இங்கு அழை த்து வந்தேனென்று உனக்குத் தெரியுமா?

சுந்தர ராஜு:—சுப்பிரமண்ய ஸ்வாமியைத் தரிசிப்பதற்காக வரும்படி கூப்பிட்டீர்கள். எனக்கு வேறொன்றும் தெரியாது.

ஸ்ரீனிவாசலு ராஜு:—அதை சாக்குப போக்காகச் சொல்லி நான் உன்னை அழைத்து வந்தேனே தவிர உண்மையில் உன்னிடம் தனித்துப் பேசி உன்னை தப்புவிப்பதற்காகத்தான் அழைத்து வந் தேன். கேஸ் எவ்வாறிருக்கிறது? இப்பொழுதே நீ போலீசார் காவ லிலிருக்கிறாயென்று உனக்குத் திட்டமாய்த் தெரியுமா?

சுந்தர ராஜு:—எனக்குத் தெரியாதே! நமது வக்கீல் தனது சாமர்த்தியத்தால் எனது பேரில் ஏற்பட்ட கேசைப் பொய்யென்றும் போலீசார் என்னை அன்று கலகம் நடந்த இடத்தில் பார்த்ததாகக் கொண்டு வந்த சாக்ஷிகளை யெல்லாம் பொய் சாட்சியங்களென்று தோன்றும்படி தகர்த்தெரிந்து விட்டதாகவும் ஆகையால் பயப்பட வேண்டிய பிரமேயமே யில்லையென்றும் அவ்வளவு திட்டமாய்ச் சொன்னாரே! மேலும்,

ஸ்ரீநிவாசலு ராஜு:—அவர் பேச்சை நம்பாதே. உன்னிடம் இன்னும் அதிக ரூபாய்கள் பெறுவதற்காக அவ்வாறு சொல்லியிருப்பார். அதோ அத்திரையின் மறைவில் நின்று கவனமாய்ப் பார். எத்தனை போலீசார் இருக்கிறார்கள்? அப்படியே நான்கு பக்கங்களிலும் பார்; இன்று சாயங்காலம் பாளையங்கோட்டையிலிருந்த இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவ் இங்கு ஏன் வந்தான்? அதிலும் 16 போலீசாரைச் சுற்றிலும் வைத்துவிட்டு இன்னும் நமது வீட்டைச் சுற்றிச் சுற்றி வருவானேன்?

சுந்தர ராஜு:—டெப்டி மாஜிஸ்டிரேட் நமக்கு நன்றாய்த் தெரிந்தவராயிற்றே! அவர் நமக்குப் பிரதிகூலமான காரியம் செய்வாரென்று நான் நம்பவில்லை. இந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் வீண் தடபுடல் செய்கிறான் போலிருக்கிறது.

ஸ்ரீநிவாசலு ராஜு:—டெப்டி மாஜிஸ்டிரேட் மிகவும் நல்லவரென்றும், எவ்விதமான லஞ்சமும் பெறாதவரென்றும், பெண்களின் மூலமாய் ஏமாறப்பட்டவரல்லவென்றும், இந்த ஜில்லா வாசிகள் எல்லோருடைய உண்மையான நண்பரென்றும், எல்லோரும் அறிவார்கள். அத்துடன் தனது மனசாக்ஷிக்கு விரோதமாய் எக்காரணம் பற்றியும் நியாயந் தவறி நடக்க மாட்டாரென்பதைமட்டும் எவரும் கவனிப்பதில்லை. மற்ற மாஜிஸ்டிரேட்டுகளை ஏமாற்றுவதைப்போல் வக்கீல்கள் அவரை ஏமாற்ற முடியாதென்பதையும் நானறிவேன். அவர் யாரைக்கூப்பிட்டு உண்மையில் நடந்ததென்னவென்று கேட்டாலும் தொண்டமான் முதல் தோட்டி வரையிலும் அவரிடம் உண்மையைச் சொல்லி விடுவார்கள். ஆனால் அவர் அதைக்கொண்டு தண்டிப்பதில்லை. சாக்ஷி வாக்கு மூலத்தைக் கொண்டு எவ்வாறு ருஜுவாகிறதோ அவ்வாறு செய்யத் தவறமாட்டார். மஹாராஜருக்கு ஒரு நியாயமும் ஏழைகளுக்கு ஒரு நியாயமும் அவரிடம் கிடையாது. மேலும் உன் விஷயத்தைப்பற்றி அன்று அவரிடம் கேட்டேன். பின்

ஞல் வீராசாமி ரெட்டி வருவதைக் கண்டு "உங்கள கௌரவம் தக்க வேண்டுமானுல் தங்கள் குமாரனை தங்கள் சாமார்த்தியத்தால் இன்றிரவே எங்காவது அனுப்புங்கள். இப்போதே அவர் போலீசார் பந்தோபஸ்திலிருக்கிருர்" என்று சுருக்கமாய்ச்சொல்லிவிட்டுவீராசாமி ரெட்டியார் கேட்கும்படி, தான் அதன்மேல்போய் கேசை ஆதிமுதல் அந்தம் வரையில் வாசித்தபின் தான் தெரியுமென்று சொன்ஞர். ஆகையால் இனி அவ்விஷயத்தில் உனக்குச் சந்தேகம் வேண்டாம்; நீ எவருக்கும் தெரியாமல் மறைந்து போவதுதான் சிலாக்கியம்; அதற்கு ஏதாவது யுக்தி உன்ஞல் சொல்லக்கூடுமோ?

சுந்தரராஜு:—எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. இவ்வளவு அதிகாரத்துடன் இதுவரையில் இருந்த நான் காராக்கிரஹப்பிரவேசம் புகுவதென்ருல் (ஜெயிலுக்குப் போவதென்ருல்) அதை நினைப்பதற்கே எனக்குப் பயங்கரமாயிருக்கிறது. அத்துர்ப்பாக்கிய நிலை எனக்கு வர நேரிடுமாயின் மூன்று தினங்களில் பைத்தியம் பிடித்துவிடும். அதைவிட பிராணத்யாகம் இப்போது செய்துகொள்வதே சிலாக்கியமென நினைக்கிறேன். இவ்வளவுக்கும் காரணகர்தா அந்த பாழாய்ப்போன பாப்பான் சீதாராம சாஸ்திரிதான். அவன்தான் இல்லாத பொல்லாத பொய் புளுகுகளை ஜோடினை செய்து சாக்ஷிகளைக் கூடத் தயாரித்து அனுப்பியதாகக் கேள்வி.

ஸ்ரீனிவாசலு ராஜு:—சுந்தரம்! ஏன் அபாண்டமாய் அந்த அந்தணரை நிந்திக்கிருய்? உன்னுடைய கொடுமையினுல் அவர் இவ்வூரையும், அவர் நிலங்களையும் துறந்தாரே எங்குசென்ருரென்றுகூட எவருக்கும் தெரியாது. அந்த பாவந்தான் உன்னை இக்கெதிக்குள்ளாக்கிற்று. நடந்து போன விஷயங்களைப்பற்றியும், சென்றுபோன காலத்தைப் பற்றியும், சோம்பேறித்தனமாய் வாழ் நாட்களை வீண் நாட்களாக்கினதைப் பற்றியும், இனி யோசனைசெய்வதில் எவ்வித உபகாரமும் கிடையாது. போனது போகட்டும். இனிமேல் நடக்க வேண்டி விஷயத்தைப்பற்றி யோசிப்போம்,

சுந்தரராஜு:—எனக்கு எவ்வித யோசனையும் தோன்றவில்லை. நமது வீட்டைச் சுற்றிக் கொண்டிருக்கும் போலீசாருக்குத் தெரியாமல் தப்பிப் போவதும் முடியாத காரியம்; நாளைக்குக் கோர்ட்டுக்குப் போனுல் தண்டனை யடைவதும் நிச்சயம். ஆகையால் பொழுது விடிவதற்குள் பிராணத்யாகம் செய்து கொள்வதே சிலாக்யம்.

ஸ்ரீனிவாசலு ராஜு:—சுந்தரம்! நீ இவ்வாறு பேசுவதைப் பார்க்க என்மனம் அதிக கிலேசத்தை அடைகிறது. நாம் என்ன வம்சத்திற் பிறந்தோமென்பதை சற்றும் யோசியாமல் நமது குலத்திற்கே அகெளரவம் கொண்டு வருவதற்காகவா இவ்வாறுபேசுகிறாய்? க்ஷத்திரிய குலத்திற் பிறந்தவன் தற்கொலை புரிவதாவது? தன்னால் கூடிய வரையில் பிரயத்தனம் செய்து பார்க்க வேண்டும். அப்படிச் செய்வது சாத்தியமாகாவிட்டால் சண்டையில் எதிரிகளால் வீழ்த்தப்பட வேண்டும். அதை விட்டு நீ இவ்வாறு பேசுவதைப் பார்த்தால் உண்மையில் நீ எனக்குப் பிறந்தவனோ என்பதே எனக்கிப்போது சந்தேகமாயிருக்கிறது.

என்றார். அவர் அவ்வாறு சொல்லி வாய் மூடுமுன் சுந்தரராஜு சட்டென எழுந்து வேஷ்டியை இருக்கிக்கட்டிக் கொண்டு கத்தியை எடுக்கப்போனார். அப்போது ஸ்ரீனிவாசலு ராஜு அவரைத் தடுத்து கத்தியை வாங்கி இருந்த இடத்தில் வைத்து விட்டு அவரை ஆசனத்திலமர்த்தி பின்வருமாறு சொன்னார்.

ஸ்ரீனிவாசலு ராஜு:—சுந்தரம்! என்ன பைத்தியக்காரனாயிருக்கிறாய்? வேறு எவ்விதத்திலும் சாத்தியமாகாவிட்டால் கடைசியாய்ச் செய்ய வேண்டுமென்று சொன்னதை முதலில் செய்ய ஆரம்பித்து விட்டாயே!

சுந்தர ராஜு:—தெருவில் போலீசார் காவலிருக்கிறார்கள். ஆகையால் தப்புவதற்கு மார்க்கமொன்று மில்லை. எனது விரோதியான இன்ஸ்பெக்டரைக் கொன்று விட்டு தப்புவதற்கு வழி தேட வேண்டும் இல்லாவிட்டால் அம்முயற்சியில் சாகவேண்டும். அதற்காகத் தான் புறப்பட்டேன்.

ஸ்ரீனிவாசலு ராஜு.—அவசரப்படாதே! கிழவன் பேச்சைச் சற்றுக்கேள். நமது மூதாதைகள் இந்த ஊரை ஆண்ட காலத்தில் வசித்து வந்த அரண்மனையின் ஐம்பதில் ஒரு பாகத்தில் தான் நாம் இப்போது வசிக்கிறோமென்பதை நீ அறிவாய். நமது மூதாதைகளின் விரோதிகளால் மற்றப் பாகங்கள் தாக்கப்பட்டு இடிந்து குட்டிச் சுவராய்ப் போனவைகளை யெல்லாம் இடித்து விட்டு இப்போது பல தெருக்களாக்கி யிருக்கிறார்களென்றும் உனக்குத் தெரியும். ஆனால் உனக்குத் தெரியாத விஷயம் ஒன்று இருக்கிறது. நமது வம்சபாரம்பரையின் வழக்கப் பிரகாரம் அவசியம் நேரிட்டாலன்றி என் அந்திய காலத்திற்கு முன் சொல்லக் கூடாதென்று என்னிடம் வாக்குறுதி

பெற்றுக் கொண்ட என் தகப்பனாரவர்கள் ஆக்ஞையின் பிரகாரம் இதுவரையில் உனக்குச் சொல்ல வில்லை இப்போது அவசியம் நேரிட்டிருப்பதால் சொல்லுகிறேன்; கவனமாய்க் கேள். முற்காலத்தில் நமது மூதாதைகள் சண்டைகளுக்குப் போகும்போது எதிரிகளின் கத்திகள் தங்களை வெட்டாமல் இரும்பு அங்கி அணிந்து போவது வழக்கம். அப்பேர்ப்பட்ட அங்கிகள் ஐந்து பூமியிலிருந்து எடுக்க முடியாதபடி கனத்த பலகைகளில் முடுக்கப்பட்டு அதோ இருக்கின்றன பார். அவைகள் ஐந்தில் மத்தியிலிருக்கும் பெரிய எஃகு அங்கியைப் பார். அது எல்லா அம்சங்களிலும் மற்றவைகளைப் போலிருந்தாலும் அந்த அங்கியின் மார்பில் பலத்த இரும்புத் தகடு முடுக்கப்பட்டிருக்கிறது. அதை முடுக்கியிருக்கும் ஐந்து ஆணிகளில் மத்தி ஆணியைத் திருகி எடுத்தால் அதில் சிறு துவாரம் தென்படும். அத்துவாரத்தில் இதோயிருக்கும் தகடுபோன்ற இச்சிறு சாவியைப் போட்டுத் திறந்தால் பெரிய சாவி போடும் துவாரம் புலப்படும். அதில் இப்பெரிய சாவியைப் போட்டுத் திறந்தால் அந்த எஃகு அங்கியானது மூன்றடி தூரம் தானகவே பின்னல் போய்விடும். அப்போது அங்கு மூன்றடி சதுரமான அந்தரங்க வழி தோன்றும். அந்த வழியின் மூலம் சென்றால் எவர்களுக்கும் தெரியாமல் தலைமுறை தத்துவமாய் நமது குடும்பத்திற்கு ஊழியஞ் செய்து வரும் மீன்கந்தன் குடும்பத்தைச் சேர்ந்த சின்னகந்தன் வீட்டின் சமீபம் கொண்டு போய்விடும். அங்கு சென்றதும் இச்சாவியால் திறந்தால் அங்கு வைக்கப்பட்டிருக்கும் இதைப்போன்ற எஃகு அங்கி விலகி அவன் வீட்டிற்குள் போவாய், அவனை இன்றிரவு படகுடன் தயாராய் இருக்கும்படி திட்டப்படுத்தி யிருக்கிறேன். அவனும் உன் வரவை எதிர்பார்த்துக் காத்திருப்பான். உனக்கு வேண்டிய உடுப்புகள் சாமான்கள் முதலியன முன் கூட்டியே அவனிடம் ஒப்புவித்திருக்கிறேன். அவன் எப்படி நடக்கச் சொல்லுகிறானே அப்படி நட. அவன் வார்த்தைக்குக் குறுக்காகப் பேசாதே. உன்னைச் சிங்கள தேசத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பான். அங்கு போனதும் நடந்து கொள்ள வேண்டிய விஷயங்களைப் பற்றி அவன் உனக்கு விவரமாய்ச் சொல்லுவான். எக்காரணம் பற்றியும் எனக்காவது உன் இஷ்டர்களுக்காவது வேறு எவருக்காவது கடிதங்கள் எழுதாதே. எழுதினால் ஆபத்தாய் முடியும். உன் ஆயுட் காலம் வரை சௌக்கியமாயும் கௌரவமாயும் ஜீவிப்பதற்கு எவ்வளவு பொருள்

உனக்குத் தேவையோ அவ்வளவும் கந்தன் உன்னிடம் ஒப்புவிப்பான். எப்போதாவது நீ ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டால் நீலக் கல் பதித்த இந்த மோதிரத்தை என்னிடம் அனுப்புவாயாகில் நான் என்னால் கூடியவரையில் உதவி செய்யப் பிரயாசைப்படுகிறேன். அனுவசியமாய் வெளியில் போகாதே. ஒளித்திருப்பவர்களைப் போலும் இராதே. பொழுது இருட்டும் நேரத்தில் உனக்கு ஏற்படுத்தி யிருக்கும் மாறு வேடத்துடன் வெளியிற்சென்று வீட்டுக்குத் திரும்பிவிடு. எல்லாவற்றிற்கும் மேல் உனக்குத் தெரிந்தவர்கள் யாராவது அங்கு எப்போதாவது வருவார்களாயின் உன்னை மறந்துபோய் அவர்களைக் கூப்பிடாமலும் அவர்களிடம் பேசாமலும் அதிக ஜாக்ரதையாயிரு. உனக்காக அங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் வியாபார ஸ்தலத்தில் உன் அறையிலிருந்தபடியே வியாபாரத்தை நடத்து. கந்தன் கொடுக்கும் காகிதத்தில் கண்டபடி நடந்துகொள்; இனி தாமதிக்காதே; நேரமாகிறது.

என்றார். சுந்தரராஜு அதிக வருத்தத்துடன் தன் தகப்பனார் சம்சாரம், தம்பி, முதலியவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு தன் பிரிய புத்திரியாகிய ஜெயலக்ஷிமியை வாரியெடுத்து முத்தமிட்டதும் கண்களில் நீர் சொரிய தன் தகப்பனார் கையில் அவளை ஒப்புவித்து விட்டுப் புறப்பட்டுச் சென்றார். முன் திட்டம் செய்திருந்த பிரகாரம் அங்கு வைத்தே மாறுவேடம் பூணச்செய்து சமுத்திரக்கரை ஓரமாய்த் தயாராய் சாமான்களுடன் நிறுத்தப்பட்டிருந்த சிறுபடகில் அவரை ஏற்றிப் பாய்விரித்து சமுத்திரத்தில் படகை ஓட்டினான். படகு சென்ற அரைமணி நேரத்தில் அமோகமான புயல் காற்றும் மழையும் வந்துவிட்டது. அந்த புயல் காற்றில் பெரிய பெரிய ஸ்டீமர்களே தப்பிக் கரைசேருவது கஷ்டமென்றும் அப்படியிருக்க சிறு படகு எவ்வாறு தப்பக் கூடுமென்றும் அனேகமாய்ப் படகு கவிழ்ந்து தனது குமாரன் எங்கு மரித்து விடுகிறானோ வென்றும் ஸ்ரீனிவாசலு ராஜு அதிக வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார். ஆயினும் அப்பேர்ப்பட்ட புயல்காற்றுக் காலங்களில் ஸ்டீமர் உடைந்தால் சமுத்திரத் தண்ணீரில் தத்தளிக்கும் ஜனங்களைக் காப்பாற்றிக் கந்தன் படகு கொண்டுபோய் கரை சேர்த்திருப்பதால் இப்போதும் அவனது சாமர்த்தியத்தால் அவ்வாறு செய்யக் கூடுமென நினைத்து மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டார்.

தங்களுக்குப் பெருத்த கஷ்டங்கள் ஏற்படும் காலங்களில் கூட ஏதாவ தொருவிதமான மூடச் சமாதானம் செய்து கொள்வது மாந்தரின் கொள்கையாதலால் ஸ்ரீநிவாசலு ராஜு அவ்வாறு தன் மனதைச் சமாதானம் செய்துகொண்டது ஆச்சரியப்படக்கூடிய காரியமல்ல.

நிற்க, இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவ் சுந்தராராஜுவை வீடு முழுவதும் தேடியும் அகப்படவில்லையென்று டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்களுக்கும், டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டுக்கும், ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கும், தந்தி கொடுத்தார். போலீஸ் சூப்பிரன்டென்டன்ட்டும், டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டும் தாங்கள் உடனே வருவதாயும் அது வரையில் சுந்தர ராஜாவின் வீட்டை ஜாக்ரதையாகக் காவல் புரியும்படி பதில் தந்தி கொடுத்துவிட்டுத் திருவீராஜ பட்டணத்தைச் சுற்றிலுமுள்ள எல்லா ஊர்களிருக்கும் போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் சுந்தராராஜு எந்தப்பக்கம் வந்தாலும் உடனே நிறுத்திக்கொண்டு தங்களுக்குத் தெரிவிக்கும்படிக்கும் தாங்கள் நேரில் வரும் வரையில் அவரை எங்கும் போகவிடக் கூடாதென்றும் அவரைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு 1000 ரூபாய் இனாமளிப்பதாகவும் தந்திகள் கொடுத்தார்கள். ஒவ்வொரு ஸ்டேஷனிலிருக்கும் போலீசாரும் தாங்கள் கண்டுபிடித்தால் தங்களுக்கு கௌரவம் ஏற்படுவதோடு ஆயிரம் ரூபாய் இனாமும் அகப்படுமே யென்று அதிக ஆவலாய்த் தேட ஆரம்பித்தார்கள். டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டும் போலீஸ் சூப்பிரன்டென்டன்ட்டும் திருவீராஜ பட்டணம் சேர்ந்ததும் அவர்களால் கூடியவரையில் சோதனை போட்டும் விசாரித்தும் பார்த்ததில் எல்லோரும் அவர் படுக்கப்போனபோது பார்த்ததாகவும் பின்னால் எவரும் பார்க்கவில்லை யென்றும் எப்போது எப்படி எங்கு சென்றாரென்று எவர்க்கும் தெரியாதென்றே சொன்னார்கள். அங்குள்ள வேலைக்காரரைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போய் அவர்களால் கூடியவரையில் அதட்டிக் கேட்டும் அவர்களெல்லோருக்கும் ஏதும் தெரியாதாதலால் தாங்கள் உண்மையையே பேசினார்கள். இனி அங்கு தேடுவதால் உபகாரமில்லை யென்றும் இரவு புயல்காற்றும் மழையும் அடித்தபோது எப்படியோ அங்கு காவலிருந்த போலீஸ்காரருக்குத் தெரியாமல்தான் போயிருக்க வேண்டுமென்றும் அவர்கள் பேரில குறை கூறினார்கள். அவர்கள் தாங்கள் காற்று மழையிலும் கண் இமை கொட்டாமல் காவல் புரிந்ததாயும் சுந்தர

ராஜு வெளியே வரவேயில்லை யென்றும் ஒரே சாதனையாய்ச் சாதித்தார்கள். போலீசார் வார்த்தையை நம்பப்பட்டவர்கள் யார்? போலீசாரில் யாரோ உடந்தையாயிருந்து பெருந்தொகை லஞ்சம் வாங்கிக்கொண்டு அவரைப் போகவிட்டிருக்க வேண்டுமென்று புகார் வந்தது. போலீசாரின் விரோதிகள் தங்கள் தங்களுக்கு யார் யார் பேரில் துவேஷம் இருந்ததோ அவர்களை சுந்தரராஜு காணமற் போனதற்கு காரணகர்த்தாக்களாயிருக்க வேண்டுமென்று பிரஸ்தாபித்தார்கள். இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவ் லக்ஷம் ரூபாய் லஞ்சம் வாங்கிக்கொண்டு விட்டு விட்டதாகப் பல பேர்போடாத கடிதங்கள் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டன. எக்காரியத்திலும் பல துறைகளில் சந்தேகம் ஏற்படுவது சகஜந்தானே. இன்ஸ்பெக்டர் அவ்வாறு செய்ய மாட்டாரென்று சிலரும், தகுந்த தொகை கொடுத்தால் எவரையும் வசப்படுத்தலா மென்று வேறு சிலரும், தங்கள் தங்கள் மனப்போக்கின்படி பேசிக் கொண்டார்கள். வாசகர்களே! உலகம் எவ்வாறிருக்கிறது பார்த்தீர்களா?

டெப்டி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் கேஸ் கூப்பிடப்பட்டபோது சுந்தரராஜுவைக் காணோமென்று தெரிய வந்தது. உடனே அவர் பேரில் வாரண்ட்டு பிறப்பிக்கப்பட்டது. எங்கு தேடியும் வாரண்டுக்கும் அவர் அகப்பட வில்லை யென்றும் சேதி தெரிந்ததும், இன்ன தேதிக்குள் அவர் ஆஜராகாவிட்டால் அவர் சொத்துக்களை கவர்ண்மென்ட்டார் ஜப்தி செய்து கொள்வார்களென்றும், அதற்குள் ஆஜராக வேண்டுமென்றும் பகிரங்கமான விளம்பரங்கள் எங்கும் வெளிப்படுத்தப்பட்டன. அத்தேதியிலும் அவர் ஆஜராகாததால் அவர் சொத்துக்களைப் ஜப்தி செய்வதற்காக சர்க்கார் அதிகாரிகள் திருவிராஜ பட்டணம் சென்றார்கள். அங்கு சென்று சொத்துக்களைப் ஜப்தி செய்யப் போனபோது பாளையங்கோட்டை பிரபல வக்கீலான சுந்தர வரதாச்சாரி ஸ்ரீனிவாசலு ராஜு அவர்களுக்காக ஆஜராகி அத்தேதிக்கு ஆறு மாதங்களுக்கு முன்னும், டெப்டி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் கேஸ் ஆரம்பமான உடனேயும், ஜப்தி உத்தரவிற்கு மூன்று மாதங்களுக்கு முன்னும் ரிஜிஸ்டரான பல பத்திரங்களை ஆஜர் செய்தார். அப்பத்திரங்களைப் பார்வையிட்டதில் முதல் பத்திரத்தில் அஜ்ஜில்லாவில் பிரபல சொத்துக்காரரான ஐந்து கனவான்களிருந்து பஞ்சாயத்து செய்து

ஸ்ரீனிவாசலுராஜு குடும்பச் சொத்துக்களை இன்னின்னார் இன்னின்ன சொத்துக்களை அடைவதென்று பாகம் பிரித்துக் கொடுத்ததாக எழுதி ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தது. சர்க்காரார் அப்பாகப் பிரிவினைப் பத்திரத்தைப்பற்றி ஆட்சேபனை செய்வதற்கில்லை. இரண்டாவது பத்திரத்தைப் பார்த்தபோது சுந்தரராஜு வீண் விவாதங்களில் தலையிட்டு பிதிரார்ஜ்ஜித சொத்துக்களை வீண் விரையப்படுத்துவதாக ஸ்ரீனிவாசலு ராஜு அபிப்பிராயப்பட்டு மேற்சொன்ன சுந்தரராஜுக்கும் அவர் பதின்மூன்று வயது மைனர் குமாரத்தி ஜெயலக்ஷிமிக்கும் அவள் தாயாரைக் கார்டியனாக்கி அவர்களிருவருக்கும் பாகம் செய்து வைத்ததோடு மைனர் தாயாரின் சம்ரக்ஷணைக்காகவும் சில சொத்துக்களைப் பிரித்துவிட்டு அச்சொத்துக்களை விற்கவாவது விலை சாட்டவாவது வேறு வில்லங்கங்களுக்குட் படுத்தவாவது சுந்தரராஜுவுக்கு அதிகாரம் கிடையாதென்ற விவரம் வெளியாயிற்று. மூன்றுவது பத்திரத்தைப் பார்த்தபோது அப்போது நடந்து கொண்டிருந்த கேசுக்காகவும் வேறு இதர செலவுகளுக்காகவும் தன் பாகத்திற்கு வந்த சகல சொத்துக்களையும் சுந்தரராஜு சென்னை வக்கீல் ஸ்ரீனிவாச ஐங்காருக்கு ரூபாய் ஐந்து லட்சத்துக்கு விற்று மதருஸ் பாங்கியின் பேரில் செக் பெற்றுக் கொண்டதாக எழுதப்பட்டிருந்தது. அப்போது சுந்தரராஜு பேருக்கு ஒரு செப்பாலடித்த காசு பெறுமான சொத்தாவது இல்லையென்றும் ஆகையால் சர்க்காரார் பறிமுதல் செய்யக்கூடிய சொத்து ஒன்றும் கிடையாதென்றும் தெள்ளெனத் தெரிந்தது. ஆகவே ஸ்ரீனிவாச ஐயங்காரின் உதவியால் இவ்வாறு சர்க்காரை ஏமாறச் செய்து விட்டாரென்று ஏற்பட்டது. புத்திசாலிகளான வக்கீல்கள் காலால் போடும் முடியை ஹைகோர்ட்டு ஜட்ஜிகளால்கூட அவிழ்த்தெறிய சாத்யப்படாது போலும்!

மூன்றாவது அத்தியாயம்

(o)

தாசி செல்லம்

பெண்களின் மோகவலைதனிற் சிக்கினோற்
தீங்கிலாழ்ந்து திகைத்திடுவார் தாமே.

சுந்தரராஜு அவர்கள் காணாமற்போனது முதல் அவருடைய அபிமான பத்தினியாகிய தாசி செல்லம் சில தினங்கள் வரையில் அவர் பிரிவாற்றாமையைச் சகியாதவள் போல் அபிநயித்து வந்தாள். அப்படியிருக்கும்போது அதுவரையில் பரஸ்திரீகளைத் தன் தாயாராகப் பாவித்து வருபவரென எல்லோராலும் மதித்துக் கொண்டாடப்பட்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவ் அடிக்கடி அவ்வீதியின் வழியாய்ப் போவதும் வருவதும் அச்சமயங்களில் வாசலில் இருக்கும் செல்லத்தைக் கடைக்கண்ணால் பார்ப்பதும் அவள் புன்சிரிப்புடன் அவரைப் பார்ப்பதுமாயிருந்தார்கள். இவ்வாறு ஒரு மாதம் வரையும் நடந்தது. கடைசியாக ஓர் இரவு காமாக்ஷிராவ் செல்லத்தின் வீட்டு வாசல் பக்கம் வந்ததும் நேராகப் போய் விடாமல் சில விணாடிகள் அசையாது நின்றார். அப்போது அங்கு நின்று கொண்டிருந்த செல்லம் "ஏன் உள்ளே வாருங்களேன். என்னைப் பார்த்தால் தங்களுக்குப் பயமாகவாயிருக்கிறது? நான் என்ன புலியா கரடியா" என்றாள். காமாக்ஷிராவ் உள்ளே சென்றார். செல்லம் அவரை மிகுந்த உபசாரத்துடன் மாடிக்கு அழைத்துச் சென்றாள். தாய்க்கிழவி தெருக் கதவைத் தாளிட்டு விட்டுப் போய்ப் படுத்துக் கொண்டாள். விஸ்தரிப்பானேன்? அது முதல் இருவரும் மதனும் ரதியும் போலிருந்து வந்தார்கள். அப்படியிருந்துவரும் நாட்களில் ஓர் நாள் இரவு இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவ் செல்லத்தைப் பார்த்து எப்படியிருந்தாலும் உனக்கு சுந்தரராஜுவின் பேரில்தான் இன்னும் அபிமானமிருக்கிறது போல் தோன்றுகிறது என்றார். அவள் "தாசிகள் பொதுவாக எல்லார் பேரிலும் அபிமானமிருப்பதாக நடித்தாலும் அந்தரங்கத்தில் எவராவது ஒருவர் பேரில்தான் அத்யந்த பிரியமிருப்பது வழக்கமென்றும் அப்பேர்ப்பட்ட பிரியம் காமாக்ஷிராவின் பேரில்தான் உண்மையில் இருப்பதாகவும் பல சத்தியங்கள் செய்தாள். அவள் சொல்வது உண்மையா

கில் தான் சொல்லுகிறபடி நடக்கப் பின்வாங்க மாட்டாளென்றும் அவள் நடந்து கொள்ளும் மாதிரியிலிருந்து தான் அவள் சொன்னது உண்மையா அல்லவா என அறியவேண்டுமெனவும் சொன்னார். அவர் தன் பிராணனைக் கேட்டபோதிலும் கொடுக்கத் தயாராயிருப்பதாகச் சொன்னாள். ஆனால் எப்படியாவது சுந்தரராஜு இருக்கும் இடமறிந்து தெரிவித்தால் அப்போது தான் தன் பேரில் உண்மை அன்பிருப்பதாக நம்புவதாகச் சொன்னார். சுந்தரராஜு இருக்கும் இடம் உண்மையில் தெரியாதென்றும், ஆயினும் தன் சாமர்த்தியத்தால் கண்டு பிடித்துச் சொல்வதாயும் சொன்னாள்.

மேற் சொன்ன வார்த்தைகள் நடந்த ஒரு வாரத்திற்குப் பின்னால் சுதேசமித்திரன் பத்திரிகையில் பின்வரும் விளம்பரம் வெளிவந்தது.

விளம்பரம்

குருக்குத் துறையில் கண்டெடுத்த கிளி கூண்டை விட்டு பறந்துவிட்டது. அக்கிளி திரும்பி வாராமையால் கூண்டு சின்னா பின்னமடைந்து வருகிறது. இன்னும் ஒரு மாதத்திற்குள் கிளி திரும்பாவிடில் அப்பால் கூண்டைக் காண முடியாதென்பது சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!! ——— செல்லக்கிளியை அறிந்து கொள்.

இவ்விளம்பரத்தை ஸ்ரீனிவாசலு ராஜு பார்த்ததும் தாசி செல்லத்தை இரகசியமாக வரும்படி சொல்லி யனுப்பினார். அவள் இரண்டு மூன்று தினங்களாக வராமல் வீண்சாக்குப் போக்குகள் சொல்லி வந்தாள். அப்பால் தனது இளைய குமாரனாகிய சுப்பராஜுவை அனுப்பி அவளை அழைத்து வரச்சென்னார். அவர் போனதும் அவருக்கு சோடச உபசாரம் செய்து வெகு மரியாதையாய் வரவேற்று தான் தனித்திருந்து தவிக்கும் விஷயம் தனது கொழுந்தனுருக்கு அப்போதாவது ஞாபகம் வந்ததைப்பற்றி தனக்கு அதிக சந்தோஷம் ஆயிற்றென்று சொல்லி சரச வார்த்தைகளாட ஆரம்பித்தாள். அவர் தமையனாரின் அபிமான பத்தினி தனது தாயாருக்குச் சமானமென்றும் ஆகையால் தன்னிடம் சரச வார்த்தைகளாடுவது சரியல்லவென்றும் சொன்னார். அதற்கு அவள் தான் தாசியென்றும், விவாஹம் செய்த தர்ம பத்தினியல்ல வென்றும் தாசிகள் "மாமா, மருமகா, மைத்துனா, என் தம்பி, சீராளா, செல்வச் சிறு மகனே" யென்று சமயத்திற்கேற்றவாறு வரிசைகள் வைத்தழைத்தாலும் தங்களிடம் வரும் ஆடவருக்கும் தங்களுக்கும் எவ்வளவு

வயது தாரதம்யமிருந்தாலும் எல்லோரையும் சரசக் கண்ணுளராய் பாவிக்க வேண்டியது தமது குலத்தொழிலென்றும், ஆகையால் அவ்விஷயத்தில் கிஞ்சிற்றுவது சந்தேகம் வைக்காமல் தன்னுடன் சரச சல்லாபமாயிருக்கும்படியும் சாமர்த்தியமான வார்த்தைகளால் பேசி சாகசஞ்செய்தாள். அவர் அவளுக்குக் கிஞ்சிற்றேனும் இடங்கொடாமல் தான் இணங்க முடியாது என்பதைக் கண்டிதமாய்த் தெரிவித்து விட்டதின்பேரில் இனி அவரிடம் தனது ஜெயம் பலிக்காதென அறிந்ததும் உண்மையான அவதி அடைந்தாள். ஏனென்றால் அது வரையில் தான் மிகுந்த அழகுள்ளவளென்றும், தன்னைக் கண்ட புருஷரெல்லாம் திரும்பிப் பாராமல் போவதில்லையென்றும், தனது வார்த்தைக்குக் குறுக்காகப் பேசப்பட்ட புருஷர் இப்பூலோகத்திலேயே இருக்க மாட்டார்களென்றும், அப்பேர்ப்பட்ட இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவையே தான் வசப்படுத்தி விட்டபோது மற்றவர்கள் எம்மாத்திரமென்றும் ஒருவித அகந்தை கொண்டிருந்தவளாதலால் தான் சுப்பாராஜுவை அவ்வளவு தூரம் விரும்பியும் அவர் மறுதலித்து விட்டது [illegible]ருக்கு இவ்வளவு வருத்தத்தைக் கொடுத்தது. ஆயினும் நளாயினி வர்த்தியில் அவரை எவ்விதமாவது சரிசெய்து ஒருவேளையாவது அவரை ரமிக்காமல் விடுவதில்லையென்றும், அவரைக் கொஞ்சம் கொஞ்சமாய்த் தான் சரிசெய்ய வேண்டுமென்றும், அதற்கேற்றபடி நடந்து கொள்ள வேண்டுமென்றும், தீர்மானித்துக் கொண்டு தன்னிடம் வந்த காரியமென்னவென்று கேட்டாள். தனது தகப்பனுர் அவளைத் தாமதமில்லாமல் வரச்சொன்னதாகச் சொன்னுர். மாமா அவர்கள் வார்த்தையைச் சிரமேற்கொண்டு உடனே வருவதாகவும் தன்னை அவர் வண்டியிலேயே அழைத்துப் போகும்படியும் சொன்னுள். சுப்பராஜுவுக்கு அவளைத் தன்னுடன் தனது வண்டியில் அழைத்துப் போக விருப்பமில்லை. தனது தகப்பனுரோ கையுடன் அழைத்துவரச் சொன்னுர். தான் அவளை விட்டு விட்டுப் போய் விட்டால் அப்பால் வருவாளோ வரமாட்டாளோ தெரியவில்லையேயெனத்திகைத்து தனது வண்டியிலேயே அவளைப்போகும்படியும் தனக்குப் பக்கத்துத் தெருவில் கொஞ்சம் வேலையிருப்பதால் அதைப் பார்த்துக் கொண்டு வேறுவண்டியில் வருவதாகவும் சொன்னுர். அதற்கு அவள் இணங்காமல் அவருடைய பக்கத்துத் தெரு ஜோலியை முடித்துக் கொண்டு வந்து அழைத்துப் போகும்படி

சொன்னாள். இனி உபகாரமில்லையென எண்ணி உடனே அவளைத் தன்னுடன் அழைத்துச் சென்றார். வண்டியில் அவள் ஏறியதும் முன் பக்கம் ஓரமாய் உட்காராமல் பின் பக்கமாகவே உட்கார்ந்தாள்; முன் பளுவு இல்லாததால் வண்டி அதிகமாய்த் தூக்கிற்று. அவள் அவரை உள்ளே தள்ளிவந்து உட்காரச் சொன்னாள். அவர் அவளை முன் பக்கம் தள்ளி உட்காரச் சொன்னார். அவர் சொல்வதற்காக அசைவதைப் போல் பாவித்தாலும் உண்மையில் ஒரு அங்குலம் கூட உட்போகாமற்போகவே அவரே உள்ளே போகும்படி நேரிட்டது. வண்டி பாரம் சரியாவதற்கு ஒருவரை ஒருவர் ஒட்டிக் கொண்டு உட்காரும்படி செய்து கொண்டதோடு அவர் தொடையின் பேரிலும் தன் கையை வைத்துக் கொண்டாள். பாவம்! சுப்பராஜுவால் என்ன செய்யக் கூடும்! ஜல்தியாய் வண்டியை ஓட்டச் சொன்னார். வண்டி வேகமாய்ப் போனால் தனக்கு வாந்தி வந்துவிடுமென்றும் மெதுவாக ஓட்டும்படி அவளே வண்டிக்காரனுக்குஉத்தரவிட்டாள். சுப்புராஜு மனம்பொறுத்துக் கொண்டு மௌனமாயிருந்தார். ஓர் பெண்; அதிலும் தாசி; அவரிடம் ஓயாமல் பேசுவதென்று தீர்மானித்த பின் அவரால் பேசாமலிருக்க முடியுமோ? கேட்ட வார்த்தைகளுக்கா[illegible] பதில் சொல்லித்தானே தீரவேண்டும். ஏக வசனங்களிலாவது ஒவ்வொரு வார்த்தை பதில் சொல்லி வந்தார். கடைசியாக வீடும் வந்தது. இருவருமாக இறங்கி ஸ்ரீனிவாசலு ராஜு இருக்கும் அறைக்குச் சென்றதும் செல்லம் நமஸ்கரித்து நின்றாள். அவளை ஓர் நாற்காலியில் அமரும்படி சொன்னார். தான் மாமனார் முன்பு உட்காருவது மரியாதைக் குறைவெனச் சொல்லி மறுத்து விட்டு நின்றாள்.

ஸ்ரீனிவாசலு ராஜு:—செல்லம்! சுந்தரம் உன்பேரில் வைத்திருந்த அபிமானத்தையும் பிரியத்தையும் இவ்வளவு ஜல்தியில் மறந்து நீ அவனைக் காட்டிக் கொடுப்பதற்கான வழிகளைச் செய்து வருவதாகத் தெரிகிறது.

செல்லம்:—மாமா! சற்று பொறுங்கள். என்ன வார்த்தை தெரிவித்தீர்கள். நானா? இந்த செல்லமா? தங்கள் குமாரரைக் காட்டிக் கொடுப்பது? இந்த நிமிஷம் கூட அவர் நிமித்தம் தேவையானால் நான் பிராணத்யாகம் செய்யத் தயாராயிருக்கிறேன். தங்களிடம் யாரோ வந்து ஏதோ என்னைப் பற்றி விபரீதமாய்த் தெரிவித்திருக்கிறார்கள். தயவு செய்து ஒன்றையும் ஒளியாமற் சொல்லுங்கள்

ஸ்ரீனிவாசலு ராஜு.—நீ என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள். என்னை ஏமாற்ற முடியாது. 20 வயதுள்ள உனக்குத் தெரிந்ததைப் பார்க்கிலும் உன்னைப்போல் நான்கு பங்கு வயதுடைய எனக்கு எவ்வளவு அனுபோகமும் உலக ஞானமும் இருக்கும்? அதெல்லாமிருக்கட்டும். சுதேசமித்திரன் பத்திரிகையில் ஏன் இந்த விளம்பரம் போடும்படி செய்தாய்?

செல்லம்:—அட பாவமே! என்ன விளம்பரமது? யார் போட்டார்கள்? சத்தியமாய் எனக்கு ஒன்றும் தெரியாதே! அதை இப்படிக் கொடுங்கள் அதில் என்ன எழுதியிருக்கிறது என்று பார்ப்போம்.

ஸ்ரீனிவாசலு ராஜு.—அவ்விளம்பரத்தைப் போடும்படி நீ செய்தாயென்றும், நீ நித்யம் ஒரு முறை அவ்விளம்பரத்தை அப்பேதை காமாக்ஷியிடம் காட்டி நீங்கள் ஏகாந்தமாயிருப்பதாக நினைத்திருந்தபோது பேசிக்கொண்ட ஒவ்வொரு வார்த்தையும் எனக்குத் தெரியுமென்றும் நீயும் அவனும் சேர்ந்து செய்திருக்கும் சதியாலோசனைகளும் எனக்கு நன்றாய்த் தெரியுமென்றும் உனக்குத் தெரிந்திருக்கக்கூடும்.

செல்லம்:—மாமா! நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றும் புரியவில்லையே! என்ன அபாண்டமடியம்மா இது!! யாரோ தங்களிடம் என்பேரில் அநியாயமாய் ஏதேதோ சொல்லியிருக்கிறார்கள் போலிருக்கிறது. தாங்கள் அந்தக் கபட வார்த்தைகளை உண்மையென நம்பி அநாதையாகிய என்பேரில் பழி சுமத்துகிறீர்கள். உண்மையென ரூபித்து விட்டு என்னைத் தங்கள் இஷ்டம்போல் தண்டியுங்கள். அட அநியாயமே.

என்றதும் விம்மி விம்மி அழுதாள். சுப்பராஜு அவளை அழ வேண்டாமென்று சமாதானப்படுத்தித் தன் தகப்பனாரைப் பார்த்து அவள்தான் விளம்பரம் பிரசுரித்தாளென்றும், அண்ணாவுக்கு விரோதமான காரியாதிகள் அவள் செய்தாளென்றும் தங்களுக்கு எப்படித் தெரியும்? தீர விசாரித்துக் கேட்பதே நலமென நினைக்கிறேன்.

ஸ்ரீனிவாசலு ராஜு:—சுப்பூ! நான் தீர விசாரித்தறியாமல் எப்போதும் எவ்வித முடிவுக்கும் வருவதில்லை. இப்போது உனக்கு உண்மைதானென்று ருஜூப்படுத்துகிறேன். செல்லம்! உன் வீட்டிற்கு இன்ஸ்பெக்டர் காமாக்ஷி ராவ் வரத்து போக்கு உண்டா இல்லையா?

செல்லம்:—போலீஸ்காரரும், வைத்தியரும் யார் வீட்டிற்கும் தாராளமாய் போகலாம். அவர்கள் வேலையின் பேரில் போவதை வித்யாசமாய்த் தாங்கள் நினைக்கலாமா? சுந்தரராஜு ஐயாவிடமிருந்து எனக்கு ஏதாவது கடிதப் போக்குவரத்து உண்டாவென்றும் அவர்கள் இருப்பிடம் எனக்குத் தெரியுமாவென்றும் அந்த இன்ஸ்பெக்டர் இரண்டொரு முறை வந்து கேட்டுப் போனார். அப்படி அவர் சர்க்கார் ஜோலியால் வந்ததிலிருந்து அவர் என் வீட்டிற்கு வரத்துப் போக்காயிருக்கிறாரெனத் தாங்கள் தீர்மானித்து அதன் மூலமாய் ஆகாச மாளிகைகள் கட்ட ஆரம்பித்து விட்டீர்கள் போலிருக்கிறதே?

ஸ்ரீனிவாசலு ராஜூ.—ஜூன்மீ 3ம் தேதி முதல் இன்று 27ம் தேதிவரை 23 நாட்களில் அந்த காமாக்ஷிக்குப் படுக்கை யெங்கே? ஒரு நாள் தவறாமல் உன் வீட்டிலல்லவா? இந்த 24 நாட்களாய் அவனும் நீயும் பேசிக் கொண்ட வார்த்தைகளில் ஒரு வார்த்தை கூட விடாமல் எனக்குத் தெரியும். வெளிக்கு நீ எவ்வளவு தூரம் மறுதலித்தாலும் உன் மனசாக்ஷிக்கு நான் சொல்வது உண்மையென ரூபிப்பதற்காகச் சில விஷயங்களைச் சொல்லுகிறேன். ஜூன்மீ 19ம் தேதி இரவு 12-35க்கு காமாக்ஷிராவ் "நீ சொல்லுகிறபடி என்பேரில் உண்மையான பிரியம் இருக்கும் பக்ஷத்தில் நீ நான் சொல்லுகிறபடி நடக்கப் பின் வாங்க மாட்டாய். நீ நடந்து கொள்ளும் மாதிரியிலிருந்து தான் நீ சொன்னது உண்மையென்றும் அல்லவென்றும் ருஜுவாகுமென்று சொல்லவில்லையா? மறுநாள் இரவு நீ அந்த விளம்பரத்தை அவன் கையில் கொடுத்துச் சுதேசமித்திரன் பத்திரிகையில் பிரசுரிக்கும்படி சொல்லவில்லையா? அவ்விளம்பரத்தைப் பார்த்ததும் சுந்தரம் எங்கிருந்தாலும் கட்டாயமாய் உன் வீடு வந்து சேருவானென்று நீ திட்டமாய் நேற்றிரவு கூடச் சொல்ல வில்லையா? அதன்பேரில் காமாக்ஷிராவ் அவனுக்குப் போடுவதற்கு விலங்குகள் கூட உன்னிடம் கொண்டு வந்து கொடுத்து வைத்திருக்கவில்லையா? நான் கூப்பிட விட்டால் போகவே போகாதேயென்று இராத்திரி கூட அவன் சொல்ல வில்லையா? உன் முகம் ஏன் அப்படிப் போகிறது? உன் முகத்தில் தேள் கொட்டி விட்டதா என்ன?

என்றார். அவள் "மாமா! தாங்கள் சொல்வது உண்மையல்லவென்று ஒரே வார்த்தையால் ரூபித்து விடுகிறேன். தாங்கள் நினைப்பது உண்மையாயிருந்து காமாக்ஷி ராவ் இரவு கூட என்னை இங்கு

போகக்கூடாதென்று வற்புறுத்தி யிருந்தால் நான் இன்று இங்கு வந்திருப்பேனா? என்று சற்று யோசித்துப் பாருங்கள். கொழுந்தனாரே! தாங்களாவது இதற்கு நியாயம் சொல்லுங்கள்.

ஸ்ரீனிவாசலு ராஜு.—அதற்குக் காரணம் சொல்லுகிறேன் கேள். நான் சத்தியம் தவறுதவ னென்றும், மனதில் நினைத்ததை எவ்விதமாவது நடத்தித் தீர்ப்பேனென்றும், இந்த இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவ் அல்ல இந்த பிரிட்டிஷ் இராஜாங்கத்தாலேயே என்னால் விதிக்கப்படும் தண்டனையை மாற்ற இயலாதென்றும் இன்றும் எனக்கு அவ்வளவு சக்தியுண்டென்றும் உனக்குத் தெரியும். ஆகையால் நீயாக வராவிட்டால் எவ்விதமாவது உன்னைக் கொண்டு வந்து விடுவேனென்றும் நீ அறிவாய். அத்துடன் சுப்புவின் பேரில் உனக்கிருக்கும் அந்தரங்கப் பிரியமும் எனக்குத் தெரியும். அவனை எவ்விதமாவது வசப்படுத்த வேண்டுமென்றும் அதற்காக வண்டியில் போகும்போது உன்னால் கூடியவரை வலை வீசலாமென நினைத்து வந்தாய். சுந்தரத்தைப் போல் சுப்பு இளநெஞ்சனல்ல வென்பதையும், உன் ஆயுட்காலம் வரை நீ அவனை மயக்க முயன்றாலும் உன்னால் முடியா தென்பதையும் நான் திட்டமாய் அறிவேன். உன்னிடம் வீண் வார்த்தைகள் பேச எனக்கிஷ்டமில்லை. இப்போது உன்னை எதற்காக வரவழைத்தே னென்பதைச் சொல்லிவிடுகிறேன். கவனமாய்க் கேட்டு அப்பால் உன் இஷ்டப்பிரகாரம் நட. உன் மூலமாய் சுந்தர ராஜு பிடிக்கப்பட்டால் இது வரையில் கேட்டும் வாசித்தும், ஊகித்தும் அறியாத அவ்வளவு கஷ்டமான மரணத்துக்குட்படுத்தப்படுவாய். தெரியாத பேதைகள் தான் நினைத்த மாத்திரத்தில் கொலை செய்வார்கள். தன் விரோதியைக் கொன்று விடுவதால் பிரயோஜன மில்லை: ஏனென்றால் இறந்த பின் எதுவும் தெரியப் போகிறதில்லை. நான் அவ்வாறு செய்யமாட்டேன். உன்னை உயிருடன் வைத்துக் கொண்டு விதம் விதமான சித்ரவதை செய்து ஒவ்வொரு நிமிஷக் கஷ்டத்தையும் ஒரு யுகக்கஷ்டமாகத் தோன்றும்படி செய்வேன். இப்போது நீ மனதில் நினைப்பதை நான் சொல்லட்டுமா? நமக்குக் காமாக்ஷி ராவ் இருக்கிறான். நாம் காணாமற் போனதும் கண்டு பிடித்து தப்பவைத்து விடுவான் என நினைக்கிறாய். காமாக்ஷி ராவ் பல கனிஸ்டேபிள்களுடன் வீட்டைச் சுற்றி கடுங்காவலிருந்தபோதுதான் சுந்தரம் காணாமற் போனான். இன்றைய வரையில் அவனாலாவது இந்த சமுத்திரங்களுக்கே அரசியென கௌரவ

பட்டம் வஹித்த பிரிட்டிஷ் அரசாங்கத்தாராலாவது கண்டு பிடிக்க முடிந்ததா யென்பதை சிந்திப்பாயாகில் அப்போது உனது அபாய கரமான நிலைமை உனக்குத் தெரியும். நீ காமாக்ஷிராவையாவது அவனுடன் இன்னும் எத்தனை ஆயிரம் பேர்களையாவது வைத்துக் கொள்வதில் எனக்கு எவ்வித ஆட்சேபனையுமில்லை. அது உனது குலத்தொழில். அதனால் எனது குமாரனுக்கு நான் கொடுத்த வாக்கைத் தவறி உனது வீட்டுக்கு இப்போது அனுப்பும் சாமான்களையாவது மாதா மாதம் கொடுக்கும் நானூறு ரூபாய்களையாவது நிறுத்தமாட்டேன். ஆனால் சுந்தரத்திற்கு விரோதமான காரியாதிகள் செய்து அவனைப் பிடித்துக் கொடுப்பாயாகில் உன் தலை விதிப்படி நடக்கும். என்னால் கூடுமானவரை எச்சரித்தாயிற்று. பின்னால் தெரியாதென்று சொல்லாதே; ஜாக்ரதை. இனி நீ போகலாம்.

என்றார். உங்கள் வீட்டு உப்பைத் தின்று விட்டு உங்களுக்குத் துரோகம் செய்வேனா? என்றாள். "அது உங்கள் குலத்தொழில். இன்னுமொரு முறை எச்சரிக்கிறேன். உன் மூலமாய் என் சுந்தரத்திற்கு ஏதாவது தீங்கு நேர்ந்ததோ ஸ்ரீமந் நாராயணன் சாக்ஷியாய்ச் சொல்லுகிறேன். நீ படும் சித்ரபாதை பூமியில் இதுவரையில் பிறந்தவர்களாவது இனி பிறக்கப் போகிறவர்களாவது அனுபவித்தறியாத விதமாய் ஹிம்சிப்பேன் என்பதை உனது மனதில் வைத்துக்கொண்டு போ" என்றார். அதற்குள் அவள் ஏதோ சொல்ல வாயெடுத்தாள். உடனே அவள் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கதவை அடைத்து விட்டார். 80-வயது கிழவனாயிருந்தும் அவர் கழுத்தைப் பிடித்த வலி அநேக நாட்கள் அவளுக்கு ஞாபகமூட்டுவதைப் போலிருந்து கொண்டிருந்தது.

நிற்க, காமாக்ஷிராவ் வந்ததும் அவர் செவிக்குமட்டும் கேட்கும்படியாய் கிசு கிசுவென்று ஸ்ரீனிவாசலுராஜுக்கும் தனக்கும் நடந்த சம்பவங்கள் முழுமையும் தெரிவித்தாள். ஆனால் சுப்பராஜு பேரில் தனக்கபிமான மிருக்கும் விஷய சம்மந்தமான வார்த்தைகளொன்றைப்பற்றியும் பிரஸ்தாபிக்க வில்லை. தங்களிருவருக்கும் அந்தரங்கத்தில் நடந்தேறிய சம்பாஷணைகள் எவ்வாறு வெளிக்கு வந்தனவென்று இருவரும் ஆச்சரியப்பட்டார்கள்.

செல்லம்:—பெரியவரிடம் போய் வந்தது முதல் எனக்கென்னமோ பயமாயிருந்து வருகிறது; எந்த வேளையில் என்ன செய்துவிடு

வாரோ தெரியவில்லை. எப்படியாவது தப்பி ஓடிப்போய் விடுவது நலமென நினைக்கிறேன்.

காமாக்ஷிராவ்:—செல்லம்! இது என்ன பிரிட்டிஷ் ஆளுகையா அல்லது மகமத்தோக்ளாக் காலமா என்பதைச் சற்றும் கவனியாமல் ஏன் அனாவசியமாய் பீதியடைகிறாய்? மேலும் அப்படி ஏதாவது ஏற்படுமாயின் அவர்களைச் சும்மா விட்டு விடுவேனா? அதனால் என் பிராணன் போனாலும் சரிதான்; ஓர் கை பார்த்தே தீர்வேன். நீ பயத்தை விடு.

செல்லம்:—தாங்கள் எவ்வளவு தைர்யம் சொன்ன போதிலும் சரிதான். எனக்குப் பயமாய்த்தா னிருக்கிறது தாங்களும் அநேக கான்ஸ்டேபிள்களும் வீட்டைச் சுற்றி காவலிருக்கும்போது சுந்தர ராஜு எப்படி மாயமானார்? அதைச் சொல்லுங்களேன் பார்ப்போம்.

காமாக்ஷிராவ்:—எனது ஆயுட் காலத்தில் நான் அடைந்த அவமானம் அது ஒன்றுதான்: அச்சம்பவம் நடந்தேறியது முதல் அதிகாரிகள் கூட முன் போல் என்னிடம் அன்பாயில்லை. என்னைப் [illegible]க்கூவுடன் மிகவும் சந்தோஷமாய்ப் பேசும் ஜில்லா சூப்பிரன்டென்டண்ட்டும், ஜில்லா மாஜிஸ்டிரேட்டும், எல்லாருக்கும் மேல் நான் சர்க்காருக்கு அதிக நம்பிக்கையுள்ளவனாதலால் என்னை அனுப்பியதாயும் சுந்தர ராஜுவை அதிக ஜாக்ரதையாய்ப் பார்த்துக் கொள்ளும்படியாயும் எச்சரித்து அனுப்பிய டெப்டி மாஜிஸ்டிரேட் அவர்களும் என்மேல் சந்தேகங் கொண்டிருக்கிறார்கள். அதற்கேற்றாற் போல் நான் பெருந்தொகையாகிய லட்சம் ரூபாய்கள் லஞ்சம் வாங்கிக் கொண்டு சுந்தரராஜுவைத் தப்பவிட்டு விட்டேனென்றும் பேர் போடாத பல கடிதங்கள் அடிக்கடி அனுப்பப்படுகின்றன. நான் அந்த ரூபாய்களை இவ்வூர் சுடலை கோயில் விக்ரகத்தின் கீழ் புதைத்து வைத்திருக்கிறேன் என்று ஒருபேர் போடாத கடிதம் போலீஸ் சூப்பிரன்டென்டண்ட் துரைக்கு வர, அதனுண்மையை ஆராய்வதற்காக மோட்டார் பஸ்ஸில் அங்கிருந்தே ஆட்களையும், ஜவான்களையும் அழைத்துக் கொண்டு இன்று காலையில் என்னிடம் வந்து என்னையுமழைத்துக் கொண்டு சுடலை கோயிலண்டை வந்ததும், சூப்பிரன்டென்டண்ட் துரையவர்கள் அந்த அநாமதேயக் கடிதத்தை என கையில் கொடுத்து விட்டு தன்னுடன் அழைத்து வந்த ஆட்களை என்னைக் கொண்டு சாக்ஷிகள் முன்னிலையில் சோதனை செய்யச்

சொல்லி அப்பால் அவர்களைத் தோண்டச் சொன்னார். என்ன வென்று சொல்லுவேன். சுற்றிலுமுள்ள இடத்தைப் போல் கூடலையின் அடி மண்ணும் சாணி போட்டு மெழுகப் பட்டிருந்தாலும் அவ்விடத்தில் கெடப்பாரை போட்டதும் உதிர் மண்ணில் இறங்குவதைப் போல் இறங்கிற்று. உதிர் மண்ணானபின் சர சரவென்று மண் எடுத்துப் போடும் போதும் அதிலிருந்து ஒரு சவரன் வெளியே விழுந்தது. அந்த சவரனை எடுத்துக் கொண்டு தோண்டவும் பல பாகங்களில் பல சவரன்கள அகப்பட்டன. அப்படி அகப்பட்ட சவரன்கள் மொத்தத்தையும் கணக்குப் பார்க்கும்போது. 137-சவரன்கள் அகப்பட்டன. யாராவது விரோதத்தின் பேரில் அநாமதேயக் கடிதங்கள் எழுதுவது சகஜமே யொழிய 137 சவரன்களை இழக்க யார் விரும்புவார்கள்? ஆகையால் ஒருக்கால் அக்காகிதத்தில் கண்டபடி லஞ்சம் வாங்கிய லட்ச ரூபாய் சவரன்கள் அவ்விடத்தில் புதைக்கப்பட்டிருக்கலா மென்றும் சூப்பிரன்டன்டன்ட் புறப்பட்ட சேதியை எப்படியோ நான் அறிந்து அவசரமாய் இரவில் அந்த சவரன்களை அப்புறப்படுத்தியதில் தவறி இந்த 137 சவரன்களும் ஆங்காங்கு விழுந்திருக்கலா மென்றும் கூட சந்தேகித்து போலீஸ் சூப்பிரன்டன்ட் தோண்டிப் பார்த்ததில் 137 சவரன்கள் அகப்பட்டன என்று மட்டும் யாதாஸ்து எழுதி அங்கிருந்த எல்லோரிடமும் என்னிடமும் கையெழுத்துகள் வாங்கிக் கொண்டு நான் பஸ்வரை போய் நின்றபோதுகூட என்னிடம் சொல்லாமலே போய் விட்டார். அந்த அவமானத்தைச் சகித்துக் கொண்டு உயிர் வாழ்வதை விட அந்த இடத்திலேயே துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு மாண்டு போகலாமென நினைத்தேன். ஆனால் உன் நினைவும் அன்பும் குறுக்கிட்டு அம்மாதிரி செய்யாதபடி தடுத்தது. இப்போதுகூட உன் உதவியால் அந்த சுந்தர ராஜுவைப் பிடித்துக் கைதியாக்கிச் சேர்த்து விட்டேனாகில் மறுபடியும் பழைய கௌரவம் பெற்று விடுவேன். அப்பால் இப்பாழும் ஊரை விட்டு நாம் வேறு ஊருக்குச் சென்று சௌக்கியமா யிருக்கலாம். அது வரையில் எனக்காக நீ மனம் பொருத்துக் கொண்டு இருப்பதாக வாக்களிந்தால் மட்டும் நான் ஜீவிப்பதில் உபகார முண்டு; இல்லையானால் இப்போதே இங்கேயே உன் கண் முன்பாக இந்த உடலை மாய்த்து விடுவது நிச்சயம்; சத்தியம். என்ன சொல்லுகிறாய்?

என்றார். இப்படிப் பார்த்தால தனக்கு நேரக்கூடிய சித்ர வதையின் பயம்; அப்படிப் பார்த்தால் காமாக்ஷிராவ் தன் கண் முன் பாகப் பிராணத்யாகம் அப்போதே செய்வேனென்கிறார். இதில் இன்னது தான் செய்வதெனத் தெரியாமல் தயங்கினாள். காமாக்ஷி ராவ் துப்பாக்கியில் தோட்டாப் போட்டு எடுத்து வந்து தனது நெற்றிக்கு நேராக வைத்துக் கொண்டு சுடுவதற்கு ஆயத்தமானார். செல்லம் அவர் கையிலிருந்த துப்பாக்கியைப் பிடுங்கித் தூர எறிந்து விட்டு தனக்கு என்ன நேர்ந்தாலும் சரிதான் சுந்தரராஜுலுவைப் பிடித்துக் கொடுக்கும் வரை அவருக்கு உதவியாயிருப்பதாகச் சத்தியம் செய்தாள். அப்போது திடீரென்று ஒரு கோபச் சிரிப்பு சிரித்த சத்தம் கேட்டது. அப்படிச் சிரித்தவர்கள் யார் என்று அவர்களிருவரும் உற்றுக் கேட்க, “செல்லம்! ஜாக்ரதை!! சுந்தர ராஜுலுவை உயிருடன் பிடித்து சிறையிடக் கூடிய வல்லவனும் இவ்வுலகின் கண் இருக்கின்றானா? என்று சுந்தர ராஜுலு பேசியதைப் போல் பக்கத் தறையில் சத்தம் கேட்டது. உடனே கைத்துப்பாக்கி சஹிதம் பக்கத்து வீட்டுத் தெருவில் இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவ் போய் நின்று [illegible] பாலீஸ் ஊது குழலால் ஊதி அபாயம் என அறிவித்தார். ஐந்து நிமிஷங்களுக்குள் பல போலீசார் நாலா பக்கங்களிலிருந்தும் ஓடி வந்தனர். இன்ஸ்பெக்டர், அவர்களிடம் சுந்தர ராஜுலு அவ்வீட்டிலிருப்பதாகத் தெரிவித்து வீட்டைச் சுற்றிக் காவலிருக்கும்படி திட்டப்படுத்தி விட்டு வீட்டுக் கதவை உடைத்துக் கொண்டு 4 போலீசாருடன் உட்சென்று வீடு முழுவதும் தேடினார்கள். எவரையும் காணவில்லை. வெறுத்த முகத்துடன் செல்லம் இருந்த அறைக்குள் நுழைந்தார். செல்லத்தைக் காணோம். வீட்டுக்குள்ளிருக்கும் கக்கூசுக்குப் போயிருப்பாள்; அங்கிருப்பாள். இங்கிருப்பாளென்று எங்கு தேடியும் செல்லத்தைக் காணோம்.

நான்காவது அத்தியாயம்

போலீஸ் விசாரணை

ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொன்னாலும்
பொய் பொய்யாகவே முடியும்.

நாம் முந்திய அத்தியாயத்திற் சொன்ன விஷயங்கள் நடந்தேறிய பல நிமிஷங்கள் வரையில் இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவ் திக்பிரமை கொண்டவர் போல் நின்றார். அவர் மனம் எதிலும் நாட வில்லை; அசைவற்று நின்றார். அப்பால் தனது மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டவர்போல் அங்கிருந்த போலீசாரில் ஒருவனை அனுப்பி அவ்வூரிலுள்ள எல்லா போலீசாரையும் ஸ்ரீனிவாசலுராஜூவின் அரண்மனையிடம் துப்பாக்கிகள் சஹிதம் கூடிய ஜல்தியில் வந்து சேரும்படி சொல்லிவிட்டு தன்னுடனிருந்த கான்ஸ்டேபிள் களை அழைத்துக் கொண்டு போய் ஸ்ரீனிவாசலு ராஜூவின் அரண் மனையைச் சுற்றிக் காவல் வைத்து விட்டு தானும் அரண்மனையிலிருந்து எவரும் வெளிச் செல்லாதபடி கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார். துப்பாக்கிகள் சஹிதம் போலீசார் வந்ததும், இன்ஸ்பெக்டர் அரண்மனை வாசலிலுள்ள மணியை அடித்தார். அங்குள்ள வேலைக்காரன் கதவைத் திறந்ததும் இன்ஸ்பெக்டர் ஸ்ரீனிவாசலு ராஜூவை அப்போதே பார்க்க வேண்டுமென்று சொன்னார். வேலைக் காரன், எஜமானர் ஒன்பது மணிக்குப் படுத்துக்கொள்வது வழக்க மென்றும் காலை 4 மணிக்கு எழுந்திருப்பாரென்றும் 9 மணி முதல் 4 மணி வரை அவரை யாரும் எழுப்பக் கூடாதென்றும் எல்லோருக்கும் உத்தர விட்டிருக்கும் விஷயம் இன்ஸ்பெக்டர் அவர்களுக்குக் கூடத் தெரியுமென்றும் ஆதலால் காலை 4 மணிக்கு வந்தால் கண்டு பேசலாமென்றும் சொன்னார். இன்ஸ்பெக்டர் உடனே பார்க்க வேண்டுமென்று சொன்னதற்கு அந்நேரத்தில் அவரைத் தொந்தரவு செய்தால் தனது வேலை போய் விடுமென்றும் ஆகையால் தன்னால் ஒன்றும் செய்ய முடியாதென்றும் முறண்டினான். இன்ஸ்பெக்டர் கோபித்ததற்கு அவன் பயப்படாமல் தனது எஜமானருக்கு தலை முறைத்தத்துவமாய் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் அதிகாரம் சர்க்

காரால் கொடுக்கப்பட்டிருப்பதை ஞாபகமூட்டி தான் சர்க்காரிலிருந்து சம்பளம் பெறு விட்டாலும் முதல்வகுப்பு மாஜிஸ்டிரேட்டின் வேலைக்காரன் என்றும், தன்னைப்பயமுறுத்த அவரால் முடியாதென்றும் வெகு மரியாதையாய்ச் சொன்னான். "நீ எழுப்பாவிட்டால் நான் எழுப்புகிறேன்" என்று உள்ளே போகப்போனார். அவரைப் போக கூடாதென்று கையைப் பிடித்திழுத்தான். இன்ஸ்பெக்டருக்கு கோபம் வந்து அவனைக் கன்னத்தில் ஓர் அறை அறைந்தார். அவர் எதர்பாராதவிதமாய் அவ்வேலைக்காரன் இன்ஸ்பெக்டர் தவடையில் தன் முழுபலத்தோடும் ஓங்கி ஒரு குத்து விட்டான். இன்ஸ்பெக்டர் வாயிலிருந்து இரத்தம் களகள வென்று வடிந்தது. உடனே கனிஸ்டேபிள்கள் அவனைப்பிடித்துக் கட்டிக் கீழே உருட்டி விட்டார்கள். இந்த ஆரவாரத்தைக் கேட்ட பல வேலைக்காரர் வந்து போலீசாருடன் சண்டையிட அவர்களையும் கடைசியாகக் கட்டி உருட்டி விட்டார்கள். இன்ஸ்பெக்டர் தன் வாயிலிருந்து வடிந்த இரத்தத்தைத் துடைத்து விட்டு ஸ்ரீனிவாசலுராஜு அவர்கள் படுத்திருக்கும் அறையின் கதவண்டை போய் தட்டினார். அவர் கோபத்துடன் "யாரடா சனியன், இந்நேரத்தில் என்னைத் தொந்தரவு செய்கிறது; அடே! ராமசாமி! ! மடையா!!! உனக்கு எத்தனைதரம் நான் தூங்கினபின் தொந்தரவு செய்யக் கூடாதென்று வற்புறுத்திச் சொல்லியிருக்கிறேன். உனக்குப் புத்தியிருக்கிறதா? இல்லையா? உன்னை இம்முறை திட்டமாய் வீட்டுக்கு அனுப்புகிறேன்" என்றார்.

சார்! ராமசாமியல்ல நான் தான்சார்" என்றார் இன்ஸ்பெக்டர். "சாராவது கொழும்பாவது; யாரது? யாராயிருந்தாலென்ன? என்னை இந்நேரத்தில் ஏன் வந்து தொந்தரவு செய்ய வேண்டும்? காவல்காரன் எங்கே" என்று கோபத்துடன் கேட்டார்.

இன்ஸ்பெக்டர்:—நான் தான் காமாக்ஷிராவ் சார்! தங்களை அவசியம் கண்டுபேச வேண்டியிருப்பதால் வந்தேன். தயவு செய்து கதவைத் திறவுங்கள்.

என்றார். ஸ்ரீனிவாசலுராஜு முணு முணுத்துக் கொண்டே படுக்கையை விட்டு எழுந்து வந்து கதவைத் திறந்து நின்றபடியே அவருக்கு வந்தனோபசாரம் கூடச் செய்யாமல் "எதற்காக அவசரமாய் அழைத்தீர்" என்றார். சற்று நேரத்திற்கு முன்பு தங்கள் குமாரர் சுந்தரராஜு பேசியதைக்கேட்டேன். அப்பால் தாசிசெல்லத்தைக் காணேம். தாசி செல்லத்திற்கும் தங்களுக்கும் இன்று காலையில்

நடந்த சம்பாஷணையிலிருந்து அவளைத் தாங்கள் ஹிம்சிப்பதற்காகப் பிடித்து வைத்திருக்கிறீர்களென்றும், வாரண்டுக்கு அகப்படாமல் ஒளிந்து கொண்டிருக்கும் சுந்தரராஜுஇப்போது இவ்வீட்டில்தான் இருக்கிறாரென்றும் நம்புகிறேன். ஆகையால் தங்கள் அரண்மனையைச் சோதிப்பதற்காக வந்தேன். சகல சட்டங்களும் அறிந்த தாங்கள் எனக்கு அனுமதி யளிப்பீர்களென்று நம்புகிறேன் என்றார். ஸ்ரீனிவாசலு ராஜு தனது ஆட்களைக்கட்டித்தரையில்உருட்டியிப்பதைப் பார்த்ததும் கோபாவேசங் கொண்டு "தங்களுடையவேலையா இது" என்று அவ்விடத்தைச் சுட்டிக் காட்டிக் கேட்டார்.

இன்ஸ்பெக்டர்:—என்னை எதிர்த்து அடித்ததின் நிமித்தம்அவர்களைக் கட்டும்படி நேரிட்டது.

ஸ்ரீனிவாசலு ராஜு:—சட்டப் பிரகாரம் காரியாதிகள் நடத்துவதற்கு என் அனுமதி ஏன்? என் அரன்மனையைச் சோதிப்பதற்கு தாங்கள் பெற்று வந்த வாரண்டைத்தயவு செய்து காண்பியுங்கள்.

இன்ஸ்பெக்டர்:—வாரண்டு பெற்று வரவில்லை. இப்பேர்ப்பட்ட அவசர சந்தர்ப்பங்களில் மாஜிஸ்டிரேட்டிடமிருந்து வாரண்டு பெறாமலே போலீசார் சோதனைசெய்யலாமென்றசட்டத்தின் பேரில் அவசரத்தை உத்தேசித்து சோதனை செய்ய வந்தேன்.

ஸ்ரீனிவாசலு ராஜு:—இப்போது எனது அரண்மனையைச் சுற்றிப் போலீசாரைக் காவல் வைத்து விட்டுபின்மாஜிஸ்ட்டிரேட்டிடமிருந்து வாரண்டு பெற்று வந்து சட்டப்படி சோதனை செய்கிறது தானே! ஏன் இந்த அவசரம்?

இன்ஸ்பெக்டர்:—தாசி செல்லத்தை அதற்குள் என்னென்ன நிர்பந்தத்திற் குட்படுத்துவீர்களோ என்றும், காலை வரையில் அவள் பிராணனுடன் இருப்பாளோ அல்லது இறப்பாளோ என்றும் கவலையிருப்பதால் உடனே தேட வேண்டியது அவசிய மாகிறது. ஆகையால் அட்டியில்லாவிடில் இப்பொழுதே அனுமதி கொடுங்கள்.

ஸ்ரீனிவாசலு ராஜு:—நான் அனுமதி யளிக்காவிட்டால் என் ஆட்களுக்கு நேர்ந்த கதி எனக்கும் நேரும் என்பதை நான் திட்டமாய் அறிவேன். ஆயினும் வாரண்டில்லாமல் என் அரண்மனையைச் சோதித்து என்னை அவமானப் படுத்துவதை நான் ஆட்சேபிப்பதையும் தாங்கள் சொல்லும் சமாதானத்தையும் இரண்டு வரிகள் எழுதி என்னிடம் கொடுத்து விட்டு தங்கள் யுக்தம் போல் என் அரண்மனை முழுவதையும் தேடிப்பார்த்துக்கொள்ளுங்கள். நான்சம்மந்தப்

பட்டவிஷய மாதலால்தான் இவ்வாறு சம்மதிக்கிறேன். இல்லாவிட்டால் கேவலம் ஓர் தாசியின் நிமித்தம் ஓர் கௌரவமுள்ள கனவானை அனுவசியமாய் இவ்வாறு அவமானத்திற் குள்ளாக்குவதை நான் திட்டமாய் ஆட்சேபிக்கவே செய்வேன்.

இன்ஸ்பெக்டர்:—அப்படி நான் எழுதிக் கொடுக்க வேண்டிய பிரமேயமில்லை. முதலில் தேடிப் பார்த்து பின் அவசியமானால் எழுதிக் கொடுக்கிறேன்.

ஸ்ரீநிவாசலு:—நீர் எழுதிக் கொடுக்கா விட்டால் என் அரண்மனையைச் சோதிக்க அனுமதியளிக்க மாட்டேன்.

இன்ஸ்பெக்டர்:—அடே 398! நமது ஆட்களை அழை! அரண்மனையைச் சோதனை செய்யவேண்டும்.

என்றதும் போலீசாரெல்லாரும் அங்கு வந்தார்கள். ஸ்ரீனிவாசலுராஜா அவர்களை யெல்லாம் ஏற இறங்கப் பார்த்து, இவர் நியாயத்திற்குக் கட்டுப்படவில்லை. ஆகையால் இப்போது நான் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் என்ற தோரணையில் இவர் செய்திருப்பதும் இனி செய்ய உத்தேசித்திருப்பதும் சட்டவிரோதமான காரியமென்றும், ஆகையால் அவர் உத்தரவின்படி நீங்கள் நடந்தால் நீங்களெல்லோரும் சட்ட விரோதமான காரியம் செய்ததாகக் கருதப்பட்டுத் தண்டனை யடைவீர்களென்றும் உங்களை நான் எச்சரிக்கிறேன். இனி உங்கள் இஷ்டம் எப்படியோ அப்படி நடப்பதில் எனக்கு எவ்வித ஆட்சேபனையுமில்லை.

என்றார். ஸ்ரீனிவாசலு ராஜாவுக்கு சமயா சமயங்களில் உபயோகிப்பதற்குத் தலைமுறைத் தத்துவமாய் முதல் வகுப்பு மாஜிஜிஸ்டிரேட் அதிகாரம் இருக்கிறதென்று அங்கிருந்த ஹெட்கானிஸ்டேபிள்களுக்கும் பல போலீசாருக்கும் தெரியும். தங்களுடைய நேரான மேலதிகாரி தேடச் சொல்லுகிறார்; மாஜிஸ்டிரேட் சட்டவிரோதமென்கிறார்: இதில் எப்படி நடப்பது நலமென அவர்களுக்குத் தோன்றவில்லை யானதால் திகைத்து நின்றார்கள்.

இன்ஸ்பெக்டர்:—என்னடா! நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன்; நீங்கள் நிற்கிறீர்கள்? பிரபல கைதி ஓடிவிட்டால் அதற்கு உங்களைத்தான் ஜவாப்தாரி யாக்குவேன். தேடுகிறீர்களா? மாட்டீர்களா?

என்றதும் பக்கத்திலிருந்த கனிஸ்டேபிளை அடிப்பதற்குச்

சவுக்கை ஓங்கினுர். ஸ்ரீனிவாசலு ராஜு 80-வயது சென்றவராயிரு ந்தும் எட்டி சவுக்கைப் பிடுங்கிக்கொண்டார். இன்ஸ்பெக்டர் அதை த்திருப்பப் பெற முயன்ருர்; அவரால் ஆகவில்லே. அச்சந்தர்ப்பத் தில் வாசலில் பெரிய மோட்டார்பஸ் வந்து நின்ற சப்தம் கேட்டது. எல்லோரும் திரும்பிப் பார்த்தனர். வண்டியிலிருந்து டெப்டிமாஜிஸ் டிரேட்டும், போலீஸ் சூப்பிரடன்டன்ட்டும் துப்பாக்கிகள் சஹிதம் 20-போலீசாரும் உள்ளே சென்றனர். அவர்களைக் கண்டதும் இன் ஸ்பெக்டருக்கு ஒன்றுமே தோன்றவில்லே. ஸ்ரீனிவாசலு ராஜு சிரித்தபடியே அவர்களுக்கு வந்தனேபசாரஞ் செய்து, "நல்ல சம யத்தில் வந்து சேர்ந்தீர்கள். போலீஸ் இன்ஸ்பெக்டர் அதிகாரத் திற்கு உட்படுவதா? முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்வார்த்தைக்கு உட் படுவதா வென்று போலீஸ்சேவகர்களுக்குத்தெரியாமல் திண்டாடும் சமயத்தில் நீங்கள் வந்து சேர்ந்தது அவர்கள் பாக்கியமே" என்ருர். டெப்டி மாஜிஸ்டிரேட் கட்டப்பட்டிருந்தவர்களே யெல்லாம் அவிழ் த்து விடும்படி சொல்லி இன்ஸ்பெக்டரைப் பார்த்து என்னவிஷயம் என்று கேட்டார் இன்ஸ்பெக்டர் நடந்த விஷயங்களேச் சுருக்கமாய்ச் சொன்னுர். உடனே டெப்டி மாஜிஸ்டிரேட் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜு அவர்களேப் பார்த்து "சுந்தரராஜு இவ்வீட்டில் இருக்கிருரா? தாங்கள் என்னிடம் திட்டமாய் அவர் இவ்விடத்திலில்லே யெனச் சொன்னுல் அப்பால் வீட்டை சோதனை செய்து பார்க்க வேண்டிய பிரமேயமேயில்லாமல்போய்விடும்" என்ருர். அப்போது இன்ஸ்பெக் டர் அவர்கள் குறுக்காகத் தலேயிட்டு "நான் இன்றிரவு 10-மணிக்கு சுந்தரராஜு சிரித்துப் பேசியதாகப் பிரமாண வாக்குமூலம் கொடுக் கிறேன். அத்துடன் சுந்தரராஜு இந்த வீட்டில்தான் மறைந்திருக்க வேண்டுமென்றும், தாசி செல்லத்தையும் இங்கு எங்கேயோ மறை த்து வைத்து இப்போதுகூட ஹிம்சைக்குட் படுத்திக்கொண்டிருக்கி ருர்களென்றும், இப்பொழுதே இவ்வீட்டைச் சரியானபடி சோதனை செய்யாவிட்டால் சுந்தரராஜு தப்பி ஓடி விடுவதோடு, தாசி செல்ல த்தின் கஷ்டத்திற்கோ அல்லது மரணத்திற்கோ போலீசாரே காரண கர்த்தாக்களா யிருப்பார்களென்றும், ஆகையால் தயவு செய்து உட னே வாரண்டு கொடுக்கவேண்டும் என்றும் சொன்னுர் டெப்டி மாஜி ஸ்டிரேட் அதற்கு பதில் சொல்லாமல் ஸ்ரீனிவாசலுராஜுவைப்பா ர்த்துத் தான் கேட்ட கேள்விக்கு என்ன ஜவாபு சொல்லுகிறீர்கள் என்று கேட்பது போல் அவர் பக்கம் திரும்பினுர்.

ஸ்ரீநிவாசலு ராஜு:—ஐயா! போலீஸ் இன்ஸ்பெக்டரவர்கள் பிரமாண வாக்கு மூலத்தின் பேரில்என் மகன்இந்தஅரண்மனையிலே இருக்கிறானென்றும், தாசி செல்லத்தைப் பலாத்காரமாய் அழைத்து வைத்துஆபத்துக்குள்ளாக்குகிறானென்றும்சொல்லி வாரண்டு கேட்கும் போது, தாங்கள் என் வெறும் வார்த்தையை நம்பி வாரண்டு கொடாமலும் தேடாமலும் போய் விட்டால்தங்கள் நற்பேருக்கு அதிக கேவலம்* ஏற்படஹேதுவுண்டு. அவ்வாறு தங்கள் நற்கியாதிக்கும் புகழுக்கும் மாசு படியும்படியான காரியம் செய்வதில் எனக்கு இஷ்டமில்லை. ஆகையால் தாங்கள் தயவு செய்து அவர் கேட்கிறபடி வாரண்டு கொடுத்து, தாங்களும்,கனம்போலீஸ்ஸூப்பிரண்டன்ட்துரையவர்களும் அவருடன்ஒத்துழைத்தாசரியானபடி என்வீட்டைச்சோதனைசெய்து பார்க்க வேண்டியது அவசியம். இப்படி இப்போது செய்யாவிட்டால் இன்று ஒருநாள்ஏற்படும் அவமானத்திற்குப் பதிலாகப் பல முறை நான் அவமானமடையும்படி நேரிடும். ஆகையால் முன்பின்யோசனை செய்யாது வாரண்டு கொடுப்பதுடன்,தாசி செல்லத்துக்கு என்றால் நேரிடக்கூடிய—ஏன்—நேரிட்டுக் கொண்டிருக்கிற ஆபத்திலிருந்தும் உடனே அவளைத் தப்புவியுங்கள் வீண் யோசனை செய்ய வேண்டாம்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—இப்போது கூட என் கேள்விக்குத் தாங்கள் நேரான பதில் சொல்லவில்லையே.

ஸ்ரீநிவாசலு:—தயவு செய்து தாமதியாமல் தேடுங்கள். தாங்கள் தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் தாசி செல்லத்தின் ஆபத்து அதிகமாகும். அவ்வாபத்தால் அவளுக்கு நேரும் கஷ்டத்தைவிட, பாவம் இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவ் அவர்களுக்கு அதிக கஷ்டம் ஏற்படுகிறதாக அவரது காதல் முகம் காட்டவில்லையா?

என்றார். உடனே ஸ்ரீநிவாசலு ராஜாவின் முகத்தைப் புன்சிரிப்புடன் பார்த்துவிட்டு, வாரண்டுஎழுதி ஸ்ரீநிவாசலுராஜுவிடம் காட்டி விட்டு எல்லோருமாக அவ்வீடு முழுவதிலும் அக்கரையுடன் தேடிப் பார்த்தார்கள். சுந்தரராஜுவாவது, தாசி செல்லமாவது, சந்தேகப்படக் கூடிய எந்த வஸ்துவாவது நபராவதுஅவ்வீடு முழுவதிலும் அகப்படவில்லை. உடனேபோலீஸ் இன்ஸ்பெக்டரைப்பார்த்து

டெப்டி மாஜிஸ்டிரேட்:—நிஷ்காரணமாய் இந்த அர்த்த இராத்திரியில் மஹாகௌரவம் பொருந்திய ஸ்ரீமான் ஸ்ரீநிவாசலு ராஜு அவர்கள் வீட்டைச் சோதனை போட என்ன காரணம் ஏற்பட்டது

தயவு செய்து நான் கேட்கும் கேள்விகளுக்கு உண்மையான பதில் கொடுங்கள். சுந்தரராஜு அவர்கள் பேசிய சத்தம் கேட்டதாகச் சொன்னீர்களே! எங்கு எப்போது கேட்டீர்கள்?

என்றார். தாசி செல்லமும் தானும் ஏகாந்தமாயிருக்கும்போது கேட்டதாகச் சொன்னால் தன்னைப்பற்றிக் கேவலமாய் எண்ணுவார்களென நினைத்து "நான் பென்ஷன்ட் டெப்டி கலெக்டர் மாதவ ராஜு வீட்டுப் படிவழியாய் போகும்போது கேட்டேன்" எனப் பொய் சொன்னார்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—எங்கிருந்து வந்தீர்?

காமாக்ஷிராவ்.—எங்கிருந்து? என் வீட்டிலிருந்து பீட் வரும் போது தான்.

டெப்டி மாஜிஸ்டிரேட்.—ஓர் வீட்டுக்காரர் வீட்டைப் பூட்டிக் கொண்டு அயலூர் சென்றிருக்கும் போது யாரோ ஒருவருடைய சத்தம் வீட்டில் கேட்டதாக நினைத்து அவ்வீட்டின் கதவை யுடைத்து உள்சென்று தேடுவது சரிதானா? இப்படித்தானா நீர் போலீஸ் இன்ஸ்பெக்டர் உத்யோகம் செய்வது?

காமாக்ஷிராவ்:—சாதாரணமாய் அவ்வாறு செய்வது பெரிய தவறுதல்தான். ஆனால் பிரபலமான கைதி அவ்விடத்தில் ஒளித்திருக்கிறானென உண்மையில் நினைத்து அவனைப்பிடிக்கும் ஊக்கத்தில் சட்ட விரோதமான காரியமா அல்லவாவெனக்கூட ஆழ்ந்து யோசியாமல் அவ்வாறு செய்தது நியாமல்ல வென்றே நினைக்கிறேன்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:-போகட்டும்; அதிக்கிரமித்துக் கதவை உடைத்து விட்டீரே! நீங்கள் அவ்விடத்தை விட்டு ஸ்ரீனிவாசலு ராஜுவின் அரண்மனைக்குச் சென்றபோது அவ்வீட்டிலிருந்த சாமான்களை எவராவது எடுத்துப் போகாதபடி வீட்டைத்திரும்பவும் பூட்டிவிட்டாவது அல்லது தக்க ஏற்பாடு செய்து விட்டாவது வந்தீரா?

காமாக்ஷிராவ்.—அங்கு சுந்தரராஜு இல்லாமல் வெறும் வீடாயிருந்ததும் உடனே செல்லம் இருந்த இடம் சென்றேன்.

என்றதும், செல்லம் என்ற பெயரைச் சொல்லி விட்டோமே எப்படித் திருப்புவது என மயங்கினார்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—தாங்கள் விட்டு விட்டு வந்த தாசி செல்லத்தை அங்கு காணமற் போகவே பக்கத்து வீட்டுக் கதவைச் சட்ட விரோதமாய் உடைத்ததை மறந்து தாசி செல்லத்தைக் கண்டு பிடிப்பதில் கவனம் செலுத்தி இங்கு ஓடிவந்தீர் போலிருக்கிறது.

காமாக்ஷிராவ்:—நான் வீட்டிலிருந்து பீட் பார்த்து வந்ததாகச் சொன்னேனே தவிர, தாசி செல்லம் வீட்டிலிருந்து வந்ததாய்ச் சொன்னதாக ஞாபக மில்லையே!

டெப்டி மாஜிஸ்டிரேட்:—நீர் நேராய் அப்படிச் சொல்லவில்லை. ஆனால் அப்படித் தானிருக்கு மென்று நான் நினைத்தேன். ஏனென்றால் ஒருவர் ஒன்றைத் தேடிப் போய் அகப்படா விட்டால் எங்கு செல்வார்கள்? இன்னோரிடத்தில் இருப்பதாகத் திட்டமா யறிந்தாலல்லாமல், எங்கிருந்து வந்தார்களோ அல்லது எங்குபோக உத்தேசித்திருந்தார்களோ அங்கு மறுபடியும் செல்வதுதான் மனித இயற்கை. தாம் தாசி செல்லத்தின் படுக்கை யறைக்குச் சென்றதால் அங்கிருந்து தான் வந்திருக்கலாமென நினைத்தேன்.

காமாக்ஷிராவ்:—இல்லை. தாசி செல்லத்துக்கும் சுந்தரராஜுவுக்கும் இஷ்டமாதலால் ஒருக்கால் அங்தான் சத்தம் கேட்டிருக்கலாமென நினைத்துச் சென்றேன்.

டெப்டி மாஜிஸ்ட்ரேட்:—சரி; அதைப்பற்றி அவசியமில்லை. ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்யல்ல, ஒன்பதாயிரம் பொய் சொன்னாலும் பொய் பொய்யாகவே முடியும் என்பதை நீர் அறியீரோ? இந்த ஜில்லாவிலேயே நீர் மஹா யோக்கியரென நினைத்து உமதுபேரில் நம்பிக்கை வைத்து நான் உமக்கு சிபார்சு செய்து இங்கு அனுப்பியதற்கு இவ்வாறு பிரதியுபகாரம் செய்ததோடு வாய்க்கு வந்தபடி உளறவும் ஆரம்பித்து விட்டீர். இன்னும் உமது வாயிலிருந்து அதிகமான பொய்வார்த்தைகளை வரவழைக்க எனக்கு இஷ்டமில்லை. இன்னும் நான் கேட்டால் சுந்தரராஜு பேசிய வார்த்தைகளை நீர் திட்டமாய்க் கேட்டதாகவே சாதிப்பீர்.

இன்ஸ்பெக்டர்.—உண்மையாய்க் கேட்டேன். நான் மாத்திரம் கேட்கவில்லை. "செல்லம்"............

டெப்டி மாஜிஸ்ட்ரேட்.—மறுபடியும் செல்லத்தின் பேர் தான் வருகிறது. செல்லம் கூடக் கேட்டாளோ?

இன்ஸ்பெக்டர்.—தங்களிடம் நான் அங்கிருந்தேனென்று சொல்ல சங்கோசப்பட்டதின் பயனாகப் பொய்யனாகி விட்டேன். தாங்கள் வேண்டுமானால் செல்லத்தைக் கண்டு பிடித்து அவளைக் கேட்பீர்களாகில் உண்மை விளங்கும்.

டெப்டி மாஜிஸ்ட்ரேட்:—செல்லத்தைத் தவிர வேறு யாராவது கேட்டார்களா?

இன்ஸ்பெக்டர்:—இல்லை. அவளும் நானும் தான் கேட்டோம்.

டெப்டி மாஜிஸ்ட்ரேட்:—அவள் இல்லையென்று சொன்னாள்?

இன்ஸ்பெக்டர்:—ஒருக்காலும் என் செல்வம்—செல்லம்—அவ்வாறு சொல்ல மாட்டாள்.

டெப்டி மாஜிஸ்ட்ரேட்:—இரண்டு மூன்று வாரங்கள் அவளுடன் இஷ்டமாயிருந்ததைக் கொண்டே உமக்கு அவளிடம் அவ்வளவு நம்பிக்கையிருந்தால், வருஷக் கணக்காய் சுந்தரராஜுவின் சொத்தைத் தின்றவள் உமக்கு அனுகூலமாகச் சொல்வாளென்று நீர் கனாக் காணுகிறீரா; என்ன?

இன்ஸ்பெக்டர்:—உங்களுக்கு அவளுடைய குணம் நன்கு தெரியாது. அவளுக்கு என் பேரிலிருந்த அபிமானத்திற்குத் தன் பிராணனைக் கூடக் கொடுத்து விடுவாள். அவள் வாயிலிருந்து ஒரு பொய் கூட வராது. வெகு யுத்திசாலி, மகா உத்தமி.

டெப்டி மாஜிஸ்ட்ரேட்:—ஆனால் அவள் பிரமாணவாக்கு மூலம் கொடுத்தால் நீர் அதை உண்மையல்லவென மறுக்கவே மாட்டீர்!

இன்ஸ்பெக்டர்:—ஒருக்காலும் மறுக்க மாட்டேன். தாங்களும் ஒருமுறை அவளுடன் பேசினால் தான் அவளுடைய சிறந்த குணம் தங்களுக்குத் தெரியும்.

டெப்டி மாஜிஸ்ட்ரேட்:—நீ இவ்வளவு விவேக சூனியனென்பதை இப்போதுதான் கண்டேன். ஒரு தாசியிடம் போய்ப் பேசி அவளது குணத்தை யறியும்படிப் போதிக்கிறாயோ? அடமுட்டாளே என்றார். காமாக்ஷிராவ் தலையைத் தொங்கவிட்டு நின்றார்.

ஸ்ரீனிவாசலு ராஜு தனது படுக்கையறையை விட்டு வரவேயில்லை. திருப்தி யடைந்த முகத்துடன் உட்கார்ந்திருந்தார். எல்லோருமாக அங்கு வந்து சேர்ந்து அகாலத்தில் அவரை எழுப்பி அவஸ்தைக் குள்ளாக்கினதற்காக மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள்.

ஸ்ரீனிவாசலு ராஜு:—ஐயா! தாங்கள் அதைப்பற்றி வருந்தவே வேண்டாம். தலைமுறை தத்துவமாய் கௌரவமாகப் பிழைத்த வீட்டிற்குச் சனியன் பிடித்ததால்தான் இவ்வாறெல்லாம் நடந்தேறுகிறது. அது சனியன் கூற்றே யொழிய வேறல்ல. அதைப்பற்றி சிந்தனையில்லை. தயவு செய்து இந்த அர்த்த ராத்திரியில் இங்கு என்ன காரணமாய் நீங்களெல்லோரும் வந்தீர்களென்று தெரிவியுங்கள்.

டெப்டி மாஜிஸ்ட்ரேட்—காலையில் இங்குவந்து விட்டு நானும் போலீஸ் சூப்பிரன்டென்டன்ட் துரையவர்களும் குலசேகர பட்டண

மரைக்காயர் கொலையைப் பற்றி விசாரணை செய்வதற்காக திருச்செந்தூரில் முகாம் போட்டிருந்தோம். அப்போது தாசி செல்லம் இரவு சுமார் 11-மணிக்கு வந்து என்னிடம் பிரமாண வாக்கு மூலம் கொடுக்க விரும்புவதாக அவசரமாகச் சொல்லி அனுப்பினாள். தாசியாவது இரவு 11-மணிக்கு ஏகாந்தமாய்ப் பிராமண வாக்கு மூலம் கொடுக்க வாவது என நினைத்து மறு நாள் வரும்படிச் சொன்னேன். அப்போதே பிரமாண வாக்கு மூலம் வாங்கிக் கொண்டு வேண்டிய நடவடிக்கைகள் நடத்தா விட்டால் பல கொலைகள் நடக்குமென்று சொல்லியனுப்பினாள். உடனே லக்ஷ்மி தோப்பில் டேரா அடித்து வேலை செய்து இரண்டு கனவான்களையும் வரவழைத்து வைத்துக் கொண்டு அவளை அழைத்துவரும்படி உத்திரவு செய்தேன். அவள் பின்வருமாறு பிரமாண வாக்கு மூலம் கொடுத்தாள். அதை வாசிக்கிறேன் கேளுங்கள்:—

திருநெல்வேலி ஜில்லா திருச்செந்தூர் தாலுக்கா திருவீரராஜப் பட்டணத்தில் ம-Iா-ஸ்ரீ சுந்தரராஜு அவர்கள் சம்சாரமாகிய சாரதாம்பாள்வீட்டில் வசிக்கும் தேவதாசி லக்ஷிமி குமாரத்தி தேவதாசி செல்லம் திருச்செந்தூர் முருகக் கடவுள்மீது பிரமாணம் செய்து எழுதிக்கொடுக்கும பிரமாண வாக்கு மூல பத்திரம் என்ன வென்றால்:—

சுந்தரராஜு தேசாந்தரம் போனபின் இன்ஸ்பெக்டர் காமாக்ஷி ராவ் அவர்கள் அடிக்கடி என் வீட்டிற்கு வந்து சுந்தரராஜு அவர்களை அவர் போக விட்டதின் மூலமாய் அதிகாரிகளுக்கு அவர் பேரில் அசூயை உண்டாயிருப்பதாயும், எப்படியாவது திரும்பவும் பிடித்துக் கொடாவிட்டால் தனக்கு அகௌரவம் ஏற்படுமென்றும். அதற்காக எனது உதவிதேவை என்றும் சொன்னார். எங்கள் குலம் தாசி குலமாயினும் நானாவது எனது தாயாராவது உண்ட வீட்டில் கிண்டி தூக்கப் பட்டவர்களல்ல வென்றும் சுந்தரராஜுவுக்குப் பிரதி கூலமான காரியம் செய்ய ஒருநாளும் சம்மதிக்க மாட்டோமென்றும் சொன்னேன், அப்பால் சில தினங்கள் பொறுத்து ஒரு விளம்பரத்தைக் கொண்டுவந்து என்னிடம் கொடுத்து அதில் என்னைக் கையெழுத்து போடச் சொன்னார். நான் மறுத்து விட்டேன். பின் சிலநாட்கள் பொறுத்து அவ்விளம்பரம் சுதேச மித்திரன் பத்திரிகையில் வெளிவந்தது. நான் கையெழுத்து போட மறுத்திருக்கும்போது எவ்வாறு அவ்விளம்பரத்தைப் பிரசுரம் செய்யலாமென்று கேட்டேன். அதற்கு சரியான ஜாவாபு சொல்லாமலிருந்து விட்டார். இன்று மத்யானம் என் வீட்டிற்கு வந்து இன்றிரவு 10-மணிக்கு என் வீட்டிற்கு சுந்தர ராஜு அவர்கள் வந்து என்னை பலாத்காரமாய் ஹிம்சித்துக் கொண்டு போய்விட்டதாகக் கட்டுமானக்கேஸ் ஜோடித்து ஸ்ரீனிவாசலு ராஜுவையும் அவர் இரண்டாவது பத்தினியையும்

வாரண்டில்லாமலே அவர்கள் வீட்டிற்குச் சென்று சிறைப்படுத்தி கைகால்களில் விலங்குகள் மாட்டி போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போய் வைத்துக் கொண்டு அவர்களை ஹிம்சித்து எப்படியாவது சுந்தரராஜுலுவின் இருப்பிடமறிந்து, அவனைப்பிடிக்கப் போவதாகவும் அதற்கு நான் வேண்டிய உதவி புரிய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். நான் மறுக்கவே அவர்களுக்கு ஏற்படும் கதி எனக்கும் ஏற்படுமென்று பயமுறுத்தினர். எப்படியாவது அவரிடமிருந்து தப்பி ஓடிவிட வேண்டுமென்று சமயம் எதிர்பார்த்திருந்தபோது என் பக்கத்து வீட்டில் டென்ஷண்ட் டெப்டி கலெக்டர் மாதவராஜுலு குடியிருந்து சென்னைக்கு அவர் புத்திரனுகிய பால ரங்கனைப் பார்க்கப்போயிருப்பதால் அவ்வீட்டில் சுந்தரராஜுலு பேசிய சத்தம் கேட்டதென்று சொல்லி, தான் வெளியிலிருந்து பிகில் ஊதப்போவதாகவும் போலீசார் உதவிக்கு வந்ததும் கதவை உடைத்து உள்புகுந்து பார்த்து விட்டுத் தானும் போலீசாரும் ஸ்ரீனிவாசலு ராஜுலுவின் அரண்மனைக்குப் போய் அவர்களைச் சிறையிடப் போவதாகவும் அப்போது தன்னால் தீர்மானிக்கப் பட்டிருப்பவர்கள் டென்ஷண்ட் டெப்டி கலெக்டர் மாதவ ராஜாவின் வீட்டில் புகுந்து கொள்ளையிடப் போவதாகவும், அப்படிக் கொள்ளையிடப்படும் சொத்தில் பாதி பாகம் எனக்குக் கொடுப்பதாகவும் தெரிவித்தார். அச்சமயம் மாறிப் பேசுவேனுகில் எனக்கு கெடுதல் ஏற்படுமெனப் பயந்து மௌனமாயிருந்து அவர் பக்கத்து வீட்டில் போய் பிகில் ஊதினதும் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் அங்கிருந்து ஓட்டமும் வந்து ஸ்டேஷன் டிராம் வைத்து இங்கு வந்து சேர்ந்தேன். ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலுராஜுலுகாரு அவ்வளவு சுலபமாய் இவர் கையில் அகப்பட மாட்டாரென்றும் ஜல்தியாய் போகாவிட்டால் கொலைகள் சம்பவிக்குமென்றும் தீர்மானித்து இங்கு ஓடிவந்தேன். இப்பிரமாண வாக்கு மூலம் யாருடைய நிர்ப்பந்தமுமில்லாமல் புத்தி சுவாதீனத்தோடிருக்கும்போது எழுதிக் கொடுக்கிறேன்.

சாக்ஷிகள் — தாசி செல்லம்

கிர்வான், போலீஸ் சூப்பிரண்டன்ட்
நாராயணசாமி நாயுடு, மிராசுதார்
சுப்பராய பிள்ளை, ஜில்லா போர்டு மெம்பர்
இந்தப் பிரமாண வாக்குமூலம் என் முன் கொடுக்கப்பட்டது.

ஒப்பம் ராமானுஜலு நாயுடு,
டெப்டி மாஜிஸ்டிரேட்.

காமாக்ஷிராவ்:—இப்பேர்ப்பட்ட பிராமண வாக்கு மூலம் செல்லம் ஒரு காலும் கொடுத்திருக்க மாட்டாள். இது யாரோ மோசடியாய் அவளைப்போல் வந்து தங்களைஏமாற்றி அவள்பேரால் கொடுத்திருக்கிறார்கள். இது என்ன முழு மோசமாயிருக்கிறதே!

என்றார். உடனே டெப்டி மாஜிஸ்டிரேட் ஒரு படத்தைக் காட்டி "இது யாருடைய படமென்று பாரும்" என்று சொன்னார்.

காமாக்ஷிராவ்:— இது செல்லத்தின் படம் போல் தான் இருக்கிறது. இப்படம் தங்களுக்கு எங்கிருந்து கிடைத்தது?

டெப்டி மாஜிஸ்டிரேட்:—தயவு செய்து படத்தைத் திருப்பிப் பாரும். விவரமாய் நீரே அறிந்து கொள்ளலாம்.

என்றார் திருப்பிப்பார்க்க 109-ம் நம்பர்பிரமாண வாக்குமூலம் கொடுத்த வளின் படம் என்று அப்பிரமாண வாக்குமூலத்தில் சாக்ஷி போட்டோ ரெல்லாம் அதிலும் கையொப்ப மிட்டிருக்கக் கண்டார்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—தாசி செல்லம் பிராமண வாக்குமூலம் கொடுத்திருந்தால் அதை உண்மையென்று நம்பவேண்டு மென்று சற்று நேரத்திற்கு முன் சொன்னீரே! இப்போதென்ன சொல்லுகிறீர்?

என்றார். அப்போது ஒரு சப்இன்ஸ்பெக்டர் வந்து டெப்டி மாஜிஸ்டிரேட்டிடம் ஏதோ கிசு கிசு வென்று சொன்னார்.

டெப்டிமாஜிஸ்டிரேட்:—காமாக்ஷிராவ்! நான் அனுப்பிய சப்இன்ஸ்பெக்டர் வந்து நீர் கதவை உடைத்த பெண்ஷண்ட் டெப்டி கலெக்டர் மாதவராஜுவின் வீட்டின் காரியஸ்தன், மார்த்தாண்டம் பிள்ளை வீட்டில் பாரதம் கேட்டு விட்டு வந்ததும், வாசலில் போலீசார் நிற்பதைக்கண்டு ஆச்சரியப்பட்டு என்ன விசேஷமென கேட்டதாயும், கதவு உடைக்கப்பட்ட வீட்டுக்கு அவர்கள் என்உத்தரவின் பிரகாரம் காவல் இருப்பதாய்ச் சொன்னதாகவும், அவர் இன்ஸ்பெக்டரையும் அழைத்துக்கொண்டு வீட்டுக்குள் சென்று விளக்கு ஏற்றிப் பார்த்ததில் பெரிய இரும்புப்பெட்டி உடைக்கப்பட்டு அதிலிருந்த ஐம்பதாயிரம் ரூபாய் பெருமான ரொக்கம்,நகைகள் முதலியன திருடு போனதாகவும் தெரிவிப்பதாய்ச் சொல்லுகிறார். என்ன சொல்லுகிறீர்? உமக்கு இஷ்டமிருந்தால் பதில் தெரிவிக்கலாம்.

என்றார். இஷ்டம் இருந்தால் பதில் தெரிவிக்கலாம் என்று சொன்னதும் தான் குற்ற வாளியென மாஜிஸ்டிரேட் மதித்து விட்டாரென அறிந்ததும் அப்படியே மயக்க முற்றுக் கீழே சாய்ந்துவிட்டார். முகத்தில் தண்ணீர் அடித்து மூர்ச்சை தெளிவித்தனர்.

ஐந்தாவது அத்தியாயம்

ஆச்சரியத்திலும் ஆச்சரியம்

கண்டதும் கேட்டதும் பொய்யாக மாறலாம்.

டெப்டி மாஜிஸ்டிரேட்டும் சூப்பிரன்டென்டன்ட்டும் யோசனை செய்து காமாக்ஷிராவை வேலையிலிருந்து மறு உத்தரவுவரையில் நிறுத்தி விட்டதாக (அதாவது ஆங்கிலபதப்பிரயோகமாகிய சஸ்பெண்ட் செய்திருப்பதாக) உத்தரவு கொடுத்துவிட்டு சூப்பிரன்டென்டன்ட்டை இரும்புப் பெட்டியின் திருட்டைப்பற்றி ஆராயும்படி சொல்லிவிட்டு டெப்டி மாஜிஸ்டிரேட், ஸ்ரீனிவாசலு ராஜுவிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு தமது முகாமிற்குச் சென்றார். அவர் மனமானது வழக்கத்திற்கு மாறாகக் குழப்பமடைந்திருந்தது. ஏனென்றால் அன்று நடந்தேறிய சம்பவங்களில் எது உண்மையென்றும் எது உண்மையல்லவென்றும் அவருக்கே பல சந்தேகங்கள் உதித்தன.

என்ன அநியாயமிது! லஞ்சம் வாங்கியும், பொய் சாக்ஷியங்கள் தயாரித்தும், அபாண்டமாய்க் குற்றமற்றவர்களைக் குற்றவாளிகளாக ருஜுப்படுத்தி சிக்ஷை செய்வித்தும், இன்னும் அளவற்ற அக்கிரமங்கள் செய்து கொண்டும் இருப்பவர்களெல்லாம் பெரும் பிரக்கியாதியும் பெற்று வாழ்ந்து கொண்டிருக்க, என் மனசாக்ஷிக்கு விரோதமில்லாமலும் நியாயந் தவறாமலும் நடந்து வந்த இந்த காமாக்ஷிராவுக்கா இக்கெதி வருவது? பாகாரி சகோதரன் எனப் பேர் வாங்கிய நான் செல்லத்தின் வீட்டில் கால் வைக்க எவ்வளவு நடுங்கினேன்? அவளுடைய உதவி இல்லாவிட்டால் சுந்தரராஜுவைப்பிடிக்கமுடியாதென்னும் ஒரே எண்ணத்தினால் தூண்டப்பட்டு செல்லம் தேவரடியாள் தானே! அவளிடம் உறவாடுவதில் பாதகமில்லையென நினைத்து மூட மனதுக்கு வேலைக்குத் தகுந்தபடி மூட சமாதானம் செய்து தூங்கவைத்து அவள் இல்லம் சேர்ந்தாலல்லவா இக்கெதிக்கு ஆளானேன். என்னை வேலையினின்று நிறுத்திவிட்டதற்காகவாவது என்னை கேவலமாய் பேசுவதற்காகவாவது, நேற்றையவரையில் புலியைக் கண்டு பதுங்கும் பூனைகளைப் போல் பயந்திருப்பவர்கள் இன்று நான் தெருவில் வரும்போது காரி என் முகத்தில் துப்புவதைப்போல் கீழே துப்பியதற்காகவாவது வருந்தவில்லை. பின் எதற்காக வருந்துகிறேனென்றால் சத்தியந் தவறாத டெப்டி மாஜிஸ்டிரேட் என்

னைப்பற்றி சந்தேகிக்கும்படிக்கான ஹேஸ்யங்களைத் தேடிக் கொண்டதற்காகவே வருத்தப்படுகிறேன். இனி வருந்தித்தான் என்ன பயன்? ஆயினும் எனக்கிருக்கும் கொஞ்சம் பிதிரார்ஜ்ஜித சொத்தைச் செலவழித்தாகிலும் டெப்டி மாஜிஸ்டிரேட் நினைக்கிறபடி நான் அயோக்கியனல்லவென்று அவருக்குத் திருப்தியாகும்படி ரூபிக்க வேண்டியது அத்யாவசியம். இப்போது எனது யுத்தி சிதறி இருப்பதாலும், இவ்வளவு சிக்கலான விஷயத்தைத் துப்புத் துலக்கப் போதிய திறமையில்லாததாலும் எனது நண்பர் திருவல்லிக்கேணித் துப்பறியும் கோவிந்தனுக்குத் தந்தி கொடுத்து அவரை வரவழைத்து அவரைக் கொண்டுதான் காரியம் நடத்தி சித்தி பெற வேண்டும். ஆகையால் இப்போதே அவருக்குத் தந்தி கொடுத்து வரவழைக்கிறேன் என்று நினைத்தும் வீட்டிற்குப் போய் ஓர் தந்திபாரம் எடுத்து எழுதப் போகும் போது, ஒருக்கால் கோவிந்தன் ஏதாவது முக்கியமான வேலையிருந்தால் வரமாட்டாரே! ஆகையால் நேரில் போய் சாத்தியமானால் கூட அழைத்துக் கொண்டும், வர சௌகரியக்குறைவாயிருந்தால் அவரிடம் விஷயங்களை விவரமாய்ச் சொல்லி அவர் யோசனைக் கேட்டு அதன்படி நடக்கலாமெனவும் நினைத்துச் சென்னைக்குச் சென்றார். டெப்டி மாஜிஸ்டிரேட்டாரவர்கள் திருவீரராஜன் பட்டணத்திற்கு வந்து திரும்புங்காலையில் உண்மை யின்னதென அறியாமல் மனக்குழப்பத்துடன் சென்றதாகச் சொன்னோமல்லவா? அவர் திருச்செந்தூர் சென்றதும் திருவல்லிக்கேணித் துப்பறியும் கோவிந்தனை உடனே சௌகரியப்பட்டால் வரும்படி தந்தி கொடுத்தார். தந்தி கொடுத்த மறுநாள் இரவு 10-மணிக்கு டெப்டி மாஜிஸ்டிரேட் ஏகாந்தமாய் வேலை செய்து கொண்டிருக்கும் போது கோவிந்தன் அவ்வறைக்குள் வந்து வந்தனோபசாரம் செய்தார். டெப்டி மாஜிஸ்டிரேட் அவருக்கு ஆசனமளித்து அருகில் உட்காரச் சொல்லி எழுந்து கதவடைக்கப் போனார். கோவிந்தன் தான் கதவைத் தாளிட்டு வந்ததாகச் சொல்லி சமாச்சாரம் கேட்டார், டெப்டி மாஜிஸ்டிரேட் நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லி காமாக்ஷிராவைப் பற்றி என்ன நினைக்கிறீரென்று கேட்டார். கோவிந்தனுக்கு காமாக்ஷிராவைப்பற்றித் தெரிந்த வரையில் மனித இயற்கையை நம்புவதாகில் காமாக்ஷிராவ் நியாயந் தவறி நடந்திருக்க மாட்டாரென்றே நம்புவதாகவும் அவரைக் கண்டு பேசி யெல்லா விஷயங்களையும் சீர்தூக்கிப் பார்த்துப் பின் விவரமாய்ச் சொல்வதாகச் சொல்லிவிட்டு,

கோவிந்தன்:—தாங்கள் சொல்வதைப் பார்த்தால் தாங்கள் சோதனை போட்ட காலையில் சுந்தராராஜுலு அரண்மனையில் ஏதாவது இரகசியமான இடத்தில் இருந்திருக்க வேண்டுமென்று நினைப்பதாக அல்லவா தோன்றுகிறது.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—ஆம்! ஏனெனில் நான் மும்முறைகேட்டும் ஸ்ரீனிவாசலுராஜுலு அதற்கு நேரான பதிலளிக்கவுமில்லை; சுந்தராராஜுலு அரண்மனையிலில்லை யென்று சொல்லவுமில்லை. அந்த முட்டாள் காமாக்ஷிராவின் முடஅவசரத்தினால்வாரண்ட் கொடுக்கும்படி நேரிட்டது. இல்லாவிட்டால் சுந்தராராஜுலுவை அப்போது பிடிக்க சாத்யமாகாவிட்டாலும் ஸ்ரீனிவாசலுராஜுலு என்னிடம் பொய்சொல்லமாட்டாராதலால் உண்மை யறிந்திருப்பேன். இனி அதைப்பற்றிக் கேட்க சந்தர்ப்பம் ஏற்படாது.

கோவிந்தன்:—ஆனால் சுந்தராராஜுலு இன்னும் அவ்விடத்திலிருப்பதாகத் தாங்கள் நினைக்கிறீர்களா?

டெப்டி மாஜிஸ்டிரேட்:—இல்லை. ஏனெனில் சுந்தராராஜுலுவால் சேர்ந்தார்ப் போல் சில மணிநேரங்கூட ஒரே இடத்தில் இருக்க முடியவே முடியாது. அவர் அதைவிட பிராணத்யாகம் செய்து கொள்வது நலமென நினைக்கக் கூடியவர். மேலும் ஸ்ரீனிவாசலுராஜுலு அப்படி சட்ட விரோதமானகாரியங்களைச் செய்யப்பட்டவரல்லர். சுந்தராராஜுலுவும் யோக்யர் தான். ஆனால் தனது இஷ்டத்திற்கு மாறாக நடக்கப் பார்க்கப் சஹிக்கமாட்டார். முற்காலத்தில் அரசாண்ட அரசர்களுக்கு எவ்வளவு உரிமையும் சுயேச்சையும் இருந்ததோ அவ்வளவும் இக்காலத்தில் கூடத்தனக்கிருப்பதாகப் பைத்தியக்காரத்தனமாய் ஓர் அகந்தை கொண்டவர். அதுதான் அவருடைய கஷ்டங்களுக்கெல்லாம் காரணம்.

கோவிந்தன்:—இப்போது என்னை எதற்காக வரவழைத்தீர்கள்? நான் செய்ய வேண்டியது என்ன? சுந்தராராஜுலு எங்கிருக்கிறாரென்று கண்டு பிடிக்கச் சொல்லுகிறீர்களா? என்ன?

டெப்டி மாஜிஸ்டிரேட்:—அது போலீசாருடைய வேலை. நமக்கு அதைப்பற்றி அக்கரையில்லை. தாங்கள் செய்ய வேண்டியது ஒன்றுதான். அதாவது உண்மையில் காமாக்ஷிராவ் லஞ்சம் வாங்கினானா? இல்லையாவென்றும், தாசி செல்லத்தின்வீட்டிற்குப் போனது அவள் மூலமாய் சுந்தராராஜுலுவைப் பிடிப்பதற்காகவா? அல்லது காம வேட்கை கொண்டாவென்றும், அவன் யோக்கியனாகில் அவனுக்கு விரோத

மான காரியாதிகள் செய்யப்பட்டவர்கள் யாரென்றும், தீர்மானமா ய்க் கண்டுபிடிக்க வேண்டும். உண்மையில் காமாக்ஷிராவின் குணம் மாறிவிட்டதெனத் தங்கள் மனதில் பட்டுவிட்டால் அத்துடன் தங் கள் ஆராச்சியை நிறுத்திக் கொள்ளுங்கள். மாமூல் சட்டப்பிரகாரம் நடப்பன நடக்கட்டும். அவன் குணம் மாறவில்லை யென்றும் அவன் விரோதிகளின் சூழ்ச்சிதானென்றும் தங்கள் மனதில்பட்டால் அவ னைத்தப்பவைப்பது அவசியம். தங்கள் அதற்கனுகூலமான காரியா திகளைச் செய்யவேண்டும். மேலும் பெண்ஷண்ட் டெப்டி கலெக்டர் மாதவராஜு வீட்டில் திருடுபோன சொத்துக்களையும் கண்டுபிடிக்க வேண்டும். அது மாமூலான திருடர் கூட்டத்தாரால் செய்யப்பட வில்லை யென்ற வரையில் நான் திட்டமாய்த் தெரிந்து கொண்டேன். ஆகையால் காமாக்ஷிராவின் விரோதிகள் இன்னாரென்று ஏற்பட்டால் அவர்கள் மூலமாய்த் திருட்டுச் சொத்துக்களைக் கண்டுபிடிக்கலாம். அல்லது திருட்டுச்சொத்துக்களைக் கண்டுபிடித்தால் காமாக்ஷிராவின் விரோதிகள் இன்னாரென்று ஏற்பட்டுவிடும். அல்லது களவு போன சொத்துக்களும் காமாக்ஷிராவிடம் அகப்படும். ஆகவே திருடுபோன சொத்தைக் கண்டு பிடித்தால் எல்லா விஷயங்களும் விவரமாய்த் தெரிந்து விடும்.

கோவிந்தன்:—நல்லது. தாங்கள் அபிப்பிராயத்தின்படியே கண்டு பிடிக்கப் பிரயாசைப் படுகிறேன். தங்களுக்கு உண்மையாய் ஸ்ரீனிவாசலு ராஜு இத்திருட்டில் சம்மந்தப்பட்டிருக்க மாட்டா ரென்றே தோன்றுகிறது போலிருக்கிறது.

டெப்டி மாஜிஸ்டிரேட்.—ஸ்ரீனிவாசலுராஜு அவர்களை எனக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவு தங்களுக்கும் தெரியும். ஆகையால் என் உண்மையான அபிப்பிராயத்தைத் தாங்கள் அறிவீர்கள்.

என்றார். உடனே கோவிந்தன் ஏதாவது அவசியம் நேரிட்டால் அவரை வந்து பார்த்தாகச் சொல்லிவிட்டு திருவீரராஜ பட்டணம் சென்று ஸ்ரீனிவாசலுராஜு அவர்களின் அரண்மனைக் குப் போய் தனது பேர் பதித்த சீட்டைக் கொடுத்தனுப்பினார். ஸ்ரீனி வாசலு ராஜு கோவிந்தனை எதிர் கொண்டழைத்து உபசரித்து "என்ன காரியமாய் வந்தீர்கள்" என்று கேட்டார்.

கோவிந்தன்:—திருச்செந்தூரில் தற்காலம் முகாம் செய்திருக் கும் டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள் சிலசந்தேகங்களை நிவர்த்திசெய் யும்படி என்னை வரவழைத்துச் சொன்னார்கள். தாங்கள் இஷ்டப்

பட்டால் அச்சந்தேகங்களைத் தங்களிடமே கேட்டறிந்து நிவர்த்தித்துக் கொள்ளலா மென்னும் எண்ணத்துடன் வந்தேன். தாங்கள் எப்போதும் உண்மை பேசப்பட்டவர்களென்பதை நான் உணர்வேன். ஆகையால் இஷ்டப்பட்டால் தெரிவியுங்கள். இல்லா விட்டால் தாங்கள் சொல்லும் பதிலிலிருந்தே தங்களுக்குச் சொல்ல இஷ்டமில்லையென அறிந்து கொள்ளுகிறேன்!

ஸ்ரீநிவாசலு ராஜு:—எனக்குத் தங்களிடம் உண்மை சொல்வதில் எவ்வித ஆட்சேபனையும் கிடையாது. ஏனெனில் எவ்விஷயங்களை வெளியிடக் கூடாதென்று வேண்டிக் கொள்ளுகிறேனே அவைகளைத் தங்களிடம் சொல்லாததாகவே மறந்து விடுவது தங்கள் சுபாவம் என்பதை நான் நன்குணர்வேன். தங்கள் மனதில் எவ்வித களங்கமுமில்லாமல் எதை வேண்டுமானாலும் கேளுங்கள். உண்மையான பதில் அளிக்கிறேன்.

கோவிந்தன்:—போலீசார் தங்கள் வீட்டைச் சுற்றிக் கடின காவல் புரியும் போது தங்கள் குமாரரான சுந்தர ராஜு எவ்விதம் இங்கிருந்து வெளியேறினர்?

ஸ்ரீநிவாசலு ராஜு.—முற்காலத்தில் விரோதிகள் கோட்டையை முற்றுகை போட்டுச் சுற்றிக் கொண்டால் எவர்க்கும் தெரியாமல் தப்பிப் போவதற்காக இரகசிய சுரங்க அறை ஒன்று அரண்மனையிலிருக்கிறது. அவ்வழியாக சுந்தரம் தப்பிப் போனான். தங்களுக்கு அவ்வழியைக் காண்பிக்கிறேன்.

கோவிந்தன்:—ஆனால் இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவுக்கு லட்ச ரூபாய் லஞ்சம் கொடுத்ததாகப் புகார் செய்தது பொய்தானே?

ஸ்ரீநிவாசலு ராஜு:—ஆம்

கோவிந்தன்:—அவர் பேரில் அபாண்டம் ஏற்படும் விதமான கடிதங்கள் எழுதியது யார்?

ஸ்ரீநிவாசலு ராஜு:—என்னுலாவது எனது தூண்டுதலாலாவது ஒன்றும் நடக்க வில்லை. அப்படிச் செய்தவர்களின்னரென்றும் எனக்கு இதுவரையில் தெரியாது.

கோவிந்தன்:—இதுவரை தெரியாதென்றால் இப்போது தெரியுமோ?

ஸ்ரீநிவாசலு ராஜு:—இப்போதும் தெரியாது.

கோவிந்தன்:—ஆனால் சுடலை கோயிலில் லஞ்சம் வாங்கிய தொகையைப் புதைத்திருப்பதாகக் கடிதம் எழுதி அதிகாரிகளை வர

வழைத்துத் தோண்டிப் பார்க்கச் செய்து அங்கிருந்து 137-சவரன்கள் அகப்படும்படி செய்ததும் தாங்களல்ல போலும்.

ஸ்ரீநிவாசலு ராஜு:—நானுமல்ல; அப்படிச் செய்தவர்களின்னாரென்றும் தெரியாது.

கோவிந்தன்:—இப்போது சுந்தர ராஜு இங்கிருக்கிறாரா?

ஸ்ரீநிவாசலு ராஜு:—இல்லை.

கோவிந்தன்:—இந்த ஊரிலாவது இருக்கிறாரா?

ஸ்ரீநிவாசலு ராஜு:—இல்லை.

கோவிந்தன்:—டெப்டி கலெக்டர் மாதவராஜுவின் வீட்டில் அன்றிரவு கோபச் சிரிப்புச் சிரித்து "செல்லம்! ஜாக்ரதை! சுந்தர ராஜுவை உயிருடன் பிடித்துச் சிறையிடக்கூடிய வல்லவனும் இவ்வுலகின் கண் இருக்கிறானா?" என்று பேசியது யார்?

ஸ்ரீநிவாசலு ராஜு:—சுந்தர ராஜு தான்?

கோவிந்தன்:—அவ்வீட்டிற்குள் எவ்வாறு சென்றார்? அங்கிருந்து எப்படிக் காணமற் போனார்?

ஸ்ரீநிவாசலு ராஜு:—மூன்றாவது மெத்தைத் தட்டட்டிக்கு ~~அடுத்த~~ வீட்டிலிருந்து ஒவ்வொரு மெத்தையின் வழியாய்த் தாண்டிச் சென்றார். தன்னுடன் எடுத்துப் போன ஏணியை திட்டிவாசல் வழியாய்க் கீழே வைத்து இறங்கியிருந்தார். காமாக்ஷிராவ் வெளிப்புறப்பட்டதும் அதே வழியாய் மேலே ஏறி, திட்டிக்கதவைச் சாத்திவிட்டு, பக்கத்து வீடாகிய தாசி செல்லம் வீட்டில் அதே மாதிரி இறங்கிக் கையில் கட்டாரியுடன் செல்லத்தின் சமீபம் சென்று கூச்சலிட்டால் ஒரே குத்தாய் குத்தி விடுவதாக ஜாடை காட்டியதும், அவள் அதிக பயமடைந்து சத்தம் போடவில்லை. சுந்தர ராஜு அவளை ஏணி வழியாய் அழைத்துக் கொண்டு ஐந்தாவது தட்டட்டியின் வழியாய் சந்தில் இறங்கி இங்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டார். போதுமான வரை எச்சரித்தும் என் வார்த்தையை உதாசினம் செய்து சுந்தரத்தைப் பிடிக்க முயன்றதால் நான் சொன்ன பிரகாரம் அவளை இப்போது ஏகாந்த காராக்கிரஹத்தில் வைத்திருக்கிறேன்.

கோவிந்தன்:—அவளைத் திருச்செந்தூருக்கு அனுப்பிப் பிரமாண வாக்குமூலம் கொடுத்த பின் அழைத்து வந்து மறுபடியும் அடைத்தீர்களோ?

ஸ்ரீநிவாசலு ராஜு:—இல்லவே இல்லை. சுந்தரம் அவளைப் பிடித்து வந்தது முதல் இந்த நிமிஷம் வரை அவள் இவ்வூரை விட்டு

வெளிச் செல்லவேயில்லே. காராக்கிரஹத்தில் தான் கைதியாயிருக்கிருள்.

கோவிந்தன்:—ஆனால் டெப்டி மாஜிஸ்டிரேட்டிடம் சென்றது யார்? அவளை யார் அனுப்பினார்கள்?

ஸ்ரீனிவாசலு ராஜு:—அதுவும் எனக்குத் தெரியாது. டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள் அவ்விஷயங்களையெல்லாம் சொன்னபோது நான் அதிக ஆச்சரியங் கொண்டேன்.

கோவிந்தன்:—டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள் இல்லாததை உண்மைபோல் கற்பனை செய்தார்களா? என்ன?

ஸ்ரீனிவாசலு ராஜு:—ஒருக்காலும் செய்திருக்கமாட்டார்கள். ஹரிச்சந்திரனுக்கப்பால் அவரைத்தான் நான் சத்தியவானாகக் கருதுகிறேன்.

கோவிந்தன்:—பின் அவைகள் எவ்வாறு நடந்திருக்கக் கூடும்?

ஸ்ரீனிவாசலு ராஜு:—எனக்குத் தெரியாது. எனக்கே அது ஆச்சரியமாய்த்தானிருக்கிறது.

கோவிந்தன்:—நான் இப்போது தாசி செல்லத்தைப் பார்க்கலாமோ?

ஸ்ரீனிவாசலு ராஜு:—காண்பிப்பதில் ஆட்சேபனை யில்லே. ஆனால் நிபந்தனையுண்டு.

கோவிந்தன்:—எனக்குக் கூடவா?

ஸ்ரீனிவாசலு ராஜு:—ஆம், உங்களுக்குக் கூடத்தான். ஏனெனில் நாங்கள் சொன்ன சொல்லுக்குப் பங்கம் வராமல் பாதுகாக்கப் பிரயாசைப் படுபவர்கள். தாங்களோ இக்காலத்துப் பரோபகார சிந்தையுடையவர்கள். அவளைப் பார்த்ததும் அவளை விடுவிக்கும் படி தங்களை அவர் கேட்டுக் கொண்டால் தாங்கள் மனமிரங்கி அவ்வாறு செய்யும்படி என்னைக் கேட்டுக் கொள்வீர்கள். நான் அதற்கு ஒருக்காலும் சம்மதிக்க மாட்டேன்.

கோவிந்தன்:—ஆகையால் அவளை விடுவிக்கும்படி கேட்கக் கூடாதென்பது முதல் நிபந்தனை போலும்.

ஸ்ரீனிவாசலு ராஜு:—ஆம்.

கோவிந்தன்:—இதொன்றுதானு; வேறு நிபந்தனைகளும் உண்டோ?

ஸ்ரீனிவாசலு ராஜு:—இன்னொரு நிபந்தனையுமுண்டு. தங்கள் கைகளையும் கண்களையும் கட்டி விட்டு அழைத்துப் போவேன். அதற்கும் சம்மதிக்க வேண்டும்.

கோவிந்தன்:—அவள் இருப்பிடம் கண்டு பிடிக்காமலிருப்பதற்காகவோ?

ஸ்ரீநிவாசலு ராஜு:—ஆம்.

கோவிந்தன்:—இந்த நிபந்தனை யேன்?

ஸ்ரீநிவாசலு ராஜு:—தங்களுக்கு அவளிருப்பிடம் தெரியாமலிருப்பதற்காகவே.

கோவிந்தன்:—தெரிந்தால் என்ன? நான் வாக்குக் கொடுப்பது போதாதோ?

ஸ்ரீநிவாசலு ராஜு:—தாங்கள் கடினமான ஹிருதய முடையவர்களென்று பலர் நினைப்பார்கள். ஆனால் உங்களுடன் சகஜமாய்ப் பழகிய உண்மையாளருக்குத் தான் உங்கள் உதாரகுணம் தெரியும். சட்டப் படியல்லாமல் வேறு விதமாய் ஹிம்சிப்பது சட்ட விரோதமான காரியமென்றும் அதிலும் ஓர் பெண்பாலை அவ்வாறு நடத்துவது அக்கிரமமென்றும், நினைத்துத் தாங்கள் கொடுத்த வாக்குக்குப் பங்கம் வராமலும் அவளும் ஹிம்சைக்குள்ளாகாமலும் எப்படியாவது ஓர்யுக்தி எடுத்துத் தங்கள்மேல் தப்பிதமில்லாமல் அவளைத் தப்பித்துவிட்டு விடுவீர்கள். தற்கால நாகரீக சட்டத்தில் தாசி செல்லம் செய்தது எவ்வித குற்றத்திலு மடங்காதது. ஆனால் எங்கள் ராஜாங்க சட்டத்தின்படி அவள் செய்தது மன்னிக்கத் தகாத பெருங்குற்றம். அதற்கேற்ற தண்டனை அவள் அனுபவித்தே தீரவேண்டும். சேதுவில் போய் ஸ்நானம் செய்தால் எல்லாப் பாவங்களும் நிவர்த்தி யாகுமென்று சொல்லுவார்கள். பஞ்சமாபாதகங்களிலும் பெரியதாகிய இப்பாவம் அதிலும் தொலையாது. ஆகையால் அதற்கு அவ்வளவு கடுமையான தண்டனை.

கோவிந்தன்:—இப்போது தாங்கள் என் கண்களையும் கையையும் கட்டி அழைத்துப் போவதால் அந்த இடத்தைப் பின்னால் என்னால் கண்டு பிடிக்க முடியவே முடியாதென நினைக்கிறீர்கள் போலும்.

ஸ்ரீநிவாசலு ராஜு:—நான் முட்டாளாயிருந்தால் அவ்வாறு நினைப்பேன். தாங்கள் அவள் இருப்பிடத்தைக்கட்டாயமாய்க் கண்டு பிடித்து விடுவீர்களென்றே நம்புகிறேன். ஆனால் தாங்கள் கண்டு பிடித்த உடனே அவளை விட்டு விடுவதில் ஆட்சேபனையில்லை. தாங்கள் வாரண்டுடனாவது அதிகார தோரணையிலாவது வரக்கூடாது. எனக்கும் எவ்வித தீங்கு மிழைக்கக் கூடாது.

கோவிந்தன்:—அப்படி யிருப்பின் ஏன் இந்த நிபந்தனைகள்?

ஸ்ரீனிவாசலு ராஜு:—நிபந்தனை களிருந்தே தீரவேண்டும். ஏனெனில் தங்களால் கண்டுபிடிப்பது சாத்யமென்பதை ஒப்புக் கொண்டேனே யொழிய உடனே கண்டு பிடிக்க முடியாது. தாங்கள் துப்புக்கண்டுபிடித்து முடிய குறைந்தது ஒரு மாதமாவது பிடிக்குமென நினைக்கிறேன். அதற்குள் அவளுக்குப் போதுமான தண்டனை விதிக்கப்பட்டுவிடும். அப்போது அவளாக என் மீது எவ்வித குற்றமும் சாட்ட முன் வரமாட்டாள். அப்படிச் செய்தாலும் என்னால் தப்பித்துக்கொள்ளக் கூடும்.

கோவிந்தன்:—டெப்டி மாஜிஸ்டிரேட்டிடம் போலிச் செல்லம் கொடுத்த பிரமாண வாக்கு மூலமே தங்களைத் தப்பித்து விடப் போதுமானது. இன்னும் ஒரே கேள்விதான்? டெப்டி மாஜிஸ்டிரேட் மாதவ ராஜுவின் வீட்டில் கொள்ளை யடித்தது யார்?

ஸ்ரீனிவாசலு ராஜு:—அதுவும் எனக்குத் தெரியாது. நாங்கள் திருட்டுக்கும் கொள்ளைக்கும் சம்மந்தப்படுவோ மென்று தாங்கள் நினைக்கிறீர்களா?

கோவிந்தன்:—தாங்கள் அப்பேர்ப்பட்ட இழி தொழில்கள் செய்ய சம்மதப்படமாட்டீர்க ளென்பதை நான் நன்குணர்வேன். ஒருக்கால் காமாக்ஷிராவ் பேரில் பழி சுமத்துவதற்காகச் செய்திருக்க லாமோயென சந்தேகித்தேன்.

ஸ்ரீனிவாசலு ராஜு:—இல்லை. அவ்விஷய சம்மந்தமான காரி யாதிகள் ஒன்றுமே எனக்குத் தெரியாது.

கோவிந்தன்:—ஒருக்கால் இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவே எடுத் திருப்பாரோ?

ஸ்ரீனிவாசலு ராஜு:—நான் என்னையும், தங்களையும் டெப்டி மாஜிஸ்டிரேட் அவர்களையும், எவ்வாறு நம்புவேனோ அவ்வாறே அவரையும் அதிக யோக்யரென்றும் அக்ரமங்களுக்குச் சம்மந்தப் படாதவ ரென்றும் கருதுகிறேன். ஆகையால் அவர் எடுத்திருக்கவே மாட்டார்.

கோவிந்தன்:—ஆகவே காமாக்ஷிராவுக்கு வேறே யாரோ பெரிய விரோதி யிருப்பதாக ஏற்படுகிறது.

ஸ்ரீனிவாசலுராஜு:—அவர்கள் காமாக்ஷிராவின் விரோதிகளோ எங்கள் விரோதிகளோ தெரியவில்லை. ஏனெனில் சாதாரணமாய் உண்மை யறியாதவர்க ளெல்லாம் காமாக்ஷிராவுக்கு விரோதமாய் இவைகளை யெல்லாம் நாங்களே செய்வதாகத்தானே கருதுவார்கள்; ஏன் காமாக்ஷிராவ்தான் என்ன நினைப்பார்?

கோவிந்தன்:—ஆம் உண்மைதான். ஆகையால் இக்காரியங்களை யெல்லாம் செய்தவர்க ளின்னாரென்று கண்டுபிடிக்க வேண்டியது அவசியமாகிறது. தங்கள் குமாரனின் எதிரிமிராசுதாரான வீராசாமி ரெட்டியாரின் வேலையாயிருக்குமோ?

ஸ்ரீனிவாசலு ராஜு:—வீராசாமி ரெட்டி இன்னும் ஜெயிலி லிருந்து விடுதலையடையவில்லை. அவர் தூண்டுதலால் நடந்தேறியிரு க்கலாமோ என்னமோ? திட்டமாய் என்னால் சொல்லக் கூடவில்லை.

என்றார். அப்பால் கோவிந்தனிடம் கண்களை அவிழ்த்துப் பார்ப்பதில்லை யென்ற வாக்குறுதி பெற்று கண்களை மாத்திரம் கட்டி தெருவுக்கு அழைத்துச் சென்று வண்டியில் ஏற்றினார். வண்டி உடனே புறப்பட்டது. வண்டியை ஓட்டினது இன்னாரென்று கோவிந்தனுக்குத் தெரியாது. வண்டி ஓட்டினவர் வழியில் வருப வர்களை எச்சரித்தாவது, மாட்டை அதட்டியாவது தன் குரலைக் காட்டவில்லை. சுமார் அரைமணி நேரம் வண்டி பலபக்கங்கள் திரும்பத் திரும்பச் சென்றதாகவும், கெட்டியானதரை, மேடு பள்ளமானதரை, மணல்தரை முதலியவை வழிகளிலிருப்பதாகவும் வண்டிபோகும் மாதிரியிலிருந்து கண்டு கொண்டார். கடைசியாக வண்டி நின்றது, அங்கிருந்து கோவிந்தனை ஸ்ரீனிவாசலுராஜு இறங்கச் சொல்லி கோவிந்தனுடைய கைகளைக் கட்ட வேண்டு மென்றார். தான் கண்களை அவிழ்ப்பதில்லை யென்ற வாக்குறுதியின் பேரில் இதுவரை கட்டாமலிருந்ததற்கும் இனி கட்டுவதற்கும் கார ணம் கேட்டார். வண்டியில் ஏறி இறங்குவதற்குச் சௌகரியமாயிருக் கும்படி கைகளைக்கட்டாமல் அதுவரைவிட்டதாகவும் இனிகைகளைக் கட்டாமலிருந்தால் போகும் வழிகளில் வேண்டுமென்று கோவிந்தன் பார்க்காவிட்டாலும் கைகள் ஆடுவதிலிருந்து கைகள் பக்கங்களில் படஹேது விருக்குமென்றும் அப்போது அவருக்கு அதன் மூலமாய் வழியை ஊகிக்க ஒருக்கால் சாத்யமாகுமென்றும் சொல்லி கை களைக் கட்டி அழைத்துச் சென்றார். நடந்தவழி மணலாயிருந்தது. மணலில் எங்கோ அழைத்துப் போவதாகத் தெரிந்தது. அப்படி 15 நிமிஷங்கள் நடந்தபின் செங்கல்பாவிய தரையில் சேர்ந்ததும், ஒரு கதவைத் திறக்கும் சத்தம் கேட்டது. பின் கோவிந்தனைப் பிடித்து அழைத்துச் சென்றார். சற்று தூரம் அவ்வாறு சென்றதும் படிக ளில் ஏறுவதும் இறங்குவதுமாக சுமார் 10 நிமிஷங்கள் வரையில் சென்றார்கள். கடைசியாக ஒருகதவைத்திறக்கும் சத்தம் கேட்டது.

ஸ்ரீனிவாசலுராஜு கோவிந்தனை அறைக்குள் அழைத்துச் சென்றதும் கதவை மூடித் தாளிட்டு அவருடைய கைகளையும் கண்களையும் அவிழ்த்து விட்டார். கோவிந்தன் கண்கள் அவிழ்க்கப்பட்ட பின்னும் அவ்விடம் ஓரே இருட்டா யிருந்தது.

கோவிந்தன்:—செல்லம் எங்கே யிருக்கிறாள்? ஒன்றுமே தெரியவில்லையே.

என்றதும் கைகளை மேலே தூக்கினார். பெரும் பாறையாகத் தென்பட்டது.

ஸ்ரீனிவாசலு.—பக்கத்தரையில் படுத்திருக்கிறாள்; பாருங்கள்.

என்றதும் ஏதோ தள்ளிய சத்தம்போல் கேட்டது. உடனே ஸ்ரீனிவாசலுராஜு ஜோபியில் கொண்டு வந்திருந்த காந்த விளக்கை எடுத்துப் பத்தானை அமுக்கினதும் சுமார் அரைகெஜ அகலமுள்ள இரும்புக் கம்பிகள் போட்ட ஜன்னல் தென்பட்டது. அக்கம்பிகளின் சந்துகளில் பார்த்ததில் ஓர் கட்டிலில் ஓர் பெண் படுத்திருக்கக் கண்டார். அப்போது,

செல்லம்.—ஐயா! தாங்கள் இதுவரையில் எனக்குவிதித்த தண்டனை போதாதா? ஐயோ! என்னை ஓரேமட்டாய்க் கொன்றுவிடுங்களேன். தங்களுக்கு அது பெருத்த புண்யமாகும். ஓரே இருட்டில் ஏகாந்தமாய் நான் படுத்திருக்க, முதல் நாள் என்னை எலிகள் பல வந்து கடித்தன. மறுநாள் பெருச்சாளிகள் பல என் மேல் விழுந்து துள்ளிக் குதித்தன. நேற்றைய முதல் பல நாகப் பாம்புகள் சீறிச் சீறி கடிக்க வருகின்றன. ஒவ்வொரு விநாடி போவது ஒருயுகமா யிருக்கிறது, அப்பாம்புகள் கடித்து விட்டால் என் கஷ்டம் ஓரே மட்டாய் நீங்கிவிடுமென்று பார்த்தால் அவைகள் சீறும் சத்தமும், அவைகள் மூச்சுவிடும் காற்றும் தென்படுகின்றனவேயொழிய அவைகள் கடித்தபாட்டைக் காணோம்.

என்று சொல்லும்போதே எங்கிருந்தோ மூன்று கிருஷ்ண சர்ப்பங்கள் சீறிக்கொண்டு அவள் முகத்திற்கு நேராய்ச் சென்றன, அவள் ஓ வென்று கத்தினாள். அப்பாம்புகள் அவளைக் கடிக்காமல் எப்படியோ மறைந்து விட்டன. அவள் உடம்பு முழுவதும் நடுங்கிற்று. தான் செய்த தப்பிதங்களுக்காக ஓரே மட்டாய்த் தன்னைக் கொன்று விடும்படி கெஞ்சினாள்.

ஸ்ரீனிவாசலு ராஜு:—நான் முன்கூட்டியே உன்னைப் போகாமானபடி எச்சரித்தேனா இல்லையா?

செல்லம்:—எச்சரித்தீர்கள். உண்மை தான். புத்தியில்லாத் தனத்தாலும் காமாக்ஷிராவின் பேரிலிருந்த பிரியத்தாலும் தங்கள் வார்த்தைகளை உதாசினம் செய்தேன். அதற்காக இந்த மூன்று தினங்களாக நான் பட்டபாடு போதாதோ? தாங்கள் என்னை இத்துடன் விட்டு விட்டால் என் ஆயுளை முடித்துக் கொள்ளுகிறேன். ஏனெனில் இந்த நாட்களை என்னால் மறக்கவே முடியாது. இந்த நாட்களை நினைத்து சொற்பனம் கண்டால் கூட பயங்கரமாயிருக்கும். அவ்வளவு உபகாரம் செய்யமாட்டீர்களா?

எனக் கெஞ்சினாள்; அப்போது,

கோவிந்தன்:—செல்லம்! நான் திருவல்லிக்கேணி துப்பறியும் கோவிந்தன். உன்னைப் பார்ப்பதற்காக சில நிபந்தனைகளின் பேரில் இங்கு கொண்டு வரப்பட்டேன்.

செல்லம்:—ஐயா! என் நற்காலம் தான் தங்களை இங்கு கொண்டு வந்து சேர்த்தது. எப்போது தாங்கள் இங்கு வந்து விட்டீர்களோ இனி எனக்கு எவ்வித பயமுமில்லை. தயவு செய்து இந்த நரகக் குழியிலிருந்து என்னை வெளியே விடுவீர்களாகில் என் ஆயுளை எவ்விதமாவது முடித்து விடுவேன். இனி என்னால் உயிர் வாழ முடியவே முடியாது.

கோவிந்தன்:—செல்லம்! நீ இருக்கும் துர்ப்பாக்கிய நிலைமையில் நான் சொன்னதை நீ கவனிக்கவில்லை. நான் சுதாவில் உன்னைக் கண்டு பிடிக்கவுமில்லை. அதிகார தோரணையில் வாரண்டுடன் வரவுமில்லை. ஆனால் ஸ்ரீனிவாசலு ராஜு அவர்களை நான் கேட்டதின் பேரில் எக்காரணம் பற்றியும் உன்னை விடுவிக்கும்படி கேட்பதில்லையென்னும் நிபந்தனையின் பேரில் என் கண்களையும் கைகளையும் கட்டி என்னை அழைத்து வந்தார்கள். உண்மையில் இக்குகை எங்கிருக்கிறதென்று எனக்கு இப்போது தெரியாது. ஆனால் நானாகக் கண்டு பிடித்து விட்டால் உன்னை அப்போதே விட்டு விடுவதாக அவர்களிடம் வாக்குப் பெற்றிருக்கிறேன். இவ்விடத்தை விட்டு வெளிச் சென்று என் கண்களை அவர்கள் அவிழ்த்து விட்ட நிமிஷம் முதல் இந்த இடத்தைக் கண்டு பிடிக்கும் வரையில் நான் வேறு வேலை செய்வதில்லையென உனக்கு வாக்களிக்கிறேன். அப்படிச் செய்வதற்கு நான் கேட்கும் கேள்விகளுக்கு நீ உண்மையான பதிலளிக்க வேண்டும்.

செல்லம்:—தங்களுடைய பிரதாபத்தைப் பற்றிப் போதுமான வரையில் நான் கேள்விப்பட்டிருந்த போதிலும் தாங்கள் இவ்விடத்

தைக் கண்டு பிடித்து என்னை விடுவிக்க பல வாரங்களாகா விட்டா லும் பல நாட்களாவது பிடிக்கும். அதற்குள் எனக்குப் பைத்தியம் பிடித்து விடுவது நிச்சயம். மாமா! தங்கள் குமாரர் என்மீது வைத் திருந்த அன்பை உத்தேசித்தாவது என்னை இவ்வளவு தண்டனை யுடன் விடுவிக்கும்படி தங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீனிவாசலு ராஜு:—செல்லம்' தெரியாமல் செய்திருக்கும் காரியமாகில் உன்னை உடனே மன்னித்து விடுவேன் எங்கள் குணங் களை நன்ருயறிந்திருந்தும் போதுமானபடி எச்சரித்த பின்னும் நீ சற்றும் அஞ்சாமலும், உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்கிருே மென நினைக்காமலும் சுந்தர ராஜுவைக் காட்டிக் கொடுத்து விட்ட தற்காக நீ தண்டனை யடைந்ததும், இன்னும் இதைவிட அதிக பயங் கரமான தண்டனையடையப் போவதும் நியாயமே! ஐபா! நான் வெளி சென்று 10 நிமிஷங்களுக்குள் வருகிறேன். தாங்கள் செல்லத்திடம் பேச வேண்டிய சமாசாரங்களைப் பேசி முடியுங்கள்.

என்றதும் காந்த விளக்கை அணைத்து விட்டு கதவைத் திறந்து வெளியே சென்ருர். காந்த விளக்கு வெளிச்சத்தில் முன் பக்கம் தெரியுமே யொழிய பின் பக்கம் இருட்டாகவே யிருக்குமாதலால் கோவிந்தன் இருந்த அறையில் என்னென்ன வஸ்துக்கள் இருந்தன வென்ருவது அதன் அகல நீளம் எவ்வளவென்ருவது தெரியவில்லை. உயரம் தன் தலைக்கு மேல் ஒரு அடி யிருப்பதாக மட்டும் தெரிந்து கொண்டார்.

கோவிந்தன்:—செல்லம்! உன் பரிதாபகரமான நிலைமைக்கு நான் வருந்தினாலும் நீ செய்த குற்றமும் சாமான்யமானதல்ல வென்பதை நான் ஒத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீ இவ்வளவு ஸ்திதியிலிருந்தாலும் இப்போது கூட உன்னிடம் எனக்குநம்பிக்கை யில்லை. நாடக மேடையில் நடிகர்கள் சமயத்திற்கேற்றவாறு சந்தோ ஷத்தையும், விசனத்தையும், கோபத்தையும், சாந்தத்தையும் நன்கு தெரியும்படி தங்கள் சாமர்த்தியத்தால் நடித்துக் காட்டியும் "ஹரிச் சந்திரா" "பிரஹலாதா" "மார்க்கண்டேயா" "துருவ" போன்ற சரித் திரங்களில் உயர்ந்த ஞானத்தையும் அத்வைதத்தையும் உபதேசித் துப் பல பாகவதர்கள் காலட்சேபங்கள் செய்யும் காலையில் மஹா பக்திமான்கள் போலும் பரிசுத்தவான்கள் போலும் பிரசங்கங்கள் செய்தும், நாடகங்களும் காலட்சேபங்களும் முடிந்த மறுநிமிஷமே தங்களுக்கபிமானமுள்ள விதவா ஸ்திரீகளிடமும் வேசியாக் கிரஹங் களுக்கும் செல்வது போலும் இங்கிருந்து வெளியேறிய நிமிஷமே

மறுபடியும் உன் விஷமச் செய்கைகளை ஆரம்பித்து விடுவாயோ என்னும் சந்தேகமும் இருக்கிறது. பேசாமலிரு! நீ குறுக்கே பேசவேண்டாம். உன்மேல் குறை கூறுவதில் பயனில்லை. உங்கள் குலத்தொழில் அப்பேர்ப்பட்டது. உங்களை உங்கள் பெற்றோர்கள் குழந்தை முதலே அவ்வாறு பழக்குகிறார்கள். அதன் பயன் உங்களை நம்பி, உயிர்க்குயிராக எண்ணி தங்கள் உடல், பொருள், ஆவி, ஆகிய மூன்றையும் தத்தம் செய்தவர்களின் கை வறண்டபோது அவர்களிடம் பெற்ற பெருந் தொகைகளையும் அவர்களால் அடைந்த நன்மைகளையும் அடியுடன் மறந்து அவர்களை அதோகதியாக்குவதோடு அவர்களைக் காட்டிக் கொடுப்பதும் கஷ்டங்களுக்குள்ளாக்குவதும் உங்கள் குலத்தொழிலாக இருக்கிறது. உங்களால் கெட்டு நாசமான குடும்பங்களுக்குக் கணக்குண்டோ? ஆயினும் நீ இப்போதிருக்கும் பரிதாபகரமான நிலைமையிலிருந்து-நரக பாதையிலிருந்து தப்ப விரும்பினால் நான் கேட்கும் கேள்விகளுக்கு உண்மையான பதிலளி. பொய் சொல்வாயாகில் எனக்கு எவ்வித கெடுதலும் ஏற்படாது. நீ இன்னும் அதிக நாள் இந்த நரகபாதை யனுபவிக்கவேண்டிவரும். இதைத் திட்டமாய் மனதில் வைத்துக் கொண்டு ஜவாபு சொல்லு.

செல்லம்:—ஐயா! தாங்கள் சொன்னது முற்றும் உண்மையே. ஆயினும் கடவுள் சாக்ஷியாய் உண்மையான ஜவாபு சொல்லுகிறேன்; கேளுங்கள்.

கோவிந்தன்:—உங்களுக்கு நித்யம் 1000 பொய்ச் சத்தியங்கள் செய்வது வழக்கம், அதிருக்கட்டும். அன்றிரவு காமாக்ஷிராவும், நீயும் பேசிக் கொண்டிருந்தபோது வந்தது யார்?

செல்லம்:—சுந்தரராஜன் ஐயா.

கோவிந்தன்:—எப்படி வந்தார்? நீ அவரை எப்போது பார்த்தாய்?

செல்லம்:—இன்ஸ்பெக்டர் அவரைப் பிடிப்பதற்காக கலெக்டர் எஜமான் வீட்டுப் பக்கம் சென்றார். நான் மாடியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தேன். திடீரென்று என் காதில் "கட்டாரி உன் மார்புக்கு நேராய் இருக்கிறது, ஜாக்ரதை! நீ வாயைத் திறந்தால் கட்டாரியால் குத்திவிடுவேன், மூச்சுவிடாமல் வீட்டிற்குள் போ" என்று சுந்தரராஜன் ஐயா சொன்னார்கள். அவர் குணம் எனக்கு நன்றாய்த் தெரியுமாதலால் நான் மூச்சுவிடாமல் சென்றேன். ஏணியின் வழியாய் என்னை ஐந்தாவது தட்டட்டிவரை அழைக்குச் சென்று அந்த

ஏணியின் வழியாகவே சந்தில் இறங்கி அரண்மனை சேர்ந்தோம். உடனே அவர் என் மாமனாரவர்களிடம் "தங்கள் வார்த்தை உண்மையாயிற்றே யொழிய நான் நம்பியபடி செல்லம் நடக்கவில்லை. ஆகையால் தங்களிஷ்டம்போல் அவளைத் தண்டிப்பதற்காக அழைத்து வந்தேன். இனி தாங்கள் அவளை என்ன செய்த போதிலும் எனக்குச் சம்மதமே" என்றார். அவர்களிருவரும் என் கண்களையும் கால் கைகளையும் கட்டி ஓர் வண்டியில் போட்டு அரைமணி நேரம் கொண்டு வந்து அப்பால் என்னைத் தூக்கி, ஏறுவதும் இறங்குவதுமாக பலபடிகள் சென்றபின் கதவைத் திறந்து இங்கு கொண்டுவந்து போட்டார்கள் ஒரு நாளைக்கு மும்முறை காக்ஷிசாலையில் வைத்திருக்கும் ஜெந்துக்களுக்கு ஆகாரம் போடுவதைப்போல் ஜன்னல் வழியாய்த் தட்டில் ஆகாரமும்ஜலமும் வைத்துத்தள்ளுகிறார்கள். மறுபடியும் அரைமணி நேரம் பொறுத்து வந்து நான் சாப்பிட்டாலும் சாப்பிடாவிட்டாலும் அத்தட்டை இழுத்து எடுத்துப்போய் விடுகிறார்கள். ஜலமலம் கழிப்பதற்கும் பக்கத்தில் ஓர் சிறு அறை அமைத்து அங்கும் அவ்வித ஏற்பாடே செய்திருக்கிறார்கள். தாங்கள் வரும்வரையில் அந்தகாரமான இருட்டில் இருந்ததுடன் மனிதர் குரலே கேட்கவில்லை. இம்மூன்று தினங்களாய் மூட்டைப் பூச்சிகளின் கடியினாலும், எலிகள் பெருச்சாளிகளின் பாதையாலும் கடைசியாக இன்று நல்ல பாம்புகளின் பயத்தாலும் கண் இமைகூடகொட்டாமல் இருக்கிறேன். இன்னும் இரண்டொரு தினங்கள் இவ்வாறிருப்பின் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடு மென்பதற்கு எவ்வித சந்தேகமும் கிடையாது. ஐயா! கோவிந்தா! என்னைக் காப்பாற்ற மாட்டீர்களா? ஐயா! நான்படும் பாடு தங்களுக்குப் பரிதாபமாயிருக்கவில்லையா?

என்றாள். கோவிந்தன் "நீ திருச்செந்தூர்போனாயா இல்லையா? என்றார். அவள் "இங்கிருந்து எங்கும் செல்லவில்லை" யென்று பல சத்தியங்கள் செய்தாள்.

கோவிந்தன்:—உன்னைப்போல் அங்க அடையாள முள்ளபெண் யாராவது இருப்பதாக உனக்குத் தெரியுமா?

செல்லம்:—எனக்குத் தெரியாது. ஒருவரைப்போல் இன்னொருவர் சில சமயங்களில் வித்யாச மில்லாமலிருக்கலாமே யொழிய என்னைப் போலவே இருக்கக் கூடுமென்பதை நான் நம்பவில்லை.

அப்போது சுந்தரராஜுலவர் கோவிந்தன் காந்த விளக்கை அமுக்கச் சொன்னார்.

கோவிந்தன்:—இதோ இந்தப்படத்தைப்பார்! இது உன் படமா?

செல்லம் விளக்கு வெளிச்சத்தில் பார்த்ததும் தான் அந்தப் படத்திலிருக்கும் மாதிரி படுத்துக்கொண்டு எப்போதும் படம் பிடித்துக் கொண்டதில்லை யென்றும் படத்திலிருக்கும் பெண்ணின் ரூபம் அநேகமாய் எல்லா அம்சங்களிலும் தன்னைப் போலிருந்தாலும் படத்திலுள்ள பெண்ணிற்கு வலது கண்ணின் கீழ் ஓர் பாலுண்ணி யிருப்பதைச் சுட்டிக் காட்டினாள்.

அதைக் கோவிந்தன் பார்த்து அவள் சொன்னது உண்மை தானென்றும் ஆகையால் டெப்டி மாஜிஸ்டிரேட்டிடம் பிரமாண வாக்குமூலம் கொடுத்த பெண் வேறு பேர் வழியாய்த்தானிருக்க வேண்டுமென்றும் நிச்சயித்தார். அதற்குள்ளாக ஸ்ரீனிவாசலு ராஜு வந்து நேரமாயிற்றென்று சொல்லி கோவிந்தனை அழைத்துச் சென்றார். அவள் தன்னால் கூடியவரை அலறினாள். கோவிந்தன் கொடுத்த வாக்குக்கு மாறாக நடப்பதில்லை யாகையால் தலை குனிந்தபடி கண்களையும் கைகளையும் கட்டும்படிசெய்து ஸ்ரீனிவாசலுராஜு வுடன் சென்றார். வந்த வழியாகவே அழைத்துப்போய் தனது வீட்டில் விட்டு விட்டு கோவிந்தனுக்குப் படுக்கை தயாரித்திருக்கும் அறைக்குப் போய்ப் படுத்துக் கொள்ளும்படி சொல்லி விட்டு ஸ்ரீனிவாசலு ராஜு அலுத்துத் தூங்கினார். கோவிந்தனும் தன் படுக்கையில் படுத்துத் தூக்கம் பிடிக்காததால் இன்னது செய்வதென்று தோன்றாமல் யோசித்துக் கடைசியாகக் கண் அயர்ந்தார்.

மறுநாள் காலை 8 மணிக்கு பயந்தமுகத்துடன் ஓர் வேலைக்காரன் ஸ்ரீனிவாசலுராஜு அவர்களிடம் ஓடி வந்து தாங்கள் பூட்டி வைத்த சைதியை காலையில் போய்ப் பார்த்தபோது பூட்டிய பூட்டுகளெல்லாம் சரிவர அப்படியே பூட்டப்பட்டிருக்கும்போது காணோம் என்று சொன்னான். காலையில் சாராயம் குடித்த மயக்கத்தால் உளறுவதாக எண்ணி ஸ்ரீனிவாசலுராஜு பல முறை அதட்டிக் கேட்டார் அவன் முன் சொன்னபடியே சொல்ல, தன்னிடமிருக்கும் சாவிகளை எடுத்துக் கொண்டு அவனை அழைத்துப் போய்ப் பார்க்க அவன் சொன்னது உண்மையென்றே ஏற்பட்டது. உடனே கோவிந்தன் படுத்திருந்த அறைக்குப் போய் அவரை எழுப்பிக்கேட்டார். கோவிந்தன் ஸ்ரீனிவாசலு ராஜு வேறு இடத்திற்குக் கொண்டுபோய்

அடைத்து வைத்திருக்கலாமென்றும், தான் அந்த அறையைத் தேடிக் கண்டுபிடிக்காதபடி செய்யும் சூழ்ச்சியாயிருக்கலாமோவென்றும் சந்தேகப்பட்டார். கோவிந்தன் அந்த அறையை எப்படியோ கண்டு பிடித்து மறைத்து வைத்திருக்கலாமென ஸ்ரீனிவாசலுநாஜு சந்தேகித்தார். இப்படி ஒருவரை ஒருவர் சந்தேகிக்கிறார்களென்று அவர்கள் இருவர் மனதிலும்படவே இருவரும் ஒருவரை யொருவர் உறுதி மொழி கேட்டறிந்து தாசி செல்லம் அவர்களிருவருக்கும் தெரியாமலே எவ்வாறோ தப்பிவிட்டாளென்றும் சாவிகள் ஸ்ரீனிவாசலுநாஜு அவர்களின் பூஜாலில் இருக்கும்போது எவ்வாறு தப்பிப்போய் விட்டாளென்றும் இது ஆச்சரியத்திலும் ஆச்சரியமென்றும் இருவரும் பேசிக் கொண்டார்கள். அதற்கு மூன்றும் நாள் பிரசுரமான சுதேசமித்திரன் பத்திரிகையில்,

விளம்பரம்

"செல்லக் கிளியை சிறகொடித்து சிறைவைத்து
வல்ல அரக்கரை வன்மையுடன் காவல் வைத்தும்
அல்லல்படாது ஆகாயத்திலே பறந்து
மெல்லவே சென்றதை மெய்யோனே தானறிவாய்."

என்ற விளம்பரம் வெளிப்பட்டது.

ஆருவது அத்தியாயம்

பூனைக்குக் கோபம் வந்தால் புலியையும் எதிர்க்கும்

என்ன காந்திமதி! இன்னும் ஜெயலக்ஷ்மி வரவில்லையா? எங்கு தான் போயிருப்பாள்? தாங்கள் விசாரிக்கவில்லையா? என்ருர் ஸ்ரீனிவாசலுராஜு.

காந்திமதி:—குழந்தை காலையில் உலாவப் போயிருக்கும் இன்னும் சற்று நேரத்தில் வந்துவிடும். அவளால் ஆகவேண்டிய அவசரவேலை என்ன? தயவு செய்து சொல்லுங்கள். சாத்யமானுல் வேறு யாரையாவது வைத்து செய்யச் சொல்லுகிறேன்.

ஸ்ரீனிவாசலு ராஜு:—அவள் வந்து எனக்குச் செய்யவேண்டிய தொன்றுமில்லை. நான் எத்தனை முறை எச்சரித்தும் என் வார்த்தையை உதாசினம் செய்து அந்தபாம தடிப்பயல் பாலரங்கனுடன் அடிக்கடி உலாவப் போவதும், பந்து விளையாடுவதும், படிப்பதுமாய் பொழுது போக்குகிறதாகக் கேள்வி. நான் எத்தனையோ முறை அந்த பாலரங்கன் பாட்டனுருக்கும் எனக்கும் எவ்வளவோ விரோதமென்றும் அவர்கள் வீட்டாருக்கும் நமக்கும் பேச்சு வார்த்தைகள் கூடக் கிடையாதென்றும், நமது விசேஷங்களுக்கு அவர்களை யழைப்பதில்லை யென்றும் அவர்கள் நன்மை தீமைகளுக்கு நாம் போவதில்லை யென்றும் ஆகையால் அவனுடன் அவள் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ளக் கூடாதென்றும் கண்டித்தும் ஹிதமாய்ச் சொல்லியும், அவள் என் வார்த்தையைக் கவனிப்பதே யில்லை. இது வரையில் அவள் எவ்விஷயத்திலும் என் வார்த்தைக்கு மாருக நடந்ததேயில்லை. எந்த விஷயத்தையாவது நான் விரும்பவில்லையென அறிந்தால அவ்விஷயத்தில் அவளுக்கு எவ்வளவு ஆசையிருந்த போதிலும் அப்போதே நான் சொல்லாமலே அவள் அப்பேர்ப்பட்ட காரியாதிகளைச் செய்யமாட்டாள். அப்பேர்ப்பட்ட என் பிரியமான ஜெயலக்ஷ்மி இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் ஏன் இப்படிப் பிடிவாதம் பிடிக்க வேண்டுமென்று தெரியவில்லை.

காந்திமதி:—நான் சொல்லும் வார்த்தைகளைச் சாந்தமாயும் கோபப்படாமலும் தாங்கள் கேட்பதாக வாக்களித்தால் எனக்கும் ஜெயலக்ஷ்மியம்மாளுக்கும் நடந்த வாக்கு வாதத்தை தங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

ஸ்ரீனிவாசலு ராஜு:—நான் கோபப்படவில்லை. சொல்லு பார்ப்போம்.

காந்திமதி:—ஒருநாள் குழந்தை தனித்திருக்கும்போது நான் "அம்மா! உன் தாத்தாவுக்கு நீ பாலரங்க ராஜுவிடம் பேசுவது இஷ்டமில்லை. அப்படியிருக்க நீ அவ்வாறு அவர் இஷ்டத்திற்கு மாறாக நடப்பது சரியல்ல" என்றேன். அதற்கவள் "மாமா! தாங்கள் தயவுசெய்து அதற்குத் தக்க காரணம் சொன்னால் நான் அவர்களிடம் பேச்சு வார்த்தைகள் வைத்துக் கொள்ளவில்லை. அந்த அத்தான் படித்துப் பரிட்சையில் தேறாத முட்டாளா? அல்லது அவரிடம் சாராயங் குடித்தல், சூதாடல், பீடி சிகரெட்டு முதலிய வைகளைப் பிடித்தல், குடிசுட்டி வீடுகளுக்குச் செல்லல், தாய் தந்தையர் வார்த்தையைத் தட்டி நடத்தல், பரநிந்தை செய்தல், கோள் சொல்லுதல், முதலிய பலவித துர்க்குணங்களில் எந்த துர்க்குணமாவது குடிகொண்டிருக்கிறதா? சொல்லுங்கள்" என்றாள். அதற்கு எனக்குத் தெரிந்தவரையில் அவரிடம் அப்பேர்ப்பட்ட துர்க்குணங்கள் கிடையாதென்றும் நல்ல யோக்யமான பிள்ளையாகத்தான் தெரிவதாகவும் சொன்னேன். அப்படியாயின் அவருடன் பேசி விளையாடித் திரிவதில் என்ன ஆட்சேபணை என்றாள். அவள் கேட்ட கேள்விக்கு நியாயமான பதில் சொல்லத் தெரியாததால் திகைத்தேன் "ஏன் மௌனமாயிருக்கிறீர்கள்? சொல்லுங்களேன்" என்றார்கள். உன் தாத்தாவுக்கு இஷ்டமில்லையாகையால் நீ பேசக்கூடாது என்றேன். கிளிப்பிள்ளை சொல்லுவதைப்போல் அதையே திரும்பத்திரும்பச் சொல்வதில் உபகாரமில்லையென்றும் போதிய காரணம் காட்டினாலொழிய தான் பேசுவதை நிறுத்த மாட்டாளென்றும் வெகு கண்டிப்பாய்ச் சொன்னாள். குழந்தை அவ்வாறு பதில் சொன்னது எனக்கே அதிக ஆச்சரியமாயிருந்தது. அப்போது நான் குழந்தாய்! நான் சொல்வதைக் கேள். உன் தாத்தா அவர்களுக்கு இஷ்டமில்லாத எக்காரியத்தையும் நீ செய்யலாகாது என்றேன். என் தாத்தா அவர்கள் நேரில் சொன்னபோதிலும் போதிய காரணம் காட்டினாலொழிய நான் கட்டுப்பட்டு நடக்கமாட்டேன் என்று குழந்தை சொல்லிற்று. தங்களுக்கு ஜெயலக்ஷிமியம்மாளென்றால் பிராணன் அக்குழந்தையும் ஒரே பிடிவாதம் பிடித்து தாங்களும் அவ்வாறு பிடிப்பதில் உபகாரமில்லையென்றும் ஒருக்கால் தாங்கள் முரண்டினால் அதன் மூலமாய் ஏதாவது கெடுதல்கள் ஏற்படு

மென்றும் பயப்படுகிறேன். ஆகையால் சற்று விட்டுக் கொடுப்பதே நலமென நினைக்கிறேன்.

ஸ்ரீநிவாசலு ராஜு:—வசம்பு நாற்றம் மாறாத அவள் சொல்லுகிறபடியா இந்த ஸ்ரீநிவாசலு ராஜு நடக்கவேண்டும்? பேஷ்! பேஷ்! ! நன்றாய் இருக்கிறது உன் புத்திமதி! இது கலிகால விந்தை போலும்.

காந்திமதி:—எஜமான்! தயவுசெய்து என்பேரில் கோபப்படவேண்டாம். இவ்விஷயத்தில் முறண்டினால் அனர்த்தம் சம்பவிப்பது திண்ணம். தயவுசெய்து தாங்கள் பழையநாள் வைத்தியக்கார ஊழியன் வார்த்தைக்குச் சற்று செவி கொடுங்கள்.

ஸ்ரீநிவாசலுராஜு:—ஆம்! ஆம்!! உன்வார்த்தையை அவசியம் கேட்டுத்தான் நடக்கவேண்டும். உன் உயர்ந்த புத்தியைக் கேட்டு நடந்ததின் பலன்தான் சுந்தரராஜு ஊரையும் நாட்டையும் துறந்து அனாதையாய் அயல் தேசத்தில் திருடனைப்போல் பதுங்கிக்கிடக்க வேண்டியிருக்கிறது. இனி எனக்கும் அவ்வாறுபுத்தி சொல்லி நான் உன்புத்திகேட்டு நடந்து, என்னையும் அயல்தேசம் அனுப்பிவிட்டால் அப்பால் உன் இஷ்டப்படி சகலமும் நடத்திக் கொள்ளலாம். சுப்புராஜாவோ அரைப்பைத்தியக்காரன். ஆகையால் யாதொரு அட்டியுமில்லாமல் சகலமும் உன் அபிப்பிராயத்தின்படி நடத்திக்கொள்ளலாம்.

காந்திமதி:—எஜமான்! நான் தங்களுக்கு புத்தி சொல்ல வரவில்லை. இருக்கும் மாதிரியைப் பார்த்துச் சொன்னேன். தங்களுக்கு அது பிடிக்காவிட்டால் தங்களிஷ்டம் போல் செய்யுங்கள். எனக்கென்ன அதைப் பற்றி? அவ்விஷயத்தில் தாங்கள் முறண்டினால் கட்டாயமாய் கஷ்டம் சம்பவிப்பது நிச்சயம்.

ஸ்ரீநிவாசலு ராஜு:—அந்த தடிப்பயல் மாதவராஜுவிடம் லஞ்சம் பெற்று நீயே குழந்தையின் புத்தியை மாற்றிவிட்டாய் போலிருக்கிறது. அவள் தகப்பனைக் கெடுத்தது போதாதென்று அவளையும் கெடுக்க சூழ்ச்சிகள் செய்து விட்டாயோ? என்ன நேரிட்டபோதிலும் சரிதான் என் உயிருள்ள வரை ஜெயலக்ஷிமியை பாலரங்கனுக்குக் கலியாணம் செய்து கொடுக்கவே மாட்டேன். அதைவிட அப்பெண்ணைக் கிணற்றிலாவது தள்ளி விடுவேன்.

காந்திமதி:—தாங்கள் தங்கள் மனதிலிருப்பதை எவ்வாறு வெளியிட்டு விட்டீர்களோ அவ்வாறே குழந்தை என்னிடம் சொன்னதையும் தங்களுக்குத் தெரிவித்து விடுகிறேன். தாங்கள்

அதைக் கேட்டபின் எவ்வாறு நடந்தாலும் சரிதான் எனக்கு அதைப் பற்றிய கவலையில்லை; ஏனெனில் தற்காலம் தகப்பனும் தாயுமற்ற குழந்தை யென்றே நினைக்கும் ஸ்திதியிலிருக்கும் அவள் பால் என் கடமையைச் செய்து விட்டதாகக் கருதி என் மனம் சாந்தியடையும் விவாஹம் செய்து கொண்டால் ஜெயலக்ஷிமியம்மாள் பாலரங்க ராஜுவைத்தான் விவாஹம் செய்து கொள்வார்களென்றும், அதற்கு தாங்கள் ஒப்பி கலியாணம் நடத்திக்கொடா விட்டால் கன்னிகையாகவே தன் ஆயுட்காலத்தைக் கழிக்கப் போவதாகவும், அப்படிச் செய்ய விடாது பலாத்காரமாய் எவருக்காவது கலியாணம் செய்யப் பிரயத்தனம் செய்வீர்களாகில் ஓமத்தீயிலேயே தனது ஆடைகளைப் பற்ற வைத்து அக்கினிக்கிரையாவது திண்ணமென்றும் என் முன் கொடூரமான பிரதிக்கினை செய்து கொண்டாள். இனி தங்கள் இஷ்டம் எப்படியோ அப்படிச் செய்யுங்கள்.

ஸ்ரீநிவாசலு ராஜு:—"விரல் உரலானால், உரல் என்னவாகும்?" என்பதைச் சற்றுவது யோசியாது அந்த ஓட்டைச் சாண் சிறுக்கியின் வார்த்தையைக் கேட்டு நீயும் என்னுடன் இவ்வளவு தைரியமாய்ப் பேசினையல்லவா? நல்லது பார்த்துக் கொள்ளுகிறேன். இன்னும் ஒரு வாரத்தில் அவளை எவருக்காவது கலியாணம் செய்து வைக்கிறேன் பார்,

என்றார். அவர் அவ்வாறு சொல்லிவாய் மூடுமுன்னம் இருவர் சிரித்து விளையாடிப் பேசிக்கொண்டு வரும் சத்தம் கேட்டது. அப்போது,

ஸ்ரீநிவாசலு:—காந்திமதீ! யாரோ சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டு வரும் சத்தம் கேட்கிறதே! யாரது?

காந்திமதி:—ஜெயலக்ஷிமியம்மாளும், பாலரங்க ராஜுவும் வருகிறார்கள்.

ஸ்ரீநிவாசலு:—யார்? யார்?? யார்??? பாலரங்கன் பயலா? என் அரண்மனையின் நடை ஏறக்கூடிய தைரியமும் அவனுக்கு வந்துவிட்டதா? ஹா! ஹா!! ஹா!!! நல்லது வரட்டும். என்தோள் தினவு தீர குதிரைச் சவுக்காலடித்துக் கொள்ளுகிறேன்.

காந்திமதி:—எஜமான்! சற்று நிதானியுங்கள். "வன்கொடுமை செய்தவர்களாயினும் வாசலில் வந்தால் வாவென் றழையாதவன் மாபாவி" என்று ஓர் வழக்கச் சொல் உண்டு. நமது ஜென்ம விரோதியே யாயினும் அதைப் பாராட்டாது நமது நடை ஏறி வந்தால் நம்

மிடம் அபயம் கேட்டு வந்ததாகக் கருதவேண்டும். அபயம் கேட்டவர்களை ஆதரிப்பதே கடமை. அதைவிட்டு தாங்கள் வேறுவிதமாய் நடந்தால் நமது சமஸ்தானத்திற்கே குறைவு ஏற்படும். "மேலும் பால் மணம் மாறாத பாலரங்கனுக்கும் தங்களுக்கும் விரோதமேது? அவன் தங்களை என்ன செய்தான்? "தீயினுற் சுட்ட புண்ணுள்ளாரும் ஆறாதே நாவினுற் சுட்டவடு" என்பதைக் கவனித்து சாந்தமாயிருங்கள். ஆத்திரப் படாதீர்கள்.

என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஜெயலக்ஷ்மியும் பாலரங்கனும் சமீபத்தில் வந்து விட்டார்கள். ஜெயலக்ஷ்மி ஓடிவந்து தாத்தா என்றதும் தனது இருகைகளால் அவர்கழுத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டாள். பாலரங்கன் தாத்தா நமஸ்கரிக்கின்றேன் என்றதும் சாஷ்டாங்கமாய் அவர் காலில் விழுந்தான். அதற்குள் ஜெயலக்ஷ்மியை ஸ்ரீனிவாசலுராஜு உதறித்தள்ள பாலரங்கன் பக்கத்தில் விழுந்து நமஸ்கரித்தாள். அக்காக்ஷியைக் காணவே ஸ்ரீனிவாசலு ராஜாவுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. மீசைபடபடவென்று துடித்து உடல் முழுதும் நடுக்கம் கொண்டது. பேசுவதற்கு நாவெழவில்லை. கையிலிருந்த சவுக்கால் பாலரங்கனை அடித்தார்.

சீறி எழுந்தாள் ஜெயலக்ஷ்மி, அவள் அடைந்த கோபாவேசத்தைக் கண்டு பயந்து பாலரங்கன் சட்டென்று எழுந்து,

பாலரங்கன்:—ஜெய! ஆத்திரப்படாதே! நமது தாத்தா அவர்கள் நம்மிருவரையும் வாயால் ஆசீர்வாதம் செய்வதற்கு நாவெழாததால் தமது சவுக்கால் ஆசீர்வதித்தார். அதற்குக் கோபமேன்?

ஸ்ரீனிவாசலு:—அடே மான ஈனமில்லாத மாடே! கொஞ்சமாவது வெட்கமில்லாமல் என் வீட்டு நடை ஏன் ஏறினுய்? உன்னை இங்கு வரும்படி யார் தாம்பூலம் வைத்து அழைத்தார்கள்?

பாலரங்கன்:—தாத்தா! தயவு செய்து கோபப்படாமல் சாந்தமாய்க் கேளுங்கள். தாங்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் திருப்திகரமான பதிலளிக்கிறேன். தங்கள் கைகால்களெல்லாம் உதறலெடுக்கிறது. தாங்கள் கீழே விழுந்து விடுவீர்களென்று பயப்படுகிறேன். தயவு செய்து அந்த சோபாவில் உட்காருங்கள்.

என்றதும் அவர் கையைப் பிடித்துக் கொண்டுபோய் சோபாவில் உட்கார வைப்பதற்குப் போனுர். "அடே! அற்பப்பதரே! என்னைத் தொடுவதற்கும் உனக்கு தைரியம் உண்டா? விடடா

கையை" என்றார். அவர் விடவில்லை. கையிலிருந்த சவுக்கை ஓங்கினார். ஜெயலக்ஷிமி அதை எகிறிப் பிடித்துக்கொண்டாள். ஸ்ரீனிவாசலு ராஜுவுக்கு பெருங்கோபம் வந்து விட்டது. அவளை அப்படியே ஒரு உதறு உதறினார். அவர் என்னசெய்தும் அவள் சவுக்கை விடவில்லை. அப்போது,

பாலரங்கன்:—ஜெய! என்ன இவ்வாறு புத்தியில்லாத காரியம் செய்கிறாய். தாத்தாவை எதிர்ப்பது உனக்கழகாகுமா? விட்டுவிடு சவுக்கை. அவருக்கு என்னை அச்சவுக்கால் எத்தனை அடிகள் அடிக்க இஷ்டமோ அத்தனை அடிகள் அடிக்கட்டும். அப்போது தான் அவர் கோபம் தணியும், மனம் சாந்த மடையும், இயற்கையான சுபாவம் அடைவார்.

என்றார். ஜெயலக்ஷிமி உடனே சவுக்கை விட்டு விட்டாள். ஸ்ரீனிவாசலு ராஜு சவுக்கை கீழே போட்டுவிட்டு,

ஸ்ரீனிவாசலு:— அடே! நீ க்ஷத்திரியனுக்குப் பிறந்தவனா? அல்லது கோமுட்டியின் மகனா? உன்னை நான் சவுக்கால் அடித்தும் இன்னும் எவ்வளவு வேண்டுமானாலும் அடிக்கட்டும் என்று மான ஈனமில்லாமல் மௌனமாயிருக்கிறாயே! உனக்கு வெட்கமில்லையா?

என்றதும் காறி பாலரங்கன் முகத்தில் எச்சில் உமிழ்ந்தார். அவர் அதையும் கவனியாது சாந்தமாயிருந்தார். ஸ்ரீனிவாசலு ராஜுவின் ஆயுட்காலத்திலேயே இப்பேர்ப்பட்ட எவரையும்சந்தித்ததில்லை யாகையாலும், தனக்கு சேர்ந்த அமோக கோபத்தினால் நரம்புகள் தளர்ச்சியடைந்து கீழே விழப்போனார். அப்போது பாலரங்கன் அவரை விழாமல் பிடித்துக்கொண்டார். ஸ்ரீனிவாசலு ராஜுவுக்கு மூர்ச்சை உண்டாகி விட்டது. பாலரங்கன் ஜெயலக்ஷிமி, காந்திமதியா பிள்ளை ஆக மூவரும் அவரைத் தூக்கிவந்து படுக்கையில் படுக்கவைத்து குளிர்ந்த ஜலம் கொண்டுவரச் செய்து தன் அங்கவஸ்திரத்தில் நனைத்து ஸ்ரீனிவாசலுராஜுவின் முகத்தைத் துடைத்து விசிறியால் ஐந்து நிமிஷம் விசரவே அவருக்கு பிரக்ஞை உண்டாயிற்று. பாலரங்கனை தன் எதிரில் நிற்க வேண்டா மென்றும் உடனே தன் வீட்டை விட்டுப் போகும்படியும் சொல்லச் சொன்னார்.

பாலரங்கன்:— தாத்தா! தயவு செய்து தங்களுக்கு என் மேல் இவ்வளவு கோபம் உண்டாகும்படி நான் செய்த தப்பிதம் என்ன? அதைச் சொன்னால் உடனே போய் விடுகிறேன்- நிஷ்காரணமாய்

என்மேல் கடுங்கோபங் கொண்டு போகச் சொன்னால் இக்காந்திமதியா பிள்ளை மாத்திரமல்ல. இவரைப்போல் இருநூறு காந்திமதியா பிள்ளைகள் வந்து சொன்னாலும் போகமாட்டேன். தங்களைத் தவிர இன்னும் எவராவது என்னை அணுகுவார்களாகில் அப்போது நான் க்ஷத்திரியனா அல்லவா யென்பது தங்களுக்கு ருஜுவாகும்.

ஸ்ரீநிவாசலு ராஜு:—அழையாத வீட்டில் நுழையும் நாயைப்போல் இங்கு வந்து நின்று கொண்டு ஏன் வம்பு செய்கிறாய்? நீ யார்? உனக்கிங்கு என்னவேலை? என் விரோதிகளான நீங்கள் இந்த வீட்டில் அடியெடுத்து வைக்கக் கூடாது. காரணம் சொல்லி விட்டேன்; போய் விடு.

பாலரங்கன்:—தங்களுக்கு விரோதமான காரியங்கள் நான் என்ன செய்தேன்?

ஸ்ரீநிவாசலு ராஜு:—நீ செய்யாவிட்டால்,

பாலரங்கன்:—என் தகப்பனார் தான் தங்களை என்ன செய்தார்? மேலும்...

ஸ்ரீநிவாசலு ராஜு:—நீயும் ஒன்றும் செய்யவில்லை; உன் தகப்பனும் ஒன்றும் செய்யவில்லை. உன் பாட்டனுக்கும் எனக்கும் விரோதம்.

பாலரங்கன்:—எங்கள் தாத்தாவுக்கும் தங்களுக்கும் விரோதமென்றால் அதற்கு எங்களை எப்படி ஜவாப்தாரியாக்கலாம். மேலும் தங்களுக்கும் அவர்களுக்கும் என்ன தான் விரோதம் சொல்லுங்களேன் கேட்போம்.

ஸ்ரீநிவாசலு ராஜு:—அதெல்லாம் உன்னிடம் சொல்ல வேண்டிய பிரமேயமில்லை. "என் வாசலை விட்டு போ நாயே" என்றால் போக வேண்டியவன் தானே நீ! என்னை இவ்வாறெல்லாம் கேள்விகள் கேட்பதற்கு உனக்கு இங்கு என்ன சொந்தமிருக்கிறது?

பாலரங்கன்:—தாத்தா! எனக்கு அக்கில்லாமலும் சொந்த மில்லாலுமிருந்தால் நான் இங்கு வருவேனா? தங்கள் தகப்பனாரின் சகோதரியின் பேரனல்லவா நான்? ஏன் எனக்கு இவ்வீட்டில் சொந்தமில்லை யென்கிறீர்கள்?

ஸ்ரீநிவாசலு ராஜு:—இதென்னடா சனியனாப் வந்து சேர்ந்திருக்கிறது? வீண் வார்த்தைகள் பேசுகிறான். போ என்றால் தொலைந்து போயேன்.

பாலரங்கன்:—நான் அவ்வாறு போகமாட்டேன். தாங்கள் திட்டியதும் கோபங் கொண்டு எனது பாட்டனாரும் தகப்பனாரும் எழுந்து போனதினால் தான் இந்த விரோதம் மூன்று தலை முறைகளாக நீடித்து நிற்கிறது. அநியாயமான இந்த விரோதம் இத்துடன் மடிந்து போக வேண்டும். தயவு செய்து பல தலைமுறைகளாய் நீடித்து நிற்கும்படி ஏற்பட விரோதம் தான் என்ன? சொல்லுங்கள் கேட்போம்.

ஸ்ரீநிவாசலு ராஜு:—உன்னிடம் நான் சொல்ல வேண்டிய அவசிய மில்லை.

பாலரங்கன்:—தாங்கள் சொல்லாதவரை நான் இவ்விடத்தை விட்டுப் போவதில்லை.

ஸ்ரீநிவாசலு ராஜு:—போகாவிட்டால் என்ன செய்வேன் தெரியுமா? மரியாதையாய்ப் போய்விடு.

பாலரங்கன்:—தங்கள் பயமுறுத்தல்களுக்குப் பயப்படப்பட்டவன் நானல்ல; தங்கள் வேலைக்காரர் எல்லோருக்கும் நான் இன்னானென்று தெரியும். ஆகையால் தங்கள் தொண்டை நோகத் தாங்கள் கரடி போல் கத்தினாலும் ஆகப்போவதொன்றுமில்லை.

ஸ்ரீநிவாசலு ராஜு:—நான் கிழவனென்றும் ஆகையால் உன்னைப் பிடித்துத் தள்ள அசக்தனென்றும் நினைக்கிறாய் போலிருக்கிறது. இப்போது கூட—இந்தஸ்திதியில்கூட என்னை வெல்லக் கூடிய வல்லவர்கள் இந்த இராஜதானியிலே ஏன் இந்தியாவிலேயே (பஞ்சாப் தேசம் உள்பட) எவராலும் ஆகாதென்பது உன் மனதில் ஞாபக மிருக்கட்டும்.

பாலரங்கன்:—தாங்கள் சொல்லுவதற்குமுன்னமேயே தங்களுக்குச் சமானமான தீரர் இந்தியாவில் மட்டுமல்ல; இப்பூலோகத்திலேயேகிடையாதென்பதை நான் நன்குணர்வேன். தங்களை எதிர்ப்பதாகவே எனக்கு அபிப்பிராயமும் கிடையாது. தாங்கள் என்ன செய்த போதிலும் சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ளத் தயாராய்க் காத்துக் கொண்டிருக்கிறேன். தங்கள் இஷ்டம்போல் அடியுங்கள், உதையுங்கள், காரி உமியுங்கள், கழுத்தைப் பிடித்துத் தள்ளுங்கள், இன்னும் என்னென்ன செய்ய வேண்டுமென்று தங்களுக்கு அபிப்பிராயமிருக்கிறதோ அவ்வாறெல்லாம் செய்யுங்கள். கழுத்தைப் பிடித்து எவ்வளவு தூரம் தள்ளிக் கொண்டு போகிறீர்களோ அவ்வளவு தூரம் சந்தோஷமாய்ச் செல்வேன். தாங்கள் திரும்பி வரும்போது கூடவே வருவேன். என்னைத் தங்களால் என்ன செய்யக்கூடும்?

தேக சக்தியில் தாங்கள் மேம்பட்டவர்களாகில் நான் மனோ சக்தியில் மேம்பட்டவன். வேறு எவரும் என் ஜோலிக்கு வர நடுங்குவார்கள்.

ஸ்ரீநிவாசலு ராஜு:—அப்படி நீ என்ன கவர்ணர் மகனோ?

பாலரங்கன்:—நான் உத்தம க்ஷத்திரிய குலத்திலுதித்தவனே தவிர கவர்ணர் மகனல்ல, என் தகப்பனார் மாதவராஜுவைப் பற்றி ஜனங்களுக்கு எவ்வளவு மதிப்புண்டென்றும் தாங்களறிவீர்கள். நாங்கள் தங்களைப்போல் தனவந்தரா யில்லாவிட்டாலும் மதிப்பிலும் கீர்த்தியிலும் தங்களுக்கு எவ்விதத்திலும் கீழ்ப்பட்டவர்களல்ல. மாதவராஜுவின் மகனென்றாலே எவரும் என் ஜோலிக்கு வரமாட்டார்கள். அத்துடன் நான் கவர்ணர் துரையின் மகனுயில்லா விட்டாலும் கவர்ணர் துரையின் பிரதிநிதியாகிய சப்கலெக்டர் உத்தியோகம் வகிக்கிறேனுதலால் எவரும் என் ஜோலிக்கு வரமாட்டார்கள்.

ஸ்ரீநிவாசலு ராஜு:—உன் உத்தியோக பவிஷு எனக்குத் தெரியாதென நினைத்து தற்புகழ்ச்சி செய்ய வந்தாயோ? நீ சப்கலெகடர் உத்தியோகம் அல்ல—கலெக்டர் உத்தியோகமல்ல—கௌன்சில் மெம்பர் உத்தியோகமல்ல—கவர்ணர் அல்லது கவர்ணர் ஜெனரல் உத்தியோகம் வஹித்தாலும் என் அரண்மனையில் நான் அரசன் என்பதையும், சட்ட விரோதமான காரியாதிகள் நான் செய்தாலொழிய எவர்க்கும் என் வீட்டேற அதிகாரம் கிடையாதென்பதையும் நீ அறியாயோ?

ஜெயலக்ஷிமி:—தாத்தா! ஏன்?

பாலரங்கன்:—ஜெய! தயவு செய்து மௌனமாயிரு உன் உடம்பில் உன் தாத்தாவின் இரத்தம் ஊறிக்கொண்டிருப்பதால் உன் முகத்தில் கோபாக்னி ஜொலித்துக் கொண்டிருக்கிறது. யாருக்கு அடக்க முடியாத கோபம் வருகிறதோ அவர்கள் கடைசியில் வாதில் தோற்றுப் போவது நிச்சயம், நானே பேசுகிறேன். நீ சகலத்தையும் கேட்டுக் கொண்டு மௌனமாயிரு. தாத்தா! விரோதியாக உங்கள் வீட்டேற அனுமதி கிடையாதென்பது உண்மையே! விருந்தாளியாக வந்தவர்களை தாங்கள் எபபடித் தள்ளுவீர்கள?

ஸ்ரீநிவாசலு:—உன்னை யார் விருந்தாளியாக அழைத்தாகள்?

பாலரங்கன்:—தங்கள் வீடேறி வந்து சாப்பாடு கேட்பவர்கள் யாராயிருந்தாலும் சாப்பாடு போடுவீர்க ளென்பது லோகப்பிரசித்தம், அப்படி நானும் சாப்பிட வந்தேன்.

ஸ்ரீநிவாசலு:—ஏழைகளுக்கு அன்னமளிப்பது நியாயமே! உன் போன்றவர்களுக்கு ஏன் அன்னம் அளிக்க வேண்டும்?

பாலரங்கன்:—நான் அன்னம் கேட்டால் ஏன் அளிக்கக்கூடாது.

ஸ்ரீநிவாசலு:—எனக்கு இஷ்டமில்லை.

பாலரங்கன்:—ஏன் இஷ்டமில்லை.

ஸ்ரீநிவாசலு:—உன்னைப் பார்த்தாலே எனக்கு எரிச்சல்.

பாலரங்கன்:—அப்படி நான் தங்களுக்குச் செய்த தென்ன?

ஸ்ரீநிவாசலு:—உன்னிடம் சொல்ல வேண்டிய பிரமேயமில்லை.

பாலரங்கன்:—சொல்லா விட்டால் நானும் போவதில்லை.

ஸ்ரீநிவாசலு:—சொல்லித் தொலைத்து விடுகிறேன். அப்போதாவது தொலைந்து ஒழிவாயா?

பாலரங்கன்:—நியாயமாகச் சொன்னால் கட்டாயமாய்ப் போய் விடுகிறேன்!

ஸ்ரீநிவாசலு:—உன் பாட்டனாரின் தங்கை என்னை விவாகஞ் செய்து கொள்ள மறுத்ததோடு நான் படித்துப்பரீட்சையில் தேறாத முட்டாளென்றும், மூர்க்க குணமுள்ளவனென்றும் ஆகையால் கலியாணம் செய்து கொள்ள மாட்டேனென்றும் என் எதிரிலேயே சொல்லி பலர் முன் என்னை அவமானப்படுத்தினாள். அதுமுதல் உங்கள் வம்சத்தார் முகத்திலேயே முழிப்பதில்லை யென பிரதிக்ஞை செய்து கொண்டேன். படித்த வகுப்பாராகிய உங்களுக்கும் மூர்க்கர்களாகிய எங்களுக்கும் எவ்வித சம்மந்தமும் கூடாதென்று அது முதல் நாளது வரை இருந்து வருகிறோம். இப்போது நீ வந்து மல்லுக்கிழுக்கிறாய். சொல்லி விட்டேன்; இனியாவது போய்த்தொலை.

பாலரங்கன்:—முதலில் எங்கள் பாட்டியார் விவாகம் செய்ய மறுப்பதாக மரியாதையாய்ச் சொன்னதாகவும் இப்போது நான் வந்து காரணம் கேட்பதுபோல் தாங்கள் பிடிவாதமாய்க் காரணம் கேட்க பெரியவர்கள் உண்மையைச் சொன்னால் உங்களுக்கு வருத்தம் உண்டாகுமென நினைத்து மறுத்ததாகவும், கடைசியாக என் பாட்டியாரிடம் உண்மையைச் சொல்லும்படி தாங்கள் பிடித்துக் காரணம் கேட்டதாயும், வேறு வழியில்லாததால் அவ்வாறு சொன்னதாகவும் தெரிகிறது. உண்மையைத்தானே சொன்னார்கள்.

ஸ்ரீனிவாசலு:—அப்பேர்ப்பட்ட மூர்க்கன் வீட்டில் உனக்கு வேலை என்ன?

பாலரங்கன்:—வேலையில்லாமலா வருவேன். வேலை யிருப்பதால் தான் வந்தேன்.

ஸ்ரீனிவாசலு:—என்ன வேலை?

பாலரங்கன்:—ஜெயலக்ஷ்மியைப் பார்க்கும் வேலை.

ஸ்ரீனிவாசலு:—மூர்க்கன் வீட்டுக் குழந்தையைப் பார்க்கப் பிரமேயமென்ன?

பாலரங்கன்:—விவாகம் செய்து கொள்ள.

என்றதும் "யாரை விவாகம் செய்து கொள்ள? ஜெயலக்ஷ்மியையா? அட மானிடப் பதரே! சொல்லுகிறேன் கேள். இந்த ஸ்ரீனிவாசலுவின் சம்மதத்தின் பேரில் எந்நாளும் ஜெயா உன்னைக் கலியாணம் செய்து கொள்ளமாட்டாள். நீ பிடிவாதம் பிடித்தால் இக் கொசுவை நசுக்குவதைப் போல் உன்னை நசுக்கிக் கொன்று விடுவேன். வீண் ஆசையை விட்டுவிட்டு இப்போதே வெளியே போய் விடு; என்றார்.

பாலரங்கன்:—தாத்தா! தங்கள் சம்மதம் கேட்காமலே செய்து கொண்டால் என்ன செய்வீர்கள்?

ஸ்ரீனிவாசலு:—என் ஆஸ்தி முழுவதையும் அவளுக்கு ஓயில் சாசனம் செய்து வைத்திருக்கிற விஷயம் எல்லோருக்கும் தெரியும். என் அனுமதியில்லாமல் அவள் கலியாணம் செய்து கொண்டால் அன்றே என் ஆஸ்திக்கும் அவளுக்கும் எவ்வித சம்மந்தமில்லையென ஓயில் மாற்றி எழுதி விடுவேன்.

பாலரங்கன்:—தங்கள் ஆஸ்திக்காக ஆசைப்பட்டுக் கலியாணம் செய்து கொள்வதாகில் அதைப் பற்றி சிந்தனையடைய வேண்டும். தங்கள் ஆஸ்தியைத் தாங்களே வைத்துக் கொள்ளுங்கள். தயவு செய்து என் ஜெயாவை மட்டும் எனக்குத் தாருங்கள்.

ஸ்ரீனிவாசலு:—அது ஒருநாளும் நடவாத காரியம், ஏன் இந்த வீண் ஆகாய மாளிகை கட்டுகிறாய்? அவளை ஒருநாளும் உனக்குக் கொடுக்க மாட்டேன். இது முடிவான வார்த்தை. இனி போய்விடு.

பாலரங்கன்:—ஜெயலக்ஷ்மி என்னை விவாஹம் செய்துகொள்வதாக முன்னமே வாக்களித்திருக்கிறாள். நானும் அவளையல்லாமல் இன்னொருவரை விவாஹம் செய்து கொள்வதில்லையென்று பிரதிக்ஞை செய்கிறேன்.

ஸ்ரீநிவாசலு:—அவள் குழந்தை! இன்னும் வயது வராத மைனர்! அவளை நீ ஏமாற்றி ஒத்துக் கொள்ளச் சொன்னாய் போலி ருக்கிறது. அந்த ஜெபமெல்லாம் இங்கே சாயாது; அவளை இனி வெளியில் போக விடுவதில்லை. நீ என்ன வேண்டுமானாலும் செய். இனி நீ வெளியே போய்விடு.

ஜெயலக்ஷ்மி:—தாத்தா! என் அபிப்பிராயத்தைத் தயவுசெய்து கேட்டுக் கொள்ளுங்கள். நான் கலியாணம் செய்து கொண்டால் இவரைக்கலியாணம் செய்து கொள்வேனே யொழிய வேறு எவரை யும் கலியாணம் செய்துகொள்ள மாட்டேன். அப்படிச் செய்ய சம் மதிக்கா விட்டால் கன்னியாஸ்திரீயாகக் காலங் கழிப்பேன். இன் னொருவரைக் கலியாணஞ் செய்துகொள்ள நிர்ப்பந்தித்தால் பிராணத் தியாகம் செய்துகொள்வேன். இதுவே என்முடிவான அபிப்பிராயம்.

ஸ்ரீநிவாசலு:—சரி பார்த்துக் கொள்வோம், நீ வீட்டிற்குள் இனி போகலாம்.

என்றார். அன்றைக்கு அவ்வளவு தூரம் சென்றது போது மென நினைத்துப் பாலரங்கன் ஜெயாவிடம் விடைபெற்றுச் சென் றார். ஜெயலக்ஷ்மியும் மறுவார்த்தை பேசாமல் வீட்டிற்குள் சென் றாள். ஸ்ரீநிவாசலுராஜு ஆழ்ந்த சிந்தனையிலிருந்தார்.

சற்று நேரம் பொருத்தும் வழக்கம்போல் ஜெயலக்ஷ்மி தன் தாத்தாவைச் சாப்பிட அழைத்தாள். தன் இஷ்டப்பிரகாரம் நடப் பதாக ஜெயலக்ஷ்மி வாக்களித்தால் மட்டும் சாப்பாட்டிற்கு வருவ தாக முறண்டினார். அவள் தான் பாலரங்கனைக் கலியாணம் செய்து கொள்ளும் விஷயம் ஒன்று தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் அவர் இஷ்டப்பிரகாரம் நடப்பதாகச்சொன்னாள். அவர் சம்மதிக்கவு மில்லை. சாப்பாட்டிற்குப் போகவுமில்லை. அவருக்கும் ஜெயலக்ஷ் மிக்கும் மனவருத்தம் முதிர்ந்துவிட்டது. ஸ்ரீநிவாசலுராஜு உடனே பாளையங் கோட்டைக்குத் தந்தி கொடுத்து தன் வக்கீலை வரவழைத்து ஒரு புது ஒயில் எழுதி வைத்துக் கொண்டார். சாக்ஷிகள் முன்னிலையில் கையெழுத்துப் போட வேண்டியதான் பாக்கி.

ஏழாவது அத்தியாயம்

கலிகால விந்தையோ?

ஸ்ரீனிவாசலு ராஜு தனது அறையில் உட்கார்ந்து கொண்டு காந்திமதியா பிள்ளையை விட்டு ஜெயலக்ஷ்மியை அழைத்து வரச் சொன்னார். அவர் போய் அழைத்து வந்ததும்,

ஜெயலக்ஷ்மி:—தாத்தா! என்னை எதற்காக அழைத்தீர்கள்?

ஸ்ரீனிவாசலு:—பாளையங்கோட்டையிலிருந்து வக்கீலை வரவழைத்துப் புதிதாக ஒயில் சாசனம் எழுதி வைத்திருக்கிறேன். உன் முடிவான அபிப்பிராயத்தைக் கேட்டுக்கொண்டு சாக்ஷிகள் முன்னிலையில் கையெழுத்துப் போடவேண்டியதுதான் பாக்கி; நீ மஹாராஜியாயிருப்பதும் செம்பு காசுகூட இல்லாத பிச்சைக்காரியாவதும் உனது அபிப்பிராயத்தைப் பொறுத்தது தான். நீ நான் சொல்லுகிறபடி நடப்பதாக வாக்களித்தால் இதை இப்போதே கிழித்தெறிந்து விடுகிறேன். அப்போது முன்னால் எழுதிய ஒயில் ஸ்திரமாயிருக்கும்; என்ன சொல்லுகிறாய்?

ஜெயலக்ஷ்மி:—தங்கள் வார்த்தைக்காவது அபிப்பிராயத்திற்காவது மாறாக நான் அன்றும் இன்றும் நடந்தவளல்ல; என்றும் நடக்க மாட்டேன். ஆனால் என் விவாஹ விஷயத்தில்மட்டும் இன்று சாயங்காலம் தங்களிடம் நான் சொன்ன வார்த்தை முடிவானது தான்; அவ்விஷயத்தில் தாங்கள் பழைய காலப் பகையை மறந்து பாரபக்ஷமில்லாமல் சீர்தூக்கி ஆராய்ந்து பார்ப்பீர்களாகில் பந்து நிலைமையிலும், வாசிப்பிலும், யோக்யதாம்பஸ்திலும், உத்தியோக ராங்கியிலும் என்னை விவாஹம் செய்துகொள்ளக்கூடியவர் அவரைவிட சிறந்தவர் இல்லையென்பதைத் தங்களால் மறுக்கமுடியாது. அவர் எந்த ஹம்சத்திலாவது குறைவென்று தங்களுக்குத் தெரிந்திருந்தால் தயவு செய்து சொல்லுங்கள்; அல்லது அவருக்கிருக்கும் யோக்யதாம்ஸங்களில் நாலிலொருபாக யோக்யதாம்ஸமுள்ளவர்கள் நமது ஜாதியில் வேறு யாராவது இருக்கிறார்களா? அதையாவது சொல்லுங்கள்.

ஸ்ரீனிவாசலு:—நிறுத்து போதும். இப்போது உன்னிடம் தாரதம்மியங்களைப்பற்றி தர்க்கிக்க நான் உன்னை இங்கு அழைத்து வரவில்லை; உன் முடிவான அபிப்பிராயம் கேட்பதற்கே அழைத்து வரச் சொன்னேன்.

ஜெயலக்ஷ்மி:—எல்லா விஷயங்களிலும் நியாயந்தவறி நடக்காத தாங்கள் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் ஏன் இவ்வாறு அநியாய மாய்ப் பிடிக்கிறீர்களென்று தெரியவில்லை. தாத்தா நான் கேட்ட கேள்விக்கு முதலில் தாங்கள் ஜவாபு சொல்லுங்கள். அப்பால் நான் சொல்லுகிறேன்.

ஸ்ரீனிவாசலு:—நீ சிறு பிள்ளையானதால் உனக்கு மனிதருடைய தாரதம்யம் தெரியாது; அவர்கள் ஏதோ பரீட்சையில் தேறி விடுவதால் தங்களுக்குச் சமானமாகியவர்கள் இப்பூலோகத்திலேயே இடையாதென்னும் அகந்தைகொண்டவர்கள். எவ்வளவு சம்பாதித்த போதிலும் செலவழித்து விடுபவர்கள், அதிக சொத்தில்லாதவர்கள். நமக்குச் சமானமான சொத்துடைய உத்தமபாளையம் கந்தசாமி ராஜு குமாரர் குமாரசாமிராஜுவுக்கு உன்னைக் கலியாணம் செய்து கொடுப்பதாய்த் தீர்மானித்துக் கடிதமும் எழுதிவிட்டேன். நீ அவரைத்தான் கலியாணம் செய்து கொள்ளவேண்டும். அவர்கள் வந்ததும் நிச்சயதார்த்தம் செய்து முகூர்த்தம் வைத்துவிட உத்தேசித்திருக்கிறேன். இதுதான் என் முடிவான தீர்மானம்.

ஜெயலக்ஷ்மி:—என்ன சொன்னீர்கள்? 2 மாதத்திற்கு முன் இங்கு வந்தபோது இரண்டு உபநாயகிகளைக் கூடவே அழைத்து வந்து திருச்செந்தூரில் வைத்துவிட்டுப் பகற்காலங்களில் இங்கு இருந்து இரவுகளில் திருச்செந்தூர் வேசியாக் கிரஹங்களுக்குப் போய் வந்தவரும், படிப்பு வாசனையே அறியாதவரும், கண்டவர்களிடம் கலகம் செய்பவருமாகிய அக்காட்டெருமைக்கா என்னைக் கலியாணம் செய்து கொடுக்கப் போகிறீர்கள்? பேஷ்! பேஷ்!! நன்றாயிருக்கிறது தங்கள் யோசனை. இனி தாங்கள் கேட்டகேள்விக்கு முடிவான அபிப்பிராயம் தெரிவித்து விடுவதில் ஆட்சேபனையில்லை. தாங்கள் என்ன செய்தாலும் சரிதான்; அதைப்பற்றி எனக்கு சிந்தனையில்லை. விவாஹம் செய்து கொண்டால் நான் பாலரங்க ராஜுவைத்தான் விவாஹம் செய்து கொள்வேன். வேறு எவரையும் விவாஹம் செய்து கொள்ளவே மாட்டேன். சுப்ரமணியக் கடவுளறிய இது சத்தியம். வேறு யாருக்காவது நிச்சயதார்த்தம் முதலியன நடத்தினால் தாங்கள் தான் அவரைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டும்.

என்று வெகு ஆத்திரத்துடன் சொன்னாள்.

ஸ்ரீனிவாசலு:—என் முகத்துக்கு எதிரிலேயே என்னை எதிர்த்துப் பேசக்கூடிய அவ்வளவு தைரியம் உனக்கு வந்து விட்ட

தல்லவா? இவ்வளவும் அந்த பாலரங்கன் பயல் கொடுத்த தைரியத்தாலல்லவா உனக்கு வந்தது. நல்லது "சடையைப் பிடித்து இழுத்தால் ஆண்டிதானுய் வருகிறான்" என்பதைப் போல் அந்தத் தடிப் பயலை இல்லாமற் செய்து விட்டால் அப்போது என்ன செய்வாய்?

ஜெயலக்ஷிமி:—ஆ. ஹா. என்ன சொன்னீர்கள்? அவரை இல்லாமலா செய்துவிடப் போகிறீர்கள்? தாங்கள் யாரைக் காப்பாற்ற இருக்கிறீர்கள்? அவரை இல்லாமற் செய்வதற்கு முன்னால் தங்களை இல்லாதபடி செய்து விட்டால் என்ன தோஷம்?

என்றாள். அப்போது "அம்மா! என்ன வார்த்தை சொலலுகிறீர்கள்? தாத்தாவை அப்படிச் சொல்லலாமா? கோபத்தின் பேரில் அவர்கள் ஏதோ சொன்னால் நீ அவ்வாறு சொல்லலாமா?" என்று அதட்டியபடியே காந்திமதியா பிள்ளை வந்தார். ஸ்ரீனிவாசலு ராஜு ஜெயலக்ஷிமியை அடிப்பதற்காகப் பாய்ந்தார். காந்திமதியா பிள்ளை கண் ஜாடை காட்டவே ஜெயலக்ஷிமி வெளியே ஓடி கதவை சாத்திக் கொண்டாள். இன்னொரு பக்கத்திலிருந்து ஸ்ரீனிவாசலு ராஜுவுக்குப் படுக்கைப்போட சொள்ளமாடத்தேவன் வந்தான். அவனும் எல்லாவற்றையும் பார்த்தும், கேட்டும், பிரமித்து நின்று விட்டான். ஸ்ரீனிவாசலு ராஜு பேச மாட்டாரென அறிந்த காந்திமதியா பிள்ளை ஜாடையாய் வெளியே போய் விட்டார். சொள்ளமாடத்தேவனும் படுக்கையைப் போட்டு விட்டு வெளியே போய் விட்டான்.

மேற்சொன்ன விஷயங்கள் நடந்தேறிய சுமார் 2 மணி நேரங்களுக்கப்பால் காந்திமதியா பிள்ளை அவ்வூர் கிராம முனிசிப்பையும் தனவந்தரும் பணலேவா தேவிக்காரருமான வேஷக் முஸ்தபாராவுத்தரையும் அழைத்துக் கொண்டு வந்து ஸ்ரீனிவாசலு ராஜு படிப்பு அறையின் பக்கமாய் வந்தார். அப்போது ஜெயலக்ஷிமி ஸ்ரீனிவாசலு ராஜுவின் படிப்பு அறையின் வெளியில் வந்து கொண்டிருந்தாள். எதிரில் வந்த காந்திமதியா பிள்ளை அவளைக் கண்டதும் ஜெயலக்ஷிமி ஏதோ ஒரு வஸ்துவை மறைத்து மடியில் வைத்தாள். அப்போது,

காந்திமதி:—அம்மா! தாத்தா அவர்கள் என்ன செய்கிறார்கள்?

ஜெயலக்ஷிமி:—யார் தாத்தாவா? என்ன செய்கிறார்களோ தெரியாது.

காந்திமதி:—என்னம்மா! அந்த அறையிலிருந்துதான் வருகிறாய்? தாத்தா அவர்கள் என்ன செய்கிறார்களென்று தெரியாதென்கிறாயே!

ஜெயலக்ஷ்மி:—நான் அந்த அறைக்குள் போகவில்லை.

காந்திமதியா பிள்ளை:—பின்வேறு எங்கிருந்து வருகிறாய்?

ஜெயலக்ஷ்மி:—இல்லை அவரிடம்தான் போனேன். வெளியிலிருந்து கூப்பிட்டுப் பார்த்தேன். அவர் பேசவில்லை. திரும்பிபோகிறேன். என்றதும் சட்டென்று தன் அறைக்குப் போய் விட்டாள். காந்திமதியா பிள்ளை முதலியவர்கள் ஸ்ரீனிவாசலு ராஜுவின் அறையின் வாசலண்டை போனதும் "எசமான்" "எசமான்" என்று கூப்பிட்டார். யாதொரு பதிலுமில்லை. அங்கிருந்து மணியடிக்கும் பத்தானை அமுக்கினார். உள்ளே கணகணவென்று மணியடித்த சத்தம் கேட்டது. ஆனால் ஸ்ரீனிவாசலு ராஜு அப்போதும் பேச வில்லை. சற்று ஆச்சரியத்துடன் கதவைத் தட்டினார். அதற்கும் பதிலில்லை. கதவு உள்பூட்டப்பட்டிருந்தது. சாவியும் அதிலில்லை. உடனே காந்திமதியா பிள்ளை ஜெயலக்ஷ்மியம்மாளிடம் போய் இரும்புப் பெட்டியிலிருக்கும் சாவியை எடுத்து வந்து திறக்கலாமென சாவியை எடுக்கச் சொன்னார். அவள் இரும்புப் பெட்டியைத் திறக்காமலே ஸ்ரீனிவாசலு ராஜுவின் அறையண்டை வந்து மடியிலிருந்த சாவிக் கொத்தை யெடுத்து கதவைத் திறந்தாள். உள்ளே போய்ப் பார்க்க ஸ்ரீனிவாசலு ராஜு கீழே தரையில் அலங்கோலமான நிலையில் விழுந்து கிடந்தார். "தாத்தா! தாத்தா!! என்று கூப்பிட்டுக் கொண்டே அவர் தேகத்தைத் தொட்டுத் தூக்கப்பார்த்தாள். உடம்பு ஜில்லென்றிருந்தது. ஐயோ தாத்தா யென்றதும் அலறியபடியே அவர் மேல் விழுந்தழுதாள். ஷேக் மூஸ்தபா சாஹிப்பவர்கள் தொட்டுப் பார்த்ததும் அவருக்கு நாடிப் பரீட்சை தெரியுமாதலால் கை நாடிப் பார்த்தார். நாடி அடிக்கவேயில்லை. உடனே பக்கத்திலிருந்தவர்களிடம் இறந்து போய் விட்டார் என்பதாகச் சொன்னார். அப்போது கிராம முனிசிபவர்கள் அவ்விஷயத்தை ஜில்லா மாஜிஸ்டிரேட் அவர்களுக்கும், டெப்டி மாஜிஸ்டிரேட் அவர்களுக்கும், போலீஸ் சூப்பரன்டென்டன்ட் முதலியவர்களுக்கு உடனே தெரிவிக்க வேண்டுமென்றும் அதுவரையில் எவரும் ஸ்ரீனிவாசலு ராஜுவின் உடம்பைத் தொடவாவது அப்படியிப்படிப் புறட்டவாவது கூடாதென்றும் சொன்னார். திக்பிரமை கொண்டவர் போலிருந்த காந்திமதியா பிள்ளை ஜெயலக்ஷ்மியைச் சமாதானப் படுத்தி டாக்டர் வந்து பார்க்கும் வரை சற்று சாந்தமாயிருக்கும்படியும் அநேகமாய் மூர்ச்சையாயிருப்பாரென்றும் சொன்னார்.

ஜெயலக்ஷ்மி அவர்கள் வார்த்தைகளை சற்றும் லக்ஷியம் செய்யாமல் அவளுடைய அழுக்குரலைக் கேட்டு அங்கு ஓடி வந்த வேலைக்காரரின் உதவியால் ஸ்ரீனிவாசலு ராஜுவின் தேகத்தை எடுத்து அங்கு போட்டிருந்த பெரிய சோபாவில் படுக்க வைத்து விட்டு டாக்டரை அழைத்து வரச் சொல்லி விட்டு அழுது கொண்டிருந்தாள். டாக்டர் வந்து தொட்டுப் பார்த்தும், மார்பில் குழாய் வைத்துப் பார்த்தும், கை நாடி, கால் நாடி பார்த்தும் ஸ்ரீனிவாசலு ராஜு இறந்து விட்டாரென்று தெரிவித்தார். அதற்குள்ளாக ஊரெல்லாம் ஸ்ரீனிவாசலு ராஜு இறந்து விட்டாரென்ற சங்கதி பரவவே, அப்போது இன்ஸ்பெக்டர் வேலை பார்த்துக் கொண்டிருந்த அளகிரிசாமி நாயுடு வந்து பார்த்து டாக்டருடன் கலந்து பேசி அன்றைய சாயங்காலம் வரையில் எவ்விதமான வியாதியுமில்லாமலிருந்த ஸ்ரீனிவாசலு ராஜு திடீரென்று எவ்வாறு இறந்திருக்கக் கூடுமென்று தெரியவில்லையென்றும் அது சந்தேகத்திற்கிடம் கொடுக்கிறதென்றும் ஆகையால் அவ்விஷயத்தை சப்மாஜிஸ்டிரேட், டெப்டி மாஜிஸ்டிரேட், ஜில்லா மாஜிஸ்டிரேட் போலீஸ் சூப்பரன்டன்ட் முதலியவர்களுக்கு அறிவித்து அவர்கள் வந்த பின் தான் எந்த காரியமும் செய்யவேண்டுமென்றும் அதுவரையில் பிரேதத்திடம் எவரும் போகக்கூடாதென்றும், எல்லோரையும் வெளியில் போகும்படியும், அறையைப்பூட்டி போலீசார் பந்தோபஸ்தில் இருப்பது நலமென்றும் தெரிவித்தார்கள். ஜெயலக்ஷ்மி, அவர்கள் வார்த்தைகளை லக்ஷியம் செய்யாமல் அவர்கள் ஜாதியாசாரப்படி உடனே பிரேதத்தை ஸ்நானம் செய்வித்து திருமண் ஸ்ரீசூர்ணமிட்டு வேறு வஸ்திரங்கள் கட்டி தர்ப்பாசனத்தில் கிடத்த வேண்டுமென்று முறண்டினாள். அதற்குள்ளாக வெளியே வேலையாய் சென்றிருந்த சுப்பராஜுவும் வந்து ஓவென்று அலறி அழுது ஜெயலக்ஷ்மி சொல்வதே சரியென்றும் அவ்வாறே செய்யப் போவதாயும் சொன்னான். அப்போது அங்கு வந்த பாலரங்க ராஜு துக்கித்து விட்டு, போலீஸ் இன்ஸ்பெக்டரவர்கள் சட்டப்படி நடத்தக் கடமைப்பட்டவரென்றும் அவர் சொல்வதற்கு மாறாக நடத்துவதாகில் அதனால் அனர்த்தங்கள் விளையுமென்றும் அதிகாரிகள் வந்து பார்த்த பின்னரே கிரியைகள் ஆரம்பிப்பது நலமென்றும் சமாதானம் சொன்னார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டர் அவ்வாறு சொல்வதற்கு என்ன ஆதாரமிருக்கிறதென்று சுப்பராஜு முறண்டினார். பாலரங்க ராஜு அவர்கள

போலீஸ் இன்ஸ்பெக்டரிடமும் கலந்து பேசி வந்த பின் காரணம் தெரிவிப்பதாகச் சொல்லி அவர்களைக் கேட்க; டாக்டரவர்கள் கழுத்தில் கன்னியிருந்த பாகங்களைக் காட்டி ஸ்ரீனிவாசலு ராஜுவின் கழுத்தை யாரோ இறுக்கிப் பிடித்துக் கொன்றிருக்கலா மென்றார். ஜெயலக்ஷிமியும் சுப்பராஜுவும் ஸ்ரீனிவாசலு ராஜுவின் கழுத்தை இறுக்கிப் பிடித்துக் கொல்லக்கூடிய வல்லமைசாலி இப்பூலோகத்திலேயே இல்லையென்றும் ஆகையால் ஏதோ மனப்பிராந்தியால் அவ்வாறு சொல்லுகிறாரென்றும் முறண்டினார்கள். அப்போது பாலரங்கராஜு அவர்களிருவரையும் சமாதானப்படுத்தி போலீஸ் இன்ஸ்பெக்டர் சொல்லுகிறபடி நடப்பதே நலமென்றும் அவர்கள் மனதில் பதியுமாறு எடுத்துச் சொல்லி எல்லோரையும் அவ்வறையிலிருந்து வெளியே போகும்படி செய்தார். உடனே போலீஸ் இன்ஸ்பெக்டர் அவ்வறையின் ஜன்னல்களையெல்லாம் சரிவரப்பூட்டி காந்த விளக்குகள் இரண்டைப்பிரகாசமாய் எரியும்படி வைத்து அறையின்கதவுகளை மூடிப்பூட்டுப்போட்டு அரக்கு முத்திறை அடையாளமிட்டு அவ்வறையைச் சுற்றி போலீஸ்காரரை பாரா வைத்துவிட்டு தானும் அதிகாரிகள் வரவை எதிர்ப்பார்த்தவண்ணம் அங்கேயே போலீசாருடன் உட்கார்ந்திருந்தார். ஸ்ரீனிவாசலுராஜுவின் வேலைக்காரரும்கூட சற்று தூரத்திலிருந்து தாங்கள் வேலைகளைச்செய்து கொண்டிருந்தார்கள். பாலரங்கராஜு, ஜெயலக்ஷிமி, சுப்பராஜு, காந்திமதியாபிள்ளை ஆகிய நால்வரும் பக்கத்திலிருந்த அறையில் உட்கார்ந்து ஸ்ரீனிவாசலுராஜுவின் அரிய குணங்களையும் தைர்யத்தையும்பற்றிப் புகழ்ந்து பேசிக்கொண்டு விசனப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இரவு சுமார் 2-மணிக்கு டெப்டி மாஜிஸ்டிரேட் சப்மாஜிஸ்டிரேட்டை அழைத்துக் கொண்டு முதலிலும், சற்று நேரத்திற்கப்பால் ஜில்லா போலீஸ் சூப்பரண்டண்ட் அவர்களும், அதற்குச் சற்று நேரம் பொறுத்து ஜில்லா மாஜிஸ்டிரேட்டும் ஜில்லா சர்ஜனும் ஒருவர் பின் ஒருவராய் வந்து சேர்ந்து எல்லோரும் கலந்து பேசி விஷயங்களறிந்து அரக்கு முத்திரையை எடுத்து விட்டு பூட்டைத் திறந்து உள்ளே சென்று பார்க்க, பிரேதத்தைப் படுக்க வைத்திருந்த இடம் வெறும் இடமாயிருந்தது. பிரேதத்தைக் காணோம். திட்டமாய் இங்கு தான் படுக்க வைத்தோம் என எல்லோரும் அறிந்திருந்தும் அந்த சோபா இந்த சோபா ஆக அறை முற்றிலும் அவர்கள் கண்கள் தேடின. திட்டமாய் ஒரு இடத்தில் தான் ஒரு வஸ்துவை வைத்தோமென அறிந்தாலும் அது அங்கு இல்லாவிட்டால் அவ்வஸ்துவை அந்த இடத்

தில் தான் வைத்தோமோ அல்லது வேறிடத்தில் வைத்தோமோ என சந்தேகித்து அங்கும் இங்கும் தேடுவது மனித சுபாவம். அப்படியே அவர்கள் தேடி எங்கும் பிரேதம் காணமற்போகவே அப்பால் தான் இந்தச் சோபாவில் தானே நாமெல்லோருமாக இருந்து படுக்க வைத்தோம். அது எவ்வாறு மாயமாய்ப் போயிருக்கும் என ஒருவரை யொருவர் கேட்டார்கள். இன்ன விதமாய்ப் பதில் சொல்வதெனத் தெரியாமல் எல்லோரும் திகைத்தார்கள். வந்த அதிகாரிகளுக்கு இன்னது செய்வது எனத் தெரியாமல் அங்கும் இங்கும் நடந்தபடியும் பார்த்தபடியும் இருந்தார்கள். அந்த அறையி லிருந்து வெளியேற ஏதாவது இரகசிய வழியிருக்கிறதாவென்று சுவர்கள், ஜன்னல்கள், தரை, தளம் முதலிய இடங்கள் முற்றிலும் சோதித்துத் தட்டிப் பார்த்தார்கள். சந்தேகம் கொடுக்கக் கூடிய சத்தம் எவ்விடத்திலும் கேட்கவில்லை. கடைசியாக அலுத்து உட் கார்ந்தார்கள்.

சுப்பராஜுவும் ஜெயலக்ஷ்மியும் தங்கள் ஜாதியாசாரப்படி பிரேதத்தைக் குளிப்பாட்டித் திருநாமமிட்டு தர்ப்பாசனத்தில் படுக்க வைத்து பக்கத்திலிருந்திருந்தால் இந்த அநியாய சம்பவம் நடந்தேறி யிராதென்றும் அதற்கு போலீஸ் இன்ஸ்பெக்டரே காரணகர்த்தா வென்றும் பிரேதத்தை ஒப்புவிக்க அவரே ஜவாப்தாரியென்றும் டெப்டி மாஜிஸ்டிரேட்டிடம் மனுக் கொடுத்துக் கேட்டார்கள். அவர் சமாதானமாய் நீங்கள் சொல்வது உண்மையாயினும் போலீஸ் இன் ஸ்பெக்டர் பிரேதத்தை எவ்வாறு அப்புறப்படுத்தி யிருக்க ஹேது விருக்கிறதென்று சொல்லுங்கள். அவரைத் தக்கபடி தண்டனைக் குள்ளாக்கலாம் எனக் கேட்டார். அதற்குச் சரியான பதில் சொல்ல எவர்க்கும் தெரியவில்லை. இற்க, நமது வாசகர்கள் பிரேதம் எவ் வாறு காணமற் போயிற்றென்று அறிய ஆவலாயிருப்பார்களாதலால் அவர்கள் சந்தேகத்தை நிவர்த்தி செய்வோம்.

ஸ்ரீனிவாசலு ராஜுக்குத் தலைமுறை தத்துவமாய் நம்பிக்கை யுள்ள மீன் கந்தன் என்றொருவன் இருந்ததாகவும் அவன் குமாரன் சின்னமீன் கந்தன் என்பவனும் நம்பிக்கையா யிருப்பதால் தான் ஸ்ரீனிவாசலு ராஜு அவன் மூலமாய்த் தன் குமாரர் சுந்தர ராஜுவைத் தப்ப வைத்ததாகவும் முன் எழுதியிருப்பதை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்களென்றே நம்புகிறோம். அந்த சின்னமீன் கந்தனுக்குக் கோபாலன் என்ற ஒரு மகன் இருந்தான். அவன் தன்னுடைய முன்னோர்களுடைய நடையுடை பாவனைகளுக்கும்

யோக்யதைக்கும் முற்றிலும் மாருகவும், சில தற்காலத்துத் தறு
தலைத்தான் தோன்றி தலைவர்களுடைய பிரசங்கங்களைக் கேட்டதா
லும் அவர்களுடைய சாக்கடைப் பத்திரிகைகளைப் படித்ததாலும்
கடவுளே கிடையாதென்றும் எல்லா மனிதர்களும் சமமாயிருக்க
ஏற்ற தாழ்வு ஏன் இருக்கவேண்டுமென்றும் ஒருவருக்கு நிலம், நகை
கள், சொத்துகள் இருக்க மற்றவர்கள் ஏன் ஏழைகளாயிருக்க
வேண்டுமென்றும் தனவந்தருடைய சொத்துக்களை இல்லாதவர்களு
க்குப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டுமென்றும், தாய் தந்தையருக்கு
அடங்கியும், அவர்கள் சொல் கேட்டும் நடப்பது கேவலம்
அடிமைத்தனம் என்றும் அது சுயமரியாதைக்கு ஏற்ற குணமல்ல
வென்றும் *ஜாதிபேதம் கிடையாதென்றும் கோயிலிலிருப்பது கல்
லேயென்றும், கடவுளல்லவென்றும், அவர்கள் செய்யும் அவிவேக
மானபிரசாதத்திற்கு அடிமையாகி தனது தொழிலில் கவனம்செலு
த்தாமலும் தன் மனப்போக்கின்படி நடந்தும் வந்தான். ஒரு காசு

---

*ஜாதிபேதம் கிடையாதென்று பிரசங்கம் செய்வோர் தமது அறி
யாமையாலும் அவிவேகத்தாலும் தான் அவ்வாறு சொல்லுகிருர்களெ
ன்பதை ஒரு சிறு திருஷ்டாந்தரத்தால் எல்லோருக்கும் நன்ருய்த் தெரி
யும்படி சுலபமாய் எடுத்துச் சொல்லக்கூடும். தானியங்களில்கூடத்
தேரிந்தெடுத்த தான்யங்கள் சிலாக்கியமான மாசூல்கள்கொடுக்கிறதெ
ன்பதுசாஸ்திர ஆராய்ச்சியால் கண்டு பிடித்துஅந்த உயர்ந்தவர்கவிதை
யை உபயோகித்தால் சிறந்த மாசூல் கொடுக்கிறதென்று அதை தனி
ஜாதியாய்ப் பிரித்து வர்கவிருத்தி ஏன்செய்கிருர்களென்று எப்போதா
வது சிந்தித்திருக்கிறீர்களா? நெல் என்பது ஒரே பொருள்தானே! அதில்
'கார்' என்றும் 'பிசானம்' என்றும் 'மல்லிகைப் பூ சம்பா' என்றும்பல
வேறு ஜாதிகள் இருப்பானேன்? கறுப்பு, வெள்ளைப்,பிட்டரிசிகளுக்கு
வித்தியாசம் உண்டா? இல்லையா? மாம்பழங்களிலும், பீத்தர், கோவா,
ருமானி, பெங்களூர், அல்பன்சோ, என்னும் அநேக ஜாதிகள் இருப்
பது தெரியுமா? தெரியாதா? இவ்வாறே ஒவ்வொன்றிலும் ஜாதிகள்
இருந்து கொண்டிருப்பதோடு ஒரு தினுசு மற்றொன்ருகவே ஆகாது
என்பது கவனிக்கத்தக்கது. இப்பேர்ப்பட்ட அவிவேக பிரசாரம் செய்
யும் பத்திரிகைகளை முன்கூட்டி சந்தாபெருமல் இனுமாய் அனுப்பி
னுலும் வேண்டாமென்று திருப்புவதிலிருந்தும் இனுமாய்க் கொடு
த்தும் சில நூறு சந்தாதாரர்களே யிருப்பதிலிருந்தும் இப்பத்திரிகை
களின் நோக்கங்கள் சரியானவை யல்லவென்றும் பெரும்பான்மை
யோரால் விரும்பப்படவில்லை யென்றும் தெரியவில்லையா?

சம்பாதிக்கத் திறமையில்லா விட்டாலும், பீடி, சிகரெட்டுகள், சாராயம் முதலியவைகளைக் குடித்தலிலும், எங்கும் ஏற்பட்டிருக்கும் குதிரைப் பந்தயச் சூதுக் கடைகளில் சூதாடி தோற்றலிலும் தன் சக்திக்கு மேற்பட்ட காரியாதிகளைச் செய்து வந்ததால் கோபாலனை சின்ன கந்தன் தன் வீட்டு நடை ஏறக்கூடாதென்று சொல்லி ஓட்டி விட்டான். ஊரெங்கும் அவனுக்கு ஏற்கனவே கடன் இருந்ததால் மேலும் கடன் கொடுப்போர் யாருமில்லை. அன்று காலை முதல் சாப்பாடும் இல்லை. பட்டினியிருப்பதுகூட அவனுக்கு அவ்வளவு கஷ்டமில்லை. சிகரெட் இல்லாமலிருந்ததே பெருங் குறையாக இருந்து கொண்டு என்ன செய்தால் கஷ்டமில்லாமல் பொருள் அகப்படும் என யோசனை செய்து கொண்டிருந்தான். அப்போது அவனைப் போன்ற நான்கு தறுதலைகள் அவ்வழியே வந்தார்கள். அவனைக் கண்டதும் "ஏ! கோபு உன்னை எங்கிட்டெல்லாம் தேடி அலஞ்சோம். ஓங்க வீட்டண்டை யிருந்தெயெண்ணு அப்படிப் போனது தான் தாமதம், உங்கப்பன் குட்டிபோட்ட நாயெப்போலே குலைச்சிக்கிட்டு தடியெடுத்துக்கிட்டு அடிக்க வந்துட்டான். அடேயப்பா! நாங்கதான் உன்னைக் கெடுத்துட்டோமாம். இன்னம் அந்த வீட்டுப் பக்கம் வந்தா நம்மெல்லாம் சேத்து கட்டிவச்சி உரிசிடுவேண்ணு சொல்லி வெருட்டி வந்தான். எங்களுக்குக் கோபம்வந்தது நொருக்கிப்போடலாமாண்ணு பார்த்தோம்; அப்பெ நம்ம ராமசாமி "அடே அது பூதம்! நம்மெல்லாம் சேத்து ஒண்ணு முழுங்கிடுண்ணு ஓட்டம் பிடிச்சான். முந்தி ஒருநா, உங்கப்பன் 7 பேரை, வாங்கு வாங்குண்ணு வாங்கினது பர்த்த ஞாபகம் வந்துது. உடனே ஓட்டத்திலே யார்கெட்டிக்காரருண்ணு பாக்றப்பிலே ஓடிட்டோம், உன்னை இன்னம் வீட்டுக்கே வரக்கூடாதுண்ணு சொன்னுனுமே! நிசந்தானு?

கோபாலன்:—அதெல்லாம் அப்பாலே பேசலாம் ஒரு சிகரெட் கொடு.

என்றதும் அவன் ஒருசிகரெட் கொடுக்க வாங்கிப்பிடித்தான். சிகரெட் பிடித்துக் கொண்டே,

கோபாலன்:—என்ன அவசர ஜோலியா என்னைத் தேடினீங்க?

ராமசாமி.—நீ பட்னி கிடக்கிறெயேண்ணு தான் தேடுறோம்.

கோபாலன்:—எண்டா கிரிகிரி உருட்டு உருட்றே! எங்க வீட்டுக்கு வந்தப்பதானே அந்த சங்கதி உங்களுக்குத் தெரிஞ்சுது! அதுக்கு முன்னேயே என்னைத் தேடிக்கிட்டுதானே வந்தீங்க.

சோள்ளமுத்து:—ஏண்டா! பொய்யும் புளுகையும் சொல்ரே! நிசத்தைச் சொல்லேன். நம்ம கோபு நம்மோடே சேந்தவர்தானே!

ராமசாமி:—"வெள்ளே வீட்டிலே" புதுசா வந்திருக்காங்களே பைத்யக்கார டாக்டரோ டீக்டரோ! அவுங்க என்னைக் கூப்புட்டு உட்டு ரகசியமா ஒரு சேதி சொன்னுங்க; அதை எப்படின்னாலும் முடிச்சி ட்டா ரெண்டாயிர ரூபா கொடுக்கிறேண்ணுங்க.

கோபாலன்:—ரெண்டாயிரம் ரூபாண்ணு எம்பிட்டு ரூபா ?

ராமசாமி:—பெரிய பை நாலு பை ரூபா.

கோபாலன்:—அதெல்லாம் கிரிகிரி பேச்சுதான் ; அம்புட்டு ரூபா நான் பாத்ததே இல்லையே!

ராமசாமி:—நானும் அப்படித்தான் எண்ணினேன். ஒரு சாவி போட்டு பொட்டியைத் தொறந்தான், அதுலே சரியா, பை பையா அடுக்கி வச்சிருந்தாங்க! அதிலென்ன கேப்பையா (கேழ்வரகு) யிரு க்குண்ணு கேட்டேன். அவுங்க நீங்க கதவைத் திறந்து எந்தப் பையாவது எடுத்துக் கொட்டுனு அப்பொ அதிலெ என்ன இருக்கு ண்ணு தெரியுமுண்ணுங்க. நான் போய் கதவிலே கைவச்சி தொற ந்தேன். ஏலே உள்ளே பூதமோ என்னமோ யிருந்து யென் ரெண்டு கையையும் புடிச்சிக்கிட்டு விடமாட்டேண்ணுச்சி. நான் காடியாட கத்தினுக்கூட செறிக்கி மகன் பெட்டி எங் கையை இருக்கிப் பிடிச் சுது. நான் இளுக்க இளுக்க எங்கப்பாணெ ரொம்ப இருக்கிச்சி. சொள்ளமுத்தைக் கூப்பிட்டேன். அவன் வந்து என் கையைப் பிடிச்சானே இல்லையோ அவன் கையையும் செரிக்கி மகன் பொட்டி சேத்துப் புடுச்சிட்டது. ஏது நாம் இதோடே சாக வேண்டியதே ண்ணு நினைச்சிக்கிட்டு நம்ம சமூகத்தையும் ஆண்டியையும், கூப்பி ட்டோம். நாங்க பட்ர கஷ்டத்தைப் பாத்துட்டு அவுங்க வரமாட் டேண்ணுங்க. அப்போ கெஞ்சனேம். அவுங்க வந்து எங்க கையைப் புடிச்சதும் அவுங்களையும் பொட்டியிலிருந்த பூதமோ என்னமோ செய்தான். எங்கையை யெல்லாம் உட்டுட்டுது. உட்ட உடனே ஓடப்பாத்தோம். கதவு பூட்டி யிருக்கப்போ எப்பிடி ஓடாது? முடியல்லே. அந்த டாக்டர் சிரிச்சிக்கிட்டு திருப்பியும் பைகளை எடுக்கச் சொன்னன். இனி அதிலே கைவச்சா கைக்குப்பதிலா பொட்டிலிருக்க பூதம் கழுத்தெப் பிடிச்சிகொண்ணுடு மூண்ணு மாட்டேண்ணுட்டோம். அப்பொ அந்த டாக்டர் பையை எடுத்து அவுத்து கொட்டனுன், அவ்வளவும் சலசலண்ணு ரூபாவா

வுழுந்துது. அப்பிடி நாலு பையைக் கொட்டினுன். ஏலே எம்புட்டு ரூபா! ஒரு பாகம் அகலத்துக்கு ரூபாயா குவிஞ்சுது. அவனெ அப்பிடியே கொண்ணுட்டு ரூபாயெ அள்ளிகிட்டு போகலா முண்ணு நினைச்செரும். அந்தப் பாவி மகன் எங்க மனசிலே பூந்து பாத்தாப்பிலே சிரிச்சிக்கிட்டே நாங்க நினைச்சதை சொல்லி விட்டு நீங்க வேணுமுண்ணு ரூபா யெடுத்துக்குட்டு போங்க வழியிலெ இருக்க பூதம் உங்களைப்புடிச்சிடு முண்ணுன், நாங்க நம்பல்வே. நீங்க நம்பல்லே, வேணுமுண்ணு எடுத்துக்கிட்டு பொய்யிபாருங் கன்னு கதவைத் தொறக்கிற சாவி கொடுத்தான்; நாங்க ரூபாயெ எடுத்துக்கிட்டு கதவெத் திறந்தொமோ யில்லேயோ அங்கெ என்னமோ யிருந்து எங்களை அப்பிடியும் இப்பிடியும் போகாமே புடிச்சிக்கிட்டதோடு கணகணண்ணு எட்டு வீட்டுக்குக் கேக்கும்படி மணியடிச்சுது. ஊட்லே இருந்து 10 வேலைக்காரங்கோ வந்துட்டாங்க; நாங்க இன்னும் உசுரோடே போய் வீட்டு முகம் பாக்கப் போரதில்லேண்ணு நெனச்சிட்டோம். அந்த மகராசன் சிரிச்சிகிட்டு என்னமோ சொன்னுன். அந்தப் பைகளை எடுத்துக்கிட்டு போய் பொட்டியிலே வச்சிட்டு பொய்யிட்டாங்க. அப்போ அவன் என்னமோ செய்தான், எங்களை யெல்லாம் உட்டுட்டுது, எங்களெ உட்டுட்டா ஊட்டுக்குப் போரமுண்ணு சொன்னேம். அவன் சொன்ன வேலெ செய்தா அந்த நாலு பை ரூபாவும் நிசமா கொடுக்கிறேண்ணு சொல்லி ஆளுக்கு பத்து ரூபா கூட குடுத்தான்.

கோபாலன்:—என்ன செய்தா அம்புட்டு ரூபா குடுப்பானும்?

ராமசாமி:—கிட்டவா! காதிலெசொல்ரேன், உங்கப்பன் எசமான் ஸ்ரீனிவாச ராசா இண்ணெக்கி செத்திட்டானுமல்ல. அந்த சவத்தை எப்படிண்ணுலும் கொண்ணந்து குடுத்துட்டா அம்புட்டு ரூபாவும் குடுக்கிறேண்ணுன். நாங்க எப்பிடி முடியும்? அவுங்க வேலைக்காரங்க கேட்டாங்கண்ணு எங்க எலும்பெ பொடியா ஒடிச்சி தகத்து எரிஞ்சிடுவாங்கண்ணேம். அவ்வளவு பேரு காவலிருக்கப்போ, சின்ன எசமான் எப்படி மாயமாப் பொய்யிட்டாரு; அதிலென்னமோ சூதிருக்கு. அது உனக்கு தெரிஞ்சிருந்தா அந்த சவத்தையும் அப்பிடி மாயமாக் கொண்ணந்துட்டாத் தான் முடியுமுண்ணுன். அந்த சவத்தை என்ன செய்யப் போரேண்ணேம். அந்த ராசா தலையை சோதிக்கணுமாம்; அதுக்கே இந்த ஊர்லே வந்து இத்தனே மாசமாயிருக்கானும்; அந்த சூது உனக்குத்தெரிஞ்சி சொன்னயிண்ணு நாமெல்லாம் குஷாலா காசி வரைக்கும் பொய்யி வரலாம். என்ன சொல்ரே!

சொள்ளமுத்து:—சொல்ரதென்னண்ணு! அந்த ராசாவூட்டு சங்கதி நம்மகோபு அப்பனுக்குத் தெரியாதது ஒண்ணும் இல்லையே, அப்பனுக்குத் தெரிஞ்சது புள்ளைக்கு கொஞ்சமுன்னாலும் தெரிஞ்சிருக்குமுல்லா? இதைக் கேட்கணுமா? அந்த டாக்டரிட்டே கூட்டிகிட்டுப்போனா அவுங்க அப்பன் அவனை வூட்டைவுட்டு வெறட்டுனதுக்குப் பர்த்தி செய்துடலாம். நம்மும் குஷாலா நம்ம ஆயுசுக்கு கஷ்டமில்லாமெ அவ்வளவு பணத்தை வச்சிகிட்டு ஆட்டை மாட்டை வாங்கிவுட்டு மகாராசராயிருக்கலாம். என்ன கோபு தொரைகிட்ட போலலாமா?

கோபு:—அந்த சங்கதி எனக்கு ஒன்றும் தெரியாதே!

ராமசாமி:—உன்னை இட்டு வந்தா நீ சொன்னாலும் சொல்லாட்டாலும் உனக்கு இருவத்தஞ்சி ரூபா கொடுக்கிறேண்ணுன்; நாங்களும் இன்னும் ஒண்ணு ரெண்டு வாங்கிடுவோம் வா! போவோம்.

கோபு:—அந்தராசா வீட்டுக்கு விரோதமா நடந்தா எங்கப்பன் நம்மையெல்லாம் கொண்ணுடுவான், நான் வரவே மாட்டேன்.

என்றான். நீ ஒன்றும் செய்ய வேண்டாம். தொரை வீட்டுக்கு வந்தால் போதுமென்று சொல்லி யெல்லோருமாகச் சாராயக்கடைக்குப் போய் கோபாலனுக்கு வேண்டியவரையில் சாராயத்தை வாங்கி ஊற்றி மிட்டாய் கடைக்கு அழைத்துப் போய் அவனுக்குத் தேவையான வஸ்துக்களை வாங்கிக் கொடுத்து அவனை டாக்டரிடம் அழைத்துப் போனார்கள். டாக்டர் அவனைமட்டும் தனியாய் அழைத்துப் போய் சுமார் ஒருமணி நேரம் வரையில் உள்ளே வைத்துப் பேசிக் கொண்டிருந்து விட்டு அப்பால் கோபாலனை ஒரு வழிக்குக் கொண்டு வந்ததாகவும், கோபாலன் எப்படிச் சொல்லுகிறானே அப்படி நடந்தால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பை ரூபாய்கள் கொடுப்பதாவும் அவ்வாறு செய்ய ஒத்துக்கொள்ள வேண்டுமென்றும் சொன்னார். எப்படியாவது அவ்வளவு ரூபாய் தந்தால் போதுமென்றும் என்ன வேண்டுமானாலும் செய்வதாகவும் சொன்னார்கள். டாக்டர் கோபாலனிடம் தீர்மானித்தபடி அந்நால்வரையும் படுக்க வைத்து அவர்கள் கண்களில் ஏதோ ஒரு மருந்தை ஊற்றி இரண்டு நிமிஷம் படுத்திருந்த பின் எழுந்து வரச்சொன்னார். அவர்கள் எழுந்ததும் கண்களைக் கசக்கிக் கொண்டு திறந்து பார்த்தார்கள்; ஒன்றுமே தெரியவில்லை யென்றும் ஒரே இருட்டாய் இருப்பதாகவும் சொன்னார்கள். கோபாலன் சொல்லுகிறபடி சரிவர நடத்தி வந்தால் முன் சொன்ன தொகைக்கு அதிகமாகவே கொடுப்பதாகவும் முன்போல் கண்தெரியும்படி செய்வதாயும் அவன்

சொன்னபடி நடக்காமல் ஏறுமாருய் நடந்தால் அவர்கள் எப்போதும் குருடாகவே யிருக்கும்படி நேரிடுமென்றும் கோபாலன் வார்த்தைக்கு குறுக்காக ஒன்றும் பேசாமல் நடந்து காரியத்தை சாதித்து வரும்படி எச்சரித்துத் தனுப்பினர். கோபாலன் அவர்களை வண்டியில் அழைத்துச் சென்ருன். அவன் வீட்டிலிருந்த எல்லோரும் ஸ்ரீனிவாசலு ராஜுவின் வீட்டு சாவுக்குச் சென்றிருந்ததால் தட்டுத் தடையில்லாமல் தன்னிடமிருந்த சாவி கொண்டு வீட்டைத் திறந்து அவர்களையும் அழைத்துப் போய் இரகசிய வழியாய்ச் சென்று அந்நால்வரையும் ஸ்ரீனிவாசலு ராஜுவின் பிரேதத்தைத் தூக்கி வரச்செய்து வண்டியிலிருந்த பெட்டியில் வைத்ததும் அவர்களையும் வண்டியில் ஏறும் படி செய்து வண்டியை டாக்டர் வீட்டுப் பின்பக்கமாய் ஓட்டிச்சென்ருன். அவர்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்த டாக்டர் பின்கதவைத் திறந்து தனது ரசாயன ஆராய்ச்சிசாலையில் (Laboratory) பிரேதத்தைப்படுக்கச்செய்து அப்படியே எல்லோரையும்அழைத்துக் கொண்டு போய் வைத்தியம் செய்யும் அறைக்குச் சென்றதும் அந்நால்வரையும் படுக்க வைத்து அவர்களுடைய கண்களில் ஒரு மருந்து ஊற்றி சில நிமிஷங்கள் அப்படியே இருக்கும்படி சொல்லி அப்பால் எழுந்திருக்கச் சொன்னர். அவர்கள் எழுந்ததும் அவர்களுக்குக் கண்கள் தெரிவதாகவும் ஆனல் மங்கலாக இருப்பதாகவும் சொன்னர்கள். முன் தீர்மானித்தபிரகாரம் அவர்களுக்குச் சொன்ன ரூபாய்கள் கொடுத்து அனுப்பியதோடு படுத்து எழுந்தால் கண்கள் சரியாய்விடுமென்றும் சொல்லியனுப்பினர். அவர்கள் வெளியே சென்றபின் தெருக்கதவை மூடித் தாளிட்டபின், தமது வேலைக்காரரை யெல்லாம் அழைத்து தான் ஒரு முக்கியமான சோதனை செய்யப் போவதாகவும் ஆகையால் இனி மூன்றுதினங்களுக்கு எவ்வளவு அவசரமாய் யார் பார்க்க விரும்பி வந்தாலும் தான் ஊரிலில்லை யென்றும் வெளியூர் போயிருப்பதாகச் சொல்லும்படியும் திட்டம் செய்து விட்டு உள்ளே சென்ருர்.

உள்ளே சென்ற டாக்டர் பிரேதசோதனைக்கு வேண்டிய நுண்ணிய ஆராய்ச்சிக் கருவிகளை யெல்லாம் எடுத்துக்கொண்டு போய் வைத்து விட்டு பிரேதத்தைப் படுக்க வைத்த இடத்தில் பார்க்க பிரேதத்தைக் காணேம். அங்கு இங்கு எங்கு தேடியும் பிரேதம் மாயமாய்ப் போய்விட்டது; காணவே காணேம்.

எட்டாவது அத்தியாயம்

போலீஸ் விசாரணை

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டோன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்

மூர்ந்தின அத்தியாயத்தில் டெப்டி மாஜிஸ்டிரேட் போலீஸ் சூப்பிரன்டென்ட் முதலியோர் பிரேதத்தைத் தேடி அலுத்து உட்கார்ந்து விட்டார்களென்று சொன்னோமல்லவா? அவர்கள் சுமார் கால் மணி நேரம் திக்பிரமை கொண்டவர்கள் போல் ஆழ்ந்த யோசனையிலிருந்து விட்டு அப்பால் ஸ்ரீனிவாசலுராஜுவின் மரணத்தைப் பற்றி விசாரணை செய்ய உத்தேசித்து ஸ்ரீனிவாசலுராஜு எப்போதும் இருக்கும் அவர் படிப்பு அறையைச் சோதனை செய்ய ஆரம்பித்தார்கள்.

அவர் உட்கார்ந்திருக்கும் சாய்வு நாற்காலியின் சமீபத்திலிருக்கும் மேஜையின் மீது கையெழுத்துப் போடாத புது ஓயில் விரித்து வைக்கப்பட்டிருந்தது. கையெழுத்து போட வேண்டிய இடத்தில் பேனா வைத்து எழுத ஆரம்பித்த உடனே அதாவது பேனா ஓயில் சாசனத்தைத் தொட்ட உடனே யார் தட்டினதினதாலோ அல்லது கையை இழுத்ததினாலோ அல்லது வேறு காரணத்தாலோ கையெழுத்திடும் இடத்தில் பேனா கீச்சிய அடையாளம் ஓயிலில் இருந்தது. மேஜையின் பக்கத்திலிருந்த நாற்காலி கவிழ்ந்து விழுந்திருந்தது.

(2) மேஜையின் பேரில் வெளி இராஜதானியில் செய்யும் பழைய மிட்டாய் தினுசும் காசி தீர்த்தச் செம்பு ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது.

(3) பழைய கணக்குப் புஸ்தகங்கள் பல ஒரு பக்கத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(4) இன்னொரு பக்கத்தில் ஓர் விசேஷ தினுசு வாசனை புகையிலைப் பை வைக்கப்பட்டிருந்தது.

(5) இன்னும் சரியாய் அறை முற்றிலும் தேடியதில் ஸ்ரீனிவாசலு ராஜு கையெழுதிடும் பேனா ஒரு பக்கத்தில் அதிக வேகமாய் கீழே விழுந்தால் எவ்வாறு முனை மழுங்கியிருக்குமோ அவ்வாறு பேனாவின் முனை மழுங்கியும் விழுந்திருந்தது!

(6) மேஜையின் மேல் ஸ்ரீனிவாசலுராஜுவின் பாங்க் தெரிசன உண்டியல் புஸ்தகத்தில் (செக்புஸ்தகத்தில்) கிழித்துக் கொடுத்திருந்த பாதி காகிதங்களிலெல்லாம் இன்னாருக்கு இவ்வளவு தொகை எந்தத் தேதியில் கொடுக்கப்பட்டதென்று குறிப்பிட்டிருக்க கடைசிக் காகிதத்தில் மட்டும் அவ்விவரங்கள் ஒன்றும் எழுதப்படாமல் காலியாயிருந்தது.

அவைகளை யெல்லாம் குறித்துக் கொண்டுஅப்பாலும் தேடியதில் மாமூலா யிருக்கும் வஸ்துக்கள் நீங்கலாக வேறு விசேஷமானவை ஒன்றும் அகப்படவில்லை. அத்துடன் தேடுவதை நிறுத்திக்கொண்டு ஆட்களை விசாரிப்பதாய்த் தீர்மானித்தது முதலில் ஸ்ரீனிவாசலு ராஜு அவர்கள் கூப்பிடும் போதெல்லாம் "ஏனென்று" கேட்கும் சொள்ளமுத்துத் தேவனைக் கூப்பிட்டார்கள். அவன் வந்ததும்,

இன்ஸ்பெக்டர்:—சொள்ள முத்துத் தேவரே! இப்போது எஜமான் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் நீர் உண்மையான பதில் சொல்லவேண்டும் தெரியுமா?

சொள்ளமுத்து:—எனக்கொன்றும் தெரியாது. ஜெயம்மா அழுத உடனே போனேன். அப்போ எசமான் செத்துக் கெடந்தாங்க. அம்மட்டுதான் அடிமெக்குத் தெரியும். சத்தியமா வேறொண்ணும் தெரியாது.

இன்ஸ்பெக்டர்:—தேவரே! உமக்குத் தெரியுமென்று யாரும் சொல்லலே; எஜமான் கேட்கும் கேள்விக்கு மட்டும் உண்டு இல்லையென்று உண்மையாய்ச் சொல்லும், அவ்வளவு போதும்.

சொள்ளமுத்து:—அதுக்கென்னங்க! தெரிஞ்சதைச் சொல்லிட்ரேனுங்க.

டேப்டி மாஜிஸ்டிரேட்:—இன்ஸ்பெக்டர்! தங்களே விசாரியுங்கள். அவசியமானபோது நாங்கள் விசாரிக்கிறோம்.

இன்ஸ்பெக்டர்:—நேற்று நடந்த சங்கதிகளை ஒன்றும் ஒளியாமல் சொல்லு.

சொள்ளமுத்து:—விடிய 4-நாளிகெக்கு எழுந்திருச்சேனுங்க. எழுந்திருச்சதும் கால்வாய்க்குப் போனேனுங்க.

இன்ஸ்பெக்டர்:—ஓய் தேவரே! அந்தக்கதைகளையெல்லாம் யார் கேட்டார்கள். கேட்ட கேள்விக்குமட்டும் ஜவாபு சொல்லும்.

சொள்ளமுத்து:—என்ன எசமான்! நேத்து நடந்த சங்கதி ஒண்ணுகூட விடாமே சொல்லச் சொன்னீங்க. சொல்ரதுக்கு முன்னே இதெல்லாம் யார் கேட்டாங்கோங்கிறீங்களே!

இன்ஸ்பெக்டர்:—தேவரே! உமது எஜமான் இறந்ததற்குச் சம்மந்தமான விஷயங்களை மட்டும் சொல்லும்.

சொள்ளமுத்து:—என்ன எசமான்! அதுதான்எனக்கொண்ணும் தெரியாதுண்ணு மொதல்லியே சொல்லிட்டேனே!

என்றதும் பக்கத்திலிருந்த ஹெட்கான்ஸ்டேபிள் சொள்ள முத்து தேவரைப் பார்த்து "ஓய் என்ன? எசமானர் கேட்டதுக்கு சரியா சொல்லலட்டா தெரியுமா; பொடக்கி மேலடிப்பேன்" என்று கையை ஓங்கிக் கொண்டு போய் அப்பால் நின்றுவிட்டார். மாஜிஸ்டிரேட் டெப்டிமாஜிஸ்டிரேட் போலீஸ் சூப்பிரண்டண்ட் முதலிய பெரிய அதிகாரிகள் இருப்பதைக்கூடக் கவனியாமல் அவர் கையை ஓங்கி அடிக்கப்போன காரணமென்ன வெனில் பெரும்பான்மையோரான போலீசார் விசாரணை ஆரம்பிக்கு முன் யாரை விசாரணை செய்ய விரும்புகிறார்களோ அவர்களை, அவர்களுடைய மூக்கின் மேல் பலமாய்க் குத்தியோ அடித்தோ அப்பால்தான் கேட்பது வழக்கம். இன்றும் இவ்வழக்கம் பெரும்பான்மையோரால் அனுஷ்டிக்கப்பட்டுதான் வருகிறது. அவர்கள் மனதில் பீதியுண்டாகும்படி அவ்வாறு அடிக்காவிட்டால் அவர்கள் உண்மை சொல்லமாட்டார்களென்பது அவர்கள் கொள்கைபோலும்; நிற்க,

இன்ஸ்பெக்டர்:—ஓய் தேவரே! நேற்று யார் யாரெல்லாம் உங்கள் எஜமானிடம் பேசினார்கள்.

சொள்ளமுத்து:—அம்மா பேசினாங்க, சின்ன எசமான் பேசினாங்க, ஐயா கணக்குப் பிள்ளை ஐயா பேசினாங்க, இன்னம் வந்தவுங்க போனவுங்க எல்லாம் பேசினாங்க.

இன்ஸ்பெக்டர்:—ஒவ்வொருவர் என்னென்ன பேசினார்கள்? சொல்லும். முதலில் ஜெயலக்ஷிமியிடம் என்ன பேசினார்; அதைச் சொல்லும்.

சொள்ளமுத்து:—என்னென்னமோ கலியாணச் சங்கதி பேசினுங்க, அம்மா சடைச்சிக்கிட்டாங்க, கணக்குப் பிள்ளை ஐயா அப்பிடி நீ சொல்லலாமண்ணுங்க, எசமான் அடிக்க வந்தாங்க, அந்தம்மா ஓடிட்டாங்க.

இன்ஸ்பெக்டர்:—ஓய் தேவரே! எப்போதும் ஜெயலக்ஷ்மியின் பேரில் பிரியமாயிருக்கும் எஜமான் அடிக்கப் போகும்படியான அந்தம்மாள் என்ன சொன்னுர்கள்.

சொள்ளமுதது:—எனக்கு அதெல்லாம் தெரியாது.

இன்ஸ்பெக்டர்:—ஓய் தேவரே! நிஜத்தைச் சொல்லுகிறீரா என்ன? அடே 869!

என்றதும் அவன் வந்து பளீரென சொள்ளமுத்துத் தேவர் கன்னத்தில் ஓர் அறை அறைந்தான். தேவருக்குக் கோபம் வந்து கையை மடக்கி ஆக்கனிஸ்டேபிளின் வாயின்மேல் பலமாய் ஓங்கி குத்திவிட்டு "எங்க எசமான் இறந்துட்ட உடனே அவ்வளவு ஏளனமாய் போயிட்டுதா, கண்ட நாயெல்லாம் கன்னத்திலறைய? என்னை வெட்டிட்டாலும் சரிதான்; நான் சரியான மறத்திமகண்ணு.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—தேவரே பொறும் ; கோபப்படாதேயும். இன்ஸ்பெக்டர்! உமது கான்ஸ்டேபிள் செய்தது மஹா பிசகான காரியம். நாங்களெல்லாம் இருக்கிறோமென்று கூட கவனியாமல் அவரை ஏன் அடிக்க வேண்டும். அவனை ஒரு வாரத்திற்கு சஸ்பெண்ட் செய்யும்படி சூப்பிரண்டெண்ட் அவர்கள் உத்தரவு கொடுப்பார்கள். அவனை உடனே வெளியே போகச் சொல்லுங்கள். தேவரே! அவன் தவறுதலாய் அடித்தாலும் நீர் சர்க்கார் உத்தியோகஸ்தனைக் கவனியாமல் திருப்பி அடிக்கலாமா? இனிமேல் அப்படி செய்யாதேயும்.

சொள்ளமுத்து:—புத்தி, இல்லே புத்தி, எங்க எசமான் செத்த அண்ணைக்கே இப்பிடி அடிச்சாங்களேண்ணுதான் கோபம் வந்துட்டுது. மன்னிக்கணும் எஜமான்.

டெப்டிமாஜிஸ்டிரேட்:—ஜெயம்மாள் நல்ல பெண்ணென்பது எல்லோருக்கும் தெரியும். அந்தம்மாளுக்குக் கோபம் வரும்படி உங்க எசமான் என்ன சொன்னுர்?

சொள்ளமுத்து:—அப்பிடிக்கேளுங்க எசமான்! அந்தம்மா தங்கக்கட்டிண்ணு அதுக்கே தகும்.

டேப்டி மாஜிஸ்டிரேட்:—அந்தக் குழந்தையின் பேரில் ஒருக்காலும் தப்பிதம் இருக்காதுண்ணு எனக்கு நன்ருய்த் தெரியும் உங்க எஜமானும் நல்லவர்தான். அவர் வார்த்தைக்கு குறுக்கு பேசினுல்தான் கோபம் வரும்.

சோள்ளமுத்து:—எசமான் சொல்ரது நூத்திலே ஒருபேச்சுங்க. எசமான், அம்மாளே யாரையோ கட்டிக்கிடச் சொன்னுங்க. அந்தம்மா மாட்டேண்ணுங்க. அப்போ எசமானுக்குக் கோபம் வந்து அந்த பாலரங்கன் பயலாலல்லவா நீ கெட்டாய். அவனேயே இல்லாமே செய்திட்டா நீ வழிக்கு வருவேண்ணுங்க. அதுக்கு அந்தம்மா, "நீங்க இருந்து யாரை காப்பாத்த இருக்கீங்க" அவரை நீங்க இருக்காமே செய்றதுக்கு முன்னே உங்களே இருக்காமே செய்திட்டா என்னுண்ணுங்க. அந்தக் கோபத்திலே அப்பிடி சொல்லிச்சிண்ணு நீங்க அந்தக் கொழந்தை மேலே சந்தேகம் வைக்கவேணும். ஏண்ணு அந்த கொழுந்தை தாத்தா செத்துப் போனதுக்கு அழுதது அழுதது அப்பிடி அழுதுதுங்க.

டேப்டி மாஜிஸ்டிரேட்:—யாரும் ஜெயலக்ஷ்மி மேல் இப்போது குற்றஞ் சாட்டவில்லே. நீ அதைப்பற்றி பயப்பட வேண்டாம அப்பால் என்ன நடந்தது?

சோள்ளமுத்து:—எசமான் என்னெக் கூப்பிட்டு மேல் வீட்டு கலெக்டர் எசமானே உடனே கூட்டிக்கிட்டு வரச் சொன்னுங்க. நான் போய் கூப்பிட்டேன். அந்த எசமான் கூடவே வந்தாங்க. உள்ளெ போனுங்க. பெரிய எசமான் என்னமோ படிச்சிக் காட்டி இப்பெ என்ன சொல்ரேண்ணுங்க. அதுக்கு கலெக்டர் எசமான் ஒங்க சொத்தை நீங்க என்னண்ணுலும் செய்யுங்க. எனக்கு ஒங்க சொத்து ஒரு பைசாகூட வேண்டாம். எனக்கு ஜெயலக்ஷ்மி யம்மாளே மட்டும் கொடுத்தாப் போதுமுண்ணுங்க; அட்புட்டுதானுங்க.

டேப்டி மாஜிஸ்டிரேட்:—பாலரங்க ராஜு உடனே போய் விட்டாரா? அல்லது எப்போது போனுர்?

சோள்ளமுத்து:—அவர் எப்ப போனுருண்ணு பாக்கல்லீங்க. எனக்கு அந்த சங்கதியே ஒண்ணும் தெரியாதுங்க.

டேப்டி மாஜிஸ்டிரேட்:—அப்பால் யார் யார் வந்தார்கள்?

சோள்ளமுத்து:—நான் யாரையும் பார்க்கல்லே!

டெப்டி மாஜிஸ்டிரேட்:—பார்க்கா விட்டால் பரவாயில்லை. யார் யார் பேசினதைக் கேட்டீர்.

சோள்ளமுத்து:—நான் பேசினதைக் கேட்டாப்பிலே சொல்லலீங்களே எசமான்! எசமானுக்கு எல்லாந் தெரியுமுண்ணும் எசமான் கிட்ட ஒளிக்க முடியாதுண்ணும் செத்துப்போன எசமான் அடிக்கடி சொல்லுவாங்க.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—யார் யாரோ பேசினார்களென்ற சமாச்சாரம் உமக்குத் தெரியுமென்று எனக்குத் திட்டமாய்த் தெரியும். ஆகையால் உண்மையைச் சொல்லிவிடும். உமக்கென்ன? நீர் ஸ்ரீனிவாசலு ராஜுவின் உப்பை உமது ஆயுட்காலம் வரை சாப்பிட்டதற்கும், நீர் அவர் அந்தரங்க வேலைக்காரனாயிருந்ததற்கும் எப்படியாவது அவரைக் கொன்றவர்களைக் கண்டு பிடிக்க உதவி செய்ய வேண்டும். அதற்குமேல் அவர் தேகத்தைக் கண்டு பிடித்து கர்மக்கிரியைகள் செய்யாவிட்டால் அந்த ஆத்மா மோக்ஷத்துக்குப்போகாமல் அலைந்து கொண்டிருக்குமாதலால், அதைக் கண்டு பிடிப்பதற்கு நீங்க உண்மையைச் சொன்னால்தான் சாத்யமாகும். உமது எஜமானருடைய ஆத்மா மோக்ஷத்துக்குப்போக வேண்டுமென்று உண்மையாய் நீர் நினைத்தால் உமக்குத் தெரிந்த விஷயங்களைத் திட்டமாய்ச் சொல்லிவிடும்.

என்று சொன்னதும் சொள்ளமுத்துத் தேவர் டெப்டி மாஜிஸ்டிரேட் காலில் விழுந்து சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்து "எப்படிண்ணாலும் எசமான் மனம் வச்சா பெரிய எசமான் சவத்தைக் கொண்டுவந்து விடுவீங்க. எசமான் அவ்வளவு உபகாரம் செய்யணும்" என்றான்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—தேவரே! நான்கடவுளல்ல, அப்படித் தெரிந்து கொள்வதற்கு. ஆனால் நீர் உண்மையைச்சொன்னால் மாத்திரம் அதிலிருந்து எப்படியாவது கண்டு பிடித்து உமது எஜமானர் தேகத்தைக் கண்டு பிடித்து தகனம்செய்யக்கூடும். ஆகையால் அப்படி உமது எஜமானர் உடம்பைக் கண்டு பிடித்து தகனம் செய்வதும் அல்லது அவரைபிசாசாய்அலையவிடுவதும்உம்மிடம்தான் இருக்கிறது

சோள்ளமுத்து தேவர்:—எசமான்! சாத்யமா நான் யாரையும் பார்க்கலீங்க. ஆனால் யார் யாரோ பேசினாப்பிலே கேட்டது. அதுவும் திட்டமாய் யாருண்ணுதெரியாது.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—திட்டமாய்த் தெரியாவிட்டாலும் நீர் சந்தேகப்பட்டதையாவது சொல்லும். நீரென்ன பிராமணவாக்கு மூலமா கொடுக்கிறீர்? அது ஒன்றுமில்லை. ஏதோ உமக்குத் தோன்றினதைச் சொன்னால் அப்பால் விசாரித்து சரியா அல்லவாண்ணு தீர்மானிக்கலாம்.

சோள்ளமுத்து தேவர்:—பாலரங்க ஐயா பேசிக்கிட்டிருக்கப்போ மெதுவா கணகணண்ணு மணி அடிச்ச சத்தம் கேட்டுச்சு, அப்பாலே பாலரங்க எசமான் சத்தம் கேக்கல்லே. அவுங்க இந்தவழியாப்போ கல்லே. வீட்டுக்குள்ளே கூடிப்போனாங்களோ என்னமோ எனக்குத் தெரியாது.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—ம-ா-ஸ்ரீ பாலரங் ராஜு அவர்களைக் கேட்டால் அவர்கள் உண்மையைச் சொல்லிவிடுவார்கள்; நீர் அப்பால் பேசினது யாரென்று சொல்லும்.

சோள்ளமுத்து:—மெதுவாய்ப் பேசினாங்க. நான் சரியாய் கேக்கல்லே, அவுங்க என்ன சொன்னாங்கண்ணு எனக்குத் தெரியாது. பெரிய எசமான் லட்ச ரூபாய்களை வெட்ட வெளியாக்கிட்டு வந்திட்டெயெ. வட்டிண்ணாலும் மாசம் 500 ரூபாய் வருமே! அதையும் முழுங்கிட்டு மொதலெயும் முழுங்கிட்டெயேண்ணு சத்தம் போட்டாங்க.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—அதற்கு சுந்தரராஜு என்ன சொன்னார்?

சோள்ளமுத்து:—பேசினது சின்ன எசமாண்ணு நான் சொல்லல்லீயே! எசமான் நீங்க கூட இருந்து கேட்டாப்பிலே சொல்லிட்டீங்களே!

டெப்டி மாஜிஸ்டிரேட்:—எனக்கு உண்மை தெரியுமென்பது உமது மனதில் வைத்து நேரம் போக்காமல் ஜல்தியாய்ச் சொல்லும்; அப்போது ஸ்ரீனிவாசலு ராஜுவின் உடம்பைக் கண்டு பிடித்து தகனம் செய்யலாம்.

சோள்ளமுத்து:—சின்ன எசமான் பேசினாப்பிலேதான் இருந்தது. ஆனா நான் நிச்சயமாச் சொல்ல முடியாது, என்னமோ ஏமாந்திட்டேண்ணு சொல்லி எம்புட்டோ ரூபா கேட்டாங்க. அவுங்க அம்புட்டு ரூபா கைலே இருக்கவா செய்து ஒங்கிட்ட தூக்கிக் குடுக்கண்ணு சொல்லி நீயாவது புத்திசொல்லக்கூடாதாண்ணு யாரையோ சொன்னாங்க. அவுங்க ஒண்ணும் பேசல்லே. அது யாருண்ணும்

தெரியாது பெரிய எசமான் ரொம்ப கோபிச்சாங்க, சின்ன எசமான் என்னமோ சொன்னுங்க. இப்படிவாரது வெளியே தெரிஞ்சுண்ணு ஆபத்துண்ணும் தள்ளாத காலத்திலே பெரிய எசமானுக்கு கஷ்டம் வருமுண்ணும் சொன்னுங்க. அதுக்கு சின்ன எசமான் அவ்வளவு இல்லேண்ணுங்க, சின்ன எசமான் சொன்னதைக் கேக்கல்லீங்க என்னமோ பொத்துண்ணு விழுந்த சத்தம் கேட்டுதுங்க; அப்பாலே கொஞ்ச நேரம் யாரும் பேசல்லீங்க.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—சரி அப்பால் எவ்வளவு நேரம் பொறுத்துத்தான் பேசினர்கள்?

சோள்ளமுத்து:—ஒரு அரை நாழிகை ஒண்ணும் கேக்கல்லீங்க என்ன உழுந்துதுண்ணு எனக்குத் தெரியல்லே. மெதுவா எசமான் எசமான்னு கூப்பிட்டேன். எசமான் பேசல்லீங்க. நடக்கிற சத்தம் மட்டும் கேட்டதுங்க. பெரிய எசமானுக்குக் கோபம் வந்துட்டுது ண்ணு நெனச்சிக்கிட்டு உக்காந்திருந்தேன் எசமான், அவுங்களுக்குக் கோபம் வந்துட்டுதுண்ணு பேசவே மாட்டாங்க; யாரும் அப்பொ போகக் கூடாதுங்க.

டெப்டி மாஜிஸ்டிரேட்:— சரி; அப்பால் எப்பொழுது தான் பேசினர்?

சோள்ளமுத்து:—எசமான் "சாஸ்திரி! வரணும்; வரணுமுண்ணுங்க, எப்பொவந்தீங்கண்ணுங்க. இங்கெ எப்படி வந்தேண்ணுங்க?" அதுக்கு அவர் சொன்னதை நான் கேக்கலீங்க. கொஞ்ச நேரம் பொறுத்து எச்மான் அவரைப் பார்த்து இப்பிடி நடக்குமுண்ணு கனவுகூட காணல்லெ! என்னமோ காலவித்யாச முண்ணுங்க. அப்பொ வந்தவர் என்னமோ சொன்னர். அதுக்கு எசமான் அடடா கோதாவரியிலா உம்து பெண்சாதியை அடிச்சிக்கிட்டு போச்சின்னுங்க; அவர் சொன்னது கேக்கல்லே; எசமான் இந்தா! இந்த ஆயிரம் ரூபாயை வச்சிக்கிட்டு சௌக்யமாயிரு; ஆயிட்டா திரும்பி கொடுக்கிறேண்ணுங்க. அவர் போன இடத்தில் சாப்பாடு போட்டாங்க; திண்ணெயிருக்கு தூங்க, எனக்கு ஒரு செம்புக்காசுக்கூட வேணுமுண்ணுங்க" எப்பிடியாவது எசமானைப் பாத்து காசி தீர்த்தமும், இன்னம் என்னமோ சொன்னுங்க; அது நெனப்பில்லே; அதும் குடுக்கணுமுண்ணே அவ்வளவு தூரம் வந்தாருண்ணு சொன்னுரு. அப்பொதான் அவர் குரல் கேட்டது.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—அப்போது தான் வந்தது சீதாராம சாஸ்திரி என்று உமக்குத் தெரிந்ததோ?

சொள்ளமுத்து:—என்ன எசமான்! பொட்டுண்ணு தலையிலே அடிச்சாப்லே சொல்லிட்டீங்களே!

டெப்டி மாஜிஸ்டிரேட்:—சரி; அவர் எப்படிச் சென்றார்?

சொள்ளமுத்து:—நான் பாக்கல்லீங்க. அவர் வந்ததும் பாக்கல்லீங்க; போனதும் பாக்கல்லீங்க.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—அப்பால் என்ன நடந்தது?

சொள்ளமுத்து:—ஒண்ணும் சத்தமே கேக்கல்லீங்க; ஒரு நாழிகெ கழிச்சி பெரிய எசமான் ஒன்னெ புள்ளையாய் வளத்து எல்லாம் நம்பி உன்கிட்டே விட்டதுக்கு நீ இப்படிச் செய்தாயல்லவா? நீ பொழுது விடியிரதுக்குள்ளே அனுபைசாவோடே பைசல் செய்யாட்டா என்னமோ செய்வேண்ணுங்க. அவுங்க என்ன சொன்னுங்களோ தெரியாது. அப்பாலே ஒண்ணும் கேக்கல்லீங்க.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—அவர் யாரென்று உமக்குத் தெரியுமா? எப்படி வந்தார்? அவர் போனதைப் பார்க்க வில்லையா?

சொள்ளமுத்து:—சத்தியமா நான் பாக்கல்லீங்க. எப்பிடி வந்தாங்களோ எப்பிடி போனுங்களோ ஒண்ணும் தெரியாதுங்க; அவர் பேசின வார்த்தை ஒண்ணுகூட கேக்கல்லீங்க; அப்பாலே சத்தமே கேக்கல்லீங்க. அப்போ ஜெயம்மா தான் அந்தப் பக்கம் போனுங்க.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—அந்தம்பாள் ஸ்ரீனிவாசலு ராஜு அறைக்குள் போய் எப்போது வந்தார்கள்?

சொள்ளமுத்து:—அம்மா பெரிய எசமான் அறைக்குப் போனதை நான் பாக்கல்லீங்க. அந்தப் பக்கம் கீழே குனிஞ்சி என்னமோ எடுத்தாங்க, கைலே வச்சிக்கிட்டு வந்தாங்க, அப்பொ, கணக்கப் பிள்ளை ஐயா கூட 2 பேரைக் கூட்டிக்கிட்டு வந்தாங்க; அம்மா அப்போதிரும்பி வந்தாங்க, தாத்தா என்ன செய்ருருண்ணுங்க, அம்மா தெரியாதுண்ணுங்க இது தான் தெரியுங்க.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—ஓய் தேவரே! அந்தம்மாள் ஸ்ரீனிவாசலு ராஜு அறைக்குள் போய் வந்தார்களா இல்லையா?

சொள்ளமுத்து:—நான் சத்தியமாப் பாக்கல்லீங்க.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—உள்ளே போய் வர சாவகாசம் இருந்ததா இல்லையா? அதாவது அந்தம்மாள் குனிந்து ஏதோ எடுத்ததாகச் சொன்னீரே! அதற்கு முன் அறைக்குள் போய் வந்திருக்க நேரமிருந்ததா?

சொள்ளமுத்து:—சத்தியமாய தெரியாது. அப்பொ கண்ணெ

இருக்கிச்சிங்கோ. அப்பிடி பாத்தேன். குழந்தெ குனிஞ்சிதுங்க. அது போகல்லேண்ணு சொல்றப்போ படிச்சிப் படிச்சு ஏனுங்கோ கேக்கிறீங்க. அதுக்கு பொய் சொல்லவே தெரியாதுங்க. தலெயெ இரண்டா வெட்டிட்டா கூட அது பொய் சொல்லாதுங்க.

என்றான். உடனே டெப்டி மாஜிஸ்டிரேட் பல போலீசாரை வரந்தர்களெடுத்துக் கொண்டு போய் சீமாராம சாஸ்திரி எங்கிருந்தாலும் பிடித்து வரும்படி வாரண்ட் பிறப்பித்து நாலா திசைகளிலும் போலீசாரை அனுப்பினர்.

அப்பால் ஸ்ரீமான் பாலரங்க ராஜுவை அழைத்து பக்கத்தில் உட்கார வைத்து,

ஜில்லா மாஜிஸ்டிரேட்:—தயவு செய்து தங்களுக்குத் தெரிந்த விஷயங்களைச் சொல்லுங்கள்.

பாலரங்க ராஜு:—இரவு 9-மணிக்கு ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜு அவர்கள் என்னைக் கூப்பிடவிட்டு சமீபத்தில் உட்கார வைத்துக் கொண்டு சாத்மீகமாய் அவர் முன்பு எழுதி ரிஜிஸ்டர் செய்திருக்கும் பழைய ஓயிலையும் புதிதாக எழுதிய ஓயிலையும் வாசித்துக் காட்டி அவர் வார்த்தையைத் தட்டி நான் அவளைக் கலியாணம் செய்து கொண்டால் ஜெயலக்ஷ்மிக்கு செப்பாலடித்த காசுகூட கிடையாமற் போகுமென்றும் ஆகையால் ஜெயலக்ஷ்மியை விவாஹம் செய்து கொள்ளும் எண்ணத்தை விட்டுவிடும்படியும் கேட்டுக் கொண்டார். ஜெயலக்ஷ்மியின் சொத்துக்காக ஆசைப்பட்டு விவாஹம் செய்துகொள்ள உத்தேசிக்கப்பட்டவர்கள் தான் ஓயிலையாவது அவள் சொத்தையாவது கவனிக்க வேண்டும். எனக்கு அவைகளைப் பற்றிய சிந்தனையே கிடையாது. இன்னும் அவள் சாதாரணமாய் அணிந்திருக்கும் நகைகளை யெல்லாம் கூட நீங்களே எடுத்துக் கொண்டு அவளைப் பிறந்த உருவத்தோடு எனக்கு மண முடித்துக் கொடுத்தால்கூட நான் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன் என்றேன். அப்போது அவர் மனம் மாறுதலடைந்ததாகக் கூட எனக்கு தோன்றிற்று! அப்போது எங்கோ மணி அடித்த மாதிரி ஓசை கேட்டது. அந்த மணி சத்தத்தைக் கேட்டதும் அவர் மனம் திடுக்கிட்டதாகத் தோன்றிற்று. உடனே அவர் “சரி இதைப்பற்றி பின்னால் யோசித்துக் கொள்ளலாம். தாங்கள் போகலாம்” என்றார். அப்போது நான் “தாத்தா! தயவு செய்து தங்களிடம் பேச எனக்கு 10 நிமிஷம் சாவகாசம் கொடுங்கள்” என்றேன்.

அப்போது மறுபடியும் மணியடித்த சத்தம் கேட்டது. தனக்கு அவசர ஜோலியிருப்பதாகவும் மறுநாள் வந்தால் சாவகாசமாய்ப் பேசலாமென்றும் சொன்னார்கள். அவர் மனம் மாறுதலடைந்திருந்த அப்போதே பேசினால் தான் நலமென்றும் ஒருக்கால் பின்னால் மறுபடியும் பழையபடி திரும்பி விடுமோ என்றும் நினைத்து ஐந்து நிமிஷமாவது பேச அனுமதி கொடுக்கும்படி கெஞ்சினேன். அவர் உடனே சட்டென்று எழுந்து தான் சாப்பிடுவதற்காக வைத்திருந்த பாலை எடுத்து பாதியைச் சாப்பிட்டுவிட்டு மீதியை எனக்குக் கொடுத்து அருந்தச் சொன்னார். அவர் பால் கொடுத்த உடனே எங்கள் குடும்பத்தாருக்குள் மூன்று தலைமுறைகளாய் ஏற்பட்டிருந்த நீடித்த விரோதம் அன்றுடன் நீங்கிவிட்டதாக ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் மனதில் பட்டதால்தான் எனக்குப் பால் கொடுத்தாரென்றும் இனி ஜெயலக்ஷ்மியை விவாகம் செய்து கொடுப்பதற்கு ஆட்சேபிக்க மாட்டாரென்றும், ஆகையால் அன்றே ஜெயலக்ஷ்மி என்னை மணம் புரிந்ததாகவே முழு நம்பிக்கைக் கொண்டு அவர் கொடுத்த பாலை சந்தோஷமாய் வாங்கி அருந்தினேன். அப்பால் தாங்கள் சொல்ல விரும்பியதைச் சொல்லுங்கள் என்றார். நான் பேச ஆரம்பிக்குமுன் ஏதோ ஓர்வித மயக்க முண்டாயிற்று. பேசுவதற்கு நாவெழவேயில்லை. அவ்வளவுதான் எனக்குத் தெரியும். அப்பால் எனக்கு புத்தி சுவாதீனமடைந்தபோது எங்கள் வீட்டுத் தோட்டத்தில் ரோஜாச் செடிகளின் மத்தியில் போட்டிருக்கும் பென்சியில் உட்கார்ந்திருப்பதாய்த் தெரிந்தது. அப்போதும் எனக்கு புத்தி தெளிவாயில்லாததால் வீட்டிற்குப் போய்ப் படுத்துக் கொண்டேன். ஸ்ரீனிவாசலுராஜு அவர்கள் இறந்த சமாச்சாரம் எனது வேலைக்காரன் என்னை எழுப்பிச் சொல்லவே திடுக்கிட்டு எழுந்தேன். என் மயக்கம் எங்கோ பறந்து விட்டது. அவர் இறந்தாரென்ற விஷயம் உண்மையா யிருக்குமோ தெனவும் என்னுடன் சுமார் இரண்டொருமணி நேரங்களுக்கு முன் நன்றாய்ப் பேசிக் கொண்டிருந்தவர் எவ்வாறு இறந்திருக்கக் கூடுமெனவும் நினைத்து உடனே வந்தேன். அப்பால் இங்கு நடந்த விஷயங்களெல்லாம் ஏற்கனவே தெரியுமே! இதுதான் எனக்குத் தெரிந்த விஷயம்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—தோட்டத்தில் உங்களுக்கு பிரக்ஞை உண்டானபோது மணி என்னவென்று பார்த்தீர்களா?

பாலரங்கன்:—மயக்கத்தால் பார்க்கவில்லை.

எனச் சொல்லி முடித்தார். உடனே காந்திமதியா பிள்ளையைக் கூப்பிடச் சொல்ல அவர் பக்கத்தரையில் ஜெயலக்ஷ்மியம்மாளிடம் பேசிக் கொண்டிருப்பதாகத் தெரிந்து அழைத்து வந்தார்கள்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—பிள்ளை அவாள்! சாயங்காலம் முதல் நடந்த விஷயங்களை ஒன்றும் விடாமலும் கூடியவரையில் சுருக்கமாகவும் சொல்லுங்கள்.

காந்திமதியா பிள்ளை:—என்னைப் பெரிய எஜமான் கூப்பிடவிட்டு ஷேக்முஸ்தபா சாய்பவர்களையும், முனிசீப்பையும் அழைத்து வரச் சொன்னார்கள். நான் அவர்களைப் போய் அழைத்து வந்து எஜமானவர்கள் பேசாததால் ஜெயம்மாளிடமிருக்கும் சாவி வாங்கி கதவைத் திறந்து பார்க்க எஜமான் கீழே இறந்து விழுந்துகிடந்தார். அப்பால் நடந்த சங்கதிகளெல்லாம் தங்களுக்குத் தெரியுமே.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—எதற்காக அவர்களிருவரை அழைத்து வரச் சொன்னார்?

காந்திமதியா பிள்ளை:—எஜமான் உத்தரவிட்டபடி நடக்கக் காத்திருக்கிறேனே தவிர காரணம் கேட்பது எனக்கு வழக்கமில்லை.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—நீர் கேட்டிருக்க மாட்டீர்! எதற்காக அழைத்து வரச் சொன்னாரென்று உமக்குத் தெரியுமல்லவா?

காந்திமதியா பிள்ளை:—எனக்குத் தெரியாது.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—உமது எஜமானருடைய பக்கத்தறையிலுட்கார்ந்து கொண்டு சகல காரியங்களையும் மேல் பார்க்கும் உமக்கு எதற்காக அழைத்துவரச் சொன்னாரென்று திட்டமாய்த் தெரியாமலிருக்குமா? திட்டமாய்த் தெரியாவிட்டாலும் நீர் ஊகிப்பதையாவது சொல்லும்.

காந்திமதி:—எனக்குத் தெரியாது; எஜமான் உத்தரவிட்டார். நான் போனேன்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—சரி; போகட்டும் அதற்குமுன் என்ன நடந்தது.

காந்திமதி:—எதற்கு முன்? எனக்கு ஒன்றும் தெரியாதே!

டெப்டி மாஜிஸ்டிரேட்:—பிள்ளை அவாள்! உமக்கு ஒன்றுமே தெரியாதென்பது நம்பக்கூடியதல்ல; உண்மையைச் சொல்லும்.

காந்திமதி:—என்ன எஜமான் தெரிஞ்சா சொல்றதுக்கு என்ன? எஜமானிடம் நான் பொய் சொல்வேனா?

டெப்டி மாஜிஸ்டிரேட்:—போகட்டும்; ஜெயம்மாளுக்கும் உமது பெரிய எஜமானருக்கும் ஏதோ மனத்தாங்கல் ஏற்பட்டதாமே. அதைப்பற்றிய விவரமாவது சொல்லும்.

காந்திமதி:—வீட்டெென்றிருந்தால் தாத்தாவும் பேத்தியும் எத்தனையோ விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொள்வார்கள். அதையெல்லாம் நான் கவனிப்பதேயில்லை.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—பிள்ளை அவாள்! உமக்குத் தெரிந்ததை வேண்டுமென்று மறைக்கப் பார்ப்பதாகத் தோற்றுகிறது. உண்மையைச் சொல்லாவிட்டால் சங்கடத்துக்குள்ளாவீர். உண்மையைச் சொல்லிவிடும்.

என்று சொன்னார். அப்போதும் அவர் சொல்லாமல் மறைத்தே பேசி வந்தார். கடைசியாக,

டெப்டி மாஜிஸ்டிரேட்:—எதற்காக உமது எஜமானர் ஜெயம்மாளை அடிக்கப் போனார்?

காந்திமதி:—எனக்குத் தெரியாதே! ஜெயம்மாளை அவள் தாத்தா அடிக்கப் போவாரா?

டெப்டி மாஜிஸ்டிரேட்:—ஓய்! முழுப்பூசினிக்காயை சோற்றில் மறைக்கப் பார்க்கிறீரே! "அம்மா' என்ன வார்த்தை சொல்லுகிறீர்கள்; தாத்தாவை அப்படி சொல்லலாமா? கோபத்தால் ஏதோ சொன்னால் நீ அவ்வாறு சொல்லலாமா'' என்றுகூட நீர் சொன்னதைக் கேட்டிருக்கிறார்களே! எந்த சந்தர்ப்பதில் அவ்வாறு பேசினீர்.

காந்திமதி:—என்னமோ கோபித்தார்கள்; எனக்குத் திட்டமாய் தெரியாது. தங்களைச் செய்தால் என்ன தோஷம் என்றோ என்னமோ சொன்னாப்பிலே இருந்தது. அப்போதுதான் நான் வந்தேன். அம்மா! தாத்தாவை எதிர்த்துப் பேசலாமா என்றேன். அந்தக் குழந்தை உடனே போய்விட்டது. அவ்வளவு தான் எனக்குத் தெரியும்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—ஸ்ரீனிவாசலு ராஜு ஜெயலக்ஷ்மியை அடிக்கப் போகவில்லையா?

காந்திமதி:—என்ன எஜமான! ஜெயம்மாளையா அந்தம்மாள் தாத்தா அடிக்கப்போவார் ஜெயலக்ஷ்மி பேரில் அவர்களுக்கு அவ்வளவு பிரியம். யாரோ எஜமானனிடம் பொய்க் கதைகள் சொன்னார்கள் போலிருக்கு. அதெல்லாம் ஒன்றும் பேசக்கூடாது. எனக்குத் தெரிந்தவரையில் அவ்வாறெல்லாம் ஒன்றுமில்லை.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—தங்களை அழைப்பித்து ஷேக்முஸ்த பாசாய்பவாலையும், முனிசிப்பையும் அழைத்துவரச் சொன்னதாக சொன்னீர்களே! எப்போது சொன்னார்கள்.

காந்திமதி:—என்னைப் பார்த்தபோதுதான்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—எத்தனை மணி யிருக்கும்.

காந்திமதி:—நான் மணி பார்க்கவில்லை.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—சுமார் எத்தனை மணி யிருக்கும்.

காந்திமதி:—ஞாபகமில்லை.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—உன்னைப் பிள்ளையாய் வளர்த்து எல்லாம் நம்பி உன்னிடம் கொடுத்ததற்கு நீ இப்படிச் செய்தாயல்லவா? என்று கேட்டாரே! அதற்கு முன்னு பின்னு பென்றுவது சொல்லும்.

என்றதும் காந்திமதியா பிள்ளை சற்று திகைத்து நின்று,

காந்திமதி:—என்னிடம் அவ்வாறு சொல்லவே யில்லையே!

டெப்டி மாஜிஸ்டிரேட்:—என்ன ஒய் மறுபடியும் முழுப் பூசினிக்காயை சோற்றில் அமுக்குப் பார்க்கிறீரே! நேற்றையதினம் உமது பேரில் சந்தேகம் ஏற்பட்டதால் பழைய கணக்குப் புஸ்தகங்களை யெல்லாம் கூட உமது எஜமான் எடுத்துப்பார்த்து கணக்குகளில் தவறுதல்கள் இருப்பதாகக் காட்டி காலை 7-மணிக்குள் அணைபைசாவுடன் ஒப்பிவிக்காவிட்டால் உம்மை போலீஸ் சார்ஜ் செய்வதாகச் சொல்ல வில்லையா?

என்றதும் காந்திமதியாபிள்ளை திகிலடைந்த முகத்துடன்,

காந்திமதி:—அப்படி ஒன்றுமில்லையே!

டெப்டி மாஜிஸ்டிரேட்:—ஒய் உம்மால் என்னை ஏமாற்ற முடியாது. நீர் இப்போது நினைப்பதைச் சொல்லட்டுமா? உமது விசாரணை முடிந்து உம்மை அனுப்பிய உடனே அந்தக் கணக்குப் புஸ்தகங்களை யெல்லாம் எடுத்து சுட்டெரித்து விடலாமென நினைக்கிறீர். நான் பைத்தியக்காரனல்ல. ஷை விஷயம் கேள்விப்பட்டவுடனேயே அந்த பழைய கணக்கு புஸ்தகங்களை யெல்லாம் எடுத்து சாக்ஷிகள் முன்னிலையில் கட்டி சீல் வைத்து பந்தோபஸ்து செய்துவிட்டேன். சரியான கணக்குப் பரிசோதகரை வைத்துப் பார்த்தால் உமது திருடு நன்கு புலப்பட்டு விடுகிறது. அப்போது அகப்பட்டுக் கொள்கிறீர். இப்போதாவது உண்மையைச் சொல்லிவிடு. அப்

போதுதான் சொன்னாரா? அல்லது சுந்தராஜு வந்து போனதற்கு முன் சொன்னாரா?

காந்திமதி:—தாங்கள் பேசுவதே எனக்கு ஒன்றும் புரியவில்லை. சுந்தர ராஜு வாவது வரவாவது; அவர் இருக்கிறாரோ இறந்தாரோ யாருக்குத் தெரியும். இன்னும் போகப் போக, நானே அவரிடம் கடைசியில் பேசினவளென்றும் ஆகையால் நான் தான் அவர் கழுத்தைப்பிடித்து இறுக்கிக் கொன்றவளென்றும், பின் அவர் பிரேதத்தை எடுத்து ஒளித்துவைத்திருப்பதும் நான்தான் என்றும் எல்லாம் என்பேரிலேயே சொல்லுவீர்கள் போலிருக்கிறது. எப்படியாவது நினைத்துக் கொள்ளுங்கள். என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்; எனக்கு அதைப்பற்றிய சிந்தனையேயில்லை.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—பிள்ளை அவாள்! சற்று பொறுங்கள்; மஹா பலசாலியும், தீரவானுமாகிய ஸ்ரீனிவாசலு ராஜுவின் ஒரு கையைத் தூக்கக்கூட சக்தியில்லாத உம்மால் அவருடைய கழுத்தைப் பிடித்து இறுக்கிக் கொல்லக் கூடுமென நம்புவதற்கு நான் ஒரு மடையனல்ல. மற்ற விஷயங்களையும் ஆதாரமில்லாமல் என்றால் சொல்ல முடியாது. ஆனால் இது வரையில் தெரிந்த விஷயங்களிலிருந்து அவருடன் கடைசியில் பேசினவர் நீர் தானென்று தெரிகிறது. நீர் ஒன்றையும் ஒளிக்காமல் உண்மையைச் சொன்னால் நலமாயிருக்கும். உம்மைப் பலவந்தப்படுத்தி நான் ஒன்றும் சொல்லச் சொல்லவில்லை. ஏனென்றால் அவைகளை உமக்கு விரோதமாக ஒருக்கால் உபயோகப் படுத்தப்படுமென உம்மை இப்போதே எச்சரிக்கிறேன். ஆகையால் நீர் ஏதாவது சொல்ல விரும்பினால் மட்டும் சொல்லும். இஷ்டமில்லா விட்டால் சொல்ல வேண்டாம். உம்முடையவாவது அல்லது பிறருடையவாவது குற்றத்தை மறைக்க உத்தேசித்து இப்படி ஏறுமாறாய் உண்மைக்கு மாறாகப் பேசத் தீர்மானித்திருந்தால் உமதிஷ்டம் போல் செய்யும். இப்பொழுதே நீர் உண்மை பேச வில்லையென்று எங்கள் மனதில் படுகிறது.

காந்திமதி:—எப்போது நான் உண்மையைப் பேசவில்லையென உங்கள் மனதிலெல்லாம் பட்டுவிட்டதோ இனி நான் என்ன சொன்னபோதிலும் சந்தேகமாகவே முடியும். ஆகையால் இனி நான் வாயைத் திறப்பதில் பயனில்லையெனத் தீர்மானித்து விட்டேன். இப்போதே என்னைக் குற்றவாளியென சந்தேகித்து உடனே சிறைக்கனுப்புங்கள். அதற்கும் நான் சித்தமாகவே காத்திருக்கிறேன்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—பிள்ளை அவாள்! இன்னும் விஷயங்களை ஆராய்ந்தறியுமுன் உம்மை சிறைச்சாலைக்கனுப்ப நான் விரும்பவில்லை. ஆயினும் நீர் அனுமானப்பட்ட நபர்களில் ஒருவராகக் கருதப்படுகிறீர் என்பதையும் மறைப்பதற்கில்லை.

காந்திமதி:—ஆனால் என்னையல்லாமல் தாங்கள் மற்றவர்கள்பேரிலும் சந்தேகப்படுகிறீர்கள் போலிருக்கிறது.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—இருக்கலாம்; அதைப்பற்றி உமக்கென்ன? சரி; ஜெயலக்ஷிமியம்மாளை அழைத்து வாருங்கள் அந்தம்மாளைக் கேட்போம்.

என பாலரங்க ராஜுவிடம் சொன்னார்,

காந்திமதி:—குழைந்தைக்கு என்ன தெரியும்? அது மைனர்! அதை விசாரிப்பதில் என்ன உபகாரம்?

டெப்டி மாஜிஸ்டிரேட்:—ஜெயலக்ஷிமி குழந்தை என்பதை நான் நன்குணர்வேன். அது விபரம் தெரிந்த மைனராதலாலும் அது உண்மையை ஒளிக்காமல் சொல்லுமென நான் அபிப்பிராயப் படுவதாலும் அதை விசாரிப்பது அவசியம். அதைப்பற்றி உமக்கென்ன? நீர் இனி பேசக்கூடாது.

காந்திமதி:—சிறு குழந்தையைக் கூப்பிட்டு அதை இதைக் கேட்டு அது தெரியாத்தனமாய் ஏதாவது சொன்னால் அதைப் பிடித்துக் கொண்டு அதன்பேரில் குற்றம் சாட்ட உத்தேசிப்பதை நான் ஆட்சேபிக்கிறேன்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—எங்களுக்குத் தெரியாத நியாய அநியாயமும் சட்டமும் உமக்குத் தெரியும்போலிருக்கிறது. வாயை மூடிக் கொண்டு உமது வேலையைப் பாரும்.

என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே பாலரங்கராஜு சென்று ஜெயலக்ஷிமியை அழைத்து வந்தார்.

காந்திமதி:—அம்மா குழந்தாய்! உன்னை ஏமாற்றி இவர்களெல்லாம் பேச்சி வாக்கில் நீ சொல்லும் வார்த்தைகளைக் கொண்டு நீதான் உன் தாத்தாவைக் கொன்றதாகக் குற்றம் சாட்டக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எதுகேட்டாலும் ஒன்றுக்கும் பதில் சொல்லாதே. அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும். பயப்படாதே.

ஜெயலக்ஷிமி:—மாமா! அவர்களெல்லாம் கௌரவமான உத்யோகஸ்தர்கள்; என்னை ஏமாற்றுவதில் அவர்களுக்கு என்ன லாபம்? மேலும் கலெக்டர் அத்தான் இல்லையா?

காந்திமதி:—வெளுத்ததெல்லாம் பாலென்றும் கறுத்ததெல்லாம் தண்ணீரென்றும் நம்பும் சுபாவமுடையவள் நீ. நியாயமாயோ அனியாயமாயோ ஒரு கேஸ் தண்டனை யடையும்படி செய்தால் அதன் மூலமாய் தங்களுக்கு சம்பள உயர்த்தம் ஏற்படுமென நினைக்கப்பட்டவர்கள் தான் இவர்கள்; ஏமாறுதே!

டேப்டி மாஜிஸ்டிரேட்:—ஆர்டர்லி! இவரை வெளியே பிடித்துக் கொண்டு போய் வைத்திரு.

என்றதும் போலீஸ்காரன் அழைகக அவா வாரணடடில்லாமல் தான் வரமுடியாதென்று சொல்ல வாரண்ட் எழுதிக் கொடுத்து போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துக் கொண்டு போனார்கள். அப்போது ஜெயலக்ஷ்மி "அவர் என்ன குற்றம் செய்தாரென்று அவரை பிடித்துப் போகிறீர்கள்" என்று கேட்டாள். அதற்கு அவர்,

"தற்காலம் சர்க்கார் அதிகாரிகள் தங்கள் வேலைகளைச் செய்யவொட்டாது தடுக்கும் குற்றத்திற்காக கைதியாக்கப்பட்டார். என பாலரங்கராஜு மறுமொழி சொல்லி அவர்கள் கேட்கும் கேள்விக்கு சரியான பதில் சொல்லும்படி வேண்டிக் கொண்டார்.

டேப்டி மாஜிஸ்டிரேட்:—அம்மா! எப்போதும் உன்பேரில் அதிக பிரியமா யிருக்கும் உன் தாத்தா இன்று சாயங்காலம் உன்னை அடிக்க வந்தாராமே! ஏன்?

ஜெயலக்ஷ்மி:—என்மேல் கோபம் வந்தது, அடிக்க வந்தார்.

டேப்டி மாஜிஸ்டிரேட்:—என்ன கோபம்?

ஜெயலக்ஷ்மி:—அவரிஷ்டப் பிரகாரம் நடக்க மறுத்த கோபம்.

டேப்டி மாஜிஸ்டிரேட்:—எந்த விஷயத்தில்?

ஜெயலக்ஷ்மி:—என் விவாஹ விஷயத்தில்.

டேப்டி மாஜிஸ்டிரேட்:—தயவு செய்து அவருககும உனக்கும் நடந்த வார்த்தைகளை சற்று விவரமாய்ச் சொல்லு.

ஜெயலக்ஷ்மி:—என்னை ஒருவரைக் கலியாணம் செய்து கொள்ளச் சொன்னார். நான் மாட்டேனென்றேன். அதுதான் கோபம்.

டேப்டி மாஜிஸ்டிரேட்:—அப்பால் என்ன சொன்னார்?

ஜெயலக்ஷ்மி:—ஒருவருடைய தைரியத்தாலல்லவா நீ யிப்படிப் பேசுகிறாய்; அவரை இல்லாமல் செய்துவிட்டால் தான் நீ வழிக்கு வருவாயென்றார். நான் கோபத்தின் பேரில் நீங்கள் அவரை இல்லாமல் செய்து விடுவதற்கு முன்னால் உங்களை இல்லாமல் செய்து விட்டால் என்னவென்றேன். அதற்குத்தான் அடிக்க வந்தார்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—அப்பால் என்ன நடந்தது?

ஜெயலக்ஷிமி:—கணக்கு மாமா போகும்படி ஜாடைகாட்டவே ஓடிவிட்டேன்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—அப்பால் என்ன செய்தாய்!

ஜெயலக்ஷிமி:—என் அறைக்குப் போய் தாத்தாவை இப்படிச் சொன்னோமே என்ற வருத்தத்தின் பேரில் கண்ணீர் விட்டபடியே படுத்தேன். தூங்கிவிட்டேன்; தாதி சாப்பிட எழுப்பினாள் எழுந்ததும் என் தாத்தா அவர்கள் கலெக்டர் அத்தானை அழைத்து வரச் சொன்னதாகவும் அவர் தாத்தா அறைக்குப் போனதாகவும் திரும்பவும் வெளியே போகவில்லையென்றும் நெடுநேரமாயிற்றென்றும் சொன்னாள். சட்டென்று எழுந்துபோய் என்ன பேசுகிறார்களென்று கேட்கலாமென்று போனேன். நிசப்தமாயிருக்கவே திரும்பி விட்டேன்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—நீ அறையினுள்ளே சென்றாயா? இல்லையா?

ஜெயலக்ஷிமி:—நான் உள்ளே போய்—பா.ர்.க்.க.வி.ல்.லை.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—சரி; அது எப்படியாவதிருக்கட்டும். நீ திரும்பி வரும்போது குனிந்து ஏதோ எடுத்ததாகச் சொல்லுகிறார்களே! என்ன எடுத்தாய்? அது எங்கே வைத்திருக்கிறாய்?

ஜெயலக்ஷிமி:—நான் சொல்லமாட்டேன்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—நீதி விசாரணை ஸ்தலங்களில் கேட்கும் கேள்விக்குத் திருப்திகரமான பதிலளிக்கா விட்டால் அது குற்றமாக கருதப்படும். ஆகையால் ஒன்றையும் ஒளிக்காமல் உண்மையைச் சொல்லிவிடு.

ஜெயலக்ஷிமி:—நீங்கள் எப்படிக் கருதிக் கொண்டாலும் சரிதான் நான் சொல்லமாட்டேன்.

பாலரங்கன்:—என்ன ஜெய! ஏன் மறைக்கிறாய்? பயப்படாமல் சொல்லிவிடு.

ஜெயலக்ஷிமி:—என்ன சொன்னீர்கள்? பயமா? இந்த வீட்டில் பிறந்த ஸ்திரீ புருஷருக்கு மட்டுமல்ல. எந்த ஜெந்துவுக்கும் பயமென்பது எப்படி யிருக்குமென்றே தெரியாதே! நான் சொல்லமாட்டேனென்றால் மாட்டேன்.

பாலரங்கன்:—ஜெய! நான் சொல்லச் சொல்லும்போது கூடவா இவ்வாறு விடையளிக்கிறாய்.

ஜெயலக்ஷிமி:—அத்தான்! இவ்விஷயத்தில் தயவு செய்து தாங்கள் என்னைச் சொல்லச் சொன்னதாகவும் நான் மறுத்துவிட்டேனென்றும் மனவருத்தப் படாதேயுங்கள். இந்த ஒரு விஷயம் தவிர வேறு என் தலையைத் துண்டித்துக் கொடுக்கச் சொன்னாலும் இந்த நிமிஷத்திலேயே தங்கள் ஆக்கினையைச் சிரமேற்கொண்டு அவ்வாறு செய்து முடிக்கிறேன்; ஆட்சேபனையில்லை.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—ஐயா! தயவுசெய்து அந்தக் குழந்தையைத் தாங்கள் சொல்லச் சொல்ல வேண்டாம். தங்களை ஸ்ரீனிவாசலு ராஜுகாரு அழைத்து வரச் சொன்னபோது தங்களுடன் கொண்டுவந்த வஸ்துக்களில் தங்களுக்கு பிரக்ஞைவந்தவுடன் ஏதாவது ஒரு வஸ்து காணாமற் போயிற்றா யென்று நன்றாய் யோசனை செய்து சொல்லுங்கள்.

ஜெயலக்ஷிமி:—அத்தான்! தயவு செய்து அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமலிருக்கும்படி தங்களைப் பிரார்த்தனை செய்கிறேன்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—சரி; நான் ஊகித்தது உண்மையாயிற்று. தங்களுடைய வஸ்து வொன்று கீழே விழுந்திருக்கவே அதை எடுத்து வைத்துக் கொண்டு அதை வெளியிட்டால் தங்களுக்கு அதன் மூலமாய் ஏதாவது ஆபத்து நேரிடக் கூடுமோ எனப் பயந்து தன் மேல் சந்தேகப்பட்டாலும் பரவாயில்லை, தங்கள் பேரில் சந்தேகம் ஏற்படக்கூடாதென்று நினைத்துப் பேசுகிறாள். தயவு செய்து என்ன தவறி விட்டதென யோசித்துச் சொல்லுங்கள்.

என்று சொல்லவே பாலரங்க ராஜு சற்று யோசனை செய்து சட்டென்று ஏதோ ஞாபகம் வந்தவுடனே ஜோபியில் கை வைத்துப் பார்த்தார். தனது ஜோப்பியில் எப்போதும் வைத்திருக்கும் தான் இட்டாலி தேசத்தில் வாங்கிய மிகவும் கூர்மையான 3 அங்குல நீளமுள்ள கட்டாரியைக் காணோமெனச் சொன்னார். அத்தருணத்தில் ஜெயலக்ஷிமியின் முகம் மிகவும் பயங்கரமான தோற்றத்தை யடைந்தது. அப்போது,

டெப்டி மாஜிஸ்டிரேட்:—சரி; இப்போது ஜெயலக்ஷிமியின் மறைப்பின் காரணம் விளங்கிவிட்டது. அவள் தாத்தா தங்களை அழைத்து வரச் சொல்லி தங்களிருவரும் ஜெயலக்ஷிமி விவாஹ விஷயமாய் ஏதோ பேசினதாகவும், உங்களிருவருக்குள் பேச்சுகள் வளர்ந்திருக்குமென்றும், அவள் தாத்தா முன் கோபக்காரராதலாலும் தன்னிடம் சொன்னபடி தங்களுக்கு ஏதோ கெடுதல் விளைவிக்க

முயன்றிருப்பாரென்றும், அப்போது தங்களைப் பாதுகாப்பதில் தங்கள் உயிரைத் தப்புவிக்கும் முயற்சியில் தாங்கள் அக்கட்டாரியால் அவரைக் குத்தியிருப்பீர்களென்றும், அந்தக் குத்தால் அவர் இறந்திருக்கலாமென்றும் தங்களைத் தப்ப வைப்பதற்காக அக்கட்டாரியின் விஷயத்தை வெளிக்குச் சொல்லாமல் தன்பேரில் சந்தேகம் ஏற்பட்டாலும் பரவாயில்லையென்று நினைத்துச் செய்தாளென்றும் சந்தேகிக்கிறேன். நான் சொன்னவுடன் அவள் முகத்தைப் பார்க்கும் எவருக்கும் நான் சொன்னது உண்மையென்பது திட்டமாய்த் தெரியுமல்லவா?

என்றார். அவள் முகம் அதிக பயங்கரத் தோற்றத்தை யடைந்தது. ஏதும் சொல்லாமல் கலகலவென்று கண்ணீருதிர்த்தாள். அப்போது,

டேப்டி மாஜிஸ்டிரேட்:—அம்மா! உன் சந்தேகத்தை விடு. பாலரங்காராஜு சென்றபின் இப்போது தெரிந்தவரையில் மூன்று பேராவது உன் தாத்தாவிடம் பேசினதாகத் தெரிகிறது. ஆகையால் பாலரங்க ராஜு அவர்கள் பேரில் எவ்வித சந்தேகமும் கொள்ள வேண்டிய பிரமேயமே கிடையாது. ஆகையால் இப்போதாவது உண்மையைச் சொல்லு. நீ உன் தாத்தா அறைக்குச் சென்றாயா? இல்லையா? அப்போது நீ இழுப்பாய்ச் சொன்னதால் மறுபடியும் கேட்கிறேன்.

ஜெயலக்ஷ்மி:—கதவைத் திறக்கமுயன்றேன், பூட்டப்பட்டிருந்தது. என்னிடமுள்ள சாவி கொண்டு வந்து திறந்து உள்ளே ஒரு அடி எடுத்து வைத்தேன். நிசப்தமாயிருந்ததாலும், சாயங்காலம் அவர் என்னை அடிக்க வந்ததாலும்,கலெக்டர் அத்தானுக்கும் அவருக்கும் என்ன சம்பாஷணை நடந்ததென எனக்குத் தெரியாத்தாலும், அப்போது போவது உசிதமல்லவென நினைத்துத் திரும்பினேன். திரும்பி வரும்போது எப்போதும் அத்தான ஜேப்பியில் வைத்திருக்கும் கூரிய சிறிய கட்டாரி இரத்தந் தோய்ந்து கிடந்தது. உடனே குனிந்து அதை எடுத்தேன்: அப்போதுதான் கணக்கு மாமா அவர்கள் இருவருடன் வரக்கண்டு மடியில் மறைத்தேன். அப்போது கணக்குப்பிள்ளை மாமா அவர்கள் தாத்தா யிருக்கிறார்களா யென்று கேட்டபோது நான் பார்க்கவில்லை யாதலால் "தெரியாது" என உண்மையைத்தான் சொன்னேன். எங்கு நான் எடுத்த வஸ்து என்ன

வென்று கேட்பார்களோ வெனப் பயந்து சட்டென்று என் அறைக்குச் சென்று அக்கட்டாரியை பந்தோபஸ்து செய்தேன்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—அம்மா கட்டாரி இரத்தந் தோய்ந்து கிடந்ததாகச் சொன்னுயே! தயவுசெய்து நீ எடுத்தபோது இரத்தம் உன் கையில் ஒட்டிற்று?

ஜெயலக்ஷிமி:—என் கையில் ஒட்டிற்றோ என்னமோ ஞாபகமில்லை. அப்போதிருந்த காபுராவில் நான் சரியாய்ப் பார்க்கவில்லை. என் கண்ணுக்கு செகப்பா யிருப்பதாகத் தோன்றிற்று.

டெப்டிமாஜிஸ்டிரேட்:—அம்மா தயவுசெய்து அதை எடுத்துக் கொண்டு வா! பார்ப்போம். நீ இப்போது சொல்லும் விஷயம் இன்னும் அதிக சந்தேகங்களுக்கு இடம் கொடுக்கிறது; ஆகையால் அதை பரிசோதனை செய்து பார்த்துதான் திட்டமாய் சொல்ல முடியும்; ஜல்தியாய் எடுத்துக் கொண்டு வா.

என்றார். ஜெயலக்ஷிமி போக பாலரங்க ராஜுவும் பின் தொடர்ந்து அவள் பேரில் அதிக சந்தேகங்கள் திட்டமாய் ஏற்படும் என்பதை யறிந்தும், தன் நிமித்தம் அதைக்கூடக் கவனியாது தனது உயிரையும் கௌரவத்தையும் கூட பொருள்படுத்தாது உதவி செய்வதாக நினைத்துக் கொண்டு செய்த அரிய காரியத்திற்காக அவளுக்கு ஒரு அன்பு முத்தம் தந்தார். இருவரும் அவள் அறைக்குச் சென்று பெட்டியைத் திறந்து பந்தோபஸ்தாய் வைத்த உள்பெட்டியையும் திறந்து பார்க்க அக்கட்டாரியைக் காணோம். அங்கிருக்கும் இங்கிருக்குமென நினைத்து ஒவ்வொரு வஸ்துவையும் எடுத்து சரிவரப் பார்த்த பின்னும் அகப்படவில்லை. அவ்விஷயத்தை இருவருமாக வந்து தெரிவித்தார்கள். இக்கேஸ் சம்மந்தமான விஷயங்கள் ஒவ்வொன்றும் மாயமாய் மறைவதைப்பற்றி இன்னதுதான் நினைப்பதென அறியாமல் எல்லோரும் திகைத்து நின்றார்கள்.

ஒன்பதாவது அத்தியாயம்

வரும் விதி இராத்தங்காது

ஸ்ரீதாராம சாஸ்திரிகள் தன் தகப்பனர் சிரார்த்தத்திற்காக செடியில் விட்டு வைத்திருந்த பிலாப்பிஞ்சை அருந்தின் மூலமாய் ஏற்பட்ட அற்ப கலகமானது, பிரமாதமாகி, தான், தன் வீடு வாசல் முதலியவைகளைத் துறந்து தன் சம்சாரத்துடன் பரதேசியாகி, காசி, பிரயாகை, அலகாபாத், ஹரித்துவார் முதலிய இடங்கள் சென்று திரும்பி வருங்கால் தன்னுடன் கோதாவரியில் ஸ்நானம் செய்ய இறங்கிய தனது தர்மபத்தினி பிரவாகத்தில் தன் கண்ணெதிரில் இழுக்கப்பட, தன்னால், கூடியவரை முயன்றும் அவளைக் காப்பாற்ற முடியாமல் தானும் பிரக்ஞையற்று முழுகப்போகும் சமையத்தில் தங்கள் உதவிக்கு வந்த தீரவானை ஒருவரால் காப்பாற்றப்பட்டு கரையில் கொண்டு வந்து தன்னை சேர்த்ததும் அங்கு நின்ற ஒரு கனவானிடம் அத்தீரவான் தன்னை ஒப்புவித்து மூர்ச்சை தெளிந்த பின் தன்னிடம் கொடுக்கும்படி நூறு ரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்துவிட்டு தனது ஊர் விலாசம் முதலியன தெரிவிக்காமல் அவசரமாய்ச் சென்றதாகத் தெரிந்து, தனது தர்மபத்தினியைப் பற்றிய விவரம் கேட்க, அவ்விடத்தில் கோதாவரி திருப்பமாதலால் தண்ணீர் வேகமாய்ப் போவதாகவும் திருப்பத்திற்கப்பால் போகும் வரையில்தான் தான் பார்த்ததாகவும் அப்பால் என்னவாயிற்றென்று தனக்குத் தெரியாதெனவும், அத்தீரவானால் ஒப்புவிக்கப்பட்ட சாஸ்திரிகளைப் பாதுகாப்பதிலேயே தனது முழுக் கவனமும் செலுத்தப்பட்டமையால் அந்தம்மாளைப்பற்றிய விவரமே தனக்குத் தெரியாதெனவும் சொன்னான். அப்பால் ஸீதாராம சாஸ்திரிகளால் கூடிய வரையில் திருப்பத்திற்கப்பால் போய் விசாரித்தும் எவ்வித சமாசாரமும் வெளியாகவில்லையென்றும், தமக்கு தெலுங்கு பாஷை தெரியாததாலும், அங்குள்ளவர்களுக்குத் தமிழ் தெரியாததாலும் ஒருவர் சொல்வது ஒருவருக்குத் தெரியாமல் தான் அது வரையில் பரதேசியாய் மட்டும் இருந்த வைபவம்மாறி இப்போது

சன்யாசியுமாகி சேதுஸ்நானம் செய்துவிட்டு, நவ திருப்பதிகளைச் சேவித்துக் கொண்டு, திருச்செந்தூர் சுப்ரமணியக் கடவுளை சேவித்து விட்டு, வானமாமலை, தோத்தாத்திரி, கன்னியாகுமரி முதலிய ஸ்தலங்களைச் சேவிக்கப் போகும் வழியில் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரைப் பார்த்து அவருக்கு காசி தீர்த்தமும், பண்டரிநாதனுக்கு அம்சை செய்த மிட்டாயும் கொடுத்துவிட்டுப் போகும்படி அவருக்கு புத்தி கொடுத்து சனீஸ்வரன் அவரைத் தள்ளிக் கொண்டு போய் அத்தருணத்தில் அங்கு விட்டதின் பலனாய் அவரைத் தேடித் திரியும்படி நேரிட்டது. இப்போது அவர் தென் தேசத்துப் பிராம்மணரா யில்லாமல் முடிசடையுடன் கோவணம் மட்டும் கட்டிய கோஷாயி ஆகி காவடியுடன் பிரயாணம் போய்க் கொண்டிருந்ததால் போலீசாரால் அவரைக் கண்டுக்கொள்ளக் கூடவில்லை. அவரைத் தேடி நாலா பக்கங்களிலும் சென்ற போலீசார் அவர்களால் கூடிய வரை தேடியும் சீதாராம சாஸ்திரிகளைக் கண்டு பிடிக்கக்கூடவில்லையென வந்து சொன்னதும், டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள், சாஸ்திரி மாறுவேடம் பூண்டிருக்கக்கூடுமென்றும் ஆகையால் அன்றிரவு அவ்விடத்தை விட்டுப் போனதாகச் சொல்லப்படுபவர்களையெல்லாம் கூர்ந்து கவனித்து விசாரித்துப் பார்க்க வேண்டுமென்றும் சொல்லியனுப்பினார்.

அப்படி விசாரித்துப் பார்த்ததில் திருவீர ராஜப்பட்டணத்திலிருந்து ஒரு கோஷாயி படுக்கப்பத்தின் வழியாய் போனதாகத் தெரிந்து தேடிப் போனதில் அப்பால் எங்கு சென்றாரென்று தெரியவில்லை. இவ்விஷயம் டெப்டி மாஜிஸ்டிரேட்டுக்குத் தெரிவிக்கவே இன்ஸ்பெக்டரிடம் "இவ்வூருக்கு வந்திருக்கும் துப்பறியும் திருவல்லிக்கேணி கோவிந்தன் எங்கிருக்கிறாரென்று தயவுசெய்து விசாரித்துப் பாருங்கள்" என்றார். அவர் பலரை விசாரித்துப் பார்த்ததில் எவரும் தெரியாதெனஅறிவித்தனர். இவ்வாறு டெப்டி மாஜிஸ்டிரேட் இன்ஸ்பெக்டரிடம் தெரிவித்த சுமார் ஒரு மணி நேரத்திற்கப்பால் கோவிந்தன் டெப்டி மாஜிஸ்டிரேட்டிடம் வந்து தம்மைத் தேடிய காரணம் கேட்டார்,

டேப்டி மாஜிஸ்டிரேட்:—கோவிந்தா! தாங்கள் எங்கு சென்றிருந்தீர்களா? இங்கு எப்போது வந்தீர்கள்.

கோவிந்தன்:—தாங்கள் ஆக்ஞாபித்த பிரகாரம் காமாக்ஷிராவ் லஞ்சம் வாங்கினரா இல்லையா வென்றும், அவர் தாசி செல்லத்தின் வீட்டிற்கு ஏன் போக்கு வரத்து வைத்துக் கொண்டாரென்றும் காமாக்ஷிராவின் விரோதிகள் யாரென்றும் பென்ஷண்ட் டேப்டி கலெக்டர் மாதவராஜு அவர்கள் வீட்டில் திருடினது யாரென்றும் விசாரித்துக் கொண்டு திரிகிறேன். இங்கு இப்போதுதான் வந்தேன்.

டேப்டி மாஜிஸ்டிரேட்:—ஏதாவது துப்புத் துலங்கிற்றா?

கோவிந்தன்:—காமாக்ஷிராவ் லஞ்சம் வாங்கிக் கொண்டு சுந்தரராஜுவை விடவில்லை யென்ற வரையில் திட்டமாய் ஆராய்ந்தறிந்து கொண்டேன். மற்ற விஷயங்கள் இன்னும் தீர்மானமாய்த் தெரியவில்லை. நான் திட்டமாய் அறியுமுன் தெரிவிப்பதில்லை யென்ற விஷயம் தங்களுக்கு நன்ருய்த் தெரியுமாதலால் அவைகளைப்பற்றி என்னுல் இப்போது ஒன்றும் சொல்வதற்கில்லை.

டேப்டி மாஜிஸ்டிரேட்:—நேற்றிரவு முதல் இங்கு நடந்தேறிய ஆச்சரியமான பல விஷயங்களைப்பற்றி இதற்குள் கேள்விப்பட்டிருப்பீர்களென்று நம்புகிறேன்.

கோவிந்தன்:—எந்த விஷயங்களைப்பற்றி யெனச் சொன்னுல் தெரியும் தெரியாதெனச் சொல்லுகிறேன்.

டேப்டி மாஜிஸ்டிரேட்:—முதலில் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் மரணம்.

கோவிந்தன்:—ஆ! ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரு இறந்து போய்விட்டாரா? நான் சமீபத்தில் அவரிடம் பேசிக் கொண்டிருந்த போது திடசரீரியாயும், ஆரோக்யராயுமிருந்தாரே! என்ன செய்தது எப்போது எப்படி இறந்தார்?

டேப்டி மாஜிஸ்டிரேட்:—நேற்று இரவு இறந்தார்; எப்படி இறந்தாரென்று திட்டமாய்ச் சொல்வதற்கில்லை; அவர் பிரேதத்தை அறையில் பூட்டி பூட்டை சீல் வைத்து போலீசார் காவலிருக்கும் போது, பிரேதம் காணுமல் மாயமாய்ப் போய்விட்டது என்று சொல்லி இரவு முதல் நடந்தேறிய விஷயங்களையும், போலீஸ் விசா

ரணையைப் பற்றியும் விவரமாய்ச் சொன்னார். கோவிந்தன் கவன மாய்க் கேட்டுக் கொண்டிருந்தார். முடிந்தவுடன்,

கோவிந்தன்:—இப்போது நான் செய்ய வேண்டியது என்ன?

டெப்டி மாஜிஸ்டிரேட்:—சீதாராம சாஸ்திரி ஸ்ரீமான் ஸ்ரீனிவா சலு ராஜுகாரின் அறைக்கு சாதாரண வழியில் செல்லவில்லை. இரகசிய வழியின் மூலமாகச் சென்றிருக்க வேண்டும். ஆகையால் அவரைப் பிடித்தால் அவர் மூலமாய் இரகசிய வழியைக் கண்டு பிடிப்பதோடு, கொலை சம்மந்தமான விஷயங்களையும், அவர் பிரேதத் தையும் இதர விஷயங்களையும் கண்டு பிடிக்கக் கூடுமென்று நம்புகி றேன். போலீசார் சாஸ்திரிகளை நாளா விர்த்தியில் தான் கண்டு பிடித்துக் கொண்டு வருவார்கள்; அதற்குள் பிரேதம் எவ்விதமா யோபோய்விடும். பின்னால் பிரேதத்தைக் கண்டு பிடிப்பது முடியா மல் போய்விடும். ஆகையால் சாஸ்திரிகளை எவ்வளவு ஜல்தியாய்க் கண்டு பிடிக்கக்கூடுமோ அவ்வளவு ஜல்தியாய்க் கண்டு பிடித்துக் கொண்டு வாருங்கள்; இது தங்களால் தான் முடியும். ஆகையால் தாங்கள் தங்கள் வேலைகளைச் சற்று நிறுத்தி தங்கள் கவனத்தை சாஸ்திரியைப் பிடித்து வருவதில் செலுத்தக் கோருகிறேன்.

கோவிந்தன்:—என்னால் கூடிய வரையில் பிரயாசைப்பட்டு எவ் வளவு ஜல்தியாய் அவரைக் கண்டு பிடித்துக் கொண்டு வரக்கூடுமோ அவ்வளவு ஜல்தியாய்க் கொண்டுவரப் பிரயாசைப்படுகிறேன்.

என்று சொல்லி டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்களிடம் சாஸ்திரி களைப் பிடிப்பதற்கு வாரண்டு (கைப்பிடியாய் பிடித்து வரும் உத்த ரவு) வாங்கிக் கொண்டு சென்றார்.

மறுநாட் காலையில் ஒன்பது மணிக்கு தாடியும் மீசையும் வைத்துக் கொண்டும் வேஷ்டி முதலியன கட்டாமல் கோவணம் மட் டும் கட்டியும், உடம்பெல்லாம் விபூதி பூசியிருக்கும் ஓர் கோஷாயியை கோவிந்தன் அழைத்து வந்தார். அவரைப் பார்த்தவர்களால் அவர் சீதாராம சாஸ்திரியெனக் கண்டு கொள்ளக் கூடவில்லை. ஏனெனில் சீதாராம சாஸ்திரிகள் அவ்வூரிலிருந்தபோது ஏகபோஜனம் சாப்பிட் டுக்கொண்டிருந்தாராதலால் பெருத்த தொந்தியும், தடித்த உடலும் அழகிய செகப்பு வர்ணமுமுடையவரா யிருந்தார். இப்போது வந்த

வரோ வயமெருட்டிப்போய், கருத்த தேசத்துடன் பலமான காற்றடித்தால் கூட விழுந்துவிடக்கூடிய அவ்வளவு பலஹீனராய் இருந்தார். டெப்டி மாஜிஸ்டிரேட்டிடம் கோவிந்தன் அவரைக் கொண்டு வந்து நிறுத்தி இவர் தான் சீதாராம சாஸ்திரிகள் எனச்சொன்னார். அங்கிருந்த அவ்வூர் போலீசார் யாரையோ பிடித்துக் கொண்டு வந்து சீதாராம சாஸ்திரியென எவரோ விட்டு விட்டார்கள். அவருக்கு சீதாராம சாஸ்திரி இன்னாரென முன் பின் தெரியாததால் ஏமார்ந்து எவரையோ பிடித்துக் கொண்டு வந்து விட்டார்கள் என ஏளனமாய் பேசிக் கொண்டார்கள். ஆனால் டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்களுக்கு கோவிந்தன் அவ்வாறு விசாரித்தறியாமல் பிடித்துக் கொண்டு வரமாட்டாரென்று திட்டமாய் தெரியுமாதலால் சாஸ்திரிகளைக் கண்டதும் "சாஸ்திரிகளே வாருங்கள்" என்றார். சாஸ்திரி ஒன்றும் பதில் சொல்லாது மௌனமாயிருந்தார். போலீசாருக்கு சந்தேகம் இன்னும் அபிவிருத்தியாயிற்று. அப்போது டெப்டி மாஜிஸ்டிரேட் அவரைப் பார்த்து உமது பேரென்னவென்றார். "ஜே சீதாராம்" என்றார். அப்பால் பல கேள்விகளைக் கேட்டதற்கு "ஜே சீதாராம்—ஜே சீதாராம்" என்று சொல்லிக் கொண்டிருந்தாரே தவிர வேறு பதில் சொல்லவில்லை. யாரோ ஒருவன் ஒரு கோஷாயியை சீதாராம சாஸ்திரிகளெனப் பிடித்துக் கொண்டு வந்ததாகவும் அவனை என்ன கேட்டாலும் "ஜே சீதாராம், ஜெ சீதாராம் எனப் பதிலளிப்பதாயும் கேள்விப்பட்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் உடனே அங்கே வந்தார். தன்னுடன் அவரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பி வைத்தால் தான் அவரைக் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லும்படி செய்து கொண்டு வருவதாக இன்ஸ்பெக்டர் சொன்னார். டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்களுக்கு அவ்வாறு அனுப்ப இஷ்டமில்லை. அவரைப் பேசும்படி செய்வதற்கும் முடியவில்லை. இன்னது செய்வதெனத் தெரியாமல் திகைத்துக் கடைசியாக கோவிந்தனைப் பார்த்து இவரைப் பேசும்படி செய்வதற்கு ஏதாவது மார்க்கமில்லையா எனக் கேட்டார். டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்களிடம் இரகசியமாய் ஜெபலக்ஷிமியம்மாளைக் கண்டால் கட்டாயம் அவர் பேசுவார் என்று நினைக்கிறேன் என்று சொன்னார். அவர் தாதியைக் கூப்பிட்டனுப்பி ஜெயலக்ஷிமியை அழைத்து வரச் சொன்னார். ஜெயலக்ஷ்மியும் பாலரங்க ராஜுவுமாக வந்தார்கள். அவர்களிருவரும் ஏகோபித்து வருவதைக் கண்ட கோஷாயி ஜெய

லக்ஷ்மியைப் பார்த்ததும் "அம்மா! ஜெயலக்ஷ்மி" என்றதும் சமீபத்தில் சென்று அவள் கைகளிரண்டையும் பிடித்துக் கொண்டு, "கண்ணே! இவர் இங்கு வருவதற்கு உன் தாத்தா சம்மதித்தாரா? சாக்ஷாத் மஹா விஷ்ணுவும் லக்ஷ்மியும் போலும் இருக்கும் நீங்கள் இருவரும் சுக ஜீவிகளாய் பல்லாண்டு பல்லாண்டாய் இருக்கக்கடவீர்களாக; உன் தாத்தா எங்கே? வெளி ஊர் சென்றாரா? அல்லது மூன்று தலை முறைகளாக இருந்த விரோதத்தை உன் தாத்தா அவர்களுக்கு உன் பேரிலிருக்கும் அளவிட முடியாத பிரியத்தால் மாற்றி விட்டாயா? பண்டரி நாதனுடைய கிருபா கடாட்சத்தினால் உங்களிருவர் மனதிலும் பல வருஷங்களாய் ஓங்கி வளர்ந்து கொண்டிருக்கும் அன்பெனும் விருக்ஷம் நல்ல பலனளிப்பதாக. உன் தாத்தா எங்கே? என்றார். அவர் பேசிய மாத்திரத்தில் அவருடைய குரலைக் கேட்டதும், எல்லாருக்கும் அவர் சீதாராம சாஸ்திரிதானெனத் தெரிந்து விட்டது. மறுபடியும்,

சீதாராம சாஸ்திரி:—அம்மா! உன் தாத்தா எங்கே?

ஜெயலக்ஷ்மி: —எ...ன்...தா...த்...தா ?

என்று இழுப்பாய்ச் சொல்லுவதற்குள் டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள் சட்டென்று "ஸ்ரீனிவாசலு ராஜு கொலை செய்யப்பட்டார்" என்று சொல்லி விட்டு அவரைக் கூர்ந்து கவனித்தார். யார்? யார்? கொலை செய்யப்பட்டார்கள்? எப்போது? நான் இரண்டு தினங்களுக்கு முன்பு அவரைக் கண்டு பேசினேனே! கொலை செய்தது யார்? ஆ! ஹா! அப்பேர்ப்பட்ட புண்யாத்மாவும், தீரவானும், சொன்ன சொல் தட்டி நடவாத பிரபுவும் கடைசியில் கொலை செய்யப்பட்டா இறந்தார்? அவரைக் கொலை செய்யக்கூடிய சண்டாளன்கூட இப்பூலோகத்திலிருக்கிறானா? அவர் தூங்கும் போது ஒரே வெட்டாய் வெட்டிக் கொலை செய்திருந்தாலொழிய அவன் உயிருடன் போயிருக்க மாட்டான். யார் கொலை செய்தது! என்று பல கேள்விகளைச் சரமாரியாய்ப் பொழிந்தார். அப்போது டெப்டி மாஜிஸ்டிரேட் அவர்களுக்கு சீதாராம சாஸ்திரி நிர் அபராதியாயிருக்க வேண்டுமென மனதில் பட்டது. ஆயினும் அவர் மூலமாய் தான் இரகசிய வழியைக் கண்டு பிடிக்க வேண்டுமென்றும் நல்ல தனத்தில் பேசிதான் விஷயங்களை அவரிடம் கிரகிக்க வேண்டுமெனவும் தீர்மானம் செய்து கொண்டு அவரை சமீபத்தில் அழைத்து

உட்கார வைத்துக் கொண்டு நடந்தேறிய விஷயங்களை விவரமாய்ச் சொல்லிக் கொண்டே வந்தார். அவரும் கவனமாய்க் கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார். அவர் சொல்லி முடித்ததும் சீதாராம சாஸ்திரி "தாங்கள் யார்" என்று கேட்டார். அவர் தான் இன்னாரெனச் சொன்னதும் கலிகால சத்தியவந்தனாகிய அரிச்சந்திரனுக்குச் சமானமானவரென்று பேரெடுத்த கனவான் தாங்கள் தானா?" எனக் கேட்டு அவர் காலில் விழுந்து வணங்கினார்.

டேப்டி மாஜிஸ்டிரேட்:—தர்ம பிரபுவாகிய ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் பிரேதம் காணாமற் போயிருக்கிறது. அதைக் கண்டு பிடித்து ஆசாரப்படி தகனம் செய்ய வேண்டியிருக்கிறது. தங்கள் உதவியிருந்தால் ஜல்தியாய்க் கண்டு பிடிக்கக்கூடும்.

சாஸ்திரி:—எனக்கு அது சம்மந்தமான விஷயங்கள் ஒன்றும் தெரியாமலிருக்கும்போது என்னால் என்ன உதவி செய்யக்கூடும்?

டேப்டி மாஜிஸ்டிரேட்:—தாங்கள் எந்த வழியாய் அவர் அறைக்கு அன்றிரவு சென்றீர்களென்று விவரமாய்த் தெரிவித்தால் அதன் மூலமாய் பிரேதத்தைக் கண்டுபிடிக்கக்கூடுமென நம்புகிறேன்.

என்றார். சாஸ்திரி டெப்டி மாஜிஸ்டிரேட் அவர்களை மட்டும் தனியாய் பக்கத்தறைக்கு அழைத்துச் சென்று பின்வருமாறு ஏகாந்தத்தில் சொன்னார்.

சாஸ்திரி:—எப்படியாவது ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாருவைக் கண்டு பேசிவிட்டுப் போக வேண்டுமென்ற ஆவல் அதிகமாய் எனக்கிருந்ததாலும் ஒருக்கால் கணக்கப் பிள்ளையாவது, மற்ற வேலைக்காரராவது என்னைப் பார்த்துவிட்டால் பெரிய எஜமானரைப் பார்க்க விடமாட்டார்களென்றும் நினைத்து என் பேரில் அபிமானமுள்ள சின்ன மீன் கந்தன் மூலமாய் எஜமானுக்கு நான் அவரைப் பார்க்க விரும்பும் சமாசாரம் சொல்லி அனுப்பி அவரை சமுத்திரக் கரைக்கு அழைத்து வரச்சொல்லி வேறு யாருக்கும் தெரியாமல் பேசிவிட்டுப் போகலாமென நினைத்து அங்கு சென்றேன். நான் போன வேளையில் அவன் வீட்டில் டப்பா விளக்கெறிந்து கொண்டிருந்தது. மெதுவாகக் கூப்பிட்டேன், யாரும் பேசவில்லை. வீட்டுக் கதவு கால் வாசி திறந்திருந்ததாலும், விளக்கெறிந்து கொண்டிருந்த

தாலும், உள்ளே யாராவது இருப்பார்கள் அல்லது ஜல்தியில் வரு வார்களென நினைத்துவிட்டுக் கதவைத் திறந்து பார்த்தேன். அப் போது வெளியில் தாழ்ந்த குரலில் இருவர் பேசிக்கொண்டு வரு வதைக் கண்டேன். அங்கு போட்டிருந்த யூனியன் லாந்தர் வெளிச் சத்தின் எதிரில் அவர்கள் வரவும், நீன்கந்தனுடன் வருவது என்னை இக்கெதிக்குள்ளாக்கின சுந்தரராஜுவா யிருக்கக் கூடுமென்று சந்தே கப்பட்டேன். அவர்கள் எதிரில் வந்து கொண்டிருந்ததால் அவர்க ளுக்குத் தெரியாமல் வெளியே போகமுடியாதெனக் கண்டுகொண் டேன். பார்த்துவிட்டால் அவர்கள் என்னை என்ன செய்வாரோ என்ற பயமும் எனக்கிருந்தது. இன்னது செய்வதெனத் தோன் ருமல் தப்புவதற்காக உள்ளே சென்றேன். அவர்களிருவரும் உள்ளே வந்ததும் கதவை மூடித் தாளிட்டார்கள். என்னை சுந்தர ராஜு பார்த்துக் கொண்டு என்னை நையப்புடைப்பதற்காகத்தான் கதவை மூடுகிருரோ என்ற பயம் எனக்கதிகமாக இருந்தது. எப் படியாயினும் தப்புவதற்கு வேறு வழி யில்லாததால் அடுப்பாங்கறை சுவற்றின் பக்கம் ஒதுங்கி நின்றேன். இருவரும் வந்ததும் கந்தன் அங்கு ஓ ; படத்தின் பின்னல் தொங்கவிட்டிருந்த சாவியை எடு த்து அங்கு வைத்திருந்த இரும்பு அங்கியின் மார்பில் வைத்திருக் கும் ஒரு ஆணியைத் திருப்பவே அங்கு சாவி போடும் துவாரம் தென்பட்டது. அதில் தான் எடுத்த சாவியைப் போட்டு திறக்க அந்த அங்கி 3 அடி தூரம் தள்ளிப் போயிற்று. அப்போது அங்கு ஒரு வாசல் தென்பட்டது. கந்தன் உடனே சுந்தரராஜு அவர்களை அந்த வழியே போனல் நேராக பெரிய எஜமான் அறைக்குக் கொண்டு போய் விடுமென்று சொல்லி ஸ்ரீனிவாசலு ராஜுவை எச்ச ரிப்பதற்காக மணியடிச்சும் பத்தாயையும் அமுக்கிவிட்டுப் போகும் படி சொன்னன். சுந்தரராஜு அவனையும் வரும்படியும், ஒருக்கால் அதிகமாய் கோபித்தால் சமாதானம் சொல்ல வேண்டுமென்றும், ஆகையால் கூடவரும்படியும் சொன்னர்; கந்தன் தனக்கு பெரிய எஜமான் முன் பேசவே வாய் வராதென்று முதலில் மறுத்தாலும் சுந்தரராஜுவின் வார்த்தையைத் தட்டாமல் கடைசியில் கூடவே சென்றன். நான் உடனே கதவைத் திறந்து கொண்டு வெளியே போய்விடலாமா என யோசித்தேன். கதவு பூட்டப்பட்டிருந்தா லும் பூட்டின சாவியை அவன் எடுத்துச் சென்று விட்டதாலும் வேறு வழியில்லாமல் அங்கேயே இருந்தேன். சுமார் அரைமணி

நேரம் பொறுத்து மீன்கந்தனும் சற்று நேரம் பொறுத்து சுந்தரராஜுவும் வந்தார்கள். வந்ததும் முன்போல் அங்கியில் சாவி போட்டு பின்பக்கம் திருப்ப முன் இருந்த ஸ்தானத்திற்கு இரும்பு அங்கி போய்விட்டது. உடனே சாவியை எடுத்து படத்தின் பின்பக்கம் மறைவாய் வைத்துவிட்டு கதவைத் திறந்து கொண்டு இருவரும் சென்றார்கள். போகும்போது சுந்தர ராஜுவும் அவனும் பேசிக் கொண்டதிலிருந்து இருவரும் எங்கோ போவதாகவும் வர பல மணி நேரங்களாவது பிடிக்குமெனவும் தெரிந்தது. உடனே நான் கதவை மூடித் தாளிட்டுவிட்டு அவர்கள் செய்ததுபோல் செய்து பெரிய எஜமானரிடம் சென்றேன். நான் அங்கு எப்படி வந்தேன் என்று அவர்கள் கேட்க; விவரமாய்ச் சொன்னேன். மீன் கந்தனுக்குத் தான் கொடுத்திருந்த உத்தரவின் பிரகாரம் அங்கியைத் தள்ளுமுன் அறையைச் சோதித்திருந்தால் இவ்வாறு நடந்திராதென்றும் அவ் வழியைப்பற்றி எவருக்கும் சொல்லக் கூடாதென்றும் என்னிடம் வாக்குறுதி பெற்றுக் கொண்டார். இப்போது அவர் பிரேதத்தைக் கண்டு பிடிப்பதற்காகக் கட்டாயமாய்ச் சொல்ல வேண்டுமென்று எஜமானர் உத்தரவிட்டதால் சொல்லி விட்டேன். இதற்கு மேல் எனக்கு ஒன்றும் தெரியாதென்றார். அவர் சொன்னது உண்மை யென டெப்டி மாஜிஸ்டிரேட் மனதில் பட்டதாலும், அவரை முழு விவரங்களையும் அறிந்து கொள்வதற்கு முன்னால் எங்கும் அனுப்ப இஷ்டப்படாததாலும், சிறையில் வைக்க விரும்பாததாலும், தாங்கள் கூடயிருந்து வேண்டும் முயற்சி செய்து பிரேதத்தைக் கண்டுபிடித்து அடக்கம் செய்யும் வரையில் இங்கிருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். சீதாராம சாஸ்திரிகள் தான் அப்போதிருக்கும் ஆஸ்ரமக் கொள்கைகளுக்கு அது விரோதமாயிருந்தாலும் அவர்கள் வார்த்தையைத் தட்டாமல் அவ்வாறே செய்வதாக வாக்களித்தார்.

சீதாராம சாஸ்திரிகள் சொன்ன பிரகாரம் டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள் போய்ப் பார்த்து ஸ்ரீனிவாசலு ராஜு அறையிலிருந்து வெளியே போகும் இரகசிய அறையைக் கண்டு கொண்டாரே யொழிய வேறு ஒன்றும் கண்டு கொள்வதற்கில்லாமல் போய்விட்டது. உடனே டெப்டி மாஜிஸ்டிரேட் சின்னமீன்கந்தனைத் தேடிப் பிடித்து வரும்படி ஆட்களை அனுப்பினார். அவன் ஊரிலில்லை யென்றும் வெளி ஊர் சென்றுவிட்டதாகவும், போகும்போது எங்கு போகி

ருனென்று எவரிடமும் சொல்லிப் போவதில்லையெனவும் வந்த பின்னும் தான் எங்கு சென்றிருந்தானென்றும் என்ன வேலையாய் சென்றிருந்தானென்றும் எவரிடமும் சொல்லிப் போவதில்லை யென்றும் ஆகையால் அந்த ஊருக்கு வந்தால்தான் கொண்டு வரலாமேயொழிய மற்றப்படி கண்டுபிடிக்க முடியாதென்றும் வந்து பதில் தெரிவித்தார்கள். அப்பால் துப்பறியும் கோவிந்தனை அழைத்து ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் பிரேதத்தைக் கண்டு பிடிக்க முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

கோவிந்தன்:—ஐயா! தாங்கள் முன்னால் ஆக்ஞையிட்ட வேலைகளைக் கவனித்து வந்ததில் அவ்விஷயம் துப்பு துலங்கக்கூடிய நிலைமையில் இப்போது இருக்கிறது. உடனே அத்துப்புகளைப் பின்பற்றி சென்றாலொழிய காரியம் கெட்டுப் போகுமெனவும் நான் திட்டமாய் நம்புகிறேன். ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் பிரேதத்தைக் கண்டு பிடிப்பது முடியாத காரியமென்றே என் மனதில் திட்டமாய்ப்படுகிறது. ஆகையால் உபயோகமுள்ளதாக என் மனதில் படும் ஆராய்ச்சியை விட்டுவிட்டு உபகார மில்லாததாகப்படும் ஆராய்ச்சி செய்ய நான் விரும்பவில்லை. தயவுசெய்து முதலில் தங்கள் எனக்கு ஆக்ஞாபித்த வேலையை என்னைச் செய்ய விட்டுவிடுங்கள். தாங்கள் எவ்வளவு முயன்றாலும் அவர்கள் பிரேதத்தை இப்போது காணமுடியவே முடியாதெனை நம்புகிறேன்.

என்றார். கோவிந்தனது மனதை மாற்றுவது முடியாதென அறிந்த டெப்டி மாஜிஸ்டிரேட் எந்த வழியில் வேலை செய்யலாமென்றுவது தெரிவிக்கும்படி கேட்டார். அதற்குக் கோவிந்தன் மீனாக்ஷி மகன் கோபுவைக் கவனித்தால் ஏதாவது துலங்கலாமெனச் சொல்லி அவரிடம் விடை பெற்றுச் சென்றான்.

பத்தாவது அத்தியாயம்

அற்பருக்கு பவிஷு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பார்கள்.

ஏழாவது அத்தியாய இறுதியில் அதாவது 129-ம் பக்கத்தில் வெள்ளை வீட்டிலுள்ள துரை தமது ஆராய்ச்சி சாலை மேஜையின் மேல் படுக்க வைத்துவிட்டுப் போய் பிரேதத்தை எடுத்துவர உதவி புரிந்த ராமசாமி, சொள்ளமுத்து, ஷண்முகம், ஆண்டி ஆகிய நால்வருக்கும் கண்களில் மருந்து ஊற்றினதால் கண்கள் தெரியாமலிருந்ததை வேறு மருந்தை ஊற்றிக் கண்கள் தெரியும்படி செய்தபின் அவர்கள் ஒவ்வொருவருக்கும் 600 ரூபாய்கள் வீதமும், கோபாலனுக்கு மட்டும் அவர்களுக்குத் தெரியாமல் அவர்களுடைய கண்களுக்கு மருந்து ஊற்றுமுன் நோட்டுகளாக 1500 ரூபாய்கள் 100ரூபாய் நோட்டுகளாக 15-நோட்டுகள் கொடுத்துவிட்டு மற்றவர்களுக்குக் கொடுக்கும்போது அவர்களுக்குக் கொடுத்த வீதாசாரப்படி ரூபாய்கள் 600-ம் கொடுத்தனுப்பினர். ரூபாய்களை வாங்கிக் கொண்டு சென்ற ஐவரும் அவர்கள் ஆயுட் காலத்தில் ஏக சமயத்தில் ரூபாய் பத்துக்குமேல் கையில் வாங்கியறியாதவர்களாதலாலும், திடீரென —அவர்கள் எதிர்பாராத விதமாய்—ஒவ்வொருவர் கையிலும் ரூபாய்களாக 600 ரூபாய்கள் கொடுக்கப்படவே அது கனவா நினைவா என சந்தேகப்பட்டு அடிக்கடி தொட்டுப் பார்த்து பொழுது விடிந்ததும் முதலில் எல்லோரும் அழகான துணிகள் வாங்கி உடுத்திக் கொள்வதெனவும், ஷோக்கான துணிகள் அவ்வூரில் அகப்படாததால் முதலில் திருச்செந்தூர் சென்று அங்கிருக்கும் ஷாப்பில் அகப்படக்கூடிய துணிகளை வாங்கிக் கொண்டு, திருநெல்வேலிக்கும், பின் சென்னைக்கும் போய் குஷாலாய் ஒரு மாதகாலம் கழித்துவந்து பின் தத்தம் இஷ்டப்பிரகாரம் ஆடுமாடுகள் வாங்கியோ, கடை வைத்தோ, கண்ட்ராக்ட் எடுத்தோ சுக ஜீவனம் செய்வதெனத் தீர்மானித்து அதிகாலையில்போகும் டிராம் வண்டியேறி திருச்செந்தூர் சென்றார்கள்.

அங்கு சென்றதும் அவ்வூர் கடைகளில் அகப்படக் கூடிய போலி (இமிடேஷன்) பட்டில் அவரவர்களுக்கு மனம் பிடித்தது

போல் பெரிய பூக்கள் போட்ட துணிகள் வாங்கி சொக்காய்கள் தைக்கக் கொடுத்துவிட்டு மேற்படி பட்டிலேயே அவரவர்களுக்கு மனம் பிடித்த பல வர்ணங்களில் அங்க வஸ்திரங்கள் வாங்கிப் போட்டுக் கொண்டு மயிர் கத்திரிக்கும் நவீன அம்பட்டன் கடைக்குப்போய் (ஹெயர் கட்டிங் சலூன்) புதுமோஸ்தரில் மயிர் வெட்டி விடும்படி கேட்டுக் கொண்டார்கள். அம்பட்டன் அன்று தனக்கு நல்ல நாளென்றும் அதிகாலையிலேயே ஐந்து ரூபாய் சம்பாத்தியம் அகப்பட்டது அதிர்ஷ்டமே யென்றும் எண்ணிக் கொண்டு அவர்களை அதிக மரியாதையாய் கண்ணாடிகளுக்கு எதிரில் போடப்பட்டிருக்கும் நாற்காலிகளில் உட்காரச் செய்து, ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொரு விசிறியை எடுத்துக் கொடுத்து விசிறிக்கொள்ளச் சொல்லி விட்டு தன்னிடமுள்ள முப்பத்தாறு தினசாக மயிர் வெட்டும் படங்களைக் கொண்டுவந்து காட்டி அவைகளில் அவரவர்களுக்குப் பிடித்தமானதைக் காட்டினால் அம்மாதிரி வெட்டுவதாகச் சொன்னான். உடனே அம்பட்டன் ஓர் புட்டியிலிருந்து வெள்ளையான ஆடைபோன்ற வஸ்துவை (ஹெயர் கிரீம்) தடவி; தந்தசிப்பால் சீவி, மயிர் உடம்பின் மேல் விழாமல் தூய வெள்ளை அங்கியை கழுத்து முதல் கால்வரை மாட்டி மயிர் வெட்டி, முகத்திற்கு வாசனைப் போட்டு க்ஷவரம் செய்து உடனே க்ஷவரம் செய்த பாகம் எரியாமலிருப்பதற்கும், ஜில்லென்று குளிர்ச்சியா யிருப்பதற்கும் ஓர் வாசனை வஸ்துவை முகத்தில் தடவி, அவர்களுக்கு இஷ்டமான பிரகாரம் தண்ணீரிலாவது வெந்நீரிலாவது ஸ்நானம் செய்யலாமென்றும், பன்னீர் ஊற்றிய வாசனை ஜலத்தில் ஸ்னானம் செய்ய இஷ்டப்பட்டால் ஒவ்வொருவருக்கு இரண்டு ரூபாய் வீதம் அதிகம் கொடுப்பதாகில் வாசனைத் தண்ணீர் ஸ்னானத்திற்குக் கொடுப்பதாகவும் சொன்னான். கோபாலன் மட்டும் தனக்கு வாசனை கலந்த தண்ணீர் கொடுக்கும்படி சொல்லி ஸ்னானம் செய்தான். மற்றவர்கள் வெந்நீரில் ஸ்னானம் செய்தார்கள். உடனே அம்பட்டன் தனக்குச் சேரவேண்டிய தொகைகளை பெற்றுக் கொண்டதோடு இனாமும் கேட்டான். கோபாலன் எல்லோருக்குமாகச் சேர்த்து ஒரு ரூபாய் இனாம் கொடுத்ததும் எல்லோருமாகச் சேர்ந்து மாம்ஸ சிற்றுண்டி சாலை (மிலிட்டேரி கிளப்) சென்று இஷ்டமானபடி வயிறு புடைக்கச் சாப்பிட்டுவிட்டு துணிகள் தைக்கும் கடைக்குச் சென்று துணிகள் தைத்து முடியாததால் அங்கு காத்திருந்தனர்.

நிற்க முந்திய அத்தியாயத்தின் கடைசியில் டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்களிடம் துப்பறியும் கோவிந்தன், மீன்கந்தன் மகன் கோபுவைக் கவனித்தால் ஏதாவது துப்புத் துலங்கலாமென்று சொல்லிச் சென்றதும், ஏதாவது தக்க காரணமில்லாமல் கோவிந்தன் கோபுவைக் கவனிக்கச் சொல்லி யிருக்க மாட்டாரென்றும், வெகு நேரம் யோசனை செய்து பார்த்தார். மேலும் ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் பிரேதத்தைக் கண்டு பிடிப்பது இப்போது முடியாத காரியமென்றே என் மனதில் திட்டமாய்ப் படுகிறது. எனக் கோவிந்தன் சொன்னதால் அதைப்பற்றிய விவரம் கோவிந்தனுக்கு ஒருக்கால் திட்டமாய் தெரிந்திருக்குமோ எனவும், அப்படித் தெரிந்திருந்தால் தன்னிடம் அதைப்பற்றிய விவரம் சொல்லாமல் மறைத்ததற்குக் காரண மேதாவதிருக்க வேண்டுமெனவும் ஆலோசித்துவிட்டு, உடனே கோபுவைத் தேடிக் கண்டு பிடித்துக் கொண்டு வரும்படி போலீஸ் இன்ஸ்பெக்டரையே அனுப்பினார். அவர் தன் கூட மூன்று போலீஸ்காரரை அழைத்துக் கொண்டுபோய் விசாரித்ததில் அதிகாலையில் கோபாலன், ராமசாமி, சொள்ளமுத்து, ஆண்டி: ஷண்முகம், ஆகிய ஐவரும் டிராம் வண்டிஏறி திருச்செந்தூர் சென்றதாகக் கேள்விப்பட்டவுடனே, சுமை எடுத்துக் கொண்டு பத்து இருபது மைல் இரண்டு மூன்றணு கூலிக்கு நடந்துபோகும் அந்த ஐவரும் டிராம் ஏறிப் போனார்களென்றால் ஆச்சரியமா யிருப்பதாக நினைத்து உடனே ஸ்பெஷல் டிராம் ஏறி திருச்செந்தூர் சென்று விசாரிக்க, படிப்படியாய் அவர்கள் ஜவுளிக்கடையில் ஒவ்வொருவரும் இருபது முப்பது ரூபாய்களுக்குத் துணிகள் வாங்கியதும் அதிகப் பணம் கொடுத்து மயிர் வெட்டிக் கொண்டதும், மாம்ஸ சிற்றுண்டி கடையில் ஒவ்வொருவரும் ஒன்றிரண்டு ரூபாய்களுக்குச் சாப்பிட்டுச் சென்றதும், பின் துணிகள் வாங்கிக்கொண்டு திருநெல்வேலிக்கும் சென்னைக்கும் போவதாகப் பேசிக் கொண்டதையும் கேள்விப்பட்டவுடனே அவரது சந்தேகம் அதிகப்பட்டு ஜவுளியாய்தையற் கடைக்குப்போக அப்போதுதான் அவர்கள் துணிகள் வாங்கிக் கொண்டு பஸ்ஸுக்குப் போனதாகக் கேள்விப்பட்டு அங்கு போக அப்போதுதான் பஸ் புறப்பட்டு சுமார் பத்துகஜ தூரத்தில் போய்க் கொண்டிருந்தது. உடனே பலமுறை பலமாய் பிகில் (ஊதுகுழல்) ஊதி மோட்டார் பஸ்ஸை நிறுத்தும்படிசெய்து அங்கு போய்ப் பார்க்க, அவர்கள் ஐவரும் தனவான்களைப் போல் உடைக

ளணிந்து, தாம்பூலம் போட்டுக் கொண்டு உல்லாசமாய் வீற்றிருக்கக் கண்டார். அவர்கள் ஐவரையும் போலீஸ் இன்ஸ்பெக்டர் இறங்கும்படி சொல்ல கோபாலன் "அவசரமாகத் திருநெல்வேலி போகிறோம். இப்போது இறங்க முடியாது" எனச் சொன்னான். உடனே போலீஸ்காரரை விட்டு அவர்களை இறக்கச்சொல்ல அவர்கள் அப்போதும் இறங்காமல் வாதிட்டனர். போலீஸ்காரர் பலவந்தமாய் ஒருவரை இழுத்துக் கீழே விட்டு மற்றொருவரை இறக்குமுன் இறங்கியவன் மறு பக்கம் போய் ஏறிக்கொள்ள இவ்வாறு பதினைந்து நிமிஷம் வரையில் அவர்கள் வம்பு செய்ததால் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஜவானை அனுப்பி விலங்குகளுடன் பத்து கான்ஸ்டேபிள்களை அழைத்துவரச் செய்து ஐவருக்கும் விலங்குகள் மாட்டி அழைத்துப் போகப் போகும்போது அந்த ஐவரும் ஐந்து பெட்டிகள் பஸ்ஸில் வைத்திருப்பதாகச் சொல்லி பஸ்காரன் பெட்டிகளை இறக்கிக் கொடுத்தான். அப்பெட்டிகளையும் அவர்களையும் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போய் அடைத்து, முதலில் கோபாலனைக் கூப்பிட்டு வைத்து அவன் பெட்டியைத் திறக்கச் சொல்ல அவன் மறுத்தான். உடனே கிராம முனிசீப்பையும் இருகனவான்களையும் வரவழைத்து அவர்கள் எதிரில் அவன் பெட்டியைத் திறக்க அதில் புது துணிகளும், பதினைந்து நூறு ரூபாய் நோட்டுகளும், ரூபாய்களாக ஐந்நூற்று முப்பத்தேழு ரூபாய்களும் இருந்தன. ரூபாய்கள் ஏது எனக் கேட்டதற்கு அவன் யாதொரு பதிலும் கொடுக்கவில்லை. அவ்வாறே மற்ற நால்வர் பெட்டிகளைச் சோதிக்க ஒவ்வொருவர் பெட்டியிலும் ஐந்நூற்று அறுபத்திச் சில்லரை ரூபாய்கள் இருந்தன. அவர்களையும் ரூபாய்களைப் பற்றிக் கேட்டதற்கு யாதொரு ஜவாபும் சொல்லவில்லை. கிராம முனிசீப் இடமும் அவ்விரு கனவான்களிடமும் பெட்டிகளிலிருந்த வஸ்துக்களின் ஜாப்தாவில் கையெழுத்துகள் வாங்கியதும் அவர்களை அனுப்பி விட்டு கோபாலனை மட்டும் தனி அறையில் கொண்டு போய் வைத்துக் கொண்டு போலீஸ் மரியாதைகள் நடத்தியும் அவன் வாயைத் திறக்கவில்லை. போலீசாரால் கூடிய வரையில் அவனை ஹிம்சித்துப் பார்த்தும் அவன் பதில் சொல்லவேயில்லை. அப்பால் இன்னும் பலமாய் மரியாதைகள் நடத்தவே மூர்ச்சித்துக் கீழே விழுந்து விட்டான். அப்பால் அவன் மூலமாய் சமாசாரங்களறிவது சாத்யமல்லவென அறிந்ததும், மற்ற நால்வரையும் ஒவ்வொருவராக

கொண்டு வந்து போலீஸ் மரியாதைகள் செய்து கேட்க முதலில் ஒவ்வொருவனும் மௌனம் சாதித்த போதிலும் அடிகளின் சூடேற சூடேற ஒவ்வொருவராக கொஞ்சம் கொஞ்சம் சமாசாரம் சொன்னார்கள். அப்பால் ஐவரையும் இன்ஸ்பெக்டர் அழைத்து வந்து டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்களிடம் விட்டு அவர்களிடம் கிரஹித்த விஷயங்களைத் தெரிவித்தார். உடனே டெப்டி மாஜிஸ்டிரேட் வாரண்ட்டுடன் பத்து போலீசாரைத் துப்பாக்கிகள் சகிதம் அழைத்துப்போய் வெள்ளை வீட்டிலிருக்கும் டாக்டர் தாம்ஸன் துரையைப் பார்த்து அவருக்கு வாரண்ட்டைக் காட்டி வீடு பூராவும் சோதனை போட வேண்டுமென்று சொன்னார். துரை அவர்கள் அவ்வாறு செய்வதில் எவ்வித ஆட்சேபனையில்லை யென்று சொல்லி தன் வேலைக்காரனைக் கூப்பிட்டு எல்லா அறைகளையும் திறந்து காட்டும் படி சொல்லி விட்டு சோதனை செய்யப்போன இன்ஸ்பெக்டரை, தன் ஆராய்ச்சி சாலையிலுள்ள எந்த வஸ்துக்களையும் தொட வேண்டாமென்றும், தொட்டால் ஒருக்கால் அபாயமாய் முடியுமென்றும் எச்சரித்து அனுப்பி விட்டு, டெப்டி மாஜிஸ்டிரேட் அவர்களைத் தனியாய் தன் அந்தரங்க அறைக்கு அழைத்துச் சென்று தான் ஸ்ரீனிவாசலு ராஜு இறந்த பின் அவர் பிரேதத்தை எப்படியாவது கொண்டு வந்து சில பரீட்சைகள் செய்வதற்காகவே அந்த ஊரில் வந்திருந்ததாயும், பிரேதத்தை அதற்காக எடுத்து வரச் சொல்லி ரூபாய்கள் கொடுத்தது உண்மையென்றும் பிரேதத்தை அங்கு படுக்க வைத்து விட்டு, அவர்கள் நால்வர் கண்களுக்கும் மருந்து ஊற்றி கண்கள் தெரியும்படி செய்த பின் அவர்களுக்கு வாக்களித்த ரூபாய்கள் கொடுத்து விட்டு வந்து பார்த்த போது பிரேதம் மாயமாய் விட்டதென்றும் உண்மையாய்ச் சொன்னார். ஸ்ரீனிவாசலு ராஜுவின் பிரேதத்தை எடுத்து வரச் சொன்ன விஷயம் பஹிரங்கப் பட்டு விட்டால் டாக்டர் தாம்சன், அவர் வேலைக்காரர், பிரேதத்தை எடுத்து வந்த கோபாலன் முதலிய ஐவர் ஆகிய இவர்களை அங்கு எவ்வளவு பந்தோபஸ்தில் வைத்தாலும், அவ்வூரிலுள்ளவர்களும், ஸ்ரீனிவாசலு ராஜுவின் பேரில் அதிக விஸ்வாசமுடைய அக்கம் பக்கம் ஊர்களிலுள்ள அனேக ஆயிரக் கணக்கான ஜனங்களும் கலகம் செய்து போலீசாரை எதிர்த்து, பிரேதத்தை எடுத்து வந்ததில் சம்மந்தப்பட்டவர்களை யெல்லாம் சித்ரவதை செய்து விடுவது திண்ணம் என நினைத்து தான் இருந்தும் அப்போர்ப்பட்ட சம்பவங்கள்

நடக்கவிடக்கூடாதென நினைத்து உடனே அதில் சம்மந்தப்பட்டவர்களையெல்லாம் மூடின டிராம் வண்டியிலேற்றி தானும் போலீசாருடன் கூடவே சென்று திருச்செந்தூர் சேர்ந்து டெப்டி மாஜிஸ்டிரேட் தந்தியின் பிரகாரம் தயாராய் வந்திருந்த மூடிய மோட்டார் வண்டியில் எல்லோரையும் ஏற்றி பாளையங்கோட்டை பெரிய ஜெயில் கொண்டு போய்ச் சேர்த்தார்.

இதற்குள்ளாக வெள்ளை வீட்டில் வந்திருந்த டாக்டர் தாம்ஸன் துரையின் தூண்டுதலின் பேரில் தான் ஸ்ரீனிவாசலுராஜுவின் பிரேதம் கோபாலன் முதலியவர்களால் எடுத்துப் போகப்பட்டதென்ற விஷயம் முதலில் ஒரு சிலருக்கும் அப்பால் பலருக்கும் பின் பல்லாயிரக்கணக்கான ஜனங்களுக்கும் தெரிந்ததும் அந்தத் துரை தன் வீட்டில் தான் இருப்பானென்றும் அவனை இனி ஒரு நிமிஷம் கூட உயிருடன் வைக்கக்கூடாதென்றும் பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் தடிகள், ஈட்டிகள், கத்திகள், கவுண்கள் எடுத்துக் கொண்டு வந்து கதவைத்தட்டியும் திறக்காததால் கதவை உடைத்து உள்ளே போவதற்காக உள்ளிருந்த கதவில் கைகளை வைத்துத் தள்ளியதும் அவர்கள் கைகள் மின்சார சக்தியால் கெட்டியாய்க் கதவுடன் சேர்த்துப் பிடித்துக் கொள்ளப்பட்டன. அவர்களால் கூடிய வரையில் இழுத்துப் பார்த்தும் முடியவில்லை. அவர்களை விடுவிக்கச் சென்று பிடித்த எல்லோர் கைகளையும் அவ்வாறு பிடித்துக்கொள்ளவே அங்கு கூட்டத்திலிருந்த ஓர் வாலிபன் பக்கத்திலுள்ள சுவற்றையிடித்து அங்குள்ள மின்சாரக் கம்பிகளை வெட்ட வேண்டுமென்றும் அப்படி வெட்டும்போது கூட கைகளில் மின்சார சக்தி ஏறாதபடி ரப்பரினால் கைகள் பாதுகாக்கப் படவேண்டுமென்றும் சொல்லி அவ்வாறு சுவற்றை இடித்துக் கம்பிகளை அறுக்கவே அவர்கள் கைகள் விடுபட்டன. இன்னும் வீடு முழுவதிலும் என்னென்ன சூட்சமங்கள் அமைத்திருக்கிறானோ எனத் தெரியாததால் வீட்டிற்குள் போவது அபாயமாய் முடியுமெனவும் ஆகையால் வெளியிலிருந்தபடியே பல வைக்கோல் கட்டுகளைக் கொண்டுவந்து அவ்வீட்டில் கெரோசினைப் பில் ஊற்றி நெருப்பு வைக்க வீடு பற்றிக் கொண்டு சுமார் அரை மணி நேரத்தில் பஸ்மீகரப்பட்டு விட்டது. அப்பால் பிரேதத்தை எடுத்து வந்த கோபாலன், ராமசாமி, சொள்ளமுத்து ஆண்டி ஷண்முகம் ஆகிய ஐவரையும் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுவந்து அடைத்திருப்பதாயும் அவர்களை வெளியில்

இழுத்துக் கொண்டு வந்து சிலர் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டு மென்றும் சிலர் முள்ளுப் பீப்பாயில் போட்டு உருட்ட வேண்டு மென்றும் சிலர், ஒவ்வொரு மயிர்க்காலுக்கும் ஊசி இறக்க வேண்டு மென்றும் சிலர் இரும்பைப் பழுக்கக் காய்ச்சி பிரதேசத்தை எடுத்துவந்த கைகளில் சூடு போடவேண்டும் என்றும் அவரவர்களுக் குத்தோன்றிய விதமாய்ப் பேசிக்கொண்டு ஒவென்று கூச்சல்போட்டுக் கொண்டு போலீஸ் ஸ்டேஷன் சென்றார்கள். அங்கு போலீசார் எவரும் இல்லை. அவர்களைத் தடுப்பவர்களும் யாருமில்லை. போலீஸ் இன்ஸ்பெக்டரவர்கள் எழுந்து வந்து என்ன காரியமாய் வந்தீர்க ளென்று மரியாதையாய்க் கேட்டார். கோபாலன் முதலிய ஐவர் களைத் தங்களிடம் ஒப்பிவித்து விட வேண்டு மென்றும். தங்கள் இஷ்டப் பிரகாரம் அவர்களைத் தண்டித்தாலொழிய தங்கள் மனக் கொதிப்படங்காதெனவும் தெரிவித்தனர். நான்கு மணி நேரங்களு க்கு முன்னால் டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள் கைதிகளை பாளையங் கோட்டை ஜெயிலுக்கு அனுப்பி விட்டதாகவும் போலீஸ் ஸ்டேஷ னில் கைதிகள் யாருமில்லை யென்றும் தமது வார்த்தையை நம்பா விட்டால் அவர்களில் யார் யாருக்குப் போய்ப் பார்க்க இஷ்டமோ அவர்களையெல்லாம் போலீஸ் ஸ்டேஷன் உள்ளே போய்ப் பார்த்து திருப்தி செய்து கொள்வதில் தனக்கு எவ்வித ஆட்சேபனையில்லை யென்றும் சாத்வீகமாய்த் தெரிவித்தார். அவர்களில் முக்யஸ்தர் போய் ஸ்டேஷன் முழுவதும் சோதித்துப் பார்த்து விட்டு இன்ஸ் பெக்டர் தெரிவித்தது உண்மைதானென்று சொன்னவுடனே அமை தியாய்ப் போய் விட்டார்கள். வேட்டை நாய்கள் மான் கூட்டத்தைக் கண்டால் எவ்வாறு துரத்துமோ, அவ்வாறு கும்பலைக் கண்ட வுடனே துரத்துவது பெரும்பான்மையான போலீசாருடைய செய்கையாதலால் அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டருடைய நடத்தை இதை வாசிக்கும் பெரும்பாலோருக்கு ஆச்சரியத்தை விளைவித் திருக்கக்கூடும். அவ்வாறு செய்ததும் இன்ஸ்பெக்டரவர்களுடைய சொந்த அபிப்பிராயமுமன்று. டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள் போவதற்கு முன்னால் அந்த பிராந்தியத்திலேயே ஸ்ரீமான் ஸ்ரீனிவா சலு ராஜுகாரு என்றால் விரும்பாதவர்களே கிடையாது யென்றும் அவர் எவ்விதமான அக்கிரமும் செய்யாதவரென்றும் ஏழைகளுக்கு இரங்குபவரென்றும் சிறு குழந்தை போனால் கூட பக்ஷமாய்ப்பேசப் பட்டவரென்றும் அவருக்கு விரோதியே எவரும் இல்லை யென்றும்

பிரபல சொத்துக்காரரென்றும், சொல் சக்தியுள்ளவரென்றும் அப்பேர்ப்பட்டவருடைய பிரேதத்தை ஓர் வெள்ளையன் சோதனைகள் செய்வதற்காக எடுத்துவரச் செய்தானென்று கேள்விப்பட்ட ஜனங்களுக்கு ஆத்திரம் பொங்குவது இயற்கையேயென்றும் அந்த ஆத்திரம் அடங்க அவர்கள் சட்ட விரோதமாய் ஏதும் செய்யத் தலைப்படுவார்களென்றும் அப்பேர்ப்பட்ட சமயங்களில் அவர்கள் ஆத்திரம் அடங்க சற்று விட்டுக் கொடுப்பதே நலமென்றும் இல்லாவிடில் பொது ஜனங்களிலும் சர்க்கார் உத்தியோகஸ்தரிலும் பலர் கொல்லப்படும்படியான கஷ்டமான நிலைமை ஏற்படுவதோடு பின்னும் அந்த கொதிப்படங்க பல மாதங்கள் பிடிக்குமென்றும் அப்போதும் பூராவாய் சாந்தப்படாதென்றும் ஆகையால் இன்னின்ன விதமாய் நடந்து கொள்வதுதான் நலமென்றும் அவ்வாறு நடந்து கொள்ளும்படி சொல்லி எச்சரித்துச் சென்றார். ஆகையால் தான் இவ்வளவு பயங்கரமான நிலைமை பிராண ஆபத்துக்களில்லாமலும் வெள்ளைவீடு எறித்தது நீங்கலாக வேறு சட்ட விரோதமான காரியம் ஏதும் நடை பெறாமலும் அத்துடன் சாந்தியடைந்தது.

நிற்க, டெப்டிமாஜிஸ்டிரேட்டவர்கள் எவ்வளவு சாமர்த்தியமாய் டாக்டர் தாம்ஸனைப் பல கேள்விகள் கேட்டுப் பார்த்தும் அவர் பூலோகத்திலுள்ள கோடிக் கணக்கான ஜனங்களின் நன்மையை நாடி தான் அநேக ஆயிரம் ரூபாய் செலவழித்து ஆராய்ச்சிசாலை அங்கு ஏற்படுத்தி ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலுராஜா இறந்த பின் அப்பரிட்சை நடத்துவதற்காகவே அங்கு வந்து தமது அரிய நேரத்தை வியர்த்தப்படுத்திக் கொண்டிருந்ததாகவும் தனது ஆராய்ச்சி நிறைவேறியிருந்தால் தான் செலவழித்த பொருள்களைப்பற்றியும் வீண் காலப் போக்கைப்பற்றியும் வருந்தமாட்டாரென்றும் அவ்வளவு செய்தும் பிரேதத்தை எவருக்கும் தெரியாமலும் அக்குடும்பத்தார் அனுமதியில்லாமலும் எடுத்து வந்தது சட்ட விரோதமான செய்கையென அறிந்தும் அதனால் ஏற்படக்கூடிய சிறைவாசம் முதலியவைகளைப் பொருட்படுத்தாது வந்ததாயும் தனது மனோபீஷ்டம் நிறைவேறியதுபோல் தோன்றி கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற் போய்விட்டதே என்றும் வருந்திக்கொண்டிருந்ததாலும் அவர் சொன்னது உண்மையாயிருக்கக் கூடுமெனவும் அவர் மனதில் தோன்றிற்று. துரையின் ஆராய்ச்சிசாலை மேஜையின் மேல்

வைத்த பிரேதம் எவ்வாறு மாயமாய்ப் போயிருக்கக்கூடும் என்றும் கோபுவை விசாரித்தால் ஏதாவது துப்புத்துலங்கக் கூடுமெனவும் கோவிந்தன் சொன்னபடி விசாரித்ததில் துப்புத்துலங்கியதுபோல் துலங்கி முன்னையைவிட அதிகமான சந்தேகத்தில் கொண்டுபோய் விட்டுவிட்டதேயெனவும் கோவிந்தன் சொன்ன பிரகாரமே இனி ஸ்ரீனிவாசலு ராஜுவின் பிரேதம் அகப்படுவது கஷ்டமெனவும் தனக்குள் தீர்மானித்துக் கொண்டு தன் இதர வேலைகளில் கவனம் செலுத்த ஆரம்பித்தார். ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜு அவர்கள் அறையில் வைக்கப்பட்டிருந்த கணக்குப் புஸ்தகங்களை டெப்டி மாஜிஸ்டிரேட்கட்டி சீல்வைத்து பந்தோபஸ்தாய் வைத்திருப்பதாகச் சொன்னாரல்லவா? சென்னையிலிருந்து கணக்குகளைப் பரிசோதிக்கும் நிபுணர் ஒருவரை வரவழைத்து அவைகளைச் சோதிக்கச் செய்ததில் பல பொய்க்கணக்குகள் எழுதப்பட்டு மோசம்செய்திருப்பதாகத் தெரிந்தது. அவைகளைப்பற்றி காந்திமதியா பிள்ளையைக் கேட்டதற்கு வரவு வந்த தொகைகளை யெல்லாம் அப்போதைக்கப்போது ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜு காரிடம் தான் கொடுப்பது வழக்கமென்றும், தான் செம்பாலடித்த காசுகூட வைத்துக்கொள்வதில்லை யென்றும் அவர்கள் சொன்னபடி கணக்குகள் எழுதுவதே தன் வேலை யென்றும் தனக்குத் தெரிந்த வரையில் மூன்று தலை முறைகளாய்த் தன் முன்னோர்களும் தானும் கணக்கு வேலை பார்த்து வருவதாகவும் அதற்கு முன் எத்தனை தலை முறைகளாகவோ தங்கள் முன்னோர்கள் அவ்விடத்திலேயே நம்பிக்கையாய் அதே வேலை செய்து வருவதாகவும் தெரிவித்தார். புஸ்தகத்தில் பல பக்கங்களில் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரு கையெழுத்து செய்திருப்பதாயும் ஸ்ரீனிவாசலு ராஜு அதிக புத்திகூர்மையுடையவரென்றும் சரியான கணக்குகளாயில்லாவிட்டால் அவர் எவ்வாறு ஆங்காங்கு கையொப்ப மிட்டிருக்கக்கூடுமென்றும் கேட்டார். ஆயினும் இன்னும் சில தினங்கள் வரையில் அவரை ரிமாண்டிலேயே வைத்திருக்கவேண்டுமென டெப்டிமாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

பதினேராவது அத்தியாயம்

கோவிந்தன் ஆராய்ச்சி

முயற்சி மெய்வருந்தப் பின் கூலி தரும்

திருவீரராஜ பட்டணத்திலுள்ள பெருமாள் கோவில் மண்டபத்தில் அதிகாலை 5 மணிக்கு ஒரு சாமியார் உடம்பு முற்றிலும் விபூதி பூசி பத்மாசனமிட்டு உட்கார்ந்து கண்மூடியவண்ணம் தியானம் செய்து கொண்டிருந்தார். காலையில் சுத்தஜலம் கொண்டுவரப் போன பெண்கள் யாவரும் அவரைக் கண்டதும், மஹா சாதுவாயிருக்கவேண்டுமென்றும், சிறந்த பக்திமானென்றும் பரம பாகவதசிரேஷ்டராயிருப்பாரென்றும் அவர்களுக்குள் பேசிக் கொண்டு ஒவ்வொருவராய் சுற்றி வந்து நமஸ்கரித்துச் சென்றனர். அவர்கள் வந்ததையாவது நமஸ்கரித்ததையாவது பாராமல் அவர் பரந்தாமனடியைச் சிந்தித்தவண்ணமிருக்கவே அவ்வூரெங்கும் பரமசாது வந்திருக்கும் விஷயம் காட்டுத் தீபோல் பரவிற்று. அவருக்கு யார் ஆகாரம் கொடுக்கிறார்கள் அல்லது அவரே சமைக்கப் போகிறாரா எனப் பலர் கவனித்து அவர் கண்திறந்ததும் அவர் ஆசிபெறுவதற்காகக் காத்திருந்தனர். மணி பதினொன்றாகியும் அவர் சமைப்பதற்கு யாதொரு முயற்சியும் செய்யாது தியானத்திலேயே இருந்ததால், "சிஷ்யன் அவருக்கு ஆகாரம் சமைத்துக்கொண்டு வருவான் போலிருக்கிறது" என சிலர் சொன்னார்கள்; "அவ்வாறிருக்காது" என வேறு சிலர் சொன்னார்கள். "அவர் சாப்பிடுவதேயில்லை போலிருக்கிறது" என்றார் ஒருவர்; "யாராவது சாப்பிடும்படி வேண்டிக் கொண்டால் அவர்கள் வேண்டுகோளுக்காகச் சாப்பிடுவார்" என்றார் மற்றொருவர்; இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே பல காய்கறிகள் பலகாரங்கள் சமைத்து எடுத்துக்கொண்டு அவ்வூர் தனவந்தர் தன் சம்சார சஹிதம் ஆகாரம் கொண்டுவந்தார். மற்றொருவர் வற்றக் காய்ச்சிய அரைப்படி பாலும் ஒரு சீப்பு மொந்தன் பழமும் எடுத்து வந்து வைத்துக் கொண்டு காத்திருந்தார். இன்னொருவர் மாம்சாதிகள் சமைத்து எடுத்துக் கொண்டு வந்து வைத்துக் கொண்டிருந்தார். இப்படிப் பலர் காத்துக் கொண்டிருக்கும் போது மணி பன்னிரெண்டடித்தது. அப்போது தான் சாமியார்

கண் திறந்து பார்த்தார். உடனே அத் தனவந்தரும் அவர் சம்சாரமும் வந்து நமஸ்கரித்தனர். சாமியார் அவர்களை ஆசிர்வதிக்கவில்லை; அவர்களிடம் பேசவில்லை; தாங்கள் கொண்டு வந்திருக்கும் உணவை அருந்த வேண்டுமென்று வெகுவாகக் கேட்டுக் கொண்டார்கள். வேண்டாமென்று கையால் ஜாடை செய்து விட்டார். அவர்கள் வருத்தத்துடன் எழுந்து நின்றனர். அவ்வாறே அங்கு வந்திருந்தவர்களெல்லாம் அவரவர்கள் அந்தஸ்தின் பிரகாரம் முன் பின்னாக நமஸ்கரித்து எழுந்தனர். எவரிடமும் சாமியார் பேசவுமில்லை; அவர்கள் கொண்டுவந்த ஆகாராதிகளைச் சாப்பிடவுமில்லை. கடைசியாக பாலும் பழமும் கொண்டு வந்து வைத்திருந்த பரம ஏழையாகிய ஒரு பெண், மற்றவர்கள் கொண்டு வந்த ஆகாரதிகள் பால் பழம் முதலியவற்றைச் சாப்பிட மறுத்துவிட்டதால் தான் கொண்டு வந்திருந்த பால் பழங்களை மறைவில் வைத்துவிட்டு வந்து நமஸ்காரம் செய்தாள். அவளை ஆசிர்வதித்து "பெண்ணே! உனது கஷ்ட காலமெல்லாம் நீங்கி உனக்கு நற்காலம் பிறந்துவிட்டது; என் பர்த்தா இருக்கிறாரோ இறந்து விட்டாரோ; ஒன்றும் தெரியவில்லையே, என மனக்கவலை கொண்டிருக்கிறாய்; வருந்தாதே! உன் பர்த்தா திடசரீரியாயும் தனவானாயும் இன்று வரப்போகிறார். பதிவிரதா சிரோண்மணியாகிய நீ செய்த மாபெருந்தவத்தால் உன் பர்த்தாவுக்கு லக்ஷ்மி கடாட்சம் உண்டாகி உன் பர்த்தா திரும்பிவருகிறார். இன்றுடன் உன் மனக்கவலை யொழிந்தது. சந்தோஷமாயிரு; நீ எனக்காகக் கொண்டுவந்திருக்கும் பால் பழங்களைக் கொண்டுவா; நான் உன் மனம் திருப்தியாகும்படி சாப்பிடுகிறேன்" என்றார். உடனே பக்திசிறத்தையுடன் அவள் கொண்டு வந்த பழங்களைச் சாமியார் வாங்கிச் சாப்பிட்டு பாலைக் கையில் வாங்கினார். அப்போது இரண்டு வில்வண்டிகள் அங்கு வந்தன. வண்டியிலிருந்த கனவான் அவ்வளவு ஜனங்கள் அங்கு கூடியிருக்கக் காரணமென்னவென்று கேட்டார். ஓர் சாமியார் புதிதாய் வந்திருப்பதாயும் அவர் பலர் கொண்டு வந்த ஆகாராதிகளை அருந்த மறுத்து ஓர் அனாதை ஏழைப் பெண் கொண்டுவந்த பால் பழங்களைச் சாப்பிடுவதாகச் சொல்லக் கேட்டதும் அவர் சாமியாருக்கு நமஸ்காரம் செய்து விட்டுப் போக உத்தேசித்து வந்து, பால் கொடுத்துக் கொண்டிருந்த ஏழைப் பெண்மணியைக் கண்டதும் "ஆ! லோகு!" என்றார். அப்பெண் திரும்பிப் பார்த்ததும் "நாதா" என்றதும் அவ்வளவு ஜனங்

கள் இருக்கிருர்களென்பதைக்கூடக் கவனியாது அவ்விருவரும் ஒரு வர் மேல் ஒருவர் பாய்ந்து ஆலிங்கனம் செய்து கொண்டு கண்ணீ ருதித்தனர். சாமியார் அவர்களையாவது மற்றவர்களையாவது கவனி யாமல் பால் சாப்பிட்டார். பிரிந்து கூடிய தம்பதிகளிருவரும் சாஷ் டாங்கமாய் சாமியார் காலில் விழுந்து நமஸ்கரித்தனர். அவர் அவர்க ளிருவருக்கும் ஆசீர்வாதம் செய்தனுப்பி விட்டு அப்படியே கையைத் தலைக்குத் தலையணையாக வைத்துக் கொண்டு படுத்து விட்டார்.

சாமியார் சொன்ன விஷயம் பிரத்தியக்ஷமாய்ப் பலித்ததைக் கண்ட ஜனங்கள் யாவரும் சாமியார் தூங்கி எழுந்த பின் தங்கள் குறைகளையும் அவரிடம் சொல்லி நிவர்த்திக்கலாமெனக் காத்திருந் தனர். இவ்விஷயம் ஊர்பூராவும் பரவவே ஆயிரக்கணக்கான ஜனங் கள் வந்து கூடி விட்டனர்.

மாலை 3 மணியானதும் சாமியார் எழுந்து உட்கார்ந்தார். வந் திருந்தவர்கள் ஒவ்வொருவராய் நமஸ்காரம் செய்தனர். சாமியார் வாய்திறக்கவில்லை. தங்கள் குறைகளைச் சொல்லிக் கொண்டனர். சாமியார் ஆகாசத்தைக் காட்டினார். சாமியாரைப் பார்த்துப் பேசித் தங்கள் குறைகளைத் தீர்த்துக் கொள்ளலாமென நினைத்து வந்த ஆயிரக் கணக்கான ஜனங்களில் தாசி செல்லத்தின் தாயார் தேவ தாசி லக்ஷ்மியும் ஒருவளாதலால் அவள் தன் புத்திரி செல்லம் என்ன ஆனுள், எங்கிருக்கிருள், உயிருடனிருக்கிருளா அல்லது இறந்தனளா, எப்போது வருவாள்? என்னும் பல கேள்விகளைக் கேட்டுப்போகலாமென்ற ஆசையுடன் அவளும் வந்து காத்திருந்து நமஸ்காரம் செய்தாள். அவள் நமஸ்காரம் செய்ததும் சாமியார் "தேவதாசி லக்ஷ்மி! உன் புத்திரியின் விஷயங்களை அறிய விரும்பி வந்தாய்; அவள் சுகமாக இருக்கிருள். ஆனுல் நீ அவளை உடனே பார்க்க மாட்டாய்; சென்னையிலிருந்து துப்பறிவதில் நிபுணனுகிய திருவல்லிக்கேணி கோவிந்தன் என்பவன் இவ்வூரில் வந்திருக்கிருன் நீ அவன் உதவியை நாடிச் சென்று அவனிடம் உண்மைகளை மறைக் காது சொன்னுல் அவன் உன் பெண்ணை மீட்டுக்கொடுப்பான் போ" என்றதும் அவள் சுற்றி வந்து நமஸ்கரித்துச் சென்றுள். இவ்வாறே இன்னும் வந்திருந்தவர்களில் ஒரு சிலருக்கு மட்டும் அவர்கள் நாடி வந்த விஷயங்களைச் சரிவரச் சொல்லி பரிகாரமும் சொல்லி விட்டு மீண்டும் மாலை 4 மணியானதும் பத்மாசனமிட்டு தியானத்தில் அமர்ந்து விட்டார். அவர் காலை முதல் மல ஜலங்கழிக்காததையும்

மத்யானம் சாப்பிட்ட பால் பழம் நீங்கலாக வேறு ஜலபானம் கூட செய்யாமல் தியானத்தில் அமர்ந்ததையும் கண்டவர்களில் பக்திமான்களாயிருப்பவர்கள் அவர் மீண்டும் இரவு கண் திறந்ததும் ஏதாவது உபதேசம் செய்வாரென்றும் பாலும் பழமும் கொடுத்தால் சாப்பிடுவாரென்றும் நினைத்து பாலும் பழமும் எடுத்துக் கொண்டு வந்து வைத்துக் கொண்டு காத்திருந்தனர். சந்தேகம் கொண்ட ஆசாமிகளில் ஒரு சிலர் ஒரு மனிதன் எத்தனை மணி நேரந்தான் மல ஜலங்கழிக்காமலிருக்கக்கூடும்? எப்படியாவது மல ஜலங்கழிக்கவாவது அல்லது இருட்டு வேளையில் எழுந்து போய் திருட்டுத் தனமாய் ஆகாரம் செய்யக்கூடுமென்றும் அதைக் கண்டறிவதென்றும் உட்கார்ந்திருந்தனர். இரவு 9 மணி வரையில் சுமார் 100 பேர் காத்திருந்தனர். 10 மணியானதும் சுமார் 15 பேர் காத்திருந்தனர். 11 மணியானதும் பால் பழம் வைத்துக் காத்துக் கொண்டிருந்தவர்களில் மூவரும் மற்ற இருவரும் ஆக 5 பேர் நீங்கலாக மற்றவர்களெல்லோரும் போய் விட்டனர். 12 மணி அடித்தது ஒன்றும் அடித்தது. அந்த ஐவரில் நால்வர் ஒவ்வொரு அரைக் கண் அயர்ந்தனர். ஒருவர் மட்டும் பால் பழம் வைத்துக் கொண்டு காத்திருந்தார். மணி மூன்றடித்ததும் அவரும் தன்னையறியாமல் உட்கார்ந்தபடியே உறங்கிவிட்டார். மூன்று மணிக்கு சாமியார் எழுந்ததும் பக்கத்திலிருந்த குளத்திலிருக்கும் தண்ணீரில் இறங்கினர். கடைசியாய்க் கண் அயர்ந்தவர் அவரை அறியாமலே கண் அயர்ந்ததாலும் ஜாக்ரதையாகவே இருந்தாராதலாலும் தண்ணீரில் ஆள் நடக்கும் சத்தம் கேட்டதும் கண் திறந்து பார்த்தார். அவர் கண் திறந்த வேளையும் சாமியார் தண்ணீரில் முழுகிய வேளையும் ஒன்றாயிருந்தது. தண்ணீரில் முழுகின சாமியார் எழுந்திருப்பாரென இரண்டொரு நிமிஷங்கள் பார்த்தார். சாமியார் எழுந்திருக்கவில்லை. ஒருக்கால் சாமியாருக்கு நீந்தத் தெரியாததால் தனக்கு மிஞ்சிய ஆழத்தில் இறங்கி எங்கு இறந்து விட்டாரோ எனப் பயந்து தானும் தண்ணீரில் இறங்கி சாமியார் மூழ்கிய இடத்தைப் போய்ப் பார்க்க அங்கு இடுப்பளவு தண்ணீர்தான் இருந்தது. அங்கிருந்து நான்கு பக்கங்களிலும் சுற்றிலும் கவனமாய்ப் பார்த்தார். சாமியாரை எங்கும் காணவில்லை; நாலா பக்கங்களிலும் பல கெஜ தூரம் தண்ணீரில் சுற்றிச் சுற்றித் திரிந்து பார்த்தார். எங்கும் இடுப்பளவு தண்ணீருக்கு அதிகமில்லை. ஆகவே சாமியார் அந்தரத்தி

யானமாய் மறைந்து விட்டார் என முடிவு செய்து கொண்டுபக்கத்தில் படுத்திருந்தவர்களை யெல்லாம் யெழுப்பி சாமியார் மாயமாய் மறைந்துபோன விஷயத்தைத் தெரிவித்தார். அவர்களெல்லோரும் இவ்வாறு சாமியாரின் அபார சக்தியையும் பிரபாவத்தைப்பற்றியும் பேசிக் கொண்டிருக்கும்போது அதிகாலையில் சாமியாரைத் தரிசிக்க வந்த நூற்றுக் கணக்கான ஜனங்கள் சாமியார் மறைந்து போன விஷயத்தைப்பற்றி கேட்டறிந்து எதிரில் வந்தவர்களுக் கெல்லாம் தெரிவித்தனர்.

நிற்க, தேவதாசி லக்ஷிமி திருவல்லிக்கேணி துப்பறியும் கோவிந்தன் என்பவர் மிகக்கியாதி பெற்றவராதலாலும் திருவீராஜ பட்டணம் அவ்வளவு பெரிய பட்டணமல்லவாதலாலும் யாரை யாவது கேட்டால் சுலபமாய் அவர் விலாசம் தெரிவிப்பார்களெனக் கருதி தனக்கு அறிமுக முடையவர்களை யெல்லாம் கேட்டுப் பார்த்தாள். அப்பேர்ப்பட்டவர் அவ்வூர் வந்திருப்பதாக எவருக்கும் தெரியாதென்றும் சொல்லினர். சாமியார் உண்மையைத்தான் சொல்லியிருப்பார். அவர் பொய் பேசக் காரணமில்லை. ஆகையால் சரிவர விசாரித்தால் கட்டாயமாய்க் கண்டு பிடிக்கலாமென நம்பி முதலில் முக்கியமான தெருக்களில் ஒவ்வோர் வீடாயும், அப்பால் ஒவ்வோர் சந்திலுள்ள ஒவ்வோர் வீடாயும் மறுநாள் மாலை வரைத்தேடி அலுத்து இனி வீட்டிக்குப்போய் அதற்கடுத்த நாள் தான் இன்னும் ஜாக்ரதையாகத் தேடவேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டு வரும்போது சமுத்திரக்கரை பக்கத்திலிருந்து ஒருவர் ஆழ்ந்த யோசனையுடன் நடந்துவரக் கண்டாள். அவர் முகம் தான் அதுவரை பாராத வேற்று முகமாயுமிருந்தது. ஒருக்கால் அவர் தான் திருவல்லிக்கேணி துப்பறியும் கோவிந்தனோ என சந்தேகித்து அவரைக் கேட்டாவது அறிந்துகொள்ளலாமென நினைத்து அவர் சமீபத்திற் சென்று "ஐயா! திருவல்லிக்கேணி துப்பறியும் கோவிந்தன் என்பவர் எங்கிருக்கிறாரென்று தங்களுக்குத் தெரியுமா? எனக் கேட்டாள். அவர் பதில் ஒன்றும் சொல்லாது அவளை ஏற இறங்கப்பார்த்து "நீ யார்" என்று கேட்டார். அடியாள் "தேவதாசி லக்ஷிமி" என்றாள். ஏன் அவரைத் தேடுகிறாய்? எனக் கேட்டார்; முந்திய நாள், தான் சாமியாரைத் தரிசித்தும் அவர் சொன்னதையும் விவரமாய்ச் சொன்னாள். சுந்தரராஜு அன்னத்தைத்தின்று சமயம் வாய்த்தபோது அவரைக் காட்டிகொடுத்து

விட்ட ஓர் குடும்பத்தாரிடம் எவ்வாறு உண்மை எதிர்ப்பதென்றும் அப்பேர்ப்பட்டவர்கள் முகத்தில் முழித்தால்கூட மூன்று தினங்களுக்குச் சாப்பாடு அகப்படாதென்றும் சொன்னார். அதற்குள் "ஐயோ! தாசிகளென்றாலே ஜனங்களுக்கு பொய் சொல்லப்பட்டவர்களென்றும் மோசம் செய்பவர்களென்றும் ஒருவித கெட்ட எண்ணம் விழுந்திருக்கிறது. அனேக தாசிகள் தங்கள் நடத்தையால் அப்பேர்ப்பட்ட கெட்ட பேர் சம்பாதித்துக் கொண்டது உண்மையாயினும் உண்மையான தேவதாசிகள் உலகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். இது வரையில் நான் தேவதாசித்தொழில் நடத்திவந்த போதிலும் நான் உண்மைக்கு மாறாக எப்போதும் நடந்ததில்லை; சமீபத்தில் கூட தனது மகள் செல்லம் இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவ் மயக்கத்திலகப்பட்டு சுந்தரராஜு ஐயாவுக்கு விரோதமாக சதி செய்ய ஆரம்பித்தது முதல் அவளுக்கு வேண்டிய புத்திமதிகள் சொல்லியும் கேளாததால், நானே ம-ா-ா-ஸ்ரீ ஸ்ரீனிவாசலுராஜு ஐயா அவர்களிடம் சென்று அன்றுடகம் எனது மகளுக்கும் இன்ஸ்பெக்டர் ஐயாவுக்கும் நடந்தேறி வந்த சம்பாஷணைகளை ஒன்று விடாமல் சொல்லி வந்தேன். அவர் செல்லத்தைக் கூப்பிட்டுப் போதுமான வரை எச்சரித்தும் அவர் ம-ா-ா-ஸ்ரீ ஸ்ரீனிவாசலுராஜு ஐயா அவர்கள் வார்த்தைக்கு மாறாகத்தான் நடக்கப் போகிறாளென்ற எண்ணம் என்மனதில் பட்டவுடனே அந்த மூதேவியின் முகத்தில் முழிக்கக் கூடாதென்று ஆலோசனை செய்து கொண்டு திருநெல்வேலிக்குப் போய் 10 நாள் இருந்துவர உத்தேசித்துச் சென்றேன். நான் சென்ற மறுதினமே செல்லம் காணமற்போன விஷயமும் பெரியராஜு ஐயா அவர்கள் தேகம் மாயமாய் போயிற்றென்ற சங்கதியும் கேள்விப்படவே நான் உடனே புறப்பட்டு இங்கு வந்து சேர்ந்தேன். என்னைப்பற்றி யாரை வேண்டுமானாலும் கேட்டுப்பாருங்கள். என் யோக்யதையையும் சத்திய நெறியையும் பற்றிச் சொல்வார்கள். ஐயா! தயவு செய்து தாங்கள் தானா துப்பறியும் ஐயா" என்று கேட்டாள். அவர் "ஆம்" என்றார்.

கோவிந்தன்:—நீ மற்ற தாசிகளைவிட சற்று யோக்யதை உடையவளாயிருக்கலாம். ஆனால் நீ சொல்லுகிறபடி அவ்வளவு தூரம் உன்னை நம்பக்கூடுமா என்பது தான் சந்தேகம்.

தேவதாசி லக்ஷிமி:—ஐயா! என்னைப் பற்றி ஆராய்ந்தறியாமல்

என்மேல் தாங்கள் அவ்வித கெட்ட அபிப்பிராயம் கொண்டது என் துர்பாக்கியமே! ஆயினும் தாங்கள் என்னிடம் எதைப்பற்றி கேட்டாலும் உண்மையான பதிலளிப்பேன் *சுப்பையா பேரில் ஆணையிட்டுச் சொல்லுகிறேன்.

கோவிந்தன்.—உனது உண்மையும் சத்தியமும் இன்னும் இரண்டு நிமிஷங்களில் தெரிந்து விடப்போகிறது. செல்லம் யார்? உன் புத்திரியா? அதாவது உன் வயற்றில் பிறந்தவளா?

தே. லக்ஷிமி:—எல்லோரிடமும் அவள் என் புத்திரிதானென நான் சொல்லி வந்தபோதிலும் உண்மையில் அவள் என் வயிற்றிற் பிறந்தவளல்ல. அவள் பிறந்த நாளே நான் வாங்கி வளர்த்தவள்.

கோவிந்தன்:—யாரிடம் வாங்கினாய்?

தே. லக்ஷிமி:—நான் சொல்வதில்லையென சுப்பையா மேல் ஆணையிட்டிருப்பதால் நான் சொல்ல மாட்டேன்.

கோவிந்தன்:—நீ சொன்னால் தான் என்னால் செல்லத்தைக் கண்டு பிடிக்க முடியும், இல்லா விட்டால் என்னால் முடியாது.

தே. லக்ஷிமி:—முன்னமேயே தங்களுக்கு நான் சத்தியம் தவறாதவளென்று சொல்லி விட்டேன். தாங்கள் கண்டு பிடித்தாலும் சரிதான்; கண்டு பிடிக்கா விட்டாலும் சரிதான். என் தலையை இரண்டாக வெட்டி விட்டாலும் சரிதான். நான் கொடுத்த சத்தியத்திற்கு மாறாக நடக்கவே மாட்டேன். ஆகையால் சொல்லவே முடியாது.

கோவிந்தன்:—சரி; அது சொல்லா விட்டால் போகிறது. இரட்டைக் குழந்தைகளில் நீ செல்லத்தை வாங்கிக் கொண்டாய்; இன்னொரு பெண் குழந்தையை யார் வாங்கிச் சென்றார்கள்.

தே. லக்ஷிமி:—அதுவும் சொல்வதில்லை யென்று சத்தியம் செய்து கொடுத்திருப்பதால் சொல்லமாட்டேன்; நேற்று சாமியார் தங்கள் ஒத்தாசை கோரும்படி சொல்லியிரா விட்டால் செல்லம் பிறப்பைப் பற்றி நான் பேசியே யிருக்கமாட்டேன்.

---

* திருச்செந்தூர் முருகக்கடவுளை சுப்ரமணியரென்றும் சுப்பையாவென்றும் திருநெல்வேலி ஜில்லா வாசிகள் சொல்வது வழக்கம்.

என்றாள். கோவிந்தன் "தாசி செல்லம் லக்ஷ்மியின் புத்திரி யல்லவென்றும் செல்லத்துடன் இன்னொரு பெண் இரட்டைக் குழந்தை இருந்ததாகவும் இதுவரையில் ஸ்திரப்படுத்திக் கொண்டேன். இனி நேரான முறையில் இவளைக் கேட்டால் சத்தியத்திற்கு மாறாக இவள் பேசமாட்டாள்; இனி இவளை ஏமாற்றியே உண்மையறிய வேண்டும்" எனத் தனக்குள் தீர்மானித்துக் கொண்டு முந்திய நாள் அவள் சந்தித்த சாமியாரைப் பற்றி வெகு உற்சாகமாய்ப் பேசிக் கொண்டிருந்து திடீரென்று,

கோவிந்தன்:—கும்பகோணம் சென்றிருந்த போது நீ எங்கு இறங்கி யிருந்தாய்?

தே. லக்ஷ்மி:—உப்புக்காரத் தெரு 28-ம் நெம்பரில்,

மீண்டும் சற்று நேரம் பொது விஷயங்களைப் பேசி விட்டு,

கோவிந்தன்:—நீ அங்கிருந்த போது அடிக்கடி போய் பேசிக் கொண்டிருந்தாயே! அவர்கள் பேரென்ன?

தே. லக்ஷ்மி:—சக்ரபாணி செட்டியார் வீட்டிற்குத்தான் அடிக்கடி போவது வழக்கம்.

கோவிந்தன்:—ஆம்; ஆம்; உண்மைதான். நீ போயிருந்த போது வெளி ஊரார் வந்திருந்தார்களே, அவர்கள் வீட்டுக்கும் அடிக்கடி போய் வந்தாயென்று கேள்விப்பட்டேனே. அவர்கள் எந்த ஊர்க்காரர்.

தே. லக்ஷ்மி:—எனக்குத் தெரியாது. அவர்கள் ஏதோ ஒரு மாதிரி பாஷை பேசினார்கள். அவர்கள் ஊர் சொன்னார்கள் எனக்கு இப்போது ஞாபகமில்லை.

கோவிந்தன்:—போகட்டும்; அதைப் பற்றி நமக்கென்ன. அவர்கள் தலையில் ஒரு மாதிரி சீப்பு சொருவி யிருந்தார்களல்லவா?

தே. லக்ஷ்மி:—ஆம்; அது தங்களுக்கு எப்படித் தெரியும்?

கோவிந்தன்:—எனக்குத் தெரியாமலா கேட்கிறேன். அவர்கள் சிங்கள ஜாதியார். சாதாரணமாய்த் தமிழர்களைப் போல் தான் பெண்கள் உடை உடுத்துவார்கள், தமிழும் நன்றாய்ப் பேசுவார்கள். அவர்களுக்குள் பேசும் போது மாத்திரம் சிங்கள பாஷையில் பேசுவார்கள். அவர்கள் தானே இன்னொரு பெண் குழந்தையை எடுத்துச் சென்றார்கள்.

என்றதும் தேவதாசி லக்ஷிமி பதில் ஒன்றும் சொல்லா விட்டாலும் அவள் முகத்தில் ஏற்பட்ட ஆச்சரியக் குறிகளால் தான் ஊகித்துக் கேட்டது உண்மையென கோவிந்தன் அறிந்து கொண்டார்.

தே. லக்ஷிமி:—அவர்கள் இன்னொரு பெண் குழந்தையை எடுத்துப் போனதாக நான் சொல்ல வில்லையே, எனக்குத் தெரியாதே.

என்றாள். உனக்குத் தெரியா விட்டால் பரவாயில்லை. எனக்குத் தெரியும். நான் உன்னை சத்தியம் தவறி சொல்லச் சொல்லவில்லை. நீ பயப்பட வேண்டாம் என்றார்.

தே. லக்ஷிமி:—ஐயா! தாங்கள் வேறு எதைப் பற்றி வேண்டுமானாலும் கேளுங்கள், நான் சொல்லுகிறேன். தயவு செய்து எப்படியாவது செல்லத்தைக் கண்டு பிடித்து என்னிடம் சேருங்கள். உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யக் கூடாதென்றும், ம-௱-ஸ்ரீ பெரிய எசமான் சொன்னால் சொன்னபடி செய்வாரென்று நான் எவ்வளவு சொல்லியும் என் வார்த்தைகளைக் கேளாது போனவளாயினும் பிறந்தது முதல் என் குழந்தையாகப் பாவித்து நான் வளர்த்த தோஷத்திற்காக அவள் பேரில் அளவு கடந்த பிரியம் பாதிக்கிறது. அதிலும் அவள் காணாமற் போனது முதல் அவளை இனி உயிருடன் பார்ப்பேனோ என்ற திகிலும் ஏற்பட்டு விட்டது. ஏனெனில் அவளை எங்காவது இரகசிய அறையில் பெரிய எசமான் அடைத்து வைத்திருந்தால் அவர் திடீரென்று இறந்து போனதால் அவளுக்கு அன்னாகாராதிகள் கொடாது ஈஞ்சு பட்டினியாய் வருந்துகிறாளோ என்ற எண்ணம் உதிக்கும்போதே என் உடல் நடுங்குகிறது. ஐயோ! செல்லமே. நான் உன்னை வளர்த்த அருமைக்கும், நீ வாழ்ந்த வாழ்விற்கும் இந்தப் பாழும் பாப்பான் காமாக்ஷிராவ் உனக்கு எமனாய் ஏற்பட்டானே!

என்று சொல்லி ஓவென்று ஒப்பாரி சொல்லி அழ ஆரம்பித்தாள்.

கோவிந்தன்:—லக்ஷிமி! அழாதே, நான் சொல்வதைக் கவனமாய்க் கேள். ம-௱-ஸ்ரீ ஸ்ரீனிவாசலு ராஜு இறக்கு முன்னமே செல்லம் அங்கிருந்து எவ்வாறோ தப்பி ஓடி விட்டாளென்ற சமாசாரம் எனக்குத் திட்டமாய்த் தெரியும். ஆகையால் அவள் பசியால் வருந்தக் காரணமில்லையென்பதை நீ நிச்சயமாய் நம்பு. உனக்கு என் வார்த்தையில் அவ்வளவு நம்பிக்கை இல்லாவிடினும் நேற்று சாமியார்

"அவள் சுகமாக இருக்கிறாள்" என்று சொன்னதாக இப்போது சற்று நேரத்திற்கு முன்புதானே நீ சொன்னாய். அப்படியிருக்க அவர் வார்த்தையைக் கூட நீ ஏன் சந்தேகிக்க வேண்டும்? அவர் மஹா சாதுவென்று நீ தானே சொல்லுகிறாய். ஆகையால் வருத்தத்தை விட்டு சந்தோஷமாயிரு.

தே. லக்ஷிமி:—ஐயா! தாங்கள் கட்டாயமாய் என் செல்லத்தைக் கண்டு பிடித்து நல்ல நிலைமையில் கொண்டு வந்து விடுவதாக வாக்களித்தால் அதுவே எனக்குப் போதுமானது. நான் நிம்மதியாயிருப்பேன்.

கோவிந்தன்:—ம-ா-ஸ்ரீ ஸ்ரீனிவாசலு ராஜுகாரு எச்சரித்த விஷயமும் அவர் மனோ பாவமும் என்னை விட உனக்கு அதிக நன்றாய்த் தெரியும், அவர் அவள் தேகத்தை எவ்வித ஹிம்சைக்குட் படுத்தியிரா விட்டாலும் அவளைத் திடுக்கிடும்படியும், திகிலடையும் படியும் செய்தார் என்ற விவரம் எனக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால் என்னால் கூடிய வரையில் பிரயாசைப்பட்டு அவளை உயிருடன் திடசரீரியாய் உன்னிடம் சேர்ப்பதாக நான் வாக்களிக்கிறேன். அவ்வளவு தான் நான் செய்யக்கூடியது. செல்லத்தின் வயதென்ன?

தே. லக்ஷிமி:—அவளுக்கு மாசிமீ 17-ம்வ தான் 20 வயது முடிந்து 21 பிறந்தது.

என்றாள். செல்லம் பிறந்த அன்றே லக்ஷிமி அவளை வாங்கி வந்ததாய்ச் சொன்னதால் 20 வருஷங்களுக்கு முன் அதே தேதியில் தான் கும்பகோணத்தில் குழந்தையை வாங்கி வந்தாளென்றும் ஆகையால் அவள் பிறந்த தேதி அவருக்கு திட்டமாய்த் தெரிந்து விட்டது. அப்பால் கோவிந்தன் அவளிடம் சற்று நேரம் பேசி விட்டு விடை பெற்றுச்சென்றார்.

அன்றே அங்கிருந்து புறப்பட்டு கும்பகோணம் வந்து உப்புக்காரத் தெரு 28-ம் நம்பர் வீட்டின் அக்கம் பக்க வீடுகளில் போய் சக்கரபாணி செட்டியாரைப் பற்றி விசாரிக்க, அவர் இறந்து விட்டதாகவும் அவருடைய புத்திரி இருப்பதாகவும் விசாரித்தறிந்து கொண்டதோடு 20 வருஷங்களுக்குமுன்னால் மஹாமக காலததில் சக்ரபாணி செட்டியாரும் அவர் சம்சாரமும் அவர்கள் புத்திரியும் எங்கிருந்தோ வந்து அங்கு அந்த வீட்டை வாடகைக்கு அமர்த்திக் கொண்டதாயும் அந்தப் புத்திரிக்கு கெர்ப்ப ஸ்திரீகளுக்கிருப்பதை

விட வயிறு அதிகமாய் கனத்து இருந்ததாயும் அவளுக்கு மஹோதரமென்று பெற்ளோர் சொல்லி வந்ததாயும் அவர்களுடன் ரெயிலிலிருந்து வந்து அதே தெருவில் மஹாமக காலம் வரையிருந்த 2 குடும்பத்தார் தான் அவர்கள் வீட்டுக்கு வந்து போவார்களென்றும், மற்றவர்களை அவர்கள் சேர்க்க வில்லை யென்றும், ஒரு நாள் இரவு அப்பெண்ணுக்கு அதிக ஆபத்தாயிருந்ததாகவும், டாக்டர் நர்ஸ் முதலியவர்கள் வந்து பார்த்ததாகவும் அன்றிரவு ஏதோ குழந்தை அழும் சத்தம் அங்கு கேட்டதாகவும் பொழுது விடிந்த பின் மாமூலுக்கு விரோதமாய் ஒன்றுமில்லை யென்றும், மஹாமகத்துக்காக அங்கு வந்து போன அவ்விரு குடும்பத்தாரும் அன்றைய அதிகாலை ரெயிலிலேயே எங்கோ சென்று விட்டார்களென்றும் அப்பெண்ணின் பேர் நாகம்மாளென்றும் அப்பால் 2 மாதம் பொறுத்து அப்பெண்ணுக்கு மஹோதரம் முற்றும் குணமாகி விட்ட தாகவும் கோவிந்தன் அக்கம் பக்கத்தில் விசாரித்து கொண்டு அவ்வீட்டிற்குப் போய் நாகம்மாள் இருக்கிருளா யென்று கேட்டார். வந்தவர் யாரென்றும், எங்கிருந்து வந்தாரென்றும், என்ன ஜோலியாய் வந்தாரென்றும் கதவைத் திறக்காமலே கதவின் பக்கத்தில் நின்று கேட்டாள். தான் சொல்ல வந்த விஷயம் வேறு எவரிடமும் சொல்லக் கூடாத விஷயமென்றும், கடிதத்தில் கூட எழுதக் கூடாத விஷயமென்றும் இரகசியமாய்த் தெரிவிக்கும்படி தன்னை அனுப்பினார்களென்றும் அதற்காகவே அவ்வளவு தூரமாகிய திருவீர ராஜ பட்டணத்திலிருந்து இவ்வளவு தூரம் அனுப்பியதாயும் வீட்டிலுள்ளவர்களெல்லாம் வெளிச்சென்ற பின், தான் வந்ததாயும் தெரிவித்தார். தன் பேர் தான் நாகம்மாள் என்று சொல்லி கதவைத் திறந்து அவரை உள்ளே அழைத்துச் சென்று என்ன விசேஷமென்று கேட்டாள். தங்களிடம் பெற்றுப் போன தங்கள் புத்திரியாகிய செல்லம்மாளை 10 தினங்களாகக் காணேமென்றும், அவளுடன் பிறந்த இரட்டைப் பெண், செல்லம்மாள் காணமற் போன அன்று திருவீரராஜபட்டணம் வந்திருந்ததாகவும், ஒருக்கால் தன் சகோதரியுடன் சென்று விட்டாளோ என அறிவதற்காகவும் அவர்கள் விலாசம் முதலியன அறிந்து வரும்படி தேவதாசி லக்ஷிமி அனுப்பியதாகவும் சொன்னார், அப்பிள்ளைகள் சம்மந்தமாய் மீண்டும் எப்போதும் எவ்விதமான பேச்சும் பேசுவதில்லை யென்றும் தன்னைத் தேடி வருவதில்லை யென்றும் சத்தியம் செய்து சென்ற லக்ஷிமி இதுவரை அவ்வாறிருந்து இப்போது

கொடுத்த சத்தியத்தை மறந்து தன்னிடம் அனுப்பலாமா எனக் கேட்டாள்.

தேவதாசி லக்ஷ்மி சத்தியத்துக்கு மாறாக நடக்கக் கூடாதென்று தன்னால் கூடிய பிரயத்தனங்களெல்லாம் செய்து பார்த்தும் துப்பறியும் நிபுணர்களை பெருந் தொகைகள் கொடுத்து நியமித்துத் தேடியும் துப்புத் துலங்காததால் செல்லத்தின் பேரிலிருக்கும் பிரியத்தால் 10 நாட்களாக அன்ன ஆகாராதிகளே யில்லாமல் அழுது கொண்டிருக்கிறாள். அதன்பேரில் தங்களைக் கேட்டு தாங்கள் தயவு வைத்துச் சொன்னால் இன்னும் முயற்சி செய்து பார்ப்பதாயும் இல்லாவிடில் உடனே பிராணத்யாகம் செய்து கொள்வதாயும் தீர்மானித்து என்னை அனுப்பினாள். அவள் தற்கொலை செய்து கொள்வது நல்லதல்ல என உங்கள் மனதில் பட்டால் சொல்லுங்கள் இல்லா விட்டால் அவள் விதியின்படி நடக்கட்டும். நானென்ன செய்வது? என்ன சொல்லுகிறீர்கள்? தயவு செய்து உண்டு இல்லையென்று உடனே சொல்லுங்கள். நான் இப்போது காலை 8½ மணிக்குப் புறப்படும் வண்டியில் போய் சொன்னால் தான் அவள் தற்கொலை செய்து கொள்ள மாட்டாள். நான் அந்த வண்டிக்குப் போகா விட்டால் கட்டாயம் தற்கொலை செய்து கொள்வாள். அப்பால் தாங்கள் சொல்வதும் ஒன்றுதான் சொல்லாததும் ஒன்றுதான். வெளியில் போனவர்கள் எவராவது வந்து விட்டாலும் அதனாலும் உங்களுக்கு அனாவசியமான கஷ்டம் ஏற்படக்கூடும்.

நாகம்மாள்:—எனக்கு அவர்கள் விலாசம் தெரியாது. ஓர் கடிதத்தில் எழுதிக் கொடுத்தார்கள்: அதை எங்கோ போட்டேன் பெண் பாவம் பொல்லாது. முன் ஜென்மத்தில் என்ன பாவம் செய்தேனோ இந்த ஜென்மத்தில் இவ்வளவு விசனங்களை அனுபவிக்கிறேன். இனி அவள் தற்கொலை பாவமும் வந்து என்னைச் சுற்றி எனது அடுத்த ஜென்மத்தையும் பாழாக்க வேண்டுமா ?

கோவிந்தன்:—தற்கொலை செய்து கொண்டவர்கள் உயிர் இங்கேயே சுற்றிப் பரிதவித்துக் கொண்டிருக்குமென்றும் இது கொடிய பாவமென்றும் பெரியோர் சொல்லுகிறார்கள். ஆகையால் சற்று கஷ்டப்பட்டுத் தேடிப்பார்த்து ஜல்தியாய்க் கொடுத்தால் நல்லது.

என்றார். உடனே அவள் உள்ளே போய் பல பெட்டிகளைத் தேடி ஒரு கடிதத்தில் "ஜாக்ரிய எஸ்டேட், ஊர் எல்கைக்கு தெற்கு

சாவகச் சேரி போஸ்ட், கொடிகாமம், சிலோன்" என்று எழுதியிருப்பதைக் கொண்டு வந்து காட்டினாள். அவர் அதைப்போல் தன் புஸ்தகத்தில் எழுதிக் கொண்டு "லக்ஷ்மி பிராணனைக் காப்பாற்றிய புண்ணியம் உனக்குக்கட்டாயம்சேரும்" என்று சொல்லிவிட்டு வெகு அவசரமாக ரெயிலுக்குப் புறப்பட்டார். தாகசாந்தி செய்து போகும் படி நாகம்மாள் சொன்னதற்கு ரெயிலுக்கு நேரமாய் விட்டதென்றும் தஞ்சாவூர் ஸ்டேஷனில் தாகசாந்தி செய்து கொள்வதாகவும் சொல்லிப் போய் விட்டார். உடனே கொளும்புகொடி காமம் சாவகச்சேரி ஊர் எல்லைக்கு தெற்கு சென்று 20 வருஷங்களுக்கு முன் நடந்த மஹாமக காலத்தில் அங்கிருந்து கும்பகோணம் சென்றவர்கள் யாரென்று விசாரிக்க "கோமதி" என்னும் தாசி சென்றதாகவும், வரும்போது அதிக லக்ஷணமுடைய ஓர் பெண்ணைப் பெற்றுக் கொண்டு வந்ததாகவும் அக்குழந்தைக்குச் செல்வம் எனப் பேர் கொடுத்து வளர்த்து வந்ததாகவும், பெண் 14-ம் வயதில் புத்தியறிந்ததாகவும், அவளை ஜாக்கிரிய்ய எஸ்டேட் சொந்தக்காரரான ஜாக்கிரிய்ய ரெட்டியார் அமோக பொருட் செலவழித்து புது சோபனம் செய்து அவளுக்கு மாதம் ஆயிரம் ரூபா கொடுத்திருந்ததாயும் ஒரு வருஷத்துக்கு முன் வரையில் அவர்களிருவரும் மனவேற்றுமையில்லாமல் ஒற்றுமையாயிருந்ததாயும், ஒருவருஷத்திற்கு முன் ஸ்ரீதரன் அண்ட் கம்பெனி என்ற நூதன கம்பெனி அங்கு வியாபாரம் ஆரம்பித்ததாகவும், ஜாக்கிரிய்ய கம்பெனியில் மானேஜராயிருந்து அதிக அனுபோகமுடைய லாஹபேஸ் என்பவரை ஸ்ரீதரன் கம்பெனியார் இரட்டிப்பு சம்பளத்தில் அமர்த்தி அமோக வியாபாரம் செய்துவந்ததில் ஸ்ரீதரன் அண்ட் கம்பெனிக்கும் ஜாக்கிரிய்ய கம்பெனிக்கும் வியாபார போட்டி அதிகமாய் ஏற்பட்டதாகவும் அந்த வியாபாரபோட்டியில் ஸ்ரீதரனுக்கும் ஜாக்கிரிய்ய ரெட்டியாருக்கும் விரோதம் ஏற்பட்டு வரும்போது ஜாக்கிரிய்ய ரெட்டியாரும் செல்வமும் நந்தவனத்தில் உலாவப் போனதாகவும், எப்போதும் வேலைகளை முடித்துக் கொண்டு 7 மணிக்குமேல் உலாவவரும் ஸ்ரீதரர் எவரிடமும் பேசாது போவது வழக்கமென்றும், எவரிடமும் பேசாத ஸ்ரீதரனைத் தனது சாமர்த்தியத்தால் பேசவைத்து விடவேண்டுமென்று செல்வம் பல நாட்களாக நினைத்திருந்ததாகவும், அன்று ஜாக்கிரிய்ய ரெட்டியார் தனது நண்பர்களுடன் ஏதோ ஒரு முக்கிய விஷயத்தைப்பற்றித் தர்க்கித்துக் கொண்டிருக்கும் சமையம் அந்தப்பக்கம் இந்தப்பக்கம்

தலைநிமிர்ந்து பாராது பூமியைப்பார்த்தபடி நடந்துபோகும் ஸ்ரீதரன் பக்கத்து ரோட்டில் போவதைப் பார்த்ததும், தான் சாமர்த்தியத்தால் அவரைப் பேசவைப்பதற்கு அதுவே ஏற்ற சமயமென நினைத்து செல்வம் சட்டென்று குறுக்கு வழிசென்று ஸ்ரீதரருக்கு எதிராகப் போனதாகவும், அவர் தனித்து வரும்செல்வத்தை முதலில் கடைக் கண்ணால் பார்த்ததாகவும், அக்கம் பக்கத்தைச் சுற்றிப் பார்த்து யாரும் இல்லாதது கண்டதும் "ஹா செல்லம்! என் தகப்பனார் வர்களுக்குக் கொடுத்த வாக்கைத் தட்டி இங்கு ஏன் வந்தாய்? எப்போது வந்தாய்? நீ இங்கு வந்ததை யாராவது பார்த்தார்களா? உன்னைப்பார்த்தது எனக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுக்கிறது; இங்கு நின்று பேசுவது அபாயம்; வாவீட்டுக்குப்போவோம்'' என்றதும் வேறு ஒன்றும் பேசாது சற்று தூரத்தில் நின்ற மோட்டார் காருக்கு அவளை அழைத்துப்போய் தானே தனது மோட்டார் காரை ஓட்டி வருவது வழக்கமாதலால் இரண்டாம் பேருக்குத்தெரியாமல் அழைத்துப் போனதாகக் கருதி அழைத்துப் போனரென்றும் தான் எதிர்பாராதவிதமாய் ஸ்ரீதரன் தன்னிடம் அதிக பிரியமுடையவர்போல் பேசியதல்லாமல் தான் அவருக்கு அறிமுகமான பெண்ணெனக் கருதி பேசியது அவளுக்கு அதிக ஆச்சரியத்தை விளைத்தது. அத்துடன் தான் அவரைப் பல வாரங்களுக்கு முன் பார்த்தது முதல் தனக்கும் அவரிடம் ஓர் வித அபிமான முண்டாயிருந்ததாலும், அவர் வார்த்தையைக் கேட்கவும் அவரிடம் அதிக அன்பும் ஆசையும் ஏற்பட்டதாகவும் அறிந்தாளென்றும் அத்துடன் இயற்கையில் தாசிகளுக்கிருக்கும் குறும்புத்தனத்தால் ஜாக்கிரிய்ய ரெட்டியார் கோபிப்பாரே என்றஎண்ணத்தைக்கூட உதாசினம்செய்து ஸ்ரீதரருடன் போய் தன்னை யாரென நினைத்து அவ்வாறு பேசினரென்றும் கேட்டறியவும் தீர்மானித்துச் சென்றதாகவும் ஜாக்கிரிய்ய ரெட்டியார் தனது நண்பர்களிடம் பேசிமுடிந்ததும், செல்வத்தைத் தேடியதாகவும் அவள் காணமற்போகவே வீட்டிற்குப் போய்விட்டளோ என அங்கு போய் பார்க்க, அங்கு இல்லாது போக, அப்பால் அறிமுக முள்ளவர்களிட மெல்லாம் கேட்டுவிட்டு பின் எங்கும் தேடியதில் ஒரு செடிக்குப் பின்னாலிருக்கும் பென்சியில் படுத்திருந்த ஒருவன் நடந்த விஷயங்களை விவரமாய்ச் சொன்னதாயும் உடனே ஜாக்கிரிய்ய ரெட்டியார் தனது வியாபார வைரி தனது அபிமான பத்தினியையும் பலாத்காரமாய்ப் பிடித்து

சிறையிட்டிருப்பதாகப் போலீசாருக்கு எழுத்து மூலமாய்த் தெரிவித்து பல போலீசாருடனும் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் சஹிதம் வாரண்ட் பெற்று ஸ்ரீதரன் வீட்டிற்கு வந்ததாயும், அங்கு செல்வம், ஜாக்கிரிய்ய ரெட்டியார் எதிர் பார்த்தபடி சிறைப்படுத்தப்படாமல் ஸ்ரீதரனுடன் உல்லாசமாய்ப் பேசிக் கொண்டிருந்ததாயும் அவர்களெல்லோரும் வந்ததைக் கண்டும் அவள் மனங்கலங்காமலும் திகிலடையாமலும் பயப்படாமலும் இருந்ததாகவும், ஸ்ரீதரன் சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கு வந்தனம் கூறி என்ன காரியமாய் வந்தீர்களென்று கேட்க, அவர் வாரண்ட்டைக் காட்டியதாகவும், செல்வம் சிறைவைக்கப்பட்டிருக்கிறளா சுயேச்சையாயிருக்கிறளா யென்பதை இப்போதே நீங்களெல்லோரும் பஹிரங்கமாய்ப் பார்க்கிறீர்கள்; இன்னும் ஏதாவது சந்தேகமிருப்பின் செல்வத்தைக் கேட்டால் சொல்லுவாள் என்று ஸ்ரீதரன் சொன்னதாகவும் இன்ஸ்பெக்டரவர்களுக்கு இன்னது செய்வதென்றுத்தெரியாமல் திகைத்து நின்றதாகவும், அச்சமயத்தில் ஜாக்கிரிய்ய ரெட்டியார் செல்வத்திடம் வந்து "செல்வம்! ஏன் இங்கு வந்தாய்? உன்னை மயக்கி பலாத்காரமாய் அழைத்துக்கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள் போலிருக்கிறது; எழுந்துவா; நமது வீட்டுக்குப் போவோம்" என அழைத்ததாகவும், அதற்கவள் "நான் இங்கிருப்பதாகவே தீர்மானித்து விட்டேன்; எனக்குத் தங்களுடன் வர இஷ்டமில்லை; ஆகையால் நீங்கள் போகலாம்" எனக் கண்டிப்பாய்ச் சொன்னதாகவும் ரெட்டியார் செல்வத்தின் கையைப் பிடிக்கப் போக அவள் உதறித்தள்ளினதாகவும் அதன்பேரில் அவருக்கு கோபம் உண்டாகி அவளுக்குத் திரும்பிவர இஷ்டமில்லாவிட்டால் தான் வாங்கிக்கொடுத்த நகைகள் விலையுயர்ந்த புடவைகள் முதலியவற்றைத் திருப்பிக் கொடுக்கும்படி ஜாக்ரிய்ய ரெட்டியார் கோபத்துடன் கேட்டதாகவும், அதற்கவள் சிரித்துக் கொண்டு தாசிகளுக்குக் கொடுத்துவிட்ட நகைகள் புடவைகள் முதலியவற்றைத் திருப்பிப் பெற எவ்வித சட்டமுமில்லை யென்பதை போலீஸ் இன்ஸ்பெக்டரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும்படியும், ஆயினும் தான் அன்று ஆஸ்ரயித்த ஸ்ரீதரன் என்னும் கனவான் ஜாக்கிரிய்ய ரெட்டியாருடைய ஒரு பைசா பெறக்கூடிய எவ்வித வஸ்துவும் அவள் உடம்பிலிருக்கக் கூடாதென்று சொன்னதால் அவர் செய்து கொடுத்த நகைகள் பூராவும், ஏன் அன்று அணிந்து வந்திருந்த

அவர் கொடுத்த புடவையும் ரவிக்கையும் கூட, பக்கத்தில் வைத்திருக்கும் பெட்டியில் ஜாப்தா சஹிதம் வைத்திருப்பதாயும், தன் வீட்டிலுள்ள புடவைகள் ரவிக்கைகள் ஜாக்கெட்டுகள் முதலியவைகள் வைத்திருக்கும் பெட்டிகளின் சாவியும் அத்துடன் வைத்திருப்பதாயும் ரசீது எழுதிக் கொடுத்து விட்டு அவைகளை எடுத்துக் கொண்டு உடனே போகும்படி சொன்னதாகவும், அப்பால் அங்கிருப்பது சரியல்லவென போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் தெரிவிக்க ஜாக்கிரிய்ய ரெட்டியார், நகைகள் முதலியவை அடங்கிய பெட்டியைத் திரும்பிப் பெற்றுப்போக மறுத்ததாகவும், அவர்கள் எடுத்துச் செல்லா விட்டால் அவர்கள் மாடியை விட்டு கீழிறங்கித் தெரு போவதற்குள் அவைகளைத் தூக்கி தெருவில் எறிந்து விடுவதாகச் செல்வம் சொன்னதின் பேரில் செல்வம் சொன்ன பிரகாரமே ரசீது எழுதிக் கொடுத்து விட்டு நகைகள் முதலியவைகள் அடங்கிய பெட்டியை எடுத்து வரச்செய்து எல்லோரும் வெளியேறியதாகவும் அதுமுதல் ஜாக்ரிய்ய ரெட்டியாருக்கும் ஸ்ரீதரனுக்கும் வியாபாரத்தில் போட்டி அதிகரித்து வாங்கிய விலைகளுக்கும் குறைவாய் இருவரும் போட்டி போட்டு விற்றதில் இருவருக்கும் பெருத்த நஷ்டங்களுண்டானதாகவும் ஆயினும் போட்டி குறையாது வியாபாரம் நடத்தி வருவதாகவும், கோவிந்தன் அங்கு வந்த நாளைக்கு முந்திய நாள் தான் ஸ்ரீதரன் செல்வம் ஆகிய இருவரும் எங்கோ சென்றிருப்பதாகவும் விசாரித்து கோவிந்தன் அறிந்தார். இவ்வளவு கௌரவமாய் செல்வத்தை வைத்திருந்த ஜாக்கிரிய்ய ரெட்டியாரை நடுத்தெருவில் விட்டு விட்டு ஓரே நிமிஷத்தில் செல்வம் எவ்வாறு தனது மனதை மாற்றிக் கொண்டதல்லாமல் மீண்டும் ஜாக்கிரிய்ய ரெட்டியாருடன் போக மறுத்தாளென்று வாசகர் ஆச்சரியப்படலாம். ஆனால் உண்மையில் இதில் ஒரு ஆச்சரியமுமில்லை. ஏனெனில் குலமகளிரே சில சமயங்களில் திடீரென ஒருவரிடம் தோன்றும் பிரியத்தால் தான் பிறந்த வீட்டின் பெருமையையும், புகுந்த வீட்டின் சிறப்பையும் கவனியாமலும், தனது உற்றோர், பெற்றோர், பந்து மித்திரர்கள், எல்லாவற்றிற்கும் மேலாக தனது வயிற்றில் பிறந்த அருமைப் புதல்வர்களையும் புதல்விகளையும் தவிக்கும்படியும் தலைகுனியும்படியும் அவமானப்படும்படியும் விட்டு விட்டு, தான் அவ்வாறு செல்வதால் பின்னால் தனக்கு நேரக்கூடிய அவமானத்தையும், தான் மோஹித்துச் சென்ற புருஷன் சில

தினங்களில் தன்னிடமுள்ள நகை நட்டு ஆஸ்தி முதலியவற்றைக் கவர்ந்துகொண்டு தன்னை நடுத்தெருவில் அநேகாதிக்களாக்கி விட்டுப்போய் விடுவாளென்பதை அறியாமலும், அப்பால் வயிற்றுத் திரத்தின் கொடுமையால், பல புருஷர் சம்போகம் பெறுவதால் கொடிய மேகம், வெள்ளை, கண்டமாலை, முதலியவியாதிகள் ஏற்பட்டு இறுதியில் தனக்கு ஒருவேளை ஆகாரம் அகப்படாது தவித்து அனாதையாய், இருக்க இடமும் படுக்கப்பாயு மின்றி சாகும்படி நேரிடும் என்பதையும் அறியாமல் தான் மோஹித்த புருஷரைப் பின்பற்றிப் போய்விடுகின்றன ரென்றால் அதையே தொழிலாகக் கொண்ட தாசி செல்வம் அவ்வாறு சென்றது ஆச்சரியமாமோ? தாசிகள், பெரும் செல்வம்படைத்தவர்கள் எவ்வளவு குரூபிகளா யிருந்தாலும், அவர்கள் பேரில் அத்யந்த பிரியம் இருப்பதாக அபிநயித்து அவர்களை வஞ்சித்து பொருள் பறிப்பது வழக்க மல்லவா? அப்படியிருக்க ஸ்ரீதரனை விட ஜாக்ரிய்ய ரெட்டியார் எத்தனையோ மடங்கு அதிக தனவந்தரென்பதை அறிந்தும். செல்வம், கேவலம் தாசிகள் தொழில் முறையில் அவரைக் கைவிட வில்லையென்பது தெள்ளெனத் தெரிகிறது. பின் ஏன் அவ்வாறு செய்தாள்? முதலில் ஸ்ரீதரனிடம் போகும்போது குறும்புத் தனத் தால் தான் சென்றாள். அவருடைய வார்த்தைகள் அவள் மனதை வசிகரித்து விட்டன. ஆனால் அப்போதும் அவரிடமே இருப்ப தாகத் தீர்மானித்துச் செல்லவில்லை. அவர் பேசிய மாதிரியில் தன்னை யாரோ அறிமுக முடையவளென ஏமாந்து பேசுகிறாரென் றும் அவள்யாரென்றும் கிரஹித்து வரலாமென்றும் சென்றாள். ஆனால் ஸ்ரீதரன் வீடு சென்றதும் அங்கு தன்னைப்போல் தன் அள வில் தன் படம் வைக்கப்பட்டிருந்ததையும், அப்படத்திற்கு அன்று சாயுந்திரம் கூட புதிதாகப் புஷ்பங்கள் போட்டு அலங்கரிக்கப்பட் டிருந்ததையும், அங்கு சென்ற உடன் அவர் அவளைத் தழுவி மிகப் பிரீதியுடன் ஆலிங்கனாதிகள் செய்ததையும், அவர் ஆலிங்கனாதி களில் அவள் இதுவரை அனுபவித்தறியாத நூதன சுகங்களைத் தானனுபவித்ததாக அவள் மனதில் பட்டதாலும் இனி அவரை விட்டகல்வதில்லையென உறுதி செய்து கொண்டாள். அப்போது அவள் மனதில் ஒரு சந்தேகம் உதித்தது. அதாவது ஸ்ரீதரன் தன்னை யாரோ என நினைத்த—தனக்கு முன் பரிச்சயமுள்ள—தான் அனுபவித்து வந்த பெண்ணல்லவென அவருக்குத் தெரிந்ததும்

தன்னைப் புறக்கணித்து விட்டால் என் செய்வது என்ற திகிலும் அவள் மனதில் புகுந்தது. உடனே,

செல்வம்:—ஐயா! சிங்காரவனத்தில் என்னைச் சந்தித்ததும் நமக்குள் முன் அதிக பரிச்சியமிருப்பதாக நினைத்து தாங்கள் பேசினது எனக்கு அதிக ஆச்சரியத்தைக் கொடுத்தது. தாங்கள் என்னை யார் என நினைத்து அவ்வாறு பேசினீர்கள்.

என்று சிங்கள பாஷையில் கேட்டாள். அப்போது,

ஸ்ரீதரன்:—செல்லம்! நீ எப்போது சிங்களபாஷை கற்றுக் கொண்டாய்? இங்கு வருவதாக உத்தேசத்து நமது ஊரிலேயே சிங்கள பாஷை கற்பிக்கும் பண்டிதரை வரவழைத்துக் கற்றுக்கொண்டாய் போலிருக்கிறது. என்னைவிட நீ அப்பாஷை நன்றாய்ப் பேசுகிறாயே!

செல்வம்:—எனது பேர் என்னவென்று சொன்னீர்கள். தயவு செய்து சற்று திருத்தமாய்ச் சொல்லுங்கள்.

ஸ்ரீதரன்:—இங்கு வந்தபின் உன்னையும் உனது பேரையும் நான் மறந்து போனதாக நினைத்துக் கொண்டாயோ? உன் படத்தை வைத்து நித்யம் உனக்குப் பதிலாக அதற்குப் புஷ்பமாலை சூட்டி வருகிறேனென்றதை இன்று திடீரென வந்து பார்த்த பின்னும் உனக்கு என்பேரில் சந்தேகமேன்? இவ்வூர் வந்த நாள் முதல் இன்றைய வரையில் உன்னைத்தவிர வேறு எந்தப் பெண்ணையும் நான் கண்ணெடுத்துக்கூடப் பார்த்ததில்லை. இது நிச்சயம்; சத்தியம்.

செல்வம்:—இருக்கட்டும்; சற்று நிறுத்தி திருத்தமாய் என் பேரைச் சொல்லுங்கள்.

ஸ்ரீதரன்:—உன்பேர் செல்லம்

செல்வம்:—செல்—வமா? செல்—லமா?

ஸ்ரீதரன்:—செல்—லம் தான்.

செல்வம்-—சரி; தாங்கள் முன் நேசித்து அபிமானம் வைத்த பெண் நானல்லவென்றும், எனது பேர் செல்லமல்லவென்றும் இன்று தான் என்னை முதல் முதலாகச் சந்தித்தீர்களென்றும் நான் சொன்னால் அப்போது என்ன சொல்லுவீர்கள்.

ஸ்ரீதரன்:—என் நீண்ட பிரிவால் உன் புத்தி சுவாதீன மில்லாமல் மனப்பிராந்தி யடைந்துவிட்டது யென்பதாகச் சொல்வேன்.

செல்வம்:—உண்மையில் தாங்கள் இதுவரையில் அபிமானித்து வந்த செல்லம் நானல்லவென்றும் முதன் முதலாக இன்றுதான் தங்

களைக் கண்டேனென்றும், இன்றே முதல் தடவையாய் தங்கள் ஆலிங்கன சுகம் அனுபவித்தேனென்றும் நான் சற்றேனும் சந்தேகம் இல்லாத முறையில் தங்களுக்கு ருஜூப்படுத்திவிட்டால் உடனே என்னைப் புறக்கணித்துத் தள்ளிவிட்டு உங்கள் செல்லத்தின் பால் தான் தங்கள் அபிமானம் சென்றுவிடுமோ?

ஸ்ரீதரன்:—செல்லம்; என்ன இவ்வாறு பேசுகிறாய்? பல வருஷங்களாய் தான் அபிமானித்து அனுபவித்த பெண்ணை அல்லவா என ஒரு மனிதன் தெரிந்துகொள்ளாவிட்டால் அப்பால் அவனை என்னென்றுதான் நான் சொல்வது.

செல்வம்:—அது எப்படியாவது இருக்கட்டும். நான் கேட்ட கேள்விக்குத் தாங்கள் பதில் சொல்லவில்லையே!

ஸ்ரீதரன்:—எந்தக் கேள்விக்கு?

செல்வம்:—உண்மையில் தாங்கள் இதுவரை அபிமானித்து வந்த செல்லம் நானல்லவென்றும், நான் வேறு பெண்ணென்றும், இன்றுதான் நாமிருவரும் முதல் முதலாகச் சந்தித்தோமென்றும் இன்றே நாமிருவரும் ஆலிங்கன சுகங்கள் அனுபவித்தோமென்றும் தங்களுக்குச் சற்றேனும் சந்தேகம் உண்டாகாத முறையில் நான் ருஜூவு செய்துவிட்டால் அப்பால் என்பேரில் தாங்கள் இன்று மாலை முதல்காட்டிய அபிமானம் நீங்கி தங்கள் செல்லத்தின் பால் தங்கள்பிரியம் சென்று விடுமோ? அதைச் சத்தியமாய்த் தெரிவியுங்கள்.

ஸ்ரீதரன்:—நீ எனது செல்லம், எனது அபிமானம் கொண்ட செல்லம் என்பதில் சற்றேனும் சந்தேகமில்லை. ஒருக்கால் நீ சொல்லுகிறபடி நீ வேறு பெண்ணாயிருந்தால் கூட நான் எனது செல்வத்தை எவ்வளவு நேசிப்பேனோ அதற்குச் சற்றேனும் குறையாமல் உன்னையும் நேசிப்பேன். சுப்ரமணியர் சாக்ஷியாய் இது சத்தியம். செல்லம் எங்கு இருக்கிறாளென்றும், அவள் ஊர் எதுவென்றும் பல கேள்விகளைக் கேட்டு அவளைப் பார்க்க தான் வெகு ஆவல் கொண்டிருப்பதாகச் சொன்னாள். அவர் சில காரணங்களால் அவள் கேட்ட பல கேள்விகளுக்குப் பதிலளிக்க சாத்யமில்லை யென்றும் சமயம் நேர்ந்தபோது தன்னுடன் அழைத்துப்போய் செல்லத்துக்குத் தெரியாமல் அவளைக் காட்டுவதாகவும் இல்லாவிட்டால் அவள் செல்வத்திடம் பொறாமை கொண்டு தன் கூடவே வருவதாக முறண்டுவாளென்றும் அப்படி அவளை அழைத்து வந்தால் அதன்

மூலமாய் தனக்கு கிட்டமாய் ஆபத்துகள் உண்டாவது திண்ணமென்றும் இவ்விஷயத்தைப்பற்றி எவரிடமும் பேசவே கூடாதென்றும், செல்லம் என்ற பேரைக் கூட தாங்கள் ஏகாந்தமாயிருக்கும் சமயத்திலல்லாது மற்ற வேளைகளில் எடுக்கக் கூடாதென்றும் வற்புறுத்திச் சொன்னார். அதன்மேல்தான் செல்வம், தனக்கு வலது கண்ணின் கீழ் பாலுண்ணி இருப்பதைகாட்டி அப்படத்திலிருக்கும் பெண்ணுக்கு அந்த மறுக்கூடக் கிடையாதென்றும் அந்த ஒரு விஷயத்தில் தான் தங்களிருவருக்கும் வித்யாச மிருப்பதாகவும் மற்ற எல்லா அம்சங்களிலும் ஒன்ருயிருப்பது போலவே தோன்றுகிறதென்றும் சொல்லி இருவரும் அதிக சந்தோஷமாய் பேசிக்கொண்டிருக்கும்போது தான் ஜாக்ரய்ய ரெட்டியார் போலீஸ் உத்யோகஸ்தர்களுடன் வாரண்ட் பெற்றுவந்ததால்தான் செல்வம் சற்றேனும் மனக்கலக்கமில்லாமல் திடமான பதிலளித்தாள்; ஆகையால் இதில் வாசகர் ஆச்சரியப் படவேண்டிய பிரமேயமேயில்லை.

செல்வம் தன்னை நிராகரித்து விட்டு தன்னுடன் போட்டி போட்டு வியாபாரம் செய்யும் ஸ்ரீதரனுடன் சேர்ந்து கொண்டதே தனக்கு அவமானத்தையும், களரவத்தைக் குறைத்து விட்டதாகக் கருதிய ரெட்டியாருக்கு, தான் செல்வத்துக்கு இனமாய்க்கொடுத்த சகல நகைகளையும் அன்று அவள் உடுத்திச் சென்ற புடவை ரவிக்கையையும் கூட தன் முகத்தில் எறிந்ததைப் போல் ஸ்ரீதரன் வார்த்தையைக் கேட்டு ஜாப்தாவுடன் வைத்து தன்னைஎடுத்துப்போகச் சொன்னது ஜாக்ரய்ய ரெட்டியாருக்குஅடக்க முடியாத ஆத்திரத்தையும் க்ஷாத்திரத்தையும் உண்டு பண்ணி விட்டது. அடடா! அவளுக்குத் தான் மனதார இஷ்டப்பட்டு வாங்கிக்கொடுத்த நகைகளையும் புடவைகளையும் திருப்பித்தரும்படி இன்ஸ்பெக்டர்கள், ஸ்ரீதரன் முதலியவர்கள் முன்னிலையில் கேட்டதற்காகப் பெரிதும் வருந்தினர். அவவாறு கேட்டது தனது பெருந்தன்மைக்கும் பிரபுத்தனத்துக்கும் பொருந்துமா எனப் பெரிதும் சிந்தித்தார். அதை மாற்றுவதற்கு மார்க்கமில்லையே என மனக்கவலை கொண்டார். தன்னுடனிருந்தவர்களும், அவர்கள் சொல்லக் கேட்பவர்களும் தன்னைப்பற்றி எவ்வித அபிப்பிராயம் கொள்ளுவார்களோ எனக் கலங்கினர்.

“தீயினுற் சுட்டபுண் ணுள்ளாறும்—ஆருதே
நாவினுற் சுட்டவடு”

என்ற ஆன்றோர் வாக்கியத்தின் உண்மைக்கருத்தை அப்போது தான் அறிந்தார். ஆகையால் தான் பெரியார் ஒவ்வொரு வார்த்தையைம் தம் வாயைவிட்டு வெளியேறுமுன் அதை சீர்தூக்கிப் பார்த்து தமக்குள்ளாகவே ஆராய்ந்து அப்பால் தான் வெளியில் சொல்லுகிறார்கள், அதனால் தான் அவர்கள் தடதடவென்று பேசாது மெதுவாகப் பேசுகின்றனர் என அறிந்துகொண்டார். ஆஹா! செல்வத்தின் சொல்லாலல்லவா தனக்கு அப்பேர்ப்பட்ட பேர் வந்ததென நினைத்தார்; இல்லை; இல்லை, செல்வம் என் செய்வாள்? அவள் பேரில் தோஷமில்லை; இவ்வளவும் ஸ்ரீதரனால் தான் ஏற்பட்டது. எய்தாரை நோகாமல் அம்பை நோகலாமா? என சிந்தித்தார். அப்படி ஸ்ரீதரன்சொன்னாலும் தன்னிடம் அவ்வளவு அன்பாயிருந்த செல்வம் அவ்வாறு செய்யலாமா? ஆகையால் இருவர் பேரிலும் தான் குற்றமிருக்கிறது. இவ்விருவரையும், இனி இலேசில் விடுவதில்லையெனவும் இதன் மூலமாய் தன் திரண்ட ஆஸ்திகள் செலவானாலும் சரிதான் ஒருகை பார்த்தே விடுவது தான் சரி யெனவும் தீர்மானித்துக்கொண்டார்!

ஒரு நாள் மாலை 7 மணிக்குமேல் வழக்கம்போல் ஸ்ரீதரனும் செல்வமும் சாதாரணமாய் யாரும் நடமாடாத ஏகாந்த வழியில் தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டே நடந்து சென்றார்கள். அப்போது அவர்களுக்குத் தெரியாமல் பின் பக்கமாய் கட்டுமஸ்தாயும் குள்ளமாயும் இருக்கும் இருதடியர்கள் கையில் கூறிய கட்டாரிகளுடன் அவர்களைக் குத்துவதற்குச் சமயம் பார்த்துக் கொண்டு சென்றார்கள். அவ்விரு தடியர்களில் ஒருவன் தன் கையை உயர்த்திக் கட்டாரியால் ஸ்ரீதரனைக் குத்தப்போனான். அச்சமையத்தில் அத்தடியர்களுக்குத் தெரியாமல் பின்பற்றி வந்தவர் கட்டாரி பிடித்திருந்த கையில் தன் கைத் தடி கொண்டு பலமாய் அடிக்கவே கட்டாரி பல கெஜ தூரங்கள் போய் விழுந்ததுடன் அவன் கையும் ஒடிந்துவிட்டது. இதற்குள் மற்றவன் செல்வத்தைக் குத்தப் போக அவனுக்கும் அக்கட்டாரிக்கும் அக்கதியே நேர்ந்தது. நாம் இதை எழுதுவதற்கு இவ்வளவு நேரமாயிற்றே தவிர மேற்கண்ட சம்பவங்கள் இரண்டும் ஒன்றின்பின் ஒன்றாகக் கண் மூடி முடிப்பதற்குள் முடிந்தேறிவிட்டன. அடி விழுந்தவுடன் அவர்கள் அலறிய சத்தத்தைக் கேட்ட பின் தான் ஸ்ரீதரனும் செல்வமும் திரும்பிப் பார்த்தனர். அவர்கள் திரும்பிப்பார்த்தபோது கட்டாரியால் குத்த எத்தனித்த இருவரையும் பின்பற்றி வந்து அபாயகரமான

சமயத்தில் காப்பாற்றியவன் பளீர்பளீரென்று குதிரைச் சவுக்கால் பல அடிகள் அடிக்க, அவர்களிரும் அதிகமாய் அலறினார்கள். அச்சத்தத்தைக் கேட்ட பலர் ஓடி வந்தார்கள். அப்படி ஓடி வந்தவர்களில் இருபோலீஸ்காரரும் இருந்தனர். அவர்கள் வந்ததும் சவுக்கடி விழுவது நின்றது. அதற்குள்ளாகவே அவர்களிருவர் உடம்பிலும் ஒவ்வொரு வருக்கும் சுமார் 40-50 அடிகள்பட்டு இரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது. இதைப்பற்றி விசாரித்ததும் பெரிய இடத்துக் காரியமாதலால் இன்ஸ்பெக்டரவர்கள் விசாரிப்பதே மேலென அவர்களிருவரையும் கட்டாரிகள் சஹிதம் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோயினர். அபாயமான சமையத்தில் வந்துதவியவன் யாரென்றதையறிய வாசகர்கள் ஆவலாயிருக்கலாம் அவ்வாறு வந்துதவியவன் சின்னமீன் கந்தன் தான். அவனுக்கு அவ்வூரில் ராமன் என்று பெயர், அவன் அவ்வூரில் பேருக்கு ஒரு படகு வைத்துக் கொண்டு உண்மையில் ஸ்ரீதரன் என்னும் சுந்தரராஜுவின் பாதுகாப்பாளனாய் இருப்பவன்தான். போலீஸ் இன்ஸ்பெக்டர் அங்கு வந்ததும் "என்னடா சொக்கா! காக்கா!! வந்து விட்டீர்களா வழிக்கு!" எனக் கேட்டதாலும் அவ்விருதடியர்களும் முன்னாலேயே பலமாய் சவுக்கடிகள் பட்டுப் பதறியிருந்ததாலும் உண்மையைச் சொல்லாவிட்டால் போலீசார் உரித்து விடுவார் களென பழைய குற்றவாளிகளாதலால் நன்கறிவார்களாதலாலும் பின் வருமாறு வாக்கு மூலம் கொடுத்தார்கள்.

"ஐயா! நேற்று மாலை ஒரு பிரபு எங்களை இங்கு அழைத்து வந்து இவர்களிருவரையும் காட்டி (ஸ்ரீதரனையும் செல்லத்தையும்) இன்று இருட்டினதும் இவர்கள் உலாவும் போது குத்தும்படி ஆளுக்கு நூறு ரூபாயும் ஒவ்வொரு கட்டாரியும் கொடுத்ததோடு அவ்வாறு செய்து விட்டு வந்தால் இன்னும் ஆளுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகவும் சொன்னார். அதன்படி செய்ததில் அகப்பட்டுக் கொண்டோம்".

இன்ஸ்பெக்டர்:—போக்கிரிப் பயல்களே! இவர்களைக் குத்திக் கொன்று விட்டு நகைகளைத் திருட வந்த திருட்டுப் பயல்கள் கதைகளையா சொல்லிவருகிறீர்கள்?

என்றதும் ராமன் கையிலிருந்த சவுக்கைப் பிடுங்கிக் கொண்டு அவரும் ஆளுக்கு அரை டஜன் அடிகள் கொடுத்தார், அவர்கள்

சொன்னது உண்மைதானென்றும் அடிக்க வேண்டாமென்றும் அலறினர்.

இன்ஸ்பெக்டர்:—அந்த ஆள் பேர் என்ன? எங்கிருப்பவர்?

சோக்கன்:—பார்த்தால் ஆள் அடையாளம் தெரியும். அவருடைய பேர் வீடு ஒன்றும் தெரியாது.

என்முன், அப்போது ஸ்ரீதரன் அவர்கள் சொல்வது உண்மையாய்த்தானிருக்குமென்றும், தனக்கும் ஜாக்ரய்ய ரெட்டியாருக்கும் ஆதிமுதல் ஏற்பட்ட விரோதத்தையும், எரிகிற நெருப்பில் பெட்ரோல் ஊற்றியதைப் போல் சமீபத்தில் செல்வத்தின் மூலமாய் விரோதம் அதிகரித்ததையும் சாங்கோ பங்கமாய் எடுத்துக் கூறி, இவர்கள் அவருடைய தூண்டுதலால் தான் ஏவப்பட்டிருப்பார்களென்றும் அதைப்பற்றி சரிவர விசாரித்து ஜாக்ரய்ய ரெட்டியாரைத் தண்டித்து விட்டால், தான் பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதாயும் இன்ஸ்பெக்டரவர்களிடம் தெரிவித்தார். அவர் சம்மதப்படாதவர் போல் தன்னால் கூடியவரை பிரயத்தனம் செய்து பார்ப்பதாகச் சொல்லி விட்டு அவ்விருதடியர்களைக் கைதி செய்து போலீஸ் கொட்டடியில் மூடிவிட்டு உடனே சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் சென்று நடந்த விவரங்களைச் சொல்லி இரண்டு கொழுத்த பசுக்கள் தங்கள் வலையில் சிக்கியிருப்பதாகவும் வேண்டியவரை கறகலாமென்றும், தான் ஸ்ரீதரன் பக்கம் இருப்பது போல் வேண்டும் நடவடிக்கைகள் எடுத்து அகப்பட்டவரை சுற்றுவதாகவும், அவரை ஜாக்ரிய்ய ரெட்டியாரிடம் அவர் பேரில் பலமான கேஸ் தாக்கலாகிவிட்டதாகச் சொல்லி அவரிடம் அறுத்துக் கொள்ளும்படியும் எச்சரித்துச் சென்றார். ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பார்கள். இப்போது அப்பழமொழியை "ஊர் இரண்டு பட்டால் போலீசாருக்குக் கொண்டாட்டம்" என மாற்ற வேண்டியிருக்கிறது, ஏனெனில் இப்போது இதுவரையில் சகோதரர்களைப் போல் வாழ்ந்து வந்தவர்களைப் பிரிப்பதற்கு சட்ட சபை, லோகல் போர்டுகள், முனிசிபாலிட்டி தேர்தல்கள் வந்திருக்கின்றன. தேர்தல்கள் வந்த உடனே போட்டி போடும் இருவரும் தத்தம் யோக்யதைகளுக்குத் தக்கவாறு வாக்காளர்கள் வாக்குகளைக் கொடுக்கட்டும் என்ற நேர்மையான முறைக்கு மாறுதலாக வாக்கா

ளர்களுக்கு லஞ்சம் கொடுத்தும், தங்களுக்கு வாக்கு கொடுக்கா விட்டால் பலவிதமான ஹிம்சைகள் செய்வதாக பயமுறுத்தியும் போக்கிரிகளுக்கும், சோம்பேறிகளுக்கும் கள்ளு சாராயம் முதலியன ஊற்றி அவர்களிடம் கத்திகள், கட்டாரிகள், பிச்சுவாக்கள், தடிகள் முதலியன கொடுத்து வாக்காளர்களை பயமுறுத்தும்படி செய்தும் இவ்வாறு செய்வதற்கு உடந்தையா யிருப்பதற்காகப் போலீஸ் இன்ஸ்பெக்டர் சப் இன்ஸ்பெக்டர்களின் பெண்ஜாதிகளுக்கு தங்க ஒட்டியாணம் வைரதோடு முதலியன வாங்கிக் கொடுப்பதால் ஜாடையாயிருந்து விடும் சில அயோக்யர் போலீஸ் உத்யோகத்தில் இருந்து விட்டால் இன்னும் கொண்டாட்டம் அதிகம் தான். அப்பேர்ப்பட்ட அயோக்கிய போலீஸ் அதிகாரிகள் இருக்கும் ஊரில் சாமாதானம் தோன்றி விட்டால் அவ்வுத்தியோகஸ்தர்களுக்கு ஏற்படும் மனக்கசப்பை வர்ணிக்க ஆயிரம் நாவைப் படைத்த ஆதிசேஷனாலும் ஆகாதென்றால் நம்மால் சாத்யமாமோ?

நிற்க, சப் இன்ஸ்பெக்டர் ரூ பத்தாயிரம் பெற்றுக்கொண்டு ஸ்ரீதரருக்குச் சமாதானமாகும்படியும், இறுதியில் ஜாக்ரய்யரெட்டியாருக்கு எவ்வித இடைஞ்சலை விளைவிக்காது விடுதலையாகும்படியான முறையில் வியாஜ்யத்தைப் பதிவு செய்து கொண்டு ஜாக்ரய்ய ரெட்டியார் சப் இன்ஸ்பெக்டரின் சாக்ஷாத் சொந்த விரோதி போல் பாவித்து நடவடிக்கைகள் எடுத்துவந்தார். சர்க்கிள் இன்ஸ்பெக்டரோ ஜாக்ரய்ய ரெட்டியாரிடம் சென்று அவருக்கு விரோதமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கும் சாக்ஷியங்களைக் கூறி அவர் தப்புவது துர்லபமென்று சொல்ல, அவர் பலமாய் லஞ்சம் கொடுத்ததின்பேரில் அதற்கேற்றவாறு கேசைத் திருப்புவதாகவும் தக்க சாக்ஷிகளை தயாரிப்பதாகவும் சொல்லி அவர் பந்துக்களிலும் நண்பர்களிலும் சிலருக்கு நூற்றுக்கணக்கில் வாங்கிக் கொடுத்து பொய்ச் சாக்ஷிகள் சொல்லத் தயார் செய்துவைத்து அவர்களிடம் வாக்குமூலங்களும் பெற்றுக்கொண்டார். இறுதியில் இருவருக்கும் அமோக பொருட் செலவுடன் சிங்காரவனத்தில் குத்த வந்த கைதிகள் இருவருக்கு மட்டும்தான் தண்டனை கிடைத்தது.

சட்டங்களை நிலை நிறுத்துவதற்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கும் போலீஸ் அதிகாரிகளிற் சிலர் இப்பேர்ப்பட்ட அயோக்யத்தனமான காரியங்களில் பிரவேசித்தால் யாரை நோவது? இப்போது சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய பெரிய பட்டணங்களி

லிருக்கும் போலீஸ் அதிகாரிகள் அனேகமாய் யோக்யதையாகவே நடந்து கொள்ளுகிறார்களென்பதைக் கேட்க நாம் பெருமழ்ச்சியடைகிறோம். நாம் இவ்வாறு எழுதியதால் பட்டணங்களில் போலீசாரில் ஒரு சிலர் ஜட்கா வண்டிக்காரரிடமும், பஸ்காரரிடமும், நாட்டுப்புறத்து வண்டிக்காரரிடமும் காலணு அரையணு வாங்குவது நமக்குத் தெரியாதென்று நினைத்துவிடக்கூடாது. நாம் இங்கு எழுதியது போலீஸ் அதிகாரிகளைப்பற்றித்தான் என்றும், போலீசாரைப்பற்றியல்லவென்றும் கவனிக்கக் கோருகிறோம். இதற்கப்பால் ஸ்ரீதரர் வீட்டின்மேல் கற்கள் விழுவதும், அதற்குப்பர்த்தியாக ஜாக்ரய ரெட்டியார் வீட்டில் ஒன்றுக்குப்பத்தாகக் கற்கள் விழுவதும், இவ்வாறே நரகல் போடுதல், வேலைக்காரரை அடித்தல் முதலிய பல சில்லரைவேலைகளும் அதன் மூலமாய் போலீசாருக்கு இலாபமும் அகப்பட்டுக்கொண்டிருந்தது.

இவ்வாறு காரியாதிகள் நடை பெற்றுக்கொண்டிருந்தபோது ஒருநாள் ஸ்ரீதரரும் செல்வமும் ஏகாந்தமாய் இருந்து சுதேசமித்திரன் பத்திரிகையை செல்வம் ஸ்ரீதரருக்குக் கேட்கும்படி உரக்க வாசித்துக்கொண்டு வந்தபோதே திடீரென்று பத்திரிகை வாசிப்பதை நிறுத்தி செல்வம் பத்திரிகையில் எழுதியிருக்கும் விஷயத்தைக் கூர்ந்து கவனித்தாள். அப்போது ஸ்ரீதரன் "வாசிப்பதை நிறுத்தி விட்டு கூர்ந்து கவனிக்கிறாயே. அது என்ன" வென்றுகேட்டார். அதற்கு செல்வம் பதிலளிக்காது பத்திரிகையை அவர் கையில் கொடுத்து 9-வது பக்கத்தில் அச்சிடப்பட்டிருக்கும் விளம்பரத்தைச் சுட்டிக் காட்டி அதைக்கவனிக்கும்படி சொன்னாள். அவர் அவளையே வாசிக்கச் சொல்ல அவள் பின் வருமாறு வாசித்தாள்.

விளம்பரம்

குருத்துத் துறையில் கண்டெடுத்த கிளி கூண்டைவிட்டு பறந்து விட்டது. அக்கிளி திரும்பி வராமையால் கூண்டு சின்னபின்னமடைந்து வருகிறது. ஒரு மாதத்திற்குள் கிளி திரும்பாவிடில் அப்பால் கூண்டைக் காணமுடியாதேன்பது சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!! அருமை செல்லக் கிளியை அறிந்துகோள்."

என நிறுத்தி திருத்தமாய் வாசித்தாள். அவர் அதைக் கேட்டதும் அப்பத்திரிகையை அவள் கையிலிருந்து வெடுக்கென்று

பிடிங்கி மீண்டும் பலமுறை தனக்குள் வாசித்துக் கொண்டார். செல்வம் அவர் முகத்தை ஆவலுடன் கவனித்தாள். ஸ்ரீதரன் சற்று நேரம் ஆழ்ந்த யோசனையிலிருந்து விட்டு "செல்வம்! நான் அவசரமாய் அயலூர் சென்று வர வேண்டிய திருக்கிறது. நான் சென்று சில தினங்களில் திரும்பி வந்து விடுகிறேன். அதுவரை யில் நீ அதிக ஜாக்ரதையாயிருக்கவேண்டும். நான் போதிய பந்தோ பஸ்து அமைத்துச் செல்லுகிறேன்.

செல்வம்:—நான் தங்களை விட்டு ஒரு நிமிஷ நேரமேனும் பிரிந் திருக்க சம்மதியேன் என்று நாம் முதல் முதல் சந்தித்தபோதே தங்களுக்குத் திட்டமாய்க் கூறியிருக்கிறேன். தாங்கள் எங்கு செல் கிறீர்களோ அங்கு நானும் வருவேன்; நான் தங்களை விட்டு இங்கு அங்கு, எங்காகிலும், சரி; இருக்கவேமாட்டேன். என்னிடம் சொல் லாது தாங்கள் எங்காவது சென்றால் அன்றே என் ஆயுளின் கடைசி நாளென்று திண்ணமாய் நம்பிக்கொண்டு நான் இறந்து விடுவது நலமெனத் தங்கள் மனதில் பட்டால் அப்போது அவ்வாறு செய்யுங்கள்; இது சத்தியம்!

ஸ்ரீதரன்:—செல்வம்! என்ன யோசியாது இவ்வாறு சத்தியம் செய்து விட்டாயே! நான் எவருக்கும் தெரியாமல் மறைந்து செல்வ தாலேயே பலவித கெடுதல்கள் சம்பவிக்க ஹேதுவிருக்கிறது. உன்னையும் கூட அழைத்துப் போவதால் அக்கெடுதல்கள் இன்னும் ஆயிரம் பங்கு அதிகம் ஆகும்; ஆகையால் நான் சொல்லுகிறபடி சில தினங்கள் இங்கேயே யிரு; நான் சென்று கூடிய ஜல்தியில் அதா வது ஒன்றிரண்டு தினங்களில் திரும்பி வந்து விடுகிறேன்.

செல்வம்:—இவ்வளவு ஜல்தியில் தங்களுக்கு என் பேரிலிருக் கும் பிரியம் மாறிவிடுமென நான் கனவிலும் கருதவில்லை. ஆனால் தாங்கள் ஆதியில் அன்பு பாராட்டி வந்த செல்லத்தின் பால் பிரியம் காட்டுவதை நான் ஆட்சேபிக்க வில்லை. ஆனால் எங்கள் இருவரை யும் சமமாய் நேசிப்பதாய்ச் சொன்ன வாக்குறுதியைக் காப்பாற்றுவ துடன் நான் தங்களை விட்டுப் பிரிந்திருப்பதில்லை யென்று நான் சத்தியம் செய்ததையும் காப்பாற்றுவது தங்கள் கடமையாகும். மேலும் தாங்கள் செல்லத்தை எனக்கு மறைவாய்க் காட்டுவதாக வாக்களித்திருக்கிறீர்கள். அந்த வாக்கை நிறைவேற்றும் காலமும்

இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் கட்டாயமாய் என்னைத் தங்களுடன் அழைத்துச் செல்வது அவசியம்.

ஸ்ரீதரன்:—தசரத சக்கரவர்த்தி கைகேயிக்கு வரம் கொடுத்ததால் நேர்ந்த பல கஷ்டங்களை யறிந்தும், என் போன்ற பல புருஷர் பின்னால் நேரக்கூடிய கஷ்டங்களைக் கவனியாது பெண்களின் மோக வலையிற் சிக்கி வாக்களித்து விட்டு பின்னால் அவ்வாக்குகளை நிறைவேற்றும்படி அப்பெண்மணிகள் கேட்கும் போது முன்னும் பின்னும் போக வழியறியாது முழிப்பதைப் போல் நானும் இப்போது தயங்கும்படி நேர்ந்து விட்டது. உன்னை அழைத்துப் போவதால் திட்டமாய் ஆபத்துகள் நேரும் என்று என் மனசாக்ஷியானது சொல்லுகிறது. நீயோ "சொன்ன சொல்லைக் காப்பாற்றும்" என்று ஒரே பிடியாய்ப் பிடிக்கிறாய். எனக்கு என் செய்வதென்றே தோன்றவில்லை. சற்று யோசனை செய்து பார்.

செல்வம்:—நான் யோசிப்பதற்கு ஏதுமேயில்லை, தாங்கள் என்னை அழைத்துப் போகாது விட்டுச் சென்றால் அந்த நிமிஷமே நான் பகவானறிய பிராணத்தியாகம் செய்து கொள்வது நிச்சயம். சத்தியம். தங்களிஷ்டம் எப்படியோ அப்படிச் செய்யுங்கள்.

ஸ்ரீதரன்:—இப்படிப் பார்த்தால் ஸ்ரீஹத்தி, அப்படிப் பார்த்தால் பிரம்மஹத்தி என்பதைப் போல் சங்கடத்திற்குள்ளகப்பட்டுக் கொண்டேன். என் செய்வது? உன் மனோ நிலையைக் கவனித்தால் நீ திட்டமாய் பிராணத்தியாகம் செய்து கொள்வாயென்று என் மனதில் படுகிறது. ஆகையால் உன்னைக் கூடவே அழைத்துக் கொண்டு போவது அவசியமாகிறது, அதற்கேற்ற பிரயத்தனங்கள் செய்கிறேன்.

என்றார். அச்சமயத்தில் பக்கத்தறையின் வாசல் பக்கத்தில் மறைவில் ஒரு ஆள் நிற்கும் நிழல் தெரிய, ஸ்ரீதரன் சட்டென்று எழுந்து அங்கு போய்ப் பார்க்க, நடேசன் என்ற ஓர் வேலைக்காரன் சுவற்றோடு காது வைத்துக் கொண்டு அவர்கள் பேசுவதை உற்றுக் கேட்பதைப் பார்த்தார். அவர் தன்னைப் பார்த்து விட்டாரென்று நடேசனுக்குத் தெரிந்ததும் அவன் உடம்பு நடுக்கம் கொடுத்தது. உடனே ஸ்ரீதரன் "நடேசா இங்கு என்ன செய்கிறாய்?" என்று கேட்டார். அவனுக்கு பதில் பேச வாய் வராது "செம்புகள் துலக்குவதற்காக எடுக்க வந்தேன், பேசும் சத்தம் கேட்டதால்

உள்ளே வரவில்லை" யென்றான். "சரி; போய் செம்புகளை எடுத்துக் கொண்டு போ" என்று சொல்லி விட்டு, அவனுக்குக் கேட்கும்படி "செல்வம்! நீ பிடிவாதமாய் என்னுடன் கூட வருவதாய்ச் சொல்வதால் உன்னை என்னுடன் அழைத்துப் போவதென்றே தீர்மானித்து விட்டேன். நாம் போனால் திரும்பி வர ஒரு மாதமாவது பிடிக்கும். ஆகையால் வேண்டிய சாமான்கள் தயாரித்துவை, எனக்கு இங்கு இன்னும் மூன்று நாட்களுக்கு வேலைகளிருப்பதால் புதன்கிழமை மாலை புறப்பட உத்தேசித்திருக்கிறேன்." என்றார்.

அவர் சொன்ன வார்த்தைகளில் ஒரு வார்த்தையையாவது விடாது கவனமாய் நடேசன் கேட்டுக் கொண்டு செம்புகள் முதலியவற்றை எடுத்துக் கொண்டு சென்றான். செம்புகளை யெல்லாம் துலக்கும் இடத்தில் போட்டு விட்டு நடேசன் ஜாக்ரய்ய ரெட்டியார் வீடு சென்று வழக்கம் போல் அன்று ஸ்ரீதரனுக்கும் செல்வத்துக்கும் நடந்தேறிய சம்பாஷணைகளை ஒன்றும் விடாமல் சொல்லி விட்டு வந்தான். ஜாக்ரய்ய ரெட்டியார் ஸ்ரீதரனும் செல்வமும் எங்கு செல்கிறார்களென்று அவர்களைப் பின் பற்றி ஓர் இரகசிய துப்பறிவோனை அனுப்பினார். ஸ்ரீதரன் யாரென்றும், அவன் முன் செய்த காரியாதிகள் என்னவென்றும் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாமென்றும் அதன் மூலமாய் அவ்விருவரை நசுக்கி விட சந்தர்ப்பமேற்படுமென்றும். அவர்கள் மூன்று நாட்கள் பொறுத்துப் புறப்பட உத்தேசித்திருப்பதால் இரகசிய துப்பறிவோனை அமர்த்தப் போதிய சாவகாசமிருப்பதாகவும் நினைத்துக் கொண்டு சந்தோஷமாயிருந்தார். ஸ்ரீதரன் மாமூலாய்ச் செய்யும் வேலைகளை மாலை வரையில் செய்து விட்டு, மாலை 7 மணிக்கு செல்வத்தை அழைத்துக் கொண்டு மோட்டார் ஏறி வழக்கம் போல் உலாவச் சென்றார்.

அவர்கள் சென்ற இரண்டு மணி நேரங்களுக்கப்பால் லாஜரெஸ் ஸ்ரீதரன் வீட்டிற்கு வந்து தன் வீட்டில் நடக்கும் விருந்துக்கு ஸ்ரீதரும் செல்வமும் வந்திருப்பதால் அவர்கள் அன்றிரவு போஜனத்திற்கு வீட்டிற்கு வரமாட்டார்களென்றும் நேரம் பொறுத்து வருவார்களென்றும் சொல்லிச் சென்றார். நடேசன் இதையும் உடனே ஜாக்ரய்ய ரெட்டியாரிடம் சென்று தெரிவித்தான்.

பன்னிரண்டாவது அத்தியாயம்

கெடுவான் கேடு நினைப்பான்

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"

ஜாக்ரய்ய ரெட்டியார் உடனே கொளம்பில் பிரக்யாதிபெற்ற துப்பறியும் கம்பெனியாராகிய ஜோசப் கம்பெனிக்குச் சென்று தனக்கு ஸ்ரீதரர் பேரிலிருக்கும் சந்தேகங்களையும் நடேசன் மூலமாய்க் கேட்டறிந்த விஷயங்களையும் சொல்லி லாஜரெஸ் வீட்டில் ஸ்ரீதரரும் செல்வமும் என்ன செய்கிறார்களென்று கண்டறிந்து வரும்படி அனுப்பினர். அவர்களில் ஒருவன் வந்து தெருவில் நின்று பார்க்க லாஜரெஸ் வீட்டில் பலர் சிரித்துப் பேசி விளையாடி ஓடி ஆடித்திரிவதாகத் தெரிந்ததே யொழிய தெருக்கதவு தாளிட்டிருந்தபடியால் அங்கிருப்பவர்கள் யாரென்றும் என்ன செய்கிறார்களென்றும் அறியக்கூடவில்லை. அப்படியும் அவன் அவ்வீட்டுக் கதவைத் தட்டவே, லாஜரெஸ் வந்து "நீ யார்? ஏன் கதவைத் தட்டினாய்" என்று கேட்டார்; "ஸ்ரீவாஸ் ரெட்டியார் வீடு இதுதானா" என்றும் "ஸ்ரீவாஸ் ரெட்டியார் வீட்டிலிருக்கிறாரா" யென்றும் கேட்டான். அது ஸ்ரீவாஸ ரெட்டியார் வீடல்லவென்று சொல்லி அவனை ஏற இறங்கப்பார்த்து இனிமேல் அனாவசியமாய் அர்த்த ஜாம வேளையில் தன் வீட்டுக் கதவைத் தட்டினால் இப்படி உதைப்பேன் என ஒரு உதை கொடுத்தார். அவன் குப்புற அடித்து விழுந்து எழுந்து ஓடினான். அவர் சிரித்துக் கொண்டு உட்சென்றார். எப்படியாவது ஸ்ரீதரரும் செல்வமும் அங்கிருந்தால் காலையிலாவது வெளி வருவார்களல்லவாவென துப்பறிவோன் நினைத்து அங்கேயே அதிஜாக்ரதையாகக் காவலிருந்தான் காலை 5-30 மணிக்கு ஸ்ரீதரர் வீட்டில் காவலிருந்த துப்பறிபவனின் ஆள் ஸ்ரீதரனும் செல்வமும் அவர்கள் மோட்டாரில் வீட்டிற்கு வந்து விட்டார்களென்று சொன்னான். துப்பறிபவன் ஜாக்ரய்ய ரெட்டியாரிடம் சென்று நடந்த விஷயங்களைச் சொல்லி விட்டு அதுமுதல் ஸ்ரீதரரும் செல்வமும் எப்போது புறப்படுவார்களென எதிர் பார்த்துப் பின் தொடர்வதற்காக இரவு பகலாக் காவலிருந்தனர்.

நிற்க, மறுநாள் மத்தியானம் லாஜரெஸ் அவர்கள் ஸ்ரீதரரை அவசரமாகப் பார்க்க விரும்புவதாகவும் அவர்களிடம் சில இரகசிய விஷயங்களைப் பேசவேண்டியிருப்பதால் அன்று மாலை மூன்றுமணி

க்கு ஸ்ரீமான் ஸ்ரீதரர் பங்களாவில் வந்து பேசுவதாகவும் ஆகையால் அச்சமயம் வேறு எவரையும் கூட வைத்துக் கொள்ளாது ஏகாந்தமாயிருக்கும்படியும் எழுதியகடிதம் ஒன்றை எவருக்கும் தெரியாமல் லாஜரெஸ் அவர்களே நேரில் ஸ்ரீதரரிடம் கொடுத்தார். அவர் ஒப்புக் கொண்டதாகத் தலையை அசைத்து விட்டு மாமூல் பிரகாரம் வியாபாரம் நடத்திக் கொண்டிருந்தார். ஸ்ரீதரர் மாலை இரண்டு மணியானதும் வழக்கம் போல் தனது இல்லம் சென்றார். மாலை இரண்டே முக்கால் மணியானதும் ஸ்ரீதரர் செல்வத்தை அழைத்து "செல்வம் நாம் நாளை புதன் கிழமை புறப்படவேண்டுமென்று நல்ல நாள் பார்த்திருக்கிறேன். ஆகையால் முன்சொன்ன பிரகாரம் நமக்கு வேண்டிய சாமான்களை யெல்லாம் கட்டி நாளை மத்யானம் பனிரண்டு மணிக்குத் தயாராய் வைத்திரு. நாளை மாலை நான் வியாபார ஸ்தலத்திலிருந்து திரும்பியதும் நாம் புறப்பட வேண்டும். அப்போதுதான் நல்ல வேளையில் புறப்படக்கூடும் எனச் சொன்னார் செல்வமும் அவ்வாறே கட்டி முடித்துவிடுவதாகச் சொல்லி அதற்காக வேண்டிய வேலைகளை வேலைக்காரரைச் செய்யச் சொல்லி மேல் பார்த்து வந்தாள். மூன்று அடிக்க ஐந்து நிமிஷங்களுக்குமுன் லாஜரெஸ் வழக்கம்போல் மாலை சிற்றுண்டி சாப்பிடப் புறப்பட்டு தன் வீட்டிற்குப் போகாது ஸ்ரீதரர் வீட்டிற்கு வந்தார். வழக்கம்போல் இதை ஒண்டியிருந்து கேட்ட நடேசன் ஜல்தியாய் போய் ஜாக்ரய்ய ரெட்டியாரிடம் தெருவிக்க விரும்பினாலும் அச்சமயம் ஸ்ரீதரர் தன்னைத் தேடுவாரென நினைத்து இருந்தான். அப்போது ஸ்ரீதரர் தபாலுக்கு எழுதியிருந்த ஒருகடிதத்தை நடேசனிடம் கொடுத்து, கொண்டு போய் தபாலில் போட்டுவிட்டு வரும்படி சொன்னார். அவன் தனக்கு ஜாக்ரய்ய ரெட்டியாரிடம் போய்த் தெரிவிக்க சமயம் வாய்த்ததைப் பற்றி சந்தோஷமாய்ச் சென்றான். அவன் போனதும் ஸ்ரீதரர் செல்வத்தை அழைத்து "செல்வம்! நடேசனை ஏமாற்றி வெளியே அனுப்பிவிட்டேன். இதோ இக்கடிதத்தைப் படித்துப்பார்" என லாஜரெஸ் தனக்கு எழுதிய கடிதத்தைக் கொடுத்தார். அவள் வாங்கி வாசித்தாள்; வாசித்ததும் வியாபாரத்தொல்லைகளைப்பற்றிப்பேச விரும்புகிறார் போலிருக்கிறது. நான் அப்போது வந்து தங்களைத் தொந்தரவு செய்யாமலிருப்பதோடு வேறு யாரும் தாங்கள் பேசுவதை ஒண்டிக் கேட்காமலிருக்கவும் தங்களை யாராவது பார்க்க வந்தால் ஏதாவது சாக்குப் போக்கு காட்டி நீங்கள் பேசிமுடித்து வரும்

வரையில் அவர்கள் தங்களைத் தொந்தரவு செய்யாமலும் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுகிறேன்; நமது உப்பைத் தின்றுகொண்டு நமக்குத் துரோகம் நினைத்து நாம் பேசும் விஷயங்களை அப்போதைக்கப்போது போய் நமது எதிரியிடம் தெரிவிக்கும் நடேசனை வேலையிலிருந்து துறத்திவிடும்படி எத்தனையோதரம் கேட்டுக்கொண்டும் தாங்கள் அவனை அனுப்பிவிடாமலிருப்பது எனக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. தாங்கள் அவனை இங்கு வைத்திருப்பது கிருஷ்ண சர்ப்பத்தைப் படுக்கை யறையில் வைத்துக் கொண்டிருப்பதற்குச் சமானமாயல்லவா யிருக்கிறது" என்றாள். அதற்கவர் "செல்வம்! நீ பெண்பிள்ளையாதலால் ஆற அமர யோசியாது இவ்வாறு பேசுகிறாய்! ஒரு வருஷத்திற்கு முன்னால் என்னிடம் நடேசன் இவ்வாறு செய்திருப்பானாகில் பின்வரும் இலாபநஷ்டங்களைக் கருதாது அவன் இவ்வாறு செய்ததாகக் கண்டு பிடித்த உடனேயே அவன் பற்கள் பல கீழே விழும்படி அவனை அப்போதே செருப்பாலடித்துத் துரத்தியிருப்பேன். அப்போது எனக்கிருந்த கோபத்திற்கும் எனக்கு இப்போது வியாபாரம் செய்ய ஆரம்பித்து நமது மானேஜர் லாஜரென்ஸ் அவர்களுடன் பழகி அவர்களுடைய வியாபார முறைகளைப் பின்பற்றி நடக்க ஆரம்பித்தபின் நான் அடைந்திருக்கும் சாந்தத்தையும் பார்க்க எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. இப்போது அவனை ஏன் வைத்துக் கொண்டிருக்கிறேனென்பதற்கு இப்போதிருக்கும் மனப்பான்மையில் காரணங்கள் சொல்லுகிறேன் கேள். அதுதெரிந்தபின் உன் மனமானது எவ்வாறு மாறுதலடைகிறதென்று பார்.

(1) இப்போது நமக்கு நமது விஷயங்களை ஒண்டிக்கேட்டு போய் சொல்லுபவன் நடேசனென்று திட்டமாய்த் தெரிவதால் அவன் முன்னிலையில் மட்டும் இரகசியமான விஷயங்களைப் பேசாமல் ஜாக்ரதையாக இருக்கிறோம். நீ சொன்ன பிரகாரம் அவனை இப்போதே அடித்துத் துரத்திவிட்டால் ஜாக்ரய்யரெட்டியார் இன்னும் நமது வேலைக்காரரில் எவரையாவது பொருள் கொடுத்து அறிந்துவந்து சொல்லும்படி செய்வாராதலால், நமக்கு இன்னார்தான் அவருடைய வேவுகாரரெனத் தெரியாதாதலால், நாம் எல்லா வேலைக்காரர் மேலும் சந்தேகங் கொண்டு, அவர்களிடம் சந்தேகம் காட்டுவதால்எல்லாருக்கும்நமது பேரில் அதிருப்தி ஏற்படுவதோடு நாம் பேசுவதே கஷ்டமாய் முடியும்.

(2) ஏதாவதொரு விஷயத்தை ஜாக்ரய்ய ரெட்டியார் காதுக்கு எட்டவைக்க வேண்டுமென்றும் அதன் மூலமாய் ஜாக்ரய்ய ரெட்டியாரை ஏமாற்ற வேண்டுமென்றும் நாம் யோசித்தால் நாமிருவரும் இரகசியமாய்ப் பேசுவதுபோல் நடேசன் ஒண்டிக் கேட்கும்போது பேசிவிட்டால் அவன் திட்டமாய் உடனே போய் அவ்விஷயத்தை ஜாக்ரிய்ய ரெட்டியாரிடம் போய்ச் சொல்லுகிறான். அவர் அதை உண்மையென நம்பி நடக்கிறார். அவ்வாறு அவர் நடப்பது நமது காரியங்களுக்கு அனுகூலமாகிறது. திருஷ்டாந்தரமாக இன்று மாலையில் நடேசன் கேட்கும்படி நாளை மாலை பிரயணப்படப் போவதாக உன்னிடம் சொன்னேன். அதைப் போய் நடேசன் சொல்வதற்குப் போயிருக்கிறான். அதன் மூலமாய் இன்று நம்மை சுற்றிக் கொண்டு திரியும் துப்பறிவோர் சற்று அஜாக்ரதையாக இருப்பார்கள். நான் உன்னிடம் இன்று காலை சுதேச மித்திரன் பத்திரிகையிலுள்ள (105)-ம் பக்கத்தில் குறிப்பிட்ட "செல்லக்கிளியை சிறகொடித்து சிறை வைத்து வல்ல அரக்கரை வண்மையுடன் காவல் வைத்தும் அல்லல்படாது ஆகாயத்திலேயே பறந்து-மெல்லவே சென்றதை மெய்யோனே தானறிவாய்" என்ற விளம்பரத்தை வாசித்த உடனே நான் இன்று இரவு திருவீராஜ பட்டணம் போய் விசாரித்து வரவேண்டுமென்றும் அத்துடன் வியாபார சம்மந்தமாய் என் தகப்பனாரிடம் பேசி பெருந்தொகை வாங்கி வரவேண்டுமென்றும் அதற்காகத் துப்பறிபவரை ஏமாற்றி செல்வதற்கு சாதகமாயிருக்கும்படியே அவ்வாறு செய்தேன். நான் சொன்ன விஷயங்களை நீ கவனித்துப் பார்; நடேசனை நாம் வைத்திருப்பது நலமா அல்லது அனுப்பிவிடுவது நலமா வென யோசித்துச் சொல்லு பார்ப்போம்" என்றார். அவனை வைத்திருப்பதே நலமென்றும் தன்னையும் கூட அழைத்துப் போகும்படியும் முறண்டினாள். அவளைத் தன்னுடன் சில மணி நேரங்களுக்கு அழைத்துக் கொண்டு போவதால் ஏற்படக் கூடிய சகல கஷ்டங்களையும் எடுத்துக் கூறியதுடன் அவள் அங்கேயே இருப்பதில் துப்பறிவோருடைய சந்தேகங்களையும் எவ்வாறு நிவர்த்திக்கலா மென்பதைப் பற்றி அவர் விவரமாய்த் தெரிவித்த உடனே அவள் அவ்வாறே இருப்பதாக ஒத்துக் கொண்டாள். மூன்றடிக்க இன்னும் ஒரே நிமிஷம் தான் இருந்ததால் செல்வம் ஸ்ரீதரருக்கு அறையின்

கதவைத் திறந்து கொண்டு பூ வேலை செய்யும் துணி ஊசி முதலிய வற்றை எடுத்துக் கொண்டு வந்து அவர் அறைக்கு வெளியே யிருக்கும் பெருந்தாவில் வந்து உட்கார்ந்து கொண்டு பூ போடும் தையல் வேலைசெய்ய ஆரம்பித்தாள். அதற்குள்ளாக மணி மூன்றடித் தது. மூன்றடித்து முடியுமுன் ஸ்ரீமான் லாஜரெஸ் வர, செல்வம் ஸ்ரீதரர் அறையிலிருக்கிறாரென்றும் அவரை உடனே போகும்படி யும் சொல்லி அனுப்பிவிட்டு தான்பாரா யிருந்தாள். லாஜரெஸ் வந்த வுடனே அவரை ஸ்ரீதரர் சோபாவில் தமது பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு,

ஸ்ரீதரர்:—தயவு செய்து என்னவிஷயமாய் என்னிடம் பேச வந்தீர்களென்று சுருக்கமாய்ச் சொல்லுங்கள்.

லாஜரேஸ்:—நாம் ஒரு லட்ச ரூபாய் முதலுடன் பல லட்ச ரூபாய்களுக்கு வியாபாரம் செய்துவரும் விஷயம் தாங்கள் நன் குணர்ந்ததே. வியாபாரிகள் எல்லோருமே அவ்வாறு தான் செய்து வருகிறார்கள். இதர வியாபாரிளுடைய மனதில் சந்தேகம் ஏற்படாத வரையில் வியாபாரம் ஓங்கி வளர்ந்து வந்தது. இப் போது ஜாக்ரய்ய ரெட்டியார் நமது கம்பெனி கூடிய ஜல்தியில கஷ்டத்திற்கு வந்து விடுமென்றும் ஆகையால் நாம் அகப்பட்ட வரை சுற்றிக் கொண்டு ஓடிப் போவதற்காக வாங்கிய விலைக்கும் குறைத்து விற்பதாகவும் எவ்வாறாவது விற்று ரூபாய்கள் சேர்ந்த வுடன் தாங்கள் ஓடிப்போக உத்தேசித்திருப்பதாகவும், அதற்காக தாம் துப்பறிவோரை வைத்து வேவு பார்த்து வருவதாகவும் அனேகமாய் இன்னும் இரண்டு மூன்று தினங்களில் தாங்கள் ஓடிப் போவது நிச்சயமென்றும் வீண் புறளிகள் கட்டி வியாபாரிகள் மனதில் சந்தேகத்தை உற்பத்தி செய்து விட்டதோடு நமக்கு பெருந்தொகைகள் கடன் கொடுத்து வாங்கி வரும் இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியா மானேஜரிடமும் சென்று நாளை நாம் செலுத்த வேண்டிய லட்ச ரூபாய்களை நாம் பாங்கியில் செலுத்தி விட்டதும் வழக்கம் போல் நமக்குக் கடன் கொடுக்காது மூன்று தினங்கள் மட்டும் தாமதித்தால் நமது கம்பெனியின் யோக்யதை வெளிப் பட்டு விடுமெனவும் துர்போதனை செய்ததின் பேரில் அந்தத் துரையும் நமது சக்தியைக் அறிந்துகொள்வதற்காக அவ்வாறு செய்ய ஒத்துக்கொண்டதாய்இன்று மத்யானம் தான் நான் திட்டமாய்க் கேள்விப்பட்டேன். அத்துடன் நாம் நாளன்றைக்குள் தவணை

செலுத்த வேண்டிய வியாபாரங்களையும் அவர்களுக்குச் சேர வேண்டிய தொகைகளைக் கட்டாயமாய் அன்றைய தேதியில் கொடுத்துத் தீர வேண்டுமென்றும் வற்புறுத்தும் கடிதங்கள் எழுதி அனுப்பும்படியும் அவர் ஏற்பாடு செய்தபடி அவர்களும் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். நாம் நமது கையிலுள்ள ஒரு லட்சம் ரூபாய் களை நாளைத் தவணைக்கு இம்பீரியல் பாங்கிக்குக் கட்டி விட்டால் வழக்கம் போல் அவர்கள் மீண்டும் நமக்கு அப்பெருந்தொகை கடன் கொடுத்தால் தான் நாளன்றைக்குக் கண்டிப்பாய்க் கடிதம் எழுதியிருப்பவர்களுக்கு நாம் தொகை கொடுக்க முடியும், இல்லா விட்டால் நமது வியாபாரம் முறியும்படி நேரிடும். ஆகையால் இம்பீரியல் பாங்கியாரிடமிருந்து ரூபாய்கள் வராவிட்டாலும் நாளன்றைக்குக் கொடுக்க வேண்டிய தவணைக் காரர்களுக்குக் கொடுப்பதற்கு லட்சம் ரூபாய்களாவது கையிலிருந்தால் தான் நாம் சமாளிக்கலாம். ஒரு லட்சத்திற்குப் பதிலாக இரண்டு மூன்று லட்சம் ரூபாய்களிருப்பின் நமது கம்பெனியைப் பற்றி எல்லோரும் பெருமையாய் நடக்கும் வண்ணமும், இனிமேல் ஒரு ஜாக்ரய்ய ரெட்டியாருக்குப் பதிலாக ஆயிரம் ஜாக்ரய்ய ரெட்டிகள் சேர்ந்து சொன்னாலும் அவர்கள் வார்த்தைகளை லக்ஷியம் செய்யாத படியும் செய்யக் கூடும்.

என்றார். ஸ்ரீதரர் சற்று யோசித்து கட்டாயமாய் லட்சம் ரூபாய்கள் கொண்டு வருவதாகவும் தன்னால் கூடியவரை முயன்று அதற்கு மேல் எவ்வளவு தொகை கொண்டு வரக்கூடுமோ அவ் வளவு தொகை கொண்டு வரப் பிரயாசைப்படுவதாகவும் சொல்லி தான் மத்யானம் சொன்ன ஏற்பாடுகளின்படி நடத்தும்படியும் கவலையை விட்டு லாஜரெஸ்ஸை சந்தோஷமாய் இருக்கும்படியும் சொல்லி விட்டு இனி வீட்டிற்குப் போய் மாலை ஆகாரம் அருந்திப் போவதனால் நேரமாகு மெனச் சொல்லி செல்வத்தை அழைத்து அவருக்கு ஆகாரம் கொடுக்கும்படி செய்து அனுப்பி விட்டு வழக்கப் பிரகாரம் தமது வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஜாக்ரய்ய ரெட்டியார் துப்பறிபவர்களில் முக்கியஸ்தரை அழைப் பித்து நடேசன் வந்து சொன்ன விஷயங்களைச் சொல்லி ஸ்ரீதர ரும் செல்வமும் ஒருயாதம் பிரயாணம் போக உத்தேசித்திருப்ப தால் அவர்களையும் அதற்கேற்றார்போல் அவர்களுடைய காரியங் களை அன்றே ஒழுங்கு செய்து கொண்டு ஜாக்ரதையாய் மறுநாள்

கவனிக்கும்படி சொன்னார். மூவரில் இருவர் ஒரு மாதம் வரையில் வெளி ஊர்களுக்குப்போய் அங்கேயேதங்கியிருக்கவேண்டிவருமென நினைத்து அதற்கேற்றாற் போல் வேண்டும் காரியாதிகளைச் செய்யச் சென்றார்கள். ஒரு துப்பறிவோன் மட்டும் ஸ்ரீதரரைக் கவனித்து வந்தான். இரவு ஏழு மணியானதும் வழக்கம் போல் ஸ்ரீதரரும் செல்வமும் தங்கள் மோட்டார் கார் ஏறி உலாவச் சென்றவர்கள் உடனே திரும்பாது அவர்கள் மோட்டார் ஏறி சுற்று மதில் சுவர்களுடைய விஸ்தாரமான தேக்கு மரத்தொட்டிக்குச் சென்று தாம் தம்முடன் கொண்டு வந்திருந்த சாவியால் பூட்டைத் திறந்து தங்கள் மோட்டார் வண்டி மரத்தொட்டிக்குள் போவதற்காகக் கட்டியிருக்கும் தங்கள் பாலத்தின் மீது விட்டு விட்டு ஸ்ரீதரரும் செல்வமும் உள்ளே சென்றார்கள். அவர்களைப் பின்பற்றி வந்த துப்பறிவோன் மோட்டார் வண்டி நின்ற பாலத்தின் கைப்பிடிச் சுவருக்குப் பின்னால் இறங்கி மழை காலத்தில் தண்ணீர் ஓடும் காலில் அப்போது தண்ணீரில்லாமல் மணலாயிருந்ததால் அந்து மறைந்திருந்து மேலே பேசுவதைக் கேட்பதற்காக நின்றான். சற்று நேரம் பொறுத்து கதவைத் திறந்ததும் செல்வம் வெளியில் வந்து சுற்றிப்பார்த்தாள். எவரும்வெளியே கண்ணுக்குத் தெரியவில்லை. உடனே உள்ளே சென்றாள். அங்கிருந்து ஸ்ரீதரர் வெளியே வந்ததும் "செல்வம்! என்ன விளையாட்டுப் பிள்ளையாக இருக்கிறாயே தவிர இன்னும் உனக்கு இவ்வளவு இருட்டி விட்டது தெரியவில்லையே. போதும் நீ மல்லிகைப் புஷ்பங்கள் பறித்தது; வா! வா! வெகு நேரமாகி விட்டது. இன்னும் வராமல் புஷ்பங்கள் தானே அறுக்கிறாய்! வா, செல்லம்" என்று மோட்டார் காரிடம் நின்று கூப்பிட்டார். செல்வம் வராததால் "என்ன செல்வம் நான் கூப்பிட்டுக் கொண்டேயிருக்கிறேன் இன்னும் வராமலிருக்கிறாயே" என்றதும் வாசல் வரையில் போனார். அப்போது செல்வம் "என்ன இவ்வாறு அவசரப் படுத்துகிறீர்களே! புஷ்பங்கள் எவ்வளவு வாசனையாயிருக்கின்றன, சற்று தாமதமாகி விட்டால் என்ன குடி முழுகிப் போகிறது. ஆனாலும் தங்கள் பசி 5-10 நிமிஷங்கள் கூட பொறுக்காதா" என்று சொன்னபடியே வந்து மோட்டார் வண்டியில் ஏறினாள். உடனே வண்டியும் புறப்பட்டு விட்டது, துப்பறிவோன் கூடவே தனது மோட்டார் சைக்கிள் ஏறி வந்தான். வீட்டிற்கு வந்ததும் முன் பக்கத்தி

லிருந்து ஸ்ரீதரரும், பின் பக்கதிலிருந்து செல்வமும் இறங்கினர்கள். இறங்கினதும் ஸ்ரீதரர் நேராக தமது அறைக்குச் சென்று விட்டார். செல்வம் அங்கிருந்த பத்தானை அமுக்கி அதிக வெளிச்சம் விட்டு விட்டு ஏன் விளக்குகளெல்லாம் எரியும்படி செய்யாமல் வீட்டை பூரா வெளிச்சமில்லாது அரை வெளிச்சத்தோடு விட்டு வைத்திர்களென்று கோபித்துக் கொண்டாள். அப்பால் ஸ்ரீதரர் அறைபக்கம் சென்று வெளி வந்து ஸ்ரீதரருக்கு உடம்பு சௌகரியமில்லாததால் தனக்கு அன்றைய இரவு ஆகாரமே வேண்டாமென்று சொல்லி விட்டுப் படுத்துக் கொண்டதாகவும் ஆகையால் அவராகத் தூங்கி எழுந்திருக்கும் வரையில் எவரும் எழுப்ப வேண்டாமென்றும் சொல்லி விட்டுச் செல்வம் தன் தாதியுடன் தன் அறைக்குப் போய்ப் படுத்துக் கொண்டாள்.

நிற்க, முன் செய்திருந்த ஏற்பாட்டின்படி மரத்தொட்டியில் முன் கூட்டியே லாஜரெஸ் வந்திருந்தார். ஸ்ரீதரரும் செல்வமும் அங்கு சென்றவுடன் அங்கு மறைந்திருக்கும் துப்பறிபவனை ஏற்றி விட்டுப் போவதற்காகவே ஸ்ரீதரர் மோட்டார் வண்டி வரையில் வந்து நின்று செல்வத்தைக் கூப்பிட்டார். கூப்பிட்டும் வராததால் வாசல் வரை போய் வற்புறுத்திக் கூப்பிடுவது போல் சென்று நின்று கூப்பிட்டு விட்டு அவர் உள்ளே போய் விட, ஸ்ரீதரர் போல் ஆடைகளணிந்திருந்த லாஜரெஸ் மோட்டார் வண்டிக்கு வர, செல்வம் என்ன அவசரமென்று பேசியபடியே வந்து மோட்டார் கார் ஏற, ஸ்ரீதரர் வேஷம் போட்டிருந்த லாஜரெசும், மோட்டார் ஏறி இருவரும் வீடு சென்றார்கள். அங்கு போகும் போது இறங்கியது ஸ்ரீதரர் அல்ல எனத் தெரியாமலிருப்பதற்காகவே பாதி வெளிச்சம் விடப்பட்டிருந்தது. அவர் உள்ளே சென்றதும் செல்வம் வேலைக்காரரைக் கோபித்து முழு வெளிச்சம் விட்டு விட்டு தன் அறையில் தாதியுடன் படுத்துக் கொள்ள லாஜரெஸ் ஸ்ரீதரர் அறையில் படுத்திருந்தார். கட்டை தொட்டியில் நின்று விட்ட ஸ்ரீதரர் திருவீரராஜ பட்டணம் சென்று தன் தகப்பனாரிடம் பெருந்தொகை ரொக்கமும், இரண்டு லட்சத்திற்கு உண்டியிலும் பெற்று சின்ன மீன் கந்தனைக் கூட அழைத்துக் கொண்டு காலை நாலு மணிக்கு கொடிகாமம் தேக்கு மரத்தொட்டி வந்து சேர்ந்தார். காலை நாலு மணிக்கு ஸ்ரீதரர் வேஷம் போட்டிருக்கும் லாஜரெஸ் தனது மோட்டார் வண்டி ஏறி தேக்கு மரத்

தொட்டி சென்று கதவைத் திறந்து உள்ளே சென்றார். அதற்குள் ஸ்ரீதரர் அங்கு வந்து இறங்கி யிருந்ததால் கூடை நிறைய செல்வம் விரும்பிய மலர்ந்த மல்லிகைப் புஷ்பங்களை எடுத்து வருபவர் போல் புஷ்பங்களையும் எடுத்துக் கொண்டு தான் கொண்டு வந்திருந்த ரூபாய்களையும் எடுத்துக் கொண்டு வீடு சென்றார். அவர் இறங்கும் போது செல்வம் எதிர் சென்று அவ்வளவு காலையில் சென்று தான் விரும்பிய மல்லிகை புஷ்பங்களை எடுத்து வந்து கொடுத்ததற்காக அவருக்கு ஒரு அன்பு முத்தம் கொடுத்தாள். ஸ்ரீதரர் காலையில் ஸ்னானம் செய்து வயிறு நிறைய ஆகாரம் அருந்திவிட்டு யாரையும் தொந்தரவு செய்ய வேண்டாமென்று சொல்லி விட்டு அலுப்புத்தீர அயர்ந்து நித்திரை செய்தார், ஸ்ரீதரரும் துப்பறிவோரும் சென்ற பல நிமிஷங்களுக்கப்பால் சுவரேறிக் குதித்து லாஜரெசும், சின்ன மீன் கந்தனும் தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றார்கள்.

நிற்க, காலை 10 மணிக்கு அன்று இம்பீரியல் பாங்க் ஆப் இந்தியாவிற்குத் தவணை செலுத்த வேண்டிய லட்ச ரூபாய்களைக் கொண்டுபோய் லாஜரெஸ் செலுத்தி விட்டு, வழக்கம் போல் மீண்டும் லட்ச ரூபாய் கடன் கொடுக்கும்படி கேட்டார். பாங்கி அதிகாரி தலைமை ஆபீசில் ரூபாய்கள் சற்று தட்டாயிருப்பதாலும், பாங்கியாரே சேர்ந்தார்போல் மூன்று தினங்களுக்கு அதிகமான தொகைகள் திருப்பிக் கொடுக்க வேண்டியிருப்பதாலும் மூன்று தினங்கள் பொறுத்து சற்று சௌகரியமாயிருப்பதாகில் அப்பால் கொடுப்பதாகவும் சொன்னார். அதன்பேரில் முன்பின் தெரிவிக்காமல் திடீரென்று அவ்வாறு தெரிவித்து விட்டால் எவ்வாறு வியாபாரம் நடைபெறுவதென்றும் ஆகையால் புனராலோசனை செய்து தங்களுக்குக் கடன் கொடுக்கும்படியும் லாஜரஸ் வெகுவாய்க் கெஞ்சிக் கேட்டார். லாஜரெஸ் கெஞ்சிக் கேட்கக் கேட்க பாங்கு மானேஜர் தலைமை ஆபீஸ் உத்தரவில்லாமல் இனி ஸ்ரீதரன் அண்ட் கம்பெனிக்குக் கடன் கொடுக்கவே முடியாதென்று தீர்மானமாய்ச் சொன்னார். அப்போது லாஜரெஸ் எழுந்து நின்று, "வியாபாரிகளுடைய முதலைக் கொண்டு பாங்கி வைத்து, வியாபாரிகளிடமிருந்து கடன் வாங்கியும், வியாபாரிகளுக்குக் கடன் கொடுத்தும் ஜீவிப்பதன் மூலமாய் சம்பாதிக்கும் பாங்கிக்காரராகிய நீங்கள் வியாபாரிகளை இவ்வாறு திடீரெனக் கழுத்தறுப்பதைப் போல் வாலாயமாய் கொடுத்துக் கொண்டிருக்கும் கடனை முன் பின் தெரிவிக்கா

மல் நிறுத்தி விடுவதால் அவர்கள் கடன்களுக்குப் பத்து பங்கு ஆஸ்த்தியிருந்தும் அச்சமயத்தில் தவணைகளைக் கொடுப்பதற்கு ரொக்க ரூபாய்களில்லாததால்—தவணைகளை உடனே கொடுக்கத்தவறுவதால் அவர்களுடைய வியாபாரம் முறியும்படி செய்து அவர்களை அதோ கதிக்களாக்குவது பெரும்பான்மையான பாங்கிக்காரர்களுடைய செயலாயிருக்கிறது, ஆனால் ஸ்ரீதரன் கம்பெனியும் அவ்வாறு முறித்து விடக் கூடுமென நீங்கள் எங்கள் விரோதியான ஜாக்ரய்ய ரெட்டியாரின் தூண்டுதலின் பேரில் இவ்வாறு செய்திருப்பதாகத் தெரிகிறது. ஸ்ரீதரன் கம்பெனி தங்கள் நினைக்கிறபடி வந்தட்டி வரந்தட்டி அன்னக்காவடி கம்பெனியல்லவென்றும், இவ்வளவு கௌரவம் பொருந்தி கவர்ண்மென்ட் அனுசரணை பெற்றிருக்கும் உங்களுடைய இவ்வூர் வியாபாரத்தைக் கூட ஒடுக்கக்கூடிய சக்தியுடைய தென்பதையும் இன்றைய முதல் ஒரு வாரத்திற்குள் ருஜூவு செய்கிறேன்" எனச் சொல்லி விட்டு வெளியே சென்று விட்டார்.

அவர் சென்ற சில நிமிஷங்கள் வரையில் தம்மைப் பயமுறுத்தினால் மீண்டும் கூப்பிட்டுக் கடன் கொடுப்பேனென நினைத்து அவ்வாறு பேசினாரா, அல்லது அவர் சொன்ன மாதிரி ஏதாவது செய்யக் கூடிய சக்தி அவருக்குண்டா என்னும் சந்தேகம் அவர் மனதில் உதித்தது. நிதானித்து 2-3 தினங்கள் பார்த்து அப்பால் அவரைத் திருப்பிக் கொள்ளலாமென நினைத்திருந்தார். தான் சொன்ன பிரகாரம் ஸ்ரீதரன் கம்பெனிக்குக் கடன் மறுக்கிறார்களா அல்லது கொடுக்கிறார்களா வென ஆள் வைத்துக் கவனித்த ஜாக்ரய்ய ரெட்டியார், பாங்கிக்காரர் புதுக்கடன் கொடுக்க மறுத்ததும் உடனே ஸ்ரீதரன் கம்பெனிக்குச் சரக்குகள் கொடுத்து மறுநாள் ரூபாய்கள் கொடுக்க வேண்டிய தவணையுள்ள கடன்காரர்களிடமெல்லாம் சென்று பாங்கியார் பணம் கொடுக்க மறுத்து விட்டதாகவும், ஸ்ரீதரர் அன்று இரவு எங்கோ ஓடிப் போய் விடப் போவதாகவும், ஆகையால் எவர் கெட்டிக்காரரோ அவர்கள் தான் ஒன்றுக்கு முக்காலாவது பாதியாவது பெறக் கூடுமென்றும் எல்லோரிடமும் போய் தெரிவித்தார். அவர்கள் டெலிபோன்

மூலமாய் பாங்கியில் கேட்க, கடன் கொடுக்க மறுத்தது உண்மை யென ஏற்பட்டது. உடனே பாக்கிதாரெல்லாம் லாஜரெஸ்ஸிடம் சென்று தங்களுக்குச் சேரவேண்டிய தொகையில் இவ்வளவு கழித்துக் கூடத் தாங்கள் பெற்றுக் கொள்ளத் தயாராயிருப்பதாக வும் மறுநாள் கொடுக்க வேண்டிய தொகையில் இன்றே கொடுப்ப தாகில் இவ்வளவு குறைத்துக் கொடுக்கத் தயாராயிருப்பதாகவும் சொன்னார்கள். அவர் வாய் மொழியால் சொல்வதில் உபகார மில்லை யெனவும் அவரவர்கள் சொல்வதை எழுத்து மூலமாய் எழுதிக் கொடுத்தால் ம-ா-ஸ்ரீ ஸ்ரீதரர் மாலை 3 மணிக்கு வந்தவுடன் தெரிவித்து தொகைகள் வாங்கிக் கொடுப்பதாகச் சொன்னதின் பேரில் எல்லோரும் எழுதிக்கொடுத்தார்கள். மாலை 3 மணிக்குத் தான், நன்றாய்ப்படுத்துறங்கி விட்டு ஸ்ரீதரன் எழுந்து தனது கம்பெனிக்கு வந்தார். அவர் வரவே மாட்டாரென்றும் மாலை 3 மணிக்கு எங்கோ ஓடிவிடப் போகிறாரென்றும் ஜாக்ரய்ய ரெட்டி யார் சொல்லி வைத்திருந்ததால் அவர் வந்தது எல்லோருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. ஒருக்கால் எல்லோருக்கும் *மஞ்சள் காகிதம் கொடுக்க வந்தாரோ என சிலர் சந்தேகித்தனர். அவர் வந்ததும் எல்லா வியாபாரிகளிடமும் கைகுலுக்கி விட்டு உட்கார்ந்து என்ன விசேஷமென ஒன்றுமறியாதவர் போல் தமது மானேஜரைக் கேட்டார். அவர் அவர்கள் எழுதிக்கொடுத்த கடிதங்களை யெல்லாம் கொடுத்தார். ஸ்ரீதரர் புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டே எல்லாக் கடிதங்களையும் வாசித்து விட்டு, "நண்பர்களே! இம்பீரியல் பாங்க் கார் எனக்கு திடீரென இன்று கடன் கொடுப்பதை நிறுத்தி விட்ட தால் உங்கள் மனதில் நான் மறுநாள் உங்கள் கடன்களைக் கொடுப் பேனோ இல்லையோ யென சந்தேகித்து சிலர் முக்கால் பாகமும், சிலர் அரை பாகமும், பெருந்தொகை பாக்கியிருப்பவர் இப்போதே

---

* கடன் கொடுக்க சக்தியில்லாதவர்களெனத் தீர்மானித்து கடன்காரர் அவர்களைத் தொந்தரவு செய்யாமலிருப்பதற்காகக் கடன் காரருக்கு கொடுக்கும் உத்தரவு மஞ்சள் காகிதத்திலிருக்கும். அவர்களை ஆங்கிலேய பதத்தில் "இன்சால் வென்ட்" கடன் கொடுக்க சக்தியற்றவன் எனச் சொல்வது வழக்கம்.

—உடனே கொடுப்பதாகில் கால் பாகதுகையையும் பெற்றுக் கொள்வதாக எழுதியிருப்பதைப் பார்க்க எனக்கு அதிக வருத்தத்தைக் கொடுக்கிறது. தயவு செய்து இப்பொழுதே உங்களுக்குச் சேர வேண்டிய முழுத்தொகைகளையும் கொடுத்து விடுகிறேன், பெற்றுப் போங்கள். லாஜரெஸ்! இவர்கள் உண்டியல்களை பெற்றுக் கொண்டு அவர்களுக்குச் சேர வேண்டிய முழுத்தொகைகளையும் பைசல் செய்து ரசீது எழுதி வாங்குங்கள்" எனச் சொல்லி எல்லோருக்கும் அப்போதே பைசல் செய்து விட்டார். அப்போது அவர்கள் முகங்கள் வெட்கிப் போய் தாங்கள் சந்தேகப்பட்டதற்காகத் தங்களை மன்னித்து தங்களிடம் எப்போதும் போல் வியாபாரம் செய்ய வேண்டுமென வேண்டிக் கொண்டார்கள். அப்போது ஸ்ரீதரர் தெய்வாதீனமாய் என்னிடம் ரொக்கப் பணம் இருந்ததால் தான் உங்களுக்கு உடனே கொடுத்து பைசல் செய்ய சாத்யமாயிற்று. அப்படியில்லாமல் எனக்கு இந்த ரொக்கத்தைப் போல் 100 மடங்கு ஆஸ்தியிருந்த போதிலும் வியாபாரம் முறிவது திண்ணம் தானே. நமக்குள் ஒற்றுமையில்லாமல் போவதால் தானே அன்னியர் நமது முதலைக் கொண்டு நம்மிடமே லேவா தேவி செய்து சமயம் வந்த போது நிஷ்காரணமாயும் திடீரென்றும் கழுத்தறுப்பது போல் வாலாயமாய்க் கொடுத்துக் கொண்டிருந்த கடனை நிறுத்தி விடுவதால் எத்தனை சுதேச வியாபாரங்கள் பாழடைந்தன வென்றும், இவ்வாறு நடப்பதற்கு நமது அவிவேகமும், அறியாமையும், ஒற்றுமையின்மையுமே காரணமென்றும், அன்னியர் கையில் நமது ரூபாய்களைக் கொடுத்து விட்டு நாம் இவ்வித கஷ்டங்களுக்குள்ளாவதை விட, நாமே அப்பேர்ப்பட்ட பாங்கை ஸ்தாபித்து வியாபாரம் செய்து வருவோமானால் இவ்வாறு நல்ல சமயத்தில் மோசம் செய்யும்படியான நிலைமை ஏற்படாதென்றும் நீண்டதோர் பிரசங்கம் செய்தார். அப்பொழுதே அவருடைய தூண்டுதலின் பேரில் அவ்விடத்தில் "கொடிகாம பாங்கி" என ஒரு பாங்கி ஸ்தாபிப்பதெனவும் மறுதினம் காலையிலேயே "இம்பீரியல் பாங்கி ஆப் இந்தியா" விலிருந்து அவ்வூர் வியாபாரிகள் யாவரும் தாங்கள் கொடுத்து வைத்திருக்கும் எல்லாவிதமான தொகைகளையும் ஏக காலத்தில் வாங்கி விடுவதோடு இனிமேல் எவரும் அப்பாங்கியில்

பணம் போட்டு வைக்கக் கூடாதென்றும் ஏற்பாடு செய்து கொண்டார்கள். அச்சமயத்தில் சென்னையிலிருந்து ஸ்ரீதரன் கம்பெனிக்கு இரண்டு லட்சம் ரூபாய் தரிசன உண்டியல் வந்திருப்பதாகவும் அந்தத் தொகையை என்ன செய்வதென்றும் அவ்வூர் ஏஜண்ட் கேட்டு எழுதியனுப்பினர். அதற்குள்ளாக ஸ்ரீதரன் கம்பெனியாருக்கு கடன் மறுக்கப்பட்டும் அக்கம்பெனியார் மறுநாள் செலுத்த வேண்டிய தவணைகளைக் கூட அன்றே செலுத்தி விட்டதையும் அதுவும் போதாமல் இரண்டு லட்ச ரூபாய்க்கு அவர்கள் பேருக்கு தரிசன உண்டியல் வந்ததையும், பார்த்த பாங்க் ஏஜண்ட், ஸ்ரீதரர் வீட்டிற்கு வந்து அவரைப் பார்க்க வந்ததாயும் அவருக்கு எவ்வளவு தொகை வேண்டுமானாலும் கடன் கொடுக்கும்படி தலைமை ஆபிசிலிருந்து உத்தரவு வந்து விட்டதாகவும் ஆகையால் வேண்டும் தொகைகள் கொடுக்க சித்தமாயிருப்பதாயும் தெரிவிக்க வந்தார். அப்பாங்கியாருடன் தான் லேவாதேவி செய்வதை அன்றைய முதலே நிறுத்திக் கொண்டதாகவும் அவ்வூர் வியாபாரிகளில் பெரும்பான்மையோரும் தன்னைச் செய்ததைப் போல் அவர்களையும் செய்யக் கூடுமென நினைத்து அவர்களும் அவ்வாறு செய்ய உத்தேசித்திருக்கிறார்களென்றும் சொன்னார். அவர் எவ்வளவு சமாதானம் செய்தும் ஸ்ரீதரர் கேட்க வில்லை. இனி உபகாரமில்லையென்றும் நாளாவிர்த்தியில் தான் சமாதானம் செய்து கொள்வதென்றும் நினைத்துச் சென்றார். மறுநாள் பாங்க் திறந்ததும் முதலில் ஸ்ரீதரருக்கு சேர வேண்டிய இரண்டு லட்சம் ரூபாய்களும் கஷ்டப்பட்டு செலுத்தினர். ஏனெனில் பாங்கியில் எவரும் பணம் போடவரவில்லை; அதற்குப் பதிலாக சுமார் பத்து லட்சம் ரூபாய்கள் திரும்பிப் பெறுவதற்கு உண்டியல்கள் வந்த வண்ணமாயிருந்தன. பாங்க் ஏஜண்ட் தந்தி மேல் தந்தி ரூபாய்களுக்காக சென்னைக்கு அடித்தார். அடித்தும் பலனில்லை. அவ்வூர் பாங்கிகளில் எந்த பாங்கியிலும் ரூபாய்களில்லாததால் உண்டியல்களுக்கு அன்று பணம் கொடுக்க முடியவில்லை. அப்பால் சுமார் 3-4 மணி நேரம் பிரயாணத்திலிருக்கும் பாங்குகளுக்குத் தந்தி கொடுத்து மோட்டார் மூலமாய் ரூபாய்கள் வரவழைத்து மிகுந்த கஷ்டத்தின் பேரில் அன்று மாலை ஐந்து மணிக்குத் தான் ரூபாய்

கள் கொடுக்க சாத்யமாயிற்று. இவ்வாறாக திடீரென ஏற்பட்ட காரணம் விசாரிப்பதற்காக சென்னையிலிருந்து பெரிய துரை வந்து விசாரித்து இனி அவ்வூரில் அவ்வியாபாரம் நடத்த முடியாதெனத் தெரிந்து வியாபாரத்தை மூடிவிட்டதுடன் அந்த ஏஜன்ட்டை வேலையிலிருந்து நீக்கி திரும்பிப் போகும் பிரயாணச் செலவு கூட கொடாது போகச் செய்தனர்.

அந்த ஏஜன்ட் ஜாக்ரய்ய ரெட்டியாரை வந்து பார்த்து அவரால் தான் தனக்கு அக்கதி நேர்ந்ததென்றும், அவர் வார்த்தையைக் கேட்டு நடக்காதிருந்தால் இவ்வாறெல்லாம் சம்பவித்திருக்காதென்றும் நொந்து கொண்டார். ஜாக்ரய்ய ரெட்டியார் நல்லெண்ணத்துடனேயே தான் சொன்னதாகவும், அவருக்குச் சொன்னதைப் போல் இதர வியாபாரிகளுக்கும் தான் தெரிவித்ததை அவர்கள் விகல்பமாயெண்ணி இப்போது தன் பேரில் விரோதிக்கிறார்களென்றும், நாளுக்கு நாள் ஸ்ரீதரருக்கு கியாதி அதிகரிப்பதாகவும், தன்னிடம் வியாபாரம் செய்வதைக் கூட பெரும்பான்மையோர் நிறுத்திக் கொண்டதாகவும் ஆகையால் தானும் கஷ்டத்திற்குள்ளாயிருக்கும் அவர் கதையையும் தெரிவித்தார். உரல் போய் மத்தளத்திடம் முறையிட்ட கதை போலாயிற்றெனச் சொல்லிவிட்டு ஏஜன்ட் சென்றார்; கெடுவான் கேடு நினைப்பான் என்பது முற்காலத்திலாவது அந்த சந்ததியின் அபிவிருத்தியிலும் அழிவிலும் தெரியுமென்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆனால் இக்கலிகாலத்தில் உடனுக்குடனே அவர்கள் வாழ் நாட்களுக்குள்ளேயே அவர்களுக்கே காட்டி விடுகிறது.

பதிமூன்றாவது அத்தியாயம்

கொளம்பு துப்பறிவோர் போட்டி

நிறைகயத் தாழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும்
யானை நிழல் காண்ப தரிது

ஸ்ரீதரரும் செல்வமும் வெளி ஊர்களுக்குப் புறப்படுவதாகத் தீர்மானித்து வைத்திருந்த புதன்கிழமையும் வந்தது. அன்று அவர்கள் பிரயாணத்திற்கு ஏற்பாடாவது அல்லது பிரயாணமென்ற பேச்சாவது காணோம். மறுநாளும் போயிற்று. மூன்றாவது நாளு மாயிற்று. நான்காவது நாளும் முடிந்தது. போகும் ஏற்பாட்டை யே காணோம். நாளுக்கு நாள் ஸ்ரீதரருக்கு மதிப்பும், சொல்சக்தி யும், மரியாதையும், அதிகரித்துக் கொண்டே வந்தது. புதிதாக நிர் மாணித்த பாங்கியின் தலைவர் ஸ்தானத்தை ஏகமனதாய் ஸ்ரீதரரே அங்கீகரிக்க வேண்டுமென எல்லோரும் வேண்டிக் கொண்டனர். தான் சமீபத்தில் பூலோக சுற்றுப் பிரயாணம் செய்ய உத்தேசித்தி ருப்பதால் அப்போது அந்த ஸ்தானத்தை வஹிக்க முடியவே முடி யாதென்றும், அவர்களெல்லோருக்கும் தன்பேரில் ஏற்பட்ட அபார நம்பிக்கைக்காக வந்தனம் செலுத்திய போதிலும் அதை அங்கீகரி யாது நிராகரிப்பதற்காகத் தன்னை மன்னிக்க வேண்டுமென்றும், தனக்குப் பதிலாகத் தனது ஆபீஸ்மானேஜரான ஸ்ரீமான்லாஜரெஸ் அவர்களை ஒரு நிர்வாக சபை அங்கத்தினராக எடுத்துக் கொண் டால் போது மெனவும் ஒரே பிடியாய் சொல்லி விட்டார்; தலைவர் ஸ்தானத்தை ஏற்க மறுத்தது அவருடைய கௌரதையை இன்னும் அதிகரிக்கச் செய்தது. ஜாக்ரய்ய ரெட்டியார் அவ்வூரில் பிரபல தனவந்தராயும் பெரிய வியாபாரியாயும் இருந்தும் அவரை பாங்கி யில் பங்குதாரராய்ச் சேரும்படி கேட்கவுமில்லை; அவர் இரண்டாம் பேர் மூன்றாம் பேர் மூலமாய் தன்னையும் சேர்த்துக் கொள்ளும்படி சொல்லியனுப்பியதையும் எவரும் காதில்கூட போட்டுக் கொள்ள வில்லை. இதனால் அவருக்கு ஸ்ரீதரர்பேரில் இன்னும் அதிக பொறா மை ஏற்பட்டு எவ்விதத்திலாவது அவரைக் கெடுத்து விடுவதற்கு வேண்டிய யோசனைகளைத் துப்பறிபவர்களிடம் கேட்டார். அவர்

கள் வெகு நேரம் யோசித்து ஸ்ரீதரருடையவும் செல்வத்துடையவும் படங்களை சென்னையில் பிரசுரமாகும் தமிழ் பத்திரிகைகளில் பிரசுரித்து அவர்களின் ஊர், பெயர், விலாசம் முதலியன முதலில் தெரிவிப்பவர்களுக்கு ரூ 1000 சன்மானம் கொடுக்கப்படுமென பிரசுரித்தால் யாராவது சுலபமாய்த் தெரிவித்து விடுவார்களெனவும் ஸ்ரீதரரையும் செல்வத்தையும் பின்பற்றிச் செல்லதில் எவ்வித உபகாரமுமில்லை யெனவும் ஆகையால் அதை நிறுத்திவிடலாமெனவும் யுக்தி சொன்ன பிரகாரம் சென்னையில் பிரசுரமாகும் சுதேசமித்திரன் தமிழ்நாடு, தினமணி, போன்ற தினசரிப் பத்திரிகைகளில் விளம்பரங்களை வெளியிட்டு கையொப்பம் ஜாக்ரய்ய ரெட்டியார், கொடி காமம் என்று விலாசம் இடப்பட்டிருந்தது. இவ்விளம்பரத்தையும் விலாசத்தையும் ஸ்ரீதரர் பார்த்தவுடனே இனி அங்கிருப்பது அபாயமென நினைத்து தமது மானேஜர் லாஜரெஸ்ஸை அழைத்து அவரிடம் அதற்குச் சில தினங்களுக்கு முன்பாகவே ஸ்ரீதரர் லாஜரெஸ் பேருக்கு அங்குள்ள வியாபாரம் முழுவதையும் விற்று விட்டதாக எழுதி ரிஜிஸ்டர் செய்து வைத்திருந்த பத்திரத்தைக் கையில் கொடுத்து சொல்ல வேண்டியவைகளைச் சொல்லி, வேண்டும் ஏற்பாடுகள் செய்து விட்டு அன்றுமாலை இருட்டினதும் தனது மோட்டார் ஏறி செல்வத்துடன் வழக்கம் போல் உலாவப்போவதைப்போல் சென்று எங்கோ சென்று விட்டார். அவர் சென்ற மறு நாள் தான் கோவிந்தன் அவர்களைத் தேடிவந்து விசாரித்து அவர்கள் எங்கோ போய் விட்ட சமாசாரம் அறிந்தார்.

கோவிந்தன் ஜாக்ரய்ய ரெட்டியாரிடம் சென்று அவர் பிரசுரித்த விளம்பரத்தைக் காட்டி அவர்களை இன்னாரென்றும், ஊர், பெயர் முதலியன தனக்குத் தெரியுமென்றும் எதற்காக விசாரித்தார்களென்றும் ஒன்று மறியாதவர்போல் கேட்டார். ஜாக்ரய்ய ரெட்டியார் உண்மை சொல்லாது மறைத்து சாக்குப் போக்குக் கூறி தெரிவிக்கும்படியும் தெரிவித்தால்தான் விளம்பரப்படுத்தியபடி ஆயிரம் ரூபாய் இனாமளிப்பதாயும் சொன்னார். கோவிந்தன் முதலில் அவர்கள் இன்னாரென்று தெரியாது, ஸ்ரீதரருக்கும் ஜாக்ரய்ய ரெட்டிக்கும் ஏற்பட்டுள்ள விரோதங்களை யெல்லாம் எடுத்துச் சொன்னதோடு ஸ்ரீதரருக்கும் செல்வத்துக்கும் கேடு விளைவிக்கவே அவ்விளம்பரத்தை வெளியிட்டதாக ஊகித்தே அவர்களிருவரும்

வெளியேறி யிருக்க வேண்டுமென்றும் அவர்கள் இருவர் மனப்பான் மையைக் கவனித்துப் பார்த்தால் இனிமேல் அவர்களிருவரும் அவ்வூர் திரும்பமாட்டார்களென்றும் வியாபாரத்தை யெல்லாம் லாஜரெஸ்ஸுக்கு விற்றுவிட்டுச் சென்று விட்டதால் அச்சொத்துக்களை சர்க்கார் கைப்பற்றவும் முடியாதெனவும் அவர்களைத் தேடித் தான், தான் அங்கு வந்ததாகவும், தான் தான், திருவல்லிக்கேணி துப்பறியும் கோவிந்தனென்றும், அநேகமாய் தான் அவரைக் கண்டுபிடித்து விட்டதாக நினைத்து வந்தபோது அம்முட்டாள் விளம்பரம் பிரசுரமானதால்தான் அவர்கள் தப்பியோடி விட்டார்களென்றும் சொன்னதோடு, அவ்விளம்பரத்தில் குறிப்பிட்டவர்கள் திருவீரராஜபட்டணத்திலிருக்கும் பிரபல சொத்துக்காரரான ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் புத்திரராகிய சுந்தரராஜு வென்றும் அவருடன் கூடயிருப்பவள் செல்லமென்றும் சொன்னார். அவர் சொன்னபோது செல்லமென்றும் செல்வமென்றும் திட்டமாய்த் தெரிவிக்காமல் இரண்டு பேர்களில் எதுவாக வேனும் நினைக்கட்டுமென்று தாழ்ந்த குரலில் சொன்னதால் ஜாக்ரய்ய ரெட்டியார் அவருக்குத் தெரிந்த செல்வமென்றே சொன்னதாக நினைத்துக் கொண்டு சுந்தர ராஜுவைப் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கும்படி கேட்டபடி அவர் விவரமாய்த் தெரிவித்துவிட்டு போகப் புறப்பட்டார். அப்போது ஜாக்ரய்ய ரெட்டியார் கோவிந்தனுக்கு விளம்பரத்தில் சொல்லியபடி 1000 ரூபாயும் அதிகமாக ரூபாய் 1000 ஆக ரூபாய் இரண்டாயிரம் கொண்டு வந்து கொடுத்து சுந்தரராஜுவைக் கண்டுபிடித்தால் தனக்கு அவர் விலாசம் தெரிவிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார். அவர் ரூபாய்களையே பெற்றுக்கொள்ள மறுத்து தான் சுந்தரராஜுவுக்கு விரோதமாக வேலை செய்ய மாட்டாரென்றும், அவர் விளம்பரத்தில் கண்ட தொகை பெற அவரிடம் வரவில்லை யென்றும் ஆனால் சுந்தரராஜுவுக்கு விரோதமாய் சதியாலோசனை செய்தால் திட்டமாய் ஜாக்ரய்ய ரெட்டியாருடைய சொத்துகளுக்கு கேடு விளைவதோடு இறுதியில் அவர் பிராணனுக்கும் ஆபத்து வருவது நிச்சயமென்றும் இதுவரை ஸ்ரீனிவாசலு ராஜுவை எதிர்த்து வாழ்ந்தவர் கிடையாதென்று எச்சரிப்பதற்காகவே தான் வந்ததாகவும் தெரிவித்ததோடு அப்பால் அவரிஷ்டம்போல் நடந்து கொள்ளும்படி தெரிவித்துவிட்டு ஜாக்ரய்ய ரெட்டியார் எவ்வளவு தூரம் வேண்டிக் கொண்டும் ரூபாய்கள் பெறாமலே கோவிந்தன் சென்றார். அப்பால்

ஸ்ரீதரன் மானேஜரவர்களிடம் சென்று தான் திருவல்லிக்கேணி துப் பறியும் கோவிந்தனென்றும் ஸ்ரீதருடைய தகப்பனுருடைய நண் பரென்றும் ஸ்ரீதரரையும் செல்வத்தையும் கெடுப்பதற்காக அவர்கள் படங்களை பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கும் விளம்பரங்களைக் காட்டி ஜாக்ரய்ய ரெட்டியார் சதியாலோசனைகள் செய்து வருவதா யும் தான் சுந்தரராஜுலுகாரையும் செல்வத்தையும் ஜல்தியாய்க் கண்டு பேசுவதன் மூலமாய் சுந்தர ராஜுலுகாருக்கு பல நன்மைகளேற்படு மென்றும் ஆகையால் அவர்கள் விலாசம் தெரிந்தால் தனக்குச் சொல்லும்படியும் வெகுவாய்க் கேட்டார். சுந்தர ராஜுலுவின் விலா சம் தனக்குத் தெரியாதென்றும் தெரிந்திருந்தாலும் ஸ்ரீதரர்சொல்ல வேண்டாமென்று சொன்னால் தான் சொல்லவே மாட்டாரென்றும் உண்மையில் அவர் விலாசம் தனக்குத் தெரியாதென்றும் லாஜரெஸ் உறுதியாய்ச் சொல்லி அவரால் ஆக வேண்டிய காரியம் வேறு ஏதா வதிருந்து தெரிவித்தால் தான் ஸ்ரீதரரை எப்போதாவது சந்திக்க நேரிட்டால் அவரிடம் கேட்டறிந்து சொல்வதாய்ச் சொன்னர். தான் கேட்க உத்தேசிக்கும் விஷயத்தைப்பற்றிய விவரங்கள் உடனே தெரிந்து கொள்ளா விட்டால் உபகாரமில்லை யென்றும் திருச்செந்தூர் டெப்டி மாஜிஸ்டிரேட்டிடம் பிரமாண வாக்குமூலம் கொடுத்தபோது திருவீர ராஜபட்டணம் தாசி செல்லம் சிறையில் இருந்ததால் அவள் போய் பிரமாண வாக்குமூலம் கொடுக்கவில்லை யென்றும் ஆகையால் செல்வம்தான் அன்று அங்கு பிரமாணவாக்கு மூலம் கொடுத்திருக்க வேண்டுமென்றும் அவள் கொடுத்த பிரமாண வாக்குமூலத்தில் மாதவராஜு அவர்கள் வீட்டில் நடந்த திருட்டை பற்றி சொல்லியிருப்பதாயும் பிரமாண வாக்குமூலத்தில் கூறிய தொகையும் உண்மையில் திருடுபோன தொகையும் ஒன்றுயிருப்ப தாலும் அதைப்பற்றிய விவரங்கள் அவர்களிருவரில் ஒருவருக்கா வது கட்டாயமாய்த் தெரியுமென்றும் ஆகையால் விலாசம் தெரிந்தி ருந்தால் சொல்லும்படியும் இன்னுமோர் முறை கேட்டார். அவர் தனக்கு அவர்கள் விலாசம் உண்மையில் தெரியாதென்றும் வேறு எந்த விதத்தில் தன் உதவி கோறியபோதிலும் தான் கொடுக்க சித் தமாயிருப்பதாகவும் சொன்னர். கோவிந்தன் அவர்கள் வியாபாரக் கணக்குகளைப் பார்க்க அனுமதி கொடுத்தால் அதன் மூலமாய் பிர யாசைப்பட்டு அவர் இருக்குமிடம் துப்புதுலக்கப் பிரயாசைப்படுவ தாய்ச் சொன்னர் தான் கணக்குப் புஸ்தகங்களைக் காட்டுவதில்

எவ்வித ஆட்சேபனையுமில்லையென்று சொல்லி தனது தலைமை குமாஸ்தாவைக் கூப்பிட்டு கோவிந்தன் கேட்கும் கணக்குப் புஸ்தகங்களையெல்லாம் காட்டும்படி சொல்லிவிட்டு லாஜரெஸ் தமது வேலைகளை கவனிக்கச் சென்றார். கோவிந்தன் கணக்குப் புஸ்தகங்களை எடுத்து எங்கெந்த ஊரிலிருந்து அதிக சரக்குகள் ஸ்ரீதரன் அண்ட் கம்பெனிக்கு வருகிறதென்று கவனித்து எழுதி வரும்போது முக்கியமாய் அதிக வியாபாரம் செய்யும் பல ஊர்களில் இராஜமஹேந்திரபுரமும் ஒரு ஊரெனத் தெரிந்து கொண்டார். அப்பாலும் பல கணக்குப் புஸ்தகங்களைப் பார்வையிட்டு வரும்போது அவர்களுடைய சாமல் கோட்டை கிளை ஆபீசுக்கு மூன்று லட்ச ரூபாய்களுக்கு தரிசன உண்டியல் அனுப்பி யிருப்பதாகவும், ராஜமஹேந்திரபுரத்திற்கு 10 மைல் தூரத்திலுள்ள லங்கா என்னும் ஊரிலிருக்கும் ராமலக்ஷ்மிக்கு சென்ற 6 மாதங்களாக மாதாமாதம் ரூபாய்கள் 25 மணியார்டர் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிந்தது. அந்த ரூபாய்கள் எதற்காக மாதா மாதம் அனுப்பப்பட்டு வருகிறதென்று விசாரிக்க ஸ்ரீதரரின் உத்தரவு பிரகாரம் அனுப்பப்படுவதாகத் தெரிந்ததும் கோவிந்தன் லாஜரெஸ்ஸைக் கண்டு அந்த ரூபாய்கள் அனுப்பப்படும் ஆள் யாரென்று கேட்க தனக்குத் தெரியாதென்றும் சுமார் 6-7 மாதங்களுக்கு முன்னால் ஸ்ரீதரர் தமது வியாபார ஸ்தலங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்துவிட்டு வந்தவுடன் மாதா மாதம் ரூ 25 ராஜமஹேந்திரபுரம் தாலூகா லங்காவிலிருக்கும் ராமலக்ஷ்மிக்கு அனுப்பிவரும்படி உத்தரவிட்டதாகவும் அவ்வுத்தரவின் பிரகாரம் அனுப்பி வருவதாகவும் தமக்கு வேறொன்றும் தெரியாதென்றும் சொன்னார். கோதாவரி தீரம் சுற்றுப் பிரயாணம் போன தேதியைக் கேட்டறிந்த பின் அந்த மணியார்டர்கள் கையெழுத்திட்டு வந்த ரசீதுகளைப் பார்க்க விரும்பிக்கேட்டு வாங்கிப் பார்க்கத் தமிழில் ராமலக்ஷ்மி எனக் கையெழுத்திடப் பட்டிருக்கக் கண்டு ராஜமஹேந்திரபுரம் தாலூகாவில் தமிழ் கையெழுத்திடப்பட்டவர்கள் அநேகமாய் கிடையாததலால் கையெழுத்திட்டது தென் ஜில்லா வாசியாய்த் தானிருக்க வேண்டுமென்று யோசித்துக் கொண்டு தான் பார்க்க விரும்பிய கணக்குகளையெல்லாம் பார்த்தான் பின் லாஜரெஸ்ஸிடம் பல ஊர்களிலுள்ள ஏஜெண்ட்டுகளுக்கு கடிதங்கள் கொடுக்கும்படி வாங்கிக் கொண்டு, ராஜமஹேந்திரபுரம் புறப்பட்டுச் சென்று லங்கா என்னும் ஊருக்குப் போய் தபாலாபீசில்

விசாரித்துக் கொண்டு ராமலக்ஷிமியைப் போய்ப் பார்த்து ஒரு கால் கட்டுக் கட்டியிருப்பதைக் கண்டு "அம்மா ராமலக்ஷிமி! உன் காலில் என்ன காயம்? ஏன் கட்டுகட்டி யிருக்கிறது" என்று கேட்டார். படுக்கையிலிருந்த அந்தம்மாள் அந்தப் பக்கம் இந்தப் பக்கம் வெறித்துப் பார்த்துவிட்டு மௌனமா யிருந்தாள். அவ்வீட்டுக்காரரை விசாரிக்க அவர்கள், முதலில் அந்தம்மாள் ஏதோ கேட்டாள், எங்களுக்கு அவள் கேட்பது என்னவென்றே தெரியாததால் நாங்கள் தெலுங்கில் எங்களுக்குத் தோன்றியதைச் சொல்லி வந்தோம், வெள்ளத்தில் அடித்து வரும்போது அவள் கால் பாறையில் தாக்கி நசுக்குண்டதால் ஏற்பட்ட காயம் கொஞ்சம் கொஞ்சமாக ஆறி வருகிறது. வைத்தியர் நித்யம் தவறுமல் வந்து வைத்தியம் செய்து போகிறுர். அவர் கேட்பதற்குப் பதில் சொல்வதில்லை. இப்போது சில மாதங்களாக நாங்கள் என்ன கேட்டபோதிலும் பதில் சொல்வதேயில்லை. இன்று தாங்கள் ஏதோ கேட்டவுடன் அவள் அந்தப் பக்கம் இந்தப் பக்கம் வெறித்துச் சுற்றிப் பார்க்கிருள் என்று தெலுங்கு பாஷையில் சொன்னுர்கள். கோவிந்தன் சற்று நேரம் அவர்களை சும்மா யிருக்கும்படி தெலுங்கு பாஷையில் சொல்லிவிட்டு அவளிடம் தமிழில் பின்வருமாறு பேசினுர்.

கோவிந்தன்:—அம்மா ராமலக்ஷிமி! உன் பர்த்தா சீதாராம சாஸ்திரிகள் சௌக்யமாய் இப்போது திருவீர ராஜபட்டணத்திலிருக்கிருர்.

என்றுர். ராமலக்ஷிமி தனது கால் நோயைக் கூட கவனியாது சட்டென்று எழுந்து யார் யார்? எங்கு இருக்கிருர்கள்" என்று கேட்டாள்.

கோவிந்தன்:—உன் பர்த்தா சீதாராம சாஸ்திரி திருவீர ராஜபட்டணத்தில் சௌக்யமாய் இருக்கிருர்.

என்று மீண்டும் திருத்தமாய்ச் சொன்னுர்.

ராமலக்ஷிமி:—ஐயோ! அங்கு ஏன் சென்றுர். குடி முழுகிப் போகுமே! அவரை மூணேமுக்கால் நாழிகைக்குள் சுட்டுப் பஸ்பமாக்கி விடுவார்களே! ஐயோ! என் செய்வேன். ஜெகதீசா! நீதான் அவரைக் காப்பாற்ற வேண்டும்.

கோவிந்தன்:—ராமலக்ஷிமி! நீ நினைப்பது சரியன்று; இப்போது உங்களுக்கு விரோதிகளே கிடையாது; யாவரும் அவர் மேல் பிரீதியா யிருக்கிருர்கள். எப்போது சுந்தரராஜு தனது

பிராணனைக்கூடத் திரணமாய் நினைத்து உன் பர்த்தாவைக் காப்பாற்றினரோ அன்றே உங்களுக்கு நற்காலம் பிறந்து விட்டது.

ராமலக்ஷ்மி:—எனது பர்த்தாவை சுந்தரராஜுதான் காப்பாற்றினரென்று உங்களுக்கு எப்படித் தெரியும்? சுந்தர ராஜு சொன்னரா? இல்லாவிட்டால் யார் சொன்னார்கள்?

கோவிந்தன்:—தங்கள் பர்த்தாவைக் காப்பாற்றியவர் சுந்தர ராஜுதான் என்று தங்கள் பர்த்தாவுக்குத் தெரியாது. நான் சுந்தர ராஜுவைப் பார்க்கவேயில்லை. ஆனல் தங்கள் பர்த்தா தன்னைக் காப்பாற்றியவரைப் பார்க்கவே யில்லையென்றும் தன்னைக் காப்பாற்றியவர் தன்னைக் கரையில் கொண்டு வந்து சேர்த்ததும் அவரிடம் கொடுக்கும்படி நூறு ரூபா நோட் ஒன்றை அவரை ஒப்புவித்தவரிடம் கொடுத்துவிட்டு அவசரமாய்ச் சென்றதாகவும் மட்டும் சொன்னர். சுந்தரராஜு ராஜமஹேந்திரபுரம் வந்த நாளும் நீங்கள் கோதாவரியில் விழுந்ததாகத் தங்கள் பர்த்தா சொன்ன நாளும் ஒன்றாயிருப்பதையும், தங்கள் பர்த்தாவுக்கு பிரக்ஞை வந்ததும் தன்னைப் பார்த்தால் திகிலடைவாரென நினைத்தோ அல்லது நீங்கள் கட்டையைப் பிடித்துக் கொண்டு போனதைப் பார்த்ததால் உங்களைக் காப்பாற்றவோ 100 ரூ. அங்கிருந்தவரிடம் கொடுத்து தங்கள் பர்த்தாவிடம் கொடுக்கும்படி சொல்லிச் சென்றிருக்கலாமென ஊகித்து சுந்தர ராஜு படத்தைக் கொண்டு வந்து தங்கள் பர்த்தாவை விட்டுச் சென்றவரிடம் காட்ட, அவர் அப்படம் தங்கள் பர்த்தாவைக் காப்பாற்றியவர் படம்தானெனச் சொன்னர்.

ராமலக்ஷ்மி:—நான் சந்தேகப்பட்டது சரியாயிற்று; எங்களுக்கு இவ்வளவு தீங்கிழைத்த சுந்தரராஜுவா ஆயிரக் கணக்கான ஜனங்கள் என்னையும் எனது பர்த்தாவையும் வெள்ளம் அடித்துக் கொண்டு போனபோது வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க தனது பிராணனைத் திரணமாக நினைத்து வெள்ளத்தை லக்ஷியம் செய்யாமல் எனது பர்த்தாவைக் காப்பாற்றிக் கரை சேர்த்தார். அன்று அவர் ஆற்றின் மத்தியில் பாறையில் என் சமீபத்தில் வந்தபோது அவரா யிருக்கலாமோ என சந்தேகம் பிறந்தது. எங்களைக் கண்டபோதே கல்லெடுத்துப் போட்டு அடித்துக் கொல்வாரென்றல்லவோ நினைத்தேன்.

கோவிந்தன்:—அவருடைய நற்குணம் உனக்குத் தெரியாது. அதுவரையில் உங்கள் குடும்பத்தின் பேரில் அவ்வளவு அபிமானமா

யிருந்தவர் அற்பக் காரணத்தால் அபார விரோதியானதற்குக் காரணமென்ன? உங்களுக்கும் அவருக்கும் ஏககாலத்தில் ஏழரை நாட்டுச் சனியன் பிடித்ததாலல்லவா அவ்வாறெல்லாம் நடந்தேறி விட்டது. இனி உங்களுக்கு நற்காலம் பிறந்துவிட்டது. உன் பர்த்தா அவரால் கோதாவரி நதியில் காப்பாற்றப்பட்டதே அதற்குப் போதிய அத்தாட்சியாகும்.

ராமலக்ஷிமி:—ஐயா! அவரைமட்டுமா அவர் காப்பாற்றினர் என்னையும் காப்பாற்றியவர் அவரே. தெய்வாதீனமாய் தண்ணீரில் மிதந்து வந்த ஓர் கட்டையை நான் பிடித்துக் கொண்டதால் நான் தண்ணீரில் மூழ்கிச் சாகவில்லை. கட்டையையும் என்னையும் சேர்த்து வெள்ளம் அடித்துக் கொண்டே போயிற்று. பல இடங்களில் என் கால்கள் பாறையில் மோதப்பட்டன. கடைசியாக இந்த ஊருக்கு அருகாமையில் ஆற்றின் மத்தியிலிருக்கும் பாறையில் என் கால்கள் பலமாய் மோதவும் அதே சமையத்தில் நான் பிடித்திருந்த கட்டை முன் அடிப்பட்டு காயம்பட்ட இடத்திலேயே அலையால் மோதுண்டு அடிக்கவும் வலியால் கட்டையைக் கைவிட்டு விட்டேன். உடனே கட்டையை வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விட்டது. வெ , அவஸ்தைப்பட்டு பாறையின்மேல் ஏறி நின்றேன். நான் பாறைமேல் நிற்பதைப் பல ஆயிரக் கணக்கான ஜனங்கள் வந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர எனக்கு எவ்வித உதவியும் புரிய எவரும் வரவில்லை. அச்சமயத்தில் ஈரத்துணியுடன் என் பர்த்தாவைக் காப்பாற்றியவர் அங்கு வரக்கண்டேன்; அவர் வரும்போது சுமார் மத்யானம் ஒரு மணி யிருக்கும், அவர் வந்தவுடன் அங்கு நின்றவர்களிடம் ஏதோ கேட்டார். அவர்கள் முடியாதென்று சொன்னார்கள் போல் தோன்றிற்று. அப்போது அகோர புயல்காற்றும் பெருமழையும் அடிக்கவே எங்கு காற்று பாறையிலிருந்து என்னைத் தள்ளிவிடுகிறதோ எனப் பயந்து நின்றேன். உடனே நிற்பது அபாயமென நினைத்துப் படுத்தேன் ஒவ்வொரு நிமிஷமும் ஆற்று வெள்ளம் அதிகரித்து தண்ணீர் பாறை மேலும் வந்துவிட்டது. ஜோவென்று மேலே மழை பெய்தது; வெள்ளத் தண்ணீர் நான் படுத்திருக்கும் இடம் வரை வந்துவிட்டது; நின்றால் காற்று தண்ணீரில் தள்ளிவிடும்; இனியேது! பாறைமேலும் தண்ணீர் வந்து என்னை அடித்துக் கொண்டு போய்விடுமென பயந்து எம்பெருமானைப் பிரார்த்தித்த வண்ணம் நின்றேன்; மழையும் நின்றது. காற்

றும் ஓடுங்கிற்று, தண்ணீரும் கொஞ்சம் கொஞ்சமாய் குறைய ஆரம்பித்தது; மறுநாள் பொழுதும் புலர்ந்தது. அப்போது அவ்விடத்திற்கு முதலில் வந்தவர் என் பர்த்தாவைக் காப்பாற்றியவர்தான். அவர் கரையின் ஓரத்தில் வரும்போதே அவருடன் ஆட்கள் பெரிய கயிற்றுச் சுருணையைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள்: அவர் கையில் ஏதோ கொண்டு வந்தார், அது என்னவென்று எனக்குத் தெரியவில்லை. அங்கிருந்த ஒரு தடியனிடம் தன் கையில் வைத்திருந்ததைக் கொடுத்து ஏதோ சொன்னார். அவன் வாங்கி கவுண் கல்லில் கட்டி யெறிந்தான். நான் நின்ற இடத்திற்கும் கரைக்கும் கால் பாகம் வரையில் வந்து கல் ஆற்றில் விழுந்தது. அப்பால் பலரிடம் கொடுத்து வீசச் சொல்ல இன்னும் சற்று அதிக தூரம் வந்ததே தவிர அவ்வளவு அதிக தூரம் வரவில்லை. அப்பால் அவர் அதைத் தான் வாங்கி தன் பலம்கொண்ட மட்டும் கவுண் கல்லில் கட்டி யெறிந்தார். அவர்கள் எறிந்த தூரத்தைவிட சுமார் மூன்று பங்கு அதிக தூரம் வந்து விழுந்து விட்டது. அப்பால் பல முறை முயன்று கடைசியாக அவர் கவுண் கல்லில் அக் கயிற்றைக் கட்டி ஓடி வந்து தன் பலங்கொண்ட மட்டும் வீசி யெறிந்தார், கல் நான் நின்ற பாறைமேல் வந்து விழுந்தது; அதைப் பார்த்த எல்லோரும் கைதட்டி ஆர்ப்பரித்தனர். நான் அதை எடுத்துப் பார்க்க அக்கல்லில் பட்டு நூலால் திரிக்கப்பட்ட சன்னக்கயிறு கட்டப்பட்டிருந்தது. அதை இழுக்கும்படி கரையிலிருந்தபடியே ஜாடை காட்டினார்கள். நான் இழுக்க இழுக்க இருவர் சுமந்து கொண்டு வந்த கயிற்றுச்சுருணை குறைந்து கயிறு என்னிடம் வந்து சேர்ந்தது. அக்கயிற்றை அப்பாறையில் நுனியாயிருந்த பாகத்தில் நழுவாமல் பலமாய்க் கட்டும்படி அங்கிருந்தபடியே ஜாடை காட்டினார்கள். நான் அவ்வாறு கட்டிய உடனே இன்னொரு முனையை கரை ஓரத்திலிருந்த ஓர் பெரியமரத்தில் அவர் பலமாய் இழுத்துக் கட்டி விட்டு, தன் துணிகளை யெல்லாம் கழற்றி கரையில் போட்டு விட்டு தான் அணிந்திருந்த * லங்கோட்டாவுடன் தண்ணீரில் இறங்கப் போனார். அங்கிருந்த அனேகம் பேர் அவரை ஆற்றில் இறங்கவேண்டாமென்றும் இறங்கினால் திட்டமாய் சாவார் என்றும் சொன்னார்கள். சில பெண்கள் அவர் காலில் கூட விழுந்து நமஸ்

---

* லங்கோட்டா என்பது குஸ்தி பிடிக்கும் பைல்வான்கள் கட்டிக்கொள்ளும் அரை ஆடை.

கரித்து அத்திரவானைத் தண்ணீரில் போகவேண்டாமென்று சொன்னார்கள். அவர் அவர்கள் வேண்டு கோளுக்கிணங்காது ஒரு மணி நேரம் அதிக கஷ்டப்பட்டு கயிற்றை பிடித்த வண்ணம் நானிருந்த பாறை வந்து சேர்ந்தார். அவர் சுந்தர ராஜுவா யிருக்கலாமென்று நினைத்ததும் பெரும் பயம் கொண்டு, மூர்ச்சித்து விழுந்தேன். அப்பால் என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது. நான் புத்தி சுவாதீன மடைந்தபோது இந்த அறையில் படுத்திருக்கவும் வைத்யர் என் காலுக்கு வைத்யம் செய்யவும் கண்டேன். அவர்களை என்ன கேட்டபோதிலும் அவர்கள் ஏதோ பேசினார்கள். அவர்கள் சொல்வது எனக்குத் தெரியாததால் நான் அவர்களிடம் பேசுவதையே நிறுத்திக் கொண்டேன். மாதா மாதம் தபால்காரன் ரூ 25 கொண்டு வந்து கொடுத்து தபால் கடிதத்தில் கையெழுத்திடும்படி சொல்வான். நான் கையெழுத்திட்டு அவர்களிடமே ரூபாய்கள் கொடுத்து வந்தேன். இப்போது அனேகமாய் என் கால் முற்றும் குணமாகி விட்டது.

என்றாள். மூர்ச்சித்து விழுந்தவளை அக்கணவான் எவ்வாறு கரை சேர்த்தாரென்று அங்கிருந்தவர்களைக் கேட்க, அப்பெண்ணைத் தன் முதுகின் மேல் தூக்கி வைத்து அவள் கைகளிரண்டையும் தன் கழுத்தைச் சுற்றி வைத்து கயிறு கொண்டு அவள் கைகளிரண்டையும் அவர் கட்டிவிடவே அவர் பிடிக்காமலே அப்பெண்மணியை முதுகில் சுமந்த வண்ணம் தன்கைகளிரண்டாலும் கயிற்றைப் பிடித்துக்கொண்டு அதிக கஷ்டப்பட்டு அவளைக் கொண்டு வந்து கரை சேர்க்க 2 மணி நேரம் பிடித்ததெனக் கேட்டறிந்து கொண்டார். உடனே ராமலக்ஷ்மி உயிருடன் சுகமாய் அங்கிருக்கும் விஷயத்தைத் தந்தி மூலமாய் டெப்டி மாஜிஸ்டிரேட்டுக்குத் தெரிவித்து சீதாராம சாஸ்திரிகளை அனுப்பி அவர் சம்சாரத்தை நேரில் வந்து அழைத்துப் போகும்படி சொல்லும்படி செய்தார். சீதாராமசாஸ்திரி வந்து தனது சம்சாரத்தை அழைத்துக் கொண்டு திருவீர ராஜபட்டணம் சென்றார்.

டெப்டி மாஜிஸ்டிரேட் அவர்களுக்குத் தந்தி கொடுத்த உடனே கோவிந்தன் லாஜரெஸ் அவர்களிடமிருந்து வாங்கிக் கொண்டு வந்திருந்த கடிதங்களில் ஸ்ரீதரன் கம்பெனியின் இராஜமஹேந்திரபுரம் காரியஸ்தரவர்களுக்கு எழுதியிருந்த கடிதத்தைக் கொண்டுபோய்க் கொடுத்தார். அக்கடிதத்தைப் பார்த்ததும் தன்

னல் ஆகவேண்டிய காரியங்களைத் தெரிவித்தால் தான் செய்யத் தயாராயிருப்பதாக அவர் சொன்னார். முதலில் அவர்கள் கணக்குப் புஸ்தகங்களைப் பார்வையிட அனுமதி கொடுக்க வேண்டுமென்றும் அப்பால் அவசியம் ஏற்பட்டால், தான் காட்டும் மூன்று ஆசாமிகளை சுமார் ஒரு மணி நேரம் தன்னைப் பின் பற்றிவாராதபடி எவ்விதமாவது நிறுத்திவிட வேண்டுமென்றும் அவர்கள் துப்பறிபவர்களாதலால் சாதாரணமானதும் நியாயமானதுமான வழிகளில் அவர்களை நிறுத்துவது கஷ்டமாகுமென்றும் அவர்கள் ம-ா-ா-ஸ்ரீ ஸ்ரீதரருக்குத் தீங்கிழைக்கும் எண்ணத்துடன் கொளம்பிலிருந்து தன்னைப் பின் பற்றி வந்திருப்பதாகவும் ஆகையால் எப்படியாவது அவர்கள் மூவரையும் நிறுத்திவிட்டால்தான் ஸ்ரீதாருக்கு அபாயமுண்டாகாதென்றும் அவர்கள் ஸ்ரீதரரின் விரோதியாகிய ஜாக்ரய்ய ரெட்டியாரால் ஏவப்பட்டு வந்தவர்களென்றும் சாதாரணமானவர்களாகில் தான் அவர்களை ஏமாற்றக்கூடுமென்றும் தன்னைப்போல் அவர்களும் பிரக்யாதிபெற்ற துப்பறிபவர்களாதலாலும் தன்னை மூவர் பின்பற்றி வருவதாலும் தன்னால் அவர்களை ஏமாற்ற முடியவில்லை யென்றும் ஆகையால்தான் அவ்விஷயத்தில் காரியஸ்தர் அவர்களுடைய உதவி கோறுவதாகவும் சொன்னார். அவர்கள் அம்மூவரை எவ்விதத்தில் நிறுத்தக்கூடுமென கோவிந்தன் தெரிவித்தால் அவ்விதமே செய்வதாகச் சொன்னார். அதன் பேரில் கோவிந்தன் கம்பெனி கணக்குகளை யெல்லாம் கூர்மையாய்க் கவனித்துப் பார்த்ததில் பெங்களூரிலிருந்தும் கல்கத்தாவிலிருந்தும் அவர்கள் தந்தியின் பிரகாரம் நித்யம் நூக்கோல், காப்பேஜ், காலிபிளௌவர், பீன்ஸ் முதலிய ஆங்கிலேயே தினுசு காய்கறிகளும், ஆப்பிள், பீச், சீமை அத்திப் பழம், திராட்சைப்பழம் முதலிய பல பழவகைகளும், அனுப்புவதாகவும் முதல் தடவை அன்று அனுப்பி ரசீது அடக்கம் செய்ததாகவும் உள் கடிதங்களிருக்கக் கண்டார். இதுவரையில் இல்லாமல் இப்போது புதிதாக இக்காய்கறிகள் பழதினுசுகள் முதலியன யாருக்காக வரவழைக்கப்படுகின்றன என குமஸ்தாக்களைக் கேட்கத் தங்களுக்குத் தெரியாதென்றும் காரியஸ்தரைக் கேட்டால் தான் தெரியுமென்றும் சொன்னார்கள். அவரை கேட்டதும் சற்று வேற்று முகத்துடன் எனக்காகத்தான்; அதைப்பற்றி உமக்கென்ன?" என்று கடுமையானபதிலளித்தார். தனக்கு அத்திப்பழத்தின் மேல் அதிக விருப்பமென்றும் ஆகையால் விலைக்கு விற்பதற்காக வரவழைத்

திருப்பதாகில் தான் சில பழங்கள் வாங்கிக்கொள்ளலாமெனக் கேட்டதாகவும் வேறு விசேஷமில்லை யென்றும் தெரிவித்தார். அவைகள் கொடுப்பதற்கு சாத்யப்படாதென்று சொன்னார். "சரி தான் அதைப்பற்றி அவசியமில்லை. "நான் காலையில் கேட்டுக்கொண்ட பிரகாரம் நான் குறிப்பிடும் மூவரை ஒரு மணி சாவகாசமாவது என்னைப் பின்பற்றாது நிறுத்தி வைத்திருக்க உதவி செய்யக் கோருகிறேன்" எனக் கேட்டார். எவ்வாறு நிறுத்துவது எனக் கேட்க யுக்திகள் சொல்லிக் கொடுத்து அவர்கள் சொல்லிக் கொடுத்த யுக்திகளின் பிரகாரம் நடத்தக் கூடிய மூவரை அழைத்து அவர்களுக்கு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டு மென்று சொல்லி வைத்து விட்டு கோவிந்தன் முன்வாசல் வழியாய்ச் சென்றார். அவர் சற்று தூரம் சென்றதும் அவர் நிழலைப் போல் ஒருவர் அவரைப் பின் பற்றினார். ஏதோ வீட்டில் மறந்து வைத்து விட்டு வந்தவர் போல் திரும்பியும் காரியஸ்தர் வீட்டுக்குக் கோவிந்தன் வர, அவரும் பின் பற்றி வந்து மறைவிடத்திற்கு போகு முன் ஒருவன் அவர் எதிரில் வந்து "ஏனையா இந்த ரோஜா புஷ்பங்களைத் தோட்டத்தில் வந்து அறுத்துக் கொண்டு வந்தீர்," எனக்கேட்டான். "என்ன! யாரிடம் விளையாடுகிறாய்? யார் உன் தோட்டத்திற்குள் வந்தார்கள்?" என அவன் கேட்டதும், "நீ அறுத்துக் கொண்டு வந்ததை நான் பார்த்துக் கொண்டு பின்னால் வந்து கையும் மெய்யுமாய்ப் பிடிக்கும் போதே இவ்வாறு சொல்லுகிறாயே! நீ பக்காத் திருடனாயிருக்க வேண்டும்" என்றான். துப்பறிபவன் பளீரென்று அபாண்டம் சொன்னவன் கன்னத்தில் ஓர் அறை அறைந்து விட்டு ஓடிப்போகப் பார்க்கும் போது அவன் கூச்சலிட தோட்டத்திலிருந்து இன்னும் மூவர் ஓடி வந்து நால்வருமாகச் சேர்ந்து அவனைப் பிடித்துக் கொண்டு போலீஸ்காரரை அழைத்து வர ஆள் அனுப்புவதாயும், அதுவரையில் தோட்டத்தில் மரத்தில் கட்டி வைப்பதென்றும் தீர்மானித்து அவனை உள்ளே அழைத்துக் கொண்டு போனார்கள். உள்ளே சென்ற கோவிந்தன் பின் வாசல் வழியாய்ப் போக அவரைப் பின் தொடர்ந்து அங்கிருந்த துப்பறிவோன் செல்ல, அவர் ஏதோ மறந்து விட்டவர் போல் மீண்டும் வீட்டுக்குள் வர துப்பறிபவன் மறைவிடத்தில் வந்து நின்றதும் பக்கத்திலிருந்த மாதுளம் பழங்கள் அறுத்ததாக அங்கு ஒருவன் பழங்களுடன்

வந்து அவனைப் பிடிக்க, அங்கும் கூக்குரலுண்டாகி தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த வேலைக்காரர் வந்து அவனையும் பிடித்துப் போக, கோவிந்தன் மாட்டுத் தொழுவக் கதவின் பக்கம் போக அங்கு மறைந்திருந்த துப்பறிபவன் பின் பற்ற, அப்போது ஒரு பெண் அவனைப் பிடித்துக் கொண்டு தன் மேல் கைபோட்டதாய் பெருங்கூச்சலிட, அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் ஓடி வந்து அவனைப் பிடித்து அடித்து வீட்டுக்குள் கொண்டு போனார்கள். அம்மூவரையும் மூன்று பக்கங்களிலிருந்து பிடித்து உள்ளே கொண்டு வந்த போது, கோவிந்தன் காரியஸ்தரின் மோட்டார்வண்டியில் தன்சாமான்களுடன் எல்லோருக்கும் கேட்கும்படி ஊருக்குப் போவதாய்ச் சொல்லி வழியனுப்பிக் கொண்டு சென்றார். மூன்று துப்பறிவர்களுக்கும் இன்னது செய்வதெனத் தெரியவில்லை. அவரைப்போக விடாமல் தடுப்பதற்கு மார்க்கமே யில்லை. தங்களையோ எமகிங்கரர்களைப் போல் பல தடியர்கள் திருட்டுக் குற்றம் சாட்டிப் பிடித்துக் கொண்டு நிற்கிறார்கள். ஒன்றும் தெரியாமல் அப்போதுதான் புதிதாய் வந்தவன் கூட, அவன் திருடிக் கொண்டு ஓடிவரும் போது தான் ஒரு பர்லாங்கு தூரத்திலேயே பார்த்ததாக யாரும் சொல்லிக் கொடுக்காமலே தாராளமாய்ப் பொய் சாக்ஷி, சொல்லுகிறான். தெருவில் போய்க் கொண்டிருக்கும் போதே "அதோ திருடன் ஓடுகிறா"னென்று அவனைத் துரத்தி ஓடினால் தெருவில் போவார் வருவோரெல்லாம் கூடத் தொடர்ந்து அவர்களும் பார்த்தது போல் 'அதோ திருடன் ஓடுகிறான்' என்று சொல்லிக்கொண்டே பின்பற்றி ஓடுவதும் இவ்வாறு பலர் சேர்ந்து ஓடிப் பிடிப்பதும் இயற்கை தானே. அவ்வாறே இருவர் திருடியதையும் ஒருவன் அப்பெண் மேல் கை போட்டதையும் பார்த்ததாக முன் பின் அறியாத பலர் சொல்லத் தயாராய் வந்துவிட்டார்கள். காரியஸ்தர் ஒன்றுமறியாதவர் போலும் அப்போது தான் அப்பெருங் கூட்டத்தைக் கண்டவர் போலும் "என்ன கும்பல்? என்ன கூச்சல்?" எனக்கேட்டார். சுமார் ஐம்பது ரோஜா புஷ்பங்களை அறுத்துக் கொண்டு ஓடுவதைத் தான் பார்த்துத் துரத்திப் பிடித்ததாகச் சொன்னான். அப்படியே மாதுளம் பழங்கள் அறுத்ததாகவும், பெண் தன் மேல் அவன் கை போட்டதாயும் சொன்னாள். அவர் எல்லாரையும் பேச வேண்டாமென்று சொல்லி தன்வீட்டுவெராந்தாவில் போட்டிருக்கும் சாய்வு நாற்காலியில் போய் உட்கார்ந்து கொண்டு ஒவ்வொருவராய் கூப்பிட

விட்டு பேர் ஊர் முதலியனவும் அங்கு என்ன ஜோலியாய் வந்தார்களெனவும் கேட்டார். தாங்கள் இந்த ஊர்காரரல்லவென்றும் சிங்கள தேசத்தாரெனவும் ஒரு ஜோலியாய் அங்கு வந்ததாகவும் சொன்னார்கள். இந்த ஊரில் உங்களை யாருக்காவது தெரியுமா? எங்கு ஜாகை? என்று கேட்டார். நாங்கள் மூவரும் ஓரே வீட்டில் தான் ஜாகை வைத்து ஒன்றாய்த் தானிருக்கிறோம். ஒன்றாய் தான் ஓரே ஜோலியாய் வந்தோம் என்றார்கள். அதற்குள் அங்கிருந்த ஒரு வாயாடி, "எஜமான்! அவர்களெல்லாம் ஓரே ஜோலியாய் தான் இங்கு வந்தார்களே தவிர சும்மாவரவில்லை. அந்த ஜோலி என்ன தெரியுமா? தங்கள் பங்களாவில் கொள்ளையடிக்கும் ஜோலிதான், அதனால் தான் ஒருவன் இந்த வாசல், ஒருவன் அந்த வாசல், மூன்றாவது ஆசாமி சந்து வாசல் ஆகிய மூன்றிடங்களிலும் நின்று எத்தனை பேர் இருக்கிறார்கள், போக வர வழி யெங்கே என்று வேவு பார்த்துக் கொண்டிருந்தார்கள். திருடும் கை சும்மாயிருக்குமா? ஒருவன் ரோஜா புஷ்பங்களையும், மற்றவன் மாதுளம் பழங்களையும் இன்னொருவன் ஒரு பெண்ணையும் திருடப்பார்த்தார்கள். அது தான் அவர்கள் வந்த ஜோலி, தாங்கள் தாக்ஷண்யம் பார்ப்பதில் குணமில்லை. ஒரு துண்டு எழுதி போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பி விடுங்கள் என்றான்.

காரியஸ்தர்:—அவர்களைப் பார்த்தால் திருட வந்ததாகத் தோன்ற வில்லை. ஆகையால் தீரவிசாரித்துச் செய்வதே நலம்.

வாயாடி:—எஜமான்! தங்கள் கழுத்தை வெட்டினால் கூட அவனை நல்லவனென்றுதான் தாங்கள் சொல்லுவீர்கள். மூன்று திருட்டுப் பயல்கள் மூன்று பக்கங்களில் ஒளிந்து ஒளிந்து, எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நான் சுமார் மூன்று மணி நேரம் கவனித்து விட்டு இப்போது தான் சாப்பிடப் போனேன்; அதற்குள்ளாக ரோஜா புஷ்பங்கள், மாதுளம் பழங்கள் திருடினதோடு ஒரு பெண் மேலும் கை போட்டு விட்டார்கள். இப்போது பிடித்திராவிட்டால் இரவில் திட்டமாய் தங்கள் பங்களாவை கன்னமிட்டுத் திருடுவார்கள். உங்களுக்கு எல்லாரும் நல்லவர்கள் தான். நீங்கள் விசாரித்தது போதும், ஒரு சீட்டு எழுதி போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பிவிடுங்கள். ஆனால் அப்படி அனுப்புவதி

லும் ஒரு அபாயம் இருக்கிறது. ஒரு வேளை இந்த பாவிகளுடன் வந்தவர்கள் இன்னும் 40, 50 பேர் இருப்பார்கள், இவர்களைப் பிடித்துக் கொண்டு போகும் போது அவர்கள் வந்து எதிர்த்து எங்களை யைப் புடைத்து இவர்களை விடுவித்துக் கொண்டு போனு லும் போவார்கள்; ஆகையால் போலீஸ் இன்ஸ்பெக்டரை இங்கு வரவழைப்பதே நலம்.

என்றான். பலர் ஆமோதித்தனர். அவர் அவ்வாறே செய்வதாய்த் தீர்மானித்து அவர்கள் ஜோலிக்கு யாரும் போகக்கூடா தெனத் திட்டப்படுத்திக் கொண்டிருந்தார். அப்போது மோட்டார் ஓட்டி வந்து அவர் சொன்ன பிரகாரம் தான் சென்னைக்கு டிக்கட் வாங்கிக் கொடுத்து ரெயிலேற்றி அவர் சாமான்களை யெல்லாம் பூட்டியிருந்த வண்டியைக் கார்டைக் கூப்பிட்டு திறக்கச் செய்து முதல் வகுப்பு வண்டியில் வைத்து விட்டு வந்ததாக எல்லோருக்கும் கேட்கும்படி சொன்னான். காரியஸ்தர் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு தனது தோட்டத்தில் நடந்ததாகத் தான், தன் வேலைக்காரர் மூலம் கேள்விப்பட்ட விஷயங்களை எழுதி அவரையே வந்து விசாரிக்கும்படி கேட்டுக் கொண்டார்: இன்ஸ்பெக்டர் சர்க்கார் வேலையாய் பக்கத்து கிராமத்துக்கு சென்றிருப்பதாகவும், அவர்கள் கடிதத்தை பதிவுசெய்து கொண்டதாகயும் வந்தவுடன் வரச் சொல்வதாகவும் அது வரையில் இங்கேயே அவர்களை பத்திரமாய் வைத்திருக்கும்படியும் ஸ்டேஷன் குமஸ்தா சொன்னதாக வந்து சொன்னான். போலீஸ் இன்ஸ்பெக்டர் மறுநாட் காலையில் வந்து விசாரிக்க, தாங்கள் துப்பறிபவர்களென்றும் திருவல்லிக்கேணி துப்பறியும் கோவிந்தனைப் பின் பற்றி வந்ததாகவும் சொன்னார்கள். திருவல்லிக்கேணி துப்பறியும் கோவிந்தனின் சாமர்த்தியங்களை இன்ஸ்பெக்டர் நன்கறிந்தவராதலால், "கோவிந்தன் திருட்டைத் துப்புத் துலக்க வந்த தீரர்களா நீங்கள்" என ஏளனமாய்க் கேட்டார். அவர்கள் கோவிந்தன் ஒருவருடைய இடத்தைக் கண்டு பிடிக்க வந்ததாகவும், தங்களுக்கு கோவிந்தனுடைய சாமர்த்தியமில்லாததால் அவரைப் பின் பற்றி வந்தால் அவர் மூலமாய் அந்த ஆசாமியின் இருப்பிடத்தை அறிந்து கொள்ளலாமென்ற எண்ணத்துடன் வந்ததாகவும், ஒருவர் இருவர் அவரைப் பின் பற்றினல் கோவிந்தன் ஏமாற்றி விட்டுச் சென்று விடுவாரென்று தாங்

கள் மூவர் வந்ததாகவும், தாங்களின்னாரென்றும் தங்களுடைய அடையாளத்தையும் காட்டினார்கள். இன்ஸ்பெக்டர் ஏஜண்டவர்களிடம் கோவிந்தன் அங்கு வந்தாரா எனக் கேட்க, தலைமை ஸ்தலத்திலிருந்து கணக்குகள் பார்க்க தாமோதிரம் என்பவரை அனுப்பியிருப்பதாகவும் அவருக்குக் கணக்குகள் காட்டும்படி லாஜரெஸ் எழுதிய கடிதத்தை எடுத்துக் கொடுத்ததோடு, அவர் கணக்குகள் தணிக்கை செய்ததற்கு அத்தாக்ஷியாக தாமோதிரம் என்று கையொப்பமிட்டதைக் காட்டினார். போலீஸ் இன்ஸ்பெக்டர் அவர்களைப் பற்றி கொளம்புக்குத் தந்தி கொடுத்து விவரம் அறியும் வரையில் அவர்களை வருத்தத்துடன் கைதிகளாக வைத்திருக்க வேண்டிய பிரமேயம் ஏற்பட்டதற்காகத் தான் வருந்துவதாகவும் உடனே தந்தி கொடுப்பதாயும் சொல்லி அவர்களை அழைத்துச் சென்று போலீஸ் சாவடியின் அறையில் போட்டு பூட்டாமல் நாற்காலிகளில் உட்காரவைத்து மரியாதையாய் ஆகாராதிகள் கொடுத்து இருக்கச் சொன்னார். சாயங்காலம் அவர்கள் சொன்ன பிரகாரம் துப்பறிவோர் தானென்றும் திருடரல்ல வென்றும் தந்தி வந்த பின் அவர்களை விட்டார்கள். கோவிந்தன் 24 மணி நேரங்களுக்குமுன் தங்களை ஏமாற்றி தங்கள் பேரில் வீண் அபாண்டங்கள் சுமத்திச் சென்று விட்டதால் அவர் இருப்பிடம் அறிவது கஷ்டமெனவும் ஆகிலும் சென்னைக்கு டிக்கட் வாங்கியனுப்பியதாக மோட்டார் ஓட்டி சொன்னதால் அங்கு போய் விசாரிப்பதே நலமென நினைத்துச்சென்னை புறப்பட்டனர். சென்னை சென்ட்ரல் ஸ்டேஷன் சேர்ந்ததும் அவர்களை ரெயிலில் கோவிந்தனின் சிஷ்யனாகிய சீனு சந்தித்து அவர்கள் சென்னையில் தங்கியிருக்கும் வரையில் கோவிந்தன் பங்களாவில் ஜாகையும் சாப்பாடு முதலியனவும் வைத்துக் கொண்டு அவர் மோட்டார் வண்டியிலேயே தன்னை அழைத்துக் கொண்டு போய் முக்கியமான இடங்களைக்காட்டச் சொன்னதாகவும்யாதொரு குறைவில்லாமல் கவனித்துக் கொள்ளும்படி உத்தரவு கொடுத்து விட்டு, அன்று காலைதான், அவசர ஜோலியாய் சென்றிருப்பதாகச் சொன்னார். அவர்கள் முகங்கள் வெட்கிப்போய் தாங்கள் உடனே கொளம்புக்குப் போக வேண்டிய அவசர ஜோலி யிருப்பதாயும் ஆதலால் கோவிந்தன் வீட்டிற்கு வர சாவகாசமில்லாததற்காக வருந்துவதாயும்; இன்னொர் முறை சென்னைக்கு வரும்போது அவசியம் அவர் பங்களாவில் வந்து தங்குவதாகத் தெரிவிக்கும்படி

சொல்லி வந்தனுபசாரத்துடன் சீனுவைத் திருப்பினர். அம்மூவ
ரும் அது முதல் என்ன செய்கிறார்களென்று கோவிந்தனைச் சேர்
ந்த பல துப்பறிவோர் கவனித்து அவர்களைப் பின்பற்றிச்
சென்றனர்.

நிற்க, ராஜமகேந்திரபுரத்தில் மாலை 5-57-மணிக்கு ரெயிலில்
ஏறிய கோவிந்தன் அடுத்த ஸ்டேஷனாகிய கோதாவரியில் போய்
இரவு 6-7-க்கு இறங்கி பிரயாணிகள் தங்கும் முசாபரி பங்களா
சென்று பங்களா காவற்காரன் வெளி சென்றிருந்ததால் ஒரு அறை
யில் தமது சாமான்களை இறக்கி வைத்துக் கொண்டு பங்காளி பாபு
வாக வேஷம் தரித்துக்கொண்டு பானர்ஜி என்ற பேருடன் முசாபரி
பங்களாவில் வசித்து, முசாபர் பங்களா கணக்குப் புஸ்தகத்திலும்
பானர்ஜி என்று கையொப்பமிட்டார். அதுவரையில் அவர் நிழலைப்
போல் பின் தொடர்ந்து வந்த மூன்று துப்பறிவோர் அப்போது
அவரைப் பார்த்தால்கூட கோவிந்தன் என்று சந்தேகிக்க முடியாது.
நமது வாசகர்கள் கோவிந்தன் முன்னமேயே ஏன் இவ்வாறு
வேஷம் தரித்து தன்னைப் பின்பற்றி வந்த துப்பறிபவர்களை ஏமாற்றி
யிருக்கக்கூடாது என நினைக்கக்கூடும். துப்பறிபவர்களுக்கெல்லாம்
வேஷம் போடல் நன்றாய்த் தெரியுமாதலால் கோவிந்தன் ஒரு வீட்
டிற்குள் சுயரூபத்துடன் சென்று வேறு ரூபத்துடன் வெளிவந்தால்
கூட துப்பறிவோருக்கு திட்டமாய்த் தெரியா விட்டாலும் சந்தேகி
த்தாவது மூவரில் ஒருவர் பின் தொடர்ந்து கவனித்துக் கண்டு பிடி
த்துவிடக் கூடுமாதலால்தான் அவ்வாறு செய்யவில்லை. இப்போது
ரோட்டில் போவோர் வருவோரை யெல்லாம் கவனித்துக் கண்டு
பிடிக்க முடியாதாதலால்தான் அவர் ஒரு மணி நேரம் சாவகாசம்
கேட்டார். பானர்ஜி மறுநாட் காலை 8-57-மணிக்கு கோதாவரியிலி
ருந்து ராஜமகேந்திரபுரம் வந்திறங்கினர். அவர் எவ்வாறு சுலப
மாய் வேஷம் மாற்றிக் கொள்ளுகிறாரோ அவ்வாறே அவர் பெட்டி
களும் பானர்ஜி என்று எழுதப்பட்ட உரைபோட்ட பேர்களுடன்
நிறம் மாறி காணப்பட்டன. தனக்கு அன்றைய ரெயிலில் பெங்களூ
ரிலிருந்து ஒரு காய்கறிக் கூடை வரவேண்டுமென்றும், வந்ததாவெ
ன்றும், ஒவ்வொரு கூடையையும் கவனித்துப் பார்த்தார். ஸ்ரீதரன்
அண்ட் கம்பெனி காரியஸ்தர் ராஜமகேந்திரபுரம் என விலாசமிட்ட
கூடையொன்று பெங்களூர் வியாபாரிகளான ஓப்பலப்பா பிரதர்ஸ்

இடமிருந்து வந்திருந்தது. அதற்காக வந்து காத்திருந்த வேலைக்காரன் அதை வாங்கிக் கொண்டு போய் காரியஸ்தரிடம் கொடுக்கப் போனான். அப்போது அங்கு குடிக்கூலி மோட்டாரில் வந்திறங்கிய பானர்ஜி என்னும் கனவான் வியாபார விஷயமாய் காரியஸ்தரிடம் பேசிக் கொண்டிருக்கும்போது வேலைக்காரன் கூடையைக் கொண்டு வந்து வைத்தான். அவர் தெலுங்கு பாஷையில் "விலாசச்சீட்டை எடுத்துவிட்டு நான் சொன்ன பிரகாரம் சீட்டுப் போட்டு ஜல்தியாய்க் கொண்டுபோய் அடுத்த வண்டியில் போகும்படி அனுப்பு" என்றார். தான் பேச வேண்டிய விஷயத்தைச் சுருக்கமாய்ப் பேசி முடித்துக் கொண்டு பானர்ஜி ரெயில்வே ஸ்டேஷன் சென்று காத்திருந்தார். மறுபடியும் அக்கூடை ஸ்ரீதரன் அண்ட் கோ காரியஸ்தர் சாமல் கோட்டை என்ற விலாசமிட்டு அங்கிருந்து அடுத்த வண்டியில் அனுப்பப்பட்டது. அக்கூடைக்காக அங்கு ஒரு சேவகன் காத்திருந்து பெற்றுப் போய் காரியஸ்தரிடம் கொடுக்கப் போனான். அச்சமயம் பானர்ஜி அந்தக் காரியஸ்தரிடம் போய் வியாபார ரீதியாய்ப் பேசிக் கொண்டிருந்தார். வேலைக்காரன் கூடை கொண்டுவர அந்த அறையிலேயே வைத்து விடும்படி உத்தரவிட்டார். அவனும் வைத்து விட்டுச் சென்றான். அவர் அக்கூடையைப் பிரிக்கவுமில்லை வேறு எங்கும் அனுப்பவுமில்லை. என்ன செய்யப் போகிறாரென்று தெரியாததால் பானர்ஜி வெகு நேரம் விலைகளைப் பற்றி தாவா செய்து கொண்டும் தலைக்கு போட்டால் காலுக்கும் காலுக்குப் போட்டால் தலைக்கும் போட்டுக் கொண்டு, போகாமல் பேசிக் கொண்டேயிருந்தார். ஏஜெண்டுக்கு அவரிடம் வியாபாரம் செய்வதின் மூலமாய் பெரும் இலாபம் கிடைக்கும் போல் தோன்றினதால் அவருக்கு அங்கேயே சாப்பாடுபோட்டு அவசர வேலைகள் பார்க்கும் நேரம் போக மற்ற நேரங்களில் அவரிடம் பேசி எப்படியாவது வியாபாரம் முடிவடையும்படி செய்ய எண்ணினார். மாலை 5-மணியாகியும் வியாபாரம் முடிவடையும் மார்க்கம் காணோம். தான் மாலை நேரங்களில் நித்யம் படகுவிட்டு தேகாப்பியாசம் செய்வதாகவும் அதற்காகப் போவதாகவும் சொல்லி மாலை சிற்றுண்டி முதலியவற்றோடு அக்காய்கறி கூடையையும் கொண்டுபோய் தன் படகில் வைக்கும்படி உத்தரவிட்டார். அப்போது பானர்ஜி அவரிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றார். மறுநாள் மாலை சாமல்கோட்டா ஸ்ரீதரன் கம்பெனி காரியஸ்தர் படவு புறப்படும்போது முன்னும்

பின்னும் சென்று கொண்டிருந்த பல படவுகளில் ஒரு படகில் பானர்ஜி ஐரோப்பியராக மாறி தனது வேலைக்காரனுடன் தின்பண்டங்கள் கூடை வைத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தார். காரியஸ்தரின் படகு சுமார் 5-6 மைல்கள் சென்று நான்கு பக்கங்களிலும் தண்ணீர் சூழ்ந்திருந்த ஒரு திட்டின் பக்கம் போய் நின்றது. அதிலிருந்த சாமான்களை யெல்லாம் ஒவ்வொன்றாய் காரியஸ்தர் அத்திட்டில் கொண்டு போய் இறக்கினர். அங்கிருந்த வேலைக்காரன் அதை உள்ளே கொண்டு போய் வைத்துக் கொண்டிருந்தான். ஐரோப்பிய வேஷத்துடனிருந்த கோவிந்தன் தன் படகையும் அக்கரை ஓரத்தில் கொண்டு போகும்படி படகுகாரர்களுக்கு உத்தரவிட்டார். அப்படகோட்டிகள் அத்தீவு, ஸ்ரீதரன் கம்பெனிக்குச் சொந்தமென்றும், அதில் சர்க்காரிடம் அனுமதி பெற்று சர்க்கார் பராமரிப்பில் ஸ்ரீதரன் கம்பெனியாரால் கஞ்சா பயிரிடுவதால் சர்க்கார் கலால் இலாகாதார் துப்பாக்கிகள் சகிதம் காவலிருப்பதாகவும் எவரையும் அங்கு விடமாட்டார்களென்றும் அதற்காகவே தீவில் நான்கு பக்கங்களிலும் 12-அடி உயரமுடைய இரும்பு முள்வேலி போட்டிருப்பதாகவும் அங்கு எவரும் போக அனுமதிக்க மாட்டார்களென்றும் தங்கள் படகை அதிகாரிகள் அனுமதியின்றி அங்கு கொண்டு போனல் படகுக் கொடுத்திருக்கும் உரிமை ரத்து செய்துவிடப்படு மென்றும் ஆகையால் படகை அங்கு செலுத்த முடியாதென்றும் சொன்னார்கள். அதற்கேற்றாற்போல் அங்கு "சர்க்கார் பராமரிப்பில் வைக்கப்பட்ட கஞ்சாத் தோட்டம். அனுமதியின்றி அத்துமீறி வருபவர்கள் ஆக்கினைக் குள்ளாவார்கள்." என ஒரு பலகையில் ஆங்கிலத்திலும் தெலுங்கு பாஷையிலும் எழுதப்பட்டு நடப்பட்டிருந்தது. தான் போய் அந்த அதிகாரிகளிடம் ஒரு வார்த்தை பேசிவர வேண்டுமென்று கோவிந்தன் எவ்வளவு தூரம் சொல்லியும் படவுகாரார் முன்கூட்டி எழுதி கரைக்குப் படவுபோக அனுமதிச்சீட்டு பெற்றிருந்தாலொழிய எந்தப் படவும் அக்கரையின் 10-கெஜ தூரத்திற்குள் போகக்கூடாதென்றும் போனல் அங்குள்ள கலால் இலாகா அதிகாரிகளுக்குச் சுடுவதற்குக் கூட அதிகாரமுண்டென்றும், அத்துடன் மீண்டும் படகு ஓட்ட அனுமதிச் சீட்டே அளிக்கப்படமாட்டா தென்றும் மறுத்து விட்டனர். அங்கே என்னென்ன இருக்கிறதென்று கோவிந்தன் கேட்டார். ஸ்ரீதரன் கம்பெனிக்குச் சொந்தமான மாளிகை யொன்றிருப்பதாகவும் அதற்குப்

பக்கத்தில் கஞ்சாப் பயிர் வேலை மேல் பார்க்கும் ஸ்ரீதரன் கம்பெனியின் விவசாய உத்தியோகஸ்தரும் வேலைக்காரரும் வசிக்கும் வெளிவீடுகள் தனியாகக் கட்டப்பட்டிருப்பதாகவும், ஸ்ரீதரன் கம்பெனி சொந்தக்காரரான ஸ்ரீதரர் வந்தால் மட்டும் மாளிகை திறக்கப்படுமென்றும் இல்லாவிட்டால் மூடப்பட்டுதானிருக்குமென்றும் இப்போது அவர்கள் கொளம்பு தேசம் போயிருப்பதால் மூடப்பட்டிருக்கிறதென்றும் சொன்னார்கள். அத்துடன் அங்கு என்ன சாமான்கள் எடுத்துப் போனாலும் அங்கிருந்து வந்த சாமான்கள் எடுத்து வந்தாலும் கலால் இலாகாதார் சோதிக்காமல் விடமாட்டார்களென்றும் தெரிவித்தனர். கோவிந்தன் மீண்டும் சாமல்கோட்டை போய் சேர்ந்தவுடன் அத்தீவில் யார் யார் வசிக்கிறார்களெனக் கேட்டார். விவசாய உத்தியோகஸ்தரும் வேலைக்காரரும் கலால் உத்தியோகஸ்தர் சிப்பந்திகள் நீங்கலாக வேறு யாரும் வசிப்பதில்லையென்று விசாரித்தறிந்து கொண்டார். அப்பால் அங்கு மாளிகை எந்தப் பாகத்தில் கட்டப்பட்டிருக்கிறதென்றும், கலால் இலாகாதாரும், விவசாய வேலைக்காரரும் மாளிகைக்கு போகவர சாதனங்களுண்டாவென்றும் விசாரித்தார். தீவின் பாதி பாகத்தின் மத்தியில் சுற்றி வேலியிட்டிருப்பதுபோல் மாளிகையையும் வேலி போட்டுத் தனியாகப் பிரித்திருப்பதாகவும், மாளிகை சொந்தக்காரர் வந்திருக்கும் காலம் நீங்கலாக இதர காலங்களில் மாளிகை பூட்டப்பட்டு தானிருக்குமென்றும் அதன் சாவியும் சொந்தக்காரரிடமே தானிருக்குமென்றும் அவர்கள் அங்கு வசிக்காத காலத்தில் எவரும் அங்கு போக வேண்டிய பிரமேயமே கிடையாதென்றும் தெரிவித்தார். வெளியார் எவராவது அம்மாளிகையைப் போய்ப் பார்க்க விரும்பினால் போக அனுமதிக்கப்படுவார்களா எனக் கேட்க அனுமதி கொடுக்கப்படவே மாட்டாதென்று திட்டமாய்த் தெரிவித்தனர். பெங்களூரிலிருந்தும் கல்கத்தாவிலிருந்தும் அதிக விலையுள்ள காய்கறிகளும் பழங்களும் அனுப்பப்பட்டு வருவதாலும் அங்கு வசிக்கும் விவசாய உத்யோகஸ்தருக்கு அவ்வளவு செலவு செய்து அப்பழங்களும் காய்கறிகளும் வரவழைக்கப் போதிய வருமானமில்லையென்றும் சாமல்கோட்டாவில் அவ்வளவு வியாபாரமில்லாமலிருந்ததும் மூன்றுலக்ஷ ரூபாய் தரிசன உண்டியல் மூலமாய் அனுப்பப்பட்டதாக கணக்குகள் காட்டுவதாலும் ஸ்ரீதரன், கலால்

இலாகா உத்தியோகஸ்தர் உளவின் பேரிலோ, அல்லது அவர்களு க்குக் கூடத் தெரியாமலோ அங்கு வசித்து வருகிறுரெனவும் நினை த்து அங்குள்ளவர்களை யெல்லாம் ஏமாற்றிப் போவதற்கு ஏதாவது மார்க்க முண்டாயென யோசித்துக் கொண்டிருந்தார்.

கொளம்பு துப்பறிவோர் சீனுவிடம் தாங்கள் கொளம்புக்குப் போவதாகச் சொன்ன போதிலும், தங்களுக்கு கோவிந்தனுல் ஏற் பட்ட அவமானத்தை நினைத்து நினைத்து வருந்தி எப்படியாவது கோவிந்தனை மீண்டும் கண்டு பிடித்து அவர் மூலமாயாவது அல்லது சுதாவிலாவது ஸ்ரீதரரைக் கண்டுபிடிக்காது கொளம்புக்குச் செல்வ தில்லையென்றும் கோவிந்தன் தங்களை அவமதித்ததிற்குப் பழிக்குப் பழி வாங்குவதென்றும் பிரதிக்ஞை செய்து கொண்டு அம்மூவரும் கூடி யோசனை செய்து ஒருவர் சென்னையிலிருந்து முக்கியமான ஸ்டேஷன்களில் எந்த ஸ்டேஷனிலாவது கோவிந்தன் இறங்கினுரா வென்று விசாரித்துக் கொண்டே பிட்ரகுண்டா வரை போவதென் றும், இன்னொருவர் பிட்ரகுண்டாவில் ஆரம்பித்து தென்னுலி வரை செல்வதென்றும் அம்மூவரில்தலைமை துப்பறிவோர் ராஜமஹேந்திர புரத்திலிருந்து விசாரித்துக் கொண்டு தென்னுலி வரை வருவதென் றும் ஏற்பாடுகள் செய்துக் கொண்டு புறப்பட்டனர். இம்மூவரையும் பின் பற்றி கோவிந்தனின் ஆட்கள் அவர்கள் நிழல் போல் சென்ற னர். தலைமை துப்பறிவோன் இராஜமஹேந்திரபுரம் வந்து அன்று சென்ற ரெயில்கார்ட் யார் என்று விசாரித்து கோவிந்தனின் அடையாளங்களைச் சொல்லியும் அவர் சாமான்களின் அடையாளங் களைச் சொல்லியும் அவரைத் தாங்கள் பார்த்ததாக ஞாபகமிருக்கிற தா எனக் கேட்டார். அவர் இராஜமஹேந்திர புரத்தில் முதல் வகு ப்பில் ஏற வர கதவு பூட்டப்பட்டிருந்ததால் தன்னை அழைத்து கத வைத் திறக்கச் சொன்னுரென்றும், அவர் சென்னைக்குச் செல்வ தாகச் சொன்னுரென்றும், சென்னைக்குச் பிரயாணச் சீட்டு(டிக்கட்டு) வாங்கியிருந்தாரென்றும் ஆனுல் பக்கத்து ஸ்டேஷனுகிய கோதா வரியில் அந்தவண்டியைத் திறந்து கொண்டு ஒரு வங்காள கனவான் இறங்கிய தாகவும், தான் திறக்கும்போது அக்கனவான் அவ்வண்டியி லில்லையே! ஒருக்கால் கக்கூசுக்குப் போயிருந்து அப்பால் வந்தாரோ என்னமோ வென நினைத்து தான் அதைப் பற்றி சிந்திக்கவேயில்லை யென்றும் ஆனுல் சில ஸ்டேஷன்கள் சென்ற பின் தான் மறுபடியும்

அவ்வண்டியைக் கவனித்த போது அது காலியாயிருந்ததென்றும் ஆகையால் அவர் கேட்கும் கனவான் எங்கு இறங்கினாரென்று தனக்குத் திட்டமாய்த் தெரியாதென்றும் சொன்னார். தலைமை துப்பறிவோன் கோதாவரி ஸ்டேஷனில் இறங்கிய வங்காளியின் ஆடை முதலிய அடையாளங்களைக் கேட்டுக் கொண்டு கோதாவரி ஸ்டேஷனில் இறங்கி விசாரித்து அந்த அடையாள முடையவர் முசாபர் பங்களாவில் இறங்கியதாக வண்டிக்காரர் மூலமாய் கேட்டறிந்து, அங்கு போய் விசாரித்து அப்பால் அவர் ராஜமஹேந்திர புரம் சென்று கூடைகளைக் கவனித்ததையும் அப்பால் காரியஸ்த ரிடம் போய் பேசியதையும் மீண்டும் கூடை ஸ்டேஷனுக்கு வந்ததைக் கவனித்து அத்துடன் சாமல் கோட்டா சென்று அந்த காரியஸ்தரிடம் அன்று முழுதும் பேசிக் கொண்டிருந்து அவர் கூடையுடன் புறப்பட்ட பின் சென்றதையும், மறுநாள் ஐரோப்பியரைப் போல் உருமாறி காலால் அதிகாரிகளைச் சந்தித்து விசாரித்த வரையில் அறிந்து கொண்டார். கொளம்பு தலைமை துப்பறிவோருக்குக் கோவிந்தன் கோதாவரியில் இறங்கியதாகத் தெரிந்ததும் மற்ற இரு துப்பறிவோருக்கும் தந்திகள் கொடுத்து அவர்களை வரவழைத்துக் கொண்டார். ஐரோப்பியராக உருமாறியிருக்கும் கோவிந்தன் எங்கு ஜாகை வைத்திருக்கிறாரெனக் கேட்டறிந்து பின்பற்றித் திரியும்படி இருவரை விட்டு விட்டு தலைமை துப்பறிவோன் மட்டும் மேற்சொன்ன விஷயங்களை யெல்லாம் ஆராய்ந்தறிந்து திட்டமாய் ஸ்ரீதரரும் செல்வமும் அத்திட்டில் தான் வசிக்கிறார்களென ஊகித்து திருநெல்வேலி சென்று சுந்தர ராஜன் பேரில் பிறப்பித்திருந்த வாரண்டைத் தன்னிடம் தரும்படியும், தான் கொளம்பு துப்பறிபவனென ரூபிக்கும் அதிகாரப் பத்திரங்களைக் காட்டிக் கேட்டார். அவர்கள் அவ்விடத்திய இன்ஸ்பெக்டர் ஒருவரிடம் வாரண்டைக் கொடுத்து சாமல் கோட்டா இலாகா போலீஸ் அதிகாரிகளுக்கும் கடிதம் கொடுத்து அத்துப்பறிவோனுடன் அனுப்பினார்கள்.

கொளம்பு தலைமை துப்பறிபவர் போலீஸ் இன்ஸ் பெக்டருடன் வந்து சாமல் கோட்டை போலீஸ் அதிகாரியிடம் திருநெல்வேலி ஜில்லா மாஜிஸ்டிரேட் கொடுத்த கடிதத்தைக்கொடுத்துவேண்டும் உதவி பெற்றுக் கொண்டு ஸ்ரீதரர் என்றசுந்தரராஜனைப் பிடிக்கப்போகும் போது தங்களை அவமானப்படுத்தி ஏமாற்றிய துப்பறி

யும் கோவிந்தனையும் கூட அழைத்துப்போய்ப் பிடித்து கோவிந்தனை அவமானப்படுத்தும் எண்ணத்துடன் ஐரோப்பியரைப் போல் மாறு வேடம் பூண்டிருக்கும் கோவிந்தனையும் கூட அழைத்துப் போக எண்ணி திருநெல்வேலியிலிருந்து கூட்டிக்கொண்டுவந்த போலீஸ் இன்ஸ்பெக்டருக்கும் அவ்வூரிலிருந்து உதவிக்கு அழைத்து வந்த இன்ஸ்பெக்டருக்கும் கோவிந்தன் தங்களை அவமானப்படுத்தி ஏமாற்றிச் சென்ற விருத்தாந்தங்களைச் சொல்லி அவர்களையும் தங்களுடன், கோவிந்தன் ஐரோப்பியராக வேடம் பூண்டிருக்குமிடத்திற்கு வரும்படி கூப்பிட்டனர். அவர்களுக்குக் கோவிந்தனுடைய பிரதாபங்கள் நன்கு தெரியுமாதலாலும் ஒருக்கால் இப்போது கோவிந்தன் அவர்களிடம் அவமானப்பட நேரிட்டாலும் தாங்கள் கூட சென்றால், தாங்களும் சேர்ந்து அவமதித்ததாக எண்ணி பின்னால் தங்களுக்கு கேடு விளைப்பாரெனப்பயந்து வர மறுத்து விட்டனர். இன்ஸ்பெக்டர்களையும் ஜவான்களையும் வெளியில் விட்டு விட்டு, தான்போய் அழைத்து வரச் சென்றார். அங்கு சேர்ந்ததும் தனது கூட்டாளியாகிய இரு துப்பறிவோரிடமும் பேசி விட்டு வெருந்தாவில் உட்கார்ந்து சுருட்டுப் பிடித்துக்கொண்டிருந்த ஐரோப்பியரிடம் அவர் சென்று “தாசனமையா கோவிந்தா!” என்றார். அவர் தன் பாட்டில் சுருட்டுப் பிடித்துக்கொண்டிருந்தார். மீண்டும் அவர் “ஐயா! கோவிந்தா! ஸ்ரீதரர் என்ற சுந்தரராஜுவின் இருப்பிடம் கண்டு பிடித்து அவரைக் கைதி செய்ய வாரண்டுடன் வந்திருக்கிறேன். தாங்களும் தயவு செய்து கூட வந்திருந்து உதவி செய்ய வாருங்கள்” என்றார். அப்போதும் அந்த ஐரோப்பியருக்கு இவர் என்ன சொல்லுகிறாரென்று தெரியாததால் தம் பாட்டில் சுருட்டுப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். தம்மை அலட்சியமாய் நினைத்தோ அல்லது என்ன செய்வதெனத் தெரியாமலோ கோவிந்தன் அவ்வாறு இருக்கிறாரென நினைத்து அந்தப் பிரதம துப்பறிவோன் அவர் சமீபத்தில் வந்து அவர் கைகளைப் பிடித்திழுத்து “வாருங்களையா” என்றார். அனுவசியமாய் தன்னைத் தொட்டிழுப்பதைக் கண்ட ஐரோப்பியருக்குப் பிரமாத கோபமுண்டாகி, கையைப் பிடித்திழுப்பதற்காக சாய்ந்திருந்த துப்பறிய வரது தவடை தனது கைக்குநேராக இருந்ததால் தனது கையைத் திமிறியிழுத்ததும் துப்பறிபவருடைய பற்கள் இரண்டு கீழே விழும்படி தவடையில் தடாலென அறைந்து விட்டு, தனது வேலைக்

காரனைக் கூப்பிட்டார். அவன் வந்ததும் அத்துப்பறிபவனைச் சுட்டிக்காட்டி "இவன் பைத்திரக்காரன் போலிருக்கிறது. இவனைப் பிடித்துக்கட்டு" என்றார். துப்பறிபவர் போய்க் கூப்பிட்டதையும் அவர் வராமல் அவர் பற்கள் இரண்டு கீழே விழும்படி தவடைசுத்தி செய்ததையும், துரை, வேலைக்காரனை அழைத்துக் கட்டச் சொல்வதையும் பார்த்த போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் என்ன விஷயமென்று பார்க்க அங்கு சென்றார்கள்.

துரை:—இன்ஸ்பெக்டர்! நல்ல வேளையாய் நீங்கள் இவ்விடம் வந்தீர்கள். இந்தப் பைத்தியக்காரப்பயல் சுருட்டுப் பிடித்துக்கொண்டுட்கார்ந்திருக்கும் என் கைகளைப் பிடித்திழுத்தான். இவனைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோங்கள்.

துப்பறிபவர்:—இந்தப் பூச்செல்லாம் என்னிடம் நடவாது. ஐரோப்பியரைப்போல் அபினயித்தால் ஏமாந்து போய் விடுவேனென நினைத்தீரா என்ன? கோவிந்தா! அந்த ஜெபம் இந்தச் சிங்களக்குட்டியிடம் சாயாது.

என்று ஆங்கிலத்தில் சொன்னார். அந்த ஐரோப்பியருக்கு இன்னும் அதிக கோபம் உண்டாகி இன்னொரு தவடையில் அறைய எழுந்தார். போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் சாந்தப்படுத்தி "அவர் தங்களைத் துப்பறியும் கோவிந்தனென உண்மையில் சொல்லுகிறார். அவர் சந்தேகத்தைத் தீர்க்க வழியிருந்தால் தீர்ப்பது நலம்" என்றார்கள். கொளம்புத் தலைமை துப்பறிபவர் "இதோ சந்தேகத்தை நிவர்த்தித்து விடுகிறேன்; அவர் பொய்த் தாடியை இழுத் தெரிந்து விட்டால் கோவிந்தன் என்னும் உண்மை தெரிந்து விடுகிறது" என்றதும் அந்த ஐரோப்பியருடைய தாடியைப்பலமாய்ப் பிடித்திழுத்தார். ஐரோப்பியருக்கு வலிபொறுக்க முடியவில்லை; இரண்டு கைகளாலும் துப்பறிபவரைப் பல அடிகள் அடிக்கவே, அவர் பலமாய்ப் பிடித்திழுத்ததில் சில தாடி ரோமங்கள் இரத்தத்துடன் இழுக்கப்பட்டன. ஐரோப்பியருக்கு அதிக ஆத்திரமுண்டாகவே கஷ்டத்துடன் விடுவித்துக்கொண்டு தன் கைத் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு வந்து சுட வந்தார். போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் அவரைச் சமாதானப்படுத்திவிட்டு துப்பறிபவரிடம் ஐரோப்பியருக்கிருப்பது பொய்த் தாடியல்லவென்றும் உண்மை தாடிதான்

என்றும் நீங்கள் தப்பபிப்பிராயம் கொண்டிருக்கிறீர்கள் என்றும் சொன்னார்கள்; அவர் இல்லையென்றும் அவர் கோவிந்தனே எனவும் சாதித்தார். அப்போது அந்த ஐரோப்பியருக்கு அவன் முட்டாளென்றும் பிடிவாதக்காரனென்றும் தோன்றி அவர் நினைக்கிறபடி தான் கோவிந்தனல்லவென்றும் தான் ஐரோப்பியன் தானென்றும் தான் கல்கத்தாவிலிருந்து 3-தினங்களுக்கு முன் வியாபார நிமித்தம் ஸ்ரீதரன் கம்பெனிக்கு வந்ததாகவும் அவருக்கு வந்த பல கடிதங்களையும் தந்திகளையும் காட்டினார். அப்போதும் அவருக்குத் திருப்தியாகவில்லை. அப்பால் அந்த ஐரோப்பியர் அவர் பேரில் இரக்கப்பட்டு என்ன பரீட்சை செய்து பார்த்தால் அவருக்குத் திருப்தியாகுமெனக் கேட்டார். தன்னிடமுள்ள ஒரு சோப்பால் துரையின் முகத்தைத் தன்னைக் கழுவ விட்டால் தெரியுமெனச் சொன்னார். அவ்வாறே அவரைச் சோப் கொண்டு வரச் சொல்லி தன் முகத்தைக் கழுவிப் பார்க்கச் சொன்னார். அவர் எத்தனை தரம் சோப் போட்டுக் கழுவியும் வெள்ளைத்தோல் வெள்ளையாகவே யிருந்தபடியால் அத்துரையிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு தொங்கவிட்ட தலையுடன் படகுக்குச் சென்று படகேறி எல்லோருமாகத் தீவுக்குச் சென்றனர். அங்கு போய் அங்கு காவலிருக்கும் அதிகாரிக்கு வாரண்ட்டைக் காட்ட, அவர் மாளிகை காலியாய் தான் இருக்கிறது எவருமில்லை யென்றார். எப்படியாவது சோதித்தறிய வேண்டுமென்று சொல்லி அங்குள்ள விவசாய உத்யோகஸ்தரிடம் தாங்கள் வந்த காரியத்தைத் தெரிவிக்க அவர் உடல் நடுக்கம் கொடுத்தது, வாய் குளறியது, கேட்ட கேள்விகளுக்கு ஒன்றுக் கொன்றாப் பதில் சொல்வதும் முன்னுக்குப்பின் முறண்படும்படி பேசுவதுமா யிருந்தார். கொளம்பு துப்பறிபவர்களுக்கு உற்சாகம் மேலிட்டது. மாளிகைக்குப் போகும் மத்தியிலுள்ள இரும்புக் கிராதிக் கதவைத் திறக்கும் சாவி கொடுக்கும்படி கேட்க முதலில் தன்னிடம் தான் இருப்பது வழக்கமென்றும் இப்போது ஸ்ரீதரர் வைத்துக் கொண்டிருக்கிறாரென்றும், இருப்பதாகவும், இங்கில்லை யென்றும் உளறினார்; சாவி கொடுக்காததால் பூட்டை உடைத்து மாளிகையண்டை போய்ப் பார்க்க, கதவுகளெல்லாம் பூட்டப்பட்டிருந்தன. பூட்டிக் கொண்டுதான் உள்ளிருப்பார்கள். ஆகையால் கதவுகளின் பூட்டுகளையும் உடைத்துப் பார்க்கவேண்டும் என்றதால் அவ்வாறே பங்களா முழுவதும் தேடினார்கள். தேடியும் அங்கு

எவருமில்லை. விவசாய உத்யோகஸ்தர் முகத்தில் களை தோன்றிற்று. தனது எஜமானரின் மாளிகைக் கதவுகளின் பூட்டுகளையெல்லாம் தான் எவ்வளவு சொல்லியும் தனது வார்த்தையையும், கலால் உத்யோகஸ்தர் வார்த்தைகளையும் நம்பாமல் உடைத்ததால் ஏற்படும் சகல நஷ்டங்களையும் கட்டி வாங்குவதோடு அதன் மூலமாய் ஏற்பட்ட அவமானத்திற்கு ஜவாபு சொல்லி ஆகவேண்டுமென வெகு மூடுக்காய்ப் பேசினர். அவர் முன் இருந்த மாதிரியையும் இப்போது பேசும் மாதிரியையும் பார்த்து துப்பறிவோரும், இன்ஸ்பெக்டர்களும் அங்கு சுந்தரராஜு இருந்திருக்கக் கூடுமென்றும் எவ்வாறு வெளியேறி யிருக்கக் கூடுமென்பது தெரியவில்லையென்றும் ஒருக்கால் இரகசிய அறைகள் ஏதாவது அங்கிருக்கின்றனவா என சரியானபடி சோதித்துப் பார்த்து ஒன்றும் அகப்படாமல் அலுத்துத் திரும்பினர்கள். தன் மனதில் ஒருக்கால் சுந்தரராஜு அங்கிருந்திருக்கலாமெனத் தோன்றியபோதிலும், கொளம்பு துப்பறிபவன் போதிய காரணங்களுடன் தான் வாரண்ட் கொண்டு வரும்படி செய்தானெனத் தோன்றியபோதிலும், "அனாவசியமாயும், நிஷ்காரணமாயும் அவ்வளவு தூரம் இழுத்தடித்தீர்களே! ஓர் ஐரோப்பியனை கோவிந்தனென நினைத்துப் பேசிப் பல பற்களை இழந்து அவமானப் பட்டீரே! இங்கே ஸ்ரீதரர் என்னும் சுந்தரராஜு திட்டமாய் இருப்பதாகச் சொல்லி இவ்வளவு தூரம் என்னை அழைத்து வந்து உபகாரமில்லாமற் போயிற்றே: ஆகையால் நீரே வந்து ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கு நேரில் சமாதானம் சொல்லி விட்டுப் போம்" என அவர்கள் மூவரையும் கூட அழைத்துக் கொண்டு இன்ஸ்பெக்டர் சென்றார்.

ஐரோப்பியராக வேஷம் மாறியிருந்த கோவிந்தன் எவ்வாறு துப்பறிபவர்களை ஏமாற்றிச் சென்றாரென்றும், அத்தீவில் உண்மையில் சுந்தரராஜுவும் செல்வமும் இருந்தார்களா இல்லையாவென்றும் இருந்திருந்தால் எவ்வாறு தப்பினர்களென்றும் அறிய நமது வாசகர்கள் ஆவலாயிருப்பார்களாதலால் அதைப்பற்றிச் சொல்லிவிடுவோம்.

கொளம்பிலிருந்து வந்த மூன்று துப்பறிவோரும் சென்னை ஸ்டேஷனில் இறங்கியதும் சீனு அவர்களைச் சந்தித்துப் பேசிய பின் அவர்கள் கோவிந்தன் வீட்டுக்கு வரமறுத்துச் சென்றபோது

கோவிந்தனின் ஆட்கள் அவர்கள் மூவரையும் பின் பற்றிச் சென்ற தாக எழுதியதை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்களென்றே நம்பு கிறோம். அத்துப்பறிவோரைப் பின்பற்றிச் சென்றவர்கள் அன்னா டக நடவடிக்கைகளைத் தந்திகளின் மூலமாய்க் கோவிந்தனுக்குத் தெரிவித்துக் கொண்டேயிருந்தார்கள். ஆகையால் கொளம்புத் தலைமைத் துப்பறிவோன் கோவிந்தன் கோதாவரி ஸ்டேஷனில் இற ங்கியதாகக் கண்டு பிடித்தது முதல் சாமல் கோட்டை வரும் வரை யில் நடந்தேறிய விஷயங்களை அப்போதைக்கப்போது கோவிந்தன் அறிந்திருந்தார். சாமல் கோட்டை காரியஸ்தரிடம் நாள் முழுதும் பேசிக் கொண்டிருந்தபோது கல்கத்தாவிலிருந்து அன்டர்சன் என் னும் ஓர் ஐரோப்பியர் 2 தினங்கள் பொறுத்து வியாபார ரீதியாய் ஸ்ரீதரன் அண்ட் கோ சாமல் கோட்டை காரியஸ்தரிடம் பேச வரு வதைப்பற்றி அறிந்திருந்தார். அதே நாள் தான் கொளம்பு துப்பறி வோரும் சாமல்கோட்டை வந்து சேர சாத்யமாகுமென அறிந்ததும் அண்டெர்சன் துரை 3-வது நம்பர் அறைதான் காலியாயிருந்தால் அதில் அன்று ரெயிலில் வந்து இறங்குவதாய்க் கொடுத்திருந்த தந்தி கோவிந்தனுக்குக் காண்பிக்கப்பட்டதால், முந்திய இரவே யாருக்கும் தெரியாமல் தமது சாமான்களை அந்தக் கட்டடத்திற் குள்ளேயே வேறு அறைக்கு அப்புறப்படுத்தி வைத்துப் பூட்டி ஸ்ரீதரன் அண்ட் கோ விற்குச் சென்றிருந்தார். அவர் அங்கு சென்றிருந்தபோதுதான் கொளம்பு துப்பறிவோர் வந்து விசாரித்து ஐரோப்பியராக அபினயிக்கும் கோவிந்தன் ஸ்ரீதரன் அண்ட் கோ காரியஸ்தர் அண்டர்சன் துரையை அழைத்து வர தமது மோட் டார் வண்டியைக் கொண்டு வரச் சொன்னார். அம் மூன்று கொளம்பு துப்பறிவோரும் அங்கு வந்து மறைந்திருப்பதை ஜன்னல் வழியாய் பார்த்த கோவிந்தன் தான் முசாபர் பங்களாவிற்கே போவதால் அவ் வண்டியிலேயே போவதாகவும், தானே துரையை அவ்வண்டியில் அனுப்பி விடுவதாகவும் சொன்னதால் அவர்கள் மோட்டார் ஓட்டுப வரிடம் ஒன்றும் சொல்லி யனுப்பவில்லை. கோவிந்தன் அன்று பெரிய தொப்பி போட்டு வந்திருந்ததாலும் சட்டென்று வந்து வண் டியில் ஏறி விட்டதாலும் அம்மூவரும் அவர் முகத்தை சரிவரப் பார்க்கவில்லை. கோவிந்தன் முசாபர் பங்களா சேர்ந்ததும் இறங்கி 3-வது நம்பர் அறைக்குள் போகும்போதுதான் பின்பற்றி வந்த துப்பறிவோர் மூவரும் பார்த்தார்கள். கோவிந்தன் உள்ளே

சென்றதும் அண்டெர்சனிடம் G 456-ம் நம்பர் மோட்டார் வண்டி ஸ்ரீதரன் அண்ட் கம்பெனியாரால் அவரை அழைத்து வரும்படி அனுப்பப்பட்டிருக்கிறதென்று சொல்லிவிட்டு பின் பக்க வழியாய் உள்ளே சென்று தனது சாமான்கள் வைத்திருக்கும் அறைக்குள் போய் பார்சியாக உருமாறி தனது பேர் பாட்டக். என்றும் தான் இரவு வண்டியில் வந்து அவசர ஜோலியாய் அதிகாலையில் காக்கிகுடா சென்று வந்தாரென்றும் பாட்டக் என்று முசாபர் பங்களா கணக்குப் புஸ்தகத்தில் கையெழுத்து வைத்துவிட்டு அங்கேயே இருந்தார். அண்டெர்சன் துரை சுமார் அரை மணி நேரம் பொறுத்து மோட்டாரில் வந்து ஏறும்போதுதான் துப்பறிவோர் மூவரும் அவரைச் சரிவரக் கவனித்து அவரே கோவிந்தனென நினைத்து அவரைப் பின் பற்றி இமை கொட்டாது கவனித்து வந்ததால்தான் ஏமார்ந்தார்கள்.

நிற்க, கொளம்புத் தலைமைத் துப்பறிவோன் ஸ்ரீதரர் என்ற சுந்தரராஜுவும் செல்வமும் அத்தீவில் தான் வசிக்கிறார்களென்றும் இல்லாவிட்டால் கோவிந்தன் அந்த காரியஸ்தரிடம் அடிக்கடி போய் வரமாட்டாரென்றும் நினைத்துதான் அவர்கள் பேரில் வாரண்ட் எடுத்தார். அவ்விஷயம் தெரிந்த உடனே டெப்டி மாஜிஸ்டிரேட்டிடம் பிரமாண வாக்கு மூலம் கொடுத்தது செல்லமல்ல வாதலால் செல்வம்தான் போயிருக்க வேண்டுமென்றும், அன்றிரவு சுந்தரராஜு திட்டமாய் திருவீராஜப்பட்டணம் வந்திருந்தாராதலாலும் அன்றைய மாலை வரையில் கொடிகாமத்திலிருந்ததாலும் மறுநாள் காலை 5 மணிக்குள் ஸ்ரீதரரும் செல்வமும் கொடிகாமத்திற்கு வந்து விட்டதாகத் தெரிவதாலும், ஒரே இரவில் கொடிகாமத்திலிருந்து திருவீராஜபட்டணம் சென்று திரும்புவதாகில் ஆகாய விமானத்தால் சென்றிருந்தாலொழிய வேறு மார்க்கமில்லையென ஊகித்து விசாரித்ததில், சத்தமில்லாமல் ஓடும் நூதன விதமான ஆகாய விமானம் ஸ்ரீதரர் வாங்கியிருப்பதாகவும், அதை ஓட்டுவதற்கும் அவருக்கு அனுமதிச் சீட்டு உண்டென்றும் அதன் மூலமாய்த் தான் போய் வந்திருக்க வேண்டுமென்றும் கோவிந்தன் அறிந்திருந்தாராதலால் அந்த ஆகாயவிமானத்திலேயே வந்து அங்கு இறங்கி இரகசியமாய் வசித்து வரக்கூடுமென்றும் சுந்தரராஜுவைத் தப்புவிப்பதனால் இர

ண்டு இராத்திரிகளுக்குள் தான் தப்புவிக்க வேண்டுமென்றும் தீவுக்கு நேரான வழியில் போவதற்கு எவ்விதமும் சாத்யமில்லையாதலால் ஆகாயவியானத்தின் மூலமாய் இரவில் அங்கு சென்றுதான் பார்க்க வேண்டுமென்றும் அங்கு ஆகாய விமானம் யாரிடமுமில்லாததால் சென்னைக்குச் சென்று தமது நண்பர்கள் எவரிடமாவது தான் இரவல் பெற்று வரவேண்டுமென்றும் தான் ஆகாய விமானம் ஓட்ட அனுமதி பெற்றிருப்பதால் தானே ஓட்டி வரலாமெனவும் தீர்மானித்து தனது நண்பர் ஒருவரிடம், காரணம் சொல்லாமலே அவர் ஆகாய விமானத்தை அன்றிரவு இரவில் கேட்டு வாங்கிக் கொண்டு புறப்பட்டு வந்து அத்தீவிலுள்ள மாளிகையின் முழு விவரங்கள் கேட்டறிந்திருப்பதால் யாதொரு அசம்பாவிதமு மில்லாமல் மாளிகையின் முன்னுள்ள மைதானத்தில் ஆகாயவிமானத்துடன் இறங்கினர். அதிக உயரத்தில் பறந்து வந்ததாலும் தான் இறங்க வேண்டிய இடத்திற்கு நேராய் உயரத்தில் வந்தவுடனே இன்ஜின்கள் வேலை செய்வதை நிறுத்தி விட்டாதாலும் சத்தமில்லாமல் இறங்கி விட்டார். இறங்கியதும் ஆகாய விமானத்தை பந்தோபஸ்தாய் வைத்துவிட்டு, தான் எப்போதும் கொண்டு போகும் பல திறப்பு கோல்களுடனும், அம்மாளிகை சென்று, தெருக் கதவைத் தன் சாவிகள் போட்டுத் திறந்து பார்த்து ஒரு சாவியால் திறந்து மாளிகைக்குட் சென்றார். அனேக அறைகள் ஆள் நடமாட்டமில்லாது பூட்டப்பட்டே யிருந்தன. இறுதியில் சமயல் அறையின் சமீபத்திலுள்ள அறையைத் திறந்து பார்க்க, அங்கிருந்த கட்டில்களில் சுந்தரராஜனும் செல்வமும் ஆழ்ந்த நித்திரையில் நிம்மதியாய் குறட்டை விட்டுத் தூங்கக் கண்டார். நெருப்புக்குச்சி கிழித்துப் பார்த்து திட்டமாய் அவர்கள் தான் என அறிந்து கொண்டதும் மெதுவாக சுந்தரராஜின் தலைப்பக்கத்தில் போய் நின்றதும் அதிகப் பிரகாசமுள்ள காந்த விளக்கு பத்தானை அமுக்கினர். ஜோதிமயமான காந்த விளக்கின் வெளிச்சம் சுந்தரராஜனின் முகத்தில் பட்டவுடனே திடுக்கிட்டு எழுந்து, தலையணையின் கீழ் வைத்திருக்கும் கைத்துப்பாக்கியை எடுக்கப்போனர். அதற்குள்ளாக செல்வமும் திடுக்கிட்டு எழுந்தாள்: அவளும் அவ்வாறே தன் தலையணையின் கீழ்வைத்திருக்கும் துப்பாக்கியை எடுக்க முயன்றாள். கோவிந்தன் தாழ்ந்த குரலில் உங்கள் இருவர் தலைகளுக்கும் நேராக என் இரண்டு கைகளிலும் உங்களை சுட்டு வீழ்த்த இரு துப்பாக்கி

கள் ஆயத்தமாய் வைத்திருக்கிறேன். இருவரும் கைகளை மேலே தூக்குங்கள்; இல்லாவிட்டால் சுட்டு விடுவேன்; என்றார். தங்களை பயமுறுத்துபவன் தங்கள் கண்களுக்குத் தெரியாமல் தங்கள் தலைப் பக்கம் இருப்பதாலும், தாங்கள் கைத்துப்பாக்கிகளை எடுத்துக் கொண்டு திரும்பிப் பார்க்கு முன் இருவர் பேரிலும் ஐந்தாறு தரம் சுட சவகாசமிருப்பதாலும் வேறு வழி ஒன்றுமில்லாததால் கோவிந்தன் சொன்னபிரகாரம் அவர்களிருவரும் கைகளைத் தூக்கினார்கள். கோவிந்தன் சிரித்துக்கொண்டு "சுந்தரராஜுகாரு! நான் துப்பறியும் திருவல்லிக்கேணி கோவிந்தன். ஆகையால் தங்கள் நண்பன் தான். இப்போதும் உங்களுடைய நன்மையை நாடிதான் இவ்விடம் வந்தேன். தங்கள் இருவர் தலையணைகளின் கீழும் எப்போதும் கைத்துப்பாக்கிகள் வைத்துக்கொண்டு படுத்துக்கொள்வதும் தாங்களிருவரும் குறி தவறாமல் சுடக்கூடியவர்களென்றும் கொடிகாமத்திலேயே நான் விசாரித்தறிந்து கொண்டேன். நான் இன்னாரென்று சொல்வதற்கு முன் உங்கள் இருவரில் எவராவது என்னைச்சுட்டு வீழ்த்திவிட்டால் என் செய்வதெனப் பயந்தே இவ்வாறு பயமுறுத்தினேன். இதோ பாருங்கள் ஒரு கையில் காந்த விளக்கும் மறுகையில் கைக்குட்டையும் தான் வைத்திருக்கிறேன்" என்று சொன்னார். சுந்தரராஜு எழுந்து கோவிந்தன் கைகளிரண்டையும் பிடித்துக் கொண்டு "செல்வம்! துப்பறியும் கோவிந்தனவர்களுடைய பிரபாவங்களைக் கேட்ட நீ அவரைப் பார்க்க வேண்டுமென்று பல முறை என்னிடம் சொல்லியிருக்கிறாயே! பார்! இவர் தான் அந்த கியாதி பெற்ற கோவிந்தன் என்பவர். இவ்வளவு சக்தியும் கியாதியும் பெற்ற கோவிந்தன் எப்படியிருப்பாரோ என பல முறை சொல்லியிருக்கிறாயே பார்; அவர் சாதாரணமான மனிதர் தான்; படாடோபமே கிடையாது. பார்த்தால் பசுபோல்தான் இருப்பார்" என்றார். அதுவரையில் வாய் திறவாமலும் கண் இமை கொட்டாமலும் கோவிந்தனையே பார்த்து வந்த செல்வம், அபூர்வமான முறையில் ரணசிகிச்சைகள் செய்யும் வைத்தியர்களும், நிகரற்ற நாவல்கள் எழுதும் கிரந்த கர்த்தர்களும், கியாதிபெற்ற நாடகங்கள் எழுதும் ஆசிரியர்களும், ரெயில் வண்டி, தந்தி; கம்பியில்லாத தந்தி, கிராமபோன், தந்தியிலேயே பல மைல்களுக்கப்பாலிருந்து படம்பிடிக்கும் முறையைக் கண்டு பிடித்தவர், முதலியோரை யெல்லாம், தங்கள் தங்கள் வேலைகளைச் செய்து கொண்டிருக்கும்போது போய்ப் பார்

த்தால் "இவரா" இவ்வளவு அபூர்வ வித்தைகளைக் கண்டு பிடித்த வர்; அபூர்வ சிகிச்சை செய்பவர்; இந்த நவீன கிரந்தகர்த்தா. இவர் தானா இந்த நவீனத்தை எழுதிய இரும்புத் தலைவன்? பார்த்தால் பரமசாதுவாயிருக்கிறாரே! என நினைக்கும்படி தான் இருப்பார்கள். அவர்களைப் போலவே இவரும் சாதாரணமானவர்களைப் போல் தான் இருக்கிறார். ஆனால் அவர் கண்களை நேராகப் பார்க்கும் எவரும் அவரைக் கண்டு அஞ்சவேண்டியதே" என்றாள். நியாய மாய் நடக்கும் எவரும் அவரையாவது அவர் கண்களையாவது கண்டு அஞ்ச வேண்டியதில்லை திருடரும், கொலை பாதகரும், பஞ்சமாபாதகர்களும் தான் அவரைக் கண்டவுடன் நடுங்குவர்" என்றார் சுந்தரராஜு.

கோவிந்தன், தன்னைப் புகழ்வதை விரும்பவதில்லை யாதலாலும், தான் வந்தவேலை அவசரமான தாகையாலும், அதைப்பற்றி முதலில் பேச வேண்டுமென்று சொல்லி ஜாகிரிய ரெட்டியார் தூண்டுதலின் பேரில் அனுப்பப்பட்ட துப்பறிபவர்கள் மூவர் அப்போது சுந்தர ராஜுவைப் பிடிப்பதற்கு வாரண்டு பெற்று ரெயிலில் வந்து கொண்டிருக்கிறார்களென்றும் காலை மெயிலில் வந்திறங்கி 11 மணிக்குள் அங்கு வருவார்களென்றும் ஆகையால் ஜனங்கள் ஆழ்ந்த நித்திரையிலிருக்கும் ஜாம வேளையியே அங்கி வந்திருக்கும் ஆகாய விமானத்தின் இன்ஜின்கள் பறக்கும்போது சத்தத்தை யுண்டாக்கு மாகையால், சத்தம் கொடுக்காத அவர் ஆகாய விமானத்துடன் இணைத்துதான் கொஞ்ச தூரம் கொண்டு ருந்து தப்பி வெளியேறி விட வெண்டுமென்றும் தாம் கொண்டு போக வேண்டுமென்றும் சௌகரிமான இடம் வந்தவுடன் இறங்கி அவிழ்த்து வேறாகப் பிரித்துக்கொண்டு போய் விடலாமென்றும், அவர் விமானம் கீழிறங்கும் போது அதிக உயரத்திலேயே இன்ஜின் கள் சக்தியை நிறுத்தி விட்டதால்தான், தன் ஆகாய விமானம் கீழ் நோக்கி சுலபமாய் இறங்கி விட்ட தென்றும் மேலே போவதற்கு இன்ஜின் வேலை செய்யா விட்டால் போகாதாகையால் அவர் விமா னத்தின் சக்தியால் தான் இதுவும் கொண்டு போகப் படவேண்டு மென்றும் கோவிந்தன் சொன்னார். உடனே அங்கு சில தினங்கள் வசித்த அடையாளங்கள் தெரியாதபடி புதிதாகத் தாங்கள் கொண்டு வந்ததும் விவசாய உத்யோகஸ்தர் மூலமாய்க் கொண்டு வந்து கொடுக்கப்பட்ட சாமான்களையும் ஆகாய விமானத்தில் எடுத்து

வைத்துக் கோவிந்தன் கொண்டுவந்த ஒரே ஆள் ஏறக்கூடிய, அதிக கனமில்லாத சிறிய ஆகாய விமானத்தை இறக்கைகளை எல்லாம் அவிழ்த்துவிட்டு பலமான கயிறுகளால் அதனுடன் இணைத்துக் கட்டிக் கொண்டு ஆகாய விமானங்கள் இருந்த இடங்களைச் சரி செய்து விட்டு புறப்பட்டுச் சென்று விட்டார்கள். சௌகரிய மான இடம் வந்ததும் விமானத்தை இறக்கி அதுவரை வேலை செய்யாது வந்த ஆகாய விமானத்தை வேலை செய்யச் செய்து அதில் கோவிந்தனும்; ஸ்ரீதரருடைய ஆகாய விமானத்தில் சுந்தர ராஜுவும் செல்வமும், ஏறிக்கொண்டு சென்னைக் கருகாமையிலி ருக்கும் மீனம்பாக்கம் ஆகாய விமானங்கள் விடும் இடத்தில் இறங்கி தனது நண்பரின் ஆகாய விமானத்தை அதன் இடத்தில் விட்டு விட்டுப் பூட்டி சாவிபோட்டுக் கொண்டு, சுந்தரராஜுவின் ஆகாய விமானம் மோட்டார் வண்டியாக மாற்றி தரையிலும் ஓடக்கூடிய விதமாய் அமைக்கப் பெற்றதால் வேண்டிய மாறுதல்க ளைச் செய்து மோட்டார் வண்டியாக்கி அதில் மூவரும் ஏறிக்கொண் டு, கோவிந்தன் மோட்டாரை ஓட்டிக் கொண்டு போய் தன் வீடு சேர்ந்து அவர்களுக்கெனத் தயாரித்து வைத்திருக்கும் தனி அறை யைக் காட்டி அவர்களை சௌக்யமாய்ப் படுத்து சாவகாசமாய் எழுந்திருக்கும்படியும் சாப்பிட்டான பின் மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொள்ளாமென்றும் அவரும் தன் அறைக்குப் போய் படுத்துக்கொண்டார்.

பதினன்காவது அத்தியாயம்

கோவிந்தன் ஆராய்ச்சி (முன் தொடர்ச்சி)

பொழுது விடிந்து 10—மணிக்குப் பின் தான் ஒவ்வொருவராக அம்மூவரும் எழுந்து ஸ்னனம் செய்து சாப்பிட்ட பின் சுந்தரராஜு அலுப்பால் மீண்டும் படுத்துறங்கி விட்டார். அப்போது கோவிந்தன் செல்வத்தைப் பார்த்து "செல்வம், அன்று மாலை வரையில் கொடிகாமத்திலிருந்த நீங்கள் எவ்வாறு திருவீராஜபட்டணம் வந்து பிராமணவாக்கு மூலம் கொடுத்து விட்டு மறுநாள் காலை 5-மணிக்கு கொடிகாமம் சேர்ந்து விட்டீர்கள். அதைப்பற்றி விவரமாய்த் தெரிவி; ஏனென்றால் நீ பிராமணவாக்கு மூலம் கொடுப்பதற்கு முன்னமே டெப்டி கலெக்டர் வீட்டில் 50 ஆயிரம்ரூபாய்கள் திருடுபோன விஷயம் உனக்குத் தெரிந்திருக்கிறது. அதைப்பற்றி நன்றாய் ஞாபகப்படுத்தி சொன்னல் அத்திருடர்களைக் கண்டு பிடித்து அவர்களின் மூலமாய் மிகவும் சிக்கலாயிருக்கும் விஷயங்களைக் கண்டு பிடிக்க முடியும். ஆகையால் தயவு செய்து ஒன்றும் ஒளிக்காமல் விவரமாய்ச் சொல்லு" என்று கேட்டார். அவள் பின் வருமாறு சொன்னள்.

செல்வம்:—நாங்கள் இருவர் இரகசியமாயும் ஏகாந்தமாயும் பேசிக்கொண்டிருந்ததை எங்கள் வேலைக்காரனுகிய நடேசன் உற்றுக் கேட்டதாக ஸ்ரீதரர் ஸ்திரப்படுத்திக்கொண்டதும் ஸ்ரீதரருக்கும் எனக்கும் பிரயாணத்திற்கு வேண்டிய சகல முஸ்தீப்புகளுடன் ஆபீஸ் மானேஜரை எங்கள் ஆகாய விமானம் விட்டிருக்கும் இடத்தில் இரகசியமாய் வந்திருக்கும்படி ஸ்ரீதரர் சொல்லியனுப்பி விட்டு வழக்கம்போல் உலாவப்போவது போல் போய் அங்கிருந்து நேராக வீட்டிற்குத் திரும்பாமல் நாங்கள் இருவரும் எங்கள் ஆகாய விமானக் கிடங்கிற்குச் சென்றேம். அங்கு எங்கள் மோட்டார் வண்டியை விட்டு விட்டு எங்கள் ஆகாய விமானத்தில் ஏறிப் புறப்பட்டோம். ஸ்ரீதரர் ஆகாய விமானம் ஓட்டி அனுபோகப்பட்டு அனுமதி சீட்டு பெற்றிருப்பவராதலால் ஆகாய விமானத்தை யாதொரு ஆபத்தில்லாமல் ஓட்டி திருவீராஜபட்டணம் கடற்கரையில் ஏகாந்தமான இடத்தில் அதற்கென சுற்று மதில்களுடன் அமைக்கப்பட்டு தயா

ரித்து வைத்திருக்கிம் இடத்தில் இறங்கினார். அந்த விமானமானது நவீன முறையில் அமைக்கப்பெற்றதாதலால் இதர விமானங்களைப் போல் பலத்த சத்தம் உண்டாக்குவதில்லை. ஆகையால் ஏதோ இலே சாய் ஆகாயத்தில் ஒரு சத்தம் உண்டாக அச்சத்தம் எங்கிருந்து வருகிறதென்று கவனித்துப் பார்க்குமுன் ஒன்றுமில்லாமல் நிசப் தமாயிருந்ததால் விமானம் வந்ததும், இறங்கியதும், எவரும் கவனிக் கவில்லை. அங்கு காவல் படுத்திருந்த சின்னமீன் கந்தனை எழுப்பிப் பூட்டைத்திறந்து கொண்டு வெளியே வந்து மீண்டும் அவ்விடத் தைப் பூட்டி விட்டு எவர் கண்ணுக்கும் படாமலிருப்பதற்காக ஏகாந் தமான வழியில் சென்று மீன்கந்தன் மட்டும் தனது வீட்டிற்குள் போய்ப் பார்த்து எல்லோரும் தூங்குவதைக் கண்டு ஸ்ரீனிவாசலு ராஜுவின் அறைக்குப்போகும் அறைக்கு ஸ்ரீதாரையும் என்னையும் அழைத்துப்போய் அங்கிருந்து இரகசிய வழியாய் எங்களை பல படி கள் மூலமாய் அழைத்துப்போய் என்னை அங்கிருந்தபடியே அவர் தகப்பனாரைப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லி விட்டு கதவைத் திறந்து கொண்டு தன் தகப்பனாரிடம் சென்றார். உடனே ஸ்ரீனிவாச லுராஜு, செல்லம் காமாக்ஷிராவுடன் சதியாலோசனை செய்து, சுந்தர ராஜுவைப் பிடிப்பதற்காக விளம்பரம் போட்டதையும், தானை ழைத்து எச்சரித்ததையும், தமது எச்சரிப்பை அலக்ஷியம் செய்து விட்டு அவள் மீண்டும் இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவுடன் இப்போது கூட சால்லாபித்துக்கொண்டிருப்பதையும் சொன்னார். அப்போது,

சுந்தரராஜு:—பிதா! தங்கள் வார்த்தையை நான் சந்தேகப்ப படுவதாகத் தாங்கள் நினைக்கவேண்டாம், செல்லம்-என் பேரில் அவ் வளவு பிரியம் வைத்திருந்த எனது செல்லம்—அவ்வாறு செய்வளா என்ற சந்தேகம் என்மனதில் தோன்றுகிறது. ஆகையால் எவருக்கும் தெரியாமல் நான் அவள் வீடு சென்று ஆண்டறிந்து வருகிறேன்.

ஸ்ரீனிவாசலுராஜு:—சுந்தரம்! அவசரப்படாதே. நீ அவள் வீடுசெல்வது அபாயகரமாய் முடியும்; ஏனெனில் அங்கு காமாக்ஷி ராவ் உன்னை எந்த நிமிஷமும் எதிர் பார்த்துக் கைத் துப்பாக்கியுட னும் கை விலங்குகளுடனும் ஆயத்தமாய் இருக்கிறான். ஆகையால் நீ அங்கு போகக்கூடாது.

அதற்கு ஸ்ரீதார் "அந்தக் காமாக்ஷிராவ் அவ்வளவு சுலபமாய் என்னைப் பிடித்து விடுவானென்று நினைக்கிறீர் களா என்ன? தங்களைப்போல் நான் அவ்வளவு பலசாலியல்

லவாயினும் தங்கள் பலத்தில் முக்கால் பங்கு பலமாவது எனக்கிருக்கிறதென்பதைத் தாங்கள் மறந்தீர்கள் போலும்" என்றார். அதற்கு "அந்த விளம்பரத்தைக் கண்டு நீ எப்படியாவது வருவா யென்று அவனுக்குத் திட்டமாய்த் தெரியும். ஆகையால் அவன் தாசி செல்லத்துடன் அவள் படுக்கையில் படுத்திருக்கிறான். நீ வந்தால் உடனே பிகில் ஊதுவதாயும் உடனே வரும்படி ஆயத்தமாய் அத்தெருவின் 14-ம் நெம்பர் வீட்டுத் திண்ணையில் 10 போர் போலீசாரைத் துப்பாக்கிகள் சஹிதம் வைத்திருக்கிறான். ஆகையால் நீ அவள் வீட்டிற்குப் போனால் அவன் கையில் அகப்படாவிட்டாலும் போலீசாரால் பிடிக்கப்படுவாய்; இல்லாவிட்டால் சுடப்பட்டாவது இறப்பாய்; ஆதலால் அங்கு போகவேகூடாது" என்றார் மாமா. ஸ்ரீதரர் சற்று ஆலோசித்து செல்லம் வீட்டிற்குப் போகாமல் பக்கத்துவீட்டு மாடியிலிருந்து கவனிப்பதாய்ச்சொன்னார். அதற்கு மாமா அவர்கள் பக்கத்து வீடு காலியாயிருப்பதாயும் வீட்டுக்காரர் சென்னைக்குச் சென்றிருப்பதாயும் ஆகையால் மாடியின் திட்டிக்கதவின் வழியாய் ஏணி வைத்து இறங்கி அங்கு நின்றால் பக்கத்தறையில் செல்லமும் காமாக்ஷிராவும் பேசுவது நன்றாய்க் கேட்குமென்றும் அப்போது சந்தேகத்தை நிவர்த்தித்துக் கொள்ளலாமென்றும் சொல்லு ஜாக்ரதையாய்ப்போய் வரும்படி எச்சரித்து அனுப்பினார். ஸ்ரீதரர் திரும்பி வரும்போது என்னையும் கூட அழைத்து வந்து என்னை பக்கத்து வீட்டு மாடியிலுள்ள கட்டைச் சுவர் பக்கத்தில் இருக்கச் சொல்லி தான் போய் செல்லத்தை அழைத்து வரும்போது அங்கிருந்தபடியே என்னைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு எக்காரணம் பற்றியும் என்னைப் பேசாமலிருக்கும்படியும் சொல்லிவிட்டுப்போனார். ஸ்ரீதரர் சென்று வர்மித்து, செல்லத்தை அழைத்து வந்து கண்ணைக்கட்டிமீன்காதன் வீட்டிற்குப்போய் அங்கே நிறுத்திவிட்டு எங்கு அங்கியில்சாவிபோட்டுத் திறந்து அதை அப்புறப்படுத்தி படிக்கட்டு ஏறிசென்றதாகப் பின் தெரிந்தது; நான் செல்லத்தை இமை கொட்டாது பார்த்து அதிக ஆச்சரியப்பட்டேன். அவள் எனது பிரதிபிம்பம் போலிருப்பதாக முன் படத்தில் பார்த்திருந்த போதிலும் வர்ணம் தேகக்கட்டு உயரம், பருமன், மயிர், முதலிய எல்லா அம்சங்களிலும் என்னைப் போலவே யிருக்கக் கண்டு பிரமித்துப்போனேன். எனக்கே நான் தான் அவளோ; அவள் தான் நானோ என்ற சந்தேகம் கூட மனதில்

உதித்துவிட்டதால் ஸ்ரீதரன் என்னைச் செல்லமென நினைத்துப் பேசியது நியாயமே என எனக்குள் நானே தீர்மானித்துக்கொண்டேன். அவ்வாறு சில நிமிஷங்கள் சென்றபின் தான் ஸ்ரீதரரும், சின்னமீன் கந்தனும் செல்லத்தைக் கூட்டிக்கொண்டு போய் விட்ட விஷயமும் நான் அவர்களைப் பின் தொடர்ந்து செல்லாது நின்று விட்ட விஷயமும் என் மனதில் பட்டது. எனக்கோ அவர்கள் எங்கு எப்படிச் சென்றார்களென்று தெரியாது. ஆகையால் நான் இருட்டில் போய் தட்டுக் கெட்டுத் தடுமாறி வழி தெரியாமல் திகைத்தால் அவர்களைக் கண்டு பிடிப்பது கஷ்டமென்றும் அதைவிட அங்கேயே இருந்தால் கட்டாயமாய் ஸ்ரீதரர் என்னைத் தேடி அங்கு வந்து அழைத்துச் செல்லுவாரென்றும் அதுதான் சரியான முறையென்றும் தீர்மானித்து அங்கு நின்றேன். அப்போது "இங்கு தான் சத்தம் கேட்டது. இதற்குள்ளாகத் தப்பித்து ஓடியிருக்க முடியவே முடியாது. வீட்டைச் சுற்றி நாம் காவலிருக்கும்போது இறக்கை கட்டிப் பறந்தாபோயிருக்கக்கூடும்? பார்த்த உடன் பயப்படாமல் சுட்டு வீழ்த்துங்கள். சாத்யமானால் உயிருடன் பிடியுங்கள்: இல்லாவிட்டால் சுட்டாவது வீழ்த்திவிடுங்கள்" என்று ஒருவர் பலரிடம் உத்தரவிடும் சத்தம் கேட்டதும் என் உடல் நடுங்கிற்று. இங்கு பாருங்கள், இங்கும் காணோம், வேறெங்குதான் போயிருக்கக் கூடும்; ஒருக்கால் தட்டட்டியிலிருக்கக்கூடுமோ என்றார்கள். 12 அடி உயரம் பறந்தாபோயிருப்பான். ஆகையால் அங்கு போயிருக்க முடியாது, என்றதும் அவர்கள் சத்தம் அடங்கிற்று: என் வேளை நல்ல வேளைதான்; அதனால்தான் அவர்கள் அப்படியே சென்று விட்டார்கள். இங்கு வந்திருந்தால் எனது கதி என்ன ஆவது? வந்திருந்தால் என்ன செய்யக்கூடும்? மறைவிடம் இங்கேதாவதுண்டா பார்ப்போம் என நான் யோசித்துக்கொண்டிருந்தேன். அப்போது மீண்டும் அங்கு ஆட்கள் வரும் சத்தம் கேட்டது. தாங்கள் தட்டட்டியைப் பார்க்காமல் போனது தவறு என நினைத்து மறுபடியும் வருகிறார்கள் போலிருக்கிறது என நான் நினைத்து திகிலடைந்தேன் அப்போது அவர்கள் பின் வருமாறு பேசிக்கொண்ட சப்தம் கேட்டது.

"சௌக்யமாய் வீட்டில் இருந்த நமது எஜமானனை இந்த கேதிக்காளாக்கிய காமாக்ஷிராவின் கேர்வம் அடங்கும் காலம் சமீபத்து

விட்டது. இப்போதே அவன் பேரில் அதிகாரிகளுக்கு பூர்ண சந்தேகம் உண்டாக்கிவிட்டோம்; இன்று சுந்தரராஜு இங்கு பேசியதாக நினைத்து அந்தக் கீசடன் காமாக்ஷிராவ் இவ்வீட்டுக் கதவைத் திறந்து போட்டு விட்டுப் போனது நமது வேலைக்குப் பழம் நழுவிப்பாலில் விழுந்து போ.யிற்று. கரடியின் வேலை சுலபமாயிற்று, இப்போதே ஒட்டலியை வைத்து இரும்புப் பெட்டியைத்திறக்கச் செய்து அதிலிருந்து நாம் நாடி வந்த பொருள்களைக் கொள்ளை கொண்டு போனால் ஒரே பாணத்தால் இரண்டு பழி தீர்த்தவர்களாவோம்; எப்படியென்றால் 'மாதவராஜாவின் ஐம்பதாயிர ரூபாய் நமது கையில் சேர்ந்து விடும். இந்தக்கதவை உடைத்தது காமாக்ஷிராவ் ஆதலால் அவனே இந்த இரும்புப் பெட்டியிலிருக்கும் ரொக்கம் நகைகள் முதலியவைகளையும் திருடியதாக ஏற்பட்டு அவன் மேல் சந்தேகம் இன்னும் அதிகரிக்கும். இவ்வூர் மறவர் இதில் சம்மந்தப்படவில்லை யாதலாலும் ஒட்டலியும் கரடியும் இவ்வூர் வாசிகளல்லவாதலாலும் நாம் தீர்மானித்து அழைத்து வந்த ஆளுக்கு ஆயிரம் ரூபாய்களுடன் கூட ஒவ்வொருவருக்கும் நூறு நூறு ரூபாய்கள் கொடுத்தனுப்பிவிட்டால் சந்தோஷமாய் காலை 4 மணி வண்டிக்கே புறப்பட்டு அவர்கள் ஊர் சென்று விடுவார்கள். அவர்களுக்கும் நாம் இரும்புப் பெட்டியிலிருந்து என்னென்ன எடுத்தோமென்று தெரியாது "நல்லகாலம் வந்தால நடந்து கொண்டு வந்து கொடுக்கும்" என்பது நமது விஷயத்தில் உண்மையாயிற்று. "இத்திருடரைக் கண்டு பிடிக்க ஈசனாலும் முடியாது" என்றார்கள். அண்டத்திற் கண்டமாய் அணுவுக்குள் அணுவாய் எங்கும் நிறைந்து நிற்கும் பரந்தாமன் அறியாத பரம இரகசியமும் உலகின் கண் உளதோ? விபசாரம் செய்பவர்கள் எவருக்கும் தெரியாமல் அவ்வளவு சாமர்த்தியமாம் நாம் நடந்து கொண்டு வருகிறோமெனவும், திருட்டுத்தனமாய் கள்சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகிப்போர் முக்காடிட்டு கொண்டு இரவில் போவதால் எவர்க்கும் தெரியாதென்றும், இலஞ்சம் வாங்குவோர் தெருக் கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டு வீட்டிற்குள் கொண்டு போய் இலஞ்சம் பெறுவதால் இரண்டாம் பேருக்குத் தெரியாதெனவும், இவ்வாறே ஒவ்வொரு அக்ரமங்கள் செய்பவர்களும் தங்கள் சாமர்த்தியத்தால் எவருக்கும் தெரியாதென நினைத்துச்செய்வதைப் போல் இவர்களும் செய்தார்கள் போலும். உலகத்திலுள்ள பல மூடர்களைப்போல் இவர்களும் அவ்வாறு நினைத்தது ஆச்சரியமல்ல. புத்தி

சாலிகளாயிருப்பவர்கள் அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய் எங்கும் நிறைந்திருக்கும் ஈஸ்வராம்சத்தின் ஒரு அணுவானது நமது உடலிலும், மனசாக்ஷி யென்னும் பேரால் வசித்து வருகிற தென்றும் அதற்குத் தெரியாமல் மறைக்கக் கூடிய விஷயம் இல்லையில்லை யென்றும் உணர்ந்து திரிகரண சுத்தியாய் நன்மையையேநினைத்து, நல்ல விஷயங்களையே நாடி, நல்லான காரியங்களையே கையாடி, வருவர் எனநினைத்துக்கொண்டேன். அவர்கள் பேசுவதைக் கேட்ட எனக்கு மீண்டும் பயம் உள்ளத்தில் பிறந்தது. அப்போது வந்திருப்பவர்கள் திருடர் என்பதைத் திட்டமாய்த் தெரிந்துகொண்டேன். திருடர் முன் எதிர் பட்டுவிட்டால் இன்னது தான் செய்வார்களென்றும் இன்னது செய்ய மாட்டார்களென்றும் நினைப்பதற்கில்லை; என நான் நினைத்துக் கொண்டிருக்கும்போதே தெருவில் ஆள்கள் வரும் சத்தம் கேட்டது. உடனே அவர்கள் இனி தெருவின் வழியாய்ப்போவது அபாயமென்றும் தட்டட்டியின் வழியாய்த் தான் போகவேண்டு மென்றும் பேசிக்கொண்டனர். தட்டட்டியின் வழியாய் போவதற்கு ஏணியில்லையே என் செய்வதென ஒருவன் கேட்டான். கையிலாகாதவனுக்கல்லவா ஏணி வேண்டும்; நமக்கு ஏணி எதற்கு? அறையில் சாராயப் புட்டிகளுடனும் தின் பண்டங்களுடனும் விட்டு விட்டு நாம் பூட்டிக் கொண்டு வந்த கதவைத் திறந்து காடியையும் ஒட்டலியையும் அழைத்துக் கொண்டு தஸ்தவேசுகள் எடுக்க வேண்டுமென்று சொல்லி ஒட்டலியையும் காடியையும் அழைத்து வந்திருப்பதால்,அம்மூட்டையை நீயே எடுத்துக் கொண்டு ஜல்தியாய் அழைத்து வா யென்றார். அவரும் அவ்வாறே சென்று மூட்டையை எடுத்துக் கொண்டு அவர்களை அழைத்து வந்து அவர்களிடம் ஒருவரை கீழே நிற்கும்படியும் அவர் புஜத்தின் மேல் இன்னொருவரை ஏறி நிற்கும்படியும் அவ்வாறு அவர்கள் இருவரும் நின்றால் தாங்கள் அவர்கள் மேல் ஏறி திட்டிக் கதவைத் திறந்து கொண்டு தொங்க விடுவதாயும், அவர்களைக் கயிற்றைப் பிடித்துக்கொண்டு ஏறி வரும்படியும் சொன்னார்கள். முதலில் அவர்கள் ஏறிவிட்ட பின் போலீசாராவது வீட்டுக்காரராவது வந்துவிட்டால் தங்களை அங்கேயே விட்டுவிட்டு அவ்விருவரும் ஓடி விடுவார்களென்றும் ஆகையால் தாங்கள் தான் முதலில் ஏறிப்போக வேண்டுமென்றும் ஒட்டலியும் காடியும் முறண்டினார்கள். வேறு வழியில்லாததால் அவர்களிருவரும் ஒருவர்மேல் ஒருவர் நின்று

கொண்டு ஓட்டலியையும் கரடியையும் மேலே ஏறும்படி செய்து அவர்கள் பிடித்துக் கொண்டு தொங்க விட்ட கயிற்றின் உதவியால் மூட்டையுடன் அவர்களிருவரும் ஏறிச்சென்றனர். அங்கு கட்டை சுவற்றின் பக்கத்தில் இருந்த நான் அவர்கள் எப்படியாவது என்னைக் கண்டுபிடித்து விடுவார்களெனப் பயந்து கைப்பிடி சுவற்றின் மேல் படர்ந்து வந்திருக்கும் படர் கொடிகளின் கீழ் மறைந்த வண்ணம் அபாயகரமான நிலையில் மறைந்திருந்து அவர்கள் சென்ற பின் மீண்டும் தட்டட்டியில் வந்து உயிர் பிழைத்தோம் என நினைத்து இன்னும் ஸ்ரீதரர் வரவில்லையேயென நாலாபக்கங்களிலும் திரும்பித் திரும்பிப் பார்த்து நின்றேன். அப்போது இருவர் தூரத்தில் வரவே அவர்கள் ஸ்ரீதரரும் ராமனோ, வேறு எவரோ, எனத் திட்டமாய்த் தெரியாததால் மீண்டும் கொடிகளின் கீழ் மறைந்துகொண்டு கவனித்து வந்தேன். அவர்கள் சமீபத்தில் வந்த பின்தான் திட்டமாய் அவர்கள் தானென அறிந்து பின் வெளியில் வந்தேன். அப்போது ஸ்ரீதரர் "செல்வம்! ஏன் அவ்வளவு ஆபாயமான நிலையில் மறைந்து கொண்டாய்?" என்று கேட்டார், நான் நடந்த விருத்தாந்தங்களை யெல்லாம் சாங்கோ பாங்கமாய்ச் சொன்னேன். அப்போது ஸ்ரீதரர் இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவ் தனது தகப்பனை பிடிப்பதற்காகத் தனது அரண்மனை வந்திருப்பதாயும், தன் தகப்பனர் பிடிவாதக்காரரானதால் தன் பிராணன் போனலும் செல்லம் இருக்குமிடம் காண்பிக்கமாட்டாரென்றும் அதன் மூலமாய் பல அனர்த்தங்கள் விளையலாமென்றும், ஆகையால் நான் தான் செல்லமென்று திருச்செந்தூரில் முகாம் செய்திருக்கும் டெப்டி மாஜிஸ்டிரேட்டிடம் நேரில் சென்று பிராமண வாக்குமூலம் கொடுக்காமலிழிய தன் தகப்பனருக்கு கஷ்டங்கள் விளையுமென்றும் நான் இன்னின்ன விதமாய் நடந்து கொள்ள வேண்டுமென்றும் சொல்லிப் பாடம் கற்பித்துக் கொடுத்து என்னை ஆகாய விமானத்திலேற்றி திருச்செந்தூர் மௌனசாமி மடத்தின் பின்னுலிருக்கும் சமுத்திர மணல் மைதானத்தில் கொண்டு போய் இறக்கி விட்டு டெப்டி மாஜிஸ்டிரேட்டு இறங்கி இருக்கும் இடத்திற்கு வழி சொல்லி அனுப்பினர்கள். நான் எப்போதும் குறும்புக் காரியாதலாலும் எனக்கு இப்போர்ப்பட்ட விஷயங்களில் தலையிடுவது அதிக உற்சாகத்தைக் கொடுக்கிறதலாலும் 4-வது அத்தியாயத்திற் சொன்ன வண்ணம் டெப்டி மாஜிஸ்டிரேட்டிடம் சென்று பிராமண வாக்கு மூலம் கொடுத்து வந்தேன்.

டெப்டி மாஜிஸ்டிரேட் மிகவும் நுண்ணறிவுடையவராதலால் நான் போவதற்கு முன் உடுப்புப் போடாத இரகசிய போலிஸ்காரன் ஒருவனை அழைத்து அங்கிருந்து போகும் போது எனக்குத் தெரியாமல் பின் சென்று எங்கு போகிறேன், என்றும் யார் யாருடன் பேசுகிறேனென்றும் அறிந்து வரும்படி அனுப்பியிருந்தார் போலிருக்கிறது. அவன் பின் பற்றி வருவதை சில நிமிஷங்களில் தெரிந்து கொண்டு மௌனசாமி மடம் வரை சென்றேன். அங்கு தெரியாமல் மறைந்து செல்வதற்கு, இடமில்லாததனால், அவன் சற்று தூரத்திலேயே வரும்படி நேரிட்டது. மௌனசாமி மடத்து சுவற்றின் தென்னண்டை மூலை கடைசி வரையில் போகும் வரை தூரத்திலே சென்று கொண்டிருந்த துப்பறிபவன் நான் மூலை திரும்பினதும் வேகமாய் ஓடி வந்தான். ஆனால் ஆகாய விமானத்தை பறப்பதற்கு ஆயத்தமாய் வைத்துக் கொண்டு ஸ்ரீதரரும், ராமனும், காத்திருந்ததால் நான் வந்தவுடன் என்னை ஏற்றிக் கொண்டு உடனே பறந்து விட்டார்கள். ஆகையால் மௌனசாமி மடத்தின் மேல் பக்கம் வந்து கொண்டிருந்த துப்பறிபவன் ஏதோ தடதடவென்னும் சிறு சத்தத்தைத் தான் கேட்டான். அவன் மூலை திரும்பி பார்த்த போது என்னை எத்திசையிலும் காணோம். அதற்குள்ளாக நான் மடத்தின் தென் பக்க சுவற்றைத் தாண்டிப் போயிருக்கப் போதிய சாவகாசமில்லை. ஒரு பக்கத்தில் சமுத்திரம், சமுத்திரத்திலும் படகுகள் ஏதும் செல்லவில்லை; இரண்டு பக்கங்கள் தான் வந்த வழியாதலால் அவ்வழிகளில் நான் செல்லவில்லை என்பது அவனுக்கு நன்றாய்த் தெரியும். தென் பக்கம் விஸ்தாரமான மணல் வெளியாதலால் சுமார் ஒரு மைல் தூரத்திற்கு நன்றாய்த் தெரிந்தது. அதற்குள்ளாக அவ்வளவு தூரம் நான் சென்றிருக்க சாத்யமில்லையாதலால் பின் எங்கு தான் போயிருப்பேன்! தான் போய் டெப்டி மாஜிஸ்டிரேட்டுக்கு என்னதான் சொல்வதெனத் தோன்றாமல் சற்று நேரம் தயங்கி நின்றான். நான் வெள்ளை ஆடை உடுத்தி வந்திருந்ததால் ஒரு வேளை மோஹினி தான் என்னைப்போல் வந்து மறைந்து விட்டாளோ எனப் பலவாறு சிந்தித்து நொந்து சென்றான் போலும். டெப்டி மாஜிஸ்டிரேட்டிடம் என்ன சொன்னானோ அவர் என்ன பதில் சொன்னாரோ தெரியாது. நிற்க, ஸ்ரீதரரும் நானும் ஆகாய விமானத்தில் புறப்பட்டு கொடிகாமம் சென்று எங்கள்

மோட்டார்கார் ஏறி அதிகாலை ஐந்து மணிக்கு வீட்டுக்குச் சென்றோம். இதுதான் நடந்த விஷயங்கள்" என்றாள்.

கோவிந்தன்:—ஒட்டலில் காபி என்றவர்களையும் மற்ற இருவரையும் நீ பார்த்தாயா?

செல்லம்:— நான் கைப்பிடி சுவரின் பின் பக்கத்தில் படர்ந்த கொடிகளுக்குக் கீழ் மறைந்திருந்ததால் நான் யாரையும் பார்க்கவில்லை.

கோவிந்தன்:—அவர்களைச் சரிவரப் பார்க்காவிட்டாலும் ஆட்கள் குள்ளமா? உயரமா? மெல்லிசா? பருமனா? என்று கூடப்பார்க்கவில்லையா?

செல்லம்:—இல்லை; நான் பார்க்கவில்லை.

கோவிந்தன்:—அவர்கள் பேசுவதை நீ கேட்டால் அவர்கள் குரலிலிருந்து முன் பேசினவர்கள் அவர்கள் தானென்று சொல்லக் கூடுமா?

செல்லம்:—அவர்கள் பேசியதைக் கூர்ந்து கேட்டதால் சொல்லக் கூடுமென்று தான் நம்புகிறேன்.

கோவிந்தன்:—சரி; இன்றிரவு உன்னை ஓர் இடத்தில் மறைந்திருக்கச் செய்து நான் சந்தேகிக்கும் இவ்வூரிலுள்ள இருவரைப் பேச வைக்கிறேன். அவர்கள் தானா அன்று பேசினவர்களென்று கவனித்துச் சொல்லு.

செல்வம் சரியென ஒத்துக்கொண்டாள். ம-ா-ா-ஸ்ரீ சுந்தரராஜு எழுந்திருந்ததும் அவருக்கு மாலை ஆகாரமும் தேனீரும் கொடுத்து அவரைத் தன் தகப்பனாரிடம் சென்று மூன்று லட்ச ரூபாய்கள் ரொக்கமும், இரண்டு லட்ச ரூபாய்களுக்கு தெரிசன உண்டியலும் எவ்வாறு பெற்று வந்தாரென்று விவரமாய்த் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

சுந்தரராஜு:—ஐயா! அன்று நடந்த விஷயங்களை விவரமாய்ச் சொல்லு முன் நான் கொடிகாமம் சென்ற உடனே எவ்வாறு லாஜரஸ் என்பவரை நியமித்தேனென்றும், வியாபாரம் எவ்வாறு ஆரம்பித்தேனென்றும், சொல்லிப் பின் தெரிவித்தால் தான், ஏன் அவ்வளவு பெருந்தொகையாகிய ஐந்து லட்ச ரூபாய்கள் பெறும்படி நேரிட்டதென்பது தெரியும். ஆகையால் முதலிலிருந்து சொல்லுகிறேன். திருவீராஜபட்டணத்திலிருந்து சின்னமீன்கந்தனும் நானும் மூடாப்புள்ள படகில் புறப்பட்டோம். புறப்பட்ட சில நிமிஷங்களு

க்கெல்லாம் பெரும் புயல் காற்றும் மழையும் பலமாய் அடித்தது. படகை பல அடி தூரம் சில சமயங்களில் அலைகள் தூக்கிக்கூட போட்டன. அன்றைய தினம் கரை சேர்வது துர்லபமென்றும் சமுத்திரத்தில் இறக்கும்படி நேரிடுமெனவும் நினைத்து ஸ்ரீமந்நாராயணனையே நமஸ்கரித்துக் கொண்டிருந்தேன். கந்தன் அதைவிட பெரும்புயல் காலங்களில் கூட தான் படகு ஓட்டி அனுபோகப் பட்டிருப்பதால் என்னை அஞ்ச வேண்டாமென்றும் சௌக்கியமாய் கரை கொண்டு போய் சேர்ப்பதாகவும் சொன்னபடியே காற்றடிக்கும் திசையிலேயே படகைச் செலுத்தி பல தடவை முன் பின் போய் இறுதியில் சௌக்யமாய் கரை சேர்த்து கொடிகாமம் அழைத்துச் சென்று அங்கு அவருக்கு அறிமுகமுடைய ஓர் சத்திரத்தின் மாடியை அங்குள்ள குமாஸ்தாவுக்குச் சில்லரை கொடுத்து அமர்த்தி எவருக்கும் தெரியாமல் என்னை அழைத்து ஏகாந்தமாய் வைத்துவிட்டு எனக்கு வேண்டிய ஆகாராதிகளை பிராம்மணரை எடுத்து வரச் செய்து கொடுத்து விட்டு தான் கதவை பூட்டிக் கொண்டு வெளியே போய் எனக்கு சௌகரியமாயிருக்கக் கூடிய பங்களாக்கள் ஏகாந்தமாய் எங்கெங்கு இருக்கின்றனவென விசாரித்து வந்து அன்றிரவு ஏழு மணிக்கப்பால் என்னை அழைத்துப் போய்க் காட்டியதில் ஊருக்கு வெளியே ஏகாந்தமாய்க் கட்டப்பட்டிருக்கும் இப்போது நான் இருந்து கொண்டிருக்கும் பங்களா கட்டியவர் கிரகப் பிரவேசம் செய்து குடியேறிய சில தினங்களில் இறந்து போனதால் ஊரார் அவ்வீட்டில் பேயிருப்பதாகவும், இராக்காலங்களில் அப் பங்களாவில் பிசாசுகள் நடமாடுவதாகவும் வீண் புகார்கள் செய்ததின் பேரில் யாரும் குடிபோகாது அடைக்கப்பட்டிருந்ததால் எனக்கேற்ற வீடு அதுதானென நினைத்து வாடகையைக் குறைத்து கேட்டேன். அதைக் கட்டியதற்கு அநேக ஆயிரம் ரூபாய்கள் பிடித்ததென்றும் சகாயமாய் விடுவார்களென்றும் கேள்விப்பட்டதின்பேரில் இரண்டாயிரம் ரூபாய்க்கு விலை பேசி ஸ்ரீதரன் என்ற பேருக்கு அவ்வீட்டை வாங்கிவிட்டேன். நான் ஏமார்ந்ததாகவும், அன்றிரவே என்னைப் பேய் அடித்து விடுமெனவும் அப்பால் அவ்வீட்டிற்கு யாரும் வரமாட்டார்களென்றும் ஆகையால் 2000 பைசாக்கள் கூட அதற்குக் கொடுக்கக்கூடாதென்றும் நான் கேட்கப் பலர் பேசினர். நான் அவர்கள் வார்த்தையை லட்சியம் செய்யாது வாங்கினேன். பகல் வேளை யெல்லாம் பங்களாவிற்குள்ளேயே யிருப்பதும் இரவு

7 மணிக்குப் பின் உலாவப் போய் வருவதுமாய் ஒரு வாரக் காலம் கழித்தேன். என் தகப்பனாரவர்கள் மீன் கந்தனிடம் அந்த ரூபாய்களை பாங்கியில் போட்டு விட்டு மாதா மாதம் வரும் வட்டி ரூ600ல் சௌக்யமாயிருக்கும்படி சொல்லி யனுப்பினார்கள். பகற் காலங்களில் சிறையிலிருப்பதை போல் அறையில் அடைப்பட்டிருக்கது கஷ்டமா யிருந்தது. ஆகையால் தக்க காரியஸ்தர் ஒருவரை நியமித்து அவர் மூலமாய் நான் உள்ளிருந்தபடியே வியாபாரம் நடத்தக் கூடுமென்று நினைத்து யார் நம்பிக்கையானவர்கள் என்று தெரியாததாலும், பஹிரங்கமாய் நான் பலரைக் கேட்டு விசாரிப்பதற்கில்லாமலிருந்ததாலும் திகைத்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் இரவு நான் அங்குள்ள சிங்காரத் தோட்டத்தின் பென்ச்சியில் ஏகாந்தமாய் உட்கார்ந்திருந்தேன். அப்போது நானிருப்பது தெரியாமல் அடுத்த பக்கத்திலிருந்த பென்ச்சியில் இருவர் உட்கார்ந்து பேசும் சத்தம் என் காதில் பட்டது. அவர்கள் பேசியதிலிருந்து அவ்வூரிலுள்ள பிரபல சொத்துக்காரரும் வியாபாரியுமான ஜாக்ரய்ய ரெட்டியாரிடம் காரியஸ்தராயிருக்கும் லாஜரஸ் என்பவருக்கு மாதம் ரூ. 500 சம்பளம் கொடுப்பது போதாதென்று அவர் சம்பளத்தை சற்று உயர்த்திக் கொடுக்கும்படி கேட்டதாயும், அவர் தான் ரெட்டியாரின் சகல வியாபாரங்களையும் யோக்யதையாய்ச் சரிவரப் பார்த்து வருவதாயும், மிகவும் நம்பிக்கையுள்ளவரா யிருந்தும், மாதா மாதம் அவர் மூலமாய் அநேக ஆயிரம் ரூபாய்கள் லாபம் சம்பாதித்தும், ரெட்டியார் அவர் நியாயமாய்க் கேட்கும் நூறு ரூபாய் சம்பள உயர்வு கொடுக்காததால் லாஜரெஸ் மனமுடைந்திருப்பதாயும், அவர் ஜாக்ரய்ய ரெட்டியாரை மோசம் செய்து சம்பாதிக்க விரும்பினால் மாதம் சுலபமாய் இரண்டு மூன்று ஆயிர ரூபாய்களாவது சம்பாதித்து விடக்கூடுமென்றும், அவர் யோக்யராகையால் அவ்வாறு செய்ய விரும்பாமல் இருப்பதாகவும் தங்களிடம் ரூ 5000 ரொக்கமிருந்தா அவரை வைத்து வியாபாரம் நடத்தினால் சுலபமாய் மாதம் இரண்டாயிரம் மூவாயிரமாவது சம்பாதிக்கலாமென்றும் ஒருவர் சொன்னார். மற்றவர் இலாபம் சம்பாதிப்பது உண்மையாயினும் லாஜரெஸ்ஸை வேறு யாராவது வேலையில் வைத்தால் ஜாக்ரய்ய ரெட்டியார் செல்வாக்காலும், சொல்சக்தியாலும் போட்டி போட்டு விலைகளைக் குறைத்து எதிரியை கஷ்டப்படுத்தி விடக்கூடுமென்றும் ஆகையால் அது கஷ்டமேயெனவும் பேசிக்கொண்டிருந்து

விட்டு எழுந்து போனார்கள். பேசியவர்கள் யாரென்று கந்தனை விசாரிக்கச் சொன்னதில் அவர்களும் அவ்வூரில் பெருத்த வியாபாரம் செய்பவர்கள் தானெனத் தெரிந்து கொண்டேன். கடவுள் தான் எனக்குச் சரியான காரியஸ்தரைக் காட்டினாரென்றும் அவரை வைத்து வியாபாரம் செய்வதே நலமென்றும் அப்போதே தீர்மானித்துக் கொண்டு மறுநாள் 10 மணிக்கு லாஜரெஸ் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி அவர்களை வியாபாரரீதியில் நான் பார்க்க விரும்புவதாய் எழுதி யனுப்பினேன். அவர் அன்று மாலை 3-மணிக்கு சிற்றுண்டி சாப்பிடப் போகும் நேரத்தில் வருவதாய் பதில் எழுதி யனுப்பிவிட்டு சரியாய் மூன்று மணிக்கு வந்தார். நான் அவரை அதுவரையில் பார்த்திரா விட்டாலும் அவரைப் பார்த்தவுடனே அவரிடம் எனக்கு அபார நம்பிக்கை ஏற்பட்டது. அவருக்கும் என்னைப் பார்த்ததும் என்பேரில் ஓர்வித வாஞ்சை கொண்டதாகத் தோன்றிற்று. ஆகையால் நான் வீண் பேச்சுகள் பேசாமல், நான் கூடிய ஜல்தியில் சுமார் லட்ச ரூபாய் முதல் வைத்து வியாபாரம் ஆரம்பிக்க விரும்புகிறேனென்றும் அவர்களை மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் அமர்த்துவதாகத் திர்மானித்திருப்பதாயும் என்றைய முதல் வேலைக்கு வரக்கூடுமெனவும் கேட்டேன். அவர் தான் சுமார் ஒரு வருஷகாலமாய் மாதா மாதம் கொடுக்கும் ரூ 500 சம்பளத்தை ரூ 100 உயர்த்தி ரூ 600 தரும்படி ஸ்ரீமான் ஜாக்ரய்ய ரெட்டியாரவர்களைக் கேட்டும் அவர் ஒரே பிடியாய் ஒரு பைசாகூட அதிக சம்பளம் கொடுக்க முடியாதென்றும் தனக்கு அப்போது கொடுத்து வரும் ரூ 500 சம்பளமே தாக்ஷண்யத்திற்காகக் கொடுப்பதாகவும், தன் வேலையை நூறு ரூபாய் சம்பளக்காரர் சாதாரணமாய் செய்யக் கூடுமென்றும் தனக்கு அச்சம்பளத்திற்கு இருக்க இஷ்டமில்லாவிட்டால் அன்றே நின்று விடலாமென்றும் அவமதிப்பாய் கடிதம் எழுதினதைக் கண்டு அங்கிருப்பதைவிட பிச்சை எடுத்து சாப்பிடுவது நலமாகும் எனவும், சுயமதிப்பை யிழந்து எவரிடமும் சேவகம் செய்யக் கூடாதெனவும் நினைத்து அன்றுடன் வேலையை விட்டு விலகுவதாய் பதில் எழுதிவிட்டு தன்னிடமிருந்த சாமான்களை ஒப்புவித்துக் கொண்டிருக்கும் போதுதான் எனது கடிதம் வந்ததாகவும், ஆகையால் தான் வேலையை உடனே ஒத்துக் கொள்ளத் தயாராயிருப்பதாகவும், தன்னை முன்பின் அறியாதவர்களாயிருந்தும்

தனக்கு மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளம் கொடுப்பதாக வாக்களித்த தற்குத் தான்வந்தனம்செய்வதாகவும் ஆயினும் இனிமேல்தான் வியாபாரம் ஆரம்பிக்கப் போவதால் மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளம் பெறுவது நியாயமல்லவென்றும் ஆகையால் வியாபாரத்தில் தகுந்த இலாபம் வரும் வரையில் தனக்கு ஜாக்ரய்ய ரெட்டியார் கொடுத்து வந்த ரூ 500 சம்பளம் கொடுத்தால் போதுமென்றும், அப்பால் போகப்போக தன் வேலையைப் பார்த்து வருஷா வருஷம் ரூ 50 வீதம் உயர்த்திக் கொண்டே போனால் 10வருஷங்களில் ரூபாய் ஆயிரம் தனக்கு வந்து விடுமென்றும், தன்னை வைப்பதில் ஒரு அபாயமிருக்கிறதெனறும் அதாவது ஜாக்ரய்ய ரெட்டியார் எங்கள் வியாபாரத்தை போட்டியால் நசுக்கக்கூடிய சக்தியும் பலமும் கொண்டவரென்றும் ஆகையால் அதையும் உத்தேசித்தும் லாப நஷ்டங்களைக் கவனித்தும் சொல்லும் படியும் அவசரப் பட்டு எதுவும் செய்ய வேண்டாமென்றும் எச்சரித்தார். ரெட்டியார் போட்டி போட்டு வியாபாரத்தை நசுக்குவாரென்று அவர் சொன்னபோது என் கண்கள் ஜொலித்ததைக்கண்ட லாஜரெஸ் முகம் சந்தோஷக் குறிகள் காட்டியதாக என் மனதில் பட்டது. நான் தீர்மானித்த விஷயத்தை மாற்றும் சுபாவமில்லாதவனுதலால் அவர் சொன்ன காரணங்களை அங்கீகரிக்க முடியாதெனச்சொல்லி அவரை மாதம் ஆயிரம்ரூபாய் சம்பளத்தில் அன்றைய முதல் நியமித்ததாய் எழுதிய கடிதத்தை அவரிடம் கொடுத்து கூடியஜல்தியில் வியாபாரம் ஆரம்பிக்கவேண்டுமென்றும் சொன்னேன். குமஸ்தாக்கள் முதலியவர்களை நியமித்துக் கொண்டு எப்போது தெரிவிக்கிறேனே அப்போது வருவதாய்ச் சொன்னர். அப்போது நான், வியாபாரம் சம்மந்தமான ஆட்களை நியமித்தல், தள்ளுதல், சம்பளங்கள் ஏற்படுத்தல் முதலிய சகல வேலைகளையும் அவரே தான் செய்ய வேண்டுமென்றும். அவரைத் தவிர வேறெந்த உத்யோகஸ்தரோ, முக்யஸ்தர்களோ, வியாபாரிகளோ தன்னிடம் வரவேகூடாதென்றும், ரூபாய்களைக்கூட அவர் கணக்கில் பாங்கியில் கட்டுவதாகவும் சொன்னேன். அவர் அதை அங்கீகரியாது ரூபாய்கள் கம்பெனிபேரிலேயே இருப்பது நலமென்றும் தான் கேட்கும் தொகைகள் மட்டும் அப்போதைக்கப்போது கொடுத்தால் போதுமென்றும் சொல்லி அங்கிருந்தபடியே பல ஊர் வியாபாரிகளுக்கும் தான் ஜாக்கிரய்ய ரெட்டியார் கம்பெனியிலிருந்து விலகி இப்போது ஸ்ரீதரன் கம்பெனியில் வேலைக்கமர்ந்திருப்பதாக

வும் ஆகையால் ஸ்ரீதரன்கம்பெனியுடன் வியாபாரம்செய்ய இஷ்டப் பட்டால் மட்டும் இன்னின்ன சரக்குகள் இவ்வள வவ்வளவு அனுப் புவதென்றும் பதில் உடனே தெரிவிப்பதெனவும் தந்திகள் கொடுத் தார். அப்படியே உள்ளூர் வியாபாரிகள் எல்லோரிடமும் போய் தான் ஜாக்ரய்ய ரெட்டியார் கம்பெனியிலிருந்து அன்று விலகி ஸ்ரீதரன் கம்பெனியில் காரியஸ்தராய் அமர்ந்திருப்பதாயும் ஆகையால் இனிமேல் தன்னிடம் வியாபாரம் செய்வதானால் ஸ்ரீதரன் கம்பெனியாரிடம் வியாபாரம் செய்வதாக நினைத் துச் செய்யவேண்டுமே தவிர, ரெட்டியார் கம்பெனியில் வேலை செய்வதாக நினைத்து வியாபாரம் நடத்தக் கூடாதென்றும், ஸ்ரீதரன் கம்பெனியுடன் வியாபாரம் செய்ய இஷ்டப்பட்டால் மட் டும் செய்யும்படியும் சொல்லிச் சென்றார்: வெளி ஊர் வியாபாரிகளெ ல்லாம் மறுதினமே ஸ்ரீதரன் கம்பெனிக்கு சரக்குகள் அனுப்பி விட்டதாகவும் தங்களுக்கு லாஜரெஸ்ஸைத் தெரியுமே தவிர ரெட் டியாரைத் தெரியாதென்றும் ஆகையால் அவர் எங்கிருக்கிறாரோ அங்கு அவர்களும் வியாபாரம் செய்வதில் எவ்வித ஆட்சேபனையு மில்லையென்றும் பதில் தெரிவித்து விட்டார்கள். மறுதினம் முதல் ஜாக்ரய்ய ரெட்டியாருக்கு மாமூலாய் நடக்கும் வியாபாரத்தில் நாளு க்கு நாள் வியாபாரம் குறைந்து 15 தினங்களில் பாதி வியாபாரம் கூட நடைபெறவில்லை. தமது காரியஸ்தராயிருந்த லாஜரெஸ் என் பவர் தமது வேலையில்லாததால் அவரிடம் செய்யும் லேவாதேவி களுக்கு தானாவது தனது கம்பெனியாவது ஜவாப்தாரியாகமாட்டா ரகளென்றும் எல்லா வியாபாரிகளுக்கும் எழுதியதோடு பத்திரிகை களிலும் பிரசுரிக்கும்படி செய்துவிட்டு ஸ்ரீமான் லாஜரெஸ் அவர் களுக்கும் ரெட்டியார் பேரைவைத்துக்கொண்டு வேறொரு கம்பெனி க்கு வேலைசெய்வது சரியல்லவென எழுதினர், ஸ்ரீமான் லாஜரெஸ் அவர்கள் அதற்காகக் கோபப்படாது தான் எல்லா வியாபாரி களுக்கும் எழுதிய கடிதங்களின் நகல்களையும், ஜாக்ரய்ய ரெட்டி யார் பிரசுரிப்பதற்கு முன் லாஜரெஸவர்கள் அவ்விஷயத்தை எல்லா பத்திரிகைகளிலும் வெளியிட்டிருக்கும் விளம்பரங்களின் பிரதிக ளையும் மரியாதையாய் எழுதிய கடிதத்துடன் ரெட்டியாருக்கு அனு ப்பினார். இனி விலைகளைக் குறைத்து விற்று சில மாதங்களில் ஸ்ரீத ரன் கம்பெனி வியாபாரத்தை ஒடுக்கி விடுவதென உத்தேசித்து போட்டிபோட ஆரம்பித்தார். அப்போதும் ஸ்ரீதாருக்கு அதிக

இலாபம் இல்லாவிட்டாலும் மாதம் இரண்டாயிர ரூபாய் இலாபம் கிடைத்து வந்தது. இதற்குள்ளாக அதிக வியாபாரம் செய்யும் ஊர்களிலெல்லாம் நேராக சரக்குகள் வர வழைப்பதைவிட ஆங்காங்கு கிளை வர்த்தக சாலைகள் ஸ்தாபிப்பது நலமென்று சொல்லி லாஜரெஸ் ஸ்தாபிதம் செய்ததில் பதினைன்கு ஊர்களில் பெருத்த வியாபாரமும் 95 ஊர்களில்சுமாரான வியாபாரமும் நடந்து வந்தது. ஒருமுறை சாமல் கோட்டை வியாபாரஸ்தலத்தைப் பார்வையிடச் சென்றபோது ஸ்ரீமான் லாஜரெஸ் அவர்கள் என்னை அழைத்துப் போய் அதன் சமீபத்திலுள்ள நான்கு பக்கங்களிலும் தண்ணீரால் சூழப்பட்டிருக்கும் விஸ்தாரமான திட்டைக் காண்பித்து அதை சுமார் இருபதாயிரம் ரூபாய்களுக்கு வாங்கி சுமார் நாற்பதாயிரம் ரூபாய்கள் செலவு செய்து சுற்றிலும் உயரமானதும் பலமானதுமான இரும்பு வேலி அமைத்து அவ்விடத்தில் கஞ்ஜாபயிரிட்டால் வருஷா வருஷம் அனேக ஆயிரரூபாய்கள் வருமானம் வருமெனச் சொன்னார். அவர் சொன்ன வார்த்தையை நம்பி நான்செய்ததில் போட்ட முதலை முதல் வருஷத்திலேயேஎடுத்து விட்டேன். அதைக்கண்ட மார்டின் கம்பெனியார் அத்திட்டை பத்து லக்ஷம் ரூபாய்களுக்கு விற்று விடுவதாகில் வாங்கிக் கொள்வதாக எழுதினார்கள். நான் விற்க மறுதலித்து விட்டேன். மாதா மாதம் சுமார் பத்து லக்ஷ ரூபாய்களுக்கு லேவாதேவிகள் நடந்து கொண்டு வந்தது. அந்தத் தீவு வாங்கியதிலும் வேலிகளமைத்ததிலும் மாளிகை கட்டியதிலும் பெருந்தொகை செலவு ஆகவே வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கலில் சற்று கஷ்டம் வந்தது. அச்சமயத்தில் தான் செல்வம் என்னிடம் வந்து சேர்ந்தாள். அதன் மூலமாய் கொஞ்சம் பொருள் விரயமானதால் ரெட்டியாரவர்கள் புரளிகளும் கட்டிவிட்டார். இனி ரொக்கப் பணம் கொண்டு வராவிடில் வியாபாரத்தில் கஷ்டம் ஏற்படுமென நினைத்து ஊர்போக உத்தேசித்திருக்கும்போது சுதேசமித்திரன் பத்திரிகையில் செல்லம் காணமற் போன விளம்பரத்தைப் பார்த்ததும் நான் மட்டும் இரகசியமாய்ப் போக உத்தேசித்து மாலை நேரங்களில் வழக்கமாய் உலாவப் போவதுபோல் சென்று பிரயாணத்துக்கு அவசியமான சாமான்களுடன் என் ஆகாய விமானத்தைப் புறப்படுவதற்குத் தயார்படுத்தி வைத்திருக்கும்படி காரியஸ்தரிடம் சொல்லிவிட்டு, உலாவும் இடத்திலிருந்து நேராக ஆகாய விமானமிருக்கும் இடம்சென்று என்னைப்

பின்பற்றி வந்த துப்பறிபவரை ஏமாற்ற உத்தேசித்து நான் வெளி வந்து செல்வத்தைக் கூப்பிடுவதுபோலும் அவள் வராது தாமதிப் பது போலும் அபினயித்து மீண்டும் கதவு வரை நான் போய்க் கூப் பிட்டது போல் கூப்பிட்டு செல்வம் பேசிக் கொண்டே வர அவளு டன் லாஜரெஸ் என் போல் ஆடை தரித்து மோட்டார் வண்டியேறி செல்வத்தை அழைத்துக் கொண்டு போவதைப் பார்த்த துப்பறிவர் சென்றவுடன், நான் ஆகாய விமானம் ஏறி திருவீராஜ பட்டணம் சென்றேன். அங்கு அதற்கென கட்டியிருக்கும் மதில் சுவர்களு டன் கூடிய மைதானத்தில் ஆகாய விமானத்தை விட்டு, கந்தனை அழைத்துக் கொண்டு இரகசிய வழியின் வழியாய் நான் வந்த விஷ யம் தெரியும்படி மணியடித்து என் தகப்பனாரை எச்சரித்துவிட்டு அவர் அங்கிருப்பதாக மணியடித்துத் தெரிவிக்க நான் தாராளமாய் சென்றேன். அப்போது தாங்கள் வந்ததும் வந்த பின் செல்வத் தை அடைத்திருக்குமிடம் காட்டச் சொல்லிக் கேட்டதும் சில நிப ந்தனைகளுடன் அவர்கள் தங்களை அழைத்துப் போய் காட்ட தாங்கள் செல்லத்திடம் பேசிவிட்டுத் திரும்பிய பின் நீங்களி ருவரும் படுத்துக்கொண்ட பின் செல்லம் எவ்வாறோ மாய மாய் மறைந்து விட்டா ளென்றும் தெரிவித்துவிட்டு என்ன ஜோலியாய் நான் வந்தேனென்று கேட்டார். நான் முதலில் அவரி டம் உண்மை சொல்லாமல் வீண் விரையப்படுத்தி விட்டதாகச் சொல்லி மீண்டும் ரூபாய்கள் கொடுக்கிறாரா இல்லையாவெனப்பார்த்த பின்னர்தான் நான் பழைய பிடிவாதக்கார சுந்தர ராஜு அல்லவெ ன்றும், வியாபாரத்தில் தேர்ச்சி பெற்று அமோகப் பொருள் சம்பா தித்த திடமான வியாபாரியென அவருக்கு ரூபிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அவர் கொடுத்த லட்ச ரூபாய்களை வீண் விரையப் படுத்தி விட்டதாகவும் மீண்டும் எப்படியாவது லட்ச ரூபாய்கள் எனக்கு உடனே கொடுத்துத்தீர வேண்டும் என்றும் முறண்டினேன். "நீ திடீரென்று வந்து லட்ச ரூபாய்கள் கேட்பாயென்று தயாராய் வைத்தா இருக்கிறேன் உன் கையில் தூக்கிக் கொடுத்துப் போகச் சொல்ல" என்று சொல்லிவிட்டு கந்தனைப் பார்த்து "நீயா வது புத்தி சொல்லக்கூடாதா" என்றார். அவன் ஒன்றும் பேசாமல் மெதுவாகச் சென்று விட்டான். அப்போது நான் அடிக்கடி அங்கு வருவது அபாயகரமாய் முடியுமென்றும் தள்ளாத காலத் தில் அவரைக் கஷ்டத்திற்குள்ளாக்குவது சரியல்லவென்றும்

சொன்னார். நான் எப்போதும் நமது இரும்புப் பெட்டியில் மூன்று லக்ஷ ரூபாய்களாவது இருப்பது வழக்கமாயிற்றே! இப்போது இல்லாமல் எங்கு போய் விட்டது என்று சொல்லிக் கொண்டே அவர் உட்கார்ந்திருந்த மேஜையின் மேல் வைத்திருந்த இரும்புப் பெட்டிகளின் சாவிகளை எடுத்தேன். அவருக்குக் கோபம் வந்து சாவி எடுக்காமல் என்னைத் தடுத்துத் தள்ளினார். அவர் தள்ளின விசையில் பொத்தென்று கீழே விழுந்துவிட்டேன். கீழே விழுந்த நான் அவர் இன்னும் என்ன செய்கிறாரென்று பார்ப்பதற்காக மூர்ச்சித்தவன் போல் விழுந்து பாசாங்கு செய்தேன். விழுந்த நான் எழுந்திராதது கண்டு சட்டென்று அவர் எழுந்து வந்து மூச்சு வருகிறதாவென்று என் மூக்கின் முன் கைவைத்துப் பார்த்துவிட்டு அவருக்கு கைநாடி பார்க்கத் தெரியுமாதலால் என் கை பார்ப்பதற்காக உடம்பிற்குள் அகப்பட்டிருந்த என் கையை இழுக்க என் உடம்பைத் தூக்கியபோது எனது ஜோப்பியில் ஒரு கட்டு காகிதங்கள் இருக்கக் கண்டு கைநாடி பிடித்துப் பார்த்ததும் எவ்வித ஆபத்துமில்லையென அறிந்து குழந்தையைத் தூக்குவதைப்போல் என்னைத் தூக்கி சோபாவில் படுக்க வைத்துவிட்டு, அக்காகிதக் கட்டு கடிதங்களை எடுத்து மேஜையில் வைத்துக் கொண்டு என் கடன்காரரிடமிருந்து வந்த கடிதங்களா எனப் பார்க்க உட்கார்ந்து வாசித்தார். முதல் உறையை எடுத்துப் பார்த்ததும் உறையின் மேல் "சாமல் கோட்டா சமீபத்திலுள்ள தீவு சம்மந்தமான தஸ்தவேசுகளும் கடிதங்களும்" என இருக்கக் கண்டு ஆவலாய்த் திறந்து வாசித்தார். அதில் என் மாற்றுப் பேராகிய ஸ்ரீதரன் என்ற பேருக்கு இருபதாயிர ரூபாய்க்கு திட்டு வாங்கிய பத்திரமும் அதில் நாற்பதாயிர ரூபாய் கொடுத்து வேலி போட்ட ரசீதுகளும், சர்க்காரிலிருந்து அந்நிலத்தில் கஞ்ஜா பயிரிடுவதற்கு எனக்களித்த உரிமையும், அதற்கடுக்காற்போல் அவ்வருஷத்தில் சர்க்காருக்கு கஞ்சா விற்றதற்குக் கிடைத்த ரூபாய் எழுபத்தையாயிரம் அனுப்பிய விவரமும், அதற்குப் பின்னால் அத்தீவை மார்ட்டின் கம்பெனியார் பத்து லட்ச ரூபாய்க்கு விலைக்குக் கேட்ட கடிதமும், நான் கொடுக்க மறுதலித்த கடிதத்தின் நகலும் இருந்தன. அவைகளையெல்லாம் படித்ததும் அவர் கண்கள் ஜொலித்து அவர் முகம் அதிக சந்தோஷத்தைக் காட்டிற்று. அப்பால் ஒவ்வொரு உறையாகத் திறந்து பார்க்க ஒவ்

வோர் ஊர் காரியஸ்தரிடமிருந்தும் வந்த அதற்கு முந்திய மாத இலாப நஷ்டக் கணக்குகளொன்றும் ஒவ்வோர் ஊரிலும் வியாபாரத்திற்குத் தக்கபடி நூறு ரூபாய்க்குக் குறையாமல் ஆயிரம் ரூபாய் வரை இலாபம் கிடைப்பதாகத் தெரிந்துகொண்டு அவைகளையெல்லாம் முன்போல் கட்டி என் ஜோப்பியில் வைத்தார். நான் அப்போது தான் மயக்கம் தீர்ந்து எழுந்திருப்பவனைப்போல் எழுந்திருக்க, சில நிமிஷம் சந்தோஷகரமான முகத்துடன் என்னைப் பார்த்துவிட்டு ஒன்றும் பேசாமல் இரும்புப் பெட்டிகளின் சாவிகளை எடுத்து என் கையில் கொடுத்தார்! நான் ஒன்றும் பேசாமல் இரும்புப் பெட்டிகளைத் திறந்து ரொக்கமாக மூன்று லட்ச ரூபாய் நோட்டுகளெடுத்துக்கொண்டு உண்டியல் புஸ்தகத்தை எடுத்து ஸ்ரீதரன் கம்பெனி சென்னை காரியஸ்தர் பேரால் இரண்டு லட்ச ரூபாய்களுக்கு தெரிசன உண்டியல் எழுதி மேஜைமேல் அவர் எதிரில வைத்தேன். ஒன்றும் பேசாமல் சந்தோஷமாய் உண்டியலில் கையெழுத்துப் போட்டுக்கொடுத்தார். நான் உண்டியலையும் நோட்டுகளையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டேன். இரகசியக் கதவு திறந்ததும் அவர் எழுந்து வந்து என்னை வாரியெடுத்து முத்தமிட்டு "நீ இவ்வளவு காரியஸ்தனுவா யென்று நான் கனவிலும் கருதவில்லை. இனி நமது குடும்பத்தைப்பற்றிய கவலையே கிடையாது. கடவுள் உனக்கு இன்னும் அதிகமான நல்ல புத்தி கொடுத்து ரக்ஷிப்பாராக" என்று சொன்னதும் தீரவானுகிய அவர் கண்களிலிருந்து பல பல வென்று கண்ணீர் வடிந்தது. உடனே நான் நமஸ்காரம் செய்து இரகசிய அறைக் கதவை மூடிவிட்டு வந்து கந்தனையும் அழைத்துக் கொண்டு ஆகாயவிமான மேறி யாதொரு ஆபத்தில்லாமல் சௌக்யமாய் கொடிகாமம் வந்து சேர்ந்தேன். காலை 4 மணிக்கு லாஜரெஸ் அங்கு வந்ததும், நான் லாஜரெஸ், கந்தன் ஆகிய மூவரும் மலர்ந்திருந்த மல்லிகைப் புஷ்பங்களை கூடை நிறைய எடுத்துக் கொண்டு எனது மோட்டார் வண்டி யேறி வீடு சேர்ந்தேன்.

என்றார். அப்பால் சற்று நேரம் சாதாரண விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்து விட்டு கோவிந்தன் சென்றார்.

இரவு 7 மணி யானதும் செல்வத்தை மறுவேடம் பூண்டுவரச் செய்து தனது மோட்டார் வண்டியில் புர்க்கா போட்டு செல்

வத்தையும் ஸ்ரீகரரையும் ஏற்றிக்கொண்டு வந்து ஆயிர விளக்கு சமீபத்திலிருக்கும் லேடி ராமசாமி முதலியார் அம்மை குத்தும் சாவடியைத் திறந்து உள்ளே இருவரையும் இருக்கச் செய்து "திருவீரராஜபட்டணத்தில் நீ தட்டட்டியிலிருக்கும் போது பேசிய ஓட்டிலி காடியின் குரலைப்போல் கேட்டால் ஜன்னல் கதவை மெதுவாகத் திற; அப்போது நான் தெரிந்து கொள்கிறேன்" என தென் தேசவாசி வேடம் பூண்டிருக்கும் கோவிந்தன் சொல்லிவிட்டு அங்கு இருட்டில் இருந்துவருவோர் போவோரைக் கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்படி நின்று கொண்டிருக்கும்போது சென்னையிலிருந்து சைதாப்பேட்டை போகும் மோட்டார் பஸ் ஆயிரம் விளக்கு மார்க்கட்டண்டை நின்றதும் அதிலிருந்து காடியும் ஓட்டலியும் இறங்கி சாராய வெறியால் தள்ளாடிக்கொண்டு அங்குள்ள சாராயக் கடைக்குப் போவதற்கு அம்மை குத்தும் சாவடி பக்கம் வந்தார்கள். அவர்கள் சாவடி பக்கத்தில் வந்ததும் பிச்சைக்காரன் வேஷம் பூண்டு நொண்டிக்கொண்டு கையில் தடி தாங்கி வந்த சீனு ஓட்டலியிடம் வந்ததும் "மஹாப் பிரபு 3 நாள பட்னி; ஏழைக்குக் காலணாக் கொடுங்கள்" என்று வழி மறித்தான்; ஓட்டலி, "சீ தூரப்போ; பிச்சை எடுப்பதைவிட எங்காவது போய் திருடுகிறது தானே" என்று சொன்னான். உடனே காடியை வழி மறித்து "ஐயா சாமி காலணா தர்மம் கொடுத்தால் இட்லி வாங்கித்தின்கிறேன். மூன்று நாளாக வயிறு கொதிக்கிறது சாமி; ஒரு காசு தர்மம் கொடுங்கள் சாமி, என்று அவனை வழி மறித்தான். "இதென்னடா சனியனாயிருக்கிறது பிழைக்க வழி தெரியாவிட்டால் முடிச்சவிழ்க்கிறது தானே" என்று சொல்லி விட்டு காலணா எடுத்து வீசி விட்டு இருவரும் சாராயக் கடைக்குள் சென்றனர். அப்போது ஜன்னல் கதவு திறக்க; கோவிந்தன் உள்ளே சென்று கேட்க திருவீரராஜ பட்டணத்தில் அன்று இரவு பேசிய இருவர் குரல்தான் என்று தீர்மானமாய்ச் செல்வம் சொன்னார். உடனே அவர்களை மோட்டாரில் ஏற்றி வீட்டுக்கு அழைத்துப்போகும்படி சீனுவிடம் சொல்லி விட்டு கோவிந்தன் சாராயக் கடைக்குள் புகுந்தார். வேறு எங்காவது எவ்வளவு சாராயமாவது எவ்வளவு கள்ளாவது குடித்திருந்தாலும் சென்னையிலிருந்து ரூபாய்கள் அதிகமாயிருந்தால் ஆயிரம் விளக்கு சாராயக்கடைக்கும்

—துட்டு குறைவாயிருந்தால் ஆயிரம் விளக்குக் கள்ளுகடைக்கும் ஒட்டலியும் காடியும் வராமலிருக்க மாட்டார்கள். ஒட்டலியையும் காடியையும் பற்றி கோவிந்தன் "சுந்தர முதலியார்" கொலை சம்மந்தத்தில் அறிந்திருப்பதால் அவர்கள் சுபாபங்கள் குணம் முதலியன கோவிந்தனுக்கு நன்றாய்த் தெரியும் (மோஹன சுந்தரம் 155 வது பக்கம் பார்க்க) இவ்விஷயம் கோவிந்தனுக்கும் தெரியும். ஆகையால் தான் அவ்விடத்தில் வந்து காத்திருந்தார். கோவிந்தன் தென் தேச வாசிகளைப் போல் கமான் குடும்பியும், நெற்றி நிறைய விபூதி பூசி சந்தனப் பொட்டிட்டு அதற்கு மேல் கொஞ்சம் குங்கமும் வைத்துக் கொண்டு சலவைக்குப் போடாமல் துவைத்துத் துவைத்துக் கட்டுவதால் சாயமேறிய வேஷ்டி கட்டிக் கொண்டும் ஒரு குட்தா போட்டுக் கொண்டும் ஒரு ஜரிகை வேஷ்டியை யோக வல்ல வாட்டாகப் போட்டுக் கொண்டும் வந்து அவர்கள் உட்கார்ந்து குடித்துக் கொண்டிருக்கும் இடத்தின் சமீபத்தில் வந்ததும் அவர்களிருவருக்கும் "நமஸ்காரம்; திருவீரராஜ பட்டணம்" என்று சொல்லி சும்மாயிருந்தார். தென் தேசவாசியாகிய அவர் தங்களை நோக்கி வருவதைக் கண்டதும் அவரைக் கவனித்தனர். அவர் வந்ததும் "நமஸ்காரம் திருவீரராஜபட்டணம்" என்று சொல்லி விட்டு சும்மா யிருக்கவும் ஒட்டலி "யார் தெரியவில்லையே," என்றார். "திருநெல்வேலி ஜில்லா சுப்பரமணியர் க்ஷேத்திரம் திருச்செந்தூர் தாலுகா திருவீரராஜபட்டணம்" என்று சொல்லி "சுப்பரமணியர் இலை விபூதி பிரசாதம் பெற்றுக் கொள்ளுங்கள்" என்றார். அவர்கள் வாங்கி நெற்றியிலிட்டுக் கொண்டு "எங்கு வந்தீர்கள்" என்றான். கோவிந்தன் வெளியில் வந்தால் சொல்லுகிறேன். இங்கு எல்லோரும் இருக்கிறார்கள், வருகிறார்கள், போகிறார்கள், நம்மைக் கவனிக்கிறார்கள் என்றார். ஒட்டலியும் காடியும் மீதி சாராயத்தையும் குடித்து விட்டு ஆளுக்கு 2 அணாவுக்கு கறி தோசை வாங்கிக் கொண்டு அவர் கூடவே வந்தார்கள். அவர்கள் அவரை கூட கூட்டிக் கொண்டு போய் லேடி இராமசாமி முதலியார் அம்மை குத்தும் சாவடியில் அப்போது யாருமில்லாததால் அங்கு அழைத்துப் போய் என்ன சமாசாரம் என்று கேட்டார்கள். "முன் உங்களிருவர் உதவியால் திருவீரராஜபட்டணத்தில் இரும்புப் பெட்டியைத்

திறந்து எடுத்து வந்த தஸ்தவேசுகளில் பாதி தஸ்தவேசுகள் தான் கிடைத்தன. இன்னும் பாதி தஸ்தவேசுகளும் பத்திரங்களும் அகப்படவில்லை. அவைகள் கிடைத்தால் தான் வியாஜ்யம் ஜெயிக்கு மென்கிறார் வக்கில், ஆகையால் தாங்களிருவரும் வந்தால் இன்னொரு இரும்புப் பெட்டியையும் திறந்து பார்க்கலாமென்றும் அதற்காக முன் போல் முன் பணமாக உங்களிருவருக்கும் ஆளுக்கு 100 ரூபாய்கள் கொண்டு வந்திருக்கிறேன். இந்தாங்கள் ரூபாய்கள் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று தன் மடியில் வலைப்பை யில் இடுப்பைச் சுற்றி கட்டி வைத்திருந்த ரூபாய்கள் பையை எடுத் துக் கீழே வைத்தார். "ரூபாய்களை சலரசென்று கொட்டாதேயுங் கள், வைத்துக் கொள்ளுங்கள், சமுத்திரக் கரைக்குப் போய் அங்கே பெற்றுக் கொள்ளுகிறோம். இங்கு அநேகர் வரப்பட்ட இடம்" என்று தங்களுடன் கூட்டிக் கொண்டு பைகிராப்ட்ஸ் ரோட் வழியாய்ச் சமுத்திரக் கரைக்குச் சென்றார்கள். மயக்கம் அதிகரித் திருந்ததாலும் அவர்களிருவரும் கறி தோசை சாப்பிட்டு கொண்டே நடந்ததாலும் வழியில் ஒன்றும் பேச வில்லை. சமுத்திரக் கரை சேர்ந்ததும் கரடி மீண்டும் "தங்களைப் பார்த்ததாக ஞாபகமில்லையே என்றான். "இம்முறை திட்டி வாசல் வழியாய்த் தப்புவதற்கு நாம் ஒருவர் மேல் ஒருவர் நின்று அவர்கள் மேல் ஏறித் தப்ப வேண்டிய தில்லை. அதற்காக ஏணி தயாரித்து வைத்திருக்கிறேன்" என்றார் கோவிந்தன். முன் அவ்வாறு ஏறி வந்த விஷயம் அந்நால்வருக்குத் தான் தெரியுமாதலாலும் வேறு எவருக்கும் தெரியாதாதலாலும், சாராய மயக்கத்தால் புத்தி சரிவர சுவாதீனமாயில்லாமலிருந்ததா லும் பின் அதைப் பற்றி கேட்டு விசாரிக்க வில்லை. "எப்போது புறப்பட வேண்டும் என்று கேட்டார்கள். அன்றைய போட் மெயி லிலேயே புறப்படலாமென்றும் சொல்லி கரடிக்கு நூறு ரூபாயும் ஓட்டலிக்கு நூறு ரூபாயும் எண்ணிக் கொடுத்தார். அவர்கள் திருவல்லிக்கேணி பெரிய தெருவிலிருக்கும் பணலேவாதேவி செய்பவரான துல்ஜாராம்லாலா அவர்களிடம் கொண்டு போய் ரூபாய்களைக் கொடுத்து வைத்து விட்டு, பூட்டுகளுக்கு சாவி கள் போடும் கடையில் வைத்திருந்த ஆயிரக் கணக்கான சாவிகளு ள்ள பையையும், பூமிக்குள் புதைத்து வைத்திருந்த கன்னக் கோலையும் எடுத்துக் கொண்டு வந்தார்கள். கோவிந்தன அதற்குள்

ளாக வாடகை மோட்டார் அமர்த்தி வைத்திருந்ததால் மூவ ரும் அதில் ஏறி வரும்போது வழியிலுள்ள சீமை சாராயக் கடையில் போய் அதிக விலையுள்ள உயர்ந்த ரகம் பிராந்தி புட்டி 3 வாங்கிக் கொண்டு வந்து ஒரு புட்டியைத் திறந்து 2 டம்ளர்கள் நிறைய தண்ணீராவது சோடாவாவது கலக்காமல் தனி பிராந்தியை ஊற்றி அதில் தனது கையில் வைத்திருந்த மருந்துத் தூளைக் கலந்து, கோவிந்தன் அவ்விருவருக்கும் கொடுத்து விட்டார். ஒட்டலியும் கரடியும் வெகு உற்சாகத்துடனும் ஆவலுடனும் ஒரே மூச்சாய்க் குடித்து விட்டு டம்ளர்களை கீழே உருட்டி விட்டார்கள். உடனே அவர்களை மோட்டாரிலேற்றிக் கொண்டு எழும்பூர் ரயில்வே ஸ்டேஷன் சென்று முன் கூட்டியே சீனு தயாராய் மூன்று இரண்டாவது வகுப்பு டிக்கட்டுகள் வாங்கி இடம் தனிப்படுத்தி வைத்திருந்த இரண்டாவது வகுப்பு வண்டியில் அவர்களிருவரையும் அழைத்துப் போய் படுக்க வைத்ததும் இருவரும் ஸ்மரணை தப்பித் தூங்கி விட்டனர். கோவிந்தன் ஒரு நீண்ட தந்தி எழுதி சீனுவிடம் கொடுத்து உடனே அனுப்பச் சொல்லிவிட்டு வீட்டிலிருக்கும்*இரு மைனுகளை அதிக ஜாக்ரதையாகப்பார்த்துக்கொள். ஆண்மைனு திடீரென்று நினைத்த மாத்திரத்தில் பறக்கும் சுபாவமுடையதாதலால் கூண்டிற்குவெளியே விடாமலும் கூண்டில் அடைத்திருப்பதாகத் தெரியாமலும் சர்வஜாக்ரதையாகப் பார்த்துக்கொள். மீண்டும்%கோளம்பு வல்லூறுகள் நாளை வந்து வட்டமிடும். ஜாக்ரதையாயிரு” என எச்சரித்துச் சென்றார்.

---

*மைனுக்கள் என்பது சுந்தரராஜனுக்கும் செல்வத்துக்கும் கொடுத்திருக்கும் மாற்றுப் பெயர்கள்.

%கொளம்பு வல்லூறுகள் என்பது கொளம்பு துப்பறிவோர்.

பதினைந்தாவது அத்தியாயம்

கொளம்பு துப்பறிவோர் போட்டி (முன் தொடர்ச்சி)

பட்டதோர் காலிலே பட்டிடுமாறு போல்
கெட்டதோர் குடியதே கெட்டுவருமே.

போலீஸ் இன்ஸ்பெக்டரும் கொளம்பு துப்பறிவோர் மூவரும் திருநெல்வேலி ஜில்லா மாஜிஸ்டிரேட் அவர்களிடம் வந்து நடந்தேறிய விஷயங்களை விவரமாய்ச் சொன்னார்கள்.

ஜில்லா மாஜிஸ்டிரேட்:—ஆனால் உங்கள் அபிப்பிராயத்தில் சுந்தரராஜு அந்தத் திட்டில் வசித்திருக்க வேண்டுமென்ற திட்டமாய்ப் படுகிறது போலும்.

துப்பறிவோர் தலைவன்:—ஆம்; அதற்குக் கிஞ்சிற்றேனும் சந்தேகமே கிடையாது; திட்டிலிருந்த விவசாய உத்யோகஸ்தன் முதலில் தன்னைப் பற்றி உளறியதையும் அங்கு சென்று பார்த்த பின் அவர்களில்லாமற் போகவே அவன் பேசிய வேறு மாதிரியிலுமிருந்தே சுந்தரராஜுவும் செல்வமும் அங்கிருந்ததாக நினைக்கவேண்டியதிருக்கிறது. ஆகையால் முதலில் ஸ்ரீதரன் கம்பெனி தலைமை வியாபார ஸ்தலத்திலுள்ள சொத்துக்களையும் அப்பால் அதன் மூலமாய் இதர கிளை ஸ்தாபனங்களிலுள்ள சொத்துக்களையும் சர்க்கார் பறி முதல் செய்ததாகத் தெரிவித்தால் ஆசாமி கட்டாயமாய் வெளிப்பட்டே தீருவான். இல்லாவிட்டால் அனேக லட்ச ரூபாய் சரக்குகளாவது சர்க்காருக்குப் பறி முதலாகும்.

ஜில்லா மாஜிஸ்டிரேட்:—அவ்வளவு சுலபமாய் பறி முதல் செய்யச் சட்டம் இடம் கொடுக்குமென்று எனக்குத் தோன்றவில்லை, ஏனெனில் முதலில் சுந்தரராஜுவும் ஸ்ரீதரனும் ஒரே ஆசாமியென்று ருஜுவாக வேண்டும். படத்தைப் பார்த்தவர்கள் அநேகமாய் சுந்தரராஜுவும் ஸ்ரீதரனும் ஒரே ஆசாமியா யிருக்கக்கூடுமென்று சொல்லுவார்களே தவிர பிராமண வாக்கு மூலத்தின்பேரில் "அவர் தான் இவர்" என்று சொல்ல யார் முன் வருவார்கள்? ஆகையால் அவ்வாறு செய்வது சாத்தியப்படாதெனவே நினைக்கிறேன்.

துப்பறிவோரின் தலைவன்:—என் மனதில் சற்றேனும் சந்தேகமில்லாமல் இருவரும் ஒருவர்தான் என்று திட்டமாய்ப் படுவதால் நான் அவ்வாறு பிரமாண வாக்கு மூலம் கொடுக்கிறேன்.

ஜில்லா மாஜிஸ்டிரேட்:—போலீசாரும் துப்பறிவோரும் கொடுக்கும் பிராமண வாக்கு மூலங்கள் அனேகமாய் தனிப்பட்ட எவ்வித சம்மந்த முமில்லாதவர்களின் பிராமணவாக்கு மூலத்தால் ஆமோதிக்கப்பட்டாலொழிய அதன்மேல் நடவடிக்கை எடுத்தால் கூட தண்டனை உறுதியாவது கஷ்டமாகும்.

தலைமை துப்பறிபவன்:—அவ்வாறு ஒவ்வொரு விஷயத்திற்கும் முன்கூட்டியே சாக்ஷியும் ருஜுவும் கொடுத்த பின்னரே பிடிப்பதற்காவது பறிமுதல் செய்வதற்காவது வாரண்ட் கொடுப்பதாகிலும் அப்போது ஒருவரைக்கூட கைதிசெய்ய சாத்யமாகாதென்றே நினைக்கிறேன். போலீசார் வார்த்தையைவிட துப்பறிவோர் வார்த்தையிலும் பிராமண வாக்குமூலத்திலும் பொதுவாக எல்லோரும் நம்பிக்கை வைத்து நடப்பதே வழக்கம்.

ஜில்லா மாஜிஸ்டிரேட்:—இவ்வியாஜ்ய சம்மந்தமான விஷயங்களில் என்னை அனுவசியமாய் சம்பந்தப்படாமலிருக்கும்படி எனது டெப்டி மாஜிஸ்டிரேட் எச்சரித்திருக்கிறார். ஆகையால் அவரைக் கலக்காமல் நான் ஒன்றும் செய்யமுடியாது. நான் வாரண்டும் கொடுக்கமுடியாது.

என்று சொல்லி டெப்டி மாஜிஸ்டிரேட்டை அழைத்துவரச் சொல்லி அவரிடம் நடந்த விஷயங்களைச் சொன்னார். அவர் சுந்தர ராஜுவும் ஸ்ரீதரரும் ஒரே ஆசாமிதானென்று வைத்துக்கொண்டாலும், சுந்தர ராஜு துப்பறியும் திருவல்லிக்கேணி கோவிந்தன் உதவியின் பேரில்தான் அத்திட்டிலிருந்து தப்பியிருக்க வேண்டுமென்று இத்துப்பறிவோர் அபிப்பிராயப் படுவதாலும் உண்மையில் அவ்வாறு துப்பறியும் கோவிந்தன் உடந்தையாயிருந்தால் சுந்தர ராஜு சட்டவிரோதமான காரியம் செய்யவில்லையென்று அவர் மனதில் பட்டாலொழிய அதற்கு உடந்தையாயிருக்க கோவிந்தன் ஒருநாளும் முன் வரமாட்டாரென்றும், அப்படியில்லாது நாம் பறிமுதல் விளம்பரம் அனுப்பினாலும் சுந்தரராஜுவுக்கு யுக்தி சொல்லிக் கொடுக்கக்கூடிய பிரபல வக்கீல்களிருப்பதால் தப்புவதற்கு முன் கூட்டியே வழி ஏற்படுத்தியிருப்பார்களென்றும் ஆகையால் அவ்வுத்திரவு அனுப்புவதைத்தான் ஆமோதிக்கவில்லையென்றும் சொன்னார். தலைமை துப்பறிபவன் பிரயத்தனம் செய்து பார்ப்பதில் எவ்வித கெடுதலும் ஏற்பட்டுவிடப் போவதில்லையென்று

ஒரே பிடியாய்ப் பிடித்ததாலும் ஜில்லா மாஜிஸ்டிரேட்டிற்கும் அவ்வாறு செய்ய அபிப்பிராயமிருப்பதாக அவர்மனதில் பட்டதாலும் டெப்டி மாஜிஸ்டிரேட் தானே பறிமுதல் விளம்பரம் எழுதி தமது முத்திரையிட்டுத் துப்பறிபவரிடம் கொடுத்தார். கொளம்பு தலைமைத் துப்பறிபவன் மேற் சொன்ன பறிமுதல் உத்தரவு கொண்டு போவதற்கு முன்னமேயே ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடம் பேசிக்கொண்டிருந்தபோது ஜில்லா மாஜிஸ்டிரேட், சுந்தரராஜுவின் தகப்பனார் ஸ்ரீனிவாசலு ராஜு கோடி சூரியப் பிரபுவென்றும், மிகுந்த சொல் சக்தியுள்ளவரென்றும் சொல்லி அவர் இறந்துபோன விஷயத்தையும், அப்பால் அவர் பிரேதம் டாக்டரால் பரிசோதனைக்காக திருட்டுத் தனமாய் எவருக்கும் தெரியாமல் இரகசிய வழியாய் எடுத்துப் போன விஷயத்தையும் அங்கு கொண்டுபோய் பிரேதத்தை வைத்தபின் பிரேதம் காணமற் போனதைப்பற்றியும்; கொளம்பு துப்பறிவோருக்கு விவரமாய்த் தெரிவித்து, அப்பிரேதம் மாயமாய்ப் போன விஷயத்தைப் பற்றியும், டெப்டி கலெக்டர் மாதவராஜு அவர்கள் வீட்டில் திருடுபோன ஐம்பதாயிரம் ரூபாய்களைத் திருடியவர்களைக் கண்டுபிடிக்கும் விஷயத்திலும் அவர்கள் உதவி செய்யக்கூடுமாகில், தான் வந்தனத்துடன் அவர்கள் உதவியை ஏற்றுக்கொள்வதாகவும் அதற்காக எச்சமயத்திலாவது போலீஸ் உதவியாவது தமது உதவியாவது தேவையிருந்தால் கொடுக்க சித்தமாயிருப்பதாகவும் தெரிவித்தார். அவர்கள் எப்படியாவது ஸ்ரீதரன் என்ற சுந்தரராஜுவைக் கண்டு பிடிக்காமல் சென்றால் அவர்களுடைய பேருக்கு அது அகௌரவமாகு மென்றும் அத்துடன் ஜில்லா மாஜிஸ்டிரேட்டவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன இரு விஷயங்களையும் சாத்யமான வரையில் கவனிப்பதாகவும் சொன்னார்கள். அப்பால் ஸ்ரீனிவாசலு ராஜு மரணத்தைப்பற்றியாவது அவர் பிரேதம் காணமற்போன விஷயத்தைப் பற்றியாவது, டாக்டர் பிரேதத்தை எடுத்து வரச்சொன்ன விஷயத்தைப் பற்றியாவது இதுவரை எந்தப் பத்திரிகையிலும் எவ்வித சுருக்கமான விஷயமாவது பிரசுரிக்கப்படாததின் காரணமென்னவென்று துப்பறிவோர் கேட்டனர். வீட்டுக்காரர் வேண்டுகோளுக்கு விரோதமாக பிரேதத்தை வீட்டில் வைத்து பூட்டிவிட்டு நான்கு பக்கங்களிலும் போலீசார் பாராவிருக்கும்போது பிரேதம் காணமற்போன விஷயம் வெளி வந்தால் அது போலீசாருடையவும், போலீசார் மூலமாய் சர்க்காருடையவும் அந்தஸ்துக்குக் குறைவாகு

மென்றும், ஓர் ஐரோப்பிய டாக்டர் எவ்வளவு சிலாக்யமான எண்ண த்துடன்—பரோபகார சிந்தையுடன்—கோடிக்கணக்கான ஜனங்க ளுக்கு தமது ஆராய்ச்சியால் உபகாரப்படக்கூடிய நூதன விஷயங் களைக் கண்டு பிடிக்க உத்தேசித்து அவ்வாறு செய்தபோதிலும், இற ந்தவருடைய பிரேதத்தை அதிலும் அவ்வூருக்கே அரசனுக்கு மேலாக இருந்த ஒருவருடைய—ஒருமகாராஜனுடைய பிரேதத்தைத் திருடிவரச் சொன்னுரென்னும் விஷயம் வெளிப்பட்டால் இயற்கை யிலேயே இப்போதிருந்து வரும் கிளர்ச்சிக்கு எரிகிற நெருப்பில் பெட்ரோல் ஊற்றுவதையொக்குமென நினைத்து அவ்விஷயங்களைப் பிரசுரிக்கக் கூடாதென்று அவ்வூரிலுள்ள பத்திரிகை நிரூப நேயர்களை எனது டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள் எனது தூண்டுதலின் பேரில் கேட்டுக் கொண்டதால்தான் அது சம்பந்தமான எவ்விஷயமும் வெளிப்படவேயில்லை," என்றார். அப்பால் அப்பேச்சே எடுக்காமல் வேறு விஷயங்களைப்பற்றிச் சில நிமிஷநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு அவர்கள் மூவரும் மாஜிஸ்டிரேட்டுகளிடம் விடை பெற்றுக் கொண்டு பறி மூதல் உத்தரவை நிறைவேற்றச் சென்றனர். சற்று நேரம் பொறுத்து,

டெப்டி மாஜிஸ்டிரேட்:—அவர்கள் தங்களிடம் ஸ்ரீனிவாசது ராஜு-காரின் பிரேதம் காணுமற்போன விஷயத்தைப்பற்றி பத்திரி கைகளில் வெளியிடாததைப்பற்றி பல கேள்விகள் கேட்டதிலிருந் தும் அவர்கள் அதைப்பற்றிய விவரங்களைக் கேட்டறிந்தபின் சட் டென்று "அது சரி; அல்ல," என்று சொல்லாமல் அதைப்பற்றிய பேச்சையே நிறுத்திவிட்டு சட்டென்று வேறு மார்க்கத்தில் பேச் சைத் திருப்பி விட்டதையும் பார்த்ததால் அதைப்பற்றிய விவரங் களைப் பத்திரிகைகளில் வெளியிட உத்தேசித்தே சென்றார்களெ ன்று நம்புகிறேன்.

ஜில்லா மாஜிஸ்டிரேட்:—அப்படிப் பிரசுரிப்பது எனக்கு விரு ப்பமில்லையென்று நான் அவர்களிடம் நேரில் சொல்லியிருக்குபோது அவர்கள் அவ்வாறு செய்வார்களென்று நான் நம்பவில்லை.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—அது வரையில் அதுபற்றிய விஷயங் களை அவ்வளவு ஊக்கமாய்க் கேட்டுவந்த அவர்கள், தாங்கள் கார ணம் கூறிய உடனே சட்டென்று அந்தப்பேச்சை வேறுவழியில் திரு ப்பினதால் தான், நான் சந்தேகப்படுகிறேன். தாங்களும் இதை சற்று யோசித்துப்பார்த்தால் நான் சந்தேகப்படுவது சரியாயிருக்கு மெனத் தங்களுக்கும் தோன்றுமென்றே நம்புகிறேன்.

என்றார். ஜில்லா மாஜிஸ்டிரேட்டவர்களுக்கும் அச்சந்தேகம் அப்போது உதிக்கவே தமது சேவகரை அனுப்பிக் கொளம்புத் துப்பறிவோரைக் கூப்பிட்டனுப்பி திட்டமாய் அவ்வாறு அவ்விஷயங்களை வெளியிடக் கூடாதென்று எச்சரித்தனுப்பி விடுவது நலமெனச் சொல்லிக் கூப்பிடச் சொல்லி தனது சேவகரை அனுப்பினார். அவர்கள் எங்கு போய் தேடியும் கொளம்பு துப்பறிவோரைக் காணவில்லை. எங்கு எப்படிச் சென்றார்களென்று தெரியாதென எல்லோரும் சொல்லி விட்டனர்; அதன்பேரில் அதைப் பற்றி பல இடங்களுக்குத் தந்தி கொடுக்கலாமென இருவரும் யோசித்து அவ்வாறு தந்தியடிப்பது உசிதமல்லவென்று நிறுத்தி விட்டனர்.

நிற்க, கொளம்பு துப்பறிவோர் அங்கிருந்து நேராக குடிக்கூலி மோட்டார் வைத்து திருவீரராஜபட்டணம் சென்று ஜில்லா மாஜிஸ்டிரேட் சொன்ன விஷயங்களைப் பற்றிய விவரங்களைப் பூராவாய் விசாரித்து அறிந்து கொண்டு அவர்கள் மூவரும் கலந்தாலோசித்து ஸ்ரீனிவாசலுராஜு கொலையைப் பற்றியாவது, பிரேதம் திருடு போன விஷயத்தைப் பற்றியாவது அனேகமாய் ஸ்ரீதரர் என்ற சுந்தரராஜுக்குத் தெரியாமலிருக்கக் கூடுமென்றும் ஆகையால் அவ்விஷயங்களைப் பற்றி பத்திரிகைகளில் வெளியிடுவது ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கு இஷ்டமில்லை யென்றும் சொன்னதால் அவ்விஷயங்களைத் தங்கள் பேரில் வெளியிடாமல் வேறு யார் எழுதுவது போலாவது எழுதித் தினசரிப் பத்திரிகைகளில் வெளியிட்டால் ஸ்ரீதரர் என்ற சுந்தரராஜு உடனே திட்டமாய் திருவீரராஜபட்டணத்திற்கு எங்கிருந்தாலும் வருவாரென்றும் அப்போது அகத்தியம் பிடித்துக் கொள்ளலாமென்றும் யோசனை செய்து விவரமாய் எழுதியனுப்புவதெனத் தீர்மானித்து எழுதி அனுப்பி விட்டு தன்னுடன் வந்த இருவரை அங்கு ஜாக்ரதையாக யிருந்து சுந்தரராஜு வருகையைக் கவனிக்கும்படி விட்டு விட்டு தலைமைத் துப்பறிவோன் மட்டும் பறிமுதல் உத்தரவை எடுத்துக் கொண்டு போய் கொளம்பு சர்க்கார் அதிகாரிகளிடம் கொடுத்து அந்த சர்க்கார் அனுமதியும் அதிகாரமும் பெற்றுக் கொண்ட பின், கொடிகாமம் போய் ஸ்ரீதரன் கம்பெனி தலைமை ஸ்தலத்தில் அவ்வுத்தரவை சாரதா செய்தார். அப்போதே ஸ்ரீதரன் கம்பெனியின் சொந்தக்காரரான லாஜரெஸ், தான் ஸ்ரீதரரிடம் ஸ்ரீதரன் கம்பெனியை கிரையத்திற்கு வாங்கிய பதிவு செய்யப்பட்ட (ரிஜிஸ்டர் செய்த) பத்திரத்தை

அவ்விடத்திய பிரபல அட்வோகேட்மூலம் ஆஜர்ப்படுத்தி அக் கம்பனியின் சகல வியாபாரங்களும் தனக்கே சொந்த மென்றும் ஸ்ரீதாருக்கும் அதற்கும் எவ்வித சம்மந்தா சம்மந்தமும் இல்லையென்றும் தெளிவாய் ருஜுப்படுத்தினதின் பேரில் அப்பறிமுதல் பத்திரம் எவ்வித உபகாரமு மன்னியில் திரும்பி அனுப்பப்பட்டது.

கொளம்பு துப்பறிவோர் எழுதிய விஷயங்கள் தாமோதர ரெட்டியாரால் அனுப்பப்பட்டதாகக் கையொப்பமிட்டு பத்திரிகைகளுக்கு அனுப்பப்பட்டவே அதில்கண்ட ஆச்சரியமான சம்பவங்களை பார்வை யிட்டதும் அவ்விஷயங்கள் உண்மையில் நடந்திருந்தால் தமது நிருப நேயர்கள் கட்டாயம் எழுதியிருப்பார்களென்றும், ஆனால் அக்கடிதத்தில் அவர்களுக்கு பலமாய் இலஞ்சம் கொடுத்து எழுதாத படி தடுத்து வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்ததால் தமது நிருப நேயர்களுக்கு இவ்விஷயங்கள் நடந்தது உண்மையா பொய்யா எனத் தந்தி கொடுத்து பத்திராசிரியர்கள் கேட்டனர். நடந்தது உண்மைதானென்றும் ஜில்லாமாஜிஸ்டிரேட்டின் வேண்டு கோளின் படி பிரசுரத்திற்கு அனுப்பவில்லை யென்றும் அந்தந்த பத்திரிகைகளின் நிருப நேயர்கள் தெரிவித்தனர். அதற்கு பத்திராசிரியர்கள் பத்திரிகைகள் உண்மையான விஷயங்களை உலகுக்கு அறிவிப்பதற்காகவே நடத்தப்பட்டு வருவதாகவும், சில ஜில்லா மாஜிஸ்டிரேட்டுகள் அவர்கள் ஜில்லாவைப்பற்றிய எவ்விஷயங்களும் வெளியாகாமலிருப்பதே நலமென்று நினைப்பார்களென்றும் அவர்களுடைய மனப்பான்மையை அனுசரித்து பத்திரிகைகள் நடத்தப்படுவதினால் யாதொரு விஷயங்களில்லாமல் வெள்ளைக் காகிதங்கள் தான் அனுப்பப்பட வேண்டு மென்றும், அவ்வாறு உண்மையான விஷயங்கள் பிரசுரிக்காது விட்டால் பத்திரிகைகளின் நோக்கங்களே கெட்டுப்போகுமென்றும், ஆகையால் உடனே விஷயங்களைத் தெரிவிக்காமலிருந்து மிகவும் விசனிக்கத் தக்க காரியமென்றும் இனிமேல் அவர்கள் அவ்வாறு நடக்கும் பக்ஷத்தில் வேறு நிருப நேயர்களை அமர்த்தும்படி நேரிடுமென்றும் கண்டிப்பாய் அவர்களுக்கு எழுதிவிட்டு அவ்விஷயங்களையெல்லாம் பத்திரிகைகளில் பிரசுரித்து விட்டார்கள். கோவிந்தன் வீட்டில் இரகசியமாய் வசித்து வந்த ஸ்ரீதாரும் செல்வமும் அன்றைய இராச் சாப்பாடு முடிந்ததும் ஸ்ரீதார் படுத்துக் கொண்டிருக்க செல்வம்

அவருக்குச் சமாச்சாரங்கள் தெரியும்படி உறக்க வாசித்துக் கொண்டிருந்தார்கள். அப்படி வாசிக்கும்போதே சட்டென்று வாசிப்பதை நிறுத்திக் கூர்மையாய்த் தனக்குள்ளேயே படித்ததும் பத்திரிகையை சோரவிட்டு விம்மி விம்மி அழுதாள். அப்போது ஸ்ரீதரர் "என்ன செல்வம்! படிப்பதை ஏன் நிறுத்தி விட்டாய்" என்று கேட்கும் போதே அவள் அழுததால் "என்ன செல்வம்! ஏன் அழுகிறாய் என்ன விசேஷம்?", என்று கேட்டபடியே பத்திரிகையை எடுத்து தலையங்கங்களை வாசித்ததும் "ஹா! நாப்ஞ" என்றதும் மூர்ச்சித்துக் கீழே விழுந்து விட்டார். சுந்தரராஜு பிரக்ஞைபற்றுக் கீழே விழுந்ததும் செல்வம் தனது விசனத்தை அடக்கிக் கொண்டு எழுந்து தண்ணீர் கொண்டுவந்து அவர் முகத்தில் அடித்து பிரக்ஞை தெளியவைத்தாள். அவருக்கு பிரக்ஞை வந்ததும் அவ்வியாசம் முழுவதும் அழுது கொண்டே வாசித்துப் பார்த்து விட்டு, சுந்தரராஜு "— செல்வம்! திடகாத்திரராயிருந்து சந்தோஷமாய் எனக்கு ஐந்து லட்சம் ரூபாய்கள் கொடுத்து என்னை வாரி யெடுத்து முத்தமிட்டு அனுப்பிய எனது பிதா அதற்கப்பால் அரை நாழிகைக்குள் கொல்லப் பட்டாரென்றால் எனது மனமானது எவ்வாறு சாந்தியடையும்? அப்பேர்ப்பட்ட தீரவான் இப்பூலோகத்திலேயே இருக்கமாட்டாரென்பது நிச்சயம்! நிச்சயம்!! நிச்சயம்!!! அப்பேர்ப்பட்ட பலவானை ஒருவனாவது பலர் சேர்ந்தாவது அவர் கழுத்தை இறுக்கிப் பிடித்துக் கொல்வதென்றால், எவருக்கும் சாத்யமென நம்பக்கூடிய விஷயமாயில்லையே! இதில் ஏதோ படுமோசமாயிருக்கிறது. அதைப் போய்க் கண்டு பிடிக்க வேண்டியது அவசியம். உடனே புறப்பட வேண்டும்.

செல்வம்:—நாதா! பிரேதத்தை ஓர் ஐரோப்பிய வைத்யன் கொண்டுபோய் ஏதோ பரீட்சை செய்ய எடுத்துப் போனதாகவும் அப்பால் காணவில்லை யென்றும் அவ் வைத்யனும், அதைப் பற்றி ஆச்சரியப்பட்டதாகவும் எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் தாங்கள் இப்போது புறப்பட்டுப்போயும் செய்யப்போவதொன்றுமில்லை. கோவிந்தன் செல்வதற்கு முன் அவர் திரும்பி வரும் வரையிலாவது அல்லது தங்களை இங்கிருந்து புறப்படும்படி அவர் கைப்பட கடிதமாவது தந்தியாவது எழுதும் வரையிலாவது தாங்கள் வெளி செல்வதில்லை யென தங்களிடம் வாக்குறுதி பெற்றுச் சென்றார். தாங்கள் வெளியிற் சென்றால் பிடிப்பதற்காகக் காமாக்ஷிராவும், கொளம்பு துப்பறிவோர் மூவரும், இன்னும் பல இரகசிய போலீ

சாரும், திருவீராஜபட்டணம் போலீசாரும் காத்துக் கொண்டிருக்கின்றனர். ஆகையால் தாங்கள் வெளிச் செல்வது அபாயகரமாய் முடியலாம்: தங்கள் அருமைத் தகப்பனாரவர்கள் வியாதியாயிருப்பதாயிருந்தாலும் அல்லது அவர் பிரேதம் இருப்பதாயிருந்தாலும் இந்த அபாயங்களையெல்லாம் அசட்டை செய்து போவதில் சுகிர்தமுண்டு; இப்போது தாங்கள் போய் தங்கள் அருமைப் பிதாவின் முகத்தைக் காணப் போகிறீர்களா? அது இல்லையே! அப்படியிருக்க ஏன் இவ்வாறு வீண் அபாயங்களுக்குட்பட வேண்டும்? மேலும் தங்கள் தகப்பனார் இறந்த காலத்திலும் அப்பாலும் கோவிந்தன் அவர்கள் அங்கிருந்திருப்பதாகவும் தங்கள் தகப்பனாருடைய பிரேதத்தைக் கண்டு பிடிப்பது முடியாத காரியமென அவர் முடிவாகச் சொல்லிவிட்டு இதர விஷயங்களில் கவனம் செலுத்திக் கொண்டிருப்பதாகவும் எழுதப்பட்டிருக்கிறதல்லவா? 'கோவிந்தன் அகராதியில் அசாத்யமென்ற வார்த்தையே கிடையாதென்று தாங்கள் பன்முறை சொல்லியிருக்கிறீர்களே! அப்படியிருக்க இப்போது அவரே சாத்யமல்லவென்று விட்டுவிட்டால் இனிமேல் எவராலும் தங்கள் தகப்பனாரின் பிரேதத்தைக் கண்டு பிடிப்பது சாத்யமில்லையென்பது திட்டமாய் விளங்குகிறதல்லவா? அதைவிட சீனுவை வரவழைத்து கோவிந்தனை உடனே வரும்படி தந்தியடித்து அவர் வந்தபின் ஆலோசித்துக் கொண்டு மேல் நடக்க வேண்டிய காரியாதிகளைச் செய்வதுதான் உசிதமென்று என் சிற்றறிவிற் கெட்டுகிறது.

சுந்தராராஜ:—ஸ்ரீமான் கோவிந்தன் அவர்களுடைய தூண்டுதலின் பேரில் தான் நமது ராமன் என்ற சின்ன மீன்கந்தனுடைய மகன் கோபுவைக் கவனித்ததாகவும் அதன் பேரில் தான் டாக்டர் பிரேதத்தை சோதனைக்கு எடுத்து வரச் சொல்லி லஞ்சம் கொடுத்த விஷயம் தெரிந்ததாகவும் எழுதப்பட்டிருக்கிறதல்லவா? அவ்வூரில் அச்சம்பவங்கள் நடந்த அன்று கோவிந்தன் இருந்திருப்பதாலும், கோபுவைக் கவனித்தால் விஷயங்கள் தெரியலாமென்று அவர் சொன்ன பிரகாரம் விசாரித்ததில் சற்று துப்பு துலங்கியிருப்பதாலும் அது சம்மந்தமான இதர விஷயங்கள் முற்றிலும் கோவிந்தனுக்குத் தெரியாவிட்டாலும் அவற்றுள் பல விஷயங்களாவது அவருக்குத் தெரியுமென்றே நான் நம்புகிறேன். மேலும் கோவிந்தனுக்கு என் தகப்பனாரவர்கள் பேரில் அமோக பிரியம். ஏன்? எனக்கு என் தகப்பனார் பேரிலிருக்கும் பிரியத்தைவிட அவருக்கு அதிக பிரிய

முண்டென்பது எனக்குத் தெரியும். என் தகப்பனாரவர்களுக்கும் கோவிந்தனிடம் அதிக அபிமானம் உண்டு; அப்படியிருக்க அவர் பிரேதத்தைக் கண்டு பிடிப்பதில் தனது கவனத்தையே செலுத்தாது மாதவராஜுவின் வீட்டுத் திருட்டுப்பற்றியும் செல்லத்தின் காணா மற் போகையைப்பற்றியும் விசாரித்துக் கொண்டிருக்கிறாரென்பதை என்னால் நம்பவே கூடவில்லை. இதில் ஏதோ பெரும் சூது இருக்கிறது போல் என் மனதில் படுகிறது: ஆகையால் எனக்கு என்ன நேரிட்ட போதிலும் சரிதான், என் தலை போவதானாலும் சரிதான்; உடனே ஸ்ரீமான் கோவிந்தன் அவர்களைக் கண்டு நான் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளும் வரையில் என் மனம் நிம்மதியடையாது. ஒரு பகலெல்லாம் உன்னிடமும் என்னிடமும் அவ்வளவு சாவதானமாய்ப் பேசிக்கொண்டிருந்த ஸ்ரீமான் கோவிந்தன் அவர்கள் எனது தகப்பனாரவர்கள் கொலையுண்டதைப் பற்றியாவது பிரேதம் காணாமற் போனதைப் பற்றியாவது ஒரு வார்த்தைகூட நம்மிடம் சொல்லாமலிருந்தது பெரும் ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. என் தகப்பனாரவர்கள் மரணத்தையும் பிரேதம் காணாமற் போனதையும் நன்கறிந்த ஸ்ரீமான் கோவிந்தன் அவர்கள் என் தகப்பனார் மரணத்தைப்பற்றி என்னிடம் துக்கம் விசாரித்து ஆறுதல்-தேறுதல் சொல்லவேயில்லை. இவைகளை யெல்லாம் நான் ஆர அமர யோசித்துப் பார்க்கும்போது என் மனதில் நம்புவதற்கு ஏதுவுமில்லாத ஓர் நம்பிக்கை உண்டாகிறது. இதன் உண்மையைப்பற்றி நான் ம-ா-ா-ஸ்ரீ கோவிந்தன் அவர்களைப் பார்த்துக் கேட்க வேண்டிய கேள்விகளை யெல்லாம் கேட்டால் தான் திருப்தி ஆகும்; ஆகையால் உடனே புறப்பட வேண்டுவது அவசியம்.

செல்வம்.—அன்பீர்! தாங்கள் சொல்வதற்குக் குறுக்காகக் கூறுவதாக நினைக்காதீர்கள். அடுத்த ஊரில் நமக்கு வேண்டியவர்கள் இறந்து விட்டதாகத் தந்தியாவது கடிதமாவது வந்தால் நாம் முதலில் அதை உண்மையென நம்புவதேயில்லை. சீ. சீ. இப்படியிருக்கவே யிருக்காது. ஒருக்கால் பிரக்ஞை தவறியவுடன் தீர்க்கமாய் அறியுமுன் அவசரப்பட்டு தந்தி யடித்திருப்பார்கள் அல்லது காகிதம் எழுதியிருப்பார்கள். அல்லது விரோதத்தின் பேரில் எவரோ இவ்வாறு நம்மைக் கலக்கத்தில் வைப்பதற்காக—துக்க சாகரத்தில் மூழ்க வைப்பதற்காகப் பொய்த் தந்தி அடித்திருப்பதும் கூடுமல்லவா? என நமது மூட மனதுக்கு ஓர் சமாதானம் செய்து கொள்

வது உலக இயற்கை. அப்படியே தாங்களும் தண்ணீரில அமுங்கிப் போகும் ஒருவன் ஓர் துரும்பைப்பிடித்துக்கொண்டு மூழ்காமல் மிதந்துவிடக்கூடுமென நம்பி துரும்பைப் பிடிப்பதைப்போல் தங்களுடையமனதில் இம்மாதிரி எண்ணங்கள் உதிக்கின்றன. தாங்கள் நினைக்கிறபடி என் அருமை மாமனாரவர்கள் உயிருடனிருக்க வேண்டுமென்று நான் எவ்வளவு விரும்பிய போதிலும், அவர்கள் இறந்தபின்டாக்டர் சரிவரப் பரிசோதித்துப் பார்த்து இறந்து விட்டதாகச் சொன்னதாக எழுதப்பட்டிருப்பதால் அவ்வித வீண் ஆகாய மாளிகை கட்டி இன்னும் அதிகமான வருத்தத்திற் களாகாதீர்கள். ம-ா-ஸ்ரீ கோவிந்தன் அவர்கள் ஏன் அவ்விஷயத்தைத் தங்களுக்குத் தெரிவிக்கவில்லையென்றும் தங்களுக்கு ஏன் தேறுதல் சொல்லவில்லையென்றும் கேட்டீர்கள். அதற்குத் திருப்திகரமான பதில் என்ன எனக்குத் தோன்றுகிறதென்றால் இப்போது உங்களுக்கிருக்கும் கஷ்டங்களே ஏராளமாயிருப்பதாலும், மாண்டவர் மீண்டும் உயிர் பெற்று எழுந்து வரப்போவதில்லையாகையாலும், இச்சங்கடங்கள் நிவர்த்தியான பின் சொல்வதில் ஒன்றும் குடி முழுகிப் போவதில்லையென நினைத்து—தங்கள் நன்மையை நாடிச் சொல்லாதிருக்கலாமல்லவா? மேலும் கூடிய ஜல்தியில் தங்கள் கஷ்டங்களெல்லாம் நிவர்த்தியாகி தாங்கள் முன்போல் சுயேச்சையாய் தங்கள் ஊரில் வாழக்கூடுமென்று அவர் சொல்லவில்லையா?

சுந்தரராஜு:—நீ சொன்ன காரணங்கள் திருப்தி யளிக்கக் கூடியதாயிருந்தாலும் இங்கு இருப்பது சிறையிலிருப்பது போலிருப்பதாலும் ஸ்ரீமான் கோவிந்தன் அவர்கள் அக்காரணங்களால் தான் சொல்லவில்லையா அல்லது வேறு காரணங்களால் தெரிவிக்கவில்லையாவென்று நான் கேட்டுப் பார்க்கும் வரை என் மனம் நிம்மதியயிருக்காததாலும் இன்றே ஊர் போவதாகத் தீர்மானித்து விட்டேன். நேற்று ஸ்ரீமான் கோவிந்தன் அவர்கள் தூண்டுதலின்பேரில் சின்னமீன் கந்தனை உடனே ஊருக்கு அனுப்பும்படி ஸ்ரீமான் லாஜரெஸ் அவர்களுக்கு இரகசியபாஷையில் தந்தியடித்த பிரகாரம் இன்று இரவு மீன் கந்தன் திருவீர ராஜபட்டணத்தில் நமது ஆகாய விமானம் இறங்குமிடமாகிய மதில் சுவர்களுடைய மைதானத் தோட்டத்தில் வந்திருப்பானாதலாலும் அங்கு உடனே சென்று அவன் மூலமாய் கோவிந்தன் இருப்பிட மறிந்து அவரைக் கேட்ட பின் அவர் மீண்

டும் நம்மை இங்கேயே இருக்கும்படி தெரிவித்தால் மறுபடியும் வந்து விடுவதாக உறுதி செய்துவிட்டேன்; ஆகையால் மணியடித்து ஸ்ரீமான் சீனு அவர்களை நான் பார்க்க விரும்புவதாகச் சொல்லு; இனி இதைப்பற்றி தர்க்கிக்காதே!

சுந்தரராஜு அவர்கள் ஒன்று செய்வதாகத் தீர்மானித்து விட்டால் என்ன சொன்னாலும் மாற்ற மாட்டாரென்று செல்வத்துக்கு நன்றாய்த் தெரியுமாதலாலும் அதைப்பற்றி தர்க்கித்தால் அவருக்குக் கோபம் வருமேயொழிய வேறு உபகாரப்படாதென்றும் அவள் நன்கறிவாளாதலாலும் அதைப்பற்றி மீண்டும் தர்க்கம் செய்யாது அவர் சொன்னபடியே மணியடித்தாள். உடனே சீனு வந்தார். அவர் வந்ததும்,

சுந்தரராஜு:—ஐயா! நான் உடனே ஊர் போக வேண்டும்; ஆகையால் தயவுசெய்து எனது மோட்டார் வண்டியைக் கொண்டு வந்து வாசலண்டை நிறுத்தச் சொல்லுங்கள்.

சீனு சற்று யோசித்து ஸ்ரீமான் கோவிந்தன் அவர்களுக்குக் கொடுத்த வாக்கை ஞாபகப்படுத்தினதோடு, தனது எஜமானர் அவருக்குத் தெரிவிக்காமல் எங்கும் அனுப்பக் கூடாதெனச் சொல்லி விட்டுப் போயிருப்பதால் அவருக்குத் தந்தி கொடுத்துக் கேட்டு அனுப்புவதாகச் சொன்னார். உடனே சுந்தர ராஜுக்கு மிகுந்த கோபம் வந்து “எங்களை, நீங்கள் எங்கள் விருப்பத்திற்கு மாறாகக் கைதிகளாகவா வைத்திருப்பதாய் உத்தேசித்திருக்கிறீர்கள். உம்மை இவ்விடத்தில் கட்டி உருட்டிவிட்டு இப்போதே வெளிச் சென்று விடுவேன்” என்று சொல்லி அவரைப் பிடிக்கச் சென்றார். சீனு சட்டென்று வாசலுக்கு வெளியே தாண்டியதும் கதவை மூடும் காந்த பத்தானை அமுக்கி விட்டார். கதவும் உடனே மூடிக் கொண்டது. இனி சுந்தரராஜு என்ன செய்வாரோ, கதவை உடைக்க முயல்வாரோ என்னவோ தெரியவில்லையே! தர்மசங்கடமாய் வந்து நேர்ந்துவிட்டதே. என்னசெய்வது? அவர் சிறையிலிருப்பதாக அவர் மனதில்படாமலும், தன் அனுமதியில்லாமல் வெளியே அனுப்பாமலும் ஜாக்ரதையாகப் பார்த்துக் கொள்ளும்படி கோவிந்தன் சொன்னாரே! இவர் என்செய்வாரோ தெரியவில்லையே! என ஆழ்ந்த யோசனையில் கதவை பார்த்தபடி சீனு நின்றுகொண்டிருந்தார்: சீனு எதிர் பார்த்தபடி சுந்தரராஜு கூச்சல் போடவுமில்லை; கதவைத்தட்டிகாபுரா

செய்யவுமில்லை. கதவை உடைப்பதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்து கொண்டிருக்கிறாரோ என்னமோ ஒன்றும் தெரியவில்லையே; சுந்தரராஜுவும் செல்வமும் பேசும் சத்தங்கூட கேட்க வில்லையே! என் செய்கிறார்களோ தெரியவில்லையே. ஒருக்கால் சீனுவின் பேரில் தப்பிதமில்லை, யென்றும் அவர் எஜமான் சொற்படி கேட்க வேண்டியவன் தானே என நினைத்துத் தந்தியடித்துப் பதில் வரும் வரையில் படுத்திருப்பது நலமென நினைத்து வாளாயிருக்கிறாரோ என்னமோ தெரியவில்லையே என நினைத்தபடியே சுமார் கால்மணி நேரமாவது பார்த்து விட்டுச் செல்வோம் என யோசனை செய்து கொண்டிருந்தார். அப்போது சீனுவின் பின் பக்கத்திலிருந்து ஒருவர் திடீரென்று தனது கழுத்தையும் வாயையும் ஏக சமயத்தில் பிடித்து பலமாய் இருத்தினதில் தனது கண்கள் பிதுங்கும்படி செய்வதாகத் தெரிந்தது. இரும்பைப் போன்ற கைப்பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ளவும் சீனுவால் கூடவில்லை. கூச்சல் போடவும் சாத்யமில்லை சீனுவை செந்தூக்காய்த் தூக்கிக் கொண்டு கதவைத் திறக்கும் காந்த பத்தானைத் தன் முதுகால் அமுக்கினார்; பத்தானை அமுக்கினதும் திடீரென்று கதவு திறந்து விட்டது. உடனே சீனுவைத் தூக்கிக் கொண்டபடியே உள்ளே சென்று, உள் கதவை மூடி விட்டு சீனுவின் கைகள் இரண்டையும் சேர்த்துப் பலமாய் கட்டும்படி செல்வத்திடம் சொன்னார். அப்போது தான் தன் கழுத்தைப் பிடித்தவரும் கூச்சல் போடாதபடி வாயை அமுக்கினவரும் சுந்தரராஜு எனக் கண்டு, நாம் அறைக்குள் பந்தோபஸ்தாய்ப் போட்டு மூடியவர் எவ்வாறு தனக்குப் பின் பக்கமாய் வந்து தன்னைப் பிடித்துக் கொண்டாரென்று அதிக ஆச்சரியப்பட்டார். அதற்குள் செல்வம் கைகளைக் கட்டி விடவே, அவர் கைகளைப் பிடித்திருந்த தனது ஒரு கையை எடுத்து துணியை அவர் வாயில் திணித்து கூச்சல் போடாதபடி செய்து விட்டு அங்கிருந்த ஓர் தூணில் அவரைக் கட்டி விட்டு "சீனு! நான் யானை பலங்கொண்ட ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் ஜேஷ்டபுத்திரனென்றும் அவரது பலம் எனக்கில்லா விட்டாலும் அவர் பலத்தில் பாதி பலமாவது கொண்டவனென்பதைக் கவனியாமலும் இந்த அறையில் எங்களை சிறை வைக்கத் தீர்மானித்து விட்டாய், உனது எஜமானரும் எனது நண்பருமாகிய ஸ்ரீமான் கோவிந்தனது முகத்திற்காக உன் காலையும் கையையும் கட்டி வாயில் துணி அடைத்து உன்னை உயிருடன் விட்டேன். இல்லா விட்டால் நீ படும்பாடு

வேருயிருக்கும். இந்த சுந்தரராஜு பிள்ளையாய்ப் பிறந்தது முதல் இது வரையில் சிறை வைத்தவன் கிடையவே கிடையாது. இனி மேலாவது தன் பலம் பிறர் பலம் அறிந்து நட. உள்ளே பூட்டப் பட்ட நான் மந்திரத்தால் வெளி வந்து உன்னைப் பிடித்துக் கட்டி விட்டேனே என மயங்குகிறாய். அதோ அந்த ஜன்னல் கம்பியைப் பார்த்தாயா? சுந்தரராஜுவின் பலத்திற்கு ஜன்னல் கம்பி எம்மாத் திரம்? எவ்வாறு வளைந்து விட்டது பார்! இரண்டு ஜன்னல் கம்பிகளை நான் வளைத்து நீக்கி விடவே தாராளமாய் பின் வெராந் தாவுக்கு வழி ஏற்பட்டு விட்டது. அப்பால் மூன்ருவது மெத்தை தட்டட்டியிலிருந்து எவ்வாறு கீழே இறங்கினேனென இப்போது ஆச்சரியப்படுகிருய். தட்டட்டி தண்ணீர் கீழே இறங்குவதற்காக வைத்திருக்கும் குழாயைப் பிடித்துக் கொண்டு இரண்டு நிமிஷங்க ளில் கீழே போய் விட்டேன். அப்பால் முன் பக்கம் சென்று படி களின் வழியாய் இங்கு வர இன்னும் இரண்டு நிமிஷங்கள் தான் தேவை. ஆனல் உனக்குத் தெரியாமல் வருவதற்காக மெதுவாக அடிமேலடி வைத்து வந்ததால் கூட இரண்டு நிமிஷங்கள் பிடித்தன. பார்! ஜன்னல் கம்பிகளை எப்போதும் போல் என் கையினலேயே வளைவை நிமிர்த்தி முன் இருந்த இடத்திற்கு கொண்டு வந்து விடு கிறேன்.'' என்றதும் கையைப் பிடித்து இழுக்கவே மெழுகைப் போல் வளைவு நீங்கி முன் இருந்த நிலைக்கு வந்து விட்டது. அவர் அவ்வாறு செய்தது சீனுவுக்கு பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. உடனே, சுந்தரராஜு செல்வத்தைக் கூட அழைத்துக் கொண்டு போகும் போது "சீனு! நீ இன்னும் சுமார் 10 நிமிஷங்கள் இந்த கஷ்டமான நிலையில இருக்கும்படி நேரிடும். ஆனல் சுந்தரராஜுவைச் சிறை வைக்க நினைத்த குற்றத்திற்காக இப்போதிருக்கும் என் மனே நிலைமையில் இது போதிய தண்டனை யென்றே கருதுகிறேன். இரண்டு வருஷங்களுக்கு முன் நீ என்னை இவ்வாறு செய்ய முயன்றி ருப்பாயாகில் இப்போது உனக்கிருக்கும் 32 பற்களில் ஒன்று கூட இருக்குமோ என்பது சந்தேகம் தான். சரி, நேரமாகிறது; போய் வருகிறேன்; வந்தனம்'' என்றதும் செல்வத்தை அழைத்துக் கொண்டு சென்று தனது ஆகாய விமான மோட்டார் வண்டி விட்டி ருக்கும் அறையைத் திறந்ததும் செல்வத்தை ஏறிக் கொள்ளச் சொல்லி அங்கிருந்து ஓட்டு முன் ஓர் வேலைக்காரனை அழைத்து உடனே போய் தமது அறையைத் திறந்து அங்கிருக்கும் சீனுவிடம்

இருக்கும் என் பணப்பையை வாங்கிக் கொண்டு வா'' என்று சொன்னர். அவர் மெத்தைப்படி ஏறியதும் சுந்தரராஜு தமது மோட்டார் வண்டியை விரைவாக ஓட்டிச் சென்றார். அவ்வறையின் கதவைத் திறந்து பார்க்க சீனு கட்டுண்டு இருக்கக் கண்டு ஆச்சரியப்பட்டு வாயிலிருந்த துணியை எடுத்து விட்டு கை கால்களை அவிழ்த்து விட்டு என்ன சமாசாரமென்று கேட்க; வந்திருந்தவர் தன்னிடம் பந்தயம் போட்டு வேடிக்கை யார்த்தமாகத் தன்னைக் கட்டி விட்டுச் சென்றாரென்றும் அவ்விஷயத்தை பிரஸ்தாபிக்கவே வேண்டாமென்றும் சொன்னார். கோவிந்தனிடம் இருக்கும் வேலைக்காரர் சொன்னதற்கு மயிரிழையேனும் மாறாக நடக்க மாட்டார்களாதலால் அவன் அதை அப்போதே மறந்து விட்டான். சீனு உடனே தந்தி ஆபீசுக்குச் சென்று மாறு பாஷையில் மைனாக்கள் தன்னைப் பறண்டிக் கொத்தி விட்டுப் பறந்து விட்டனவென்றும் அனேகமாய் சொந்தக் கூண்டுக்குத் தான் வருகிறதென நினைப்பதாயும் தெரிவித்தார். இத்தந்தியைப் பார்த்ததும் கோவிந்தன் புன்சிரிப்பு சிரித்துக் கொண்டார்.

நிற்க, முந்திய அத்தியாய இறுதியில் கோவிந்தன் ஓட்டனியையும் கரடியையும் சாராய மயக்கத்துடன் ரெயிலிலேற்றி அழைத்துச் சென்றதாகச் சொன்னதை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்களென்றே நம்புகிறோம். மறுநாட் காலையில் கொஞ்சம் மயக்கம் தெளிந்ததும் கோவிந்தன் அவர்கள் ஒவ்வொருவருக்கும் தண்ணீர் கலக்காத பிராந்தி ஒவ்வொரு புட்டி கொடுத்து அவர்கள் சாப்பிட்டவரை இனிய ஆகாராதிகளைக் கொடுத்தார். அவர்கள் சாப்பிட்டதும் மீண்டும் படுத்து விட்டனர். கடம்பூர் ஸ்டேஷன் போகும் போது தான் அவர்களுக்கு கால்வாசி மயக்கம் தெளிந்தது. அப்போது அவர்களுக்கு கோவிந்தன் மீண்டும் கால் புட்டி பிராந்தி கொடுத்து தின்பண்டங்களைச் சாப்பிடச் சொன்னார். சாப்பிட்டு முடிந்ததும் மணியாச்சி ஸ்டேஷன் வந்தது. போட்மெயிலில் தொடுத்து திருச்சியில் அதை அவிழ்த்து அது நேராகத் தூத்துக்குடிக்கு போகும் வண்டியாதலால் திருநெல்வேலி போகும் வண்டியில் சேர்த்தனர். மணியாச்சியில் அவர்களை மெதுவாக ஒத்தாசை புரிந்து அவ்வண்டியிலிருந்து இறங்கும்படி செய்து திருநெல்வேலி போகும் வண்டியில் கொண்டு போய் உட்கார வைத்தார். அந்த வண்டியில்

இரண்டே, இரண்டாவது வகுப்புகள் இருந்ததாலும் 2வது வகுப்பு பிரயாணிகள் அதிகமா யிருந்ததாலும் ஓட்டலி காடியால் படுத்துக் கொள்ள முடியாமற் போய் விட்டது. அவர்கள் சுமார் ஒரு மணி நேரம் உட்கார்ந்திருந்தனர். திருநெல்வேலி ஸ்டேஷன் வந்ததும் அவர்களுக்கு உதவி புரிந்து வண்டியிலிருந்து இறங்கும்படி செய்து போர்டர்கள் உதவியால் பாலத்தின் மேல் ஏறி, திருச்செந்தூர் போகும் வண்டியிருக்கும் பக்கத்தில் பாலப்படிகளின் மூலமாய் இறங்கி இரண்டாவது வகுப்பு வண்டி ஏறியதும், மீதியிருந்த பிராந்தியையும் ஊற்றிக் கோவிந்தன் கொடுக்க, அவர்கள் குடித்து விட்டு சௌக்கியமாய்ப் படுத்துக் கொண்டனர். திருச்செந்தூர் சேர்ந்ததும் மெதுவாக ரெயிலிலிருந்து இறக்கி டிராம் வண்டி ஏற்றிய போது அரை போதையிலிருந்தார்கள். டிராம் வண்டியில் ஏறு முன் கோவிந்தன் தாம் மூவரும் ஒரே வண்டியில் பிரயாணம் செய்வது சந்தேகத்திற்கு ஆஸ்வதமாகு மென்றும், ஆகையால் தான் வேறு வண்டியில் ஏறிக் கொள்வதாகவும் அவர்களிருவரையும் வேறு டிராம் வண்டியில் ஏறி திருவீரராஜபட்டணம் சேர்ந்ததும், முன் ஜாகை வைத்த இடத்தில் போயிருக்கும்படி தான் அங்கு வந்து சேர்வதாகவும் சொல்லி, வேறு வண்டிக்குக் கோவிந்தன் சென்றார். திருவீரராஜபட்டணம் சேர்ந்ததும், ஓட்டலியும் காடியும் டிராம் வண்டியினின்றும் இறங்கியதும் தங்களை அழைத்து வந்தவர் இறங்கி விட்டாரா இல்லையா யென்று பார்த்தனர். இறங்கியவர்களில் அவரைக் காணோம். ஒருக்கால் வண்டியிலேயே கண் அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பாரென நினைத்து வண்டிகள் முழுவதும் சரிவரக் கவனித்துப் பார்த்தார்கள் அவ்வண்டிகளிலும் இல்லை. ஆகையால் வண்டி நின்றதும் சட்டென்று இறங்கிச் சென்று விட்டார் போலிருக்கிறது என எண்ணிக் கொண்டு இருவரும் தனித்தனியாய் வெவ்வேறு பாதைகளில் சென்று குறிப்பிட்ட இடம் போய்ச் சேர்வதென இருவரும் தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டு புறப்பட்டனர். ரெயில் வண்டி, டிராம் வண்டிகளிலிருந்து இறங்கினால் ஒவ்வொரு பக்கமும் பலர் போவதைப் போல் ஓட்டலி போன வழியில் சிலரும், காடி போன பக்கம் வேறு சிலரும் சென்றனர்.

நிற்க, கொளப்பு துப்பறிவோர் சுந்தரராஜுவும் செல்வமும் எப்படியாவது வந்து சேருவார்களென நம்பி ஒவ்வொரு டிராம் வண்டி வரும்போதும், படகுகள் வரும்போதும், மாட்டு வண்டிகள்

அந்த ஊருக்கு வரும்போதும் கவனித்து வந்தார்களென்று முன்னமே சொன்னோமல்லவா? அப்படி அவ்வூர் வாசிகளல்லாத அயல் ஊர் வாசிகள் இருவர் டிராமிலிருந்து இறங்கியதையும், இருவரும் தங்களைப் பின் பற்றி எவராவது வந்தார்களாயென வண்டிகள் முழுவதையும் சோதித்துப் பார்த்த பின் இருவரும் வெவ்வேறு வழியாகச் சென்று ஒரே இடத்தில் சந்திப்பதாக இரகசியமாய் பேசிக்கொண்டதையும் கவனித்த கொளம்பு துப்பறிவோர் இருவரும், ஒருக்கால் சுந்தர ராஜுவும் செல்வமும் வேற்று ரூபத்துடன் வந்தனரென எண்ணி இருவரில் ஒருவர் ஒட்டலியையும் மற்றவன் கரடியையும் பின் பற்றி சற்று தூரத்தில் சென்றனர். ஒட்டலியும் கரடியும் பழம் பெருச்சாளிகளாதலால், தங்களுடன் வந்த மற்றவர்களெல்லாம் தங்கள் தங்கள் ஜாகை வந்தவுடன் பிரிந்து போனதையும் தங்களிருவரையும் ஒவ்வொருவர் பின் பற்றி வருவதையும் பார்த்த உடனே சந்தேகப்பட்டு உண்மையில் தங்களைத் தான் பின் பற்றி வருகிறார்களா இல்லையாயென்று அறிய ஒட்டலி இரண்டு மூன்று சந்துகள் வழியாய்ச் சென்று பார்த்தான். அப்போதும் பின் பற்றி வந்தவன் அச்சந்துகளில் கூடவே வரவே தன்னைத்தான் அவன் பின் பற்றிவருகிறானென்றும் ஆகையால் அவனை ஏமாற்றிச் செல்ல வேண்டுமென்றும் நினைத்து கோயிலின் மதில் சுவர் மூலை இன்னும் 10 கெஜமிருக்கும் போது அவசரமாய் நடந்து மூலை திரும்பினான். மூலை திரும்பியதும் எப்பக்கம் போய்விடுவானோ என நினைத்து பின் சென்ற துப்பறிபவன் ஓட்டமாய் ஓடி மூலை திரும்பினான். முன் விரைவாய்ச் சென்ற ஒட்டலி ஓடி விடாமல் அம்மூலை திரும்பினதும் சட்டென்று உட்கார்ந்து காலை நீட்டி விட்டான். பின் ஓட்டமாய்ப் போன துப்பறிவோன் அவன் கலால் தடுக்குண்டு கீழேசாய்ந்தான். ஒட்டலி சட்டென்று எழுந்திருந்து துப்பறிபவன் கூச்சல் போடாதபடி தன் முழங்காலால் துப்பறிபவன் தலையை பூமியோடு அமுக்கிக் கொண்டு அவன் கைகளிரண்டையும் பின்பக்கம் சேர்த்துக் கட்டிய பின் துப்பறிபவனின் கைக்குட்டை எடுத்து துப்பறிபவன் வாயில் அமுக்கி விட்டு, அவன் ஜோப்பிலிருந்து கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டு அவனைத் தூக்கி கோயில் தூணுடன் சேர்த்து நிறுத்தி அவன் கால்களைத் தூணுடன் கட்டிவிட்டு, "நான் எந்த ஊர்க்காரனென்று உன் ஆயுட் காலம் வரையில் ஞாபகமிருக்கும்படி இதோ உனக்கு மாலை போடு

கிறேன்" என்றதும் தன் ஜேபியிலிருந்த கூரிய உடைந்த கண்ணாடியைக் கையில் எடுத்து கழுத்தில் மாலை போட்ட மாதிரியாக சதையில் காலங்குலம் இறங்கும்படி கண்ணாடித்துண்டால் கீச்சி விட்டு ஓடி விட்டான். கீச்சிய இடத்திலிருந்து இரத்தம் பீறிட்டு வடிந்து கொண்டிருந்தது. கரடி என்பவனும், துப்பறிவோன் தன்னைப்பின் பற்றி வருவதாக ஸ்திரப்படுத்திக் கொண்டவுடன் வழியிலிருந்த மூங்கில் தொட்டியின் பக்கம் வநதவுடன் சுமார் 8 அடி உயரமுடைய ஓர் கனத்த மூங்கில் தடியை உருவி எடுத்துக் கொண்டு சென்றான். ஒருக்கால் சமீபத்தில் நெருங்கினால் அடிப்பதற்காக மூங்கில் தடியை எடுத்துக் கொண்டான் போலிருக்கிறது. அவன் மூங்கில் தடியாலடிப்பதற்குள் நான் கைத்துப்பாக்கியால் சுட்டு விடமாட்டேனா" என துப்பறிபவன் நினைத்துக் கொண்டு பின் தொடர்ந்தான். காளி கோயில்மதில் சுவற்றின்பக்கம் சென்றதும் கரடி சட்டென்று மூங்கில் தடியை கீழே ஊன்றியதும் அலக்காய் 10 அடி உயரமுடைய மதில் சுவற்றை எகிறித்தாண்டித் தடியுடன் மறு பக்கம் குதித்துவிட்டான்; துப்பறிபவன் பக்கத்திலிருந்த ஓர் மரத்திலேறிப் பார்க்கும்போது கோயிலின் எதிர் பக்கத்திலிருந்த மதில் சுவற்றையும் முன் தாண்டிய மாதிரியே தடியை பூமியில் ஊன்றி எகிறித் தாண்டி மறு பக்கமிருக்கும் பாதையின் பக்கம் குதிக்கக் கண்டான். துப்பறிபவன் மரத்தை விட்டு கீழே யிறங்கி மதிலைச் சுற்றி ஓடி அவன் குதித்த பாதையின் பக்கம் போய்ப் பார்க்க வெறும் இடமாயிருந்தது. அப்போது தான் கரடி மூங்கில் தடி எடுத்து வந்த காரணம் இன்னதெனத் துப்பறிவோன் மனதில் பட்டது. கொளம்பு துப்பறிவோரின் தலைவன் தனது ஆட்கள் இருவரும் இருவரைப் பின்பற்றிப் போவதைக் கண்டு இன்னும் யாராவது சந்தேகப்படக் கூடிய நபர்கள் இறங்கினார்களா வென்று தூரத்தில் நின்று கவனித்துக் கொண்டிருந்தான்! அவ்வூரில் அது வரையில்தான் பாராத வேற்று மனிதன் ஒருவன் வரக்கண்டான். அவனைப் பார்த்தால் அந்த ஜில்லாவாசி போல் தான் தோன்றிற்று. டிராமிலிருந்து இறங்கினவர்கள் அனைவரும் சென்று விட்டதாலும் தனக்கு வேறு வேலையில்லாததாலும் அவரைப் பின் பற்றிப் போய்ப் பார்க்கலாமென உத்தேசித்து வருபவருக்கு தன் மேல் சந்தேகம் ஏற்படாதபடி ஜலபாதை நிவாரணம் செய்ய உட்காருபவர்போல் உட்கார்ந்தார். அவர் பாதை நிவாரணம் செய்து எழுந்திருக்கும்போது தான்

பின் தொடா உத்தேசித்தவர் தன்னிடம் சாவதானமாய் வந்து காளி கோயிலுக்கு எப்படிப் போக வேண்டுமென்று கேட்டார்; அவர் வழி காட்டினுர். அவர் உடனே தங்களிடம் தீக்குச்சியிருந்தால் கொடுங்கள்" என்றுர். தீக்குச்சி என்பது என்ன வென்று கொளம்பு துப்பறிவோருக்குத் தெரியாமல் "தாங்கள் என்ன கேட்கிறீர்களென்றே தெரியவில்லை" என்றுர். அவர் தாங்கள் வெளியூர் ஆசாமி போலிருக்கிறது. இந்த ஜில்லா வாசியாயிருந்தால் தீக்குச்சி யென்பது என்ன வென்று தெரியாமலிருக்காது. தீக்குச்சி யென்பது (Matches) மாச்சிஸ் என்று சொன்னுர். உடனே அவர் தனது ஜோப்பியிலிருந்து நெருப்புக்குச்சிபெட்டி எடுத்துக்கொடுக்க, தன் ஜோப்பியிலிருந்து ஒரு ௳க்கு 8-10 விற்கும்பீடிகளில் ஒன்றை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு நெருப்புக் குச்சி பெட்டியை அவரிடம் கொடுத்து விட்டுச்சென்றுர். தான் சந்தேகப்பட்ட சுந்தரராஜுவாகவாவது கோவிந்தனுகவாவது இருந்தால் அவர்கள் தன்னிடம்வந்து தைரியமாய்ப் பேச மாட்டார்களென்றும் ஆகையால் காளி கோயிலுக்கு வந்த ஆசாமிதானென்றும் நினைத்துக் கொண்டு எதற்கும் எங்கு செல்கிறுனென்று பார்க்கலாமென நினைத்து மறைந்து மறைந்து பார்த்து வந்தார். வந்தவர் நேராக இந்தப் பக்கம் அந்தப்பக்கம் திரும்பிப் பாராமல் பாடிக்கொண்டே காளி கோவிலுக்குள் போகவே, அவர் திரும்பிப்போகும்போது கோவில் மதில் சுவற்றைத் தடியின் உதவியால் ஒருவன் எகிறித் தாண்டிக் குதித்ததைத் தூரத்திலிருந்தே பார்த்ததும், அப்படி குதித்த ஆசாமி யாரென்று கவனிக்க, தனது கூட்டாளிகள் தொடர்ந்து வந்தவர்களில் ஒருவரென அறிந்ததும் தனது கூடாளியை ஏமாற்றி விட்டுப் போவதாக அறிந்து பின் பற்றிச் சென்று அவன் எங்கு போகிறுனென்று கவனித்துப் பார்த்தார். அவன் ஒரு வீட்டிற்குள் போனதும் அவ்வீட்டின் தெருக்கதவை யாரோ மூடித்தாளிட்டு விட்டதாலும் அவ்வீட்டிலிருந்து வெளியேறுவதற்கு வேறு வழிகளேயில்லாததாலும் அவ்விட்டிலிருந்து கொஞ்ச நேரம் வரையில் மீண்டும் கதவைத் திறந்து யாரும் வெளி வாராததாலும் அவ்வீட்டு வாசியாய்த்தானிருக்கவேண்டுமென்று அறிந்து கொண்டு தமது கூட்டாளிகள் என்ன ஆனுர்களென்று பார்க்கச் சென்று அவர்கள் வந்த வழியின் எதிர் வழியாய்ச் சென்ற போது முதலில் அவ்விருவரில் ஒருவனை பார்த்துக் கேட்க தன்னைப் பின் பற்றி வந்தவன் தன்னை ஏமாற்றி

விட்டு தடியின் உதவியால் கோவில் மதில் சுவற்றைத் தாண்டி ஓடி விட்டதாகச் சொன்னான். அப்பால் அவ்விருவரும் சேர்ந்து மற்றவன் என்ன ஆனானென்று அவன் வந்த வழியின் எதிர் பக்கம் சென்று பார்க்க அவன் கோவில் தூணில் கட்டுண்டு வாயில் துணி அடைத்து இருக்கக் கண்டு அவிழ்த்து விட்டு அவனிடம் கேட்க, அவன் நடந்த விருத்தாந்தங்களை விவரமாய்ச் சொல்லி கண்ணாடி துண்டால் தன் உடலைக் கீறி தனக்கு மாலை போட்ட வை பவத்தைக் காட்டினான். துப்பறிபவன் ஒருவனுக்கு அவ்வீட்டு அடையாளம் சொல்லி கவனிக்கும்படி சொல்லி விட்டு உடனே தலைமைத் துப்பறிபவன் காயம் பட்டவனை அவ்வூர் வைத்தியரிடம் அழைத்துப் போய்க் காட்டி, கண்ணாடித் துண்டால் கிழித்த பாகம் முழுவதையும் கழுவி, வேண்டும் சிகிச்சை செய்து விட்டு அவனைப் படுத்துக்கொள்ளச் சொல்ல, அவன் படுக்க மறுத்து, தனக்கு மாலை போட்டவனைப் பிடிக்கும் வரை படுத்திருக்க மாட்டேனெனச் சொல்லி கூடவர, ஒட்டலியும் கரடியும் சென்ற வீட்டண்டை போய் அங்கு காவலிருந்த துப்பறிபவனை யாராவது வெளி வந்தார்களா வெனக்கேட்க அவன் யாரும் வெளிவரவில்லையென்று சொல்ல மூவரும் அங்கு கவனித்துக் கொண்டு நின்றார்கள்.

நிற்க, ஒட்டலி தன்னைப் பின்பற்றி வந்தவனுடைய கால்களையும கைகளையும் கட்டி மாலை போட்டு கூச்சல் போடாதபடி வாயில் துணி யமுக்கி விட்டு வந்தவன் தான், முன் வந்த போது இருந்த வீட்டிற்கு நேராகப் போனதும் கதவு மூடியிருக்கக் கண்டு,கதவைத் தட்டினான். கதவு திறந்ததும் சரேலென்று உள்ளே சென்றான். அங்கிருந்த இருவரும் அவனைக் கண்டதும் அவர்கள் அதிக ஆச்சரியப்பட்டு "எங்கே, என்ன ஜோலியாய், எப்போது வந்தாய்" என்று கேட்டனர். அவன் ஆச்சரியப்பட்டு,

ஒட்டலி:—நீங்கள் சொன்னதின்பேரில் உங்கள் வகை மனிதன் வந்து எங்களை அழைத்து வந்ததின்பேரில் வந்தோம்.

சாமி ரெட்டி:—வந்தோம் என்கிறீர்களே! தாங்கள் ஒருவர் தானே வந்தீர்கள் ?

ஒட்டலி:—இல்லை. என்னுடன் கரடியும் வந்தான்; நாங்களிரு வரும் வெவ்வேறு வழியில் தனித்தனியாய் வந்தோம். என்னைப்

பின்பற்றி ஒருவன் வந்தான். அவனை ஏமாற்றி விட்டு இங்கு வந்து விட்டேன். கரடி இன்னும் சில நிமிஷங்களில் வருவான்.

என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே கரடி உள்ளே வர, கதவைப் பூட்டித் தாளிட்டு அவனை விசாரிக்க, அவன் தன்னை ஒருவன் பின்பற்றி வந்ததாகவும் தான் அவனை ஏமாற்றி விட்டு வந்த தாகவும் சொன்னான்.

சாமி ரெட்டி:—நாங்கள் தங்களை அழைத்துவரச சொல்லி எவரையும் அனுப்பவில்லை. அன்னியன் ஒருவன் வந்து கூப்பிட் டால் அவனைப் பின்பற்றி வந்து ஏமாறலாமா? இது ஏதோ சூதாக அல்லவா தோன்றுகிறது. நமது விரோதிகளின் சதிக்குள் அகப் பட்டுக் கொண்டீர்கள் போலிருக்கிறதே!

கரடி:—நாங்கள் அவ்வாறு ஏமாற்றப்பட்ட குட்டிகளல்ல; பழம் பெருச்சாளிகள். நீங்கள் அவனை அனுப்பாவிட்டால் அவன் எப்படி "இம்முறை ஒருவர் மேல் ஒருவர் ஏறி நின்று திட்டி வாசல் வழியாய் முன்போல் தப்பவேண்டியதில்லை; இம்முறை ஏணி தயா ராய் வைத்திருக்கிறோம்" என்று சொன்னான். அவ்விஷயம் நம் நான்கு பேருக்கு மட்டும்தானே தெரியும். இந்த கொண்டப்ப ரெட் டிக்குக் கூடத் தெரியாதே! எங்களைக் கூப்பிட்டனுப்பிவிட்டு எங்களை யாரோ துப்பறிவோர் பின்பற்றி வந்தார்களென்று கேள்விப்பட்ட தும் பயந்து, இவ்வாறு கதைகட்டி விட்டால் வெறும் கையாய் அனு ப்பிவிடலாமென்று நினைக்கிறீர்கள் போலிருக்கிறது. இந்தப் பாச்சா வெல்லாம் எங்களிடம் பலியாது. எங்களை அவ்வளவு தூரத்திலி ருந்து அழைத்து வந்தால் நாங்கள் ஏதாவது வேலை செய்தாலும் சரி ான்; செய்யாவிட்டாலும் சரிதான்; பேசியபடி தொகை கொடுத் தாகவேண்டும், தெரியுமா?

சாமி ரெட்டி:—சுப்ரமண்யர் சத்தியமாய் நாங்கள் உங்களைக் கூப்பிட்டனுப்பவில்லை. உங்களை யாரோ ஏமாற்றி இவ்வளவு தூரம் அழைத்து வந்ததையும் இவ்வூரில் வந்தவுடன் உங்களை ஆட்கள் பின்பற்றி வந்ததையும் ஆர அமற யோசித்துப் பார்க்கும் போது பெரிய பயத்தைக கொடுக்கிறது; ஒருக்கால் இது துப்பறி யும் கோவிந்தன் சூழ்ச்சியாயிருக்குமோ என்னமோ தெரியவில்லை. டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள் கோவிந்தனை வரவழைத்து இவ்வி

ஷயத்தை அவரிடம் ஒப்புவித்திருப்பதாகக் கேள்வி. கோவிந்தன் பலநாள் துப்பு விசாரித்தும் ஒன்றும் துலங்காததால் எங்கோ சென்று விட்டதாகப் பிரஸ்தாபம். அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவ் மட்டும் நமது ஊரையே ஜல்லடை போட்டு அரிப்பதைப் போல் சுற்றிக் கொண்டிருக்கிறான். நான் எங்கெங்கு சென்றாலும் அங்கங்கெல்லாம் இருக்கிறான். இன்ன இடம்தான் போவான் இன்ன இடம் போகமாட்டானென்று எதிர் பார்ப்பதற்கில்லை. கோயிலாகிலும் சரி, குளமாகிலும் சரி, வயலாகிலும் சரி, வரப்பாகிலும் சரி, இடுகாடாகிலும் சரி, சுடுகாடாகிலும் சரி, மார்க்கட்டாகிலும் சரி, கோர்ட்டாகிலும் சரி, வேறெந்த இடமாவது சரி, எங்கு போனாலும் அங்கெல்லாம் இருக்கிறான். எனது நண்பர்களும் அவ்வாறே சொல்லுகிறார்கள் அவனுக்கு செல்லத்தின் பைத்தியம் பிடித்து அவளைத் தேடி அவ்வாறு அலைகிறான் போலிருக்கிறது என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். "அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பதைப்போல் எனக்கு ஒருக்கால் என்னைத்தான் பின்பற்றி வருகிறானோ என்ற சந்தேகமு மிருக்கிறது. ஒருக்கால் அவன் இங்கு மறைந்திருந்து நீங்கள் வந்ததைப் பார்த்தானோ என்னமோ தெரியவில்லை.

ஒட்டலி:—நீங்கள் எங்களை வரவழைத் திருச்காவிட்டால் ஒருவேளை உங்களோடு சேர்ந்த பிள்ளை வரவவைத்தாரோ என்னமோ? அவரைக் கேட்டுப் பாருங்களேன்.

சாமி ரெட்டி:—பிள்ளை இப்போது ஜெயிலிலிருக்கிறார். ஆகையால் அவரா யிருக்க முடியாது.

கரடி:—என்ன ஐயா! ஜெயிலிலிருந்தாலென்ன? ஜெயிலிலிருந்தபடி விஷயம் ஆள்மூலம் சொல்லி யனுப்பியிருக்கலாமல்லவா?

சாமி ரெட்டி:—நாங்கள் கேட்டனுப்பும் அவசர விஷயங்களுக்கே பதில் சொல்லி யனுப்பாதவர் தங்களை அழைத்து வரும்படி சொல்லி யிருப்பா ரென்பதை நான் நம்பவில்லை. எங்களை பயமுறுத்தி மீண்டும் பெருந்தொகை வாங்கிப் போகலாமென்ற கெட்ட எண்ணத்துடன் நீங்கள் வந்தீர்களோ என்னமோ?

என்றதும் ஒட்டலிக்குக் கோபம் வந்து தன் ஜோபியிலிருந்த பேனாக்கத்தியை எடுத்து வைத்துக்கொண்டு "என்ன சொன்னாய்?

சொன்னதை இன்னொரு தரம் சொல்லு; அப்போதே உன்னை எம னூர் அனுப்பா விட்டால் என் பேர் ஒட்டலி அல்ல'' என்றான். சாமிரெட்டி சற்றும் பயப்படாது, "ஒட்டலீ! ஏன் வீணாய் அலட் டிக் கொள்ளுகிறாய். உன் சக்தியை நமது எதிரிகளிடம் உபயோகிப் பதற்காகப் பந்தோபஸ்தாய் வைத்துக் கொள். நான் இப்போது சொல்லும் விஷயங்களைக் கவனி'' என்றார்.

சாமி ரெட்டி:—இவ்விஷயத்தைப்பற்றி ஆற அமர சிந்தித்துப் பார்த்தால் நமது அபாயம் அதிகரிக்கிறதாகவே தெரிகிறது. இப் போது நீங்களும் நாங்களும் அபாயத்திற்குள்ளகப்பட்டிருக்கிறோம். இதிலிருந்து தப்புவதற்கு உபாயம் தேட வேண்டும். உங்களைப் பின்பற்றி வந்தவர்களை நீங்கள் ஏமாற்றிவிட்டு வந்துவிட்டதாக நீங்கள் நினைக்கிறீர்கள். என் மனதில் அப்படி நினைப்பது தவறு என்று படுகிறது. வளைக்குள் புகுந்த எலி எப்படியும் வெளிவரும் அப்போது கடித்துவிடலாம் என நினைத்து வேட்டை நாய்கள் சுற் றிக் கொண்டிருப்பதுபோல் அவர்கள் இவ்வீட்டைச் சுற்றிக் கொண்டு தானிருப்பார்களென நான் பயப்படுகிறேன். ஆகையால் அவர்களின்னாரென்று ஆண்டறிந்து அவர்கள் வாய் திறவாதபடி செய்ய வேண்டியது அவசியமாகிறது. அத்துடன் நீங்கள் இவ்வூரி லிருக்கும் வரை எங்கள் அபாயம் அதிகரிக்கவே செய்யும். ஆகை யால் இப்போது தீர்மானித்து உங்களை அழைத்து வந்ததாகச் சொல்லும் தொகை ஆளுக்கு ஆயிர ரூபாய்களில் நீங்கள் அட்வா ன்ஸ் பெற்றதாகச் சொல்லும் ஆளுக்கு ரூபாய் நூறு போக மீதியை உங்களுக்கு இப்போதே கொடுத்து விடுகிறேன். பெற்றுக்கொண்டு நீங்கள் இரண்டுமணி நேரம் எங்காவது மறைந்திருந்து காலை 2-மணி க்குப் புறப்படும் ரெயிலேறி நேராக உங்கள் இருப்பிடம் போய்ச் சேருங்கள். உங்களைப் பின்பற்றி வருபவர்களைப் பற்றி நீங்கள் கவ னிக்க வேண்டாம். அதற்காக வேண்டிய சகல ஏற்பாடுகளும் நான் உங்கள் எதிரிலேயே செய்து விடுகிறேன்.

என்று சொன்னதும் பின்கட்டில் படுத்திருந்த நான்கு காவல் தேவமார்களை அழைத்து ஒட்டலியையும் காடியையும் காட்டி இவர்கள் இப்போது டிராம் வண்டிக்குப் போகப் போகிறார்கள்; நீங்கள் நால்வரும் நமது வீட்டிலிருந்தபடியே இவர்களை யாராவது

பின்பற்றிப் போகிறார்களாயெனப் பார்த்து கவனித்து அப்படி யாராவது பின்பற்றிச் சென்றால் உங்களுக்குத் தேவையான உதவியுடன் சென்று பின்பற்றுபவர்களைப் பிடித்து திருட்டு மாடுகளை அடைக்கும் பூமிக்குள்ளிருக்கும் கொட்டிலில் அடைத்துவிட்டு இங்கு வாருங்கள். "காவற்காரத் தேவமார் நீங்களிருக்கும்போது அயலூரிலிருந்து வந்து உங்களை அவமானப்படுத்த வந்தவர்களாக்கும் அவர்கள்" என்றார். அப்பால் அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய ரூபாய்களைக்கொடுத்து அவர்களிருவரையும் ஒவ்வொருவராகப் போகச் சொன்னார். முன்னால் தொடர்ந்து சென்ற கொளம்பு துப்பறிவோர் இருவரும் அவரவர்கள் நண்பர்களைத் தொடர்ந்துபோக கொளம்பு தலைமைத் துப்பறிபவன் இருவரையும் கவனித்தபடி செல்ல, டிராம் வண்டி புறப்படும் இடத்திற்கு ஒரு பர்லாங்கு தூரத்தில் ஒட்டலியும் காடியும் வந்து சந்தித்தார்கள். அப்போது கொளம்பு துப்பறிவோரும் தங்கள் முழுக் கவனத்தையும் முன்போகும் இருவர்மீது செலுத்திச் செல்ல ஒரு பிரம்மாண்டமான ஆலமரத்தடியில் கொளம்பு துப்பறிவோர் மூவரும் கையில் கைத்துப்பாக்கிகளைத் தயாராய் வைத்துக் கொண்டு ஒண்டி ஒண்டிச் சென்றார்கள். அப்போது திடீரென்று அவர்கள் மூவரும் சுருக்குக்குக் கயிறுகளால் இறுக்கிக் கட்டி மரத்தின் மேலே சேர்ந்தப்பட்டனர். அவர்களுக்கு இன்னவிதமான ஆபத்துதான் நடந்ததென்று அவர்கள் அறியுமுன் ஆலமரத்தின் மேல் தூக்கப்படவும், பின்னாலிருந்து மூவர் ஓடிவந்து அவர்கள் கூச்சல் போடாதபடி வாயை பொத்திக் கொள்ளவும் கண்மூடி முழிப்பதற்குள் அவர்கள் மூவரையும் செத்தூக்காய் தூக்கிக் கொண்டுபோய் திருட்டு மாடுகள் அடைக்கும் கொட்டிலுக்குள் அடைத்துவிட்டு அவர்கள் போய் இச்சந்தோஷச் சேதியைத் தங்கள் எஜமானரிடம் தெரிவித்துச் சென்றனர். டிராம் ஏறும் இடத்திற்குச் சென்ற ஒட்டலியையும் காடியையும் போலீசார் வாரண்டுகளுடன் வந்து பிடித்துக் கொண்டுபோய் போலீஸ் ஸ்டேஷனில் அடைத்து விட்டனர். ஒட்டலி காடி முதலியவர்கள் கைவரிசைகள் நன்குணர்ந்த ஒருவரால் அவர்கள் கைதி செய்யப்பட்டதால் அவர்கள் கைத் துப்பாக்கிகள் கத்திகள் முதலியன எவ்வித உபகாரமுமாகவில்லை.

பதினாறுவது அத்தியாயம்

எதிர் பாராத சம்பவங்கள்

"காமப் பேய் பிடித்தவர் கடைத் தேறுதல் கஷ்டமே.

ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் பிரேதம் காணாமற்போன சில தினங்களில் பாலரங்கராஜு பெற்றுவந்த விடுமுறை நாட்களாகி விட்டபடியால் அவர் தன் உத்யோக ஸ்தலத்திற்குப் போக வேண்டுமென்று ஜெயலக்ஷிமியிடம் தெரிவித்தார். அப்போதிருக்கும் நிலையில் தன்னைத் தனியாய் விட்டுச் செல்லக்கூடாதென்பதற்கு ஜெயலக்ஷிமி போதிய காரணங்கள் எடுத்துச் சொன்னதாலும் அவள் சொன்னது நியாயமென அவர் மனதில் பட்டதாலும் மீண்டும் இரண்டு மாதங்களுக்கு ரஜா பெற்றுக் கொண்டு பாலரங்க ராஜு அங்கேயே இருந்தார். பெண்டுதண்ட் டெப்டி கலெக்டர் மாதவராஜு காரும் அவர் சம்சாரமும் காசி யாத்திரை சென்றிருந்ததால் அவர்கள் வீட்டில் பாலரங்க ராஜுவும் அவர் பாட்டியாரும் வேலைக்காரரும் தான் இருந்தார்கள். ஸ்ரீனிவாசலு ராஜுகாரு உயிருடனிருந்த போதே ஜெயலக்ஷிமி அவர்கள் வீட்டிற்கு அடிக்கடிபோய் வந்ததாக ம-ா-ஸ்ரீ ஸ்ரீனிவாசலு ராஜுகாரு கேள்விப்பட்டதாக காந்திமதியா பிள்ளையிடம் சொன்னதாக எழுதப்பட்டிருப்பதை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அவள் தாத்தா இறந்த பின்னர் அனேகமாய் பகல் நேரங்கள் முழுவதும், இரவு நேரங்களில் கூட 9-மணி வரையிலும் ஜெயலக்ஷிமி அங்கிருந்து வருவது வழக்கம். "ஊர் வாயை மூட உலை மூடி உண்டா?" இதை ஆட்சேபித்து பலர் பலவிதமாய்ப் பேச ஆரம்பித்தனர். புஷ்பவதியாகக் கூடிய நிலைமையிலிருக்கும் ராஜுகுலப் பெண்ணொருத்தி விவாகமாகு முன் எவ்வளவு நெருங்கிய பந்துவா யிருப்பினும் விவாஹம் செய்து கொள்ள உத்தேசிக்கும் பர்த்தாவின் வீடா யிருப்பினும் இருட்டின பின்னும் போயிருப்பது அச்சமூகக் கொள்கைக்கு விரோதமாதலால் பலர் பல்வாறு பேசியது நியாயமென்றே சொல்லக்கூடும். இப்படி பலர் பேசுவதைக் கேள்விப்பட்ட சுப்பராஜுகாரு ஜெயலக்ஷிமியிடம் இதை ஆட்சேபித்து இலேசாய்ச் சொல்லிப் பார்த்தார். தாத்தா இருக்கும்போதே தான் அடிக்கடி அங்கு சென்று வந்ததாகவும், அது அன்னியர் வீடல்லவென்றும், இப்போதும் தன் பாட்டியார்

அவ்வீட்டில் இருப்பதாகவும், தன் பாட்டியாரங்கு இருக்கும்போது தான் போய் வருவதில் எவ்வித ஆட்சேபணையுமில்லையென்றும், தான் பாலரங்க ராஜுகாரையே விவாஹம் செய்து கொள்ளத் தீர்மானித்திருப்பதாலும், தன் தாத்தா அவர்கள்கூட அன்றிரவு பால ரங்க ராஜுவிடம் பேசியபோது அனேகமாய் அவர்கள் விவாஹ விஷயத்தை அங்கீகரிக்கும் மனப்பான்மையோடிருந்ததாகவும் ஆகையால் தான் அவ்வீட்டிற்குச் சென்று வருவது ஆட்சேபிக்கத் தக்க விஷயமல்லவென்றும் சொன்னாள். இயற்கையிலேயே சுப்ப ராஜு நல்லவர்; அதிலும் அவர் சுயபுத்தியின்படி நடப்பவரல்ல, அனேகமாய் எடுப்பார் கைப்பாவை யென்றே சொல்லலாம். நன்கு வாசித்து நியாயவாதம் செய்யும் ஜெயலக்ஷ்மி கேட்கும் கேள்விகளுக்குச் சரியான பதிலுரைக்க அவரால் சாத்யமில்லை. ஆகயால் அவள் மனப்போக்கின்படியே விட்டுவிட்டார். ஆயினும் ஒரு நாள் இரவு சுமார் 8-மணிக்கு ஜெயலக்ஷ்மி அங்கு என்னதான் செய்கிறுளென்று இரண்டாம் பேருக்குத் தெரியாமல் போய்ப் பார்த்துவர பாலரங்க ராஜுவின் வீட்டிற்குப் போனுர். தெருக் கதவு திறந்திருந்ததால் தாராளமாய் உள்ளே சென்று அங்கிருந்த வேலைக்காரியிடம் ஜெய லக்ஷ்மியை தான் உடனே பார்க்க வேண்டுமென்றும் எங்கிருக்கிறு ளென்றும் கேட்டார்; அவ் வேலைக்காரி பூட்டியிருக்கும் உள் வீட்டில் பாட்டியார், ஜெயலக்ஷ்மி, பாலரங்கராஜு ஆகிய மூவரும் இருப்பதாகவும் அங்கு எவரும் போகக்கூடாதென்றும் அவர்களை அவசரமாய்ப் பார்க்க வேண்டுமானுல் மட்டும் கூப்பிட்டால் வருவார்களென்றும் சொன்னுள். அவளைக் கூப்பிடும்படி சொன்னுர். தான் கூப்பிட்டால் கோபித்துக் கொள்ளுவார்களென்றும், இரண்டு மூன்று தினங்களுக்கு முன் ஒரு வேலைக்காரன் ஸ்ரீமான் பாலரங்கராஜு அவர்களுக்கு வந்த கடிதங்களைக் கொடுப்பதற்குக் கூப்பிட்டதற்காக அவனுக்கு அபராதம் போட்டாரென்றும் இன்னுமோர்முறை எவராவது அவ்வாறு செய்தால் வேலையினின்று நீக்கி விடுவதாக எல்லா வேலைக்காரருக்கும் தெரிவித்திருப்பதாகவும் ஆகையால் அவர்கள் வந்த பின் தான் தாங்கள் சொல்ல வேண்டிய விஷயங்களைச் சொல்ல வேண்டுமென்றும் சொல்லி தான் கூப்பிடமுடியாது என்று சொல்லி விட்டாள். அவர் தானே கூப்பிடுவதாகச் சொல்லி அக்கதவண்டை போக, வழக்கத்திற்கு விரோதமாக திறப்புகோல் கதவிலிருக்கக் கண்டு அதைத் திறந்துகொண்டு உள்ளே சென்றார். அந்த அறை

யினும் எவரும் இல்லை. அந்த அறையிலிருந்த மூன்று கதவுகளை யும் தள்ளிப் பார்த்தபோது திறக்காததாலும் உள் தாப்பாள் போட ப்பட்டிருந்ததாலும், கதவுகளில் சாவிகளில்லாததாலும், அந்த அறையிலிருந்தபடியே "ஜெய"—"ஜெய" என்று சத்தம் போட்டுக் கூப்பிட்டார். உடனே கதவைத் திறந்து கொண்டு ஜெயலக்ஷிமி வந்ததும் "என்ன நாய்ஞு! எங்கு வந்தீர்கள்? ஏதாவது விசேஷ முண்டா?" என்று கேட்டபடியே கதவை மூடிவிட்டாள். "அங்கு யார் யார் இருக்கிறார்கள்? நான் பார்க்க வேண்டும்" என்றார் சுப்ப ராஜு. அங்கு பாரங்கராஜு அவர்களாவது பாட்டியாராவது இல்லை" என்றாள் ஜெயலக்ஷிமி. "நீ தனியாய் அங்கு என்ன செய்து கொண்டிருக்கிறாய் நான் அதைப் பார்க்க விரும்புகிறேன்" என்றார் சுப்பராஜு. அங்கு நா...ன்...ஒ...ன்...று...ம் செய்யவில்லை, என் றாள். நான் கட்டாயமாய் பார்த்தே தீருவேன் என்று கதவைத் தட்டப் போனார் சுப்பராஜு. ஜெயலக்ஷிமி அவரை உள்ளே போக விடாதபடி வழி மறித்தாள். அச்சமயத்தில் திடீரென்று அக்கத வைத் திறந்ததும் அலங்கோல ஆடையுடன் செல்லம் "ஹா—என் ஆசைக் கொழுந்தனாரா? வாருங்கள்! வாருங்கள் !! என்றதும் அவ ரைத் தன் மார்போடணைத்துச் சேர்த்துக் கட்டிக் கொண்டு அவரு டைய இரு கன்னங்களிலும் பல முத்தங்கள் கொடுத்தாள். சுப்ப ராஜு திடீரென்று தான் எதிர்பாராத விதமாய் செல்லம் அங்கிரு ந்து வந்ததும் தன் மார்போடணைத்துச் சேர்த்துக் கட்டிக் கொண்டு முத்தமிடுவதைக் காண திக்பிரமை கொண்டு அப்படியே ஸ்தம்பி த்து முதலில் நின்று விட்டார். அப்பால் தான், செல்லம் தன்னைச் சேர்த்தணைத்துக் கொண்டு முத்தமிடுவதாகத் தெரிந்ததும் தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றார். செல்லம் விடவேயில்லை. "நீங்க ளாக வராவிட்டாலும் நானெப்படியாவது உங்களை அணைவதே சரி யென்று பிரதிக்ஞை செய்து கொண்டேன். இன்று தான் அதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டது" என்றாள். உடனே அவரை விட்டுவிட்டு தனது கைகள் இரண்டையும் விரித்தபடியே "ஐயையோ அதோ மூன்று நாகப் பாம்புகள் சீறிக்கடிக்க வருகின்றனவே; தாங்கள் தடு க்கக் கூடாதா? ஐயையோ! இன்னும் எத்தனை நாள் நான் இப்பாழும் நரகத்திலிருப்பது? இனி பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கி றதே? ஐயையோ! கோவிந்தா! போய் விடாதேயுங்கள். எப்படியா வது, இந்த நரகக் குழியிலிருந்து என்னை மீட்டு அழைத்துப் போங்

கள்; மாமா! என்னை மன்னியுங்கள். இதுவரையில் என்னைத் தண்டித்தது போதாதா? சீ! சீ!! இதென்ன பைத்தியம். எனது கொழுந்தனை விடவே மாட்டேன். அவர் எனக்குதான் சொந்தம்; நான் அவருக்கு சொந்தம் என்றதும் மீண்டும் அவரை இறுக்கிக் கட்டிக் கொண்டாள். அப்போது அத்தெருவின் வழியாய் தனது சொந்த ஜோலியாய்ப் போய்க் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவ் காதுகளுக்கு எங்கோ செல்லத்தின் சத்தம்கேட்கவே நின்று உற்று நோக்கி எங்கிருந்து அவள் பேசுகிறாளென்று கவனித்தபோதுதான் செல்லம் "இன்னும் எத்தனை நாள் நான் இப்பாழும் நரகத்திலிருப்பது" என்று அலறிய சத்தம் கேட்டு பாலரங்கராஜு அவர்கள் வீட்டில்தான் செல்லம் சிறை வைக்கப்பட்டிருக்கிறாளென நினைத்து தான் போன காரியத்தை மறந்து அங்கு ஓட்டமாய் வந்து பார்க்க, அப்போது தான் செல்லம் சுப்பராஜுவை தன் மார்புடன் இறுக்கி அணைத்தபடி "என் கொழுந்தனை விடவே மாட்டேன். அவர் எனக்குத்தான் சொந்தம், நான் அவருக்குத்தான் சொந்தம்" என்று சொல்லக் கேட்டார். செல்லத்தை யாரோ சிறை வைத்திருப்பதாக நினைத்து வந்த காமாக்ஷி ராவிற்கு தனது செல்லம் சுப்பராஜுவை மார்புடன் சேர்த்துக் கட்டிக்கொண்டு "தான் அவருக்குத் தான் சொந்தமென்றும் தனக்கு அவர்தான் சொந்தமென்றும்" சொன்னது வியப்பைத் தந்தது. அச்சமயத்தில் கூச்சல் சத்தம் கேட்டு அங்கு பாலரங்க ராஜுவும் பாட்டியாரும் வந்தனர். அப்போது காமாக்ஷிராவ் தன்னைப் பார்த்த மாத்திரத்தில் செல்லம் தனது நடத்தைக்காகப் பெரிதும் விசனித்து அவரை விட்டுவிட்டு வெட்கத்துடன் தலை குனிந்தபடி தன்னிடம் வந்து விடுவாளென்று மனப்பால் கொண்டார். அந்தோ பாவம்! செல்லம் அவரை அதுவரையில் அறியாத பாவனையாய் அவரிடம் ஒரு வார்த்தைக்கூட பேசாது சுப்பராஜுவுக்கு முத்தங்கள் கொடுத்தபடி யிருந்தாள். பாவம் சுப்பராஜுவால் அவள் பிடித்த பிடியிலிருந்து பலாத்கார மன்னியில் விடுவித்துக் கொள்ள முடியவில்லை. அவள் தனக்கு முத்தங்கள் கொடுத்தது அவருக்குக் கூரிய முட்கள் குத்துவதுபோல் மிகவும் அருவருப்பாக இருந்தது. "செல்லம்! நீ எனக்கு முத்தமிடுவதை நிறுத்தி உடனே என்னை விடா விட்டால் உன்னை உதறித் தள்ளிவிடுவேன். அப்போது நீ கீழே விழுவதால் காயங்களேற்படும். நீ என்ன பெண்ணா? பிசாசா? இத்தனை பேர் முன்னிலையில்

சற்றுவது வெட்கமன்னியில் இதுவரையில் எவ்வித அன்னியோன் யமுமில்லாத என்னை மார்புடன் சேர்த்தணைத்துக் கொண்டு முத்த மிடுகிறாயே! சீ!சீ!! என்னை விடுவாயா மாட்டாயா?" என்றார். அப்போது ஜெயலக்ஷ்மி "நாய்னு! அவளுக்குப் பைத்யம் பிடித்திருக்கிறது போலிருக்கிறது. ஒரு நிமிஷம் இருக்கும் புத்தி மறு நிமிஷம் இருக்கவில்லை; உளறுகிறாள், பாவம் உதறித் தள்ளி விடாதேயுங்கள்" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே காமாக்ஷிராவ் அவளை அணுகி "செல்லம்! செல்லம்!! செல்லம்!!! எனப் பலமுறை கூப்பிட்டார். "யாரது? செல்லம்! செள்ளம்!! யாரைச் செல்லமென்றும் செள்ளமென்றும் கூப்பிடுகிறாய். உன் பெண்ஜாதியைப் போய் அப்படிக் கூப்பிடு. நீ யார்? நான் யார்? என் செள்ளப் பேரால் என்னைக் கூப்பிட்டால் தெரியுமா? என் கொழுந்தனார் உன் 32-பற்களையும் உடைத்துக் கொடுத்து விடுவார். போ! போ!! போ!!! என்றாள். "செல்லம்! நான் இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவ் அல்லவா? என்ன இப்படிப் பேசுகிறாயே! என்று இன்னும் சமீபத்தில் சென்றார். அப்போது சுப்பராஜுவைப் பிடித்திருந்த இரு கைகளையும் விட்டு விட்டு, கைகளிரண்டையும் விரித்து "ஐயையோ! அதோ மூன்று நாகப்பாம்புகள் கடிக்கச் சீறி வருகிறதே! அதோ முகத்திற்கு நேராக வந்துவிட்டது. இதோ கடித்து விடும் போலிருக்கிறதே! இந்த நரக பாதை நான் எத்தனை நாளைக்கநுபவிப்பது. "மாமா! என்னைத் தண்டித்தது போதாதா? ஐயா கோவிந்தா! என்னைத் தப்பவைக்க மாட்டீரா? உமக்குக் கோடி புண்யமுண்டு. மாமா! மாமா!! மாமா!!! என்றதும் மீண்டும் சுப்பராஜுவைப் பிடிக்கப் போனாள். அப்போது காமாக்ஷிராவ் அவளைப் பிடிக்க, அவள் தன் முழு பலத்தோடும் ஆவேசமாய் அவரை ஒரு உதறு உதறித் தள்ளினாள். அவர் பல கெஜ தூரத்தில் போய் கீழே விழுந்தார். காலிலும் கையிலும் முகத்திலும் காயம்பட்டு இரத்தம் வடிந்தது. செல்லம் அவரை உதறித் தூரத் தள்ளி விட்டு, மீண்டும் தன்னைப் பிடிக்க வருகிறாளென்று அறிந்ததும் சுப்பராஜு ஓடப்பார்த்தார் அவள் அதி வேகமாக ஓடி அவரைப் பிடித்துக் கொண்டாள். சுப்பராஜு அவளுடைய உக்கிரமான பிடியிலிருந்தும் பல விதத்திலும் தன்னை மீட்டுக் கொள்ள முயன்று பார்த்தார். முடியவேயில்லை காமாக்ஷிராவ் சுப்பராஜுவுக்கு ஒத்தாசை புரியவும், செல்லத்தை சமாதானப்படுத்தவும் சமீபத்தில் சென்றார். அவரைக் கண்டதும் சீறி உன்னாலல்லவா எனக்கு இந்த

பாடுகள் வந்ததென்று சொல்லி தனது முழு பலத்தோடு ஓங்கி காமாக்ஷிராவ் முகத்தில் ஒரு குத்து விட்டாள். குத்துப்பட்டதும் அவர் வாயிலிருந்து களகள வென்று இரத்தம் வடிந்தது. செல்லம் தன்னை விட்டுவிட்டு காமாக்ஷிராவ் மேல் பாய்ந்ததும் இதுதான் தக்க சமயமென்று சுப்பராஜு அவள் திரும்பு முன் வெளியே சென்று கதவடைத்துக் கொண்டார். செல்லம் சுப்பராஜு இருந்த பக்கம் திரும்பிப் பார்த்தாள். அவரைக் காணுமல் ஒருதிருப்பு திரும்பினுள். அங்கு காமாக்ஷிராவ் நிற்கக் கண்டு "உன்னுலல்லவா என் கொழுந்தனுர் ஓடிப்போய் விட்டார்! உன்னை லேசில் விடப்போவதில்லை என்று அவரை மீண்டும் அடிக்கப் போனுள், அப்போது ஜெயலக்ஷிமி, "அதோ! உன் கொழுந்தனுர் அந்த அறைக்குள் போகிறுர் பார்" என்று அவர் வந்த அறையைக் காட்டினுள். செல்லம் அந்த அறைக்குள் போகவே ஜெயலக்ஷிமி கூடவே சென்று சில நிமிஷங்களில் தனியாக வெளியே வந்தாள். ஜெயலக்ஷிமி செல்லத்தை உள்ளே அழைத்துப் போனதும், பாலரங்க ராஜு காமாக்ஷிராவைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு போய் வெளியிலுள்ள அறையில் உட்கார வைத்து அவர் வாயிலிருந்தும் உடம்பிலிருந்தும் வடிந்த இரத்தத்தைத் துடைத்து விட்டு மருந்து போட்டார். அப்பால் செல்லம் அப்போதுள்ள மனப்பான்மையில் அவளுடன் காமாக்ஷிராவ் பேச முயல்வது அபாயகரமாய் முடியுமென்றும் ஆகையால் அவள் குணம் சற்று மாறியபின் மறுநாள் வந்து பார்ப்பது நலமென்று சொன்னுர். அப்போது காமாக்ஷிராவுக்கு செல்லத்தின் சத்தத்தைக் கேட்டவுடனே தான் வந்த காரியத்தை மறந்து உள்ளே சென்று தாமதமாகிவிட்ட விஷயம் ஞாபகத்துக்கு வர, பாலரங்க ராஜுவிடம் கூட சொல்லிக் கொள்ளாமல் ஓட்டமாய்ச் சென்றுர்.

மல்லிகை புஷ்பம் போன்ற மெல்லிய மேனியையும், புன்னகை தவழும் முகத்தையும், எவரையும் பார்த்த மாத்திரத்தில் வசீகரிக்கச் செய்யக் கூடிய வதனங்களையும், ஜ்வொலித்துக் கொண்டிருக்கும் கண்களையும், கேட்ட மாத்திரத்தில் எவர் மனதையும் கவரக் கூடிய களின மொழிகளையும் இனிய பாக்ஷிதைகளையுமுடைய செல்லம் இப்பேர்ப்பட்ட காரியங்கள் செய்தாளென்பதை நம்ப எவரால் இயலும்? மேலும் ஓர் பெண்பாலுக்கு இவ்வளவு அபரிமிதமான பலமும் சக்தியும் எவ்வாறு ஏற்பட்டது எனவும் வாசகர்கள் நினைக்கலாம். மஹா லக்ஷிமியும், துர்க்கா தேவியும், (காளியும்) சாக்ஷாத்

மஹா விஷ்ணுவின் பத்தினிகளாயினும் அந்தந்த சமயங்களுக் கேற்றவாறு மஹா லக்ஷ்மி யென்றும் துர்க்காதேவி யென்றும் அழைக்கப்படுகின்றனர். பெண்கள் எல்லாவிதமான சிறந்த குணங் களையுடையவர்களென்பதையும், இன்பக் களஞ்சியங்களென்பதை யும் மறுக்கவல்லார் உளரோ? இல்லை யென்றே சொல்லலாம். ஆனால் காமப் பேய் மட்டும் அவர்களைப் பிடித்து விட்டாலும், ஒரு விஷ யத்தை சாதிப்பதாக அவர்கள் தீர்மானித்து விட்டாலும், அப் போது தான் அவர்கள் சாந்தஸ்வரூபம் (அதாவது மஹா லக்ஷ்மி ரூபம்) மாறி பயங்கரஸ்வரூபம், அதாவது துர்க்காதேவி அல்லது காளி ரூபம்) எடுத்து விடுகிறார்கள். அப்போது அவர்களுடைய முந்திய நற்குணங்களெல்லாம் மாறி எது வேண்டுமானாலும் செய் யக் கூடிய சக்தி வாய்ந்தவராகி விடுகிறார்கள். அப்பேர்ப்பட்ட சந் தர்ப்பங்களில் அவர்களைப் பெண்ணெனக் கருதாது பேயெனக் கரு தும்படியான நிலைமைக்கு வந்து மனம் போனவாறு நடக்கவும் பேச வும் ஆரம்பித்து இன்னது தான் செய்வார்கள் இன்னது செய்ய மாட்டார்களென நினைக்க முடியாத நிலைமைக்கு வந்துவிடுகிறார்கள். செல்லத்துக்கு சுப்பராஜு பேரில் கண்ணோட்ட முண்டென்று இப்புஸ்தகத்தின் 68-69வது பக்கங்களிலேயே விவரிக்கப்பட்டிருக் கிறதைப் பார்க்க) செல்லத்திற்கு சுப்பராஜுவின் பேரில் ஏற்பட்ட பிரியம் நாளுக்கு நாள் அபிவிருத்தியாகி அப்பிரியம் இப்போது பைத்தியம் பிடித்திருக்கும் நிலையில் உச்சிக்கு எட்டி எல்லைமீறி வந்து விட்டதால் பெண்ணான அவள் இப்போது பேயானதில் ஆச்சரியமே யில்லை. பெண் எப்போது பேயாக மாறி விட்டாளோ அப்போது பெண்ணின் இயற்கைக் குணங்கள் மாறி பேயின் கோரஸ்வரூபம் தாண்டவமாட ஆரம்பித்து விட்டதால் அவள் இப்பேர்ப்பட்ட காரியாதிகள் செய்தது ஆச்சரியகரமாகாது.

நிற்க, செல்லம் கையிலிருந்து விடுபட்ட சுப்பராஜு வேடர் கையிலிருந்து விடுபட்ட மானைப்போல் கதவை முன் பக்கத்தில் தாளிட்டுக் கொண்டு அங்கிருந்த சோபாவில் "அப்பா" என்று உட் கார்ந்து பெருமூச் செறிந்தார். ஜெயலக்ஷ்மி செல்லத்தை விட்டு விட்டு வந்து கதவைத் தட்டினாள். சுப்பராஜு மீண்டும் செல்லம் தான் வருகிறாளோ எனப் பயந்து திடுக்கிட்டு எழுந்து ஓடப்போ னார். அப்போது ஜெயலக்ஷ்மி "சித்தப்பா! சித்தப்பா!! கதவைத்

திறங்கள். செல்லத்தை அவள் அறையில் போட்டு பூட்டி விட்டேன். தயவு செய்து கதவைத் திறங்கள்" என்றாள். பின் பக்கம் வாசல் வழியாய் இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவை விட்டு விட்டு வந்த பாலரங்கராஜு ஜெயலக்ஷிமியைப் பார்த்து "உங்கள் வீட்டில் பிறந்த எவருக்கும் பயமென்பது எப்படியிருக்குமெனத் தெரியாதெனத் தற்புகழ்ச்சி செய்கிறாயே! உன் சிற்றப்பா செல்லத்திடம் அகப்பட்டு விடுவித்துக் கொள்ள வழியறியாதுத் திண்டாடித் தவித்துப் பதறிப் பயந்து பறந்து விட்டவரை இப்போது நீ கூப்பிட்டால் அவர் மீண்டும் செல்லம் எங்கே வந்து பிடித்துக் கொள்ளுகிறாளோ எனக் கருதி கதவைத் திறக்க மறுக்கிறார். என்று ஏளனம் செய்தார். இதற்குள் சுப்பராஜு கதவைத் திறக்கவே மத்தி அறையிலுள்ள சோபாக்களில் மூவரும் அமர்ந்தனர். சற்று நேரம் மௌனமாயிருந்த சுப்பராஜு ஜெயலக்ஷிமியைப் பார்த்து தன் தகப்பனால் மறைத்து வைக்கப்பட்டிருந்த செல்லம் அங்கு எப்படி வந்தாளென்றும் அவளுக்கு ஏன் பைத்தியம் பிடித்ததென்றும் கேட்டார். அப்போது, ஜெயலக்ஷிமி பாலரங்கராஜுகாரின் முகத்தைப்பார்க்க அவர் "எப்போது காமாக்ஷிராவுக்கு செல்லம் அங்கிருந்த விவரம் தெரிந்து விட்டதோ அப்போது இனி அவ்விஷயத்தை மறைக்க முடியாதாகையால் நீ சொல்லுவது நலம்" என்றார். அப்போது ஜெயலக்ஷிமி பின் வருமாறு சொன்னாள்.

"இந்த அத்தானும் நானும் முதல் தடவை ஒன்றாக நமது வீட்டிற்கு வந்து என் தாத்தா அவர்களிடம் சவுக்கடி பட்டதற்கு முந்திய நாள் இரவு தாத்தா அவர்கள் கோபத்தை எவ்வாறு தணிப்பது என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டே நமதரண்மனையின் பின்பக்கம் வெகு தூரம் சென்று விட்டோம். முன் கோட்டை மைதானமாயிருந்து இப்போது புல்புதர்கள் நாகதாளி முதலியன முளைத்திருக்கும் ஆள் நடமாட்டமில்லாத அகழியின் பக்கம் சென்றதும் அப்பக்கம் பூமியில் பிரகாசமான வெளிச்சம் தோன்றிற்று. நான் தான் அதை முதலில் பார்த்தேன்; பார்த்ததும் அத்தானவர்களிடம் அங்கு ஏற்பட்ட பிரகாசத்தைக் காட்டி அங்கு நாகரத்னம் இருப்பதால் அப்பிரகாசம் ஏற்பட்டதோ என்னமோ என்று சொன்னேன்; அதற்கு அவர்கள் நாகமாவது-இரத்னமாவது அதெல்லாம் பழம் காலத்துப் பாட்டி கதைகள் என்று சொன்னார்கள். "உங்களுக்குத் தெரியாத விஷயங்களெல்லாம் உங்களுக்குப்

பாட்டி கதைகள் தான்; கன்னியா குமரியிலிருக்கும் பகவதியம்மன் மூக்கில் போடப்பட்டிருக்கும் மூக்குத்தி நாகரத்தினமல்லவா? பிரத்யக்ஷமாய் நாகரத்தின மிருந்து கொண்டிருக்கும்போதே பாட்டி கதைகளென்று நினைக்கும்படிதான் ஆங்கிலக் கல்வி போதிக்கிறது போலிருக்கிறது" என்றேன். அவர் "மின்மினிப் பூச்சியாயிருக்கும்" என்றார். மின்மினிப் பூச்சிக்கு அவ்வளவு பிரகாசம் எங்கிருந்து வரும். அது மின்மினிப் பூச்சியே அல்லவென்று நான் பிடிவாதமாய்ச் சொல்லி விட்டதால் போய்ப் பார்ப்போம் என்றேன். நீ நினைக்கிறபடி நாகரத்தினமாயிருப்பின் அதைக் கக்கிய பாம்பு சமீபத்தில் தான் இரை எடுத்துக் கொண்டிருக்குமென்றும் அனேக 100 வயதுள்ள நாகசர்ப்பங்களிடம்தான் இரத்தினமிருக்குமென்றும் அவைகள் கொடூர விஷமுள்ள சர்ப்பங்களென்றும் ஆகையால் சமீபத்தில் போவது அபாயத்தை விளைவிக்குமென்றும் அங்கு போகவே கூடாதென்றும் சொன்னார்கள். நீங்கள் இவ்வாறு பயப்படுவீர்களென்று நான் கனவிலும் கருதவில்லை; நாகரத்தினம் பார்ப்பதே மிகவும் அருமை. அதைப் பார்த்தும் நாம் நமது புத்திசாலித்தனத்தால் அதைப் பெறுவிட்டால் நம்மை விட பைத்தியக்காரர் எவருமிரார்கள். நான் சாணியை உருண்டை செய்து எடுத்துக் கொண்டு அதற்கு நேராக இருக்கும் ஆல மரத்தின் மீது ஏறி அந்த இரத்தினத்தின் மீது சாணி உருண்டையைப் போட்டு விடுகிறேன். அப்போது பாம்பு செத்தாவது போகும் அல்லது எங்காவது போய்விடும். இல்லை; ஒருக்கால் எகிறி என்னைக் கடித்துக் கொன்றாலும் திட்டமாக நீங்கள் நாகரத்தினம் பெறுவீர்கள். நீங்கள் அபாயத்திற்குட் படாமல் இங்கேயே இருங்கள் என்றதும் நான் அந்த வெளிச்சம் தெரிந்த பக்கம் சென்றேன். அப்போது அத்தானவர்கள் அந்த நாகரத்தினத்தைவிட நீ தான் எனக்கு மேலான இரத்தினம். எப்போது நீ அதை விரும்புகிறாயோ அப்போது ஆலமரத்திலேறி சாணி உருண்டையை நான் போடுகிறேன். எனக்கு ஏதாவது அபாயம் நேர்ந்தாலும் உனக்கு திட்டமாய் நீ விரும்பும் நாகரத்தினம் அகப்படுமென்று சொல்லிக் கொண்டு ஓட்டமாய் என்னைப் பின்பற்றி ஓடிவந்தார். "அந்த இரத்தினத்தை நான்தான் முதலில்பார்த்தேன் ஆகையால் நான்தான் அதைப்பெற உரிமைப் பட்டவள் என்று கூறிக் கொண்டு நான் இன்னும் வேகமாய் ஓடினேன். "அதைப் பெறுவதில் உனக்கு ஏதாவது அபாயம் நேர்ந்

தால் அதை விரும்பிய நீ அதைப் பெறுமலே இறக்கும்படி நேரிடும். அப்பால் அந்த நாகரத்தினமும் இந்த மண்ணும் எனக்குச் சமமேயாகும்; அதைப் பெறுவதில் எனக்கு ஏதாவது அபாயம் நேரிட்டபோதிலும், அதை விரும்பிய நீ இஷ்டமாய் அடைவாய். நீ அதைப் பெறும்படி செய்ததற்காக என் மனம் பெரிதும் திருப்தியடையும், ஆகையால் நானே அதைப் பெறவேண்டியவன்" என்று வாதிட்டுக் கொண்டபடியே இருவரும் அவ்வெளிச்சம் வரும் இடத்திற்கு சமீபத்தில் சென்றதும் சட்டென்று அவ்வெளிச்சம் மறைந்து விட்டது. என்ன செய்வதெனத்தோன்றாமல் நாங்களிருவரும் அவ் வெளிச்சம் வந்த இடத்தின் சமீபத்தில் சென்றோம். அப்போது பாதாளத்திலிருந்து இருவர் பேசும் குரல் கேட்டது. நாங்கள் அவர்கள் பேசிய வார்த்தைகளைக் கவனித்துக்கேட்க, செல்லமும் துப்பறியும் கோவிந்தனும் பேசுகிறார்களென்று அறிந்து சந்தடி செய்யாமல் இன்னும் என்ன நடக்கிறதென்று பார்த்தோம். அப்போது கோவிந்தன் என் தாத்தாவை காந்தவிளக்கை அமுக்கச்சொன்னார். அவர் அமுக்கிய வுடனே முன் தோன்றிய வெளிச்சம் எங்கள் கண்களுக்குத் தென்பட்டது. நாங்கள் நாகரத்தினமென நினைத்து வந்தது காந்த விளக்கின் வெளிச்சமே யொழிய நாகரத்னமல்லவென்று அப்போது தான் உணர்ந்தோம். மீண்டும் அங்கேயே நின்று மூவரும் பேசியதையெல்லாம் ஒருவார்த்தைகூட விடாமல் செவிசாய்த்துக்கேட்டோம். சற்று நேரத்தில் என் தாத்தா அவர்களும் கோவிந்தனும் போய்விட்டார்கள். சற்று நேரம் சந்தடி செய்யாமல் மௌனமாயிருந்து அப்பால் மெதுவாக "அங்கிருப்பதுயார்" என்று கேட்டேன். "அபாக்யவதி செல்லம். சிறையிடப்பட்ட செல்லம்" என்று சொல்லி கேட்பது யாரென்றும் எங்கிருந்து கேட்கிறேனென்றும் செல்லம் கேட்டாள். அகழியின் பக்கத்திலிருக்கும் கோட்டை மைதானத்தில் இருப்பதாகவும் பேசுவது ஜெயலக்ஷ்மி என்றும் சொன்னேன். அப்போது செல்லம் "என் அருமை ஜெயம்மா ! நான் அதி பயங்கரமான நரக பாதை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். என்னைக் காப்பாற்றி வெளியே விட்டாலும் சரிதான்; அல்லது என் தலையில் ஒரு கல்லெடுத்துப் போட்டு கொன்று விட்டாலும் உனக்கு மெத்த புண்ணியமுண்டு. இந்த வேளையில் இப்பயங்கரமான இடத்திற்கு நீ ஏன் வந்தாய்? தனியாயா வந்தாய்? என பல கேள்விகளைக் கேட்டாள். நான் அத்தான் பாலரங்கராஜு அவர்கள்கூட இருக்கிறார்களென்று

சொன்னேன். உடனே அவரையும் வெகுவாகக் கெஞ்சினுள். அப்போது அவர் தனது ஜோப்பியில் வைத்திருந்த காந்த விளக்கை யெடுத்து முன் வெளிச்சம் தெரிந்த இடத்திற்கு நேராக வெளிச்சம் கொடுக்கும்படி வைத்து பத்தானை அழுக்கி "உனக்கு வெளிச்சம் தெரிகிறதா பார்" என்று செல்லத்தைக் கேட்டார்கள். அவள் தெரிவதாகச் சொன்னுள். அவளைப் பயப்படாமல் இருக்கும்படியும் கூடிய ஜல்தியில் அவளை விடுவிப்பதாயும் சொல்லி அவர் போய் அரைமணி நேரத்தில் கெட்டப் பாறையும் மண் வெட்டியும் ஒரு நூல் கயிறும் எடுத்துக் கொண்டு வந்து வெளிச்சம் வந்த பாகத்தில் மூன்றடி அகலம் மூன்றடி நீளம் வைத்து 6-அடி உயரம் நாங்களிருவரும் அதிகக் கஷ்டப்பட்டுத் தோண்டவே குகை தென்பட்டது; அங்கு போட்டிருந்த கல்லின் சந்திலிருந்துதான் வெளிச்சம் வந்தது, அங்குபோட்டிருந்த இரண்டடி சதுரமான கல்லை நாங்களிருவரும் கஷ்டப்பட்டு அப்புறப்படுத்தவே காந்த விளக்கு வெளிச்சத்தில் குகை நன்ருய்த் தெரிந்தது; நூல்கயிற்றை குகைக்குள் விட்டு செல்லத்தை பலமாய் முடிபோட்ட முடியைப் பிடித்துக் கொள்ளச் சொல்லி நாங்களிருவரும் அதிக கஷ்டத்துடன் அவளை வெளியேற்றிவிட்டு மறுபடியும் அக்கல்லை இருந்த இடத்தில் போட்டு மூடிவிட்டு முன் இருந்ததுபோல மண் தள்ளி அகழியிலிருந்து காய்ந்த களிபத்தையை வெட்டி வந்து அக்கம் பக்கங்களிலுள்ள நிலம்போல் செய்துவிட்டு நாங்கள் மூவரும் பாலரங்கராஜு அவர்கள் வீட்டிற்கு வந்து அவளை தாங்கள் பார்த்த அறையில் எவருக்கும் தெரியாமல் இருக்கும்படியும் என் பாட்டனுருக்கு அவ்விஷயம் தெரிந்தால் இயற்கையாகவே அத்தானவர்கள் பேரிலிருக்கும் விரோதம் இன்னும் ஆயிரம் பங்கு அதிகரிக்கும் என அஞ்சி செல்லத்தை அங்கு மறைந்திருக்கும்படி கேட்டுக் கொண்டோம். என் தாத்தா அவர்களுக்குத் தெரிந்தால் எப்படியாவது தன்னை மறுபடியும் கொண்டுபோய் முன்னிலும் பயங்கரமான இடத்தில் அடைத்து விடுவாரென அஞ்சி அவளும் அங்கேயேயிருப்பதாக ஒத்துக்கொண்டாள். தான் பந்தோபஸ்தான இடத்தில் சேர்ந்ததாக அறிந்ததும் அவள் மூர்ச்சித்து விழுந்து விட்டாள். சில நாட்கள் வரையில் அவளுக்கு பிரக்ஞை வராததால் பீச்சாங்குழல் மூலமாய் அவள் தொண்டைக்குள் ஆகாரம் செலுத்தி வந்தோம். அவள் பிரக்ஞை தெளிந்து

எழுந்தபோது அவளுக்கு பைத்தியம் பிடித்திருக்கிறது. அது முதல் அவளை சமாளிப்பது அதிக கஷ்டமாயிருந்தது. நயத்திலும் பயத்திலும் அவளை வெளியே போகாதபடி வைத்திருந்தோம். அத்தானுக்கு விடுமுறைகாலம் பூர்த்தியாகி வேலைக்குப்போக வேண்டுமென்று சொன்னபோது நான் தனியாய் செல்லத்தை சமாளிப்பது கஷ்டமென்றும் அதுபோன்ற காரணங்கள் சொன்னதால் தான் அத்தானவர்கள் இன்னும் அதிக ரஜா எடுத்துக்கொண்டார்கள். இன்று, அவள் இருந்தாற்போலிருந்து தங்கள் பேரைச் சொல்லி எப்படியாவது அவர்களிடம் போயே தீருவேன் என்று பிடிவாதம் பிடித்துக் கொண்டிருக்கும்போது தான் அவள் விருப்பத்தைப் பூர்த்திசெய்ய வந்ததைப் போல் தாங்கள் வந்து சேர்ந்தீர்கள் அப்பால் இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவ் வந்தார். இந்த அனர்த்தங்களெல்லாம் விளைந்தன ''

எனச் சொல்லி முடித்தாள். அப்பால் சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்தபின் ஜெயலக்ஷ்மி சுப்பராஜுவுக்குத் தெரியாமல் பாலரங்கராஜுவிடம் ஜாடைசெய்ய அவர் அறிந்து கொண்டதற்கடையாளமாகத் தலையசைக்க, சுப்பராஜுவும் ஜெயலக்ஷ்மியும் தங்கள் வீட்டிற்குப் புறப்பட்டார்கள். பாலரங்கராஜு தனது வண்டியில் ஏறிப் போகும்படி கேட்டுக்கொண்டார். குளிர்ந்த வேளையாயிருப்பதாலும் ஒருவருக்குத் துணையாக இன்னொருவர் இருப்பதாலும் நடந்து போவதாக ஜெயலக்ஷ்மியும் சுப்பராஜுவும் சொன்னார்கள். சுப்பராஜு பாலரங்கராஜுகாரையும் கூப்பிட, ஜெயலக்ஷ்மி மீண்டும் ஏதோ ஜாடைகாட்ட, பாலரங்கராஜு தனக்கு அவசரஜோலியிருப்பதாகவும் ஆகையால் ம-ா-ா-ஸ்ரீ சுப்பராஜு அவர்கள் விருப்பத்திற்கிணங்க வர சாத்யமில்லாம லிருப்பதற்காகப் பெரிதும் வருந்துவதாகவும் சொல்லி அவர்களுக்கு விடை கொடுத்தனுப்பிவிட்டார். அவர்களிருவரும் சாவதானமாய்ப் பேசிக்கொண்டு தங்கள் இல்லம் சேர்ந்து சாப்பிட்டுப் படுத்துக்கொண்டார்கள்.

அந்த அர்த்த ஜாமவேளையில் ஓட்டலியும் காடியும் அங்கு வருவார்களென்று எதிர்ப்பார்த்திருந்து அவர்களைக் கைதிசெய்தவர்கள் யார் என்று அறிய நமது வாசகர்கள் அதிக ஆவலா யிருப்பார்கள் முக்திய வரிகளில் ஓட்டலி காடி முதலியவர்கள் கைவரிசைகள் நன்குணர்ந்த ஒருவரால் அவர்கள் கைதி செய்யப்பட்டதாக எழுதியிருப்பதை வாசித்த உடனே துப்பறியும் கோவிந்தன்தான் கைதி

செய்திருப்பாரென்று சிலர் ஊகித்தும் நிச்சயப்படுத்தியுமிருப்பார்கள். உண்மையில் கோவிந்தனால் நேராகக் கைதி செய்யப்படவில்லை. பின் யாரால் கைதி செய்யப்பட்டார்கள்?

கோவிந்தன் ஒட்டலி காரடியுடன் சென்னையை விட்டுப் புறப்படுமுன் எழும்பூர் ரெயில்வே ஸ்டேஷனில் சீனுவிடம் ஒரு தந்தியைக் கொடுத்து உடனே அனுப்பச் சொன்னதாக எழுதியிருக்கிறதல்லவா? அத்தந்தியில் பின்வரும் விஷயங்கள் எழுதப்பட்டிருந்தன.

"தந்தி"

டெப்டி மாஜிஸ்டிரேட்
திருநெல்வேலி

நாளை மாலை திருநெல்வேலி சேரும் போட்மெயிலில் சந்திக்க விரும்புகிறேன். காந்திமதியா பிள்ளையை திருச்செந்தூருக்கு மாலை புறப்படும் கடைசி ரெயில் வண்டி சென்றபின் விடுவிக்க ஏற்பாடு செய்து வையுங்கள்; மற்ற விஷயங்கள் நேரில் தெரிவிக்குறேன்.

திருவல்லிக்கேணி நண்பன்.

இத்தந்தியில் கண்ட பிரகாரம் டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் திருநெல்வேலி ஸ்டேஷன் வந்து காத்திருந்து போட்மெயிலின் தொடர்ச்சிவண்டி வந்ததும் கோவிந்தனை வண்டிகள் முழுமையிலும் தேடிப்பார்த்தார். அவரைக் காணோம். ஒருக்கால் மாறுவேடம் பூண்டுவந்திருப்பாரென்றும் அவராக வந்து பேசினால்தான் தெரியுமென்றும் அங்கேயே உலாவிக்கொண்டிருந்தார். ஒட்டலி காரடியுடன் வந்த கோவிந்தன் அவர்களைக் கொண்டு போய் திருச்செந்தூர் போகும் வண்டியில் ஏற்றிப் படுக்க வைத்துவிட்டு அப்பால் தான் டெப்டிமாஜிஸ்டிரேட் கிற்குமிடம் வந்து தந்தி சேர்ந்ததா என்றார். அவர் வார்த்தைகளைக் கேட்டதும் ஏற இறங்கப் பார்த்து மெதுவாக "எனது திருவல்லிக்கேணி நண்பரா?" என்றார். அவர் ஆம் என்று சொல்லி ஏகாந்தமான இடத்திற்கு அவரை அழைத்துக் கொண்டுபோய் டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்களிடம் ஒட்டலி காரடி ஆகிய இருவரின் 12 படங்களைக் கொடுத்து, அப்படங்களை உடனே மோட்டாரில் திருவீரராஜபட்டணம் அனுப்பி அங்கிருக்கும் சப்இன்ஸ்பெக்டர் அளகிரிசாமி நாயுடு அவர்களிடமுள்ள புத்திசாலி போலீஸ் கான்ஸ்டேபிள்களிடம் அப்படங்களைக் காட்டி அப்படங்களிலுள்ள இரண்டு நபர்களும் அன்று இரவு டிராம்

வண்டியில் வந்து சேர்வார்களென்றும், அவர்கள் பழைய ஆசாமிகளாதலால், எவராவது பின்பற்றிச் சென்றால் ஜாடை தெரிந்து கொண்டு தாங்கள் போகவேண்டிய இடம்போகாமல் திரும்பி விடக் கூடுமென்றும் ஆகையால் பிரியும் ஒவ்வொரு ரோட்டுகளிலும் ஒவ்வொருவரை உடுப்பில்லாமல் மறைந்து நின்று கவனிக்கும்படியும் அந்த ஊரில் அவர்களிருவர் இருக்கும்வரையில் அவர்களைக் கைதி செய்யாது சுயேச்சையாய் விட்டு, எங்கெங்கு போகிறார்கள், எவரெவருடன் பேசுகிறார்கள், என்னென்ன செய்கிறார்கள் என்று கவனித்து வரும்படியும், அவர்கள் அவ்வூரை விட்டு, டிராம் வண்டியின் மூலமாயாவது, படகு கப்பல் மூலமாயாவது, மாட்டு வண்டியின் மூலமாயாவது, அல்லது வேறு விதமாயாவது வெளியேறுவதாயிருந்தால் அவர்களிருவருக்கும் தனித்தனியாக 4 ஜதை வாரண்டுகள் பிறப்பித்து அனுப்பும்படியும், அவர்களிருவரும் அதிக பலசாலிகளாதலாலும், விரைவில் மறையக் கூடிய திறமையுடையவர்களாதலாலும், கைத்துப்பாக்கி, கத்தி, தடி, முதலியவைகளை உபயோகிப்பதில் மிகவும் கைதேர்ந்தவர்களாதலாலும் அவர்களுக்குத் தங்கள் கைதி செய்யப் போகிறார்களென்ற விஷயம் தெரியுமுன்னம் கைவிலங்குகள் மாட்டிவிட வேண்டுமென்றும் விலங்குகள் மாட்டினதும் ஒவ்வொருவரையும் பலசாலிகளான இருவர் சேர்த்தணைத்துப் பிடித்துக் கொள்ள வேண்டுமென்றும், அவர்கள் ஜேப்புகளில் உடனே வேறு இருவர் கைபோட்டு அவைகளிலிருக்கும் துப்பாக்கி கத்தி முதலிய ஆயுதங்களை எடுத்துவிட வேண்டுமென்றும் இத்தனை பேர் அவர்களைத் தொடர்ந்து வருகிறார்களென்று தெரியாமல் கூம்பல் சாதாரணமாய் கூடியிருக்கக் கூடிய கோயில்கள், சந்தை, கடைகள், டிராம் ஆபீஸ், வண்டிப்பேட்டை, பண்டகசாலை (துறைமுகம்) முதலிய இடங்களில் கைதி செய்வது நலமென்றும் தெரிவிக்கும்படியும் அப்பால்தான் வாரண்டுகளைக் காட்ட வேண்டுமென்றும் எச்சரித்தார். தந்தியில் கண்ட பிரகாரம் சப்ஜெயிலில் அடைத்து வைத்திருக்கும் கைதியை அன்றிரவு விடுவிக்க உத்தரவு செய்திருக்கிறீர்களா எனக் கோவிந்தன் கேட்டார். அவ்வாறு செய்திருப்பதாயும் அன்றிரவு கடைசி ரெயில் சென்ற பின் விடுவிக்கப் படுவாரென்றும் தெரிவித்தார். அப்பால் டெப்டி மாஜிஸ்டிரேட் கோவிந்தனவர்களிடம் "திருடுபோன நகைகள் மாயமாய் மறைந்த தாசி செல்லம் சம்மந்தமான விஷயங்கள், முதலியவைகளைப் பற்றி முழு

விவரங்கள் வெளிப்பட்டு விட்டனவா? என்ன நிலைமையிலிருக்கின்றன" எனக் கேட்டார். தாசி செல்லம் புத்தி சுவாதீனமில்லாமல் திருவீராஜ பட்டணத்தில் பந்தோபஸ்தாயிருக்கிறாளென்றும் டெப்டி கலெக்டர் மாதவராஜு அவர்கள் வீட்டில் திருடுபோன நகைகள் முதலியவைகளைப்பற்றிய விவரங்கள் தாம் ஊகித்திருப்பது சரியா யிருக்கும் பக்ஷத்தில் இன்னும் இரண்டு மூன்று தினங்களுக்குள்ளாகவே திட்டமாய் வெளியிடக் கூடுமென்றும் வலையின் சுருக்கு அனேகமாய் நெருங்கி விட்டதாகவும் கூடிய ஜல்தியில் எல்லா மீன்களையும் வெளியில் எடுத்துப் போட்டு விடக் கூடுமென்று தாம் நம்புவதாகவும், காமாக்ஷிராவ் சுந்தரராஜுவின் மறைவிடம் கண்டுபிடிப்பதற்காகவே தாசி செல்லத்தின் வீடு சென்றதாகவும், தாசி வீடுகளுக்குப் போவோர் முதலில் விளையாட்டாகவோ அல்லது வேடிக்கையாகவோ சென்றபோதிலும். தாசிகளின் மாய வலையிற் சிக்குண்டு தங்களுக்குள்ள ஆஸ்தி, பூஸ்திதி, நகை நட்டு முதலிய யாவற்றையும் தத்தம் செய்து விடுவதோடு நிற்காமல் கடன்காரராகிய பின், அவ் விலைமகளிரால் புறக்கணிக்கப்படும் வரையில் அவர்கள் மாயவலையில் எவ்வாறு சிக்குண்டு கிடப்பார்களோ அவ்வாறே சுந்தரராஜுவின் துப்புத் துலக்கச்சென்ற காமாக்ஷிராவ் இப்போது செல்லத்தின் அடிமையாகி அவளைத் தேடி அலைந்து திரிந்து கொண்டிருக்கிறார். தாங்கள் அவரை வேலையிலிருந்து நீக்கியதும் அவர் என்னைத் தேடிச் சென்னை சென்றார். அவர் அங்கு வருவதற்குள் தங்கள் தந்தியின் பிரகாரம் நான் இங்குவந்து விடவே என்னைத் தேடிக்கொண்டு இங்குவந்தார். அவரிடம் விசாரித்ததில் உண்மையைச் சொன்னார். எனக்கு அப்பொழுதே செல்லம் இருக்குமிடம் தெரிந்தபோதிலும் அவ்விஷயத்தை எவருக்கும் தெரிவிக்காததுபோல் அவருக்கும் தெரிவிக்காமலிருந்தேன். இவ் விஷயத்தைத் துப்புத்துலக்கும் விஷயத்தில், தான், ஏதாவது உதவிசெய்யக் கூடுமாவென்று கேட்டார். நான் உதவி செய்யக் கூடுமென்றும் சுந்தரராஜுவின் எதிரியாகிய வீராசாமி ரெட்டியாரின் தம்பியாகிய சாமி ரெட்டியையும், திருவீராஜ பட்டணத்திலிருக்கும் வீராசாமி ரெட்டியாரின் மைத்துனனாகிய கொண்டப்ப ரெட்டியாரையும் ஜாக்ரதையாகக் கவனித்து வந்தால் துப்புத் துலங்குமென்றும் அவர்களைக் கவனித்து அப்போதைக்கப்

போது அவர்கள் என்ன செய்கிறார்கள் இரகசியத்தில் என்ன பேசுகிறார்கள், எவரெவரிடம் போய் என்னென்ன பேசுகிறார்களென்று கவனித்துத் தெரிவிக்கச் சொன்னேன். அவ்வாறே கவனிப்பதாக எனக்கு வாக்களித்து அவ்வாறு செய்து வருவதாக அவர் நினைத்த போதிலும் உண்மையில் அவர் செல்லத்தைத் தான் தேடிக்கொண்டு திரிகிறார். அனேகமாய் திருவீரராஜ பட்டணத்தில் அவர் போய் விசாரிக்காத வீடே கிடையாதென்றே சொல்லலாம். அவ்வளவு கஷ்டப்பட்டுத் தேடிவிட்டார்.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—தாங்கள் சற்று நேரத்திற்கு முன்பு செல்லம் திருவீர ராஜபட்டணத்தில் தானே இருப்பதாகச் சொன்னீர்கள்.

கோவிந்தன்:—ஆம். அவ்வீட்டிலும் தேடினார். ஆனால் அவ்வீட்டில் செல்லம் இருக்கக் கூடுமென்று கனவிலும் காணமுடியாத வீடாகையால் வெறும் விசாரிப்போடு நிறுத்திவிட்டார். சரிவர உள் ஆராய்ந்து பார்க்கவில்லை.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—தாங்கள் இவ்விஷயங்களைத் திருப்திகரமாய் முடித்தபின்னராவது ம-ா-ஸ்ரீ ஸ்ரீனிவாசலு ராஜு காரின் பிரேதத்தின் அபூர்வ காணாமையைப்பற்றி விசாரிப்பதாய் வாக்களிக்கிறீர்களா? அவர்கள் தங்களுக்கு சிறந்த நண்பரென்று எல்லோரும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அப்படியிருந்தும், அவர் பிரேதம் காணாமற் போனதைப்பற்றி தாங்கள் சிறிதும் கவனம் செலுத்தித் தேடாமல் இதர விஷயங்களில் தங்கள் கவனத்தைச் செலுத்துவது எனக்கு மிகவும் ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. நாளை ஒருக்கால் எனக்கும் இப்பேர்ப்பட்ட அபாயம் ஏதாவது நேரிட்டு விட்டால் "அவர் தான் இறந்து விட்டாரே! இனி அதைப்பற்றிய கவலை கொண்டு தேடுவதில் என்ன பிரயோஜனம்" என்று பராமுகமாயிருந்து விடுவீர்களோ யென்ற பயமும் என் மனதில் உதிக்கிறது.

கோவிந்தன்:—இவ்வாறு பேசினால் எனக்குக் கோபம் வருமென நினைத்துப் பேசுகிறீர்களா? இருக்கட்டும். அதைப்பற்றி சிந்தனையில்லை; ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலுராஜு காரின் பிரேதத்தை கண்டு பிடிப்பதென்பது இப்போது என்னைப்படைத்த பிரம்மதேவனாலும் சாத்யமில்லையென எனக்குத்திட்டமாய்த் தெரிந்திருக்கும் போது நான் அவ்விஷயத்தில் கவனம் செலுத்துவதிலாவது அல்லது அவ்வாறு செய்வதாக அபினயம் செய்வதிலாவது எவ்வித உபகார

மாவது உளதா? தாங்கள் இவ்விஷயத்தைப்பற்றி முன்கேட்டபோதே நான் திட்டமாய் பதில் கொடுத்திருக்கிறேன். வண்டி புறப்படும் நேரம் சமீபிக்கிறது. இதுவரையில் தங்களிடம் நான் எவ்வித உபகாரமும் பெற்றதாக எனக்கு ஞாபகமில்லை. இப்போது ஓர் உதவி கேட்கப்போகிறேன். அதைக்கொடுப்பீர்களா? மாட்டீர்களா?

டெப்டி மாஜிஸ்டிரேட்:—தாங்கள் கேட்கும் உதவி இப்போதே கொடுத்து விட்டேனெனத் திட்டமாய் நம்பலாம்.

கோவிந்தன்:—தசரத சக்ரவர்த்தி கைகேயிக்கு வரம் கொடுத்து விட்டு அதை நிறைவேற்றியதில் அவர் தன் பிராணனையே இழக்கும்படி நேரிட்டது. ஆகையால் நான் கேட்கப்போவது இன்னதென்றறியு முன்னரே வாக்குக் கொடுத்து விட்டீர்களே! பின்னால் இதிலிருந்து என்னென்ன சங்கடங்கள் ஏற்படுமோ?

டெப்டி மாஜிஸ்டிரேட்:—தங்களுடைய யோக்யதாம்சங்களை நன்குணர்ந்த நான் ஏன் பயப்பட வேண்டும். தாங்களும் என்னைப் போல் திடமான மனசாக்ஷியுள்ளவர்களாகையால் தாங்கள் நியாய விரோதமாய் எதையும் செய்யும்படி கேட்கமாட்டீர்களென்று எனக்குத் தெரியும்; ஆகையால் நான் பயப்படத் தேவையில்லை.

கோவிந்தன்:—கிரமம் அக்கிரமம், நியாயம் அநியாயம், என்பவைகளெல்லாம் சின்னஞ் சிறு பதங்கள்தான். அவரவர்கள் மனப்பான்மைக் கேற்றவாறு கிரமம் அக்கிரமமாகவும், அக்கிரமம் கிரமமாகவும் தோற்றலாம். திருஷ்டாந்தரமாக சுந்தரராஜு திருவீரராஜபட்டணத்தில் கலகம் நடந்ததாகச் சொல்லும் நாளில் திருநெல்வேலி சப்மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் மத்யானம் ஒரு மணி வரையும் சாக்ஷி சொல்லிக் கொண்டிருந்ததாகவும் மீண்டும் மூன்று மணி முதல் ஐந்துமணி வரையில் ஷை கோர்ட்டிலேயே சாக்ஷி சொன்னதாகவும் சர்க்கார் ரிக்கார்டுகள் இருப்பதோடு, அவர்கள் வார்த்தைகளில் சந்தேகம் வைக்க இடமில்லாத பல பெரிய வக்கீல்களும், கனவான்களும் சப் மாஜிஸ்டிரேட்டும் பிரமாண வாக்கு மூலங்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்த சாக்ஷியத்தின் பேரில் எவராலாவது சுந்தரராஜு திருவீர ராஜபட்டணத்தில் மத்யானம் இரண்டு மணி சமயத்தில் கலகம் செய்தாரென்று சொல்ல முடியுமா? அதவா தாங்கள் அவர்களைத் தண்டித்தாலும் ஹைகோர்ட்டில் அத்தண்டனை ஊர்ஜிதப்படுமா? ஆகையால் தாங்கள் தங்கள் மனதில் தோன்றும் அல்லது நடந்திருக்கக்கூடுமென்று நம்பும் விஷயங்களைத்

தள்ளி சாக்ஷியத்தின் பேரில் உண்மையாய் ஏற்படுகிறபடி அவரைக் குற்றவாளியல்லவென்று விடுதலை செய்வதைத் தவிர வேறு மார்க்கம் தங்களுக்குக் கிடைக்காது. இந்த உதவி தான் தங்களைக் கேட்கப் போகிறேன். தாங்கள் கொடுத்தே தீரவேண்டும்.

என்றார். இதற்குள்ளாக ரெயில் புறப்படும் முதல் மணியடித்து விட்டது. "நான் வண்டிக்குப் போகும் நேரம் ஆகிவிட்டது. எல்லா விஷயங்களிலும் தங்கள் மனதிற்குத் திருப்தியாகும்படி இன்னும் இரண்டு தினங்களில் செய்யக்கூடுமென நம்புகிறேன். தயவு செய்து நாளை இரவு திருவீரராஜபட்டணம் வாருங்கள்; எல்லாம் ஈஸ்வராக்ஞையின்படி நேர்மையாய் நடந்து விடும்" என்று சொல்லும் போதே இரண்டாவது மணியும் அடித்து ரெயில் புறப்படவே கோவிந்தன் ஓடி ரெயிலேறிச் சென்றார். சற்று நேரம் டெப்டி மாஜிஸ்டிரேட் சூத்திரப் பாவைபோல் அசைவற்று நின்று அப்பால் திகைத்த முகத்துடன் தன் இல்லம் சென்றார். கோவிந்தன் தனது சாமான்கள் வைத்திருந்த வண்டியில் ஏறியதும் ஸ்நான அறைக்குத் தன் பெட்டியுடன் சென்று கால் மணி நேரத்தில் வேறு விதமான திருநெல்வேலி ஜில்லா வாசியின் ரூபத்துடன் தனது ஆசனத்தில் அமர்ந்தார். அதனால் தான் ஒட்டலி கரடி திருவீரராஜ பட்டணத்தில் தேடியும் கண்டு கொள்ளக்கூடவில்லை. அவர் கடைசியாக திருவீரராஜபட்டணம் ஸ்டேஷனிலிருந்து வெளி வரும்போதே ஒட்டலி கரடியைக் கொளம்பு துப்பறிவோர் இருவர் பின் பற்றிச் செல்வதையும், கொளம்புத் தலைமைத் துப்பறிபவன் மாறுரூபத்துடன் ரோட்டில் நின்று தன்னைக் கவனித்துப் பின்பற்றி வர உத்தேசித்து ஜலபாதைக்கு உட்கார்ந்ததைப்போல் அபினயிப்பதையும் கண்டவுடனே, தன் மேல் சந்தேகம் கொள்ளாமலிருப்பதற்காகவே தைரியமாய் அவரிடம் சென்று மாற்று குரலில் அவரை நெருப்புக் குச்சி கேட்டுவிட்டு காளி கோவிலுக்கு வழி கேட்டார். அப்படியும் தன் மேல் சற்று சந்தேகம் கொண்டு காளி கோவிலுக்கு வரவும் அங்கு சற்று நேரம் இருந்து தலைமைத் துப்பறிபவன் சென்ற பின் காமாக்ஷிராவ் வீட்டிற்குச் சென்று அவரிடமிருந்து கொண்டப்ப ரெட்டி வீட்டுக்கு சாமி ரெட்டி வந்திருக்கும் விஷயம் தெரிந்த உடனே இன்றைய இரவும் மறு நாளும் அவர்களிருவரில் ஒருவரையாவது விடாது பின் பற்றிப் பார்க்க வேண்டுமென்றும் அனேகமாய் 2 தினங்களில் உண்மை வெளிப்படுமென்றும் சொல்லி அவசரமா

யனுப்பினர். அங்கு அவசரமாய்ச் சென்ற காமாக்ஷிராவ் தான் இடையில் பாலரங்கராஜுவின் வீட்டில் செல்லத்தின் சத்தம் கேட்டதும் உள்ளே சென்று பார்த்து அவளிடம் அவமானப்பட்டு, அவளால் புறக்கணிக்கப்பட்ட பின், துப்பறியும் கோவிந்தன் தன்னை அவசரமாய் அனுப்பிய விஷயம் ஞாபகந்துவர உடனே ஓட்டமாய்ச் சென்றார். காமாக்ஷிராவ் அங்கு போகுமுன் ஓட்டலியும் கரடியும், அவரைப் பின்பற்றி வந்த கொளம்பு துப்பறிவோரும், அப்பால் காவல் தேவமாரும் சென்றுவிட்டதால் அவ்விஷயங்களெல்லாம் காமாக்ஷிராவுக்குத் தெரியாது. தேவமார் திரும்பி வந்து சந்தோஷமாய் உரத்த குரலில் தாங்கள் செய்த அபார காரியாதிகளைத் தெரிவித்ததிலிருந்துதான் மூவர் சிறையிடப்பட்டதும் ஓட்டலி கரடி சௌக்கியமாய் டிராம் சேர்ந்த விஷயமும் அவர்கள் பேசிக்கொண்டதிலிருந்து தெரிய வந்தது. இன்னும் என்ன நடக்கிறதென்று பார்ப்போமா அல்லது ஓட்டலி கரடி தப்பி ஓடிப்போகும் விஷயம் கோவிந்தனிடம் தெரிவிப்பதா எனத் தனக்குள் ஆலோசித்துக் கொண்டு உடனே அவரிடம் சென்று தெரிவிப்பதே நலமென நினைத்துப் போக, காமாக்ஷிராவைக் கோவிந்தன் கோபித்து "உனக்குச் சொன்ன வேலையை நீ கவனியாமல் மற்றவைகளைப் பற்றிய சிந்தனை உனக்கு வேண்டாம். ஓடிப்போ ஜல்தி" யென்று சொல்லி அனுப்பிவிட்டார். அவர்போய் அங்கு மறைவாய்க் காவலிருந்தார்.

நிற்க, சுப்பராஜு அதிகாலை ஐந்து மணிக்கு எழுந்து வந்த உடனே அவர்களிடம் ஓர் வேலைக்காரன் ஓடி வந்து பத்து தினங்களுக்கு முன்னால் யாரிடமும் சொல்லாமல் மாயமாய் மறைந்து போன பெரிய எஜமானரின் சொந்த வேலைக்காரனாகிய சொள்ள மாடத்தேவன் அப்போது தான் எங்கிருந்தோ வந்ததாகச் சொன்னான். அவர்கள் அவனைக் கூப்பிட்டு விசாரிக்க பெரிய எசமான் காணாமற்போனது முதல் தனது மனம் ஒரு நிலையில்லாததால் தான் திருச்செந்தூர் சென்று கால்மண்டலம் சுப்பய்யா சன்னதியில் உபாசனம் இருந்து வந்ததாகவும், இராத்திரி தூங்கும்போது சுப்பய்யா பண்டார வேஷத்துடன் வந்து தன்னைத் தட்டி எழுப்பி "சொள்ள மாடத்தேவரே! நீர் ஊருக்குப் போய்ச் சேரும்; உமது மனக்குறை தீர்ந்து விடும்" என்று சொன்னது போலிருந்ததென்றும் ஆகையால் உடனே வீட்டிற்கு வந்து விட்டதாகவும் சொன்னான். ஒவ்வொரு வேலைக்காரரும் அவனை சுற்றிக் கொண்டு

ஏதேதோ கேட்க அவன் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பதில் சொல்லிக் கொண்டு வந்தான். இந்த கூச்சலைக் கேட்ட ஜெயலக்ஷிமி எழுந்து வந்து என்ன கூச்சலென்று கேட்க, அவர்கள் நடந்ததைச் சொல்ல "அந்த அரைப் பைத்தியக்காரன் பேச்சுகளைக் கேட்டுக் கொண்டிருந்தால் உங்கள் வேலைகள் என்னவாவது? எல்லோரும் அவரவர்கள் வேலைகளைச் செய்யப் போங்கள்" என்று அதட்டின உடன் அவரவர்கள் வேலைகளைப் பார்க்கச் சென்றார்கள். ஜெயலக்ஷிமி சினந்த முகத்துடன் சொள்ள மாடத்தேவனைப் பார்த்துத் தன் பின் வரும்படி ஜாடை காட்டித் தன் அறைக்குள் சென்றாள். சொள்ள மாடத்தேவன் பின்னாலேயே சென்றான். அவள் அப்போது கடுகடுத்துக் கொண்டு "உன் வேலையை விட்டு விட்டு இங்கே ஏன் வந்தாய்; உன்னைப் போகும்படி யார் அனுமதிகொடுத்தார்கள்? என்று கேட்டாள். சொள்ளமாடத்தேவன் அவள் காதுக்குமட்டும் கேட்கும்படி ஏதோ இரகசியமாய்ச் சொல்லவே, அவள் அதிக ஆச்சரியப்பட்டு அவன் முகத்தை உற்று நோக்கிப் பார்த்து விட்டுப் புன் சிரிப்புச் சிரித்தாள். உடனே சொள்ளமாடத்தேவன் தனது வேலைகளைக் கவனிக்கப் போய்விட ஜெயலக்ஷிமி ஸ்னானம் செய்து பூஜை முடித்துக் காலை ஆகாரம் அருந்திவிட்டுப் பாலரங்கராஜு இல்லம் சென்றாள்.

காந்திமதியா பிள்ளையை திருநெல்வேலி சப்ஜெயிலிலிருந்து விடுதலை செய்த உடனே அவ்விஷயம் தந்தி மூலமாய் சாமி ரெட்டியாருக்கு அவரால் அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தவர் தெரிவித்ததோடு காந்திமதியா பிள்ளை என்ன செய்கிறார்? எங்கு செல்கிறாரென்று கவனித்து கூடவே வருவதாகவும் அத்தந்தியில் கண்டிருந்தது. இவ்விஷயத்தைப் பற்றி பேசுவதற்காகவே சாமி ரெட்டியார் திருவீராஜபட்டணம் கொண்டப்ப ரெட்டியாரிடம் வந்திருந்தார். அப்போது தான் ஓட்டலி கரடி வந்ததும், மற்ற விஷயங்கள் நடந்தேறியதும். அதிகாலை வண்டியில் காந்திமதியா பிள்ளை திருநெல்வேலியை விட்டு புறப்பட்டு 10 மணிக்குத் திருவீராஜபட்டணம் வந்து சேர்ந்தார். அவரைப் பின் பற்றி அவர் நிழல் போல் சாமி ரெட்டியின் ஆள் கூடவே வந்து காந்திமதியா பிள்ளை திருவீராஜ பட்டணம் சேர்ந்த விவரம் தெரிவித்தார். அப்போது போலீஸ் கொட்டடியில் அடைத்திருக்கும் ஓட்டலி கரடி எழுதியனுப்பிய

கடிதம் ஒன்று சாமி ரெட்டியாரிடம் ஒருவரால் கொண்டு வந்து கொடுக்கப்பட்டது. சாமி ரெட்டியார் அதைப் பிரித்துப் பார்க்க அதில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

கடிதம்

ம-ா-ா-ஸ்ரீ சாமி ரெட்டியாரவர்களுக்கு,
திருவீராராஜபட்டணம்.

ஐயா,

இன்று ஜாமம் மூன்று மணிக்கு நாங்கள் டிராம் வண்டியில் ஏறப்போகும் போது எங்களுடன் வண்டியேற வந்திருந்தவர்களென்று நாங்கள் கருதிய இருவர் எங்கள் இருவருக்கும் சட்டென்று கை விலங்குகள் மாட்டினார்கள். அதே சமயத்தில் எங்களிருவரையும் இரண்டு பேர்கள் பின்னாலிருந்து சேர்த்துக் கட்டிக் கொண்டனர். விலங்குகள் மாட்டிய இருவர் எங்களுடைய ஜோப்புகளிலிருந்த கைத் துப்பாக்கிகளையும், கத்திகளையும் எடுத்துக் கொண்டனர். நல்ல வேளையாய் உள் ஜோப்பியில் வைத்திருந்த நோட்டுகளை எடுக்கவில்லை. மேற் சொன்ன விஷயங்களெல்லாம் கண் மூடி முழிப்பதற்குள் நடந்தேறி விட்டதாலும், ஜனங்கள் டிராம் ஏறும் சந்தடியில் அவரவர்கள் தங்கள் தங்கள் காரியாதிகளைக் கவனித்ததாலும் நாங்கள் கைதியாக்கப் பட்டதை எவரும் கவனிக்கவில்லை. எங்களைப் பிடித்தவர்களைத் தள்ளி விட்டு ஓட முடியுமா எனப் பார்த்தோம். துப்பாக்கிகள் சகிதம் 8 போலீசார் சுற்றிக்கொண்டிருக்கக் கண்டதும் மூச்சுவிடாமல் போலீஸ் ஸ்டேஷனிற்கு கூடவே சென்றோம். இக்கடிதம் இரகசியமாய்த் தங்களிடம் கொண்டு வந்து சேர்ப்பதற்காக எங்களுக்குக் காவலிருக்கும் போலீசாருக்கு ரூபாய் இருநூறு கொடுத்து அனுப்பியிருக்கிறோம். பெருந்தொகை கொடுப்பதாகில் எங்களைத் தப்ப விட்டு விடுவார்கள் போல் தெரிகிறது. இன்று மாலைக்குள் நடந்தால் தான் முடிக்கலாமென்றும் அப்பால் திருநெல்வேலியிலிருந்து டெப்டிமாஜிஸ்டிரேட்டு வருவதாகவும் அவர் வந்து விட்டால் எதுவும் செய்ய சாத்யப்படாதென்றும் தெரிகிறது. ஜெயிலுக்குப் போவதாகில் நாங்கள் இருவர் மட்டும் போகமாட்டோமென்றும் குறைந்தது ஐந்து பேராவது போகும்படி நேரிடுமென்றும் அறிந்து கொள்ளுங்கள். உடனே வேண்டிய ஏற்பாடுகள் செய்து எங்களை விடுவிக்கப் பிரயத்தனம் செய்யுங்கள். இன்றுமாலை வரை எங்களை துண்டு துண்டாக வெட்டி விட்டாலும்

சரிதான்; எங்கள் வாயிலிருந்து ஒருவார்த்தையாவது வாங்க எவராலும் முடியாது. அப்பால் ஒன்று கூட ஒளிக்காமல் உண்மையைச் சொல்லி விடுவது தான் நலமென்று நினைக்கிறோம். ஏனென்றால் உண்மையைச் சொல்லி விட்டால் டேப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள் எங்களை சாக்ஷிகளாக எடுத்துக் கொண்டு விட்டு விடுவாரென்றும் பேசிக் கொள்ளுகிறார்கள். முன் இரும்புப்பெட்டியை உடைத்து பத்திரங்களெடுப்பதற்காக வல்லவென்றும் ஐம்பதாயிரம் ரூபாய் சொத்து திருடப்பட்டதென்றும் பேசிக் கொள்ளுகிறார்கள். அதில் பத்தாயிரம் ரூபாய் கொடுத்தால் விட்டு விடுவார்கள் போல் தோன்றுகிறது. அப்படிச் செய்வதில் என்ன ஆட்சேபனை? செய்வன செய்து உடனே எங்களை விடுவியுங்கள். இல்லா விட்டால் எங்களுடன் வரத் தயாராகுங்கள். எது செய்ய உத்தேசம்?

ஒட்டலி. கரடி.

என்று எழுதப்பட்டிருந்தது. இதை சாமி ரெட்டியார் வாசித்துப்பார்த்து கொண்டப்பரெட்டியாரிடம் கொடுத்தார். இருவரும் யோசித்து இக்கடிதத்தைக் காந்திமதியா பிள்ளைக்கு அனுப்புவதெனத் தீர்மானித்து திருநெல்வேலியிலிருந்து வந்தவர்களிடம் கொடுத்து காந்திமதியா பிள்ளை அவர்களிடம் கொடுக்கும்படி அனுப்பினார்கள். சுப்பராஜு வீட்டிற்கு அவர் சென்றதும் அங்கு காவலிருந்த சொள்ளமாடத்தேவன் "என்ன ஜோலியாய் யாரைப் பார்க்க வந்தீர்கள்" என்றுகேட்டான். அவசர ஜோலியாக காந்திமதியா பிள்ளையைப் பார்க்கவந்ததாகச் சொன்னான். காந்திமதியா பிள்ளை வந்த அலுப்புத் தீரப்படுத்திருப்பதாகவும் அவரை யாரும் எழுப்பக் கூடாதென்றும் சொன்னார். தாம் ஒரு கடிதம் கொண்டு வந்ததாகவும் அவர் கையிலேயே அக்கடிதம் கொடுக்கவேண்டுமென்றும் அதுவும் அவசரமான கடிதமென்றும் சொன்னார். பெரிய எஜமானவர்கள் காணமற்போனது முதல் அன்னியர்கள் யாரையும் உள்ளே விடக்கூடாதென்று கண்டிப்பாய் உத்தரவு கொடுத்திருப்பதாகவும் இஷ்டமிருந்து தன்னிடம் கடிதம் கொடுத்தால் அவர் எழுந்தவுடன் கொடுப்பதாகவும், இல்லாவிட்டால் அவரும் அவர் கடிதமும் உடனே வெளியே போய் விட வேண்டுமென்றும் கணக்கப் பிள்ளைவெளியில் வரும்போது பார்த்துப் பேசிக் கொள்ளும்படியும் கண்டிப்பாய்ச் சொன்னதோடு அப்பால் அங்கிருந்தால் அவன் கல்த்தா கொடுத்தனுப்புவான் போலிருக்கக் கண்டு, அந்த ஆள் "நான்

தங்களிடம் அக்கடிதத்தைக் கொடுத்தால் கட்டாயமாய் அவர் எழுத்தவுடன் கொடுப்பீர்களா?" என்று கேட்டார். "சுப்பையா சத்தியமாய்க் கொடுத்து விடுகிறேன்" என்றதும் வேறு வழியில்லாததால் அவரிடம் கொடுத்தார். அவரை எதிர் வீட்டுத் திண்ணையில் போய் உட்கார்ந்திருக்கும்படியும் அவர் எழுந்திருந்து விட்டாரா என்று பார்த்து கடிதம் கொடுத்து வருவதாகச் சொல்லி சொள்ள மாடத்தேவன் உள்ளே சென்றான். சுமார் கால்மணி நேரம் பொறுத்து வந்து ஜவாபு இல்லையென்று சொன்னதாகவும் ஜன்னல் எதிரில் வந்தால் அவர் மாடிமேல் நின்று பேசுவதாக காந்திமதியா பிள்ளை சொன்னதாகவும் சொன்னான். அப்படியே அவர் மாடி ஜன்னலுக்கு எதிராகப் போய் நிற்க காந்திமதியா பிள்ளை அக்கடிதத்தைக் காட்டி எடுத்து வந்தவர் நீர் தானா என்று ஜாடைகாட்டினார். அவர் ஆம் என்று சொன்னார். சூரியனை காட்டி மேல் பக்கத்தைக் காட்டினார். மாலை வருவதாகச் சொல்லுகிறாரென்று அர்த்தம் செய்து கொண்டு அவர் சென்றார். அவர் சென்றபின் காந்திமதியா பிள்ளை ஜெயலக்ஷ்மியம்மாளைப் பார்க்க விரும்புவதாகச் சொள்ள மாடத்தேவனிடம் சொன்னார். பெரிய எஜமான் இறந்தது முதல் அந்தம்மாள் வீட்டில் தங்குவதேயில்லை யென்றும் என்னேரமும் பாலரங்கராஜுவுடன் தான் பேசி விளையாடியிருப்பதாகச் சொன்னார். காந்திமதியா பிள்ளையின் முகம் இருண்டது. பெரிய எஜமான் இருந்தால் இவ்வாறு செய்யவிடுவாரா சம்மதிப்பாரா என்று கேட்டு விட்டு, கடைக்குட்டி எஜமானனைக் காணவேண்டு மென்றார். அவர் ஏதோ ஜோலியாய் திருச்செந்தூர் சென்றிருப்பதாகவும் அனேகமாய் அன்றிரவு தான் வருவாரென்றும் சொன்னார். சரி நல்லதாயிற்றென்று மனதில் எண்ணிக் கொண்டு தன் அறைக்குள் சென்று அங்கிருந்து ம-ா-ா-ஸ்ரீ ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் அறைக்குள் சென்று இரும்பு அங்கியில் சாவி போட்டுத் திறந்து உள்ளே சென்றதும் கதவை இழுத்து மூடி பூட்டிக் கொண்டு மெதுவாக இரகசிய வழியிலிருக்கும் படிகளின் வழியாய் இறங்கினார். அப்போது தமக்கு முன்னால் ஏதோ நடப்பது போல் தோன்றிற்று. காந்திமதியா பிள்ளைக்கு இறந்து போன தனது எஜமானின் பிசாசு அங்கு உலாவுகிறதோ என்னமோ என்ற பயம் ஏற்பட்டு ஸ்னானம் செய்தது போல் உடம்பு முழுவதும் வேர்வை வடிய ஆரம்பித்ததோடு உடலும் நடுக்கம் கொடுத்து விட்டது. சற்று நேரம்

நிதானித்துப் பார்த்தார். ஒன்றும் கேட்கவில்லை. தன் பயம் தான் யாரோ நடப்பது போல் தோன்றிற்றென நினைத்து மறுபடியும் நடந்துபோய் மத்தியிலிருக்கும் இரகசிய அறையின் பூட்டைத்திறந்து செல்லத்தை ம-ா-ா-ஸ்ரீ ஸ்ரீனிவாசலு ராஜு அடைத்து வைத்திருந்த அறை சேர்ந்ததும் காந்திமதியாபிள்ளை, காந்த விளக்கைக்கொளுத்தி ஒருமூலையில் மண்ணைத் தோண்டினார். அங்கிருந்து டெப்டி கலெக்டர் மாதவராஜு அவர்கள் வீட்டில் திருடிக்கொண்டு வந்த நகைகள், ரொக்கம், பாங்கி நோட்டுகள், முதலியவற்றை ஒவ்வொன்றாய் எடுத்து சரி பார்த்து வைத்து விட்டு இன்னும் சற்று கீழே தோண்டி ஜெயலக்ஷிமியால் மறைத்து பெட்டியில் வைக்கப்பட்டிருந்த பாலரங்கராஜுவின் கட்டாரியைக் கையிலெடுத்தார். அப்போது அவருக்கு பின்னால்“ஹா,ஹா,ஹா” என்று உரத்த குரலில் ஒருவர் கூவியது போலிருந்தது. குகையில் அவ்வாறு கூவிய உடனே எதிரொலிகளால் அச்சத்தம் மிகவும் பயங்கரமாகக் கேட்டது. இயற்கையாகவே பயத்தால் தளர்வடைந்திருந்த காந்திமதியா பிள்ளையின் நரம்புகள் அக்கூச்சல் கேட்கவே மிகவும் பீதியடைந்து மூர்ச்சையாகும் தருணத்திலிருக்கும் போது யாரோ அவர் தொண்டையைப் பிடித்து அமுக்கியதாகத் தோன்றிற்று. அவரால் கூடியவரையில் திமிறிப் பார்த்தார். தன் கழுத்தைப் பிடித்து அமுக்கும் ஒரு விரலை அசைக்கக் கூட அவரால் இயலவில்லை. அப்போது தன் கழுத்தைப் பிடித்தது மனிதனுடைய கையல்லவென்றும் தன் எஜமானரின் பிசாசின் கையாய்த் தானிருக்க வேண்டுமென்றும் அவர் மனதில் பட்டது. அப்போதே பயத்தாலோ, அல்லது கழுத்தை இறுக்கியதாலோ காந்திமதியா பிள்ளை மூர்ச்சித்துச் சோர்ந்து விழுந்து விட்டார். அப்பால் அவருக்குப் பிரக்ஞை வந்து பார்த்த போது தன தரையில் தனது படுக்கையில் படுத்திருக்கக் கண்டார். இது கனவா, நினைவா உண்மையில் நடந்த விஷயமா எனக் கண்ணாடியில் பார்க்க, தனது கழுத்தை எவரோ பிடித்து அமுக்கின அடையாளம் செவசெவ என்று தெரிந்தது. அப்போது தான், தான், ஒருமாதிரியாய் இருப்பதற்கு அவ்வலியே காரணமென்று கண்டு கொண்டார். மாதவராஜு வீட்டிலிருந்து திருடப்பட்ட நகைகள், பாலரங்கராஜுவின் கட்டாரி, முதலியன தான்வைத்து விட்டு வந்த அந்த இரகசிய அறையில் இருக்கின்றனவா அல்லது தன்னைக் கழுத்தைப் பிடித்து அமுக்கிய பிசாசால் எடுத்துச் செல்லப்பட்டதா என்று ஐயுற்றார்.

பிசாசு, நகைகள், இரும்பால் செய்த கட்டாரி, முதலியவற்றைத் தொடாதே. ஆகையால் திட்டமாய் அங்கு தான் இருக்கும் என நினைத்தார். போய் பார்த்து விட்டு வரலாமா என நினைத்து எழுந்தார். கால்கள் படபடவென்று உதறியது, உதடுகள் அடித்துக் கொண்டன. பயம் நெஞ்சடைத்தது. அப்படியே உட்கார்ந்து விட்டார். தன் கூட்டாளிகளிடம் போய் என்ன சொல்வது என்று யோசித்தார். அவர்களையும் அழைத்துக் கொண்டு வந்து இன்றிரவு சோதித்து விடுவதெனவும் அங்கு அவைகள் இருந்தால் தான் எல்லாம் நன்மையாய் முடியுமென்றும் இல்லாவிட்டால் தனது கூட்டாளிகள் தன் வார்த்தையை நம்பாமல் அங்கேயே தன்னைக்கொன்று புதைத்துவிட்டால் என் செய்வது என்றும் ஒன்றும் தோன்றாமல் திகைத்துக் கொண்டிருந்தார். சாமிரெட்டியும் கொண்டப்ப ரெட்டியும் காலைவரையில் காந்திமதியா பிள்ளை வருவார் வருவார் என எதிர்பார்த்து ஏமார்ந்து, மீண்டும் சாமி ரெட்டியாரை "நீங்கள் உடனே புறப்பட்டு வருகிறீர்களா? அல்லது நாங்கள் அங்கு வருவதா எனக் கேட்டு ஒரு காகிதம் எழுதி அனுப்பினர். மூன் கடிதம் கொண்டு வந்தவரை அக்கடிதத்தையும் எடுத்து வந்து காந்திமதியா பிள்ளையைத் தேடிவர, அவர் வரவை அவன் எதிர் பார்த்து நிற்பதைப்போல் நின்ற சொள்ளமாடத் தேவன் அக்கடிதத்தை வாங்கிக் கொண்டுபோய் அவரிடம் கொடுப்பதாய்ச் சொல்லி உள்ளே எடுத்துச் சென்றார். சுமார் பத்து நிமிஷங்களில் காந்திமதியா பிள்ளை வீட்டை விட்டுப் புறப்பட்டு கடிதம் கொண்டுவந்தவரை அழைத்துக்கொண்டு சாமிரெட்டியார் இருக்கும் இடம் சென்றதும்,

காந்திமதியா பிள்ளை:—நான் இப்போது இங்கு வரும்போது காமாக்ஷிராவ் பக்கத்துவீட்டுப் பக்கத்திலிருக்கும் உதயமர மறைவில் நின்றுகொண்டு தலையைத் தூக்கிப் பார்த்துக் கவனிக்கக் கண்டேன். அதை நீங்கள் கவனித்தீர்களா? இல்லையா?

சாமிரெட்டி:—கொளம்பிலிருந்துவந்த மூன்று துப்பறிவோர் அவ்வாறு செய்வதாகக் கண்டுபிடித்து அவர்களைப் பிடித்து அடைத்து வைத்திருக்கிறோம். இந்தக் காமாக்ஷிராவ் பேரில் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டாலும் அவன் செல்லத்தின் ஏக்கத்தில் இவ்வாறு அலைகிறானென்று நினைத்து அவனைப்பற்றி எவ்வித ஏற்பாடும் செய்யவில்லை. நமது கஷ்டங்களுக்கெல்லாம் இந்தக் காமாக்ஷி

ராவ்தானே காரண கர்த்தா! ஏன்? அவனை எப்படியாவது அதிகாரிகளிடத்தில் அவமான மடையும்படி செய்ய வேண்டுமென எண்ணி தானே முதலில் 137 சவரன்களை (பவுன்களை) சடலேயின் கீழ் புதைத்துவைத்து மொட்டைக் கடிதங்கள் எழுதினேம். அது வரையில் எவ்வித கெடுதல் காரியாதிகளும் செய்தறியாத நான், எங்கள் எஜமானரின் குடும்பத்தின் எதிரிகளாகிய உங்களுடன் சேர்ந்து பேசியதில் இவ்வாறு செய்யலாம் அவ்வாறு செய்வோம், பின்னுல் சமபாகமாய்ப் போட்டுக் கொள்வோம், இப்போது 137 பவுன்கள் வாங்க பொய்க் கணக்கு எழுதி எஜமானின் ரூபாய்கள் எடுத்து வந்தால் ஜல்தியாய் ஈடுசெய்யலாமென்று சொன்னீர்கள். அப்பால் குதிரைப் பந்தயத்தில் கட்டினுல் பெருந்துகைகள் பெறக்கூடுமென்று மேன்மேலும் பொய்க் கணக்குகள் எழுதச்சொல்லி ரூபாய் பத்தாயிரத்துக்கு மேல் மோசம் செய்யும்படி செய்து விட்டீர்கள்; இதற்கிடையில் மாதவராஜுலு வீட்டில் கொள்ளையடித்தால் பர்த்திசெய்து விடலாமென்று சொல்லி ஓட்டலி காடியை அழைத்து வந்து திருடச் செய்து அந்த நகைகளை விற்று கணக்குகளை ஈடு செய்வதற்கு முன்னுல் பெரிய எஜமானர் திருட்டுக் கணக்குகளைக் கண்டு பிடித்து விட்டாரே என்ன செய்வதென்று கேட்க, ஒரு மருந்தைக் கொடுத்து அவர் சாப்பிடும் பாலில் போட்டு விட்டால் மயக்கமடைந்து விழுந்து விடுவாரென்றும் அப்போது அவர் கழுத்தை இறுக்கிக் கொன்று விட்டால் ஒன்றும் வெளிக்கு வராதென்றும் சொல்லி புத்தி புகட்டினீர்கள். நான் அவ்வாறு செய்ததோடு, ஒரு பாவமுமறியாத ஜெயம்மாள் பேரில் சந்தேகங்கள் உண்டாகும் வண்ணம் ஓயிலில் கையெழுத்துப் போடும் இடத்தில் கையெழுத்துப் போடப் போகும்போது பேனவை இழுத்து விட்ட மாதிரி இழுத்ததோடு, அவள் கலியாணம் செய்ய விரும்பும் பாலரங்கராஜுலு பேரில் சந்தேக முண்டாகும்படி அவரது கட்டாரியால் குத்தவும் செய்தீர்கள். அக்கட்டாரியால் குத்தும்போது அவர் இறந்துபோய் விட்டால் இரத்தம் ஒழுகாமற் போனதோடு குத்துப்பட்ட இடமும் தெரியாமற் போய் விட்டதாலும் பாலரங்கராஜா பேசி விட்டு சென்ற பின் மூவராவது பேசியதாக ருஜுவாகி விட்டதாலும் கட்டாரியையே மறைக்கும்படி சொன்னீர்கள். பல தலைமுறைகளாய் சம்பாதித்த நல்ல பேரும்போய் திருடனும், பொய்யனும், கொலைக்காரனும், எல்லாவற்றிற்கும் மேல் எஜமானத் துரோகியுமாக என்னை

ஆக்கிவிட்டீர்கள். இதற்கெல்லாம் காரணகர்த்தா இந்த காமாக்ஷி ராவாதலால் அவனைக் கொன்று விட்டு நான் செத்தாலும் எனக்குச் சற்று ஆறுதலுண்டாகும். இப்போது ஒவ்வொரு நிமிஷமும் என்னைப் போலீசார் பிடிக்க வருவதாகப் பயப்படுகிறேன். படுத்துறங்கினாலோ போலீசார் பிடித்துத் தண்டித்துக் கொலைக்களம் கொண்டு போவதாய் கனாக்காணுகிறேன். இனி இந்த ஜென்மத்தை வைத்திருப்பதில் உபகாரமில்லை.

சாமி ரெட்டி:—பிள்ளை அவாள்! நீங்கள் மெத்த தீரவானென்றல்லவா நினைத்தேன். நீங்கள் கோழை யென்று காண பெரிதும் வெட்கப்படுகிறேன். தாங்கள் நினைக்கிறபடி நமது விரோதி காமாக்ஷி ராவ் மட்டுமல்ல. இந்த காமாக்ஷிராவை இங்கு அனுப்பின காரணகர்த்தாவும், எனது சகோதரர் நான்குநேரி சப்ரிஜிஸ்டர் ஆபீசில் பத்திரம் ரிஜிஸ்டர் செய்யச் சென்றிருந்ததாக ரிகார்டு மூலமாயும் சாக்ஷிகள் மூலமாயும் எடுத்துக் கூறியும் முந்தின நாள் பிந்தின நாள் ரிஜிஸ்டர் ஆபீசுக்கு வந்த நேரங்களைக் குறுக்கு விசாரணையில் கேட்டு எழுதி அதற்கிடையில் திருவீராஜபட்டணம் சென்று வரப் போதிய சாவகாச மிருந்ததென்று காட்டி தண்டித்த அந்த டெப்டி மாஜிஸ்டிரேட்டை எப்படியாவது அமுக்க வேண்டுமென்று பல வாரங்களாய் பல மாதங்களாய்—ஏன் பல வருஷங்களாய் யோசனை செய்து கொண்டிருக்கிறோம். அவனை மண்ணைக் கவ்வும்படி செய்யக்கூடிய நாள் இன்றுதானென்ன நினைக்கிறேன். நம் இரு குடும்பங்களுக்கும் இடையூறுகளை விளைவித்த இக்காமாக்ஷி ராவையும், அவனை இங்கு அனுப்பிய டெப்டி மாஜிஸ்டிரேட்டையும் இவர்களுக்கனுசரணையாக வந்து இவ்வூரில் சுற்றிக் கொண்டிருக்கும் மூன்று கொளம்பு துப்பறிபவர்களையும் சேர்த்து இன்று காளிகா தேவிக்கு பலிகள் கொடுத்து விட்டு அப்பால் இரகசிய அறையில் புதைத்து வைத்திருக்கும் மாதவ ராஜுவின் வீட்டு ஐம்பதினாயிர ரூபாய் சொத்துகளையும் விற்று பங்கு போட்டுக் கொள்வோம். இன்று அந்த திருவல்லிக்கேணி திருட்டுப் பயல் துப்பறியும் கோவிந்தனையும் சேர்த்துப் பலி கொடுத்து விட்டால் அப்பால் நமக்கு பயமே கிடையாது.

காந்திமதியா பிள்ளை:—ஒட்டலி, காடி, ஆகிய இருவரை சென்னையிலிருந்து ஏமாற்றி அழைத்து வந்தவர் இன்னாரென்று தெரியவில்லை. அப்பால் அவர்களிருவரைப் பின்பற்றி வந்த கொளம்பு

துப்பறிவோர் மூவரையும் நீங்கள் சிறையிட்ட பின்பும் அவர்களைக் கைதியாக்கியவர்கள் யார்? என்ன குற்றத்தின் பேரில் கைதி செய்திருக்கிறார்கள் என்ற விவரம் தெரியவில்லை. மேலும் என் பெரிய எஜமானர் நீங்கலாக வேறு எவருக்கும் தெரியாத இரகசிய அறையில் புதைத்து வைத்த நகைகளையும் கட்டாரியையும் சரி பார்க்கும் போது அந்த அந்தகாரமான அறையில் பேய்க் கூச்சலிட்டு என் கழுத்தையும் இறுக்கி பிரக்ஞை தவறும்படி செய்தது யார்? மனிதனா? பேயா? பேயாகில் என்னை என் படுக்கையில் எவ்வாறு கொண்டு வந்து போட்டது! நமது நகைகள் ரூபாய்கள் இருக்கின்றனவோ அல்லது என் கழுத்தைப் பிடித்து இறுக்கிக் கொல்ல முயன்றது எடுத்துச் சென்றதோ யாரறிவார்கள். இனி உயிர் வைத்திருப்பதில் எவ்வித உபகாரமுமில்லை. நீங்கள் அந்த ஐந்து பேரை நாம் பலியிடலாமென்று நினைக்கிறீர்கள்; எனக்கு என் கழுத்தைப் பிடித்து இறுக்கியதே நம்மை பலியிட்டு விடுமென நான் பயப்படுகிறேன்.

சாமி ரெட்டி:—சீ. சீ. பேசாதிரு! இன்னும் சற்று நேரம் உன் அதிகப் பிரசங்கத்தைக் கேட்டால் நாங்களும் கோழைகளாய் விடுவோம் போலிருக்கிறது. இப்பயம் கொள்ளித் தனத்தை விட்டு நாம் உத்தேசித்த காரியத்தை செய்து முடிப்போம்.

என்று சொல்லி பின் பக்கத்தில் காவலிருக்கும் தேவமாரைக் கூப்பிட்டு, தான் வெளியே போகப் போவதாகவும் அந்த வேவு பார்த்து நிற்கும் காமாக்ஷிராவ் தன்னைப் பின் பற்றி வருவானென்றும் அவனுக்குத் தெரியாமல் வந்து ஆலமரத்தடியில் அவனைச் சுருக்குப் போட்டு சேந்தி கொளம்பு துப்பறிவோருடன் சேர்த்து விட்டு ஜல்தியாய் வரும்படியும் எல்லாவற்றையும் விட முக்கியமான வேலை அன்று செய்து முடிக்க வேண்டியிருக்கிறதென்றும் சொல்லிச் சென்றார். அவர்கள் எதிர்பார்த்தபடி காமாக்ஷிராவ் பின் தொடர்ந்து சென்றதில் ஆலமரத்தடியில் சென்றதும் சுருக்குப் போட்டிழுத்துக் கைதி செய்யப்பட்டு பூமிக்குக் குள்ளிருக்கும் மாட்டுத் தொழுவத்தில் கொண்டு போய் கொளும்பு துப்பறிவோருடன் சேர்க்கப்பட்டார்.

முந்திய நாள் தீர்மானித்தபடி டெப்டி மாஜிஸ்டிரேட் தனது வேலைகளை முடித்துக் கொண்டு இருட்டுக்கு முன்னால் திருவீராஜ பட்டணம் செல்ல உத்தேசித்தார். வியாஜ்யம் முடியுந் தருவாயிலி

ருந்தாலும் ஜல்தியாய் முடித்து விட்டு மூன்று மணிக்காவது புறப் படுவதென உத்தேசித்தார். ஆனால் இருதர வக்கீல்களும் போட்டி போட்டுக் கொண்டு நேரத்தை வீணாக்கியதில் கேஸ் மாலை ஆறு மணி வரையில் இழுத்து விட்டது. கடைசி ரெயில் சென்று விட்ட தால் மோட்டாரில் திருச்செந்தூர் வரை வந்தார். டிராமும் சென்று விட்டதால் ஒரு மாட்டு வண்டி (வில் வண்டி) வைத்துக்கொண்டு திரு வீரராஜபட்டணம் புறப்பட்டார். அவர் வண்டிக்கு முன் மூன்று பார வண்டிகள் புறபட்டன. அவ்வண்டிகள் கூட போவதால் எவ் வித அவசரமுமில்லையென எண்ணி டெப்டி மாஜிஸ்டிரேட் கூடப் புறப்பட்டார். திருவீரராஜபட்டணத்திற்கு ஒரு மைல் தூரத்தில் வரும்போது முன் போகும் வண்டிகள் வழக்கமாய்ப் போகும் வழியை விட்டு வேறு பாதை சென்றன. டெப்டி மாஜிஸ்டிரேட் ஏன் வேறு வழி செல்கிறார்களென்று கேட்கச் சொல்ல, அங்கு மத் தியில் டள்ளம் ஏற்பட்டு விட்டதாகவும் ஆகையால் இப்போது போகும் வழிதான் சரியான வழி யென்றும் சொன்னார்கள். தன் வண்டி பின்னால்தானே போகிறதென்று சரியெனஒப்புக்கொண்டார். சற்று தூரம் போனவுடன் முன் வண்டிகள் சென்ற பின் தண்ணீரி லிருந்து வெள்ளையாய் மாடுகளுக்கு முன் தெரியவே மாடுகள் பய ந்து ஒரு பக்கம் இழுத்தன. அப்போது தண்ணீருககுள்ளிருந்து யாரோ தார் குச்சியால் மாடுகளைக் குத்துவதைப்போல் தோன்றி ற்று; மாடுகள் மாறி இழுக்கவே; வண்டி பள்ளத்தில் இறங்கி மாடு களும் வண்டியும் மிதந்துவிட்டது. அப்போது முன்னால் போன வண்டிக்காரர் சட்டென்று வண்டியிலிருந்து குதித்து டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்களை அந்த அபாயமான நிலையிலிருந்து தூக்கிப் பிடிப்பதுபோல் பிடிக்கும்போது அவர் கைகளைப் பலமாய் ஒருவன் பிடித்துக் கொள்ள மற்றொருவன் அவர் ஜோப்பிலிருந்த கைத் துப் பாக்கியை எடுத்துக் கொள்ள அவர் காலையும் கையையும் கட்டி வாயில் துணியடைத்து வண்டியில் போட்டுக் கொண்டு போனார்கள். டெப்டி மாஜிஸ்டிரேட்டை ஏற்றிக்கொண்டு வந்த வண்டி சுமார் இர ண்டு பர்லாங்கு தூரம் வந்ததும் வண்டியை நிறுத்தி அங்கு தயா ராய்க் கொண்டு வந்து வைத்திருந்த பெஞ்சியில் டெப்டி மாஜிஸ் டிரேட்டை நால்வர் சேர்ந்து தூக்கிப் படுக்க வைத்து அப்பெஞ்ச் சியை நான்கு பக்கங்களில் நால்வர் பிடித்துத் தூக்கி குறுக்குப் பாதையாய்ச் சென்று பாட்டையிலிருந்து சுமார் ஒரு பர்லாங்கு

தூரம் சென்றதும் அங்கு அடிக்கடி அடிக்கும் புயல் காற்றால் சுமார் ஒரு பனைமரம் உயரம் பள்ளமாக்கப்பட்டு நான்கு பக்கங்களிலும் மலைபோல் திட்டுகளுண்டாகிய பள்ளத்தாக்கில் கொண்டுபோய் இறக்கினார்கள். அங்கு பிரம்மாண்டமான ஆலமரமொன்று அப்பள்ளத்தாக்கில் முளைத்திருந்தது. சுமார் 10 பனை மரங்களும் ஆங்காங்கு இருந்தன. பெரிய காந்த விளக்குகள் அங்கு வைக்கப்பட்டிருந்ததால் பட்டப் பகல்போல் வெளிச்சம் இருந்தது. ஆலமரத்துக்குப் பக்கத்திலுள்ள வெளி நிலத்தில் மூன்று நாற்காலிகள் போடப்பட்டிருந்தன; பனைமரங்கள் ஒவ்வொன்றில் ஒவ்வொருவராக கொளம்பு துப்பறிவோர் மூவரும், போலீஸ் இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவுமாகக் கட்டப்பட்டிருந்தனர். டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்களைக் கொண்டு போனதும் ஒரு தூணில் பிடித்துக் கட்டி விட்டார்கள். சாமி ரெட்டி, கொண்டப்ப ரெட்டி, காந்திமதியாபிள்ளை ஆகிய மூவரும் வந்து மத்தியில் காந்திமதியா பிள்ளையை உட்காரும்படி சாமி ரெட்டி சொல்லி தான் வலது கைப்பக்கத்திலும் கொண்டப்ப ரெட்டியார் இடது கைப் பக்கத்திலுமாக உட்கார்ந்தனர்.

சாமி ரெட்டியார்:—என்ன வெள்ளையத் தேவரே இன்னும் கட்டில் வரவில்லையா? வரவேண்டிய நேரம் ஆகவில்லையா?

வெள்ளையத் தேவர்—எசமான்! இன்னும் பாக்கு கடிக்கிற நேரத்துக்குள்ளே வந்திடும்.

என்று சொல்லி விட்டுப் பக்கத்திலிருந்தவனை "மேட்டுமேலே ஏறிப் பாருலே" என்று உத்தரவிட்டார். அவன் மேலேறிப் பார்த்து "கூப்பிடுத் தூரத்திலே கட்டில் வருதுங்க" என்று சொன்னான். சுமார் பத்து நிமிஷங்களில் நாலு பேர் நாலு கட்டில் கால்களையும் பிடித்து அசையாது தூக்கி வந்து வைத்தனர். அக்கட்டிலில் ஜில்லா மாஜிஸ்டிரேட் ஸ்காட் துரை * தூங்கிக் கொண்டிருந்தார்.

சாமி ரெட்டியார்:—தேவரே! பல்லைப் பிடுங்கியாய் விட்டதா?

---

* திருநெல்வேலி ஜில்லாவில் கட்டிலில் படுத்துறங்குபவர்களுடைய நித்திரைக்கு எவ்வித பங்கமும் ஏற்படாமலும் அவர்களுக்குத் தெரியாமலும் கட்டிலுடன் பல உத்தியோகஸ்தரைத் தூக்கிக் கொண்டுபோய் அவமானப்படுத்தி யனுப்பியிருக்கும் விஷயம் அவ்வூர் வாசிகள் அனேகருக்குத் தெரியும். இவ்வேலையில் திறமையுள்ள தேவமார் அஜ்ஜில்லாவில் பலர் இருக்கின்றனர்.

என்றார். "ஆம் எஜமான்" என்று குண்டுகள் போட்டு வைத்திருந்த ஓர் கைத் துப்பாக்கியைக் கொண்டு வந்து அவர் காலின் பக்கம் வைத்து நமஸ்கரித்தான். 8 தேவமாரைக் கட்டிலைச் சுற்றி ஜாக்ரதையாய் நிற்கச் சொல்லி விட்டு கலெக்டர் துரையை எழுப்பும்படி சாமிரெட்டி உத்தரவு செய்தார். "ஏ துரை! ஏ துரை!!" என்று ஒருவன் கூப்பிடவே, ஜில்லா மாஜிஸ்டிரேட் துரையவர்கள் சட்டென்று கண்களைத் திறந்து பார்த்ததும், திடுக்கிட்டு எழுந்து தன் தலையணையின் கீழ் வைத்திருக்கும் கைத்துப்பாக்கியை எடுக்கத் தேடினார். அப்போது,

சாமி ரெட்டி:—தங்கள் கைத் துப்பாக்கி என் கையில் பத்திரபஸ்தாய் இருக்கிறது. இப்போது தங்களை மாஜிஸ்டிரேட் அதிகாரம் செய்ய இங்கு அழைத்து வரவில்லை. தங்களை விசாரித்து தண்டிப்பதற்காகவே இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறீர்கள். தயவு செய்து தாங்கள் தற்காலமிருக்கும் நிலைமையைக் கவனித்து தங்கள் கை கால்களை கட்ட விட்டால் யாதொரு தொந்தரவும் செய்யாமல் கௌரவமாய்க் கட்டுவோம். இல்லாவிட்டால் பலவந்தமாய் கட்டவேண்டி வரும், என்ன சொல்லுகிறீர்கள் ?

என்றார். ஜில்லா மாஜிஸ்டிரேட் எவ்வித பதிலும் தராமல் எழுந்து நின்று சுற்றிலும் பார்த்தார். தமது டெப்டி மாஜிஸ்டிரேட்டும், இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவும், கொளம்பு துப்பறிவோர் மூவரும் கால் கைகள் கட்டப்பட்டு மரத்துடன் சேர்த்துக் கட்டுண்டிருப்பதைப் பார்த்ததும், "நீங்கள் இப்பேர்ப்பட்ட அக்கிரமமான காரியங்கள் செய்வதற்குத் திட்டமாய் சரியான தண்டனை அடைவீர்கள்" என்று இடி இடித்தாற் போல் சொன்னார்.

சாமி ரெட்டி:—தேவரே! மயிலே! மயிலே!! இறகு கொடு!!! என்றால் கொடுக்குமா? உங்கள் வேலையைப் பாருங்கள்.

என்றார். உடனே இரண்டு தேவமார் அவரைப் பிடித்துக் கட்ட நெருங்கியதும் இருவரையும் இரண்டு கையினால் குத்தினார். அவர்கள் அவர் குத்தை லக்ஷியம் செய்யாமல் அவர் கைகளைப் பிடித்துக் கட்ட வந்தனர். அப்போது அவர் காலால் இருவரையும் உதைக்கவே 4 அடி தூரம் போய் விழுந்து எழுந்து வந்தனர். அப்போது;

சாமி ரெட்டி:—அடே கழுதை உதைக்கிறது. கடிக்கவும் செய்யும் போலிருக்கிறது. இனி உதைக்க, கடிக்க, விடாமல் கட்டி விடுங்கள்.

என்றார். அவர்கள் என்ன செய்யப் போகிறார்களென்று கலெக்டர் துரையவர்கள் கவனிக்கு முன் பின்னாலிருந்து கயிற்றின் ஒரு முனையைப் பிடித்துக் கொண்டு, அவர் காலைக் கயிறு பின்னிக் கொண்டு தன் கைக்கு வரும்படி சுழற்றி யெறிந்து கயிற்றின் இன்னொரு முனை தன் கைக்கு வந்ததும் சட்டென்று இரண்டு முனைகளையும் கோர்த்து இழுத்து விட்டான். கலெக்டர் மணலில் சாய்ந்தார். உடனே இருவர் அவரை மணலுடன் சேர்த்து அமுக்கிக் கொள்ள இன்னுமிருவர் அவர் கைகளையும் கால்களையும் கட்டி பனை மரத்தில் சேர்த்துக் கட்டி விட்டனர்.

சாமி ரெட்டி:—பிள்ளை அவர்களே! இப்போது இந்த ஆறு பேருடைய குற்றங்களை விசாரணை செய்து அவரவர்களுக்கேற்ற தண்டனை விதிப்பதற்காக நாம் இங்கு கூடியிருக்கிறோம். முதலில் ஜில்லா மாஜிஸ்டிரேட்டையும், அப்பால் டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்களையும், அதற்குப் பின் போலீஸ் இன்ஸ்பெக்டரையும், பின் அந்த அயல் நாட்டு மூன்று துப்பறியும்நாய்களையும் விசாரித்துத் தண்டிப்போமா அல்லது கீழிருந்து விசாரிப்போமா?

என்று கேட்டார். அப்போது டெப்டி மாஜிஸ்டிரேட் "சர்க்கார் உத்யோகஸ்தர்களை நியாய விரோதமாயும் இவ்வாறு அக்கிரமமாயும் கட்டி வைத்துக் கொண்டு ஏதேதோ உளறுகிறீர்கள். இச்சமயத்தில் நீங்கள் சர்வாதிகாரிகளெனவும், உங்களைக் கேட்போர் யாருமில்லையெனவும் நினைத்து மனம்போன போக்கின்படி பேசி நடந்த போதிலும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின்கை அதிக நீள முடையதென்றும், எப்படியாவது இப்பேர்ப்பட்ட அக்கிரமங்களுக்காக நீங்கள் குடும்பத்தோடு நாசமாகும்படி நேரிடுமென்றும், ஏன் உங்கள் ஊரே ஒருக்கால் நிர்மூலப்படுத்தப் படுமென்றும் ஞாபகமிருக்கட்டும். முன் திருநெல்வேலித் தாலுகா கொலவணிக்கபுரம் கிராமத்தில் உங்களைப் போல் சிலர் செய்த இப்பேர்ப்பட்ட அக்கிரமங்களுக்காக கலெக்டர் லெவிஞ்சி துரையவர்கள் அக்கிராமத்தையே குண்டு போட்டு சுட்டுப் பரத்திய விஷயம் நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். இந்த சமயம் உங்கள் கையிலேயே சகல அதிகாரங்களுமிருப்பதாகவும் ஆகையால் நீங்களே சம்ஹார கர்த்தரென்றும் மதி மயங்கி மனப்பால் குடித்து மாண்டு மடியாதீர்கள். என் எச்சரிப்பைக் கேட்டதும் உங்களுக்கு நல்ல புத்தியைக் கொடுக்கவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன்" என்று சொன்னார். அப்

போது சாமிரெட்டி "உங்களைக் கொன்று இம்மணலில் புதைத்தபின் நீங்கள் எழுந்து வந்து எங்களையும், எங்கள் குடும்பத்தையும், எங்கள் ஊரையும் நாசப்படுத்தும் அந்த நாள் வரும்போது பார்த்துக் கொள்ளுவோம்" வெள்ளையத் தேவரே! அந்தத் துரையைக் கொண்டுவந்து நமது முன்பு விசாரணைக்கு நிறுத்துங்கள்;" என்றார். அவரைக் கொண்டு வந்து நிறுத்தியதும்,

காந்திமதியா பிள்ளை:—இவ்வளவு கலகங்கள் நடந்ததற்கும், எனது சின்ன எஜமான் பரதேசம் போகும்படி நேரிட்டதற்கும், வீராசாமி ரெட்டி ஜெயில் சேர்ந்ததற்கும் தாங்களே காரணஸ்தர், அந்த சீதாராம சாஸ்திரிக்கு சிபார்சாக வந்து சட்ட விரோதமாய் நீர் வாரண்ட் பிறப்பித்ததிலிருந்து தானே கலகம் ஆரம்பமாயிற்று? அப்போதும் நீர் வாரண்ட் பிறப்பித்த இரவே உமது சவாரி செய்யும் குதிரை, பால் மாடுகள், உமது பெண்ஜாதியின் பன்றிகள், கோழிகள் முதலியவை எங்கு கொண்டு போய் வைக்கப்பட்டிருந்தன. மீண்டும் எவ்வாறு திருப்பப்பட்டன என்று இந்த நிமிஷம் வரையில் உம்மாலாவது, உமது டெப்டி மாஜிஸ்டிரேட்டாலாவது, சற்று நேரத்திற்குமுன் டெப்டிமாஜிஸ்டி ரேட்டவர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எங்கும் செல்லக்கூடிய நீளமான கைகளிருப்பதாகத் தற்புகழ்ச்சி செய்த பிரிட்டிஷ் அரசாங்கத்தாராலாவது கண்டுபிடிக்கப்பட்டதா? சொல்லுங்கள் பார்ப்போம். இனிமேல் இன்று விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் ஆறுபேரும் மீண்டும் சூரியவெளிச்சத்தைப் பார்க்கப் போவதில்லை யாகையால் உங்களிடம் தெரிவிப்பதில் எவ்வித கெடுதலும் ஏற்படாது. ஆகையால் தெரிவிக்கிறேன் கேளும். உமது பங்களாவிலிருந்து ஆற்றுத் தண்ணீர் வரையில் குதிரை, பசுக்கள், பன்றிகள், முதலியவற்றின் காலடிகள் தென்பட்டன; அப்பால் பூமியே விழுங்கி விட்டதுபோல் தோன்றிற்று. ஏன்? உண்மையில் அங்கிருந்து பூமிதான் விழுங்கி விட்டது. ஆற்றின் மத்தியில் கட்டப்பட்டிருக்கும் மண்டபத்தின் மத்தியில் ஆறு அடி சதுரமுடைய ஒருகல் இருக்கிறது. அக்கல்லிலிருக்கும் சூக்ஷமத்தால் அக்கல்லைக் கஷ்டமில்லாமல் அப்புறப்படுத்த முடியும். அவ்வாறு அப்புறப்படுத்திவிட்டால் பூமிக்குள் அமைத்திருக்கும் திருட்டு மாடுகளை மறைத்து வைக்கும் கல் மண்டபம் ஒன்றுக்குக் கொண்டுபோகும் வழிதென்படும். அவ்வழியால் இவைகளையெல்லாம் இறக்கிய உடனே வழக்கம்போல் கல்

அதனிடத்தில் சூக்ஷமத்தால் தள்ளப்பட்டது. டெப்டி மாஜிஸ்டி ரேட்டவர்கள் விஷயத்தில் எல்லா தலைமைக்காரத் தேவமாருக்கும் அபிமான முண்டாதலால் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி அவை கள் மீண்டும் அவ்வழியாகவே எவர்க்கும் தெரியாமல் கொண்டு போய் விடப்பட்டன, ஆகையால் இந்தியாவில் இந்த பிரி ட்டிஷ் அரசாங்கம் இன்னும் பல நூறு வருஷங்கள் ஆண்டாலும் கண்டுபிடிக்க முடியாத பல விஷயங்கள் இருந்துகொண்டுதானிரு க்கும். வெள்ளைக்காரர் கையில் இந்தக் கருப்பு மருந்து ஒன்று அகப்பட்டிராவிட்டால் இந்தத்திருநெல்வேலி இராமநாதபுரம்ஜில்லா க்களை அவர்களால் மூணேமுக்கால் நாளிகை ஆளமுடியுமா? நெத்தி க்குச் சரியாய் தடியெடுத்துக் கொண்டு தேவமார் புறப்பட்டால் கருப்பு மருந்தொன்றில்லாவிட்டால் ஆயிரக்கணக்கான ஐரோப்பிய வீரர்களைக் கால்மாடு தலைமாடாய்ச் சாய்த்து விடக்கூடிய சாமர்த் திய மில்லையா? கருப்பு மருந்து வரும் வரையில் பாஞ்சாலங் குறி ச்சி கட்டப் பொம்மன் ஊமைத்துரை அவர்களிடம் இந்த வெள்ளை யர் ஜெபம் சாய்ந்ததா? அதெல்லாம் இப்போது பேசுவதில் என்ன உபகாரம். நீர் குற்றவாளியா அல்லவா? சொல்லும்.

என்று கேட்டார். அவர் வாயைத் திறக்கவில்லை. புன்னகை தவழ்ந்த முகத்துடன் நின்றார். கிஞ்சிற்றேனும் பீதியடையவேயி ல்லை. தலைக்கு மிஞ்சின ஆக்கினையில்லையெனக் கருதுபவர்களுக்குப் பயமேது? இன்னொருமுறை கேட்கிறேன் "நீர் குற்றவாளியா அல்ல வா" என்றார். அப்போதும் பதில் சொல்லவில்லை. சாமி ரெட்டி யும் கொண்டப்ப ரெட்டியும் அவ்வாறே கேட்டும் பார்த்தார்கள். அப்போதும் வாய்திறக்கவில்லை. உடனே அம்மூவரும் கலந்தாலோ சித்து ஐக்கோர்ட்டு நீதிபதிகளின் தீர்ப்பைக்கொண்டே இவரைக் குற்றவாளி யெனத் தீர்மானித்து விடலாம். வேறு சாக்ஷி ருஜூவு தேவையா? யென காந்திமதியாபிள்ளை கேட்டார். அவர்கள் வேண் டாமென்று சொல்லி அவருடைய தைரியத்தை உத்தேசித்து அவ ரை மத்தியில் நிறுத்தி அவர் கைதுப்பாக்கியாலேயே, துப்பாக்கி சுட்டு அனுபோக முடைய வெள்ளையத்தேவர் சுட்டுக் கொல்லவெ னத் தீர்ப்பளித்தனர். அவ்வாறே மத்தியிலுள்ள பனைமரத்தில் கொண்டுவந்து ஜில்லா மாஜிஸ்டிரேட்டைக் கட்டிவிட்டு 100 அடி தூரத்திலிருந்து வெள்ளையத் தேவரைத் தான் "மூன்று" என்று சொல்லும்போது சுடும்படி சொல்லி ஒன்று—இரண்டு—என்று

சொல்லி வாய் மூடு முன்னும் எங்கிருந்தோ துப்பாக்கிகள் சுட்ட சத்தம் கேட்டது. சத்தம் கேட்டதோ இல்லையோ வெள்ளையத் தேவருடைய துப்பாக்கிப் பிடித்திருந்த கையில் மூன்று குண்டுகள் பாய்ந்த உடனே கை சோர்வுற்று விழுந்ததால் அக்கையில் பிடித்தி ருந்த கைத்துப்பாக்கியும் சோர்வுற்றுக் கீழே விழுந்தது. அவ்வளவு அபாய கரமான சமையத்தில் குறிதவருமல் சுட்டவர்கள் யா ரென்று அங்கிருந்த எல்லோரும் சுற்றுமுற்றிலும் பார்க்க மணல் மே ட்டிலிருந்து கைகளில் துப்பாக்கிகளுடன் சுந்தரராஜுவும் செல்வ மும் அவர்களிருக்கும் இடத்தை நோக்கிவரக் கண்டனர். அச்சம யத்தில் அங்கு அவர்கள் எப்படி வந்தார்களென்று வாசகர்கள் ஆச் சரியப்படக்கூடும். கோவிந்தன், ஒட்டலி சாடியுடன் புறப்பட்ட மறுநாள் மாலை பத்திரிகையை வாசித்தவுடனே தான் சுந்தரராஜு வும் செல்வமும் அங்கிருந்து புறப்பட்டார்க ளாதலாலும், இந்த அத்தியாயத்திற் சொன்ன எதிர்பாராத பல சம்பவங்களும் ஒரு இரவு ஒரு பகலுக்குள்ளாகவே நடந்திருந்ததாலும், மறு இரவே அவர்கள் புறப்பட்டதாக நாம் சொல்லியிருப்பதாலும் அவர்கள் நேராக திருவீரராஜ பட்டணத்திற்கு ஆகாய விமானத்தின் மூல மாய் வந்து கொண்டிருக்கும்போது வழக்கத்திற்கு விரோதமாய், அப்பள்ளத்தாக்கில் காந்த விளக்குகளின் வெளிச்சம் தென்படவே தமது தூரதிருஷ்டிக் கண்ணாடியால் அங்கு என்ன நடக்கிறதென்று கவனித்துப் பார்க்கும்போது தான், ஜில்லா மாஜிஸ்டிரேட்டைக் கட்டும் பிரயத்தனம் நடந்து கொண்டிருந்தது. உடனே ஒத்தாசை க்குப் போகாவிடில் ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கு அபாயம் விளையு மென அறிந்து ஜல்தியாய் விமானத்தைக் கீழிறக்கி செல்வத்திடம் விஷயங்களறிவித்து அந்த ஆபத்தான வேளையில் வந்து சேர்ந்தார்.

நிற்க காந்திமதியா பிள்ளை, சுந்தரராஜுவையும் செல்வத்தை யும் பார்த்தவுடனே தனது ஆசனத்திலிருந்து எழுந்து விட்டார். அவ்வாறே சாமி ரெட்டியாரும், கொண்டப்ப ரெட்டியாரும் எழுந் திருந்தனர். சுந்தரராஜு செல்வத்தை ஒரு நாற்காலியில் உட்கா ரும்படி சொல்லி தானும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு அங்கு கட்டப்பட்டிருந்தவர்களை யெல்லாம் அவிழ்த்து விடும்படி சொன்னார்.

காந்திமதியா பிள்ளை:—எஜமான்! அடியேனுடைய வார்த்தை களைச் சற்று செவி சாய்த்துக் கேளுங்கள். இந்த ஜில்லா மாஜிஸ்

டிரேட் சீதாராம சாஸ்திரிகளுக்காக வண்டு அனியாயமாய்த் தங்கள் பேரில் வாரண்ட் பிறப்பத்ததினால் தானே இவ்வளவு அனர்த்தங்கள் விளைந்தன; அப்பால் தாங்கள் மறைந்திருக்கா விட்டால், இந்த டெப்டி மாஜிஸ்டிரேட், வீராசாமி ரெட்டியாரைத் தண்டித்ததைபோல் தங்களையும் தண்டித்திருப்பார். இந்த காமாக்ஷிராவ் தங்களுக்குப் பல இடைஞ்சல்களை உண்டாக்கினதோடு தங்கள் அருமைச் செல்லத்தையும் தங்களைக் காட்டிக் கொடுக்கும்படி செய்த சண்டாளன். இந்த மூன்று கௌளம்பு தப்பறிவோரும் தங்களை ஜெயிலிலடைப்பதற்கு வாரண்ட் பெற்றுப் போனதோடு நில்லாமல் தங்கள் சொத்துக்களையும் பறி முதல் செய்ய உத்தரவு பெற்று வந்தவர்கள். ஆகையால் இந்த ஆறு பேரும் நமது சமஸ்தானத்துக்கு ஜென்ம விரோதிகள்; இந்த ஆறு பேரையும் கொசுக்களை நசுக்குவதைப்போல் நசுக்குவதற்காகவே நாங்கள் வெகு சிரமப்பட்டு இங்கு கொண்டு வந்து சேர்த்திருக்கிறோம். தாங்கள் இதை அறியாமல் அனியாயமாய் வெள்ளையத் தேவர் கையைச் சுட்டு வீழ்த்தினீர்கள். உங்களுக்கு என்ன நடக்கிறதென்று தெரியாததால் அவ்வாறு செய்தீர்கள்; இனி இவர்கள் ஒவ்வொருவரையும் விசாரித்து அவர்களுக்கு செய்ய வேண்டிய ஆக்கினையைக் கட்டளையிடுங்கள், நாங்கள் செய்து முடிக்கத் தயாரா யிருக்கிறோம்.

சுந்தரராஜு:—பிள்ளை அவாள்! இதுவரையில் தலைமுறை தத்துவமாய் எங்களுக்கும் எங்கள் பெரியவர்களுக்கும் நற்புத்தி புகட்டி வந்த பரம்பறையில் பிறந்தவரா நீர் என்னும் சந்தேகம் கூட என் மனதில் தோன்ற ஆரம்பித்துவிட்டது. நீர் சொன்னபடி இவர்கள் ஆறுபேரும் எனக்கு விரோதமான காரியாதிகள் செய்தவர்கள்தான் என்பதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைச் செய்தார்களே யொழிய தங்களின் சொந்த சங்கதியில் சம்பந்தப்பட்டு சுயாலத்தோடாவது ஒரு லாபத்தை எதிர் பார்த்தாவது அக்கிரமமாய் ஒன்றும் செய்யவில்லை. நாம் சீதாராம சாஸ்திரியைப் படுத்தியது போல் நம்மை அவர் ஹிம்சித்து, நாம் ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடம் பிரமாணவாக்குமூலம் கொடுத்து வியாஜ்யம் தொடர்ந்து, அவ்வியாஜ்யத்தை அவர் அங்கீகரியாது தள்ளிவிட்டிருந்தால், நமது மனம் எவ்வாறு கொதிக்கும்-வேகும்-என்பதைச் சற்று யோசித்துப் பாரும். டெப்டி மாஜிஸ்டிரேட்டைப்போல் சத்தியவான் இப்பூவுலகில் உளரா எனப் பேரெடு

ந்த பிரபு. ஆகையால் அவரைக் கட்டியதைப்போல் கொடூரமான குற்றம் இல்லவே இல்லை யென்னலாம்.

என்று சொன்னதும் செல்வத்தை டெப்டி மாஜிஸ்ட்ரேட்டின் கட்டுகளை அவிழ்க்கச் சொல்லித் தான் போய் ஜில்லா மாஜிஸ்டிரேட்டின் கட்டுகளை அவிழ்க்கச் சென்றார். அப்போது காந்திமதியா பிள்ளை கண்ஜாடை காட்டவே சுற்றிலுமுள்ள தேவமார் சந்தடி செய்யாது நெருங்கி சுந்தரராஜுவின் கைகளையும் செல்வத்தின் கைகளையும் பிடித்துக் கொண்டனர். சுந்தரராஜுவும் செல்வமும் தங்களைப் பிடித்தவர்களை உதறமுயன்றார்கள். சுந்தரராஜுமட்டும் தன்னைப் பிடித்த ஒரு தேவரை உதறித் தள்ளி விட்டு தங்கள் கைத்துப்பாக்கிகளை வைத்த இடத்தில் பார்க்க வெறும் இடமாயிருந்தது; அதற்குள்ளாக நான்கைந்து தேவமார் சேர்ந்து சுந்தரராஜுவைப் பிடித்துக்கொண்டார்கள். அப்போதும் அவர் திமிறிக்கொண்டேதான் இருந்தார். அந்தசமையத்தில் பக்கத்திலிருந்த ஆலமரத்தில் ஊதுகுழல் ஊதிய சத்தம் கேட்டது. தக்ஷணம் 16 போலீசார், துப்பாக்கிகள் சஹிதம் நான்கு பக்கங்களிலிருந்தும் வந்தனர். அவர்களைக் கண்டதும் தேவமார் சுந்தரராஜுவையும் செல்வத்தையும் விட்டு விட்டு ஓட முயன்றனர். யாராவது ஓடமுயன்றால் உடனே நிர்தாக்ஷண்யமாய் சுடும்படி ஆலமரத்திலிருந்து குதித்த சொள்ளமாடத்தேவர் உத்தரவிட்டார். அப்போது காந்திமதியா பிள்ளை "என்ன சொள்ள முத்து! நீ கூடவா உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யவந்தாய்" என்றார். அப்போது அவன், நான் சொள்ள மாடனுமல்ல; கள்ளமாடனுமல்ல; நல்லமாடன் தான். நான் தான் சொள்ளமாடன் வேஷம் போட்டுவந்த கோவிந்தன்! என்று சொல்லி அங்கிருந்த காந்திமதியா பிள்ளை, சாமி ரெட்டி, கொண்டப்பரெட்டி, தேவமார்கள் எல்லோருக்கும் விலங்குகள் பூட்டுவிட்டு கட்டுண்டிருந்த அறுவரையும் விடுவித்தனன். அச்சமயத்தில் அங்கு பாலரங்கராஜு, ஜெயலக்ஷிமி, சொள்ளமாடத் தேவனைப் பிடித்துக் கொண்டு ஸ்ரீனிவாசலுராஜு, ஆகிய நால்வரும் வந்தனர். ஸ்ரீனிவாசலு ராஜுவைக் காணவும் அங்கிருந்த எல்லோரும் அதிக ஆச்சரியப்பட்டனர். டெப்டி மாஜிஸ்டிரேட் அவரை அப்படியே சேர்த்துக் கட்டி ஆலிங்கனம் செய்து கொண்டு எமனுாரிலிருந்து எவ்வாறு எப்போது திரும்பினீர்களென்று கேட்டார். தனக்கு முந்திய நாள் பிரக்ஞை வந்தபோது ஸ்ரீமான் பாலரங்க ராஜுவும்

ஜெயலக்ஷ்மியும் தன் காலண்டை தனது கால்களைப் பிடித்துக் கொண்டு விசனமாய் உட்கார்ந்திருந்ததுதான் தனக்குத் தெரியுமென்றும் மற்றவை ஒன்றும் தெரியாதென்றும் சொன்னார். ஜெயலக்ஷ்மியையும் பாலரங்க ராஜுகாரையும் கேட்க, கோவிந்தன், அவர்கள் எவர்க்கும் தெரியாமல் அரைமயக்கத்துடன் தாத்தா அவர்கள் காணமற்போன இரவு தாத்தா அவர்களை அழைத்துவந்து பாலரங்க ராஜுவீட்டில் கொண்டுவந்து படுக்க வைத்துவிட்டு, வீட்டில் கண் தெரியாத கிழவேலைக்காரன் தவிர மற்ற வேலைக்காரரெல்லாம் பாலரங்கராஜுகாருடன் ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் வீட்டிற்குச் சென்றிருந்ததால் பாலரங்க ராஜுவின் உத்திரவின் பேரில் நடு ஹாலுக்குப் பக்கத்திலுள்ள அறையில் இருக்கப் போவதாகச் சொல்லிவிட்டு கோவிந்தன் அவருக்குத் தெரியாமல் தாத்தாவை அங்கு வேண்டிய சிகிச்சைகள் செய்து வந்ததாயும் 3 தினங்கள் பொறுத்து ஜெயலக்ஷ்மியும் பாலரங்க ராஜுவும் விசாரணை முடிந்த பின் அங்கு வந்தபோது தான், அவர்களுக்கு அவ்விஷயம் தெரியுமென்றும், மற் விவரங்கள் கோவிந்தனைக் கேட்டால் தான் தெரியுமென்றும் சொன்னார்கள். கோவிந்தனைக் கேட்க அது பெருங்கதை யென்றும் சாவகாசமாய்ச் சொல்லுவதாகச் சொன்னார். ஜில்லா மாஜிஸ்டிரேட் கோவிந்தனிடம் கைகுலுக்கிவிட்டு அவரால்தான் எல்லோரும் தப்பினார்களென்று சொல்லி அவர் பிரபாவத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். எல்லோரும் ஸ்ரீனிவாசலு ராஜுவின் பேரில் கண்ணும் கருத்துமா யிருக்கும் சமயத்தில் சாந்திமதியா பிள்ளை, சாமிரெட்டி, கொண்டப்பரெட்டி, ஆகிய மூவரும் எவர்க்கும் தெரியாமல் ஓடிவிட்டனர், கோவிந்தனும் ஒன்றுமறியாதவர்போல் சற்று நேரமிருந்து அப்பால் "காந்திமதியா பிள்ளை முதலியோரைக் காணவில்லையே, எங்கே" என்று போலீஸ் இன்ஸ்பெக்டரைக் கேட்க, அவர் அவர்களை ஒப்புவித்த போலீசாரிடம் கேட்க, அவர்கள் திறுகத் திறுக முழித்தார்கள். கோவிந்தன் தேவமாருக்குச் சில போலீஸ்காரரைக் காவல் வைத்துவிட்டு மற்றவர்களைப் போய் அவர்களைத் தேடச் சொன்னாரே தவிர அவர் தேடப் போகவில்லை. இப்படி அல்லோலப்படும் சமையத்தில் தன்னைக் கட்டியிருந்த கட்டுகளை அவிழ்த்து விடுமுன்னமே இதுதான் தக்க தருணமென நினைத்து காமாக்ஷி ராவ் செல்வத்தைப்பார்த்து "சேல்லம்! என்னை நேற்று அவ்வாறு அடித்து அவமானப்படுத்தினாயே! நீ செய்தது நியாயந்தானா

உன் நிமித்தம் நான் அதிகாரிகளைக் கூட விரோதித்துக் கொண்ட தற்கு நீ கொடுக்கும் கைமாறிதுவோ? என்பேரில் உனக்கபிமான மில்லையாயினும் நல்ல பேச்சாவது பேசக்கூடாதா" என்றார்.

அவர் இருந்த ஆபத்தான நிலைமையில் செல்லத்திடம் சரச வார்த்தைகளாடக் கூட மனம் வந்ததா என இதை வாசிப்போர் நினைக்கலாம். இதைப் பார்க்கும்போது நமக்கு நாம் சிறு போதில் விசிஷ்டாத் வைதத்தில் வாசித்த கதை ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது:—

[காட்டில் சென்ற ஒருவனைப் புலி ஒன்று துரத்தி வர அப் புலிக்குப் பயந்து கிணறாயிற்றே என்று கூட பயப்படாது ஒருவன் கிணற்றிற்குள் படர்ந்திருந்த ஒரு கொடியைப்பற்றிக்கொண்டு கிணற்றில் இறங்கியதாகவும், பாதிவழி சென்றதும் கிணற்றில் தண்ணீரின் அருகில் இரண்டு கிருஷ்ண சர்ப்பங்கள் சீறிக்கொண்டிருக்கக் கண்டு மேலே பார்க்க, தன்னைத் துரத்தி வந்த புலி கிணற்றின் கரை மேல் உட்கார்ந்து கொண்டு அவன் மேலேறிவருவான் அப்போது அவனை அடித்துப் புசிக்கலாமென உட்கார்ந்திருந்ததாகவும், கீழேயிருக்கும் நாகங்கள் இறங்கட்டும் தீண்டலாமென நினைத்து இருந்ததாகவும், இதற்கிடையில், தான், பிடித்துக்கொண்டிருந்த கொடியை ஒரு எலி கடித்துத் துண்டித்துக் கொண்டிருந்ததாகவும், கொடி முற்றிலும் துண்டிக்கப்பட்டால் கிணற்றில் விழுந்து நாகங்களால் கடிபட நேரிடுமென்றும், கொடியைத் துண்டிக்கு முன் அதைப்பிடித்து மேலேறி கரையேறலாமென்று பார்த்தாலோ தன்னை அடித்துக் கொல்வதற்குப் புலி தயாராய் உட்கார்ந்திருக்கிறதென்றும், ஆகையால் எத்திக்கிலும் தன்னை ஆபத்து சூழ்ந்திருக்கிறதென்பதை அறிந்து இன்னது செய்வதென அறியாது திகைத்து நிற்கும் மிகவும் ஆபத்தான வேளையில் மேலே கட்டியிருந்த தேன் கூட்டிலிருந்து தேன் வடிந்து தன் உதட்டின் பக்கத்தில் விழுந்ததும், தானிருக்கும் அவ்வளவு அபாயகரமான நிலைமையை மறந்து, அத்துளி தேனை தன் நாக்கை நீட்டி நக்கிக் குடிப்பதால் ஏற்படும் அற்ப ஆனந்தத்தை அனுபவிக்க விரும்பும் சுபாவம் மனிதனுடையது என்று எழுதப்பட்டிருந்தது ஞாபகத்துக்கு வருகிறது. என்னே! மனிதனின் சுபாவம்.]

செல்லம்:—ஸ்ரீமான் சுந்தரராஜுலுகாரிடம் தனக்கிருந்த அபார பிரியத்தை மாற்றி, அவர்களைக் காட்டிக் கொடுக்கும்படி துர்ப்புத்தி

புகட்டியதின் மூலமாய் ம-ா-ஸ்ரீ ஸ்ரீனிவாசலு ராஜு காரு சொன்ன வார்த்தைகளைக்கூட அலக்ஷியம் செய்யும்படி தூண்டி அமோக ஆபத்திற்காளாகும்படி செய்த ஒருவர் பேரில் பிரியமிருக்குமா? வெறுப்பிருக்குமா? நீங்களே சொல்லுங்கள்.

காமாக்ஷிராவ்:—குற்றவாளியை எப்படியாவது கண்டு பிடிப்பது போலீசாருடைய வேலையா அல்லவா? அதற்கு நீதி நெறியிற் செல்லும் ஒவ்வொருவரும் உபகாரம் செய்யக் கடமைப் பட்டவர்களா? அல்லவா? அப்படியிருக்க உனது உபகாரம் கோறியது குற்றமாகக் கொள்ளலாகுமா?

செல்லம்:—அவர்கள் அன்னத்தைத் தின்று அவர்கள் ஆதரவில் இருக்கும் ஒருவரை அவர்களுக்கு ரெண்டகம் நினைக்கும்படியும், அவர்களுக்கெதிரிடையாய் சதியாலோசனை செய்து நம்பிக்கை துரோகம் செய்யும்படியும் கற்பித்த உம்மை என்ன செய்தால்தான் தகாது.

என்றாள். "இருக்கட்டும் செல்லம்! என்மேல் கோபம் வைக்காதே" என்று சொன்னபடியே அவள் கையைப் பிடிக்கப் போனார். அவள் சட்டென்று விலகி "நான் உமது செல்லமுமல்ல, செள்ளமுமல்ல. ஆகையால் என்னைத் தொடாதேயும். உமக்கு ஆள் கூட அடையாளம் தெரியவில்லை போலிருக்கிறது என்றாள். அப்போது அங்கு வந்த சுந்தரராஜு அவள் செல்லமல்லவென்றும் தனது செல்வமென்றும் சொன்னார். காமாக்ஷிராவ் திகைத்து நின்றார். அப்போது செல்வம் தனது கண்ணிற்குக்கீழ் மருவிருப்பதைக் காட்டி தன்பேர் செல்வமென்றும் தான் தான் டெப்டி மாஜிஸ்டிரேட்டிடம் சென்று செல்லத்திற்குப் பதிலாக பிரமாண வாக்குமூலம் கொடுத்த பெண்ணென்றும் தனது ஊர் கொடிகாமம் என்றும் சொல்லிக் கொண்டிருக்கும்போதே இதைக் கேட்டபடி வந்த டெப்டி மாஜிஸ்டிரேட் செல்வத்தைப் பார்த்து 'அனுபோகப்பட்ட மாஜிஸ்டிரேட்டாகிய என்னைக்கூட ஏமாற்றிவிட்டுச் சென்றவள் நீதானா? உன்னை ஆள்மாறாட்டம் என்னும் குற்றத்திற்காக ஏன் கைதிசெய்யக்கூடாது' என்று சிரித்துக்கொண்டே கேட்டார். அவளும் விளையாட்டாய், முன் தங்கள் துப்பறிவோரை ஏமாற்றி விட்டுப் பறந்தோடிய இறகுகள் இப்போதும் தனக்கிருக்கிறதென்றும் தன்னைப் பிடிக்கவரும்போது, தான், முன்போல் பறந்துவிட முடியுமென்றும் சொன்னாள். எல்லோருடைய முகங்களும் சந்தோஷத்தைக் காட்ட, காமாக்ஷிராவ்

முகம் மட்டும் தாரத்தை இழந்த கணவன் முகம்போல் கருத்திருந் தது. அப்பால் கைதிகளை யெல்லாம் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பிவிட்டு எல்லோருமாக ஸ்ரீனிவாசலுராஜுகாரின் அரண்மனை போய்ச் சேர்ந்தார்கள். ஸ்ரீனிவாசலுராஜுகாரு வழிநெடுக பால ரங்கராஜாவிடம்தான் அதிக பிரியமாய்ப் பேசிக்கொண்டு சென்றார்.

நிற்க, போலீசார் காவலிலிருந்து தப்பி ஓடிய காந்திமதியா பிள்ளை முதலிய மூவரும் விலங்குகளைத் தகர்த்தெறிந்துவிடும்படி செய்து நேராக அரண்மனைக்கு வந்து, காந்திமதியா பிள்ளை அறையில் புகுந்து, செல்லத்தை அடைத்து வைத்திருந்த அறைக்குப் போய்க் காந்த விளக்கின் உதவியால் ரொக்கம், நகைகள், கட்டாரி முதலியவை வைத்திருந்த இடத்தைப் பார்க்க, தான் வைத்து விட்டுவந்த இடத்திலேயே எல்லாம் இருக்கக் கண்டு அதிக சந்தோஷப்பட்டு அவைகளை எடுத்துக்கொண்டு மூவரும் படகேறி பொழுது விடிவதற்குள் அன்னியதேசம் போய் விடலாமென நினைத்து காந்திமதியாபிள்ளை தமது ஜோப்பியில் அவைகளை வைத்தார். அப்போது பின்னிருந்து யாரோ மூவர், அம்மூவர் தொண்டைகளையும் இறுகப் பிடித்ததாகத் தெரிந்தது. அவர்கள் மூவரும் விடுவித்துக் கொள்வதற்கு எவ்வளவு முயன்றும், விடாது அவர்கள் மூவருடைய கால்களைக்கட்டி குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு வருவதைப்போல் தூக்கிக்கொண்டு வந்து காந்திமதியாபிள்ளையின் அறையில் போட்டு மூடிப் பூட்டுப் போட்டுவிட்டு சின்னமீன் கந்தனும் அவனைப்போன்ற அவன் இரு கூட்டாளிகளும் அவ்வூர் கிராம முனிசிபும் ஷேக்முஸ் தபா ராவுத்தரும் வெளியே வந்தார்கள்.

சென்னையிலிருந்து கோவிந்தன் புறப்படுமுன், சுந்தரராஜுவிடம் சொல்லி சின்ன மீன் கந்தனை உடனே திருவீரராஜ பட்டணத்திற்கு அனுப்பும்படி லாஜரஸ்ஸுக்கு தந்தியடிக்கச் சொன்ன விவரத்தை வாசகர்களுக்கு இப்போது ஞாபக மூட்டுகிறோம், அத்தந்தியில் கண்டபிரகாரம் லாஜரஸ் மீன் கந்தனை அனுப்பினர். அவனைக் கோவிந்தன் சந்தித்து அவனுக்கு நம்பிக்கையுள்ள பல சாலிகளான இருவரைத் தன்னுடன் அழைத்து வந்து வைத்துக் கொள்ளும்படிக்கும் அவ்வூர் கிராம முனிசிப்பையும், ஷேக்முஸ்தபா ராவுத்தரையும் சாக்ஷிகளாகத் தன்னுடன் அழைத்து வந்து மறைவாய் வைத்திருக்கும்படிக்கும் அன்றிரவு எப்படியாவது காந்

திமதியாபிள்ளை தனித்தாவது அநேகமாய் இரு கூட்டாளிகளுடனாவது வருவாரென்றும் அவர்கள் நகைகள் முதலியவற்றை எடுப்பதை கிராம முனிசீபும் ஷேக் முஸ்தபா ராவுத்தாரும் பார்க்கும் வரை பொறுத்திருந்து அவர்களை நகைகள் சஹிதம் கைதி செய்து காந்திமதியா பிள்ளை அறையில் கட்டிப்போட்டு விட்டு அவர்கள் தப்பிப் போகாதபடி எல்லா இரகசிய வழிகளையும் அடைத்து விட்டுக் காவலிருக்கும்படியும் திட்டப்படுத்திவிட்டுதான் கோவிந்தன் சென்றானாதலால்தான் அவர்கள் மூவரும் தப்பிப் போவதைக்கண்டும் காணாதவர்போல் அபினயித்து நின்றார்.

ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜு வீட்டிற்கு வந்த டெப்டி மாஜிஸ்டிரேட் செல்லத்தைப் பார்க்கவேண்டுமென்று சொல்ல, அவள் புத்தி சுவாதீன மில்லாமலிருக்கிறாளென்றும் அவளுக்கு ஆட்களைக் கூட அடையாளம் தெரிவது கஷ்டமாகுமென்றும் ஜெயலக்ஷிமி சொன்னாள். அப்போது கோவிந்தன் சுந்தரராஜுவும் செல்வமும் ஒன்றாயிருப்பதை செல்லம் பார்த்தால் பொறாமையின் காரணமாக ஒருக்கால் புத்தி சுவாதீன மடையக் கூடுமென்று சொன்னார். பொறாமையின் சக்தி அபாரமென்றும் உலகத்தில் நடக்கும் காரியங்களில் பெரும் பாலானவை பொறாமையின் காரணமாகத்தான் நடைபெறுவதாகவும் அவ்வாறு பலர் புத்தி சுவாதீன மடைந்திருப்பதாகத் தான் வாசித்திருப்பதாகவும் ஆகையால் பரீட்சை பார்ப்பது நலமென்றும் சொல்லி ஆமோதித்தார். சுந்தர ராஜுகாருக்கு மட்டும் அப்பரீட்சை செய்ய இஷ்டமில்லை. ஏனென்றால் அவர்கள் சொன்னபிரகாரம் அவள் புத்தி சுவாதீனமடைந்து விட்டால் அதன் மூலமாய் செல்வத்திற்கும் தனக்குமுள்ள அன்னியோன்ய அன்புக்கு எங்கு பங்கம் உண்டாகுமோ எனப் பயந்து போக மறுத்தார். அப்போது செல்வம், தான், அவளை இருட்டில் தூர இருந்தே பார்த்ததால், மீண்டும் பார்க்க விரும்புவதாகவும் சுந்தரராஜுகாரின் இரு கைகளைப் பிடித்துக் கொண்டு கேட்கவே, அவருக்கு மறுக்கக் கூடவில்லை. அப்போதும் சுந்தரராஜுகாரு, தான், டெப்டி மாஜிஸ்டிரேட்டார் விசாரணை காலத்தில் ஓடிப்போயிருப்பதால், தான், இப்போது சட்டப்படி சர்க்கார் கைதியென்றும், ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கும், டெப்டி மாஜிஸ்டிரேட்டுக்கும் தான் அங்கிருக்கும் விஷயம் தெரிந்தபின் தன்னைச் சுயேச்சையாய்ப் போக விடுவது அவர்கள் நற்பெயர்களுக்கும் கியாதிகளுக்கும் குறைவாகுமென்றும் சொன்

ஞர். அப்போது டெப்டிமாஜிஸ்டிரேட் சுந்தரராஜுகாரு சொல்வது உண்மையாயினும், இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவ் காவலில் போனால், அவர், பந்தோபஸ்தாய் எங்கும் மறைந்து விடாதபடி சர்வ ஜாக்ரதையாகப் பார்த்துக் கொள்வாரென்றும், அத்துடன் தானும் கூடவருவதால், கைதியாகவே செல்லலாமென்றும், சிறித்துக்கொண்டே சொன்னார்; காமாக்ஷிராவை யார் எவ்வித ஏளனம் செய்யினும் பரவாயில்லை; செல்லத்தைப் பார்த்தால் போதுமென்று அவரும் கூடவே சென்றார். அங்கு சென்றதும் கோவிந்தன் நடுஹாலில் போட்டிருக்கும் சோபாவில் சுந்தரராஜுவையும் செல்வத்தையும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும்படிக்கும் மற்றவர்களையெல்லாம் பக்கத்தறையில் மறைவாய் இருக்கும்படிக்கும் வழக்கம் போல் ஜெயலக்ஷிமியைப் போய் செல்லத்திடம் நடுக்கதவைத்திறந்து வைத்துவிட்டு பேசிக் கொண்டிருக்கும்படிக்கும் திட்டம் செய்துவிட்டு தானும் மறைவாய் இருந்தார். ஜெயலக்ஷிமி போய் செல்லத்தின் பக்கத்தில் உட்கார்ந்தாள். "ஹா!சுப்பராஜு வந்துவிட்டாரா" என்றாள். அப்போது சுந்தரராஜுவிற்கு செல்லம் "ஏன் தன் சகோதரனைப் பற்றிக் கேட்கிறாள், செல்லத்திற்கும் அவருக்கும் என்ன சம்மந்தம்" என நினைத்தார். அவர் முகத்தில் கோபக்குறி காணவே செல்வம் அவரிடம் அதிக அன்பாய்ப் பேசினாள். அப்போது இருண்ட அவர் முகம் சற்று தெளிவடைந்தது. சுந்தரராஜு பேசும் வார்த்தைகள் செல்லத்தின் காதில் படவே முதலில் திகைத்தாள். அப்பால் மீண்டும் கவனித்துப் பார்த்தாள். சுந்தரராஜு ஒரு பெண்ணிடம் பேசுகிறாரென்று தெரிந்ததும் தன் புருவத்தின் பக்கத்தில் தன் கைவிரல்களை வைத்தமுக்கிக் கொண்டு கூர்மையாய்க் கவனித்தாள். கூடப் பேசும் பெண்ணின் குரல் தன் குரலோசைப் போல் கேட்கவே திடுக்கிட்டெழுந்தாள். அப்போது ஜெயலக்ஷிமி "செல்லம்! உட்காரு; எங்கே போகிறாய்?" என்று கேட்டாள். "பக்கத்தறையில் பேசுகிறவர்கள் யார்" என்று கேட்டாள். 'என் தகப்பனார் சுந்தரராஜுகாரும் செல்வமும் பேசி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்" என்று ஜெயலக்ஷிமி சொன்னாள். "அத்தானுடன் பேசி விளையாடுவது யார்?" என்று கேட்டாள் செல்லம். "யாரோ செல்வமாம்" என்றாள் ஜெயலக்ஷிமி. "செல்வம் என்பது யார்" என்று செல்லம் கேட்டாள். "கொளம்பு கொடிகாமம் காரியாம்; அவள் தான் இப்போது என் நாயனவுடன் இருக்கிறாளாம். உனக்கு

அதைப்பற்றிய கவலையென்ன? காமாக்ஷிராவ் சற்று நேரத்திற்கு முன்பு கூட உன்னைத் தேடிவிட்டுச் சென்றார். சுப்பராஜு சின்னுைவும் இப்போது வருவார்கள்' என்றாள் ஜெயலக்ஷிமி. உன் நாய்னு அவர்கள் கொடி காமத்தில் என் படத்தை வைத்து நித்யம் மாலைகளில் புஷ்பம் போட்டு என்னைப்போல் பார்த்து வருவதாகவும் வேறு எப்பெண்ணையும் கனவில் கூட கருதவில்லையென்றும் சொல்லி விட்டுப் போனாரே! இப்படி என்னை ஏமாற்றலாமா? என்றாள். “ஜெயலக்ஷிமி! நீ இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவின் சதியாலோசனைக் குட்பட்டு என் நாய்னுவைப் பிடித்துக் கொடுக்கப் பார்த்தாயே! அவரே நேரில் வந்து பார்த்து உன்னை அழைத்துக் கொண்டுபோய் அவர் தகப்பனரிடம் விடவில்லையா? அவர் உன்னைப் பயங்கரமான இடத்தில் அடைத்ததாகச் சொல்லவில்லையா? நேற்றுகூட என் சிற்றப்பா சுப்பராஜுவைப் பிடித்துக் கொண்டு நீ தொந்திரவு செய்யவில்லையா?'' என்றதும் அப்போது தான் ஏதோ அவள் ஞாபகத்திற்குவர அவள் உடல் முழுவதும் மயிர் கூச்செறிந்தது. உடனே எழுந்தாள். எழுந்த அவசரத்தில் அவள் தலை மயிர் அவிழ்ந்து முழங்கால் வரை தொங்கிற்று; கதவை படீரென்று திறந்ததும் செல்வமும் சுந்தரராஜுவும் உட்கார்ந்திருந்த சோபா இருக்கும் அறைக்குள் வந்து நின்று கொண்டு அவர்களிருவரும் உல்லாசமாய்ப் பேசிக் கொண்டிருப்பதைத் திறு திறுவென்று பார்த்தாள். சுந்தரராஜுவின் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் பெண் தன்னைப் போலவே யிருக்கவே தான் தான் அவளோ அவள் தான் தானே என திக்பிரமை கொண்டு சற்று நேரம் கவனித்துப் பார்த்து ஆக்ரோஷத்துடன் அலறிச் சென்று சுந்தரராஜுவின் மடியில் போய் உட்கார்ந்து தன் இருகைகளாலும் அவர் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவர் கன்னங்களில் மாறி மாறி முத்தம் கொடுத்தாள்.

செல்வத்துக்கு ஒரு பக்கம் பொறாமை யேற்பட்ட போதிலும் செல்லமடைந்த கஷ்டங்களை யெல்லாம் எண்ணி ஒன்றும் பேசாதிருந்தாள். சுந்தரராஜுவுக்கு இன்னது செய்வதெனத் தோன்றாமல் அவள் மனம் புண்ணாகும்படி நடந்தால் போன பைத்தியம் மீண்டும் வந்துவிடுமென கோவிந்தன் எச்சரித்தனுப்பியதை நினைத்து தமது வெறுப்பை அடக்கிக் கொண்டு இருந்தார். அச்சமயத்தில் கோவிந்தன் அங்கு வரவே, செல்வம் எழுந்து சுந்தரராஜுவின் பக்கத்தில் உட்கார்ந்தாள். அப்போது கோவிந்தன் ஜாடை காட்டியபடி

காமாக்ஷிராவ் அங்கு வர அவரை முன் பின் அறியாதவள் போல் செல்லம் இருந்தாள். அப்பால் மறைந்திருந்த எல்லோரும் ஒருவர் பின் ஒருவராகவர கோவிந்தன் கூப்பிட்டனுப்பியபடி சுப்பராஜுவும் அங்கு வந்தார். அவரைப் பார்த்தும் செல்லம் அவரைக் கவனியா மல் இருந்தாள். அப்போது கோவிந்தன் சுந்தர ராஜுகாரைப் பிரி ந்திருந்ததில் காமாக்ஷிராவ் அவளிடம் சேரு முன்னமே செல்லத்து க்கு புத்தி சிதறியிருந்ததாகவும், அப்படி புத்தி சுவாதீன மில்லாத காலத்தில் தான் அவள் சுப்பராஜு பேரில் மையல் மீறினளென்றும் அவ்விஷயங்களெல்லாம் அவளுக்கு இப்போது தெரியவே தெரியா தென்றும் அதற்கு அத்தாக்ஷிபாகப் பல சாஸ்திரப் புஸ்தகங்களைக் காட்டி அவள் உடம்பு சில தினங்கள் காமாக்ஷிராவுக்குச் சொந்தமா யிருந்தாலும் அவள் மனம் எப்போதும் போல் தூய்மையாய்த் தானிருக்கிறதென்றும் சொன்னதோடு செல்லமும் செல்வமும் சொந்த இரட்டைச் சகோதரிகளென்று சொல்லி அவர்களுடைய விருத்தாந்தங்களை எல்லோருக்கும் தெரியும்படி எடுத்துச் சொன் ஞர். அவர்கள் இருவரும் சொந்த இரட்டைச் சகோதரிகளென்று கோவிந்தன் சொன்னதும் அவ்விருவரும் ஒருவரை யொருவர் அணைத்து முத்தமிட்டுக் கொண்டு உண்மை சகோதரிகளாயினர். அப்பால் எல்லோருமாக ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் அரண்மனைக் குச் சென்று படுத்துக் கொண்டனர். ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கும் டெப்டி மாஜிஸ்டிரேட்டுக்கும் தனித்தனி அறைகளும் சௌக்கிய மான படுக்கைகளும் கொடுக்கப்பட்டிருந்தும் இருவருக்கும் தூக்கம் பிடிக்காததால் வெளியில் வந்து வெகு நேரம் வரையில் சுந்தராராஜு வின் விஷயத்தைப் பற்றி பேசிக் கொண்டிருந்து விட்டு ஒரு வித முடிவுக்கு வந்த பின் இருவரும் போய் சௌக்கியமாய்ப் படுத்து றங் கினர்கள்.

பதினேழாவது அத்தியாயம்

கோவிந்தன் துப்பு விவரித்தல்

கண்ணாரக் காண்பதும் பொய்,
காதாரக் கேட்பதும் பொய்,
தீர விசாரிப்பதே மெய்.

மறுநாட் காலையில் எல்லாரும் எழுந்து அவரவர்கள் வழக்கப் பிரகாரம் நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு காலை போஜனம் அருந்தியதும் காலை ஒன்பது மணிக்கு ஜில்லா மாஜிஸ்டிரேட், டெப்டி மாஜிஸ்டிரேட், ஸ்ரீனிவாசலு ராஜு, சுந்தரராஜு, செல்லம், செல்வம், சுப்பராஜு, பாலரங்கராஜு, ஜெயலக்ஷ்மி வந்து நடுஹாலில் உட்கார்ந்து கொண்டு ம-ா-ா-ஸ்ரீ கோவிந்தனவர்களைக் கூப்பிட விட்டு எல்லோரும் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலுராஜு இறந்து விட்டதாகவும், அவர் பிரேதம் காணமற் போனதாகவும், தேடிக் கொண்டிருக்கும்போது கோவிந்தன் எவ்வாறு ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரை உயிருடன் கொண்டு வந்து பந்தோபஸ்தாய் வைத்து வைத்தியம் செய்தார்களென்ற விவரத்தை அறிய தானே அதிக ஆவலுள்ளவராயிருப்பதால் அதை முதலில் தெரிவிக்கும்படி ஜில்லா மாஜிஸ்டிரேட் அவர்கள் கேட்க, கோவிந்தன் பின்வருமாறு சொன்னார்.

கோவிந்தன்:—ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரு, தான் சிறை வைத்திருந்த, செல்லத்தைக் காணோமென்று சொன்னது உண்மையென என் மனதில் பட்டவுடனே, செல்லம் எவ்வாறு யாரால் மீட்கப்பட்டிருக்கக் கூடுமென்று யோசனை செய்து பார்த்தேன். ஒன்றும் தோன்றவில்லை. இனி டெப்டி மாஜிஸ்டிரேட்டிடம் சென்று பிரமாண-வாக்குமூலம் கொடுத்த போலிச்செல்லம் பிரமாண வாக்கு மூலம் கொடுத்த பின் எப்படிச் சென்றாள்? அவள் யார்? என்று துப்பு விசாரித்தறிவதற்காகத் திருச்செந்தூர் சென்று கேட்டு விசாரித்ததில் டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள் இரகசிய துப்பறிபவனை அனுப்பிப் பார்க்கச் சொன்னதும், அவன் போலிச் செல்லத்தைப் பின் பற்றிச் சென்றதும், அவள் அவனை ஏமாற்றி விட்டு எவ்வாறோ மாயமாய் மறைந்த விஷயமும், டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்களின் வீட்டில் பாராயிருந்த போலீஸ்காரன் மூலமாய் சாமர்த்தியமாய் விசாரித்தறிந்து கொண்டு அன்று இரவு மீண்டும் திருவீரராஜபட்

டணம் வந்து செல்லத்தைப் பற்றி விசாரிப்பதற்காக வந்தேன். வந்ததும் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலுராஜுகாரு என்னைச் செல்லத்தை அடைத்து வைத்திருக்குமிடத்திற்கு அழைத்துக் கொண்டு போனபோது முதலில் என் கண்களை அவிழ்த்துப் பார்க்கக் கூடாது என்னும் நிபந்தனை மட்டும் ஏற்படுத்தி என்னிடம் உறுதி பெற்று அழைத்துச் சென்றதால் என்னை வண்டியில் ஏற்றி அழைத்துப் போகும்போதே எங்கெங்கே வண்டி திரும்பிற்றோ அந்தந்தத் திசைகளைக் கூடுமான வரையில் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்று எந்தெந்த திசையில் திரும்பியதாகத் தோன்றிற்றோ அந்தந்த திசைகளையும் எப்போதெப்போது கெட்டியான தரை, மேடு பள்ளமான தரை, மணல் தரை, முதலியவைகள் எந்தெந்தத் திருப்பங்களுக்கப்பால் வந்தனவோ அவைகளையும் கண்களைக் கட்டியிருந்தாலும், கைகள் கட்டவில்லையாதலால் இருட்டில் வண்டியில் உட்கார்ந்தபடியே சுருக்கெழுத்தில் குறித்துக் கொண்டே சென்ற குறிப்பை எடுத்துப் பார்த்துப் புறப்பட்ட இடம் முதல் பார்த்துக்கொண்டே செல்வதும், அவ்வாறு போகும்போது குறித்துக்கொண்டமாதிரி திருப்பங்களுக்குப் பின் கெட்டித்தரை, மேடு பள்ளத்தரை, மணல் தரை, சரிவர வராதபோது முன்னும் பின்னும் போய்ப் பார்த்தும், கடைசியாக சரிவர வழியைக் கண்டு பிடித்தபோது சின்னமீன்கந்தன் வீட்டில் தான் கொண்டு போய் விட்டதாக அறிந்தேன். ஆகவே செல்லத்தை வைத்திருந்தது ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலுராஜுகாரின் அரண்மனையின் ஓர் பாகத்தில் தான் என்றும் என்னை ஏமாற்றுவதற்காகவே ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரு இரகசிய வழியைக் காண்பிப்பது போல் என்னை அழைத்துக் கொண்டுபோய் அவ்வழிமுழுவதையும் சின்னமீன் கந்தன் வீடுவரை காட்டி விட்டு, செல்லத்தை வேறு எங்கோ அடைத்து வைத்திருக்கிறாரென்று நான் நினைத்துக் கொள்ள வேண்டுமென்று அவ்வாறு என்னை வண்டியிலேற்றி ஊரெங்கும் சுற்றி சின்னமீன் கந்தன் வீடுவரையில் கொண்டு வந்து சேர்த்த பின் படிகள் ஏறும்போது கைகளைத் தூக்கிப் பார்க்காதபடி அப்போது தான் கைகளைக் கட்டி இரகசிய படிகளின் வழியாய் அழைத்துப் போயிருக்கலாமென்றும் ஊகித்துக் கொண்டு அப்பால் செய்யவேண்டியவைகளைப்பற்றி யோசனை செய்து கொண்டிருக்கையில் கோபாலன் வண்டி ஓட்டிக் கொண்டு வந்தான். நானங்கிருப்பது தெரியாதபடி செடியின் மறைவில் போய் நின்றேன். வண்டியிலிருந்து கோபா

லன் நால்வரை இறக்கி குருடரை அழைத்துப் போவதைப் போல் அழைத்துப் போகும்போது அவர்களைப் பேசவே கூடாதென்றும் தான் காட்டும் ஆளை பேசாது தூக்கிக் கொண்டு வரவேண்டுமென்று மட்டும் சொல்லி அழைத்துச்சென்றான். அதில் ஏதோ சூதிருக்கிறதென்று அறிந்து கொண்டு அசையாது அங்கேயே நின்று கவனித்துக் கொண்டிருந்தேன். அவர்கள் உள்ளே சென்ற கொஞ்ச நேரத்தில் ஏதோ பளுவான வஸ்துவைத் தூக்கி வருவதாகத் தெரிந்தது. வண்டியில் ஏற்றும்போது தான் அவர்கள் தூக்கி வந்தது ஒரு ஆள் என்று தெரிந்தது. அத்துடன் கூடச்சென்ற நால்வருக்கும் கண்தெரியாதென்றும் அறிந்து கொண்டேன். தூக்கிக் கொண்டு வந்த ஆளை வண்டியில் ஏற்றிப் படுக்க வைத்தவுடன் கண் தெரியாத நால்வரையும் கோபாலன் ஏற்றி விடும்போது அவரவர்கள் பேர்களைச் சொல்லி அழைத்ததிலிருந்தும், அவர்கள் அவன் பேரைச் சொல்லி அழைத்ததிலிருந்தும் அவர்கள் பேர்களை அறிந்து கொண்டேன். எனக்கு ஆள் அடையாளம் அப்போது தெரியாது. உடனே வண்டி போகவும் சற்று தூரத்தில் வண்டியைப் பின் பற்றிச் சென்றேன். வண்டி போய் டாக்டர் வீட்டின் பின் பக்கம் நிற்கவே டாக்டர் வீட்டுக் கதவு திறந்தவுடன் அவ்வீட்டில் எரிந்த காந்தவிளக்கு வெளிச்சத்தில் தான் ஐவரையும் அடையாளம் பார்த்துக் கொண்டதோடு அவர்கள் எடுத்துக் கொண்டு வந்தது ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரைத்தான் என்றும் அறிந்தேன். அன்றைய தினம் முழுவதும் நான் திருச்செந்தூரில் சுற்றிக் கொண்டிருந்ததாலும், திருவீரராஜபட்டணம் வந்தது முதல் நான் போன வழியைத் தேடி பல மணி நேரம் ஆள் நடமாட்டமில்லாத காட்டுப் பாதையில் சுற்றி சுற்றித் திரிந்து கொண்டிருந்ததாலும் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் மரணச் செய்தி எனக்குத் தெரியாது. ஆகவே காந்தவிளக்கு வெளிச்சத்தில் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரை எடுத்துப் போவதாக அறிந்த உடனே இதில் ஏதோ சூதிருக்கிறதென்றும் ஆகையால் எனக்கு நேரக்கூடிய அபாயத்தைப் பொருட்படுத்தாது உள்ளே சென்று எப்படியாவது அவரை மீட்கவேண்டுமென்றும் தீர்மானித்தேன். டாக்டர் வழி காட்டிக் கொண்டு போக அவர்கள் ஐவரும் தூக்கிக் கொண்டு போனதால் நான் பின்னால் மெதுவாகச் சென்றதை அவர்கள் கவனிக்கவில்லை. ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரை சாஸ்திர சிகிச்சை செய்யும் பலகையின் மேல் கொண்டு போய்ப்படு

க்க வைத்ததும், டாக்டர் அவர்கள் ஐவரையும் ஒரு கதவைத் திறந்து விட்டு "அங்கு போய் உட்கார்ந்திருங்கள்; நான் பின்னாலேயே வந்து உங்களுக்குக் கண் தெரியும்படி மருந்து ஊற்றி கால்மணி நேரத்தில் உங்களுக்குக் கண்கள் தெரியும்படி செய்வதோடு, உங்களுக்குக் கொடுப்பதாய் வாக்களித்த ரூபாய்களும் கொடுக்கிறேன்" என்று சொல்லி விட்டுப் போய் பின் கதவை மூடிவிட்டு அவர்களை அனுப்பிய வாசலின் வழியாய்ச் சென்றார். இனி அவர் வர குறைந்தது கால்மணி நேரமாவது பிடிக்குமென நினைத்து அவர்கள் என்னைக் கண்டு பிடியாதபடி சோபாவின் கீள் மறைந்திருந்து மெதுவாக வந்து ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரைப் படுக்க வைத்திருந்த இடம் சென்றேன். டாக்டரும் அவர்களும் பேசிக்கொண்டிலிருந்து அங்கு கொண்டு வந்து வைத்தது ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் பிரேதமெனச் சொன்னது போல் தோற்றிற்று. நான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் கை நாடி பார்த்தபோது கை நாடி மிகவும் மெதுவாக அடித்துக் கொண்டிருந்ததாகத் தெரிய வந்தது. அவர் மயக்கமடைந்திருக்கிறாரே தவிர இறக்கவில்லையென்று அறிந்ததும் அந்த ரிஸப்ஷன சாலையில் வைத்திருந்த மயக்கம் தெளிவிக்கும் மருந்தை எடுத்து அவர் மூக்குக்கு முன் வைத்ததும் கண்களைத் திறந்து பார்த்தார். அவரைப் பேசவேண்டாமென்று ஜாடை காட்டி விட்டு அங்கு வைத்திருந்த புட்டியிலிருந்த பிராந்தியை அவர் வாயில் ஊற்றிய இரண்டு நிமிஷங்களில் எழுந்திருந்தார். தாமதம் செய்யாமல் அவரை மெதுவாக என்மேல் தாங்கியபடி நடந்து வரும்படி செய்து கதவண்டை போனதும் காந்தப் பத்தானை அமுக்க, கதவு மெதுவாகத் திறந்தது. வெளியிற் சென்றதும் கதவை மூடவே முன்போல் கதவு மூடி தானாகவே தாளிட்டுக்கொண்டது. எவ்வளவு ஜல்தியாய் அவரை அழைத்துச்செல்லக் கூடுமோ அவ்வளவு ஜல்தியாய் பாதைக்கு வெளியே யாரும் நடமாடாத ஒதுங்கலான ஒத்தடித்தடத்தின் வழியாய் அழைத்துக் கொண்டு சென்றேன். டாக்டரும், கோபாலன் முதலியோரும் அவர் இறந்து விட்டதாகவே பேசிக்கொண்டதாலும் பிரேதத்தை எடுத்துப்போன விஷயம் வெளியில் தெரிந்தால் தங்களை சித்ரவதை செய்வார்களென்று பேசிக் கொண்டதாலும், அவரை அவர் அரண்மனைக்கு அழைத்துப் போகாமல் மறைவாய் ஓரிடத்தில் ஒளித்து வைத்து விட்டு விசாரித்து விஷயங்களை அறிந்த பின் எவ்வாறு செய்வது உசிதமோ அவ்வாறு செய்வது நலமென்று

எனக்குள் யோசித்துக் கொண்டு ம-ா-ா-ஸ்ரீ பாலரங்க ராஜு அவர்கள் வீட்டிலேயே வைத்திருக்கலாமென்றும், அவ்வாறு அங்கு அழைத்துப் போய் வைத்திருப்பதால் அவர்களுக்குள்ளிருக்கும் மனக்கசப்புகள் நீங்கக்கூடுமென்றும் நினைத்து அவரை அழைத்துப் போய் தோட்டத்திலிருக்கும் சாய்வுப் பலகை மேல் படுக்க வைத்து விட்டு, ம-ா-ா-ஸ்ரீ பாலரங்க ராஜுகாரின் வீட்டிற்குள் போய் பார்க்க, எல்லோரும் ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் சாவுக்குப் போயிருப்பதாகவும் வீட்டில் தன்னைத்தவிர யாரும் இல்லையெனக் கிழவன் சொன்னதாலும் என்னை அந்த அறையில் இருக்கும்படி ம-ா-ஸ்ரீ பாலரங்கராஜு அனுமதியளித்ததாக அவனிடம்சொல்லி அறையைத்திறந்து விடும்படி சொன்னேன். அவன் முணங்கிக் கொண்டே திறந்து விட்டதும் வேலைக்காரனைப் படுத்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு, அவன் படுத்துறங்கிய பின் ம-ா-ா-ஸ்ரீ ஸ்ரீனிவாசலு ராஜுகாரை அழைத்து வந்து அங்கு படுக்க வைத்தேன். அவ்வளவு பலஹீனமான நிலையில் அவரை அவ்வளவு தூரம் நடத்தி அழைத்து வந்ததில் மீண்டும் சோர்வுற்று பிரக்ஞை தவறி விட்டார். அது முதல் அவரை அதிக ஜாக்ரதையாகக் கவனித்துக்கொண்டும் வேண்டும் மருந்துகள் கொடுத்தும் வந்தேன். பாலரங்க ராஜு ஒரு நாளைக்கு நான்கு முறை அவர் வீட்டிற்கு வருவதும் வந்து கால் மணி நேரம் வரை உள்ளே போயிருந்து மீண்டும் ஸ்ரீனிவாசலுராஜுகாரின் அரண்மனைக்குப் போய் விடுவதால் அந்த மூன்று தினங்கள் வரையில் நான் அவர் கண்களில் படவுமில்லை: வேலைக்காரனுக்கும் நானங்கிருக்கும் விஷயம் அவரிடம் தெரிவிக்க சாவகாசமுமில்லை. விசாரணையெல்லாம் முற்றுப் பெற்று எல்லோரும் போய் விட்ட பின் ம-ா-ஸ்ரீ பாலரங்கராஜு அவர்கள் ஸ்திரமாக அவர் வீட்டிற்கு வந்த நாள், ம-ா-ா-ஸ்ரீ பாலரங்க ராஜுவும், ஜெயலக்ஷ்மியும் பேசிக் கொண்டிருக்கும்போது நான் வெளியிலிருந்து போய் நான் இன்னாரென்று தெரிவிக்க, ம-ா-ா-ஸ்ரீ பாலரங்க ராஜுகாரும், ஜெயலக்ஷ்மியும் ம-ா-ஸ்ரீ ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் பிரேதத்தைக் கண்டு பிடிக்கும்படி வெகுவாய் வேண்டிக் கொண்டனர். பக்கத்தில் வேறுயாருமில்லாததால் மெதுவாக ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரை ஸ்ரீமான் பாலரங்க ராஜுகாரின் வீட்டிலேயே வைத்துக் கொண்டு ஸ்ரீனிவாசலுராஜுகாரின் பிரேதத்தைத் தேடச் சொல்வது எனக்கு அத்யந்த ஆச்சரியத்தைக் கொடுப்பதாகச் சொன்னேன். அவர்களிருவரும் சினந்த முகத்துடன் இப்பேர்ப்பட்ட துக்ககரமான விஷ

யதநல என்னைப்போன்ற கியாதி பெற்றவர்கள் விளையாட்டாகப் பேசுவது உசிதமல்லவென்று சொன்னார்கள். நான் எப்போதும் எவரிடமும் விளையாடுவதில்லை யெனவும் உண்மையையே எப்போதும் பேசுவதாகவும் சொல்லி நான் சொல்வது உண்மை யென உடனே ருஜுப்படுத்துவதாகச் சொல்லி அவர்களை அழைத்துச் சென்று ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜு படுத்திருக்கும் அறையைத் திறந்து காண்பித்தேன். அவர்களடைந்த ஆச்சரியத்திற்கும் சந்தோஷத்திற்கும் அளவேயில்லை. உடனே அவ்விஷயத்தை எல்லோருக்கும் தெரிவிக்க வேண்டுமென்று ஜெயலக்ஷிமி சொன்னாள். அவருக்கு யாரோ விஷம் கொடுத்ததால்தான் அவருக்கு பிரக்ஞையில்லாமற் போனதாகவும் அப்போதுதான் டாக்டர் பரிசோதித்து இறந்து விட்டதாகச் சொன்னதாகவும் அவ்வாறு விஷமிட்டவர்களின்னாரென்று திட்டமாய் அறியுமுன் சொல்வதால் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலுராஜுகாரின் பிராணனுக்கு மீண்டும் ஆபத்தேற்படக் கூடுமென்றும், ஆகையால் அந்த ஆசாமியைக் கண்டு பிடித்த பின் தெரிவித்தாலொழிய திட்டமாய் அந்த நபர் அவர் பிராணனுக்கு மீண்டும் ஆபத்தை விளைவிப்பாரென்றும் சொன்னேன். நான் சொல்வதுதான் சரியென்றும், ஆகையால் எவர்க்கும் தெரியாமலிருப்பதே நலமென்றும் ஸ்ரீமான் பாலரங்கராஜுகாரும் சொல்லவே ஜெயலக்ஷிமியும் சரியென ஒப்புக் கொண்டாள். அதுமுதல் வேளா வேளைக்கு மருந்து, ஆகாரம், முதலியவைகளை அவர்களையே கொடுத்து கவனித்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு நான் மற்ற வேலைகளைப் பார்க்கச் சென்றேன்.

என்றார் மீண்டும்,

ஜில்லா மாஜிஸ்டிரேட்:—தாசி செல்லம் திருவீரராஜ பட்டணத்தில் பாலரங்கராஜு அவர்கள் வீட்டில் இருந்தது தங்களுக்குத் தெரியுமா? தெரியாதா?

கோவிந்தன்:—விசாரணை நடந்து கொண்டிருந்த போதும் ஜெயலக்ஷிமியுடன் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் வீட்டிலேயே பாலரங்கராஜு சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதும் கிரமமாக குறிப்பிட்ட நான்கு நேரங்களில் அவர் தினமும் தன் வீட்டிற்கு வந்து அறைக்குள் சென்று கால்மணி நேரம் இருந்து சென்றதில் ஏதாவது விசேஷம் இருக்க வேண்டுமென ஊகித்து, அவர் இரண்டாம் நாள் இரவு சென்றபின் என்னிடமுள்ள பல சாவிகளைப் போட்டு அந்த அறையைத் திறந்து பார்க்க, செல்லம் படுத்திருக்கக் கண்டேன். அவளை எழுப்பிப் பேச முயன்றதில் அவளுக்கு பைத்

தியம் பிடித்திருந்ததாகத் தெரிந்து கதவைப் பூட்டிக்கொண்டு வெளியே வந்துவிட்டேன். ஸ்ரீமான் பாலரங்க ராஜு-காரும், ஜெயலக்ஷிமியும், என்னிடம் தாசி செல்லத்தைக் கொண்டு வந்து அவ்விடத்தில் வைத்திருக்கும் விவரம் சொல்லவுமில்லை; நான் எனக்கு அவ்விஷயம் தெரியுமென்று காண்பித்துக் கொள்ளவுமில்லை.

டேப்டி மாஜிஸ்டிரேட்:—நான் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜு-காரின் பிரேதத்தைக் கண்டு பிடிக்கும்படி சொன்னபோது என்னிடம் அது அசாத்பமான காரியமென்றும், அதில் நேரம் செலவிடுவது வியர்த்தமேயென்றும் பொய்தானே சொன்னீர்கள்.

கோவிந்தன்:—நான் பொய் சொல்லவேயில்லை. உண்மையைத்தான் சொன்னேன். எப்படியென்றால் நான் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜு-காரை உயிருடன் ஸ்ரீமான் பாலரங்கராஜு-காரு வீட்டில் பார்த்துவிட்டு வந்த சில நிமிஷங்களில் தாங்கள் அவர் பிரேதத்தைக் கண்டு பிடிக்கச் சொன்னால், "தற்காலம் அவர் பிரேதத்தைக் கண்டு பிடிப்பது முடியவே முடியாதென்றேன்" அது உண்மைதானே!

டேப்டி மாஜிஸ்டிரேட்:—"வல்லவனுட்டிய பம்பரம் மணலிலுமாடும்" என்பதுபோல் தங்கள் சாமர்த்தியத்தால் சத்தியமே பேசினதாகவும் பொய் சொல்லவில்லை யென்றும் நிரூபித்து விட்டீர்கள். ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜு-உயிருடனிருக்கிறாரென்று என்னிடம் சொல்லி யிருந்தாலென்ன?

கோவிந்தன்:—அவர் உயிருடனிருந்த விஷயம் அப்போதே நால்வருக்குத் தெரியும். அதுவே இரகசியமா யிருப்பது கஷ்டம். தங்களிடம் சொல்லி விட்டால் தாங்கள் ஷை விஷயத்தை எவரிடமும் சொல்ல மாட்டீர்களென்றாலும் ஜில்லா மாஜிஸ்டிரேட் முதலியவர்கள் கேட்டால் உண்மையை மறைத்துச் சொல்ல உங்களால் முடியுமா? முடியாதே! தாங்கள் ஒருபோதும் பொய் பேசமாட்டீர்களாதலால் உங்களை அக்கஷ்டமான நிலையில்விட விரும்பவில்லையாதலால் தான் தங்களிடம் சொல்லவில்லை.

ஜில்லா மாஜிஸ்டிரேட்:—சீதாராம சாஸ்திரி கொடுத்த பிரியாதின் நகல் என் பெட்டியில் இருக்கையில் ஸ்ரீமான் சுந்தரராஜு-காரு அதன் நகலை ஐக்கோர்ட்டில் தாக்கல் செய்து தடையுத்தரவு பெற எவ்வாறு சாத்யமாயிற்றென்று தங்களுக்குத் தெரியுமா?

கோவிந்தன்:—ஸ்ரீமான் சுந்தரராஜு-காருக்குத் தெரியாத வக்கீல்களாவது, வக்கீல் குமஸ்தாக்களாவது, டைப் அடிப்போராவது கிடையாது. அவர் சிற்றுண்டி சாப்பிடப் போகும்போது எத்

தனை பேர்கூடச்சென்றாலும் அல்லது அவருக்கு முன்பேபோய் சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும் எல்லாருடைய சிற்றுண்டி கணக்குகளையும் ஸ்ரீமான் சுந்தரராஜுகாரு எவ்வித காரணமுமின்றி கொடுத்து விட்டுப் போவது வழக்கம். அவரிடம் போய் எவ்வித உதவி கோரியவர்களையும் சும்மா அனுப்பவே மாட்டார். ஆகையால் எல்லோருக்கும் அவர் பேரில் அபிமானம் உண்டு. எந்த வக்கீலாகிலும் வக்கீல் குமஸ்தாக்களையாகிலும் அவர் ஏதாவது கேட்டால் அவரிடம் உண்மையைச் சொல்லி அவர் கேட்கும் நகலை அப்போதே கொடுத்து விடுவார்கள்; ஏன்? தங்கள் ஆபீசிலுள்ள குமாஸ்தாக்களைக் கூட ஸ்ரீமான் சுந்தரராஜு கேட்டால் எதுவும் எடுத்துக் கொடுத்து விடுவார்கள். ஸ்ரீமான் சீதாராம சாஸ்திரிகள் ஸ்ரீமான் மிராசு சுப்பய்யரவர்களுடன் பாளையங்கோட்டை சென்றாரென்ற விஷயம் கேள்விப்பட்டவுடனே ம-ா-ஸ்ரீ சுந்தரராஜு பாளையங்கோட்டை போனதாகத் தெரிகிறது. வக்கீல் குமஸ்தாக்களையாவது தங்கள் குமஸ்தாக்களையாவது அவர் நகல் கேட்டிருந்தால் திட்டமாய்க் கொடுத்திருப்பார்கள். யார் அவருக்குக் கொடுத்தார்களென்று சுந்தரராஜு தன் தலை போனாலும் காட்டிக் கொடுக்கமாட்டாராதலால் அது விஷயத்தைப் பற்றி அதிகமாய் விசாரிப்பது உசிதமல்லவென்று நினைக்கிறேன்.

என்று சொன்னதும் ம-ா-ஸ்ரீ சுந்தரராஜுவைப் பார்த்து நான் சொன்னது சரிதானா என்று கோவிந்தன் கேட்க அவர் "ஆம்" என்று தலையசைத்தார்.

ஜில்லா மாஜிஸ்டிரேட:—ம-ா-ஸ்ரீ சுந்தரராஜு சொத்துக்களை கவர்ன்மென்ட்டார் பறிமுதல் செய்ய முடியாதபடி செய்தவர்கள் யார்? எப்போது?

கோவிந்தன்:—மூங்கில் வெட்டிய சண்டை ஏற்பட்டவுடனே எப்போது அந்த வியாஜ்யம் ம-ா-ஸ்ரீ டெப்டி மாஜிஸ்டிரேட் இராமானுஜலு நாயுடுகாரிடம் போயிற்றோ, அப்போதே, இதில் விபரீதம் உண்டாவது நிச்சயம் என அறிந்த ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரு அவ்வாறு முன் கூட்டி யுக்தி செய்து பாகப்பிரிவினை செய்ததோடு ம-ா-ஸ்ரீ சுந்தரராஜுகாருக்குச் சொந்தமான சகல சொத்துக்களையும் சென்னை வக்கீல் ம-ா-ஸ்ரீ ஸ்ரீனிவாச ஐயங்காரவர்களுக்கு விற்று விட்டார்கள். ஸ்ரீனிவாசலு ராஜு எப்போது கேட்டாலும் வக்கீலவர்கள் திரும்பப் பத்திரம் எழுதி ரிஜிஸ்டர் செய்து கொடுத்து விடுவார்கள், இப்போதும் அந்த சொத்துகளெல்லாம்

ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் பராமரிப்பில் தான் இருக்கின்றன.

செல்லம்:—என்னை சிறையில் வைத்து ஹிம்சித்தபோது சீறிக் கடிக்க வந்த பாம்புகள் கடிக்காமல் போனதேன்?

கோவிந்தன்:—அவைகள் உண்மையான பாம்புகளல்ல. காந்த சக்தியால் பத்தானை அமுக்கின மாத்திரத்தில் உயிருள்ள பாம்புகளைப்போல் சீறிக்கொண்டு குறிப்பிட்ட தூரம் வரையில் வந்து அப்பால் சென்று விடும்படி சூக்ஷ்மமாய் அமைத்த போலிப் பாம்புகளென்று நான் ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்தேன்.

செல்லம்:—நானும் செல்வமும் இரட்டைப் பிள்ளைகளென்று எவ்வாறு ஊகித்தீர்கள்?

கோவிந்தன்:—ம-ா-ஸ்ரீ ஸ்ரீனிவாசலு ராஜு மூர்ச்சித்து இறந்ததாகக் கருதப்பட்டு அவர் பிரேதம் காணோமென்று தேடியபோது நடந்த போலீஸ் விசாரணையில் 131வது பக்கத்தில் 6வதாக எழுதப்பட்ட போலீஸ் குறிப்பில் ஸ்ரீனிவாசலு ராஜுவின் பாங்க் தெரிசன உண்டியல் புஸ்தகத்தில் கிழித்துக் கொடுத்திருந்த பாதி காகிதங்களிளெல்லாம் இன்னாருக்கு இவ்வளவு தொகை அந்தந்த தேதியில் கொடுக்கப்பட்டதென்று குறிக்கப்பட்டிருக்க, கடைசி காகிதத்தில் மட்டும் அவ்விவரங்கள் ஒன்றும் எழுதப்படாமல் காலியாயிருந்தது" என்ற குறிப்பிருந்தது. அந்த நம்பருள்ள உண்டியல் யார் பேருக்கு எவ்வளவு தொகைக்கு கொடுக்கப்பட்டதென்றும் யாரால் மாற்றப்பட்டதென்றும் எனது காரியஸ்தர்கள் மூலமாய் விசாரித்து அறிந்து தந்தி மூலமாய்த் தெரிவிக்கும்படி சொன்னதில் ஸ்ரீதரர் கம்பெனியின் சென்னை காரியஸ்தர் பேருக்கு ரூபாய் இரண்டு லக்ஷங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அவரால் தான் மாற்றப்பட்டதென்றும் அன்றே அவர்கள் தலைமை ஆபீசாகிய கொடிகாமத்திற்கு அத்தொகையைத் தந்தி மூலமாய் அனுப்பப்பட்டதாகவும் மறு தினமே மாற்றப்பட்டிருப்பதாகவும் பதில் கிடைத்தது. முந்தின நாள் இரவு கொடுக்கப்பட்ட அந்த உண்டியல் தபால் மூலமாயாவது அல்லது ஆள் மூலமாய் ரெயிலிலாவது அனுப்பப்பட்டிருந்தால் மறுநாள் மாற்றியிருப்பது சாத்யமல்ல. ஆகவே ஆகாய விமானத்தின் மூலமாய்த் தான் ஸ்ரீமான் சுந்தரராஜுவால் கொண்டு போகப்பட்டிருக்க வேண்டுமென்று ஊகித்தறிந்தேன். ஆகவே ஸ்ரீமான் சுந்தரராஜுகாருக்கும் ஸ்ரீதரன் கம்பெனிக்கும் ஏதோ சம்மந்தம் இருக்கக்கூடுமென்றும் நம்பினேன். டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்

ளிடம் போய் பிரமாண வாக்குமூலம் கொடுத்த போலீச செல்லமும் செல்லமும் அனேகமாய் ஒரே மாதிரியா யிருந்ததால் இருவரும் இரட்டைப் பிள்ளைகளாயிருக்கக் கூடுமென்று ஊகித்தேன், டெப்டி மாஜிஸ்டிரேட்டிடம் பிரமாண வாக்குமூலம் கொடுத்து விட்டு சென்ற போலீச் செல்லம் மதில்சுவர் வரை போனதை அவளைப் பின் பற்றிச் சென்ற துப்பறிவோன் பார்த்தான். அம்மூலை திரும்பியதும் அவள் மாயமாய் மறைந்து விட்டதாக அவன் சொன்னதாலும், அப்போது ஏதாவது சத்தம் கேட்டதா என்று நான் அவனைக் கேட்டபோது அவன் யோசனை செய்து பார்த்து ஏதோ சிறு சத்தம் எங்கோ கேட்டதாகச் சொன்னதாலும் போலீச் செல்லம் ஆகாய விமானத்தின் மூலமாய்த்தான் மறைந்திருக்க வேண்டுமென்று ஊகித்தேன், தேவதாசி லக்ஷ்மி கும்பகோணம் மகாமகத்துக்குப் போய் திரும்பி வந்தபோது தான் செல்லத்தைக் கொண்டு வந்ததாகவும், அவள் கும்பகோணம் போகும்போது கெர்ப்பமா யிருப்பதாக யாரும் சொல்லாததாலும் செல்லத்தைக் கும்பகோணத்தில் எவரிடமாவது தான் வாங்கி வந்திருக்க வேண்டுமென்றும் ஊகித்து அநனுண்மையை அறிவதற்காக அவளிடம் நேரில் போய்க் கேட்டால் உண்மை உரைக்க மாட்டாளென்றும் ஆகையால் என்னிடம் அவளுக்கு நம்பிக்கை யுண்டாகும்படி செய்வது அத்யாவசிய மென்றும் தோன்றிற்று. தனது சம்சாரத்திடம் பல வருடங்களுக்கு முன் கோபித்துக் கொண்டு யாரிடமும் சொல்லாமல் கொளம்பு சென்ற பரமசிவம் பிள்ளை யென்பவர் தனது விடா முயற்சியினால் பெருத்த வியாபாரம்செய்து தனவானாகியபின், தனது வீண் சந்தேகத்தாலும் மற்றவர்கள் சொன்ன கோள் வார்த்தைகளைக் கேட்டதாலுமே தனது பத்னியை அநியாயமாய்ப் புறக்கணித்து வரும்படி நேரிட்டதென்றும் சந்தேகமற அப்போது தெரிந்து கொண்டதும் திருநெல்வேலியில் தான் போகும்போது தனது பெண்ஜாதியிருந்த விலாசத்திற்குப் பல கடிதங்கள் எழுதியும் அவள் அங்கில்லையென்றும் சென்ற இடம் தெரியாதெனக் கடிதங்கள் திருப்பப்பட்டதாலும் தனது பெண்ஜாதியைக் கண்டு பிடிக்கும்படி பரமசிவம் பிள்ளை கேட்டுக் கொண்ட பிரகாரம் நான் விசாரித்து அவள் திருவீரராஜ பட்டணத்தில் இருப்பதாகத் தெரிவித்ததின் பேரில் அவர் அன்று வருவதாக எனக்குத் தந்தி கொடுத்திருந்தார். அதன் மூலமாய் பொது ஜனங்

களையும், தேவதாசி லக்ஷிமியையும் பிரமிக்கச் செய்யலாமெனவும் தேவதாசி லக்ஷிமிக்குத் தன்னிடம் அபார நம்பிக்கை பிறக்கும்படி செய்து பின் செல்லத்தைப் பற்றிக் கேட்டால் உண்மை யுரைக்கக் கூடுமென நம்பி சாமியார் வேஷம் பூண்டு லோகுவிற்குச் சொன்ன விஷயம் அப்போதே பலித்த உடனே ஜனங்களைப் பிரமிக்கச் செய்த தின் மூலமாய் தேவதாசி செல்லமும்வா, அவனிடம் என்னைக்கண்டு கேட்டால் செல்லத்தின் இருப்பிடம் தெரியுமென்று சொல்லிவிட்டு என்னை சுற்றிக் கவனித்திருந்தவர்கள் கண் அயரும் வரை காத்திரு ந்து அவர்களெல்லோரும் கண் அயர்ந்ததும் தண்ணீரில் மூழ்கியதும் தண்ணீருக்குள்ளாகவே மூங்கியபடி கொஞ்ச தூரம் சென்று அப் பால் மூச்சுவிடுவதற்கு தலையை மட்டும் மல்லாந்தபடி வெளிக்குத் தூக்கி அக்கரை சேர்ந்து எல்லோரையும் ஏமாற்றி அப்பால் தேவ தாசி லக்ஷிமி என்னைத் தேடி அனுத்து வீடு திரும்பும்போது எதி ரில் போய் பிகுவுடன் பேசி செல்லத்தைப் பற்றிய சங்கதி கேட்டு இரட்டைக் குழந்தைகளில் ஒரு குழந்தையை தேவதாசி செல்லம் வாங்கி வந்ததாக ஸ்திரப்படுத்திக் கொண்டு கும்பகோணம் சென்று மற்றக் குழந்தையைப் பற்றிய விவரமறிந்து செல்வத்தைக் கண்டு பிடித்தேன்.

செல்வம்:—ஓட்டலி காடி இன்னாரென்று எவ்வாறு ஊகித்து அவர்களைக் கண்டு பிடித்தீர்கள்?

கோவிந்தன்:—டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள் டெப்டி கலெக் டர் மாதவராஜு காரின் வீட்டில் நடந்த திருட்டு அந்த ஜில்லாவிலு ள்ள திருடர் கூட்டத்தாரால் நடந்தேற வில்லையென்று அஜ்ஜில்லாவி லுள்ள தலைமைக்காரர்களைக் கேட்டுத் திட்டமாய்த் தெரிவித்து விட் டதாலும், சென்னையில் ஓட்டலி காடியென்ற இரண்டு பேர்போன திருடர் இருப்பதாக எனக்கு முன்னமே தெரிந்ததாலும், அத்திருடு போன அன்று அவ்விருவரும் சென்னையி லிருந்தார்களா யென்று விசாரிக்க அவர்கள் அன்று சென்னையிலில்லையென்றும் திருச்சந்தூர் சுப்ரமண்ய ஸ்வாமி சன்னதிக்கு யாத்திரை போய் வந்ததாகக் கேள் விப்பட்டதாலும் அவர்களாகத்தான் இருக்கலாமென்று ஊகித்து அவர்கள் திட்டமாய் மாலையில் ஆயிரம் விளக்கு கள்ளுக் கடைக்கா வது சாராயக் கடைக்காவது வருவது வழக்கமாதலாலும் உன்னை அங்கு கொண்டுபோய் வைத்திருந்து அவர்களைப் பேச வைத்து உறுதி செய்து கொண்டேன்.

பாலரங்க ராஜு:—அன்றிரவு ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜு காரு என்னை அழைத்துப் புதிதாக எழுதிய வில்லைக் காட்டி நான் ஜெயலக்ஷ்மியை விவாகம் செய்து கொள்வதாகில் ஒரு செம்புக்காசு சொத்துக்கூட ஜெயலக்ஷ்மிக்கு இல்லாமல் செய்து விடுவதாகச் சொல்ல, நான் அவளணிந்திருக்கும் நகைகளைக்கூட கழற்றிக்கொண்டு பிறந்த உருவமாய் அவளை விவாஹம் செய்து கொள்ளத் தயாரென்று நான் சொன்னபோது மணியடித்ததும் என்னைப் பால் சாப்பிடச் சொன்னார்களே! எதற்காக? அப்போதே பாலில் விஷம் கலக்கப்பட்டிருந்ததா? அப்படியாகில் என்னைவிட அனேக மடங்கு திட சரீரியாகிய ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரு பிராண மூர்ச்சையடைந்திருக்க நான் மட்டும் மயக்க மடைந்து தெளிந்தேதேன்?

கோவிந்தன்:—தாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது மணியடித்தவுடனே சுரங்க வழியாய் சுந்தர ராஜு வருகிறாரென்றும் அவரைத் தாங்கள் கண்டுவிட்டால் தாங்கள் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டாகையால் அவரைப் பிடிக்க ஏற்பாடு செய்வீர்களென்றும் நினைத்துத் தங்களைப் போகும்படி சொன்னார்கள். தங்கள் விவாஹ விஷயத்தில் அவர் மனம் மாறுதலடைந்ததாகத் தாங்கள் உணர்ந்தீர்களேயாகில் ஒரு நிமிஷமாவது அப்போதே பேசவேண்டுமென்றுகேட்டீர்கள். தாங்கள் போகவே மாட்டீர்களென்று ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாருக்கு நன்றாய்த்தெரியுமாகையால் அவர் மாமூலாய் சாப்பிடும் கோரக்கர் மூலிகை அதாவது கஞ்சா சேர்த்துக் காய்ச்சியபாலைத் தங்களுக்குக் கொடுத்ததால் தங்களுக்கு அதுவரையில் கஞ்சா கலந்த பால் சாப்பிட்டு வழக்கமில்லையாதலால் கட்டாயம் சில நிமிஷங்களில் மயக்கமடைவீர்களென்று அவருக்குநன்றாய்த் தெரியுமாதலால் தங்களுக்குப் பாதிப் பாலை ஊற்றிக் கொடுத்து விட்டு பாதியை அவர் சாப்பிடுவதாகப் பாவனை செய்துகொஞ்சம் சாப்பிட்டு விட்டு மீதியை வைத்துவிட்டார். அவருக்கு நித்யம் சாப்பிட்டு வழக்கமாதலால் மயக்கத்தை உண்டாக்காது நல்ல தூக்கத்தைத்தான் கொடுக்கும். அவர் மீதியை வைத்திருந்தபாலில் தான், பின், காந்மதியாபிள்ளை சமையம் பார்த்து விஷத்தைக் கலந்து விட்டார்.

ஜில்லா மாஜிஸ்டிரேட்:—என்னைப் பனைமரத்தில் கட்டிக்கொண்டு 1—2—3 சொல்லி வெள்ளையத்தேவரை சுடச்சொன்ன உடனும் அவன் சுடுமுன்னும் ஓரே ஒரு வெடி சத்தம்தான் கேட்டது. சுந்தரராஜுவும் செல்வமும் ஒவ்வொரு கைத்துப்பாக்கி வைத்துக்

கொண்டு வந்தார்கள். அவர்களிருவரும் ஏககசமயத்தில் சுட்டதாக வைத்துக் கொண்டாலும் வெள்ளையத்தேவர் கையில் இரண்டு துப்பாக்கி குண்டுகள் தானே பாய்ந்திருக்க வேண்டும்; மூன்று குண்டுகள் பாய்ந்திருக்கிறதே! அது எப்படி?

கோவிந்தன்:—அந்த ஆபத்தான சமையத்தில் ஸ்ரீமான் சுந்தர ராஜுலுகாரும் செல்வமும் வந்து உதவி புரிவார்களென்று நான் எதிர் பார்க்க வில்லையாதலால் உங்களுக்கெல்லோருக்கும் அபாயம் நேராதபடி பார்ப்பதற்காகத்தயாராய்சொள்ளமாடத்தேவன்வேஷம் போட்டுக் கொண்டு ஆலமரத்துப் பொந்தில் மறைந்திருந்து நான் தான் சுட்டேன். நாங்கள் மூவரும் ஏக சமையத்தில் சுட்டதால் ஒரே ஒரு வெடி சத்தம் தான் கேட்டது. நான்சுட்டபிற்பாடு தான் ஸ்ரீமான் சுந்தர ராஜுலும் செல்வமும் அந்த ஆபத்தான சமயத்தில் வந்ததாகவும் நான் சுட்டபோதே அவர்களும் சுட்டதாகவும் தெரிந்து தான் அவர்கள் என்ன செய்கிறார்களென்று பார்ப்பதற்காக அப்போதும் வெளி வராமல் காத்திருந்து ஸ்ரீமான் சுந்தரராஜுலுகாரையும் செல்வத்தையும் கட்டிய பின் சொள்ளமாடத் தேவன் உருவத்துடன் ஆலமரப் பொந்திலிருந்து குதித்தேன். ஸ்ரீம... வாசலுராஜுலுகாரை ஸ்ரீமான் பாலரங்கராஜுலுகாரு வீட்டி... படுக்க வைத்துவிட்டு ஸ்ரீமான் பாலரங்க ராஜுலுகாரையும் செல்லத்தையும் தாத்தா அவர்களைக் கவனித்துக் கொள்ளச் சொல்லிவிட்டு நான் போனபின் தாத்தா அவர்கள் மலஜலபாதைக்குப்போனால் ஜெயலக்ஷிமி எடுக்க, கழுவ, கூச்சப்பட்டதாலும், பாலரங்க ராஜுலு அவர்களால் தனியாய் அவ்வேலைகளைச் செய்ய சாத்யமில்லாமலிருந்ததாலும், யாருக்கும் தெரியாமல் இரகசியமாய் சொள்ளமாடத் தேவனை ஜெயலக்ஷிமி அங்கு வரும்படி சொல்லி அவனுடைய எஜமானரைக் கவனித்துக் கொள்ளும்படி சொல்லவே அவன் அதிக சந்தோஷத்துடன் அங்கேயே எவர்க்கும் தெரியாமல் எஜமானரிடமே இருந்து வந்தான். நான் ஸ்ரீமான் டெப்டிமாஜிஸ்டிரேட்டவர்களுக்குக் கொடுத்த தந்தியின்படி திருநெல்வேலி ஸ்டேஷனில் நானும் ஒட்டலி காடியும் வந்தபோது என்னை டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள் சந்தித்ததும் அன்று ரெயில் போன பின் காந்திமதியா பிள்ளையை சப்ஜெயிலிலிருந்துவிடுவிக்கும்படி சொன்னபிரகாரம் அவர்கள் விடுவிப்பதாய்ச் சொன்னதால், அவரை விடுவித்த உடனே கட்டாயமாய் காந்திமதியா பிள்ளை திருவீரராஜபட்டணம் தான் வருவாரென்றும்

வந்தவுடன் அவருடைய கூட்டாளிகள் அவருடன் பேசுவதற்குப் பிரயத்தனப் படுவார்களென்றும் ஆகையால் அங்கிருந்து அவரைக் கவனிப்பது அவசியமென்றும், வேறு யாராவது அங்கிருந்தால் காந்திமதியா பிள்ளை சந்தேகிப்பாரென்றும் ஆகையால் அவ்வீட்டிலேயே வேலை செய்து கொண்டிருந்த சொள்ளமாடத் தேவன்போல் வேஷம் பூண்டு இருந்தேன். நான் சொள்ளமாடத் தேவன் உருக் கொண்டு வந்தவுடன் வேலைக்காரர்களெல்லாம் என்னைச் சுற்றிக் கொண்டு பேசும்போது அவர்களை எல்லாம் அனுப்பி விட்டு என்னை தன் அறைக்கு அழைத்துப் போய் ஜெயலக்ஷ்மி ஏன் தாத்தாவைவிட்டு விட்டு அங்கு வந்தேனென்று கோபித்தாள். நான் சொள்ளமாடத்தேவனல்லவென்றும் துப்பறியும் கோவிந்தனென்றும் அங்கு ஒரு வேலையாய் மாறுவேடம் பூண்டு துப்புத் துலக்க வந்திருக்கிறேனென்றும் சொன்னவுடன் அதிக ஆச்சரியப்பட்டு விட்டு இவ்விஷயத்தை ஸ்ரீமான் பாலரங்கராஜுவிடம் சொல்லப் போனாள். அன்று இரவு வரையில் அங்கு அவளை வர வேண்டாமென்று நான் எச்சரித்தனுப்பிய பிரகாரம் அவள் மீண்டும் அங்கு வரவில்லை. நான் எதிர் பார்த்தபடி காந்திமதியா பிள்ளைக்கு ஓட்டலி கரடியால், சாமி ரெட்டியாருக்கு எழுதிய கடிதம் அனுப்பப்பட்டது. கடிதம் கொண்டு வந்தவனை ஏமாற்றி அக்கடிதத்தை வாங்கிப் படம் பிடித்துக் கொண்டு காந்திமதியா பிள்ளையிடம் கொடுத்தேன். அவர் பதிலில்லை யென்று சொல்லி மாலை வருவதாக ஜாடை செய்தார். அப்பால் வீட்டில் ஸ்ரீமான் சுப்பராஜு, ஜெயலக்ஷ்மி முதலியவர்கள் இருக்கிறார்களா யென்று விசாரித்து விட்டு என்னையும் தபாலாபீசுக்குப் போய் தனக்கு ஏதாவது கடிதம் வந்திருக்கிறதா என்று பார்த்து வரச் சொன்னார். முதல் நாள் மாலை 8 மணி வரையில் பாளையங்கோட்டை சப்ஜெயிலிலிருந்தவர் காலையில் திருவீரராஜபட்டணத்தில் தபாலில் காகிதங்கள் எதிர் பார்ப்பது எனக்கு விநோதமாகத் தோற்றியதால் சாக்குச் சொல்லி என்னை வெளியே அனுப்பி விட்டு சுரங்கப் பாதைக்குப் போகப் பார்க்கிறாரென்று நினைத்து நான் தபாலாபீசுக்குப் போவதற்குப் பதிலாகச் சுரங்கப் பாதையில் போய் முன்கூட்டியிருந்தேன். நான் எதிர் பார்த்த பிரகாரம் காந்திமதியா பிள்ளை அங்கு வந்தார். அவர் வரவும் நான் முன் கூட்டி நடந்தேன், என் காலடிச் சத்தம் கேட்டு தான் அவர் திகிலடைந்து நின்றார். பின் சத்தம் ஒன்றும்

கேட்காமல் போகவே தைரியம் கொண்டு செல்லத்தை அடைத்து வைத்திருந்த பூட்டைத் திறந்து காந்த விளக்கை அமுக்கி வெளிச்சம் உண்டாக்கி ஒரு மூலையில் மண்ணைத் தோண்டி ஸ்ரீமான் மாதவ ராஜு அவர்கள் வீட்டில் திருடு போன நகைகள், ரொக்கம், நோட்டுகள் முதலியவற்றை ஒவ்வொன்றாய் எடுத்து சரியாயிருக்கிறதா வென்று பார்த்து இன்னும் சற்று பள்ளம் தோண்டி கட்டாரி ஒன்றை எடுத்துப் பார்த்தார். அப்போது தான் பின்னாலிருந்து ஹா! ஹா! ஹா! என்று நான் உரக்கக் கத்தி விட்டு அவர் தொண்டையைப் பிடித்து அமுக்கினவுடனே திமிறிப்பார்த்தார், விடவில்லை மூர்ச்சையடைந்து விட்டார். உடனே கட்டாரி, நகைகள், நோட்டுகள், முதலியவற்றை யெல்லாம் அங்கேயே புதைத்து விட்டு, அவரைத் தூக்கிக்கொண்டு போய் அவர் அறையில் போட்டு விட்டேன். அவருக்கு பிரக்ஞை வந்து தன் கழுத்தைத் தடவிப் பார்த்துக் கொண்டிருக்கும் போது தான் நான் சென்று தபாலில் கடிதங்கள் ஒன்றும் வரவில்லை யென்று அவரிடம் சொல்லி விட்டு அதிக ஜாக்ரதையாய் அவரைக் கவனித்து வந்தேன். இரண்டாம் முறை காந்திமதியா பிள்ளைக்குக் கடிதம் வர அதையும் வாங்கிப் படம் பிடித்துக் கொண்டு அவரிடம் கொடுத்தேன். அப்பால் தான் காந்திமதியா பிள்ளை வெளியே புறப்பட்டார். நான் அவருக்குத் தெரியாமல் தூரத்திலேயே வந்து கவனித்துக் கொண்டிருந்தேன். அப்பால் அவர்களைப்பின் தொடர்ந்து வந்து கவனித்ததில் காமாக்ஷிராவ், கொளம்பு துப்பறிவோர், டெப்டி மாஜிஸ்டிரேட் முதலியவர்களைக் கொல்ல ஏற்பாடு செய்திருப்பது அறிந்ததும் போலீஸ் ஸ்டேஷன் சென்று போலீஸ் உதவி கோறி எவருக்கும் தெரியாமல் போலீசாரை அங்கு அழைத்து வந்து மறைவாய் வைத்து விட்டு ஸ்ரீமான் பாலரங்க ராஜு, செல்லம், ஸ்ரீனிவாசலு ராஜு ஆகிய மூவரையும் சௌள்ளமாடத் தேவனுடன் அழைத்துக் கொண்டு அங்கு வரும்படி சொல்லி யனுப்பி விட்டு நான் ஆலமரப் பொந்திலிருந்து கூர்மையாய்க் கவனித்து வந்தேன். அப்பால் தான் ஜில்லா மாஜிஸ்டிரேட் அவர்களைக் கட்டிலில் தூக்கி வந்து விசாரணை ஆரம்பித்து அவர்களைச் சுட உத்தரவு கொடுத்து வாய்மூடு முன் சுட்டேன்.

ஜெயலக்ஷ்மி:—கிராம முனிசீப்பவர்கள் தாத்தா அவர்கள் உடம்பை எவரும் தொடவாவது அப்படியிப்படிப் புறட்டவாவது கூடாதென்றும் சொல்லும்வரையில் கணக்குப் பிள்ளை மாமா (காந்திமதியா பிள்ளை) திக்பிரமை கொண்டவர்கள் போலிருந்ததேன்?

கோவிந்தன்:—அவரோ விஷமிட்டவராதலால் ஜில்லா மாஜிஸ்டிரேட், டெப்டி மாஜிஸ்டிரேட், போலீஸ் சூப்பிரண்டன்டன்ட், முதலியவர்கள் வந்து என்னென்ன விதமாய் ஆராய்ச்சி செய்வார்களோ அதன் மூலமாய் தனக்கு என்ன ஆபத்து வருமோ என்று பயந்ததாலும், சாதாரணமான கொலைக்குக் காரண கர்த்தர்களாயிருப்பவர்கள் தாம் கொலை செய்த நபர்களின் முன் வரும்போது இயற்கையாய் திக்பிரமை கொள்வது வழக்கமாதலாலும் அவர் அவ்வாறு திக்பிரமை கொண்டவர் போலிருந்தார். அது ஆச்சரியமேயல்ல. நீ உலக அனுபவமில்லாத பெண்ணாதலால் தான் இதைப் பற்றிக் கேட்டாய்.

ஜெயலக்ஷ்மி:—நமது வீட்டின் நன்மையைத் தலைமுறை தத்துவமாய் நாடி வந்த மீன்கந்தன் சந்ததியில் பிறந்த கோபாலன் தாத்தா அவர்கள் உடம்பை எடுத்துப் போக எவ்வாறு சம்மதித்தான்?

கோவிந்தன்:—கோபாலன் தான்தோன்றித் தறுதலையாய் தற்காலம் சுயமரியாதைப் பிரசாரம் என்னும் போலிப் பேரால் நடத்தப்படும் அவமரியாதைப் பிரசாரத்தில் ஈடுபட்டு எவ்வித தொடர்ச்சியான சிறந்த நோக்கங்களையும், கொள்கைகளையும் பின் பற்றாத கை விரல்களுக்குள் எண்ணிவிடக்கூடிய சில சுயநலப்புலிகளால் நடத்தப்படும் அவிவிவேகமான பிரசாரங்களுக் கீடுபட்டு அப்பிரசாரத்தின் கொள்கைகளாகிய பெற்றோரெல்லாம் முழு மூடங்கள்; அவர்கள் சொல்லுகிறபடி கேட்கக்கூடாது, அவர்களெல்லாரும் பழைய காலத்துப் பைத்தியங்கள்-கம்பளிகள், என்று போதிக்கும் பிரசாரத்தின் படி பெற்றோர் சொல் கேட்காது நடந்து செம்புக்காசு சம்பாதிக்க சக்தி யில்லாவிட்டாலும், பீடி சிகரட், கள், சாராயம் குடித்தல் முதலியவற்றில் கடன்பட்டாகிலும் வீண் செலவுகள் செய்து வந்தவனாயினும், தனக்கு துற்புத்தி புகட்டிக் கொண்டு வந்த நான்கு நண்பர்கள் எவ்வளவு சொன்னாலும் உன் தாத்தா விஷயத்திலிருந்த பயத்தால் ஒத்துக்கொள்ளாமல் யோசனை செய்து கொண்டே யிருந்தவன், டாக்டரிடம் அழைத்துப் போனதும் அவர் தன் காரியத்தை முடித்துக் கொள்வதற்காகக் கோபாலனை தனக்குச் சமானமாய் தனது சோபாவிலேயே தன் பக்கத்தில் உட்காரச் சொல்லி சுமார் ஒருமணி நேரம் அவன் ஆயுட் காலத்தில் சாப்பிட்டுப் பார்த்து அறியாதபல அருமையான வஸ்துக்களை அவனுக்குக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னதோடு விலையுயர்ந்த சீமைச் சாராயங்களையும் அவனுக்கு

ஊற்றிக் கொடுத்து பருகச் செய்து உற்சாகத்தை உண்டாக்கி அவனது சுயபுத்தியை மாற்றி வைத்துக்கொண்டு அவனுக்கு பெருந் தொகையாகிய 1500 ரூபாய்களை அவன் கண்முன் கொண்டு வந்து கொட்டிக்காண்பித்து உன் தாத்தா உடம்பைக் கொண்டு வந்தால் அப்பெருந் தொகையைக் கொடுப்பதாய்ச் சத்தியம் செய்து கொடுத்தார். "கறைப்பார் கறைத்தால் கல்லும் கறையும்" என்பது போல், கடைசியில் டாக்டர் துரையின் வார்த்தையின்படி நடப்பதாகக் கோபாலன் ஒத்துக்கொள்ள ஒரு மணிநேரம் பிடித்தது.

டெப்டி மாஜிஸ்டிரேட்:—இன்ஸ்பெக்டர் காமாக்ஷிராவ் லஞ்சம் வாங்கவில்லையென்று திட்டமாய் அப்போதே சொன்னீர்களே! எப்படி அறிந்தீர்கள்.

கோவிந்தன்:—ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரு எப்போது என்னை அழைத்துப்போய் சுந்தர ராஜு போலீசாருக்குத் தெரியாமல் அரண்மனையிலிருந்து வெளி சென்ற சுரங்கபாதையைக் காண்பித்து விட்டாரோ அப்போதே காமாக்ஷிராவுக்கு லஞ்சம் கொடுக்க வேண்டிய பிரமேயமில்லை யென்றும் ஆகையால் லஞ்சம் வாங்கிக் கொண்டு காமாக்ஷிராவ் விடவில்லை யென்றும் தீர்மானமாய்த் தெரிந்து விட்டது. அதுவும் போதாதென்றால் உன் தாத்தா அவர்கள் லஞ்சம் கொடுக்கவில்லையென உறுதியாய்ச் சொன்னார்கள்.

ஜில்லா மாஜிஸ்டிரேட்:— ஸ்ரீமான் வக்கீல் கிருஷ்ணசாமி ஐயங்காரவர்கள் வீட்டிலும் என்பங்களாவிலும் கொள்ளையடித்தது யார்? யார் தூண்டுதலின் பேரில் கொள்ளையடிக்கப்பட்டது?

கோவிந்தன்.—டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள் அவ்விஷயத்தைப் பற்றிக் கேட்கக்கூடாதென்று தங்களிடம் வாக்குறுதி பெற்றிருக்கிறார்கள். மேலும் இவ்விஷயத்தைப்பற்றி நான் விசாரிக்கவில்லை. ஆகையால் என்னால் திட்டமாய்ச் சொல்ல முடியாது. இருந்தாலும் அப்போது தங்கள் பேரில் அதிக மனக் கசப்புள்ளவர்களாலாவது அல்லது அவர்கள் காரியஸ்தர்களுடைய தூண்டுதலாலாவது தான் நடந்திருக்குமென்று ஊகிக்கிறேன். அக்காலத்தில் தங்கள் பேரில் ஸ்ரீமான் சுந்தர ராஜுகாரு வகையறாக்களுக்குத்தான் கோபம் இருந்திருக்கும். அத்திருட்டு நடைபெற்றபோது ஸ்ரீமான் சுந்தரராஜுகாரும், வியாஜ்யத்தில் சம்மந்தப்பட்ட எவரும் இந்த ஜில்லாவிலேயே இல்லை; சென்னை சென்றிருந்தார்கள், ஆகையால் போவதற்கு முன் அவர்களில் எவராவது ஏற்பாடு செய்து விட்டுப்

ராயிருக்கலாம், அல்லது அவர்கள் சென்னை சென்றபின் அவர்கள் காரியஸ்தர் எவராவது செய்திருக்கலாம். இன்னதென்று திட்டமாய்ச்சொல்லவும் முடியாது. அதைக் கண்டுபிடிக்க முயல்வதும் உசிதமல்ல; முயன்றாலும் திட்டமாய்க் கடைசி வரையில் தெரியவே தெரியாது. ஆகையால் இவ்விஷயத்தைக் கனவாக நினைத்து மறந்துவிடுவதுதான் நலம்என்பது எனது முடிவான அபிப்பிராயம். ஏனெனில் தங்கள் தலை போவதானாலும் தேவமார் எவரையும் காட்டிக் கொடுக்கமாட்டார்கள்.

ஜில்லா மாஜிஸ்டிரேட்:—பன்றிகள், பசுக்கள் முதலியவற்றின் காலடிகள் ஆற்றுத் தண்ணீர் வரை தெரிந்து அப்பால் மாயமாயின. ஆனால் அந்த இடத்தில் இரத்த அடையாளங்கள் இருந்தனவே! எதற்காக?

கோவிந்தன்:—அதுவரையில் நடத்திக் கொண்டு போகப்பட்ட குதிரை, பசுக்கள், பன்றிகள், முதலியவை ஆற்றுமண்டபத்திலிருக்கும் சுரங்கவழியாய் திருட்டு மாடுகளை அடைத்து வைக்கும் இடம் கொண்டுபோகப்பட்டதால் அவ்வாறு சுரங்க வழி அதன் சமீபத்திலிருப்பதாக எவரும் ஊகிக்கா வண்ணம், அவ்விடத்தில் ஆட்டுத் தொட்டியில் ஆடுகள் அறுத்த இரத்தத்தைக் கொண்டுவந்து எவரும் சந்தேகிக்கா வண்ணம் தேடிவருவோர் கண்களில் மண்போட்டு மறைப்பதற்காக ஊற்றி வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஜில்லா மாஜிஸ்டிரேட்:—ஆனால் இப்போது அதன் அருகிலுள்ள மண்டபங்களைச் சோதித்தால் அது எங்கு கொண்டுபோய் விடுகிறதென்றும் சொந்தக்காரர் யாரென்றும் இப்போதாவது கண்டு கொள்ளக் கூடுமல்லவா?

கோவிந்தன்:—எப்போது சுரங்கவழி யிருப்பதாக வெளிக்குத் தெரிந்துவிட்டதென்று அதன் சொந்தக்காரருக்குத் தெரிந்ததோ அன்றே மூடப்பட்டிருக்கும். இப்போது தோண்டிச் சோதித்தால் ஆற்றுமணலைத் தவிர வேறொன்றும் அகப்படாது! திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள அபார வேலைகள் செய்யும் கூட்டத்தார் சாமான்யர்களல்ல, ஏன்? தங்கள் பங்களாவில் படுத்திருந்த தங்களைக் கட்டிலோடு தங்களுக்குத்தெரியாமலும், தங்கள் தூக்கத்திற்கு பங்கம் வராமலும் அசையாது சுமார் 40மைல் தூக்கிக்கொண்டு போனவர்களைச் சாமர்த்தியசாலிகளென்று ஒப்புக் கொள்வதில் தடையுண்டோ?

ஜில்லா மாஜிஸ்டிரேட்.—போலீஸ் விசாரணையின் போது எவ் திய ஆறு குறிப்புகளுக்கு (130ம் பக்கம் பார்க்க) திருப்தி கரமா சமாதானமென்ன?

கோவிந்தன்—1-வது—ஓயில் சாசனத்தில் ஸ்ரீமான் ஸ்ரீனிவா சலு ராஜுகாரு கையெழுத்துப் போடும் உத்தேசத்துடன் கையெழு த்துப் போட பேனாவை வைத்தபோது எவரோ இழுத்து விட்டதா கத் தோன்றும்படி பேனா கீச்சப்பட்டிருந்ததுபோல் தோன்றும் படி செய்திருந்தது ஜெயலக்ஷ்மியின் பேரிலும் பாலரங்கராஜு காரின் பேரிலும் சந்தேகத்தை உண்டாக்குவதற்காகவே அவ்வாறு செய்யப்பட்டிருந்தது. ஜெயலக்ஷ்மி அவரிடம் பேசிச்சென்ற பின் குறைந்தது நான்கு பேராவது அவரிடம் பேசிவிட்டு வந்ததாகவும், ஸ்ரீமான் பாலரங்கராஜு பேசியபின் குறைந்தது மூன்று பேராவது அவரிடம் பேசி வந்ததாகவும் ருஜுவானதால் அது உபகாரமில்லா மற் போயிற்று. 2வது—மேஜையின் பேரில் வெளி இராஜதானியில் செய்யும் பழைய மிட்டாய் தினுசுகளும் காசித்தீர்த்தச் செம்பு ஒன் றும் வைக்கப்பட்டிருந்தன. அவைகள் ஸ்ரீமான் சீதாராம சாஸ்திரி களால் பண்டரிநாதனுடைய பிரசாதமென்றும் காசிதீர்த்தமென்றும் கொடுக்கப்பட்டதாக சீதாராம சாஸ்திரி சொன்னார். அவர் பேரில் சந்தேகமில்லாமல் போனதால் அதுவும் உபகாரப்படவில்லை. 3-வது—பழைய கணக்குப் புஸ்தகங்கள் ஒரு பக்கத்தில் வைக்கப் பட்டிருந்தன. சொள்ளமுத்துத் தேவர் (137வது பக்கம் பார்க்க) "ஒன்னை புள்ளையாய் வளத்து எல்லாம் நம்பி உன்கிட்டே விட்டது க்கு நீ யிப்படிச் செய்தாயல்லவா? நீ பொழுது விடியறத்துக்குள்ளே அணு பைசாவோடு பைசல் செய்யாட்டா என்னமோ செய்வேண் ணுங்க" என்று சொள்ளமாடத் தேவன் சொன்னதும், ஸ்ரீமான் டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள் அக் கணக்குப் புஸ்தகங்களைப் பந் தோபஸ்து செய்துவிட்டுகாந்திமதியாபிள்ளையை விசாரிக்கும்போது நான் மாறுவேடம் பூண்டு அவர் சாக்ஷியம் கொடுத்ததைக் கவனி த்ததிலிருந்துதான் எனக்கு முதலில் அவர்பேரில் சந்தேகம் ஏற்ப ட்டது. அதிலிருந்து துப்புத்துலக்க ஆரம்பித்தேன். 4வது— இன்னொரு பக்கத்தில் ஓர் விசேஷ தினுசு வாசனைப் புகையிலை வைக் கப்பட்டிருந்தது. அப்பையில் சுருக்கெழுத்து S. போடப்பட்டி ருந்தது. அது சுந்தரராஜுகாருடையதா யிருக்கலாமென அப்போ து நான் ஊகித்தேன். பின்னால் ஸ்ரீதரர் பேரின்கீழ் சுந்தரராஜு வைத்திருந்த சாமான்களிலெல்லாம் S போடப்பட்டதாகத் தெரிந்

தது. ஸ்ரீதரர் என்பதின் ஆங்கிலேய முதல் எழுத்து S ஆதலால் அந்த S என்னும் எழுத்து ஸ்ரீதரருக்கும் சுந்தரராஜுவுக்கும் பொதுவானதாலும், அவர் பேர் மாற்றிய பின்னும், இரண்டு பேர்களின் முதல் எழுத்தும் S ஆனதாலும் எந்த பேருக்கும் அந்த முதல் எழுத்து பொருந்துமென்றும் அவர் அவ்வித வாசனை புகையிலையே உபயோகித்து வந்ததாலும் அவருடையதென்று நிச்சயித்துக் கொண்டேன். 5வது—பேனாவின் முனை மழுங்கியும் விழுந்திருந்தது. ஆறு துப்புகளில் முதலாவதாகச் சொன்ன சந்தேகத்தை ஸ்திரப்படுத்துவதற்காகவே பேனா முனை மழுங்கும்படி போடப்பட்டிருந்தது. ஆனால் இயற்கையாய் இழுக்கப்பட்டிருந்தால் பேனா வலது கைப்பக்கத்தில் விழுந்திருக்கும்; இடது கைப்பக்கத்தில் விழுந்திருந்ததால் தெரியாமல் அவ்வாறு போடப்பட்டதென்றும் அது மோசமென்றும் அறிந்துகொண்டேன். 6வது — தெரிசன உண்டியலைப்பற்றி (340ம் பக்கத்தில்) விவரித்துவிட்டேன். ஆகையால் இனி விவரிக்கவேண்டியது ஒன்றுமில்லையெனவே நம்புகிறேன்.

என்றார். அப்பால் யாரும் கோவிந்தனை எவ்வித கேள்வியும் கேட்கவில்லை. அப்பொழுது ஸ்ரீமான் சுந்தரராஜுகாரு எப்போதாவது ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டு அதற்கடையாளமாக நீலக்கல் பதித்தமோதிரத்தை அனுப்பினால் தன்னாலியன்ற உதவிசெய்வதாய் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரு சுந்தரராஜுவிடம் கொடுத்தனுப்பி தான் தனது கையில் அணிந்திருந்த நீலக்கல் பதித்த மோதிரத்தை எடுத்து சுந்தரராஜு தன் தகப்பனாரிடம் கொடுத்து“ இனி இந்த மோதிரம் எனக்கு அவசியமிராது. இதுவரையில் இதை உபயோகித்துத் தங்களிடம் உதவி கேட்கப் பிரமேயம் ஏற்படவில்லை. இனிமேல் அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பம் ஏற்படுமென்று நான் நினைக்கவில்லை. ஆகையால் தலை முறை தத்துவமாய் வைத்திருக்கும் இம்மோதிரம் தங்கள் வசமே இருக்கட்டும் ”எனச்சொல்லி ஸ்ரீனிவாசலு ராஜுகாரிடம் கொடுக்க அவர் வாங்கி பந்தோபஸ்தாய் இரும்புப் பெட்டியில் வைத்தார். சுப்பராஜுவுக்குத் தெரியாமல் ஜெயலக்ஷ்மி பாலரங்க ராஜுவிடம் இருமுறை ஜாடைகாட்டியதாக 298ம் பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்னவென்று அறிய வாசகர்கள் ஆவலாயிருக்கலாம். முதலில் ஜாடை காட்டியது தாத்தா அவர்கள் அங்கிருப்பதைப்பற்றி தெரிவியாமலிருக்கும்படிக்கும் இரண்டாவது முறை ஜாடை காட்டியது அவருக்கு ஆகாரம் கொடுக்கும் நேரமாதலால் ஸ்ரீமான் பாலரங்க ராஜுகாரை தங்களுடன்பேச வேண்டாமென்றதுமே யாகும்.

பதினெட்டாவது அத்தியாயம்

சுபம்

"தான் தான் செய்தவினை தானே அனுபவிப்பார்"

இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்போதே போலீஸ் இன்ஸ்பெக்டரவர்கள் அங்கு அவசரமாய் வந்தார்கள். கோவிந்தன் எழுந்து போய் என்ன விசேஷமென்று கேட்க, காவலில் வைக்கப்பட்டிருந்த காந்திமதியா பிள்ளை, சாமிரெட்டி, கொண்டப்பரெட்டி, ஆகிய மூவரும் இருந்தாற் போலிருந்து வாந்தியெடுத்ததாகவும் சில நிமிஷங்களில் மூவருக்கும் கைகால்கள் இழுத்து இறந்துபோனதாகவும் அவர்கள் மூவரும் இறப்பதற்குமுன் காந்திமதியா பிள்ளை ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் மேல்விலாசமிட்ட ஒரு காகிதத்தைத் தன்னிடம் கொடுத்ததாகவும் அதைத் தான் உடனே கொண்டு வந்ததாகவும் சொன்னார். கோவிந்தன் இவ்விஷயங்களை அங்குள்ளவர்களெல்லோருக்கும் தெரியும்படி சொல்லி அக்காகிதத்தை ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரிடம் கொடுத்து வாசிக்கச் சொன்னார். அவர் உறையைத் திறந்து எல்லாருக்கும் கேட்கும்படி உரக்க வாசித்தார்.

கடிதம்

ம-ா-ா-ஸ்ரீ மஹா கனம் பொருந்திய எஜமானவர்கள் திவ்ய சமுகத்திற்கு, எஜமானத் துரோகியும், நம்பிக்கை துரோகத்திற்காக ஏழேழு ஜென்மங்களுக்கு நரக பாதையே அனுபவிக்கப்போகும் காந்திமதி எழுதிக் கொள்ளும் விண்ணப்பம் என்னவென்றால், சின்ன எஜமானருக்கு இன்னலை விளைவித்த காமாக்ஷிராவைக் கெடுப்பதற்காக நான் முதலில் நமது குடும்ப விரோதிகளாகிய சாமிரெட்டி, கொண்டப்பரெட்டி, ஆகிய இருவருடன் கலந்துபேசி, அவர்கள் சொன்ன பிரகாரம் தப்பு கணக்கெழுதித் திருடி 137 சவரன்கள் வாங்கி சுடலையின் கீழ் மண்ணில் போட்டுவிட்டு மொட்டைக்கடிதம் எழுதி காமாக்ஷிராவை வேலையினின்றும் தற்காலியாக நிறுத்தும்படி செய்துவைத்தேன்: அப்பால் அவர்கள் புத்தியைக் கேட்டு குதிரைப் பந்தயத்தில் பந்தயம் கட்டினால் அமோக இலாபம் வருமென்றும் சவரன்கள் தொகையையும் ஈடு செய்து விட்டு மேலும் பெருந்துகைகள் சம்பாதிக்கலாமென்றும் சொன்னபிரகாரம் மீண்டும்

தப்புக் கணக்கெழுதி 1000ரூ கொண்டு போய்த் தோற்று விட்டேன். மேற்சொன்ன இரண்டு தொகைகளையும் சீக்கிரம் பர்த்தி செய்தாலொழிய தாங்கள் கண்டுபிடித்து விடுவீர்களென்று சாமிரெட்டியிடமும் கொண்டப்ப ரெட்டியிடமும் கேட்க, அவர்கள் டெப்டி கலெக்டர் மாதவராஜு அவர்கள் வீட்டில்திருடி பர்த்திசெய்துவிடலாமெனச் சொன்னார்கள். இந்த ஜில்லாவிலுள்ள எவரும் எஜமான் வீட்டிலாவது, ஸ்ரீமான் மாதவராஜுகாரு வீட்டிலாவது திருட ஒத்துக் கொள்ளமாட்டார்களென்று தெரிந்து சாமி ரெட்டி சென்னையிலிருந்து ஒட்டலியையும் கரடியையும் அழைத்து வந்தார். நாங்கள் அங்கு திருடச் சென்றபோது கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததைப்போல் ஸ்ரீமான் மாதவராஜு அவர்கள் வீடு திறந்திருக்கவே, பின்னால்நேரக்கூடிய கஷ்டங்களைக் கவனியாமலும், பாவங்கள் அதிகமாகி தாங்கமுடியாத அளவு ஆகும்போதுதான் துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலனம் செய்யும் பரந்தாமன் தோன்றி ஒரே அமுக்காய் பாதாள லோகத்தில் இருத்தி விடுவாரென்பதை அறியாமலும், எங்களுக்கனுகூலமாகவே கடவுள் உதவிபுரிந்து திறந்து வைத்திருப்பதாக நினைத்துப்போய் திருடிக் கொண்டு புறப்படும்போது தெருவில் ஏதோ சத்தம் கேட்டதைக் கண்டு பயந்து தட்டட்டியின் வழியாய்ச் சென்று நோட்டுகள் நகைகள் முதலியவற்றை என் அறையில் வைத்து பந்தோபஸ்து பண்ணிவிட்டு ஒன்றுமறியாதவனைப் போலிருந்தேன். தாங்கள் என்னை அன்றிரவு அழைத்து அணு பைசாவுடன் உதயத்திற்குள் பைசல் செய்யா விட்டால் சும்மா விடமாட்டீர்களென்று சொன்னதாலும், தாங்கள் சொன்னால் அவ்விதமே செய்து தீர்ப்பீர்களென்பதை யுணர்ந்து சாமிரெட்டி கொண்டப்ப ரெட்டியிடம் போய்ச் சொல்லி எவரிடமாவது அத்தொகைகள் கடன் வாங்கிக் கொடுக்கும்படி கேட்க அவர்கள் வேண்டியவர்களிடமெல்லாம் கேட்டுப் பார்த்தும் கடன்பெற முடியாததாலும், அந்த நகைகள் முதலியவற்றை அப்போது கொதுவை வைத்தால் திட்டமாய்ப் பிடித்துக் கொள்வார்களென்றும் திருடிய நோட்டுகளின் நம்பர்கள் பஹிரங்கப் படுத்தப்பட்டிருப்பதால் அவைகளைக் கொடுத்தால் அகப்பட்டுக் கொள்வோமென்றும் வேறு ஜில்லாக்களில் கொண்டு போய்தான், சாவகாசமாய் மாற்ற ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் இனி தங்களை உயிருடன் வைத்தால் திட்டமாய் எல்லோருக்கும் ஆபத்துவிளைவது நிச்சயமென்றும் சொல்லி ஒரு விஷத்தைக்

கொடுத்து சமயம் பார்த்து தாங்கள் சாப்பிடும் பாலில் கலந்துவிட்டால் சங்கடம் நிவர்த்தியாகுமென்றும் சொல்லித் தூண்டவே, எஜமானத் துரோகியாகிய நான் பரம்பரையாய் எங்கள் குடும்பத்திற்கு தாங்கள் செய்திருக்கும் அமோக உதவியை மறந்து நன்றி கெட்ட பதராகி தங்களுக்கு விஷமிட்டதோடு, அக்குற்றம், ஒரு பாவமுமறியாத தங்கள் அருமைப் பௌத்ரியின் பேரிலும் அவள் அன்பு வைத்திருந்த ஸ்ரீமான் பாலரங்க ராஜுகாரின் மேலும் போகும்படி சூழ்ச்சி செய்து அதை உறுதிப்படுத்துவதற்காகவும், அச்சமயத்தில் நான் அங்கு இல்லை என்பதை ஸ்திரப்படுத்துவதற்காகவும் தாங்கள் அழைத்து வரச் சொன்னதாக கிராம முனிசீபையும் ஷேக் முஸ்தபாராவுத்தரையும் நான் போய் அழைத்து வந்தேன். என் கெட்ட காலம் ஸ்ரீமான் பாலரங்க ராஜுகாரும் ஜெயலக்ஷிமியும் பேசிச் சென்றதற்கப்பால் பலர் தங்களிடம் வந்து பேசியதாக ருஜுவாகி விட்டதால் என் எண்ணம் வியர்த்தமாயிற்று. என்றைய தினம் நான் தப்புக் கணக்கெழுதி தங்கள் பணம் திருடினேனோ அன்றைய முதல் இன்றையவரையில் கண் மூடின மாத்திரத்தில் போலீசார் என்னைப் பிடித்துக் கொண்டு போவதைப் போலும் நான் இதுவரையில் பார்த்தும் கேட்டுமறியாத பள்ளங்கள் மலையுச்சிகள் முதலியவற்றில் தள்ளப்படுவதைப் போலும் நித்யம் பலவிதமான கெட்ட கனுக்கள் கண்டு உயிருடனேயே நரக பாதை அனுபவித்து வந்தேன், நேற்றிரவு உங்களை உயிருடன் கண்டபோதே எங்கே தாங்கள் என்னைப் பிடித்துக் கொண்டு தங்கள் கையின் இரண்டு விரல்களால் என் கழுத்தை இறுக்கிக் கொன்று போடுவீர்களோ எனப் பயந்தேன். தங்களைக் காணவும் எல்லோரும் ஆச்சரியமுற்றுத் தங்களை சூழ்ந்ததும் அதுவே தக்க சமயமென்று நான் மெதுவாய் ஓட, சாமிரெட்டியும், கொண்டப்ப ரெட்டியும், பின்பற்றினார்கள். சொள்ளமாடத்தேவர் வேஷம் பூண்டிருந்த கோவிந்தன் நாங்கள் போவதைக் கண்டு கொண்டாரென நினைத்தேன். அவர் பின்பற்றி துரத்தாததாலும் போலீசாரை அனுப்பாததாலும் என் மனதிலுள்ள பயமே அவர் கண்டு கொண்டதுபோல் தோன்றிற்றென நினைத்துப் போய் நகைகள் முதலியவற்றை எடுத்துக்கொண்டு உடனே ஒரு படகமர்த்தி கொளம்பு தேசம் போய் விடுவதெனத் தீர்மானித்துப் போய் ஸ்ரீமான் மாதவ ராஜுகாரு வீட்டில் திருடிய நகைகள் முதலியவற்றைத் தோண்டி எடுத்த உடன் பூதங்களைப்போல் மூவர் எங்களைப் பிடித்துக் கொண்

டதும், அங்கு முனிசீப்பவர்களும் முஸ்தபாராவுத்தரவர்களும் இருக்கவே இனி எங்கள் தலை தப்புவதபூர்வமென்று தீர்மானித்துக் கொண்டு, இனி உயிருடன் இவ்வுலக நியாயாதிபதிகளிடம் விசாரணைக்காஜராகக் கூடாதெனவும், இதம் பேசுவதுபோல் பேசி,என்னை இவ்வித இடுக்கண்களுக்குட்படுத்திய சாமி ரெட்டியையும், கொண்டப்ப ரெட்டியையும் கொன்றுலொழிய என் மனம் நிம்மதியடையாதெனவும் நினைத்து அவர்கள் உங்களைக் கொல்வதற்காகக்கொடுத்த விஷத்தின் மீதியை ஆபத்து வந்தால் உபயோகிப்பதற்காக என்னிடமே வைத்திருந்ததை அவர்களிருவருக்கும் தெரியாமல் கொடுத்து பின் நானும் சந்தோஷமாய் அருந்தினேன். இன்னும் கொஞ்ச நேரத்தில் நாங்கள் மூவரும் இறப்பது நிச்சயம். நான் இறக்கு முன் தங்களுக்கு ஒன்றுமட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். அது என்னவென்பீர்களோ உண்மையில் தங்களுடைய குமாரருக்கு இன்னலை விளைவித்த காமாக்ஷிராவைக் கெடுப்பதற்குச் செய்த சூழ்ச்சியானது நாளாவிர்த்தியில் வெவ்வேறு வழிகளில் சென்று இறுதியில் என் அழிவிற்கு—ஆத்ம நாசத்திற்கு—தலைமுறை தத்துவமாய் நானும் என் முன்னோர்களும் சம்பாதித்த நற்பெயரின் நாசத்திற்குக் காரணமா யிருந்ததேயொழிய வேறல்லவென்று சுப்ரமண்யர்பேரில் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். இது உண்மையென நினைத்து என்னை மனப்பூர்வமாய் மன்னிப்பீர்களாகில் எனது தீச்செயல்களுக்காக நான் நரகபாதையே அனுபவிக்க நேரிடினும் எனக்கு அது பெரும் ஆறுதலைக் கொடுக்கும். இந்தத் துரோகியை மனமார மன்னிப்பீர்களோ என்னமோ ?

ஏஜமானத் துரோகி,
காந்திமதி.

இக்கடிதத்தை வாசித்ததும், ஸ்ரீனிவாசலுராஜு இன்ஸ்பெக்டரவாகளைப் பார்த்து "காந்திமதியா பிள்ளை இறந்து விட்டாரா?" என்று கேட்டார். தான் வருமுன்னம் கொண்டப்பரெட்டியும் சாமி ரெட்டியும் இறந்து விட்டதாகவும் காந்திமதியா பிள்ளை இன்னும் இரண்டொரு நிமிஷங்களில் இறந்து விடுவாரென்றும் டாக்டர் சொன்னதையும் ஆனகயால்தான் மூவரும் இறந்து விட்டார்களென்று, சொன்னதாய் இன்ஸ்பெக்டா சொன்னார். உடனே தமது வுண்டியேறி ஸ்ரீனிவாசலு ராஜு அவரைப் பார்க்கப்போக, ஜெய

லக்ஷிமியும் கூடப்போக, பாலரங்க ராஜுவும் பின்பற்றிச் சென்றார். அவர்கள் மூவரும் போய் சேரும்போது காந்திமதியா பிள்ளையின் பிராணன் போகும் தருவாயிலிருந்தது. ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜு "காந்திமதி! உன்னை மன்னித்து விட்டேன். நான் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறேன் என்பதை அறியாது இப்பேர்ப்பட்ட மூட்டாள் வேலை செய்துவிட்டாயே! விஷத்திற்கு மாற்று இருந்தால் சொல்லு" என்று கேட்டார். ஜெயலக்ஷிமி "மாமா! மாமா!!" என அலறினாள். காந்திமதியா பிள்ளையின் முகத்தில் சந்தோஷக் குறிகள் தோன்றின. அவர் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வடிந்தது; இரு கைகளைத் தூக்கி நமஸ்கரித்ததும், கைகள் சோர்ந்து விழுந்தன, கண்ணை மூடினார், உயிரும் உடலை விட்டகன்றது. டாக்டர் "காந்திமதியா பிள்ளையின் இவ்வுலக நாடகம் முடிந்துவிட்டது" என்றார். ஸ்ரீனிவாசலு ராஜுகாரும் ஜெயலக்ஷிமியும் வருந்தினார்கள். பாலரங்க ராஜுகாரு அவர்களிருவருக்கும் தேறுதல் சொல்லி அழைத்துச் சென்றார். காந்திமதியா பிள்ளை, தனது எஜமானருக்கு அனுகூலம் செய்வதாக மனப்பூர்வமாய் நம்பி எதிரிகள் வார்த்தைகளைக் கேட்டு காமாக்ஷிராவுக்கு விரோதமாய் சதி செய்த போதிலும் இறுதியில் "கெடுவான் கேடு நினைப்பான்" என்பதை மெய்ப்பிக்க காமாக்ஷிராவைக் கெடுப்பதற்காகச் செய்த சதியானது அதுவரையில் தலைமுறை தத்துவமாய் எடுத்து வந்த நற்பேரையும் புகழையும் இழக்கும்படி செய்ததோடு, பயிர் செய்தால் ஒன்று நூறாக வளருவதைப் போலும் அதிலும் தீய காரியங்கள் களைகள் வளருவதுபோல் வெகு உற்சாகமாய் ஒன்று நூறாகவும் நூறு ஆயிரமாகவும் பல்கிப் பெருகுவதைப் போலும் பெருகி ஒரு தீச் செயலிலிருந்து பல தீச்செயல்கள் செய்யும்படி தூண்டி இறுதியில் பல கொலைகளை செய்யும்படியும் நேர்ந்தது. இதை வாசிக்கும் சகோதர சகோதரிகளே! நீங்கள் இதிலிருந்து அறிந்து கொள்ள வேண்டிய அபூர்வ படிப்பினை ஒன்றிருக்கிறது. அது என்ன என்பீர்களோ நமக்குக் கெடுதல் செய்தவர்களாயினும் அவர்களைக் கெடுப்பதற்காக நாம் சதி செய்தால் இறுதியில் நம்மை நமது சதியே படுகுழியில் தள்ளிவிடும் என்பதுதான்.

நிற்க, ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜு, ஜெயலக்ஷிமி பாலரங்க ராஜு காந்திமதியா பிள்ளையைப் பார்க்கச் சென்றவுடன் சுந்தர ராஜு, செல்லம், செல்வம், சுப்பராஜு தங்கள் தங்கள் அறைகளுக்

குச் சென்றனர். அப்போது ஜில்லா மாஜிஸ்டிரேட் டெப்டிமாஜிஸ்டிரேட்டைப் பார்த்து, "நேற்று இரவுபோலீசாரிடம் நாம் ஒப்புவித்த கைதிகளை அவர்கள் ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போகையில் திடீரென்று அவர்களுடன் எடுத்துச் சென்ற காந்த விளக்குகள் அணைந்து விட்டதாகவும், அச்சமையத்தில் அண்டையிலிருந்த பெரியஆலமரத்திலிருந்து பலர் போலீசாருடைய துப்பாக்கிகளைப் பிடித்து இழுத்துப் பிடுங்கிக் கொண்டதாகவும் போலீசாருக்கு என்ன நடந்ததென்று தெரியுமுன் கைதிகளும் கூட்டமும் நாலாபக்கங்களிலும் ஓட்டம் பிடித்ததாகவும் போலீசாரில் சிலர் அவர்களைப் பின்தொடர்ந்து ஓட, முன் ஓடிக்கொண்டிருந்தவர்களில் இரண்டு மூன்று பேர் நின்று துப்பாக்கிகளால் போலீசாரைச்சுடவே இருட்டாயிருந்ததாலும், எதிரிகள் துப்பாக்கிகளாற் சுட்டதாலும் இனி பின்பற்றி ஓடுவது அபாயமென நினைத்து நின்று விடும்படி சொன்னதின் பேரில் போலீசார் நின்று விட்டதாகவும், தாங்கள் பிடித்த கைதிகளில் ஒருவன் பேர் வெள்ளையத்தேவன் என்று தெரிந்தது தவிர, அவர்களெல்லாம் எந்த ஊர்காரரென்றும், அவர்கள் பேர்களென்னவென்றும், அவர்கள் தகப்பனார் பெயர்கள் என்னவென்றும் தெரியாததால் என்ன செய்வதென்று இன்ஸ்பெக்டர் கேட்டதின் பேரில் தாங்கள் காந்திமதியாபிள்ளை, சாமிரெட்டி, கொண்டப்பரெட்டி, ஆகிய மூவரிடம் நயத்திலும் பயத்திலும் விசாரித்து அறியும்படி சொன்னதாகச் சொன்னீர்களே! அவர்கள் யார் எந்த ஊர்காரர்? என விவரம் கேட்டுத் தெரிந்து கொண்டீர்களா?" என்று கேட்டார். சப் இன்ஸ்பெக்டரைக் கேட்டதற்கு அவர்கள் மூவரும் எவ்வித திருப்தி கரமான பதிலும் கொடுக்க வில்லை யென்றும் நிதானமாய்க் கேட்டறியுமுன் அவர்கள் மூவரும் இறந்துவிட்டார்களென்றும் இனி என்ன செய்வதென்று சப் இன்ஸ்பெக்டர் கேட்டதாகவும் தான்யோசித்து மறுதினம்சொல்வதாகச் சொல்லியனுப்பியதாகவும் டெப்டி மாஜிஸ்டிரேட் தெரிவித்தார். டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள் கோவிந்தனிடம் சில நிமிஷங்கள் ஏகாந்தமாய்ப் பேசிக்கொண்டிருந்து விட்டு ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜு முதலியவர்கள் வந்தவுடன் அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு ஜில்லாமாஜிஸ்டிரேட்டவர்களும், டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்களும் திருச்செந்தூர் சென்று அங்கு முகாம் செய்து கொண்டிருந்தார்கள்.

அன்று மாலை 3 மணிக்குத் திருநெல்வேலி வக்கீல் சுந்தரவரதாச்சாரியவர்கள் ஸ்ரீமான் சுந்தரராஜுலுவை அழைத்துக் கொண்டு வந்து ஜில்லா மாஜிஸ்டிரேட்டவர்களிடம் விட்டு ஸ்ரீமான் சுந்தரராஜுலு பேரில் ஏற்பட்டிருக்கும் வாரண்டுக்கு தானுகவே மாஜிஸ்டிரேட் முன் வந்து ஆஜர்படுத்திக் கொண்டதாகச் சொல்லி அத்துடன்முன் கேஸ் நடந்து கொண்டிருந்தபோது தன் கக்ஷிக்காரரை பத்தாயிரம் ரூபாய் ஜாமீனில் விட்டிருந்தது போல் இப்போதும் ஜாமீன் பேரில் விடவேண்டுமென்றும், சுந்தரராஜுலுகாருக்கும் ஜில்லாமாஜிஸ்டிரேட்டவர்களுக்கும் முன் நடந்த கேஸ் சம்மந்தமாக விரோதம் ஏற்பட்டிருந்ததாகவும், டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள் பாரபக்ஷமன்னியில் விசாரிப்பாரென்ற நம்பிக்கையுடன் அக்கேஸை அவர் விசாரிப்பதில் ஆட்சேபனையில்லையென முன் ஒத்துக்கொண்டு கையொப்பமிட்டதாகவும், டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள், ஜில்லா மாஜிஸ்டிரேட்டவர்கள் தூண்டுதலின் பேரில் தனக்கு நியாயத்தீர்ப்பளிப்பார்களென்ற நம்பிக்கை தன் கக்ஷிக்காரருக்கிப்போது இல்லாததால், இக்கேஸை வேறு எந்த ஜில்லாவுக்காவது மாற்றிக் கொள்ள ஹைகோர்ட்டில் மனுக்கொடுக்க உத்தேசித்திருப்பதாயும் அதுவரையில் டெப்டி மாஜிஸ்டிரேட் கேஸை நடத்தாது நிறுத்தி வைக்கவேண்டுமென்றும் மனுதாக்கல் செய்தார்கள். ஜில்லா மாஜிஸ்டிரேட்டவர்கள் ஹைகோர்ட்டில் மனுகொடுத்து உத்தரவு பெறுவதற்காக 2 வாரம் வாய்தா கொடுப்பதாகவும் ஆனால் முன்போல் ஜாமீன்பேரில் விட முடியாதென்றும் சொன்னார். ஜில்லா மாஜிஸ்டிரேட்டவர்கள் அவ்வாறு சொன்னவுடனே வக்கீல் சுந்தரவரதாச்சாரியாரவர்கள் தன் கக்ஷிக்காரராகிய சுந்தரராஜுலு பேரில் எவ்வித குற்றமும் ருஜுவாகவில்லையென்றும் ஆகையால் கட்டாயமாய் ஜாமீன்பேரில் விடவேண்டுமென்றும் வாதாடினார். கடைசியில் லட்ச ரூபாய் ரொக்க ஜாமீனும் இரண்டு லட்ச ரூபாய் டெப்டிமாஜிஸ்டிரேட்டுக்குத் திருப்தியாகும்படி நபர் ஜாமீனும் கொடுப்பதாகில் ஜாமீன்பேரில் விடுவதாகச் சொன்னார். நபர் ஜாமீன் கொடுப்பதாகில் சொத்து மதிப்பு முதலியவை தானும் தாளாளெனச் சர்க்கார் அதிகாரிகளுக்குத் திருப்தியாகும்படி செய்வதற்கு ஒன்றிரண்டு தினங்களாவது பிடிக்குமாதலாலும் அதுவரையில் தனது கக்ஷிக்காரர் சிறையிலிருக்க விரும்பாததாலும் மூன்றுலட்ச ரூபாய்களும் ரொக்க ஜாமீனுகவே வாங்கிக் கொண்டு அப்போதேவிட வேண்டுமென்று சொல்லி பத்தாயிரம் ரூபாய் நோட்

களாக முப்பது நோட்டுகள் கொடுத்தார். ஜில்லா மாஜிஸ்டிரேட் தாலுக்கா கஜானாவில் அத் தொகையைக் கட்டும்படி செய்து அப்போதே ஜாமீன் பேரில் விட்டுவிட்டார். அவர்களெல்லாம் கோர்ட்டைவிட்டகலுமுன்னம் சென்னை கவர்ண்மெண்டார் மூலம் இந்தியா கவர்ண்மென்டார் ஜில்லா மாஜிஸ்டிரேட்டவர்களுக்கு அனுப்பிய அவசரத் தந்தி யொன்று வந்தது; அதைப் பிரித்து வாசிக்க அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"இந்திய சக்ரவர்த்தியார் தமது குடும்பத்திற்கு ஸ்ரீமான் ஸ்ரீதரர் என்ற ஸ்ரீமான் சுந்தரராஜு செய்த அரும் தொண்டை உத்தேதித்து அவர் பேரில் ஏற்பட்ட குற்றங்களை யெல்லாம் மன்னித்து விட்டதோடு அவருக்கு "நைட் கம்மாண்டர் இந்தியன் எம்பையர்" (கே. டி. சி. ஐ. இ.) என்ற பட்டமும் கொடுத்திருக்கிறார்கள். அவர் பேரில் ஏற்பட்டிருக்கும் வாரண்டுகளை யெல்லாம் உடனே ரத்துசெய்து விடவேண்டியது.

உத்தரவு பிரகாரம்

* * * * * * * * *

முக்கிய காரியதரிசி, இந்தியா கவர்ண்மேண்ட்."

இதை வாசித்துப் பார்த்தவுடனே ஜில்லா மாஜிஸ்டிரேட்டவர்கள் ஜாமீன் கட்டிய தொகையைப் பெற்றுப் போகும்படி ஸ்ரீமான் சுந்தரராஜுகாரிடம் தெரிவிக்க, அவர் தன்கேசை விசாரித்து குற்றவாளியென்றும் அல்லவென்றும் இன்னொரு ஜில்லா மாஜிஸ்டிரேட் தெரிவிக்குமுன் மன்னிப்புப் பெற விரும்பவில்லையென்றும், அப்படியே கேஸ் நிறுத்தப்பட்டால் அப்போது, தான் குற்றவாளி தான்" என ஒத்துக் கொண்டதாக எல்லார் மனதிலும் இருந்து கொண்டிருக்கும் என்றும் ஆகையால் தான் அவ்வாறு விடுதலை பெற விரும்பவில்லை யென்றும், இதைப்பற்றி மாகனம் தங்கிய சக்ரவர்த்தியாருக்குத் தான் எழுதுவதாகத் தெரிவித்துச் சென்று; ஐக்கோர்ட்டில் மனு தாக்கல் செய்து, கேசை மதுரை ஜில்லா மாஜிஸ்டிரேட்டுமுன் விசாரணைக்கு அனுப்பப்பட்டது. அவர் கவர்ண்மென்ட் தரப்பு சாக்ஷிகளையெல்லாம் 7 தினங்களில் விசாரித்து குறுக்கு விசாரணையும் முடிந்த உடன் குற்றப்பத்திரிகை வாசித்து ஸ்ரீமான் சுந்தரராஜுகாரு என்ன சொல்லுகிறீரென்று கேட்டார். தான் குற்றவாளியல்லவென்றும் எந்த நாளில் மேற்சொன்ன குற்றம் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறதோ அந்த

நாளைக்கு 2-தினங்கள் முன்னிருந்து தான் திருநெல்வேலி சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டிலிருந்ததாகவும் குற்றம் நடந்த அன்று மத்யானம் 11-மணி முதல் ஒருமணி வரையிலும் மீண்டும் மூன்று மணி முதல் ஐந்துமணி வரையிலும் தான் கோர்ட்டில் சாக்ஷி சொல்லியிருப்பதற்கு சப்மாஜிஸ்டுரேட், பல பிரபல வக்கீல்கள் சாக்ஷியிருக்கிறார்களென்றும் மத்தியிலிருந்த இரண்டு மணி சாவகாசத்தில் 34-மைல் ரோட் பாதையும் 6மைல் மணல்பாதை தூரமுள்ள திருவீரராஜபட்டணம் சென்று கலகம் செய்து விட்டு மீண்டும் கோர்ட்டுக்குவர எவ்வாறு முடியுமென்றும் ஆகையால் விரோதத்தின் பேரில் தன்மேல் பொய்க் கேஸ் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் எழுதி வாக்கு மூலம் கொடுத்ததோடு தக்க சாக்ஷிகளின் மூலமாய் ருஜுவும் செய்தவுடனே சுந்தரராஜு குற்றவாளியல்லவென்றும் கௌரவமாய் விடுவிக்கப்பட்டதாகவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

நிற்க, திருவீரராஜ பட்டணத்திலிருந்து தப்பி ஓடிய கைதிகளைப்பற்றி எவ்வித நடவடிக்கைகள் எடுப்பதென டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்களைக் கலந்தாலோசித்து அதில் சம்மந்தப்பட்ட காரணகர்த்தர்களாகிய முக்யஸ்தர் மூவரும் விஷமுண்டு இறந்து விட்டதாலும், மற்றவர்கள் விலாசங்கள் பேர்கள் முதலியன தெரியாததாலும், டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்களை மோசம் செய்து கட்டிக் கொண்டுபோன விஷயமும், தனது பங்களாவில் படுத்திருந்த ஜில்லா மாஜிஸ்டிரேட்டவர்களைக் கட்டிலோடு அவருக்குத் தெரியாமல் 40மைல் தூரம் தூக்கிக்கொண்டு போய்க் கால்கைகளைக்கட்டி அக்ரம விசாரணை நடத்தி சுட உத்தேசித்தார்களென்ற விஷயமும் வெளிக்குத் தெரியாமலிருப்பதே எல்லோருக்கும் கௌரவமாயிருக்குமெனவும் யோசித்து இனி எவ்வித நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்வதில்லையென முடிவு செய்தார்கள்.

அப்போது கோவிந்தன், ஜில்லா மாஜிஸ்டிரேட், டெப்டி மாஜிஸ்டிரேட், போலீஸ் சூப்பிரண்டண்ட், ஆகிய மூவரிடமும் காமாக்ஷிராவை அழைத்துக் கொண்டுபோய் சிபார்சுசெய்து அவருக்கு அவருடைய வேலையைக் கொடுக்கும்படியும், வேறு ஊருக்குமாற்றும்படியும் கேட்டுக்கொண்டதின் பேரில் தமது வேலை கொடுக்கப்பட்டு காமாக்ஷிராவ் பாளையங்கோட்டைக்கு மாற்றப்பட்டார். அப்போது டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள் "செல்லத்திடம் சொல்லிக் கொண்டு போகவேண்டாமா" என்று புன்சிரிப்புடன் கேட்டார். காமா

க்ஷிராவ் கண்களில் நீர்வடிய தலை குனிந்தவாறே பதில் சொல்லாது நின்றார். இனி மேலாகிலும் முன்போல் நல்ல பேர் எடுக்கப் பிரயாசைப்படும் என எச்சரித்து அனுப்பிவிட்டார்.

ஸ்ரீமான் பாலரங்க ராஜுவை மிகவும் கேவலமாய்ப் பேசி, அடித்து காரி உமிழ்ந்து என்னென்னமோ செய்த ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாருக்கு அவர் பேரில் எவ்வாறு அபார பிரியம் ஏற்பட்டதென வாசகர்கள் ஆச்சரியப்படலாம். ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாரு இயற்கையாகவே நற்குண நற்செய்கைகளுடையவராயிருந்ததோடு பெருந்தன்மையும் வாய்ந்தவர். அவருக்கு முகத்திற்கு நேரில் "நீங்கள் சரியானபடி படிக்காததால் உங்களைக் கலியாணம் செய்து கொள்ள மாட்டேன்" என்று தனது வரிசைப் பெண் சொன்ன சொல்லம்பானது அவர் மனதில் ஆழமாய்த் தைத்து அமோக கோபத்தை உண்டாக்கினதின் பயனாக மூன்று தலை முறைகளாக விரோதம் நீடித்து வந்தது. தான் அளவு கடந்த பிரியம் வைத்திருந்த தனது அருமை பௌத்திரி ஜெயலக்ஷிமி, தான் விவாகம் செய்து கொண்டால் பாலரங்க ராஜுவைத் தான் விவாகம் செய்து கொள்வதாகவும், அவ்வாறு செய்யாவிட்டால் வேறு எவரையும் விவாகம் செய்து கொள்ளமாட்டாளென்றும்; ஓமத்தீயிலாவது மடிந்து விடுவாளென்றும் சத்தியமாய்ச் சொல்லி விட்டதாலும், எல்லா அம்சங்களிலும் பாலரங்க ராஜுவுக்குச் சமானமான குணங்களுடையவர் வேறு யாராவது தன்னை மணக்கக்கூடியவர் இருந்தால் சொல்லும்படி அவள் கேட்ட நியாயமான கேள்விக்கு தன் மனசாட்சிக்கு விரோதமில்லாமல் தன்னால் பதிலளிக்க முடியாமல் போய் விட்டதாலும், ஜெயலக்ஷிமிக்கு செம்பாலடித்த காசுகூட வைக்காமல் எழுதிய வில்லை ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜு, பாலரங்க ராஜுவிடம் காட்டி "இப்போது என்ன சொல்லுகிறாய்?" எனக் கேட்டபோது சற்றேனும் முகம் சுளிக்காமலும், எள்ளளவாவது வருந்தாமலும், பாலரங்கராஜு, "இன்னும் ஜெயலக்ஷிமி அணிந்திருக்கும் எல்லா நகைகளையும் கழற்றிக் கொண்டு பிறந்தவுருவுடன் கொடுத்தால்கூட, தான் அவளைச் சந்தோஷமாய் விவாகம் செய்து கொள்வதாய்" சொன்ன மாத்திரத்தில் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜுகாருக்கு பாலரங்க ராஜு பேரில் ஏற்பட்டிருந்த வெறுப்பு முற்றிலும் நீங்கி அவரைப்பற்றி அதிக கௌரவமான மதிப்பு ஏற்பட்டுவிட்டது. அப்போது சுந்தரராஜு சுரங்க வழியாய் வருவதற்

நிகுறியாக மணியடித்ததால் தான் பாலரங்க ராஜுகாரைப் போய் மறுநாள் வரும்படி கேட்டுக் கொண்டார். ஆனால் பாலரங்கரோ, அப்போதுதான் தன் பேரிலிருந்த வெறுப்பு நீங்கிற்றென்று தெரிந்ததும் தாத்தாவின் மனம் மீண்டும் மாறுதலடையு முன்னம் அவரிடம் வாக்குப் பெற உத்தேசித்து ஐந்து பத்து நிமிஷங்களாவது பேச அனுமதி கேட்டார். ஜெயரங்கன் போகமாட்டாரென்று அறிந்தவுடன் தான் வழக்கமாய் இராக்காலங்களில் சாப்பிடும் கஞ்சா கலந்த பாலைக் கொடுத்தால் பாலரங்கராஜு மயக்கமடைவாரென்று நினைத்து அவ்வாறு செய்தார். அப்பால் ஸ்ரீனிவாசலு ராஜுவுக்கு ஸ்ரீமான் பாலரங்க ராஜும் அவர்கள் வீட்டில் பிரக்ஞை வந்தபோது பாலரங்கராஜுவும், ஜெயலக்ஷிமியும் தனது பாதத்தண்டை விசனமாய் உட்கார்ந்து கொண்டு பிரக்ஞையில்லாமலிருந்தபோது அவர்கள் செய்து கொண்டிருந்த சிஷ்ருஷையைக் கண்ணாரக் கண்டதும் இன்னும் அதிக அன்பு ஏற்பட்டது. அப்பால் தனது அந்தரங்க வேலைக்காரனாகிய சொள்ளமாடத்தேவன் பாலரங்கராஜு இராப்பகல் தூக்கமன்னியில் அவருக்கு சிஷ்ருஷை செய்து வந்தாரென்று சொல்லக் கேட்ட பின்னும் அவர் பேரில் அளவுகடந்த அபிமானம கொண்டாரென்பது ஆச்சரியமாமோ?

நிற்க ஒருநாள் பாலரங்க ராஜு, ஸ்ரீனிவாசலு ராஜுகாருக்கு இவ்வளவு கோபம் உண்டாவதற்குக் காரணகர்த்தாவாயிருந்த தமது பாட்டியாரைத் தன்னுடன் ஸ்ரீனிவாசலு ராஜுகாரிடம் அழைத்து வந்தார். அந்தம்மாளைப் பார்த்ததும் ஸ்ரீனிவாசலு ராஜுகாரின் பழைய கோபம் அவர் முகத்தில் ஜொலித்தது. அப்போது ஜெயலக்ஷிமியும் பாலரங்கராஜுவும் "பாட்டியாரவர்கள் தங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வந்திருக்கிறார்கள்" என்று சொன்னதும் அந்தம்மாள் "அத்தான்! சிறு பிள்ளைத்தனமாய் அறியாமையால் நான் சொன்ன குற்றத்தை மன்னித்து என்பேரில் தங்களுக்கு ஆதியிலிருந்த அன்பைக் காட்ட வேண்டும்'' என்று சொல்லி அவர் கையைப் பிடிக்கவும் ஸ்பரிசவேதி உண்டான அக்ஷணமே அவர் முகத்தில் தோன்றிய கோப ஜ்வாலை மாறி அதிக சந்தோஷத்தைக் காட்டிற்று. அது முதல் இரு குடும்பத்தாருக்கும் மூன்று தலைமுறைகளாய் ஏற்பட்டிருந்த விரோதம் நீங்கி முன்போல் ஒற்றுமையான குடும்பங்களாக மாறின.

லாஜரஸ் அவர்கள் தான் தனது வியாபாரத்தை ஸ்ரீமான் சுந்தர ராஜு காருக்கு விற்று விட்டதாகத் தானுகவே பத்திரம் எழுதி அனுப்பிவிட்டு முன்போல் மானேஜராகவே இருந்து மிக்கத் திறமையுடன் வியாபாரத்தை நடத்திவந்தார். அப்போது ஒருநாள் லாஜரஸ் அவர்களை ஜாக்ரய்ய ரெட்டியார் பார்க்க வந்தார். லாஜரஸ் அவர்கள் மரியாதையாய் எழுந்து அவரை அழைத்து வந்து ஆசனத்தமர்த்தி அவரிடம் தான் வேலை செய்து கொண்டிருந்தபோது எவ்வளவு மரியாதையாயிருந்தாரோ அவ்வாறே அவர் முன் உட்காராது நின்று கொண்டே பேசினுர். ஜாக்ரய்ய ரெட்டியார் அவரை உட்காரும்படி வெகுவாய் வேண்டிக் கொண்டதின் பேரில் லாஜரஸ் தூரத்தில் உட்கார்ந்துகொண்டு என்ன காரியமாய் வந்தீர்களென்று கேட்டார். அப்போது ஜாக்ரய்ய ரெட்டியார், ஸ்ரீதாருடன் போட்டிவியாபாரம் செய்ததிலும், பல வீண் வில்லங்கள் ஏற்படுத்தி வியாஜ்ஜியங்கள் செய்ததிலும், தமது திரண்ட சொத்து நஷ்டமாகி இப்போது கஷ்டமான நிலைமைக்கு வந்துவிட்டதாகவும், இனிமேல் ஸ்ரீதார் கம்பெனியாரிடம், தான், சமாதானமடைந்து வியாபாரம் வைத்துக் கொள்ளாவிட்டால் தான் கடைத்தேறுதல் கஷ்டமென்றும் ஆகையால் தன்னைக் கூடவே திருவீராஜ பட்டணம் அழைத்துப் போய் ஸ்ரீமான் சுந்தரராஜு காரிடம் அறிமுகப்படுத்தி சமாதானம் செய்துவைக்க வேண்டுமென்றும் வெகுவாய்கெஞ்சிக்கேட்டுக்கொண்டார். லாஜரஸ் அவர்கள் ஸ்ரீமான் சுந்தரராஜு காரு பெரிய குடும்பத்திற் பிறந்தவரென்றும், தயாள குணமுடையவரென்றும், எவர் போய் எவ்வித ஒத்தாசை கோறினுலும் தம்மாலியன்ற அளவு உதவி புரிபவரென்றும் அவர் சாமான்யமானவ ரல்லவென்றும் நேரில் சந்தித்து கேட்டுக் கொண்டால் கட்டாயம் உதவி செய்வாரென்றும் ஸ்ரீமான் சுந்தரராஜு காரு அங்கு வரும்போது அவரை அறிமுகப்படுத்தி வைத்து தன்னுலான வரையில் சொல்வதாகவும் சொன்னுர். அப்போது ஸ்ரீமான் ஜாக்ரய்ய ரெட்டியாரவர்கள் சமீபத்தில் திருவீராஜ பட்டணத்திற்கு மாக்ஷிமை தங்கிய கவர்ணர்ஜெனரல் துரையவர்கள் நேரில்வந்து ஸ்ரீமான் சுந்தர ராஜுகாருக்கு பட்டமளிப்பு விழா நடத்தப்போவதாகவும் அதற்காக லாஜரஸ் உட்பட அங்குள்ள பல பெருத்த வியாபாரிகளுக்கும் அழைப்பு வந்து அவர்களெல்லோரும் திருவீராஜ பட்டணம் போவதாகவும், அப்போது தானும்வரவிரும்புவதாகவும், பட்டமளிப்பு விழாவுக்கு முன்னேயே தன்னை அவ

ருக்கு அறிமுகப்படுத்தி வைத்து சமாதானம் செய்து வைத்துவிட வேண்டுமென்றும் சொன்னார். அப்போது ஸ்ரீதரன் சுந்தரராஜுகாரு கையினாலேயே ஸ்ரீமான் ஜாக்ரய்ய ரெட்டியார் விலாசமிட்டு அனுப்பியிருக்கும் அழைப்பை அவரிடம் எடுத்துக் காட்டிக் கொடுத்து ஸ்ரீமான் ஜாக்ரய்ய ரெட்டியாருக்கு அவ்வழைப்பை அனுப்புவதின் மூலமாய் இன்னும் அதிக விரோதம் ஏற்படாதெனத் தோன்றினால் மட்டும் அனுப்பும்படி தனக்கு எழுதிய காகிதத்தையும் காட்டினார். அப்போது ஜாக்ரய்ய ரெட்டியார் நடந்துபோன விஷயங்களுக்காக மிகவும் வருந்தி அவர் வரும் விஷயத்தை முன் கூட்டித் தெரிவிக்க வேண்டாமென்று கேட்டுக்கொண்டார். அவ்வாறே முன் கூட்டி ஸ்ரீமான் சுந்தரராஜுகாருக்குத் தெரிவிக்காமல் லாஜரஸ் அவர்கள் ஸ்ரீமான் ஜாக்ரய்ய ரெட்டியாரை அழைத்துக் கொண்டு திருவீர ராஜபட்டணம் சென்று ஸ்ரீமான் சுந்தர ராஜுகாருவிடம் லாஜரஸ் அவர்கள் “இவர்கள் தான் ஜாக்ரய்ய ரெட்டியார்; இவர்கள் தான் சுந்தர ராஜு” என அறிமுகப்படுத்திவைத்த உடனே, முதலில் சுந்தரராஜுகாரு அதிக ஆச்சரியப்பட்ட போதிலும் எழுந்துவந்து அவரிடம் சந்தோஷமாய்க் கைகுலுக்கி உட்கார வைத்து நல்வரவு கூறினார். அப்பால் லாஜரஸ் அவர்கள் ஜாக்ரய்யரெட்டியார் வந்த காரணத்தைச் சொன்ன உடனே இருவர் வியாபாரங்களும் பாதகமடையாதபடி எவ்வளவு ஒத்தாசை செய்யக் கூடுமோ அவ்வளவு ஒத்தாசை புரிவதாயும் ரூபாய்கள் கொடுக்கல்வாங்கல் விஷயத்திலும் ஸ்ரீமான் ஜாக்ரய்யரெட்டியாரவர்களுக்குக் கூடியவரையில் உதவி புரியுமாறும் ஸ்ரீமான் லாஜரசிடம் சொன்னார்கள், அதுமுதல் போட்டி நீங்கி இருவரும் நியாயமான வியாபாரம் செய்ய ஆரம்பித்தனர்.

நிற்க, குறிப்பிட்டதினத்தில் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலுராஜுகாரின் அரண்மனையிலுள்ள ரங்க விலாசத்தில்மாட்சிமை தங்கிய இராஜப் பிரதிநிதியவர்கள் சென்னைகவர்னர் துரையவர்கள் முன்னிலையில் நைட் கம்மாண்டர் இந்தியன் எம்பையர் என்னும் பதக்கத்தை அளிக்குமுன் பின்வருமாறு பேசினார்கள்—

‘ஸ்ரீமான் ஸ்ரீனிவாசலு ராஜு அவர்களே! பிரபுக்களே!! கனவான்களே !!! மாட்சிமை தங்கிய இந்திய சக்ரவர்த்தி யவர்களால் ஸ்ரீமான் சர். சுந்தரராஜுகாருக்கு நமது கவர்ன்மெண்ட்டாருடைய சிபார்சன்னியில் சக்ரவர்த்தியாரே தானாக வழங்கிய இந்த கௌர

வப்பட்டத்தை என்கையால் கொடுக்கும்படி ஆக்ஞாபித்தது பெரும் பாக்யம் பெற்றதாகக் கருதி நான் மகிழ்வடைகிறேன். முற்காலத்தில் அரிய வீர தீரச்செயல்களைச் செய்தவர்களுக்கு மட்டுமே இப்பட்டம் அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்காலத்தில் அவ்வழக்கம் நின்று எவ்வித வீர தீரச்செயல்களும் செய்யாத என்போன்றவர்களுக்கும் இந்தப் பட்டம் அளிக்கப்படுகிற தென்பது உங்களெல்லோருக்கும் தெரியும். நான் இவ்வாறு சொல்வதால் அப்பட்டத்தின் மஹிமை குறைந்து விட்டதாகவாவது அப்பட்டம் பெற்றவர்க ளெல்லாம் அதைப்பெற அருகதை யில்லாதவர்களென்றாவது தப்பபிப்பிராயங் கொள்ளக்கூடாது. எனது அபிப்பிராயமும் அப்படியன்று.

ஆனால் என்போன்றவர்களுக்கு அப்பட்டம் அளித்ததற்கும் ஸ்ரீமான் சுந்தர ராஜு காருக்கு இப்போது இப்பட்டம் அளிக்கப் போவதற்குமுள்ள தாரதம்மியங்களைக் காட்டுவதற்காகவே இப் போது அதைப்பற்றி சொல்லும்படி நேரிட்டது. அந்த வித்யாசம் என்னவென்று அறிய நீங்கள் அதிக ஆவல் கொண்டிருப்பீர்களென் பதை நானறிவேன். ஆகையால் உங்களை இன்னும் அப்பேர்ப்பட்ட சந்தேகத்தில் வைக்கா வண்ணம் உடனே சொல்லி விடுகிறேன். ஆனால் அதன் சம்மந்தமான முழு விவரங்களை வெளியிடக்கூடா தென சக்ரவர்த்தியார் எமக்கு ஆக்ஞாபித்திருப்பதால் அது சம் மந்தமான விஷயங்களை ஊர், பேர், தேதி, குறிப்பிடாமல் சொல்லு கிறேன். சக்கரவர்த்தி திருமகனார் இந்தியாவிற்கு விஜயம் செய்த போது அவர்கள் எவரிடமும் சொல்லாமலும், கூட எவரையும் துணையாக அழைத்துக்கொண்டு போகாமலும், மாறுவேடம் பூண்டு தமது நண்பரொருவருடன் ஜனங்களின் உண்மையான நிலைமை அறி வதற்காக இரவு 7 மணிநேரத்தில் புறப்பட்டு நினைத்த இடங்களுக் குச் சென்று ஏழைகளின் உண்மை நிலை கண்டு இறங்கி அவரவர்கள் நிலைமைக்குத் தக்கவாறு ஒன்றிரண்டு ரூபாய்களைக் கொடுத்துக்கொ ண்டு சென்று கொண்டிருந்தார்கள். அச்சமையத்தில் இவைகளைப் பார்த்துக் கொண்டு வந்த சில தூர்த்தர்கள் அந்த இருவரிடம் பெருந்தொகையிருப்பதைக் கண்டு அத்தொகையை அபகரிக்கும் எண் ணம் கொண்டு சுமார் இருபது தடியர்கள் சமையம் பார்த்திருந்து அவர்கள் இருவரும் இருண்ட இடத்தில் போகும்போது எதிர்த்த னர். சக்கரவர்த்தி திருமகனாரும் அவர் நண்பரும் இருபது பேரை யும் எதிர்த்து நின்றனர். அவ்விருவர் நிலமை அபாயமாய் வரும்

போது அப்பக்கம் வந்த ஸ்ரீமான் சுந்தரராஜுலுகாரு அதைக் கவனித்ததும், கட்டுமஸ்தான இருபது தடியர்கள் இருவரை எதிர்ப்பதையும் அவ்விருவரும் தங்களால் கூடியவரை முயன்று தைரியமாய்ச்சண்டை போட்டு அபாயகரமான நிலைமையிலிருப்பதையும் உணர்ந்ததும், தான் தன்னந்தனியாய் அந்த இருபது தடியரை எதிர்ப்பதால் தனதுபிராணனுக்கு திட்டமாய் அபாயமுண்டாகக்கூடும் என்பதைத் தெரிந்தும் கொஞ்சமாவது அஞ்சாமல் அவர்களிருவரின் ஒத்தாசைக்கு வந்து பலமான சண்டை போட்டார். அத்தூர்த்தர்களில் ஒருவன் அவரைக் கத்தியால் பல குத்துகள் குத்தியதாலும், பல அடிகள் அடித்ததாலும் தலையிலிருந்து வடிந்து தன் வாய்க்கு வந்து கொண்டிருந்த ரத்தத்தை உமிழ்ந்துவிட்டு, நாலாபக்கங்களிலும் மாறி மாறி பலமாக அடித்தார். அப்போது அத்தூர்த்தன் அவரைக் கத்தியால் பலமாய் மூன்றிடங்களில் குத்தவே ஸ்ரீமான் சுந்தரராஜுலு மூர்ச்சித்துக் கீழே விழுந்து விட்டார். அச்சமயத்தில் அப்பக்கம் பலர் வந்து பார்த்து கூச்சலிடவும் அத்தடியர்களெல்லாம் மூலா மூலை ஓடி விட்டனர். ஸ்ரீமான் சுந்தரராஜுலுகாரும் நாங்களும் கீழே விழுந்து விட்டோம். எங்களுக்கு சாதாரண அடிகளும் ஆயாசமும் தவிர கத்திக் குத்துகளில்லை. ஆனால் தைரியமாய் எங்களுக்கு ஒத்தாசை புரிய வந்த சுந்தரராஜுலுகாருக்குத்தான் பலமான அடிகளும் கத்திக் குத்துகளும் விழுந்தன. கூச்சலுண்டான கொஞ்ச நேரத்தில் போலீசார் வந்ததும் அபாயமான நிலையிலிருந்த சுந்தரராஜுலுகாரை ஆஸ்பத்திரிக்குக்கூட அழைத்துப்போய் உத்யோகஸ்தரை வைக்கும் இடத்திற்குச் செலுத்தவேண்டிய தொகையைக் கட்டி அவருக்கு வேண்டிய சிகிச்சை செய்யும்படி வேண்டிக் கொண்டார்கள். மயக்கம் தெளிவிக்கும் மருந்துகள் கொடுக்கவே அவர் கண்திறந்துபார்த்தார். அவர் பேர் விலாசம் முதலியன கேட்க அவர் வாய் திறக்காமல் கண்ணை மூடிக்கொண்டார். அப்போது சக்கரவர்த்தி திருமகனார் தனது பேரச்சிட்ட சீட்டை அவர் ஜோப்பியில் போட தனது கையைப அவர் ஜோப்பியில் போட்டபோது அங்கு ஒரு படம் இருக்க, அதை எடுத்துப்பார்த்து அத்திரவானுடைய படமென்று தெரிந்ததும் அதைத் தன் ஜோப்பியில் வைத்துக் கொண்டார். அதற்குள்ளாக போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்து அவர்களிருவருடைய பேர், விலாசம் முதலியன கேட்க, போலிப்பெயர்களைச் சொல்லித் தாங்கள் சக்ரவர்த்தி திருமகனுடன் வந்தவர்களென்றும் கவர்னர் மாளிகை தமது தற்கால

இருப்பிடமென்றும் சொல்லி ஒரு மோட்டார் வண்டி கொண்டுவரச் சொல்லி இன்ஸ்பெக்டர் அவர்களை அழைத்துக் கொண்டு கவர்ண் மென்ட் அவுஸ் சென்றதும், அவர்களைக் காணாது பல திசைகளில் பலரை அனுப்பிய மாகாணத்தை தங்கிய கவர்ணர் துரையவர்கள் வாசற் படியண்டை சிந்தனையுள்ள முகத்துடன் நின்றுகொண்டிருந்தார்கள். மோட்டாரிலிருந்து அவர்கள் இருவரும் இறங்கியதையும் அவர் களைப் பின்பற்றி போலீஸ் இன்ஸ்பெக்டர் இறங்கியதையும் கண்ட கவர்ணர் பிரபு அவர்கள், இறங்கியவர்களுக்கு வந்தனோபசாரம் செய் வதைக் கண்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் சற்று விலகி நின்றார். அவர்கள் கவர்ணர் பிரபுவின் காதுக்குமட்டும் கேட்கும்படி ஏதோ சொல்லி விட்டு உட்சென்றுவிட்டனர். கவர்ணர் பிரபு இன்ஸ்பெக் டரை அழைத்துப் போலீஸ் கமிஷணரவர்களிடம் தான் பேசிக்கொ ள்வதாகவும் அவரைப்போகும்படியும் சொல்லவே, அவர் சென்று விட்டார். சக்ரவர்த்தி திருமகனாரின் வேண்டுகோளின்படி மாகாண த்தைதங்கிய கவர்ணர் பிரபு அவர்கள் டெலிபோன் மூலமாய் ஆஸ்பத் திரி சர்ஜனை அழைத்து ஆஸ்பத்திரியிலிருக்கும் அக்கனவானை ஜாக்ர தையாகக் கவனித்து வைத்யம் செய்யும்படி ஆக்ஞாபித்தார். அவர் ஆக்ஞையின் பிரகாரம் அவர் நேரில் சென்று கட்டுகளை அவிழ் த்துத் தானே மீண்டும் கட்டிவிட்டு வீட்டுக்குச் சென்றார். மறுநாள் காலையில் பெரிய சர்ஜன் துரையவர்களை மாகாணத்தை தங்கிய கவர்ணர் துரையவர்கள் டெலிபோன் மூலமாய்க் கூப்பிட்டு விட்டு முன் இரவு அவரைக் கவனித்துக்கொள்ளச்சொன்ன நோயாளி எப்படியிருக் கிறாரெனக்கேட்க, "நோயாளியைக் காணோம்" என்றும் எப்போது எவ்வாறு சென்றாரென்று எவரும் பார்க்கவேயில்லையென்றும் பதில் தெரிவித்தார். சக்ரவர்த்தி திருமகனார் எப்படியாவது அவரைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்து சேர்க்கவேண்டுமென்று போலீஸ் கமிஷணரவர்களுக்குக் கண்டிப்பான உத்தரவளித்தார்கள். எங்கு தே டியும் அவர் அகப்படவில்லை. அப்பால் காணமற் போனவர் ஜேப்பி யிலிருந்து முன் இரவு எடுத்த படத்தை கமிஷணரிடம் கொடுத்து அந்தமாதிரி படங்கள் எடுத்துக் கொண்டு தன்னிடம் தான் கொடு த்த அப்படத்தைக் கொடுக்கும்படி சக்ரவர்த்தி திருமகனார் சொல்லி அவைகளின் மூலமாய்க் கண்டுபிடிக்கச்சொன்னார். அப்படங்களைப் பார்த்தவர்களெல்லாம் அவர் இன்னாரென்று தெரியாதென்று சொல் லிவிட்டனர். அப்பால் சிறந்த துப்பறிவோரிடம் கொடுத்து எப்படி

பாவது கண்டுபிடிக்கும்படி சொல்ல, அவர்கள் துப்பறியும் கோவிந்தனை அழைத்து வந்து சக்ரவர்த்தி திருமகனாரிடம் விட, அப்படத்தின் பிரதியொன்றை அவரிடம் கொடுத்து நடந்த விருத்தாந்தங்களை ஒளிக்காமல் அவரிடம் சொல்லி, எப்படியாவது எப்போதாவது அவரைக் கண்டுபிடித்து நேராக தனது சொந்த விலாசத்திற்கு எழுதும்படியும் அந்த அடையாளத்தைக்காட்டும் காகிதஉறைகளைக் கொடுத்தும் திட்டப்படுத்தினார்கள். அப்போது கோவிந்தனால்கூடிய வரையில் முயன்றும் கண்டு பிடிக்க முடியாமற் போய் விட்டது. கடைசியாக செல்வத்தைக் கண்டுபிடிக்க அவர் கொடிகாமம் சென்ற போது ஸ்ரீதரர் வீட்டில் சக்ரவர்த்தி திருமகனார் தன்னிடம் கொடுத்த படம் மாதிரி படம் போட்டிருக்க, அது யாருடைய தென்று கேட்டு ஸ்ரீதரரென்ற சுந்தரராஜுவின் படமென்று தெரிந்தவுடனே சக்ரவர்த்தி திருமகனாருக்கு அவர் விலாசம் தெரிவித்ததோடு அவர் பேரில் ஏற்பட்டிருக்கும் வாரண்டுகளையும், பறிமுதல் உத்தரவுகளையும் பற்றிக் கோவிந்தன் சக்ரவர்த்தி திருமகனாருக்குத் தெரிவித்தார். உடனே வாரண்டுகளையும் பறிமுதல் உத்தரவுகளையும் ரத்து செய்யும்படி செக்ரடெரி ஆப் ஸ்டேட் பார் இந்தியா (Sceretary of state for India) அவர்களுக்கு உத்தரவிட்டிருப்பதாகக் கோவிந்தனுக்குத் தந்தி யடித்ததோடு ஸ்ரீமான் சுந்தரராஜுகாரைக் கூடியஜல்தியில் லண்டனுக்கு அழைத்து வரும்படியும் தெரிவித்தார்கள். ஆகவே ஆதி காலத்தில் வீர தீரச்செயல்கள் செய்தவர்களுக்கே அரசர் பெருமான் இப்பட்டம் அளித்ததைப்போல் தாங்கள் இன்னாரென்று தெரியாமலிருந்தும் தங்களுக்கு உபகாரம் செய்வதால் பதில் உபகாரம் அகப்படுமென எதிர்பாராமலும், இருபது பேரை எதிர்ப்பதில் தனக்குக் கஷ்டம் வருவது திண்ணமெனத் தெரிந்தும் தனது பிராணனைத் திரணமாக மதித்து ஒத்தாசைக்கு வந்த சுந்தரராஜுகாரின் அரியகுணத்தை எடுத்து விரிவாகப் பேசிவிட்டு கடைசியில் அவர் குடும்பம் தலைமுறை தத்துவமாய் கியாதி பெற்ற குடும்பமென்றும் சொன்னதோடு சுந்தரராஜுவின் விரோதிகளாகக் கருதிய சீதாராம சாஸ்திரிகளையும் அவர் சம்சாரத்தையும் கோதாவரி நதியின் வெள்ளத்திலிருந்து காப்பாற்றிய தீரச் செயல்களையும் எடுத்துரைத்ததோடு, எல்லோருக்கும் அளிக்கும் பதக்கத்தை இப்போது தன்னைக் கொடுக்கச் சொன்னதாகவும், அரசர் பெருமான் பின்னால் சர்சுந்தரராஜுகாரை சீமைக்கு வரவழை

ர ஆதிகாலத்தில் "சர்" பட்டம் அளித்தவர்களுக்கு அரசர்கள் ‌டுக்கும் குதிரைமேல் சவாரி செய்யும்போது அணியும் இரும்பு ால் மாட்டிகளுக்குப் பதிலாகத் தங்கக் கால் மாட்டிகள் கொடுக்க ்தேசித்திருப்பதாகவும் சொல்லி பெரிய கரகோஷத்திடையே ரக்கத்தைத் தமது கையினால் ஸ்ரீமான் சுந்தரராஜு உடுப்பில் சொ கினார். அப்பால் வந்தனோபசாரத்துடனும் விசேஷ விருந்துகளுட னும பட்டம் அளிப்பு விழா முடிவுக்கு வந்தது. பின் ஷை விசேஷ த்திற்கு வந்தவர்களெல்லாம் தத்தம் இல்லங்களுக்குச் சென்றனர்.

டெப்டி மாஜிஸ்டிரேட்டவர்கள் அவ்விசேஷத்திற்கு வந்திரு ந்த கோவிந்தனிடம், சக்கரவர்த்தியார் ஸ்ரீமான் சுந்தரராஜுகாரை மன்னித்து விட்டதாக, சக்கரவர்த்தித் திருமகனார் கோவிந்தனுக்குத் தந்தி கொடுத்திருந்தும், காந்திமதியா பிள்ளை முதலியவர்கள் இறந்த அன்று சுந்தரராஜு கேஸ் விஷயமாய் கோவிந்தனை அழைத்து இன்னின்ன மாதிரி செய்ய வேண்டுமென்று தான் யுக்திகள் சொன்னபோது ஏன் தந்தியைப் பற்றி தன்னிடம் தெரிவிக்கவில்லை யென்று கேட்டார்.

கோவிந்தன்:—ஐயா! ஒருவர் இரகசியமாய் என்னிடம் சொல் லும் விஷயங்களை நான் அவர்கள் உத்தரவிருந்தாலொழிய வெளியே சொல்வதில்லை. மேலும் வாரண்டுகளுக்கு மறைந்திருக்கும் ஸ்ரீமான் சுந்தரராஜுவை அப்பேர்ப்பட்ட உத்தரவு பிறந்திருப்பதை நான் அறியாவிட்டால் சட்ட விரோதமாய் அழைத்து வந்து என் வீட்டில் வசிக்க இடம் கொடுத்திருப்பேனாவென்றும் சட்ட விரோதமான காரி யம் நான் செய்வேனாவென்றும் தாங்கள் கவனித்தீர்களா? சமீபத்தில் தானாகவே வெளிவருமென்று நான் சொல்ல வில்லை.

என்று சமாதானம் சொன்னார். மேற்சொன்ன பட்டமளிப்பு விழா நடந்தேறிய 15 தினங்கள் பொறுத்து டெப்டி கலெக்டர் மாதவராஜுகாரும் அவர் சம்சாரமும் வரிசை யெடுத்துக் கொண்டு வந்து வைத்து பாலரங்க ராஜுவுக்கு ஜெயலக்ஷ்மியைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். நமது இரு குடும்பத்தாருக்கும் விரோதமிருந்தபோதே மாப்பிள்ளையும் பெண்ணும் தீர்மானித்து ச்சயித்த விவாஹத்தைப் பற்றி இப்போது கேட்க வேண்டிய பிர மேயமே இல்லையென்றும் தான் மனப்பூர்வமாய் அவர்களிருவரையும் ஆசீர்வதிக்கத் தயாராயிருப்பதாயும் சொல்லி விவாகத்தை நிச்சயி த்து நல்ல சுப முகூர்த்தத்தில் இராஜதானியிலுள்ள நண்பர்கள்

பந்துக்கள் எல்லோருக்கும் தெரிவித்து வெகு விமரிசையாய் பாலரங்க ராஜுவுக்கும், ஜெயலக்ஷிமி அம்மாளுக்கும் விவாஹம் நடந்தது. விவாஹம் நடந்து தம்பதிகள் இருவரும் ஸ்ரீமான் ஸ்ரீனிவாச ராஜுகாருக்கு நமஸ்காரம் செய்து அவர்கள் ஆசீர்வதித்த உடன் பாலரங்க ராஜா "தாத்தா! தங்கள் கையிலுள்ள பிரம்பால் எப்போ என்னை அடித்து ஆசீர்வதித்தீர்களோ அன்றே வாயால் ஆசீர்வதிப்பதற்குப் பதிலாகத் தாத்தா அவர்கள் பிரம்பால் ஆசீர்வதிக்கிறார்கள் என்று நான் ஜெயலக்ஷிமியிடம் சொன்னது ஞாபகமிருக்கிறதா?" எனக்கேட்டார். அதற்காக பாலரங்க ராஜுவை குழந்தையைத் தூக்குவதைப் போல் இரு கைகளாலும் தூக்கி வாரியணைத்து முத்தமிட்டு விட்டு "திரேக பலத்தால் வெல்ல முடியாத என்னை மனோ பலத்தால் வென்ற சூரனல்லவா நீ" என்று சொல்லிக் கீழே விட்டு விட்டு "என் அருமை ஜெயலக்ஷிமியை இனி பிரிய நேரிடுமே" என ஏங்கினர். அப்போது இவ்வளவு விரோதங்களுக்குக் காரணகர்த்தாவாயிருந்த பாட்டியார் வந்து "ஜெயலக்ஷிமி தங்களுக்குச் செய்து வந்த பணி விடைகளைச் செய்ய நான் ஒத்துக்கொள்ளுகிறேன்" என முன் வந்தார்கள். எல்லோரும் இந்த அபூர்வ காக்ஷியைக் கண்டு ஆனந்தித்தார்கள்.

இக்கலியாணத்தை சாஸ்திரோக்தமாய் நடத்திவைத்தவர் சீதாராம சாஸ்திரிகள் தான் என்று நாம் சொல்லவும் வேண்டுமோ. அதற்காகப் பலபிலாமரங்களுள்ள பதினாயிரம் ரூ விலையுள்ள பெரிய தோப்பை மரங்கள் உள்பட நிலத்தையும் தானம் கொடுத்ததாக சர் சுந்தரராஜுகாரு பத்திரம் எழுதி ரிஜிஸ்தர் செய்து கொடுத்தார்கள்.

அக்கலியாணத்திற்கு கொடிகாமத்திலிருந்து ஸ்ரீமான் ஜாக்ரய்யசெட்டியார், கொளம்பு துப்பறிவோர் மூவர் முதலியோரும் வந்திருந்தனர். கொளம்பு துப்பறிவோருக்கு தன் நிமித்தம் ஏற்பட்ட கஷ்ட நிவாரணமாக சுந்தரராஜு தக்க சன்மானம் கொடுத்தனுப்பினார். இவ்வளவு பிரயாசை எடுத்துக் கொண்ட கோவிந்தனுக்கு என்ன சன்மானம் கொடுக்கப்பட்டதென்று தெரியவில்லை.

இந்நாவலின் முக்கியஸ்தர்களாகிய ஜெயலக்ஷிமி என்னும் பேரின் முதல் பாகமாகிய ஜெய என்னும் பதத்தையும், பால ரங்க என்னும் பதத்தின் பிந்திய பாகமாகிய ரங்கன் என்னும் பதத்தையும் சேர்த்து இதற்கு ஜெயரங்கன் என்னும் பெயர் கொடுக்கப்பட்டது.

ஜெயரங்கன் முற்றிற்று

"இராஜாம்பாள்" "சந்திரகாந்தா"
"மோஹன சுந்தரம்" "ஆனந்தகிருஷ்ணன்"
"இராஜேந்திரன்" "வரதராஜம்" 1—2 பாகங்கள்
"விஜயராகவன்" "ஜெயரங்கன்"

மேற்சொன்ன ஒன்பது புஸ்தகங்களும் ஒன்றைவிட ஒன்று ...மே சொல்லியிருக்கும் விஷயங்களைத் தாங்கி "நான் முன்; நான் முன்" என்று ஆர்ப்பரித்து ஆனந்தத்தை விளைவிக்கின்றன.

மேற்சொன்ன ஒவ்வொரு புஸ்தகங்களிலும் ஸ்திரீ, புருஷ, பாலக, பாலகிகளுக்கு யுக்தமான அனேக அதியற்புதவிஷயங்களும் துப்பறியவேண்டி (அபார சக்தியுடன்) செய்யும் தந்திரங்களும் நீதி விஷயங்களும், சன்மார்க்கிகள் அநுபவிக்கும் இன்பமும், துன் மார்க்கிகள் துன்பத்தைப் பங்கிட்டுக்கொள்வார்கள் என்பதையும் தற்காலத்திற் கேற்றவாறு அனேக நவநாகரீகமான விஷயங்களு பெரியோரன்றிச் சிறியோரும், பெண்பாலரும் எளிதில் உணருமா உயர்ந்ததும், அழகியதுமாய், (நல்ல காகிதத்தில் நன்றாய்) அச் பட்டிருக்கின்றன. இப்புஸ்தகங்களில் காணும் ஒவ்வோர் வி ளும் அறிவைப் பரவச்செய்யும் சக்திவாய்ந்தன.

இப்புஸ்தகங்களைப் போலொத்த வேறு புஸ்தகங் ...ரையில் தமிழ் பாஷையில் பிரசுரிக்கப்படவில்லை யென்ட ...களை வாசித்த எல்லோருடைய அபிப்பிராயம். இவைக எழுதியிருக்கும் நற்சாக்ஷிப் பத்திரங்கள் எம்மிடம் ஆயி யிருக்கின்றன. இவ்வளவு அருமையான புஸ்தகங்க வாசித்து ஆனந்தமடைய வேண்டுமென்னும் எண்ண ...ரங்கன் விலை ரூ. 1—8—0ம் இராஜேந்திரன், வ ...கள்) விஜயராகவன், தனித்தனிவிலை ரூபாய் 1 ...ல்கள் ஒவ்வொன்றும் விலை அணா 12 என்றும் கு ...டிருக்கின்றன. தபாற்கூலி வி. பி. பிரத்தியேக

ரங்கராஜு அண்டு பிரதர்ஸ்,
"ஜெகந்நாதபாக்" சைதாப்பேட்டை, சென்னை

எதிர்பாருங்கள் !

எ தி ர் பா ரு ங் க ள் !!

நீங்கள் 10-வருஷங்களாய்

ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கும்

"டாக்டர் விஸ்வநாத்"

என்னும்

ஓர் இனிய தமிழ் நாவல்.

இராஜாம்பாள், சந்திரகாந்தா,

ஹன சுந்தரம், ஆனந்த கிருஷ்ணன்,

ஜேந்திரன், வரதராஜும், 1—2 பாகங்கள்,

ஜெயரங்கன்,

ம் நிகரில்லாத நாவல்களை எழுதிய

. R. ரங்கராஜு அவர்களால்

எழுதப்பெறும் புது நாவல்

937-ம் வருஷம் ஜனவரியில் வெளிவரும்